கலைஞரின்
கடிதங்கள்

43

01.11.2009 - முதல்
17.07.2010 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 43

01.11.2009 - 17.07.2010

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூலக நிலையம்
சென்னை-18
தினமலர் அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

த.மு.க. அறக்கட்டளை
போராசிரியர்
அப்துல் ஹலீம்
நினைவகம்
சென்னை-18
அனைவரும் அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3428. காக்கும் கரங்களுமன்றோ?	1-11-2009	23
3429. இங்கு வந்துள்ள தமிழர்க்கும் இடர் களைவோம்!	4-11-2009	32
3430. கேளாக் காதினராய் கேரள அரசினர்; தேளாய்க் கொட்டுவதோ!	6-11-2009	39
3431. இதில் எது கையாலாகாத்தனம்?	10-11-2009	48
3432. கண்ணீர் துடைத்திடுக! கடமை தொடர்ந்திடுக!	12-11-2009	53
3433. பத்திரிகைப் பெண் பயிலவேண்டிய பாடம்!	15-11-2009	60
3434. நம் மௌன வலி; யாருக்குத் தெரியப் போகிறது?	18-11-2009	69
3435. முடிந்த தொடர்கதை; முடியாத வரலாறு!	26-11-2009	75
3436. சிதம்பரம் மீது சீற்றம் ஏன்?	28-11-2009	86
3437. வன்முறை தவிர்த்து வரும் தேர்தல்களிலும் வெல்வோம்!	30-11-2009	92

3438. ஊனமுற்றோரின் ஊன்றுகோலாகக் கழக அரசு!	4-12-2009	98
3439. குளிர் தருவென; தரு நிழலெனக் கோவையில் மாநாடு!	5-12-2009	103
3440. “காஞ்சி” வழியில் “கோவை” மாநாடு!	12-12-2009	111
3441. உடன் பிறப்புகளில் ஒருவனாக விடுக்கும் வேண்டுகோள்!	13-12-2009	118
3442. சோதனைகளை வென்ற கழக அரசின் சாதனைகள்!	16-12-2009	130
3443. அவர்களும் நாமும்; ஓர் ஒப்பீடு!	20-12-2009	137
3444. மீண்டும் இதோ; என் அன்பழைப்பு!	21-12-2009	142
3445. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-1	25-12-2009	148
3446. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-2 கால்டுவெல் காட்டிய திராவிடத் தனிச்சிறப்பு	26-12-2009	156
3447. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-3 பாவாணர் கண்ட பதினைந்து சான்றுகள்	27-12-2009	164
3448. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-4 தொன்மைக்குத் தொன்மையாய் வாழும் தொல்பழங்கால மொழி!	28-12-2009	172

3449. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-5 கலிபோர்னியா பேராசிரியர் வழங்கிய கருத்துக்கோவை!	29-12-2009	181
3450. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-6 செம்மொழி சிறந்திட; தொடர் செயல்பாடுகள்!	30-12-2009	190
3451. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் -7 கடிதமல்ல; காலத்தால் அழிக்க முடியாத செப்பேடு!	31-12-2009	198
3452. வாழ்த்து குவிக்கின்றேன்; வளமார் தமிழக மக்களுக்கு!	9-1-2010	207
3453. ஒரு “தலைவன்” இருக்கிறான் மயங்காதே!	13-1-2010	211
3454. அம்மவோ; இந்த நாளில் அந்த நாள் நினைவு!	3-2-2010	234
3455. “வேலியே பயிரை மேய்வதா?”	10-02-2010	240
3456. மனித நேயமும், மாசற்ற அரசியல் நாகரிகமும்!	11-02-2010	245
3457. அவனும் சிரித்தான்; நானும் சிரித்தேன்!	12-02-2010	249
3458. புள்ளியைத் தொடர்ந்து போட வேண்டிய கோலம்!	18-02-2010	253
3459. கரும்பில் அரசியல்!	19-02-2010	256

3460. தேசிய ஆதி திராவிடர் ஆணையமும், தி.மு.கழக அரசும்!	20-02-2010	259
3461. கலையுலக விழாவும்; சிலர் கண்ட கனவும்!	26-2-2010	265
3462. நம் பயணத்திற்குப் பயன்பட!	28-2-2010	270
3463. மாற்றுத் திறனாளிகளும் - மானிடரே!	2-3-2010	273
3464. பொதுக்கருத்து பற்றி பேரறிஞன் ரூசோவின் கருத்து என்ன?	07-03-2010	278
3465. நெஞ்சில் மோதும் நினைவலைகள்!	10-3-2010	284
3466. என்னை மகிழ்விக்க, சென்னைக்கு வருவாயா?	11-03-2010	293
3467. 36 ஆண்டுகளுக்கு முன் அன்றைய முதல்வர் கலைஞர் நீதியரசர் மகராஜனுக்கு எழுதிய கடிதம்!		298
3468. எத்தனை நாள்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?	12-05-2010	303
3469. பன்னீர், பயன்படுத்திய பயனிலா வார்த்தை!	13-05-2010	314
3470. சிறுதாவூர் சீமாட்டிக்கு சீற்றம் ஏனோ?	18-5-2010	316
3471. கோவை மாநாடு; குறையும் நிறையும் விளக்கும் கடிதம்!	26-5-2010	322
3472. ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்...	30-5-2010	325

3473. ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்... (2)	31-5-2010	331
3474. ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்.. 3	02-06-2010	339
3475. வாய்மை வெல்லும் என்பதை உணர்த்த வரிப்புலியே வருக!	16-6-2010	347
3476. நஞ்சை எண்ணாதே; நம்பிக் கெடாதே!	17-6-2010	353
3477. இதோ; செப்பேடுகள் உரைத்திடும் உறுதி!	19-6-2010	357
3478. ஊழலே! உன் பெயர்தான் ஜெயலலிதாவா?	4-7-2010	363
3479. “பந்த்”தால் விளையப் போகும் பயன் என்ன?	7-7-2010	370
3480. வெல்லத் தமிழ் இனி வளரும்!	12-7-2010	374
3481. வேண்டாத விமர்சனங்கள்; மறப்போம்! மன்னிப்போம்!	14-7-2010	379
3482. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்!	16-7-2010	385
3483. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (2)	17-07-2010	393

3428. காக்கும் கரங்களுமன்றோ?

உடன்பிறப்பே,

காவல் துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்து; எதிர்க் கட்சியில் நான் இருக்கும்போது ஒரு விதமாகவோ, ஆளுங் கட்சியில் இருக்கும்போது இன்னொரு விதமாகவோ என்றைக்கும் இருந்ததில்லை. பொதுவாக நம்முடைய நாட்டில் அரசியல் வாதிகள் சிலருக்கு; ஏன்; இன்னும் சொல்லப்போனால் அரசியல் கட்சிகள் சிலவற்றுக்கே போலீஸ் என்றால் ஒரு காழ்ப்பு - ஒரு வெறுப்பு - அவர்களைக் கண்டனம் செய்வதிலே தனி விருப்பு என்ற நிலை இன்னும்கூட மாறாமல் இருக்கின்றது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இதற்கு மாறாக, ஆளுங்கட்சியாக இருந்த போதிலும்; எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும் காவல் துறையினர் பற்றி கொண்டிருந்த கருத்துகளை இந்தக் கடிதத்தின் முகப்பிலேயே உன் போன்றோருக்கு தொகுத்தளிக்க விரும்புகிறேன்.

1962ஆம் ஆண்டு எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது காவல் துறை மானியத்தில் சட்டமன்றத்தில் 12-7-1962 அன்று நான் பேசியது வருமாறு:-

“கடும் மழையிலும் கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும் தங்கள் பணியினை கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்களிடையிலும் தங்கள் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் மரணத்தைத் துச்சமாக மதித்து கடமைக்காகப் போராடி வருகின்ற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறது.”

இந்த என் கருத்தை யார் மறந்தாலும் காவல் துறை நண்பர்கள் மறக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காவல் துறையினரின் வாழ்க்கைத் தரம் குறித்து தி.மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, “உதயசூரியன்” நாடகத்திற்காக போலீசாருக்குச் சார்பாக நான் இயற்றி, தடை செய்யப்பட்டிருந்த

ஒரு தாலாட்டுப் பாட்டையே பேரவையிலே பதிவு செய்ய அங்கே பாடிக் காட்டினேன்.

"ஆராரோ! ஆரிராரோ! ஆணழகா கண் வளராய்!
அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளர வந்த
அஞ்சுகமே கண் வளராய்!

போலீசு வேலைக்கென்று போகின்ற ஞொப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!
துப்பாக்கி எடுத்துக் கிட்டு போகின்ற ஞொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழி மறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண் வளராய்!

நாடாளுமன்ற மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற
குல விளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர்
கண் வளராய்!
காக்கி உடை போட்டுக்கிட்டு
சேப்புத் தொப்பி மாட்டிக்கிட்டு
நாட்டைக் காக்கும் வீரனுக்கு

உன்னைப் போல
நாலு வந்து பிறந்து விட்டா.....
காவி உடை வேணுமடா.....
கமண்டலமும் தேவையடா....
கண்மணியே, கண் வளராய்!"

உடன்பிறப்பே, இதன் தொடர்ச்சியாகத்தான் 1969ஆம் ஆண்டு நான் முதல்வராகப் பொறுப்புக்கு வந்ததும், காவலர் வாழ்வில் நிம்மதி ஏற்படுத்த வேண்டுமென்று கருதி, தமிழ்நாட்டிலே வெள்ளைக்காரன் காலத்திலிருந்து அதுவரை உருவாக்கப்படாத காவல் துறைக்கான தனிக் குழு (போலீஸ் கமிஷன்) ஒன்றையே ஏற்படுத்தி, அதன் பரிந்துரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்தினேன். அதற்குப் பிறகும் தி.மு.

கழகம் ஆட்சிக்கு வந்த போதெல்லாம் மேலும் இரண்டு முறை காவல் துறைக்கான கமிஷன் அமைக்கப்பட்டது. இவற்றின் பரிந்துரைகளின் விளைவாகத்தான் 1967 ஆம் ஆண்டிலே காவலர்களுடைய அடிப்படை சம்பளம் ரூ. 70 ஆகவும், பஞ்சப்படி ரூ. 59 ஆகவும் இருந்தது; தற்போது காவலர்களுடைய அடிப்படை சம்பளம் 7,300 ஆகவும், அகவிலைப்படி உட்பட; மொத்தம் 10,300 ரூபாய் என உயர்ந்துள்ளது.

மக்கள் தொண்டில் 150 ஆம் ஆண்டினைக் கொண்டாடும் தமிழ்நாடு காவல் துறை தொடர்ந்து மாநிலத்தில் பெரிய அளவில் சட்டம், ஒழுங்கு பிரச்சினையில் ஊனம் ஏதும் நிகழாமல் காத்திட தன்னால் இயன்ற அளவிற்குப் பாடுபட்டு வருகிறது என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. குறிப்பாக கடந்த ஓராண்டிலே மாத்திரம் எடுத்துக்கொண்டால், அதாவது 2009 ஆம் ஆண்டில் பல்வேறு சமயங்கள் சார்ந்த திருவிழாக்கள் - பல்வேறு கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் - போராட்டங்கள் - முக்கிய நபர்களின் வருகைகள் அனைத்துமே அமைதியாகவே நடந்து முடிந்துள்ளன.

சட்டம் ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்கும் சம்பவங்கள் ஏதுமின்றி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டதற்கு பெரிதும் காரணம் காவல் துறை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். கொடைக்கானல் வனப் பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றை அமைக்க முற்பட்ட தீவிரவாதிகளின் முயற்சி களை தமிழ்நாடு காவல் துறையினர்தான் முறியடித்தனர். சரியான தருணத்தில் 22 பேரை கைது செய்து, அவர்களில் 12 பேரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்ததன் மூலம் பிரிவினை சக்திகள் மேற்கொண்ட மத நல்லிணக்கத்தைத் தகர்க்கும் வன்முறை முயற்சிகளை காவல் துறையினர்தான் தடுத்துள்ளனர்.

மக்கள் போர்ப்படைக்குழுவின் நிறுவனரும், நான்கு நிலக்கிழார் கொலைகளில் சம்பந்தப்பட்டு, கடந்த 37 வருடங்களாக தலைமறைவாக இருந்தவருமான நக்சலைட் தீவிரவாதி தமிழ்வாணனை 12.04.2009 அன்றும், 1980-ல் ஒரு காவல் ஆய்வாளர், இரண்டு காவலர்கள் மற்றும் மூன்று நக்சலைட்டுகளை கொன்று விட்டு, காவலில் இருந்து தப்பித்து, கடந்த 38 வருடங்களாக தலைமறைவாக இருந்த ஜோலார்

பேட்டையைச் சேர்ந்த நக்சலைட் தீவிரவாதி சிவலிங்கம் (எ) சிவா என்பவரையும், அவரது சகா சாமி (எ) சாமிநாதன் ஆகியோர்களை 10.05.2009 அன்றும், ஆயுள் தண்டனை அடைந்து, பரோலில் சென்று, கடந்த 22 வருடங்களாக தலைமறைவாக இருந்து வந்த நக்சலைட் தீவிரவாதி என்.கே.கோபால் என்பவரை 24.6.2009 அன்றும் காவல் துறையினர் கைது செய்தனர்.

மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வெடி பொருட்கள், மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை கடத்த முயற்சித்தவர்கள் மற்றும் இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியவர்கள் மீது காவல் துறையினர் கடந்த மூன்றாண்டுகளாக 70 வழக்குகள் பதிவு செய்து, மொத்தம் 299 நபர்களை கைது செய்துள்ளனர். இவர்களுள் 45 நபர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

07.01.2009 முதல் 09.01.2009 வரை, இந்திய குடியரசுத்தலைவர், இந்தியப் பிரதமர் மற்றும் உலகளவில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட ''ஏழாவது பிரவாசி பாரதிய திவாஸ்'' சார்பில் நடத்தப்பட்ட மாநாட்டின் போது, தீவிரவாத அமைப்புகளின் அச்சுறுத்தல்கள் இருந்தும், காவல்துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து அம்மாநாடு அமைதியாக முடிய வழிவகை செய்தனர்.

குற்றவாளிகளை உடனடியாக கண்டு பிடித்து கைது செய்து வருவதாலும், நமது மாநிலத்தில் குற்ற நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு; அதனால், 2006ஆம் ஆண்டு 89 சதவீத குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, களவுபோன சுமார் 34.8 கோடி ரூபாய் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. இதே போன்று, 2007ஆம் ஆண்டு 87 சதவீத வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சுமார் 48.7 கோடி ரூபாய் மதிப்புள்ள 83 சதவீத சொத்துக்கள் மீட்கப்பட்டும், 2008-ம் ஆண்டு 82 சதவீத வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சுமார் 47.61 கோடி ரூபாய் மதிப்புள்ள 76 சதவீத சொத்துக்கள் மீட்கப்பட்டும், இவ்வாண்டும் செப்டம்பர் வரை 72 சதவீத வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சுமார் 39.7 கோடி ரூபாய் மதிப்புள்ள 66 சதவீத சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு சில வழக்குகள் வருமாறு :-

சென்னை நகரில், மின்ட் தெருவிலுள்ள சந்திரபிரபு ஜெயின் கோவிலில், பூசாரி ஒருவரை கொலை செய்து, சுமார் 1.2 கோடி மதிப்புள்ள 22 கிலோ கிராம் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற வழக்கில், ஆறு கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டு,

9.2 கிலோ தங்க நகைகள் இதுவரை கைப்பற்றப் பட்டுள்ளன.

சென்னையில் கன்னக்களவு வழக்குகளில் சம்பந்தப்பட்டு, 15 வருடங்களாக தலைமறைவாக இருந்த தண்டையார்பேட்டையைச் சேர்ந்த குப்பன் என்பவரும், சைதாப்பேட்டையைச் சேர்ந்த மன்னார் மற்றும் விழுப்புரத்தைச் சேர்ந்த மணியரசு ஆகியோரும் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து, 88 சவரன் தங்க நகைகள் உட்பட சுமார் 21 லட்சம் மதிப்புள்ள களவு போன பொருட்கள் மீட்கப்பட்டன.

சென்னை, பூக்கடை, சௌகார்பேட்டை நகை வியாபாரி சுரேஷ்குமார் என்பவர் கொலை செய்யப்பட்டு, அவரிடமிருந்து ரூ.20 லட்சம் மதிப்புள்ள 2.15 கிலோ எடையுள்ள தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில், குற்றவாளி நேமிசந்த் என்பவர் கைது செய்யப் பட்டு, அவரிடமிருந்து, களவு போன சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன.

சென்னை, சௌகார்பேட்டையில் ரத்தன் ஆர்.ஜெயினி என்பவரிடமிருந்து ரூ.50 லட்சத்தை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கொள்ளையடித்து சென்ற வழக்கில் ஆறு எதிரிகள் கைது செய்யப்பட்டு, ரூ.44.5 லட்சம் கைப்பற்றப்பட்டது.

சென்னை நகரில், கடந்த நான்கு ஆண்டுகளாக, பல்வேறு இடங்களில் நடந்த திருட்டு மற்றும் கன்னக்களவு வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரி சுஹேல் அகமது என்பவர் கைது செய்யப்பட்டு, 25 வழக்குகளில் சுமார் 50 லட்சம் மதிப்புள்ள 301 சவரன் தங்க நகைகள், 14 கிலோ வெள்ளி மற்றும் வைர நகைகள் கைப்பற்றப்பட்டன.

சென்னை காவல் துறையினர், கடந்த 10 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்த மலர்மன்னன் என்ற குற்றவாளியை கைது செய்து, 45 வழக்குகளில் சம்பந்தப்பட்ட சுமார் 40 லட்சம் மதிப்புள்ள 325 சவரன் தங்க மற்றும் வைர நகைகள் மற்றும் 13 கிலோ வெள்ளி ஆகியவற்றை கைப்பற்றினர்.

சென்னை, அண்ணாநகரில் அசோக் மால்பானி மற்றும் அவரது மனைவியிடமிருந்து கொள்ளையடித்துச் சென்ற வழக்கில், பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மகேஷ் என்பவர் கைது செய்யப்பட்டு ரூ.60 லட்சம் மதிப்புள்ள தங்க, வைர நகைகள் மற்றும் பணம் ரூ.10 லட்சம் ஆகியன கைப்பற்றப்பட்டன.

சென்னை, தியாகராய நகர், Broad Line Computers System என்ற நிறுவனத்திலிருந்து Wescos Properties and Developers உரிமையாளர் சரவணன் என்பவர் மோசடி செய்து பெற்ற ரூ.1.27 கோடி மதிப்புள்ள 250 கணினிகளையும், 300 மடிக்கணினிகளையும் புகார் அளித்த 24 மணி நேரத்திற்குள் எதிரியை கைது செய்து, அப்பொருட்களை கைப்பற்றினர்.

சென்னை புறநகர் காவல் துறையினர், 52 கன்னக்களவு மற்றும் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஸ்ரீகாந்த் மற்றும் ஆறு குற்றவாளிகளை கைது செய்து, அவர்களிடமிருந்து ரூ.34 லட்சம் மதிப்புள்ள 300 சவரன் நகைகளை கைப்பற்றினர்.

சென்னை புறநகர் காவல் துறையினர், வாகன திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஸ்ரீதர் மற்றும் ஐந்து நபர்களை கைது செய்து, அவர்களிடமிருந்து ரூ.20 லட்சம் மதிப்புள்ள நான்கு கார்கள், நான்கு இரு சக்கர வாகனங்கள் மற்றும் தங்க நகைகளை கைப்பற்றினர்.

சென்னை புறநகர் காவல் துறையினர், உமா மகேஸ்வரி மற்றும் மூன்று நபர்களை கைது செய்து, சுமார் ஒரு கோடி மதிப்புள்ள தொன்மை வாய்ந்த 24 ஐம்பொன் சிலைகளை கைப்பற்றினர்.

200 வழக்குகளில் சம்பந்தப்பட்டு, ஏற்கெனவே ஐந்து முறை குண்டர் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட சுரேஷ் என்கின்ற மார்க்கெட் சுரேஷையும், அவருடன் சேர்ந்த மூன்று குற்ற வாளிகளையும் 20-5-2009 அன்று சென்னை புறநகர் காவல் துறையினர் கைது செய்து 70 சவரன் தங்க நகைகளையும், வெள்ளி ஆபரணங்களையும் கைப்பற்றினர்.

கடலூர் மாவட்டத்தில், வேப்பூர் அருகில் திருச்சியிலிருந்து வந்த லாரியை வழிமறித்து ரூ.3.72 கோடி பணத்தை கொள்ளையடித்துச் சென்ற வழக்கில், இருளாண்டி மற்றும் 12 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து ரூ.2.85 கோடி பணத்தைக் கைப்பற்றினர்.

வேலூர் மாவட்ட காவல் துறையினர், 13 வாகன திருட்டு வழக்குகளில் சம்மந்தப்பட்ட மூர்த்தி என்பவரை கைது செய்து சுமார் 1 கோடி மதிப்புள்ள 8 மினி லாரிகள் மற்றும் 5 கார்களை கைப்பற்றினர். மேலும், 25 கன்னக்களவு மற்றும் திருட்டு வழக்குகளில் சம்மந்தப்பட்ட பாபு மற்றும் இரண்டு எதிரிகளை கைது செய்து சுமார் 30 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை கைப்பற்றினர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், ராமா விலாஸ் ஆயில் கம்பெனி கணக்காளரை கடத்தி அவரிடமிருந்து ரூ.56,60,000 பணத்தை கொள்ளையடித்து சென்ற வழக்கில் எதிரிகள் விஜி மற்றும் 18 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து சுமார் ரூ.36 லட்சத்தை கைப்பற்றினர்.

சேலம் நகரில் பணத்திற்காக ஆட்கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு 11 வழக்குகளில் தொடர்புடைய 27 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ரொக்க பணம் ரூ. 9.33 லட்சமும், 47 சவரன் தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டன. மேலும் நான்கு நாற்சக்கர வாகனங்களும், மூன்று இருசக்கர வாகனங் களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இந்த சம்பவங்களில் ஈடுபட்ட 18 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

கோவை மாவட்டத்தில் 15 வழிப்பறி வழக்குகளில் சம்பந்தப்பட்ட, ஆண்டிப்பட்டி முத்து என்பவரை கைது செய்து, அவரிடமிருந்து ரூ.10 லட்சம் மதிப்புள்ள 100 சவரன் நகைகளும், நான்கு கன்னக்களவு வழக்குகளில் சம்பந்தப்பட்ட யோகேஷ், சரவணன், குணா, மனோகரன் ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து சுமார் 11 லட்சம் மதிப்புள்ள 75 சவரன் தங்க நகைகள் மற்றும் சுமார் 4 லட்சம் மதிப்புள்ள கைக்கடிகாரங்களும் கைப்பற்றப்பட்டன.

கோவை நகர காவல் துறையினர், Victory Equities and Forex India Limited என்ற நிதி நிறுவனத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் மற்றும் நான்கு பேர் 256 முதலீட்டாளர்களிடமிருந்து ரூ.1.53 கோடி மோசடி செய்த வழக்கில் குற்ற வாளிகள் நான்கு பேரையும் கைது செய்து, முழு பணத்தையும் கைப்பற்றி முதலீட்டாளர்களுக்கு திரும்ப வழங்கினர்.

திருப்பூர் காவல் துறையினர், ஜெயமணி என்ற பெண் காவலர் கொலை செய்யப்பட்ட வழக்கு மற்றும் ஏழு ஆதாயக்கொலை

வழக்குகள், இரண்டு கொலை வழக்குகள், ஒரு கொள்ளை வழக்கு மற்றும் 16 திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சேலத்தைச் சேர்ந்த எதிரி சங்கர் என்பவரை கைது செய்து, களவு போன பொருட்களை கைப்பற்றினர்.

திருச்சி மாவட்ட காவல் துறையினர், ஹௌரா விரைவு ரயில் வண்டியில் கடத்தி செல்லப்பட்ட ரூ.5.5 கோடி மதிப்புள்ள லாட்டரி சீட்டுகளை கைப்பற்றி சகாயராஜ் உள்ளிட்ட இரு எதிரிகளை கைது செய்தனர்.

கரூர் மாவட்ட காவல்துறையினர் ஒரு வெடி மருந்து கடையில் இருந்து 32,522 மின் டெட்டனேட்டர்கள் மற்றும் 4,532 சாதாரண டெட்டனேட்டர்களை திருடிய எட்டு குற்றவாளிகளை கைது செய்து, வெடிபொருட்களை மீட்டனர்.

விருதுநகர் மாவட்டத்தில், கொள்ளை, வழிப்பறி மற்றும் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட கருப்பசாமி, ராஜா மற்றும் சிலர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 60 சவரன் தங்க நகைகள், பணம் உட்பட சுமார் ஆறு லட்சம் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்ட காவல் துறையினர், ஆதாயக் கொலை, ஒன்பது கன்னக்களவு மற்றும் ஐந்து வழிப்பறி வழக்குகளில் சம்பந்தப்பட்ட பிரபல குற்றவாளிகளான ஈஸ்வரன் மற்றும் ஏழு எதிரிகளை கைது செய்து, ரூ.30 லட்சம் மதிப்புள்ள 193 சவரன் தங்க நகைகள், ரொக்கப் பணம் ரூ.45 ஆயிரம் மற்றும் 50 கைபேசி ஆகியவற்றை கைப்பற்றினர்.

இரயில்வே காவல்துறையினர், ராஞ்சியை சேர்ந்த ராஜன் ராம் மற்றும் அமர்நாத் ஜெய்ஸ் வால் ஆகியோரை கைது செய்து 34 இரயில் கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்ட 300 சவரனுக்கும் அதிகமான தங்க நகைகள் கைப்பற்றினர்.

மாநில குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினர், திண்டுக்கல்லைச் சேர்ந்த மருத்துவர் பாஸ்கரன் என்பவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கிலும், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் உறவினர் விஜயன் கொலை வழக்கிலும் திறமையாக புலன் விசாரணை செய்து எதிரிகளை கைது செய்தனர்.

மேலும், Gold Quest International Pvt. Ltd., சம்பந்தப்பட்ட தங்கக்காசு மோசடி வழக்கில் இத்துறையினர் திறமையாக விசாரணை செய்து, 25 எதிரிகளை கைது செய்து, சுமார் ரூ.192 கோடி மதிப்பிலான நிறுவனத்தின் சொத்துக்களை முடக்கி வைத்து, எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

பொருளாதார குற்றப்பிரிவினர், பட்டுக்கோட்டையைச் சேர்ந்த ரமேஷ் மற்றும் வலங்கைமானைச் சேர்ந்த செந்தில் ஆகியோரை கைது செய்து, திருவாரூர், திருத்துறைப்பூண்டி அருள்மிகு மருந்தீஸ்வரர் உடனுறை பெரிய நாயகி அம்மன் கோவிலில் எட்டு மாதங்களுக்கு முன்பு களவு போன கோடிக்கணக்கில் மதிப்புள்ளதெனப்படும் தொன்மைவாய்ந்த மரகத லிங்கத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மூன்றாண்டு காலக்கட்டத்திலேயே தங்கள் உயிரைப் பணயம் வைத்து சமூக எதிரிகளோடும், கள்வர்களோடும் போராடி, காவல் துறையினர் பெற்றிருக்கும் வெற்றிகளின் காரணமாக விளைந்துள்ள சாதனைகளை நாம் பாராட்டிட வேண்டும். சமுதாயப் பாதுகாப்புக்காக - சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதற்காக - மனித உயிர்களையும் உடைமைகளையும் காப்பதற்காக; காவல் துறையினர் எதிர்கொள்ளும் சவால்கள் எண்ணற்றவை மட்டுமல்ல; எண்ணிப்பார்த்திடவே இயலாதவை. குற்ற நிகழ்வுகளில் கடைப்பிடிக்கப்படும் உயர் தொழில் நுட்பங்கள் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி விடுகின்றன. எனவே காவல் துறையினர் ஆற்றி வரும் கடமையைப் பொதுவாக நாம் போற்றிடத்தான் வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக நேர்ந்து விடும் நிகழ்வுகளை வைத்துக் கொண்டு, காவல் துறையினரையே குற்றஞ் சொல்லிக் குறை காண்பது, அவர்களின் நீண்ட நெடிய தொண்டற வாழ்க்கையில் திடீரென்று ஒரு கறும்புள்ளியைக் குத்தி அவர்கள் தொடர்ந்து சீரிய பணியாற்றுவதற்கு தயக்கம் ஏற்படுத்த முயல்வதும் வரவேற்கத்தக்க ஒன்றல்ல என்பதோடு; சமுதாயக்கேடாகவே அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுவது எனது கடமையென்பதால் இந்த நீண்ட கடிதம் எழுத நேரிட்டது.

அன்புள்ள,

மு.க.

1-11-2009

3429. இங்கு வந்துள்ள தமிழர்க்கும் இடர் களைவோம்!

உடன்பிறப்பே,

1-11-2009-ந்தேதி மாலையில் நான் காரில் வந்து கொண்டிருந்தேன். காரில் என் அருகில் அந்த வார இதழ்கள் வைக்கப்பட்டிருந்தன. அதில் 11-11-2009 தேதியிட்ட "இந்தியா டுடே" தமிழ் பதிப்பு இதழும் இருந்தது. அந்த ஏட்டினைப் புரட்டினேன். பக்கம் 40இல், "இருள் படிந்த கூடாரங்கள்" என்ற தலைப்பில் தமிழ்நாட்டிலே உள்ள இலங்கைத் தமிழர் அகதி முகாம்களில் அவர்கள் அடிப்படை வசதிகளின்றி தவிப்பதாகவும், மற்ற நாட்டு அகதிகளைப் போல அவர்களுக்கும் கூடுதல் சுதந்திரம் கிடைக்குமா என்றும் கேள்வி கேட்டு, அந்தக் கட்டுரை முழுவதும் அவர்களின் துயரங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன. அதைப் படித்த போது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே எனது செயலாளர்களை அழைத்து 2-11-2009 காலையில் தலைமைச் செயலகத்தில் இந்தப் பொருள் பற்றி விவாதித்திடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திடுமாறும், இதற்கு பொறுப்பாக உள்ள அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவரும் அதிலே கலந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினேன். தொலைபேசியில் நிதித்துறைச் செயலாளரையும் அழைத்து, இந்தப் பொருள் பற்றிய அனைத்துக் குறிப்புகளையும் தயாரிக்கவும் செய்தேன். அதற்குப் பிறகும் என் மனம் நிம்மதி பெறவில்லை. உடனடியாக உதவியாளரை அழைத்து ஒரு நீண்ட அறிக்கையினை நானே "டிக்டேட்" செய்து, பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தேன். அதற்குப் பிறகும் சும்மாயிராமல், இலங்கைத் தமிழரும், சிறந்த எழுத்தாளரும், "இந்தியா டுடே" இதழில் பேட்டி அளித்தவர்களில் ஒருவருமான மறவன்புலவு திரு. கே.சச்சிதானந்தன் அவர்களை தொலை பேசியில் அழைத்து, அந்த இலங்கைத் தமிழ் அகதிகளின் அவசர அவசியமான தேவைகள் என்ன என்பது பற்றி நாளைக் காலை 8

மணிக்குள் எனக்கொரு குறிப்பினைத் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். இத்தனைக்கும் பிறகுதான் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான குழுக்களை அமைப்பது பற்றிய விவாதத்திலே கலந்து கொள்ளச் சென்றேன்.

இரவு முழுவதும் என்னால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் "இந்தியா டுடே" இதழின் கட்டுரை வரிகள் என் நினைவுப் பாதையில் வலம் வந்தன. ஏனென்றால் ஒரு சில நாட்களுக்கு முன்புதான் 24-10-2009 அன்று "இந்து" நாளிதழில்

"Facilities at Refugee Camps good : U.S. Consul-General" என்ற தலைப்பில் -

"U.S. Consul-General Andres T. Simkin, on Friday expressed satisfaction with the facilities provided to refugees living in camps in Tamil Nadu" என்ற வரிகளோடு தொடர்ந்து வெளி வந்திருந்த தகவல்களுக்கு முரணாக இந்தியா டுடே கட்டுரை அமைந்திருந்தது.

நேற்று (2-11-2009) பொழுது விடிந்ததே துக்க செய்தியோடுதான். வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் தம்பி ஜெயராமன் மறைந்து விட்டார் என்ற அந்தச் செய்தியைக் கேட்டுவிட்டு, உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி விட்டுத் திரும்பினேன். மறவன்புலவு சச்சிதானந்தம்; அவர் சொன்னபடி காலை 8 மணிக்கே வந்து விட்டார். அவரும் நேற்றிரவே இந்தியா டுடே இதழை வாங்கிப் படித்துவிட்டு, என்னைப் பார்த்ததும் அவருடைய பேட்டியில் அவர் சொல்லாத செய்தியெல்லாம் வந்திருப்பதாகக் கூறி மிகவும் வருத்தப்பட்டார். இருந்தாலும் அவருடைய குறிப்புகளையும் பெற்றுக் கொண்டு தலைமைச் செயலகக் கூட்டத்திற்கு விரைந்தேன். அங்கே நடைபெற்ற கூட்ட முடிவுகளைப் பற்றி, அந்தத் துறையின் அமைச்சர் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியினை நீ இதற்குள் படித்திருப்பாய்.

பின் எதற்காக இந்தக் கடிதம் என்றுதானே கேட்க நினைக்கிறாய். நான் அந்தக் கூட்டத்தில் இங்குள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்காக நமது கழக அரசின் சார்பில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை

நீயும், மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இந்தக் கடிதம். இதோ அந்த நீண்ட பட்டியல் :-

தமிழ்நாட்டில், 26 மாவட்டங்களில் 115 முகாம்களில் (2 சிறப்பு முகாம்கள் உள்பட) இலங்கைத் தமிழர்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இதுநாள் வரை 19,340 குடும்பங்களைச் சார்ந்த 73,241 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுமார் 11,288 குடும்பங்களைச் சார்ந்த 31,802 பேர் முகாம்களுக்கு வெளியில் தங்கி உள்ளனர்.

2006-ஆம் ஆண்டில் ரூ. 2 கோடியே 80 லட்சம் செலவில், 9562 வீடுகளின் மேற் கூரைகள் சீர் செய்யப்பட்டன. ரூ. 3 கோடி செலவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2006ஆம் ஆண்டில் 86 முகாம்களில் அடிப்படை வசதிகளான கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் ரூ.9 கோடியே 12 லட்சம் செலவில் செய்து கொடுக்கப்பட்டன. 2007-2008-ம் ஆண்டில் 50 முகாம்களில் புதியதாக கழிப்பறைகள் மற்றும் குடிநீர்வசதிகள் ரூ.5 கோடியே 24 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டன. 2008-ம் ஆண்டில் 72 முகாம்களில் வீடுகள் புதுப்பிக்கவும், மற்றும் கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் ரூ.3 கோடியே 12 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2009-10-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இத்தகைய பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்காக செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் என்னுமிடத்தில் 96 வீடுகள் ரூ.1.20 கோடி செலவிலும், நாட்டரசன்கோட்டை, சென்னல குடியில் 90 வீடுகள் ரூ.30.80 இலட்சம் செலவிலும், வேலூர் மாவட்டம் குடியாத்தம் முகாமில் 62 வீடுகள் ரூ.21.08 இலட்சம் செலவிலும், ஈரோடு மாவட்டம் காங்கேயத்தில் 63 வீடுகள் ரூ.22.68 இலட்சத்திலும், திருநெல்வேலி மாவட்டம் பாவூர்சத்திரத்தில் 26 வீடுகள் ரூ.8.84 இலட்சத்திலும் கட்டி முடிக்கப்பட்டு இலங்கைத் தமிழர்கள் குடியமர்த்தப்பட்டு உள்ளனர்.

கரூர் மாவட்டம், ஆச்சிமங்கலம் என்ற இடத்தில் ரூ 1.16 கோடி செலவில் 450 வீடுகள் கட்ட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டம், வேடர் காலனி

முகாமில் புதியதாக 150 வீடுகள் ரூ.86 இலட்சம் செலவிலும், திருமூர்த்திநகர் முகாமில் புதியதாக 115 வீடுகள் ரூ.98 இலட்சம் செலவிலும், வேலூர் மாவட்டம் சின்னப்பள்ளிக் குப்பம் முகாமில் புதியதாக 87 வீடுகள் ரூ.68.80 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம் நாராணம்மாள்புரத்தில் புதியதாக 9 வீடுகள் ரூ.7.74 இலட்சம் செலவிலும், ஆலடியூர் முகாமில் 46 வீடுகள் ரூ 39.56 இலட்சம் செலவிலும், அத்தியடிப்பிள்ளையார்கோவில் அகதிகள் முகாமில் 60 வீடுகள், ரூ. 51.60 இலட்சம் செலவிலும் புதியதாக கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

- 1.8.2006 முதல் மத்திய - மாநில அரசுகள் வழங்கும் பணக்கொடை குடும்பத் தலைவர்களுக்கு ரூபாய் 200 என்பதிலிருந்து 400 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயது வந்தோருக்கும் ரூபாய் 144 என்பதிலிருந்து ரூபாய் 288 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள முதல் குழந்தைக்கு ரூபாய் 90 என்பதிலிருந்து 180 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்கு ரூபாய் 45 என்பதிலிருந்து 90 ரூபாயாகவும் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.
- ஒரு கிலோ அரிசி 57 பைசா என்ற அளவில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.
- கர்ப்பிணிப் பெண்களுக்கான ; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறுக்கான ஆறாயிரம் ரூபாய் நிதியுதவித் திட்டம் 2007 முதல் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, சுமார் 1000 பேருக்கு

2007-08-ம் ஆண்டிலும், 2242 நபர்களுக்கு 2008-09-ம் ஆண்டிலும் வழங்கப்பட்டுள்ளது,

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் இல்லத்து மாணவ மாணவியர்களுக்கு 12-ம் வகுப்பு வரை இலவச கல்வியும், இலவச புத்தகம், நோட்டுப்புத்தகம், சீருடை, மதிய உணவு மற்றும் +1 மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டியும்

வழங்கப்படுகின்றது. கடந்த 2008-09-ம் ஆண்டில் 20,106 மாணவ மாணவியர்களும், 2009-10-ல் 19,737 மாணவ மாணவியர்களும் பயன் பெற்று உள்ளனர்.

இலங்கை தமிழ் மாணவ மாணவியர்களுக்கு 2008-09 மற்றும் 2009-10-ம் ஆண்டுகளில் கலைக்கல்லூரிகளில் தமிழக மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட பிறகு நிரப்பப்படாத இடங்களில் இலங்கை மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள உரிய அனுமதி மற்றும் ஆணைகள் வழங்கப்பட்டு 2008-09-ம் ஆண்டில் 917 மாணவ மாணவியர்களும்,

2009-10-ல் 1084 மாணவ மாணவியர்களும் பயின்று வருகின்றனர்.

முகாம்வாழ் மாணவ மாணவியர்கள் வெளிமாவட்டங்களில் தங்கி உயர்கல்வி மேற்கொள்ள அனுமதிகள் வழங்கப்பட்டு அவர் களுக்குரிய பணக்கொடையை அவர்களின் பெற்றோர்களிடம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2009-10-ம் ஆண்டில் இலங்கை தமிழ் மாணவ மாணவியர்களை சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் பொதுப் பிரிவில் ஏற்படும் காலியிடங்களில் சேர்க்க அரசின் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து முகாம்களிலும் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு பொது சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முகாம்களுக்கு அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாதம் இரண்டு முறை மருத்துவக் குழுக்கள் முகாம்களுக்குச் சென்று தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டும் வருகின்றன. சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் இடங்களில் அந்தந்த மாவட்ட மற்றும் நகரங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளின் வாயிலாக உயர் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இலங்கைத் தமிழர் சிறப்பு நிவாரண நிதியில் இருந்து ரூ.15,000/- விபத்து மற்றும் உயிர் காக்கும் மருத்துவ சிகிச்சைகளுக்காக வழங்கப்படுகின்றது.

2006-ம் ஆண்டிற்கு முன் வரை இரவு 6 மணியில் இருந்து காலை 6 மணி வரை மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

2006-ம் ஆண்டிற்குப் பிறகு 24 மணிநேரமும் தொடர்ந்து மின்சாரம் வழங்க ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் தங்கள் வாழ்வாதாரத்தினை பெருக்கிக் கொள்ளும் பொருட்டு காலை 6 மணி முதல் மாலை 6 வரை வேறு இடங்களுக்கு சென்று வேலை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர வெளியூர்களில் சென்று தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கு சிறப்பு அனுமதிகள் வழங்கப்பட்டு பணக்கொடை வழங்கப்படும் நாளில் மட்டும் வந்து பணக்கொடைகள் பெற்றுச் செல்ல ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர்களுக்கு முகாமில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புகள், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய அனைத்து நிவாரண உதவிகளும் உடன் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு உரிய இலங்கை பிறப்புச் சான்று சம்பந்தப்பட்ட இலங்கைத் தூதரகத்தில் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசினால் மேற்கண்ட அனைத்து உதவிகளும் தொடர்ந்து முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இத்துடன் நம்முடைய கடமை முடிந்து விட்டதாக நான் கருதவில்லை. எனவேதான் நான் தொடக்கத்தில் எழுதியவாறு அவசர அவசரமாக இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். அந்த முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான விடிவு காலம் பிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 26-9-2009 அன்று காஞ்சியில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் இறுதித் தீர்மானமாக துணை முதல்வர் தம்பி மு.க. ஸ்டாலின் படித்தபோது, "இவற்றிற்கெல்லாம் மேலாக; இவர்களை இந்தியக் குடியுரிமைச் சட்டம், மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின்கீழ், மறு குடியமர்த்தும் முயற்சியாக மத்திய அரசோடு கலந்து பேசி; அவர்கள் தமிழகத்திலே நிரந்தரமாக குடியிருக்க வழிவகை செய்து தர வேண்டுமென்றும், அவர்கள் தங்குவதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்திற்குமான ஏற்பாடுகளையும் செய்து தர வேண்டுமென்றும்" கேட்டுக் கொண்டதோடு மட்டுமல்லாமல், அதற்கடுத்த மறுநாளே

27-9-2009 அன்று நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், "I request your kind intervention on humanitarian grounds and use of your esteemed offices to resolve this larger issue occupying the centre stage of attention of the Tamil people enabling the permanent settlement of Sri Lankan Tamil Refugees in Tamil Nadu. Once their stay is legally regularised, the Government of Tamil Nadu will be able to take up necessary steps for the betterment of their livelihood, economically and socially" என்று எழுதியிருந்தேன்.

எனவே இந்த அரசைப் பொறுத்தவரையில் - அவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் அல்ல; அவர்களும் தமிழர்கள்தான் - நம்மோடு தொப்புள் கொடி உறவு கொண்டவர்கள்தான் - அவர்களை வாழ்விக்கச் செய்யும் அனைத்து முயற்சிகளும் நம்மை நாமே வாழ்வித்துக் கொள்ளச் செய்யும் முயற்சிகள்தான் என்ற நோக்கோடு செயல்படுகின்றது. "வார ஏடு" ஒன்று சுட்டிக் காட்டியதால் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற குறைகளையும் கண்டறிந்து நிவாரணப் பணிகளை மேற் கொள்ளத்தான் இந்த அரசின் சார்பில் 12 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசின் உதவிகளும் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

நமது அமைச்சர்கள் மட்டுமல்லாது; உன் போன்ற உடன்பிறப்புகளும் இங்குள்ள இலங்கைத் தமிழர்களின் இடர் களைந்திட ஒல்லும் வகையெல்லாம் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் ஒத்துழைப்பு தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

4-11-2009

3430. கேளாக் காதினராய் கேரள அரசினர்; தேளாய்க் கொட்டுவதோ!

உடன்பிறப்பே,

முல்லைப் பெரியாறு பிரச்சினை தற்போது உச்ச நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது. தமிழக அரசின் சார்பிலும், கேரள அரசின் சார்பிலும், மத்திய அரசின் சார்பிலும் வழக்கறிஞர்கள் அங்கே வாதாடிக் கொண்டிருக்கின்றார்கள். கேரள அரசின் சார்பில் அங்கே அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக இருந்து தங்கள் கோரிக்கைகளை வெளியிடும் போது, பரிதாபத்திற்குரிய தமிழகத்தின் சார்பில் நாம் நம்முடைய வாதங்களை எடுத்து வைக்கும்போது - இங்கேயுள்ள தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டு தமிழக அரசைப் பற்றி எப்படியாவது குறை கூற வேண்டுமென்ற ஒரே அக்கறையோடு அறிக்கை விடுபவர் களுக்கும் பதில் கூற வேண்டிய நிலையிலே இருப்பதுதான் வேதனையானது. அவர்களுக்கு முல்லைப் பெரியாறு பற்றிக் கவலையில்லை, மாறாக நம்மை ஏதாவது குறை கூற வேண்டும் என்பதில்தான் அக்கறை. எப்படியிருந்த போதிலும் முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்த உண்மையான விவரத்தைத் தொகுத்து இங்கே வெளியிட விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை 1886ஆம் ஆண்டிலிருந்து அதாவது 29-10-1886 அன்று திருவாங்கூர் மகாராஜாவிற்கும் சென்னை ராஜதானிக்கும் இடையே பெரியாறு குத்தகை ஒப்பந்தம் போடப்பட்ட நாளிலிருந்தே தொடர்ந்து இருந்து வருவதாகும். முல்லைப் பெரியாறு அணையிலே நீர் மட்டத்தை உயர்த்துவது குறித்து தமிழக அரசின் சார்பில் உச்ச நீதி மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் உச்ச நீதி மன்றம் 27-2-2006 அன்று தீர்ப்பினை வழங்கியது.

அந்தத் தீர்ப்பில், முல்லைப் பெரியாறு அணை பலமாக உள்ளது என்றும்;

தமிழ்நாடு முதற்கட்டமாக தற்போதுள்ள 136 அடியிலிருந்து 142 அடி வரையிலே நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளலாம் என்றும்;

மத்திய நீர்வளக் குழுமம் தெரிவித்த பரிந்துரைகளின்படி மீதமுள்ள பணிகளை கேரள அரசின் தொடர்ந்த தடங்கல்கள் காரணமாக தமிழ்நாடு இன்னமும் செய்து முடிக்க இயலாத நிலையில்; மத்திய நீர்வளக் குழுமத்திற்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் தமிழக அரசு செய்து முடித்தவுடன், அணையின் உச்ச நீர்மட்ட அளவான 152 அடிவரையில் நீரைத் தேக்கி வைக்க தனிப்பட்ட வல்லுநர்கள் குழு ஒன்று அணையினை ஆய்வு செய்ய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தத் தீர்ப்பினை செயற்படுத்தாமல் தடைகளை ஏற்படுத்தக் கூடிய வழிகளை கேரள அரசு தொடர்ந்து உருவாக்கி வருகிறது. (The Kerala Government having adopted an obstructionist approach cannot now be permitted to take shelter under the plea that these are disputed questions of fact).

மத்திய நீர்வளக் குழுமம் பரிந்துரைத்தபடி, அணையை வலுப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு மேற்கொள்வதற்கு தடையேதும் ஏற்படுத்தக் கூடாது என்று கேரளாவிற்கு உத்தரவிட வேண்டும் என்பதுடன்; கேரள அரசு தடை ஏதும் ஏற்படுத்த காரணம் எதுவுமில்லை என்றும் அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (In this regard, at this stage the only prayer of the State of Tamil Nadu is that State of Kerala be directed not to obstruct it in carrying out the strengthening measures as suggested by Central Water Commission. We see no reason for the State of Kerala to cause any obstruction).

மேலும், கேரள மாநிலமும் மற்றும் அதன் அதிகாரிகளும் தடைகள் ஏதும் ஏற்படுத்தக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது. (The State of Kerala and its Officers are restrained from causing any obstruction.)

உச்ச நீதிமன்றத்தின் 27.2.2006-ம் நாளிட்ட தீர்ப்பினை கேரள அரசு நிறைவேற்றாமல், அத்தீர்ப்புக்கு எதிராக - தீர்ப்பு வந்த 16 நாட்களுக்குள் -18-3-2006 அன்று அவ்வரசு, அதன் நீர்ப்பாசன

மற்றும் நீர்ப்பாதுகாப்புச் சட்டம், 2003-க்கு திருத்தங்களைக்கொண்டு வந்து சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.

அதற்கு எதிராகத் தடையாணை கோரி உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா அரசு 13 நாட்களுக்குப் பிறகுதான் 31.3.2006 அன்று வழக்கு தொடுத்தது. ஜெயலலிதா அரசு இப்படி வழக்கு தொடுத்ததோடு சரி. உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை, சட்டவிதி முறைகளை அனுசரித்து முறையாகப் பதிவு செய்து, அதற்கான பதிவெண்ணைப் பெறுவது; வழக்கை விசாரணைக்குக் கொண்டுவருவது போன்ற முயற்சி எதையும் மேற்கொள்வதற்கு ஜெயலலிதா ஆட்சியில் இருந்தவரையில் எந்தவிதமான கவனமும் செலுத்தவில்லை. மேலும், தடையாணை பெறுவதற்குக்கூட சட்டரீதியாக முறையான முயற்சி எதையும் ஜெயலலிதா ஆட்சியில் இருந்து இறங்கும்வரை மேற்கொள்ளவில்லை.

பிறகு, 2006, மே மாதம் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, என் தலைமையில் ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான்; அந்த வழக்கில் சட்டரீதியான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. வழக்கிற்கான ஆரம்பக் கட்டம் எனப்படும் பதிவெண்ணைப் பெற்றதே கழக ஆட்சிதான். அந்த வழக்கை விசாரணைக்குக் கொண்டு வந்ததும் கழக ஆட்சிதான். 25.9.2006 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, உச்சநீதிமன்றம் இரு மாநில அரசுகளும், மத்திய அரசு முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி, இப்பிரச் சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும் என்று அறிவுரை வழங்கியது.

அதன்படி, டெல்லியில் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் முன்னிலையில் 29.11.2006 அன்று நானும், கேரள மாநில முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்த பேச்சு வார்த்தையின்போதுதான் முதன்முதலாக புதிய அணை பற்றிய கருத்து கேரள முதலமைச்சரால் முன்வைக்கப்பட்டது. அதனை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. அதனால் பேச்சு வார்த்தையில் முடிவேதும் ஏற்படவில்லை. இந்தப் பேச்சு வார்த்தை பற்றி உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தமிழக

அரசு சார்பில் கோரிக்கை வைக்கப் பட்டு, அந்தக் கோரிக்கையினை ஏற்று; உச்சநீதிமன்றம் வழக்கினை விசாரிக்கத் தொடங்கியது.

இதற்கிடையில், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் வழங்கிய யோசனையின் அடிப்படையில், மீண்டும் கேரள அரசுடன் 19.12.2007 அன்று டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தி, இப்பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தையிலும் முடிவேதும் எட்டப்படாததால், உச்சநீதிமன்றம் இப்பிரச்சினையை விசாரிக்கத் தனி அமர்வு ஒன்றை ஏற்படுத்தி, வழக்கு விசாரணையை 21.10.2009 ஆம் தேதியிலிருந்து நடத்தி வருகிறது.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழகத்திற்கு பல வகைகளில் கேரள அரசு இடையூறுகளை தொடர்ந்து அளித்து வருகிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை செயல்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கையை இவ்வரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்தப் பிரச்சினையில், கேரள அரசு மேற்கொண்டுவரும் இடையூறுகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:-

- கேரள அரசின் வருவாய்க் கோட்டாட்சியரால் முல்லைப் பெரியாறில் 19.11.2006 அன்று நீர் அளவீடு கருவி அகற்றப் பட்டது.
- கேரள அரசு, பெரியாறு அணையை ஆய்வு செய்வதற்கு, 23.11.2006 அன்று கொச்சியிலுள்ள கடற்படை அதிகாரிகளை அழைத்தது. இது சட்டவிரோதமான செயல் என்று மத்திய அரசிற்கு சுட்டிக்காட்டப்பட்டு, நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்படுமென்றும் மற்றும் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் உச்சநீதிமன்றத்தின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படும் என்றும் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் காரணமாக கடற்படை அதிகாரிகள் பணியேதும் மேற்கொள்ளாமல் திரும்பினர்.

- 31.12.2006 அன்று இனம் தெரியாத ஒரு சிலர் அணையின் கைப்பிடிச் சுவற்றிற்கு சேதங்களை ஏற்படுத்தினர். இந்த நிகழ்வினை 2.1.2007 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தில், ஏற்கெனவே தமிழ்நாடு கோரியவாறு, முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்க மத்திய தொழில் பாதுகாப்புப் படையை (Central Industrial Security Force) அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். உச்ச நீதிமன்றத்தில் 11.1.2007 அன்று தாக்கல் செய்யப்பட்ட துணை மனுவில் (Supplementary Affidavit) இந்த கோரிக்கையும் இணைக்கப்பட்டது.

- 7.2.2007 அன்று நீர் மாதிரிகளை (Water Samples) எடுப்பதற்காக மத்திய நீர் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் மேலாண்மை நிறுவனத்தைச் (Central Water Development and Management) சார்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு ஒருசில இனம் தெரியாதவர்கள் அணைக்குள் அத்துமீறி சென்றனர்.

- 16.3.2007 அன்று வீடியோ புகைப்படம் எடுப்பதற்காக இடுக்கி மாவட்ட ஆட்சியரது முன் அனுமதி பெறாமல் இனம் கண்டறிய இயலாத சிலர் வீடியோ புகைப்படமெடுக்க அணைப் பகுதிக்கு செல்ல கேரள காவல்துறையினர் அனுமதித்தனர்.

- 25.3.2007 அன்று கேரள காவல் துறை ஒத்துழைப்பு அளிக்காதது குறித்தும், கேரளாவின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் என்று கூறிக் கொண்டு தமிழ்நாட்டிற்கு முன் அறிவிப்பு இல்லாமலும், தமிழ்நாட்டின் முன் அனுமதியைப் பெறாமலும் அடிக்கடி அணையினைப் பார்வையிடுவது குறித்து இந்திய பிரதமர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு சென்று, அணையைப் பாதுகாக்க மத்திய ரிசர்வ் போலீசோ அல்லது மத்திய தொழில் பாதுகாப்புப் படையையோ அனுப்பி வைக்கப்படவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தினேன்.

- 4.5.2009 அன்று நீர்வள ஆதாரத் துறையின் உயர் அதிகாரி முல்லைப் பெரியாறு அணைக்குச் சென்றபோது கேரள காவலர்கள் அவரை அணைக்குள் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினர்.

- கேரள அரசின் வனத்துறை மற்றும் நீர்ப்பாசன அதிகாரிகள், தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் 2009-2010-ம் ஆண்டுக்கான வருடாந்திர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தினர் என்பதை அரசின் கவனத்திற்கு 27.7.2009 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் கொண்டு வந்தார். இந்த விவரம் 31.7.2009 அன்று மத்திய அரசு கூட்டிய கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டபோது இரு மாநிலங்களும் இப்பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து, 4.8.2009 அன்று கேரள அரசு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொருட்காட்சி ஒன்றினை நடத்த உத்தேசித்துள்ளது என்றும், அதன் பொருட்டு முல்லைப் பெரியாறு அணையை உள்ளடக்கிய பல்வேறு நீர்த்தேக்கங்களின் புகைப்படங்களை அப்பொருட்காட்சியில் இடம்பெற உத்தேசித்துள்ளது என்றும் இதன்பொருட்டு, 29.10.2009 அன்று நீர்வள ஆதாரத் துறையின் செயற் பொறியாளர், புகைப்படக்காரர்களுடன் அணைப் பகுதிக்கு செல்வதற்காக படகுக் குழாமிற்கு சென்றபோது அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும், கேரள அரசின் புகைப்படக்காரர்கள் அணையில் புகைப்படங்கள் எடுப்பதற்காக, தமிழ்நாட்டுப் பொறியாளர்களுக்கு முன்னமே தெரிவிக்காமலும், முன்அனுமதி பெறாமலும், சென்று வருகின்றனர். இத்தகைய

சூழ்நிலையில், கேரள வனத்துறை அதிகாரிகள், தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத்துறை அதிகாரிகள் தங்களது அலுவலகப் பணியினை செய்யவிடாமல் தடுப்பது ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது என்றும், எனவே பல்வேறு தருணங்களில், இவ்வரசின் பொறியாளர்கள் தங்களது பணியினை முறைப்படி செய்வதைத் தடை செய்யாமல் இருக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய அறிவுரை வழங்க வேண்டி 2.11.2009 அன்று கேரள அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறு இடையூறுகளை கேரள அரசு தொடர்ந்து அளித்து வருவதைத் தவிர்க்கும் பொருட்டு, தற்பொழுது அணையைப் பாதுகாத்து வரும் கேரள காவலர்களுக்குப் பதிலாக, மத்திய தொழில் பாதுகாப்புப் படை; அணையின் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வதே சிறந்ததாக அமையும்.

கேரள அரசு எந்த வகையில் எல்லாம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மதிக்காமல் தமிழகத்தின் செயல்பாடுகளுக்கு எப்படியெல்லாம் குந்தகங்களைத் தொடர்ந்து செய்து வருகிறது என்பதைப் பற்றி தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்திற்கும், மத்திய அரசுக்கும் தொடர்ந்து தெரிவித்து வருகிறோம்.

முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காக மதுரையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ள ஒரு கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில், இந்தப் பிரச்சினைக்காக கேரள முதல்வர் பிரதமரைச் சந்தித்தபோதிலும், தமிழக முதல்வர் பிரதமரைச் சந்திக்கவும் இல்லை, ஒப்புக்கு ஒரு கடிதம் கூட எழுதவில்லை என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்.

முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள முதல் அமைச்சருக்கும், மத்தியில் அந்தத் துறையின் அமைச்சராக இருந்த வருக்கும், இந்தியப் பிரதமருக்கும் நான் எழுதிய பல கடிதங்களின் தேதிவாரியான பட்டியல் இதோ :-

14-9-2006 கேரள முதலமைச்சருக்குக் கடிதம்;

4-10-2006 கேரள முதலமைச்சருக்குக் கடிதம்.

26-10-2006 கேரள முதலமைச்சருக்குக் கடிதம்.

31-10-2006 மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம்.

15-11-2006 மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம்.

16-11-2006 மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம்.

23-11-2006 பிரதமருக்குக் கடிதம்.

23-11-2006 மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம்.

23-11-2006 பாதுகாப்புத் துறை அமைச்சருக்குக் கடிதம்

27-11-2006 மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்குக் கடிதம்.

2-1-2007 பிரதமருக்குக் கடிதம்.

25-3-2007 பிரதமருக்குக் கடித்தம்.

19-5-2007 பிரதமருக்குக் கடிதம்.

18-12-2007 பிரதமரை நேரில் சந்தித்து முல்லைப் பெரியாறு குறித்துப் பேசினேன். அப்போதுதான் பிரதமர் என்னையும் கேரள முதல்வரையும் ஒருமுறை நேரில் சந்தித்துப் பேச வேண்டுமென்று கூறி, அவ்வாறே நாங்கள் சந்தித்துப் பேசினோம்.

20-12-2007 பிரதமருக்குக் கடிதம்.

4-2-2008 கேரள முதல் அமைச்சருக்குக் கடிதம்.

13-7-2009 கேரள முதல் அமைச்சருக்குக் கடிதம்.

8-10-2009 பிரதமருக்குக் கடிதம்.இந்தக் கடிதங்களில் பெரும்பாலானவை அவ்வப்போது ஏடுகளிலும் வெளிவந்துள்ளன. இத்தனையையும் மூடி மறைத்து விட்டு - ஒப்புக்கு ஒரு கடிதம் கூட நான் எழுதவில்லை என்று அறிக்கை விடுகிறார்கள் என்றால், நெஞ்சறியப் பொய் கூறி அரசியல் நடத்தும் அம்மையாரின் கைப்பாவை ஆகிவிட்டார்களே என்று தான் நான் கவலைப்படவேண்டியுள்ளது; வேறென்ன செய்ய முடியும், உடன்பிறப்பே!

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் நாம் தொடர்ந்து எடுத்து வந்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான், நேற்றையதினம் கூட,

உச்ச நீதி மன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்காக வந்தபோது, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்தினால், அணைக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறி கேரள அரசு தாக்கல் செய்த புதிய மனுவை தள்ளுபடி செய்ததோடு, இந்தப் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கேரள அரசு புதிய சட்டம் நிறைவேற்றியதற்காகவும் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருப்பதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளது. எனவே இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு கவனம் செலுத்தவில்லை, அக்கறை செலுத்தவில்லை என்றெல்லாம் கூறுவது ஊரை ஏமாற்றுகின்ற ஒன்றே தவிர வேறல்ல. இத்தனைக்கும் பிறகு; கேளாக் காதினராகி "கேரளத்தார்" தேளாய்க் கொட்டுதல் ஏனோ என்றுதான் திகைத்திட வேண்டியுள்ளது.

அன்புள்ள,

மு.க.

6-11-2009

3431. இதில் எது கையாலாகாத்தனம்?

உடன்பிறப்பே,

திருவள்ளூர் மாவட்டம், காவேரிராஜபுரம் கிராமத்தில், கர்நாடக மாநில தலைமை நீதிபதி பி.டி. தினகரன், சட்ட விரோதமாக அரசு புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்களை ஆக்கிர மித்துள்ளதாகக் கூறி, அந்த நிலங்களை தாங்களே மீட்டு, தலித் மக்களுக்கு வழங்கப் போவதாக அறிவித்துக் கொண்டு - அதன் காரணமாக அந்த மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு, அமைதியைக் கெடுக்க முனைந்த போது - அதைத் தடுத்து - சட்டம் ஒழுங்கு அமைதியைப் பாதுகாக்கும் முயற்சியிலே அரசு ஈடுபட்டால் அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

இப்பிரச்சினை குறித்து ஒரு அறிக்கை விடுத்துள்ள தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள நிலங்களை மீட்டு, இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கிட அரசு தயக்கம் காட்டு வதாகச் சொல்லியிருக்கிறார். அது உண்மையல்ல; அரசு நிலங்களையும், புறம்போக்கு நிலங்களையும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, பெரும்பாலும் தலித் மக்களுக்கு இரண்டு ஏக்கர் அளவிற்கு வழங்கும் திட்டத்தையே தி.மு.கழக அரசுதான் 2006-2007 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கொண்டு வந்தது என்பதும் - அந்தத் திட்டத்தை தந்தை பெரியாரின் பிறந்த நாளான 17-9-2006 அன்று இதே திருவள்ளூர் மாவட்டத்தில்தான் தொடங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 2 இலட்சத்து 10 ஆயிரத்து 747 ஏக்கர் நிலம், ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 798 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, குறிப்பாக தலித் மக்களுக்கு இலவசமாக இந்த அரசினால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அப்படியே முழு பூசனிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பது போல மறைத்துவிட்டு, இலவச நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ்

வழங்கிட நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்குவதாகவும் தயக்கம் காட்டுவதாகவும் அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்றால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் மக்களை ஏமாற்றுவதற்கு எந்த அளவிற்கு போகாத வழியெல்லாம் போகிறார் கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளைப் போக்க நில உடைமைகளுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, மிகை நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு பாடுபட்டு வருவதுதான் தி.மு.கழக ஆட்சி. கழக ஆட்சியிலேதான் 1970 ஆம் ஆண்டு உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திடீரென்று சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் காரணமாக ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் நிலம், உபரி நிலம் என்று கைப்பற்றப்பட்டு, தகுதியுள்ள நிலமற்ற ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதில் 61 ஆயிரத்து 985 பேர் தலித் மக்கள், 204 பேர் பழங்குடியினர். விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நல உதவித் திட்டத்தின்கீழ் 1 கோடியே 70 லட்சத்து 38 ஆயிரத்து 112 உறுப்பினர்கள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளதும், இதுவரை 3 லட்சத்து

75 ஆயிரத்து 390 விவசாயக் குடும்பங்களுக்கு 247 கோடியே 49 இலட்சத்து 360 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதும் விவசாயிகளுக்கும், பெரும்பாலும் தலித் மக்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடுதான்.

1971 ஆம் ஆண்டு கழக அரசில் இந்தியாவிலேயே முதன் முறையாக "குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தை" கொண்டு வந்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு, பெரும்பாலும் தலித் மக்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீட்டு மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டன. அதற்காக திருத்துறைப்பூண்டியில் ஒரு பெரு விழாவே நடத்தப்பட்டது. அந்த விழாவிலே இந்தச் சட்டம் குறித்து கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான மணலி கந்தசாமி அவர்கள் "பல ஆண்டுகளாக ரத்தம் சிந்தியும் சாதிக்க முடியாததை, ஒரு துளி மையினால் முதலமைச்சர் கலைஞர் சாதித்துக் காட்டியிருக்கிறார். இன்றிரவு ஒவ்வொரு விவசாயியும் தங்கள் தங்கள் சொந்த வீட்டிலே தூங்குகின்றோம் என்ற ஆனந்த உணர்வோடு

படுப்பார்கள்" என்று குறிப்பிட்டதை கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் மறந்தாலும் நான் மறக்கவில்லை.

கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் பெரு மழை பெய்து மக்கள் எல்லாம் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அமைச்சர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்டங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நேரத்தில் இதற்கு முன்பெல்லாம் எப்போதும் நிவாரணப் பணிகளிலே, மக்கள் பணிகளிலே ஈடுபடக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் மழையை யொட்டி ஆற்றிட வேண்டிய மக்கள் பணியை ஒத்தி வைத்து விட்டு, தனி மனிதர் ஒருவருக்கு எதிராக நில மீட்பு என்ற பெயரில் போராட்டம் நடத்த முற்பட்டு, அதிலே அக்கறை செலுத்துகிறார்கள் என்றால் இது அரசியலில் உச்ச கட்டம் என்பதைத் தவிர வேறல்ல.

இவர்கள் யாருக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறார்கள்? அவரும் ஒரு தலித் தான். நீதிபதியாக இருக்கிறார். அவர் மீது இந்த நிலம் பற்றிய புகார் கூறப்பட்ட காரணத்தால், உச்ச நீதிமன்றத்திற்கு பதவி உயர்வு பெற்று செல்ல வேண்டியது தடுக்கப்பட்டுள்ளதாக அவர் இன்று "டைம்ஸ் ஆப் இந்தியா" இதழுக்கு அளித்த சிறப்பு பேட்டியில் கூறியுள்ளார். எந்த அரசாங்க நிலத்தையோ, பொது நிலத்தையோ தான் ஆக்கிரமிக்கவில்லை என்றும் அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார். ஆனால் நீதிபதி அங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மார்க்சிஸ்ட்கள் கூறுகிறார்கள்.

இந்த நிலையில் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று ஒரு அரசாங்கம் செயல்பட முடியாது. அப்படி செயல்பட்டால், உடனடியாக ஒரு தலித் குடிமகனின் நிலத்தை கைப்பற்ற இந்த அரசு ஏன் இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்தது என்று இதே கட்சியினர் ஒரு போராட்டம் நடத்தக் கூடும். தனிப்பட்ட ஒருவர் நிலம் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் கூட அதை எதிர்த்து அரசாங்கம் தான் நடவடிக்கை எடுத்து, அந்த ஆக்கிரமிப்பு உண்மையாக இருந்தால், அந்த நிலங்களைக் கைப்பற்றி, அதன் பிறகுதான் மற்றவர்களுக்கு வழங்கலாமே தவிர, தனிப்பட்ட ஒரு கட்சியினர் தாங்களே நிலத்தை மீட்டு, தாங்களே வழங்குவோம் என்றால் அது சட்டம், ஒழுங்கு, அமைதிக்கு முறையானது

தானா? ஒவ்வொரு கட்சியினரும் இவ்வாறு சட்டத்தை தங்கள் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, தாங்களும் நிலங்களையோ, கட்டிடங்களையோ கைப்பற்றி தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வழங்குகின்றோம் என்றால் இதென்ன தமிழ்நாடா? மேற்கு வங்கமா?

சட்டம், ஒழுங்கு, அமைதியைக் கெடுக்கும் வகையில் ஒரு கட்சியினர் நடக்க முற்படும் போது, தடையை மீறி நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று சொல்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முனைந்தால், அது காவல் துறையினரின் "கையாலாகாத்தன"த்திற்கு எடுத்துக்காட்டு என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் அறிக்கை விடுத் துள்ளார். எது கையாலாகாத்தனம்? சட்டத்தை மீறியவர்களை கைது செய்தது கையாலாகாத்தனம் என்றால்; அவர்களை உடனடியாக விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பியது அதை விட பெரிய கையாலாகாத்தனம் அல்லவா? இதுதானே நண்பர் வரதராசனின் கணிப்பு?

நீதிபதி தினகரன் அரசு நிலத்தை ஆக்கிர மிப்பு செய்திருக்கிறார் என்று கூறி அதை மீட்டு தலித் மக்களுக்கு வழங்கப் போகிறேன் என்று போராட்டம் நடத்த அவசரம் காட்டுகின்ற இதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நண்பர்கள் சிறுதாவூரில் ஜெயலலிதா; தலித்களுக்காக வழங்கப்பட்ட அரசு நிலத்தை அபகரித்து, ஆக்கிரமித்து வைத்திருப்பதாக எத்தனையோ மாதங்களுக்கு முன்பு சொன்னார்களே, இத்தனை மாதங்களாக அதற்காக மீட்புப் போராட்டம் நடத்த ஏன் முன்வரவில்லை? இங்கே மட்டும் அவசரம் காட்டுவதற்கு என்ன உள்நோக்கம்?

இதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களை கைது செய்ய வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமல்ல. 1970ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இதைப் போலத்தான் நில மீட்பு இயக்கம் ஒன்றை நடத்தப் போவதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டபோதே, தமிழகம் முழுவதும் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டார்கள். அப்போது திருச்சி சென்ற என்னை நிருபர்கள் சந்தித்து கேட்டபோது, "நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் தர வேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்ட்களுக்கு மாத்திரமல்ல; எல்லா முற்போக்குக் கட்சிகளுக்கும், தி.மு.கழகத்திற்கும் உடன்

பாடான கொள்கை. அதை நிறைவேற்றுவதற்கு சட்டப்படி தி.மு.க. ஆட்சி செயல்படுகிறது. எனினும் எந்தவிதமான கட்சிக் காழ்ப்பும் காட்டாமல் சட்டம் அமைதி காத்திட நடவடிக்கை எடுக்கும். இதில் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கைது செய்யப்பட வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டதற்காக மிகவும் வருந்துகிறேன். அவர்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்த அவர்களுக்கு உரிமை உண்டு. அதே உணர்ச்சியை அமைதியான முறையில் சட்டப்பூர்வமாகச் செயல்படுத்த தயாராக இருக்கிற இந்த அரசின் வேண்டுகோளை அவர்கள் ஏற்றிருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும்" என்று கூறியதைத்தான் இப்போதும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-11-2009

3432. கண்ணீர் துடைத்திடுக! கடமை தொடர்ந்திடுக!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்படுகிறதே தவிர, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு கழக அரசு மீது சொல்லப்பட்டுள்ளது.

பொதுவாக புயல், வெள்ளம், வறட்சி, பூகம்பம், சுனாமி, நில நடுக்கம் போன்ற பேரிடர்கள் நேரும்போது கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மக்களின் நல்வாழ்வு கருதி; அவர்தம் துயர் துடைத்திட அனைத்துக் கட்சியினரும் ஈடுபடுவதுதான் மனித இயல்பு. அதுதான் நேரம் என்று கருதிக் கொண்டு ஆளுங்கட்சியைக் குறை கூறுவதிலும், அதிலே இன்பம் காண்பதிலும் நேரத்தைச் செலவழிக்கக் கூடாது.

தி.மு. கழகம் தமிழகத்திலே எதிர்க்கட்சியாக இருந்த போது, 1952ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத்தின் சார்பில் நிதி திரட்டி, அந்தப் பணத்தைக் கொண்டு கைத்தறி வேட்டி, சேலைகள் வாங்கி, ஏழையெளியோர்க்கு வழங்குவதெனவும், அதற்கென இருபத்தி ஐயாயிரம் (அப்போது அது பெரிய தொகை) ரூபாய் நிதி திரட்டுவதெனவும் அந்தப் பணிக்கு என்னைத் தலைவனாக இருக்குமாறும் தி.மு.கழகம் தீர்மானம் நிறை வேற்றியது.

நிதி திரட்டும் முயற்சிக்கு பல இடங்களில் நான் எழுதிய "தூக்குமேடை" நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் பாண்டியன் என்னும் பள்ளி மாணவன் வேடத்தில் நானும், அபிநயசுந்தரர் என்னும் வேடத்தில் நடிகர் திலகம் சிவாஜியும்,

பரமார்த்திகன் வேடத்தில் நண்பர் சி.வி.எம். அண்ணாமலையும் மற்றும் சகோதரர் அரங்கண்ணல் அவர்களும், கழக முன்னணியினரும் நடித்தோம். கழக நிதிக்காக நடைபெற்ற அந்த நாடகங்களில் நடித்ததற்காக நடிகர் திலகம் தனக்கென ஊதியம் எதுவும் பெற மறுத்துவிட்டார். 25 ஆயிரம் ரூபாய் புயல் நிவாரண நிதி வசூலிக்க வேண்டும் என்று தி.மு.க. செயற்குழு முடிவெடுத்திருந்த போதிலும், 35 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வசூலானது. அந்தத் தொகைக்கு கைத்தறித் துணிகள் வாங்கப்பெற்று, அவைகளை, அரசாங்கச் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டு, 18-6-1954 அன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது.

11-12-1955 அன்று "திராவிடநாடு" இதழில் அண்ணா எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி

இதோ :-

"தம்பி, எந்தப் பிரச்சினையும் நினைவிற்கு வரவில்லை; நெஞ்சமெலாம் துக்கம் துளைத்தெடுக்கிறது. இமை திறந்திருப்பினும் மூடிக் கிடப்பினும், எதிரே தெரிவதெல்லாம்; பேய் மழை, சூறைக்காற்று, கடற்கொந்தளிப்பு, பிணக்குவியல், அழிவு, அழிவு! *******

தம்பி, நமது முதலமைச்சர், காமராஜர், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருக்கிறார்! பொறுப்புணர்ந்த ஆட்சி முதல்வர், இருக்க வேண்டிய இடம்! ஆம், அங்கு பெரிய அதிகாரிகள் புடை சூழ இருக்கிறார். பெரு நாசத்துக்கு ஆளான மக்களின் கண்ணீரைத் துடைத்திடும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார் என்பதை எண்ணும்போது, கொந்த ளித்தெழுந்த கொடுங்கடலே, குடும்பங்களை அழித்த பேய்க்காற்றே, இதோ எமக்கு ஆறுதல் அளிக்க, எமது முதலமைச்சர் வந்துள்ளார், எமது கண்ணீரை காணுகிறார் - தமது கண்ணீரைச் சிந்துகிறார் - அழிவு சூழ் இடங்களில் ஆறுதலை அள்ளித் தரு கிறார். முதல் அமைச்சர் காமராஜரின் பொறுப்புணர்ச்சி கண்டு நாம் பெருமைப் படுகிறோம். அளவு குறைவு - முறை குறையுடையது என்று நிபுணர்கள் பேசக் கூடும். ஆனால் முதலமைச்சரின் இதயம் தூய்மையானது, ஏழை

எளியோர்பால் அவர் இதுசமயம் காட்டிய அக்கறை தூய்மையானது என்பதை, எவரும், எந்நாளும் மறந்திட மாட்டார்கள்.

அனைவரும் பணியாற்றித் தீர வேண்டிய கட்டம்.

இன்றே துவக்குக! என்று வேண்டுகிறோம். தி.மு.க. தோழர்களிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பு கேட்பினும், கிடைக்கும் என்று உறுதி அளிக்கிறோம். தேம்பித் திகைத்துக் கிடக்கும் தோழர்களே! உடன் பிறந்தோரே! இதோ உதவி, இதோ, இதோ என்று கூறிப் புறப்படுக; பணி புரிக!"

உடன்பிறப்பே, அப்போது தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்த நிலையில் ஏற்பட்ட அழிவிற்காக அகமகிழ்ந்து ஆளுங்கட்சியின் மீது பழியை தூற்றாமல் அண்ணா அவர்கள் எந்த அளவிற்கு பெருமையோடு முதல் அமைச்சர் காமராஜரைப் பாராட்டி எழுதியிருக்கிறார் என்பதையும்; கழகத்தினரும் கட்சி வேறுபாடு கருதாமல்; வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்றும் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டு, அவ்வாறே கழகத்தினர் காங்கிரஸ் ஆட்சியுடன் ஒத்துழைத்து துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டனர் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

ஆனால் இப்போது என்ன நிலை?

2005ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது, அனைவருக்கும் தலா 2000 ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டதாகவும், கழக ஆட்சியில் எதுவும் செய்யப்படாத நிலை இருப்பதைப் போலவும் அறிக்கை விடுத்துப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அதில் பெருமைப்பட ஒன்றுமில்லை. ஓர் அரசு செய்ய வேண்டிய கடமைதான் அது. என்றாலும் அப்போது அந்த 2000 ரூபாய் எப்படி, எதற்காகக் கொடுக்கப்பட்டது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். சென்னை மாநகரில் பல மாடிக் கட்டிடங்களில் உயர்ந்த இடங்களில் மழையினால் சிறிதளவு கூட பாதிக்காதவர்களுக்கெல்லாம்கூட அப்போது 2000 ரூபாய் வீதம் அந்தத் தொகை வழங்கப்பட்டது. சென்னை மாநகருக்காக என்று மட்டும் அப்போது 148 கோடி ரூபாய் நிவாரண நிதியாக ஒதுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 2008ஆம் ஆண்டு "நிஷா" என்று சொல்லப்பட்ட புயல் - பெரு மழை பெய்த போது நிவாரணத் தொகை வழங்கப்பட வில்லையா என்பதையும் நான் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தில் 2005ஆம் ஆண்டில் வட கிழக்குப் பருவமழைக் காலத்தின்போது நான்குமுறை பெருமழை பெய்து, அதிலே 22 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டது போல, 19.11.2008 முதல் 28.11.2008 வரை வடகிழக்குப் பருவமழை அதிகமாகப் பெய்தமையாலும், 'நிஷா' புயலாலும், 12 மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்தப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொண்டதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் அவசர உதவிகளையும் கழக அரசு அப்போது வழங்கியது. இப்பணிகளை மேற்பார்வையிட, அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைத் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட இடங்களைத் தமிழக அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டு நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 7.12.2008 அன்று இந்த 12 மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து நான் ஆய்வு செய்தேன். 2005ஆம் ஆண்டு இதை விட பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது, அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் எதையும் கூட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது உயிரிழந்த குடும்பத்தினருக்கு, அப்போது தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரணமாக வழங்கப்பட்டது. அப்படி ஐம்பதாயிரம் ரூபாய் மட்டுமே அப்போது வழங்கியவர்கள்தான் இப்போது நமது ஆட்சியில் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்கிறார்கள்.

2005 ஆம் ஆண்டில் 1,520 கால்நடை உயிரிழப்புகள் ஏற்பட்டு, 86 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டதற்கு மாறாக, 2008ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் 5,982 கால்நடை இழப்புகள் ஏற்பட்டு, நிவாரணமாக 1 கோடியே 79 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

குடிசைகள் இழப்புக்காக 2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 93 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில்

231 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

மழையினால் பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளம் சூழ்ந்த வீடுகளுக்குச் சிறப்பு நிவாரண உதவியாக, 2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 22 மாவட்டங்களில் 466 கோடியே 97 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்ட தென்றால், 2008ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில், 12 மாவட்டங்களில் மட்டும்

402 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

பயிர்ச் சேதம் என்ற வகையில் 2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 368 கோடி ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக 2008ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் 388 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேற்கூறிய அனைத்து நிவாரண உதவிகளையும் சேர்த்து, 2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 931 கோடி ரூபாய் 22 மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்காக வழங்கப்பட்டதென்றால், 2008ஆம் ஆண்டு 12 மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்காக மட்டும் 1,027 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என்பதை நினைவிலே கொண்டால், வெள்ள நிவாரணப் பணிகளில் தி.மு. கழக ஆட்சியாருக்கும் சளைத்ததல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பயிர்ச் சேதத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி எக்டேர் ஒன்றுக்கு நான்காயிரம் ரூபாய் நிவாரண உதவி என்பதற்கு மாறாக, 2008ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில், அதனை உயர்த்தி எக்டேர் ஒன்றுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் என்று வழங்கப்பட்டது. மேலும் கழக அரசில் 2006-2007 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்துவரும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்படி பதிவு செய்து கொண்ட விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு எக்டேருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வரையில் நிதி உதவியும் அளிக்கப்பட்டது.

எனவே நம்மைப் பற்றியும், நமது அரசைப் பற்றியும் குறை கூறுவோரைப் பற்றிக் கவலைப்படாமல் நாம் மக்களுக்காக

தொடர்ந்து துயர் துடைப்புப் பணிகளிலே ஈடுபடவேண்டும். சென்னை மாநகரிலும், தமிழகத்தில் ஒரு சில பகுதிகளிலும் பெருமழை பெய்ததாக 7-11-2009 அன்று செய்தி வந்ததும் அன்றைய தினம் சனிக்கிழமை விடுமுறை என்ற போதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு தலைமைச் செயலகத்திற்கு வரச் சொல்லி விட்டு நானும் காலை 9.30 மணிக்கெல்லாம் அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன்.

எனக்கு முன்பாகவே துணை முதல்வர் மு.க. ஸ்டாலின், மேயரையும், மாநகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு மழையால் பாதிக்கப்பட்ட பகுதி களுக்கெல்லாம் நேரில் சென்று பார்வையிட்டு, அவற்றையெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டு தலைமைச் செயலகத்திற்கு வந்துவிட்டார். தலைமைச் செயலாளர் மாவட்ட ஆட்சியர்களோடு "வீடியோ கான்பரன்சிங்" மூலமாகத் தொடர்பு கொண்டு முழு விவரங்களோடு வந்திருந்தார். அனைவரும் கலந்து பேசி நிவாரணப் பணிகளில் போர்க்கால அடிப்படையிலே ஈடுபட வேண்டுமென்று தெரிவித்து விட்டுத்தான் மதிய உணவுக்கு நேரம் கடந்து இல்லம் திரும்பினேன்.

அன்று ஒரு நாள் மாத்திரமல்ல, மழை பல பகுதிகளிலே தொடர்ந்ததால் 8-11-2009 அன்று ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும் தலைமைச் செயலகம் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் எப்படியென்று விவாதித்ததோடு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் விவாதித்தேன்.

எந்தெந்த மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட்டதோ அங்கெல்லாம் அந்தந்த மாவட்ட அமைச்சர்களை நேரடியாகச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினேன். இந்தப் புயல் மழை காரணமாக, நீலகிரி மாவட்டம் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது, போக்குவரத்து இல்லாத நிலையில் உள்ளது, நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது, 40 பேருக்கு மேல் உயிரிழந்து விட்டார்கள் என்றெல்லாம் வந்த செய்தியைத் தொடர்ந்து 10-11-2009 அன்று காலையில் தலைமைச் செயலகம் சென்று அனைவரோடும் விவாதித்த பிறகு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டியையும், சிறு

தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமியையும் நீலகிரி மாவட்டத்திற்கு பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவும், நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தவும் விரைந்து சென்றிடு மாறு கூறி அனுப்பி வைத்தேன். அவர்களும் அவ்வாறே சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்து விட்டு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் நேற்றிரவு 10 மணி அளவில் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலவரங்களை எடுத்துக் கூறினார். அந்த மாவட்ட அமைச்சர் ராமச் சந்திரனும், பக்கத்து மாவட்ட அமைச்சரான வெள்ளக் கோவில் சாமிநாதனும், மத்திய அமைச்சரும் அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசாவும் அங்கேயே தங்கி நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டுள்ளார்கள்.

"போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மொழிக்கிணங்க யார் என்ன சொன்னபோதிலும், அதைப்பற்றி கவலைப்படாமல் நம்முடைய பணிகளை தொடருவோம். மக்கள் நம்மை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்மைப் பழி கூறி வரும் அறிக்கைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை; நீயும் அதுபற்றிக் கவலைப்படாமல் துயர்படும் மக்களின் கண்ணீர் துடைத்திடுக! கடமை தொடர்ந்திடுக!

அன்புள்ள,

மு.க.

12-11-2009

3433. பத்திரிகைப் பெண் பயிலவேண்டிய பாடம்!

உடன்பிறப்பே,

“காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்; இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்;
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.
அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக் –
குவலயம் ஓங்கச் செய்வாய்;
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்.”

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகை பற்றி எழுதிய கவிதை - சில பத்திரிகைகளின் போக்கினைக் காணும் போதெல்லாம் என் நினைவுக்கு வரும். பத்திரிகைகள் மீது அவர் கொண்ட உயர் எண்ணத்தின் மேலான மதிப்பின் அடிப்படையில்தான் நான் இன்றைக்கும் பத்திரிகைகளையும் - பத்திரிகை நடத்துபவர்களையும் கருதுகிற காரணத்தால்; அவர்களுக்கு அரசின் வாயிலாக எத்தகைய அடக்கு முறைகள் தொடரப்பட்டாலும் அந்த நேரத்தில் எல்லாம் அவர்களுக்காக வாதாடியிருக்கிறேன்; போராடியும் இருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்த போது "ஆனந்த விகடன்" ஆசிரியர் - வார ஏடுகளின் பிதாமகன் என்று கூறப்படும் வாசன் அவர்களின் மகன் திரு. பாலசுப்பிரமணியம், விகடன் இதழில், அன்றைய அரசு பற்றி ஏதோ எழுதினார் என்பதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது - எதிர்க்கட்சித் தலைவனாக இருந்த நான் காரில் திண்டிவனம் வழியாக சென்று கொண்டிருந்தபோது, காரில் இருந்த வானொலி மூலமாக பாலசுப்ரமணியம் கைது செய்யப்பட்ட செய்தியைக் கேட்டுவிட்டு, அங்கேயே காரை நிறுத்தச் சொல்லி, உடனடியாக ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டதோடு - அதன் பிறகு அவருக்காக தொடர்ந்து குரல் கொடுக்கவும் செய்தேன்.

பத்திரிகை உலகின் மற்றொரு பிதாமகன் என்று அழைக்கப்பட்ட திரு. சாவி அவர்கள்; அவருடைய வார இதழில் ஒரு அட்டைப்படம் வெளியிட்டார் என்பதற்காக அந்த அட்டை படத்தில் வரையப்பட்டிருந்த ஒரு ஓவியம் குறித்து, அந்த ஓவியத்தில் இடம் பெற்றிருந்த பெண்ணுக்கோ, அல்லது அந்தப் பெண்ணின் பெற்றோர்களுக்கோ, உற்றார் உறவினர்களுக்கோ வராத கோபம் அன்றைய அ.தி.மு.க. ஆட்சிக்கு ஏற்பட்டு - சாவி ஏட்டின் ஆசிரியர் திரு.சாவி அவர்களைக் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்ற செய்தி கேள்வியுற்று - நானும், நண்பர்களும் காவல் நிலையத்திற்கே ஓடோடி சென்று அவரை ஜாமீனில் வெளியே கொண்டு வந்தோம்.

அவர்கள் எல்லாம் பாரதிதாசன் எழுதிய "பத்திரிகைப் பெண்ணே" என்ற பாடலுக்கு ஏற்ப பத்திரிகை நடத்தியவர்கள்தான். ஆனால் அவர்கள் கைது செய்யப்பட நேரிட்டது. அதே நேரத்தில் பத்திரிகை சுதந்திரம் என்ற பெயரால், எதை வேண்டுமானாலும் எழுதலாம் - எப்படி வேண்டுமானாலும் படம் போடலாம் - யாரை வேண்டுமானாலும் அவர்களுக்குரிய மானம், மரியாதைக்கு மாசு ஏற்படும் வகையில் எழுதலாம், பேசலாம் என்று எவர் ஒருவரும் கருதிக் கொண்டு "என் வழி இதுதான்" என்று வழி மீறுவார்களானால் - அதுபற்றிய முறையீடு பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்படும் பொழுது - அதை எந்தவொரு அரசும் பார்த்து ரசித்துக்கொண்டிருக்க முடியாது.

அப்படிப்பட்ட நேரத்திலேகூட இந்த அரசினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பத்திரிகைகளை எதிர்த்து

மூர்த்தன்யமாகவோ, முரட்டுத்தனமாகவோ இதுவரை எடுக்கப்பட்டதாக யாரும் கூற முடியாது. ஏன் இத்தகைய மென்மையான அணுகுமுறையை - அதே நேரத்தில் இரு சாராருக்கிடையே பகைபரவிடக் கூடாது என்ற பரந்த நோக்கத்தோடு எச்சரிக்கையாக கையாளும் அணுகுமுறையை - என் மீது வேண்டுமென்றே குறை கூற விரும்புவோர் கடுமையாக விமர்சிப்பதையும் நான் புரிந்து கொள்ளாமல் இல்லை.

பத்திரிகையாளர்களுக்கு நான் நண்பன் என்பதால்தான் அவர்கள் எழுப்புகின்ற கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி வந்திருக்கிறேன். சென்னையில் திருவான்மியூருக்கு அருகில் பத்திரிகையாளர்களுக்காக ஒரு பகுதியையே ஒதுக்கி அவர்கள் வாழும் இல்லங்களை அங்கே அமைத்துக்கொள்ள வழி செய்திருக்கிறேன். அதுபோலவே திருச்சியிலும், மதுரையிலும், சேலத்திலும் வேலூரிலும், திண்டுக்கல்லிலும் பத்திரிகை யாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள இடங்கள் தரப்பட்டுள்ளன. அண்மையில் கோவையில் கூட விண்ணப்பித்திருக்கிறார்கள். அதுவும் நிறைவேற்றப்படவுள்ளது. எனவே நானும் ஆரம்ப காலத்தில் இருந்து இது வரையில் ஒரு பத்திரிகையாளன்தான் என்ற முறையில் அவர்களிடம் பரிவு காட்டி வருகிறேன். தொடர்ந்து பரிவு காட்டுவேன், பாசம் காட்டுவேன். அது இயல்பாக எனக்கு ஏற்பட்ட ரத்தத்தோடு கலந்த உணர்வு. அந்த உணர்வின் அடிப்படையில் இன்றைய பத்திரிகையாளர்களுக்கு அவர்களை என் நண்பர்கள் என்ற முறையிலோ அல்லது சகோதரர்கள் என்ற முறையிலோ அல்லது தோழர்கள் என்ற முறையிலோ எந்த முறையில் என்று எடுத்துக் கொண்டாலும் சரி - நான் அவ்வப் போது விடுக்கின்ற வேண்டுகோளும் - இப்போது விடுக்கின்ற வேண்டுகோளும் "உரிமைக்கு வாதிடுங்கள் - உண்மைகளை வெளியிடுங்கள்" என்பதுதான். "எதையும் மிகைப்படுத்தாதீர்! எவருக்கிடையிலும் பகை மூட்டாதீர்!" என்பதுதான்.

சுட்டிக்காட்டப்படும் குற்றம் குறைகளை "நீ யார் சுட்டிக்காட்ட?" என்று என்றைக்குமே கேட்காத அரசு; இந்த அரசு. அத்தகைய ஆணவம்; அணுகியதும் இல்லை இந்த அரசை! பத்திரிகைகளில் வரும் செய்திகளை விடியற்காலையிலேயே படிக்கத் தொடங்கி அவற்றை அதிகாரிகளோடும், அந்தச் செய்திக்கு தொடர்புடையவர்களோடும் உடனடியாக கலந்து பேசி குற்றம்

குறைகள் காணப்படின் அவற்றை உடனே களைந்தெறிய; நான் காரியமாற்றுகிறேன் என்பதை பாசத்திற்குரிய பத்திரிகை யாளர்கள் பலர் அறிந்திருந்தும் கூட எனக்கல்ல - மக்களிடையே பதற்றத்தை தங்களை அறியாமலேயே ஏற்படுத்துகிறோம் என்பதைப் புரிந்து கொண்டோ அல்லது புரியாமலோ - கடுகளவு செய்திகளைக் கூட கடல் அளவாகப் பெருக்கி வெளியிடுகின்ற வித்தை கற்றவர்களை நான் அறிவேன்.

ஒரு அரசின் சார்பில் நடந்திருக்க வேண்டியவைகள் இன்னும் நடக்கவில்லை என்று சுட்டிக்காட்டுபவர்களின் நல்லெண்ணத்தையும் நான் அறிவேன். இந்த இரு சாராரால் ஏற்படும் விளைவுகளை மக்களிடையே எப்படி கொண்டு செல்வது என்பதிலும் எனக்குள்ள அக்கறையின் காரணமாக இதை எழுத நேரிடுகிறது. உதாரணமாக இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் துன்ப துயரங்களை வேண்டுமென்றே பெருக்கிக் காட்டுவதால் சில நேரங்களில் விபரீதங்கள் ஏற்பட்டு விடக் கூடும் அல்லவா? அதனால்தான், எதையும் மிகைப்படுத்தாதீர்! என்று வேண்டுகோள் விட வேண்டியிருக்கின்றது.

அண்மையில் ஏற்பட்ட புயல், மழை, கடும் வெள்ளம் இவற்றின் காரணமாக தமிழகத்திலே ஒரு சில மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு - குறிப்பாக நீலகிரி மாவட்டம் அழகிழந்து - நிலை குலைந்து அங்குள்ள மக்கள் வேதனைக்கு உள்ளானபோது - இந்த அரசு அதனை ஒருக்கணம் கூட வேடிக்கை பார்க்காமல் - வேகமாக நிவாரணப் பணிகளை எப்படி ஆற்றியது என்பதை அந்த மலை பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகத் தெளிவாக அறிவார்கள்.

நாற்பதுக்கு மேற்பட்ட உயிர்களை கொள்ளை கொண்ட அந்தக் கொடுமையான நிகழ்வு, தொடங்கியபோதே நான் துடித்துப் போய் - நமது அமைச்சர்களாம் என் தம்பிமார்கள் வீரபாண்டி ஆறுமுகத்தையும், பொங்கலூர் பழனிசாமியையும் உடனடியாக அங்கே சென்றிடுமாறு கேட்டுக் கொண்டேன். கெலிகாப்டரிலே அவர்கள் செல்வதற்கு முயன்றும்கூட, அந்த மழையில் கெலிகாப்டர் போகாது என்று தெரிவித்துவிட்ட காரணத்தால் அந்தச் சாலையிலே அந்தப் பகுதியில் எந்தப் பயங்கரம் நிகழுமோ என்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் என் அன்பு உடன் பிறப்புகளாம் அந்த அமைச்சர்கள் சாலையிலே பயணம் செய்து ஏற்கெனவே அங்கே முகாமிட்டிருந்த அமைச்சர்கள்

ராமச்சந்திரன், வெள்ளக்கோவில் சாமிநாதன் ஆகியோருடன், அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அமைச்சருமான தம்பி ஆ. ராசாவுடன் மற்றும் குண்டன், முபாரக், சவுந்திரபாண்டியன், எம்.எல்.ஏ., ஆகிய கழக உடன்பிறப்புகளுடன் சேதமடைந்த பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்து நிவாரணப் பணிகளைத் தொடங்கச் செய்து உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறச் சென்று அங்கும் உரிய நிவாரணங்களை அரசின் சார்பிலே அளித்து, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் பார்க்கவும். எவ்வளவு ஆபத்தான இடத்தில் - எந்த நேரத்தில் அந்த இடம் சரியுமோ என்றுள்ள இடத்தில் தங்களைப் பற்றி கவலைப்படாமல், என் தம்பிமார்கள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஆனால் சிலர் எந்த உண்மை யையும் தெரிந்து கொள்ளாமல் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்பதைப் போல இரண்டு அமைச்சர்களைத் தவிர வேறு யாரும் செல்லவில்லை, பாதிக்கப்பட்டவர்களை யாரும் சென்று பார்க்கவில்லை என்றெல்லாம் அறிக்கை விட - அதையும் உண்மையை அறிந்த பத்திரிகையாளர்கள் கொட்டை எழுத்துக்களிலே வெளியிடுகின்றார்கள். அந்தப் பத்திரிகைகள் உண்மைகளை வெளியிட வேண்டாமா? அரசுக்கு எதிரான செய்தி என்பதற்காக எதையும் வெளியிட்டு விடலாமா? நன்றாகத் தெரிந்து - உண்மையில்லாத செய்திகளை வெளியிடுவதில்லை என்று பத்திரிகைகள் முடிவெடுத்து விட்டால், பின்னர் அறிக்கை விடுபவர்களே உண்மையில்லாத செய்திகளை வெளியிடுவதை நிறுத்தி விடுவார்கள்.

பாதிக்கப்பட்ட இடங்களில் பயம் சிறிதும் இன்றி, அந்த மக்களிடம் கொண்ட பாசமே பெரிது என்ற அக்கறையுடன் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிடும் அந்தக் காட்சியைப் பார்த்தாயா? இதை "இந்து" - "தினத்தந்தி" போன்ற நாளேடுகள் முதல் பக்கத்திலேயே வெளியிட்டுள்ளதை நான் பார்த்தவுடன் எவ்வளவு உயரத்திலே தொடர்ந்து மண் சரிவு ஏற்படும் பகுதியிலே நின்றுகொண்டு சிறிதும் அச்சமின்றி கடமையாற்றுகிறார்களே

என் தம்பிமார்கள் - அந்த மகிழ்ச்சிதான் நீல மலையிலே ஏற்பட்ட சோகத்தைப் பின் தள்ளுகிற ஆறுதலாக எனக்கு அமைந்தது.

ஏற்பட்ட பாதிப்புகளை களைவதற்கான பணியில் தீயணைப்புத் துறையினர், மீட்பு குழுவினர், மின்வாரியத் துறையினர், நெடுஞ்சாலைத் துறையினர், காவல் துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள். மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக கிடைத்த தகவலின்படி அந்த மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக 700 வீடுகள் சேதமடைந்துள்ளன.

துணை ராணுவத்தின் பேரிடர் துயர் நீக்க பிரிவில் உள்ள தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவும், தேசிய பேரிடர் மீட்பு படைப் பிரிவின் இன்ஸ்பெக்டர்கள் அருண் குமார், பூட்மாங்கே பிரசாந்த் ஆகியோரது தலைமையில் 76 பேர் சீரமைக்கும் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள்.

வருவாய்த் துறை ஆணையாளர் சுந்தர தேவன், தீயணைப்புத் துறை இயக்குநர் நடராஜ், சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரையும் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறவும், நிவாரணப் பணிகளை ஊக்கப்படுத்தவும் அனுப்பி வைத்தேன். இவர்களுக்கு முன்பாகவே மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான கோவிந்தன் அவர்களை நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி மாவட்ட ஆட்சியரோடு இருந்து நிவாரணப் பணிகளிலே ஈடுபடுமாறு அறிவுறுத்தினேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் உடனடியாக வழங்கக் கூறினேன்.

12-11-2009 அன்று காலை 10 மணியளவில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள சேதம் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மத்திய அமைச்சர் ஆ. இராசா அவர்கள் தலைமையில், மாநில அமைச்சர்கள் கா.ராமச்சந்திரன், வெள்ளக்கோவில் சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றுள்ளது.

அந்தக் கூட்டத்தில் போக்குவரத்துத் துறை சார்பில் கலந்து கொண்ட உதகை கோட்ட மேலாளர், 50 விழுக்காடு பேருந்துகள்

தற்போது இயக்கப்பட்டு வருவதாகவும், மீதி பேருந்துகள் விரைவில் இயக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அனைத்துப் பேருந்துகளையும் விரைவில் இயக்கிட தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று அந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்வாரியத் துறை சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட உதகை மின் வாரிய கண்காணிப்புப் பொறியாளர், நீலகிரி மாவட்டத்தில் 95 விழுக்காடு மின் விநியோகம் வழங்கப்பட்டு விட்டது என்றும், மீதம் உள்ளவை மூன்று நாட்களில் வழங்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்திருக்கிறார். சேதம் அடைந்த மின் கம்பங்களுக்குப் பதிலாக வெளிமாவட்டங் களிலிருந்து உடனடியாக அவற்றைக் கொண்டு வரவும், சாலை துண்டிக்கப்பட்ட இடங்களில் தலைச் சுமையாகவே அவற்றைக் கொண்டு வரவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மின்வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேட்டுப்பாளையம் - உதகை சாலை துண்டிக் கப்பட்டு விட்டதால், மைசூர் வழியாகவோ அல்லது பாலக்காடு வழியாகவோ தேவையான பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றை தடங்கலின்றி கொண்டு வருவதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறியதற்கிணங்க - இந்த அத்தியா வசியப் பொருட்கள் உடனடியாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டு தற்போது அவைகள் கிடைக்கின்றன.

பால் விநியோகம் தடைபடாமல் பார்த்துக் கொள்ள ஆவின் மேலாண்மை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட வழங்கல் அலுவலரும், ஆவின் மேலாண்மை இயக்குநரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு அனைத்துப் பகுதிகளுக்கும் பால் விநியோகம் நடைபெறுவதை உறுதி செய்துகொள்ள வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குத் தேவைப்படும் பால் பொருட்கள் தடங்கல் இன்றி கிடைத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் குழாய்கள் வெள்ளத்தால் பெரும் சேதம் அடைந்து விட்ட காரணத்தினால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நகராட்சி

பகுதிகளில் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களுக்கும் பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் உதவி இயக்குநர், பேரூராட்சிகள் மற்றும் உதவி இயக்குநர், கிராம பஞ்சாயத்து ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சேதம் அடைந்த குழாய்களை உடனடியாக மாற்றி புதிய குழாய்கள் பொருத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. தண்ணீர் தொட்டிகள் சேதம் அடைந்திருந்தால், அப்பகுதிகளில் சிண்டெக்ஸ் தொட்டிகள் வைத்து குடிநீர் வழங்க வேண்டு மென்றும் உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பஞ்சாயத்து வளர்ச்சி) மேற்பார்வையிடவும் சொல்லப்பட்டுள்ளது.

வெள்ள சேதம் காரணமாக தொற்று நோய் எதுவும் ஏற்படவில்லை என்று மக்கள் நல்வாழ்வுத் துறை துணை இயக்குநர் சார்பில் தெரிவிக்கப்பட்டு, வெள்ள நிவாரண முகாம் களில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப் பட்டுள்ளதால், அவர்களுக்கு உடல் பரிசோதனை செய்திடவும், மருத்துவ வசதிகள் கிடைத்திடவும் உரிய அலுவலர்களை நியமிக்கவும், தேவையான மருந்துகளை உடனடியாக வழங்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சாலை ஓரங்களிலும், குடியிருப்பு பகுதிகளிலும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய மரங்களை உடனடியாகக் கண்டறிந்து அவற்றை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளும்படி கூறப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பெருமளவு பயிர்கள் சேதம் அடைந்துள்ளது. அதற்கான விவரங்களை சேகரித்து அரசுக்கு அறிக்கை தரும்படி அதிகாரிகளுக்குக் கூறப்பட்டுள்ளது. அது போலவே கால்நடை சேதம் குறித்த விவர அறிக்கையினை சேகரித்திட உதகை கால்நடைத் துறை உதவி இயக்குநருக்குச் சொல்லப்பட்டுள்ளது.

அரசு சார்பில் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள பணித்ததோடு - கட்சி ரீதியாகயும் நிவாரணப் பணிகளிலே ஈடுபடும்படி சொல்லப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களிலேயே தி.மு. கழகத்தின் சார்பில் அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2000 கம்பளி போர்வைகளும், உணவுப் பொருட் களும், பால், ரொட்டி, வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி முழுமையாக 55 வீடுகளும் - பகுதியாக 909 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. நிவாரண உதவியாக இதுவரை 476 பேருக்கு 9 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இன்னும் 488 பேருக்கு 9 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் வழங்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு 1808 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். 610 குடும்பங்களைச் சேர்ந்த 1808 பேர் 22 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். 30 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 105 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகள் பழுதடைந்துள்ளன.

மழையினால் தகர்ந்த சாலைகள் சரி செய்யப்பட்டு விட்டது. மீண்டும் போக்குவரத்து தொடங்கிவிட்டது. இயல்பான வாழ்க்கை அமைந்துவிட்டது என்ற செய்திகள் வந்தும் கூட இன்னும் சில ஏடுகளில் அங்கே எதுவுமே நிவாரணப் பணிகள் நடக்கவில்லை என்பதைப் போல சிலர் விடுத்துள்ள அறிக்கைகள் பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் காணுகிறேன். இது போலவே, மீனவர்கள் எழுநூறு பேரைக் காணவில்லை என்ற பரபரப்பான செய்தி சில தொலைக்காட்சிகளிலும் ஏடுகளிலும் வெளி வந்ததும், நான் அதிர்ந்து போய் அதைப் பற்றி விசாரிக்கச் சொல்ல; மொத்தமே காணாமல் போனவர்கள் எட்டு பேர்தான் என்றும், அதிலும் நான்கு பேர் திரும்பி விட்டார்கள் என்றும் செய்தி கிடைத்தபோது, பத்திரிகைகள் எல்லாம் இப்படி பரபரப்பாக தவறான செய்தியை அவசரப்பட்டு மிகைப்படுத்தி வெளியிடுகிறார்களே என்று எண்ணி வருந்தினேன். அந்த வருத்தங்களையெல்லாம் புறந்தள்ளி விட்டுத்தான் நாம் நம் வழியில் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது!

அன்புள்ள,

மு.க.

15-11-2009

3434. நம் மௌன வலி; யாருக்குத் தெரியப் போகிறது?

உடன்பிறப்பே,

ஈழத் தந்தை செல்வாவின் குரலோடு இணைந்து 1956 முதல்; திராவிட முன்னேற்றக் கழகம் தென்னிந்தியாவில் இலங்கைப் பிரச்சினைக்காக எழுப்பிய குரலும் -

இலங்கையில் ஜனநாயகம் மலர வேண்டும் என்பதற்காக எடுத்து வைத்த வாதங்களும் -

நடத்திய அறப்போராட்டங்களும் -

சிறைகளை நிரப்பிய தியாகச் செயல்களும் -

சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் தூக்கி எறிந்த நிலைகளும் -

ஏன்; இரு முறை ஆட்சியையே இழந்த சரித்திரச் சம்பவங்களும் -

தி. மு. கழகத்தின் சார்பில் நிதியாக தமிழர்களிடமிருந்து சேர்த்துக் கொடுத்த மாசறு காசுகள்; செல்லாக் காசுகளாக மாறிய நிகழ்ச்சியும் -

"டெசோ" இயக்கத்தின் சார்பில் - நானும், தமிழர் தலைவர் வீரமணியும், பழ. நெடுமாறன், அய்யணன் அம்பலம் ஆகியோரும் முன்னின்று மாவட்டந்தோறும் நடத்திய பேரணிகளைத் தொடர்ந்து; 4-5-1986 அன்று மதுரையில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு டி.யு.எல்.எப். சார்பாக அமிர்தலிங்கம், புரோடெக் சார்பாக சந்திரகாசன், ஈராஸ் சார்பாக ரத்தின சபாபதி, டி.இ.எல்.எப். சார்பாக ஈழவேந்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பாக வரதராஜப்பெருமாள், பிளாட் சார்பாக வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதும்,

அந்த மாநாட்டில் அகில இந்திய ரீதியில் என்.டி. ராமராவ், வாஜ்பய், பகுகுணா, ராம்வாலியா, உபேந்திரா, உன்னிகிருஷ்ணன், சுப்பிரமணியம் சுவாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பதும்,

அந்த மாநாட்டிற்கு பல்வேறு போராளிக் குழுக்களின் தலைவர்கள் எல்லாம் வந்து கலந்து கொண்டு போராளிகளிடையே அடிக்கடி எழும் புயல் குறித்து விவாதித்து; அதனை நிறுத்த சகோதர ஒற்றுமை வேண்டு மென்று வலியுறுத்தினார்கள் என்பதும்,

ஆனால் அந்த மாநாட்டிற்கு எல்.டி.டி.ஈ. சார்பாக திலகர் என்பவர்தான் வந்திருந்தாரே தவிர, பிரபாகரன் வரவில்லை என்பதும்;

அரசுப் பொறுப்பில் முதலமைச்சராக இருந்து கொண்டே, அமைதிப் படை இந்தியாவிற்கு திரும்பி வந்ததை வரவேற்கச் செல்லாமல் புறக்கணித்து, தமிழ்நாட்டின் உணர்வை நான் வெளிப்படுத்திய நிகழ்வும் -

இலங்கையில் நடந்த விடுதலைப் போராட்டத்திற்கு நமது தாய் மண்ணிலிருந்து நீட்டப் பட்ட ஆதரவுக் கரம் என்பதை நடுநிலையாளர்கள் யாரும் மறந்துவிட முடியாது.

ஆனால் விடுதலைப் படைமுகத்திலே நின்ற ஒருசில தளகர்த்தர்களுக்கு - தளபதிகளுக்கு - தலைவர்களுக்கு நாமே வலுவில் சென்று வழங்கிய ஆதரவு ; மிக லேசாகவே தெரிந்தது. நாம் எடுத்து வைத்த கருத்துகள் அலட்சியப் படுத்தக் கூடியவைகளாக ஆகிவிட்டன. வீரத்தைப் பயன்படுத்திய அளவுக்கு; இது போன்ற போர் முனைகளில் விவேகத்தைப் பயன்படுத்தவேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தியதை என்ன காரணத்தாலோ அலட்சியப்படுத்திவிட்டார்கள்.

எல்லாம் முடிந்து மேலும் முடிவுறுமோ; என்ற துயர நேரத்திலே ஜனநாயக ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வாய்ப்பு வாசற்படி வரையிலே வந்தபோதுகூட, அதை எட்டி உதைத்துவிட்ட தவறான காரியம் நடைபெற்றதையும் - நடைபெற்றதற்கான காரணத்தையும் - நான் அல்ல; என்னைப் போன்றவர்கள் அல்ல; இதோ மௌன வலி உணர்ந்து, அதனை

நமக்கு உரைக்கும் அருமை நண்பர்களாம், தமிழ் எழுத்தாளர்களில் தலை நிமிர்ந்து நிற்கும் தன்மானத் தோழர் தம்பி கோபால் அவர்களுக்கு; அண்மையில் சென்னைக்கு வந்த இலங்கை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், இன்றைய இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கையின் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்கே அவர்கள் 18-11-2009 தேதியிட்ட நக்கீரன் வார இதழுக்காக அளித்த பேட்டியில்

"இந்தப் போரின் விளைவுகளுக்கு ஒரு வகையில் பிரபாகரனும் காரணம். தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டி முயற்சி நடந்த போதெல்லாம் அதனை தவிர்த்தார் பிரபாகரன். 2003இல் நடந்த அமைதிப் பேச்சு வார்த்தையிலிருந்து தானாகவே வெளியேறினார். 2005-ல் டோக்கியோ வில் நடந்த பேச்சுவார்த்தையிலும் தமிழர்களின் கோரிக்கைகள் என்ன வென்பதை தெரிவிக்காமலே இழுத்தடித்தார். இறுதியில் அதில் கலந்து கொள்வதைத் தவிர்த்தார். மேலும் 2005-ல் நடந்த அதிபர் தேர்தலில் தமிழர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல்; பிரபாகரன் தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கச் செய்தார். அதே நேரம் அவர்கள் தேர்தலில் தங்கள் பங்களிப்பை செய்திருந்தால் தமிழர்களின் மனநிலை என்னவென்பதை அறிந்து கொள்ள முடிந்திருக்கும். அந்த ஜனநாயக வாய்ப்பை தமிழ் மக்களுக்குத் தர பிரபாகரன் தவறி விட்டார்."

என்று ரணில் கூறியிருப்பதைக் கூர்ந்து கவனித்தால் விடுதலைப் புலிகள் போர்த் தந்திரத்தை எதிர்காலக் கணிப்போடு கடைப் பிடிக்காததுதான் காரணம் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

விளைந்த நிலைமையை எண்ணிப் பார்ப்பதற்கு இந்த விடுதலைப் போரின் பின் விளைவுகளுக்கு; சகோதர யுத்தத்தின் காரணமாக;

மாவீரன் மாத்தையாவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கமே மரண தண்டனை விதித்து அதை நிறைவேற்றியும் ;

டெலோ சிறீ சபாரத்தினத்தை சவமாக ஆக்கியும்;

பத்மநாபாவையும், அவரோடு இணைந்து பத்து போராளிகளையும் கொன்று குவித்தும்;

தொடக்கக் காலத்திலிருந்து போராளிகளின் துணைவராக விளங்கிய பெரியவர் அமிர்தலிங்கம் அவர்களையும், ஜோதீஸ்வரன் அவர்களையும் இந்த நிகழ்ச்சிகளில் உச்ச கட்டமாக பலியாக்கியும்; ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த மனோமாஸ்டர் என்ற பஞ்சலிங்கத்தையும், அந்த இயக்கத்தின் தலைவர் குலசேகரம் தேவசேகரத்தையும், தலைசிறந்த அரசியல் அறிஞர் நீலன் திருச்செல்வத்தையும், சுந்தரம் எனப்பட்ட சிவசண்முக மூர்த்தியையும், ஜார்ஜ், சபாலிங்கம், சாம்தம்பிமுத்து, கலாதம்பிமுத்து மற்றும் பிளாட் இயக்கத்தைச் சேர்ந்த யோதீஸ்வரனையும், வாசுதேவாவையும், மரணக் குழியிலே தள்ளியும்;

தங்கள் துணைகளை தாங்களே திட்ட மிட்டு, தொலைத்துவிட்ட காரியங்களாக அமைந்தன என்பதை இந்தப் போர்முனை சரித்திரம் இன்னமும் சொல்லிப் புலம்பிக் கொண்டுதானிருக்கிறது.

நான் யார் மீதும் குற்றம், குறை சொல்வதற்காக இதையெல்லாம் எழுதவில்லை. இலங்கையில் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிந்து புதிய அரசு அமைந்த ஒரு சில நாட்களுக்குள் - 9-4-2004 அன்று கிழக்கு இலங்கையிலே சகோதர யுத்தம் - பிரபாகரன், கருணா படைகளிடையே ஏற்பட்டு அதிலே 20 போராளிகளும் 2 சிவிலியன்களும் கொல்லப்பட்டார்கள்.

இப்படி சகோதர யுத்தம் காரணமாக - நம்மை நாமே கொன்று குவித்துக் கொண்டது மாத்திரமல்ல - முறையாகத் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிய காரணத்தால் - நம்முடைய பலத்தையும், மாற்றார் பலத்தையும் துல்லியமாக கணிக்காத காரணத்தால் - நம்முடைய தமிழ் மக்கள் எத்தனை பேர் மாற்றாரின் தாக்குதலுக்கு உள்ளாகி தங்கள் உயிரை இழக்க நேரிட்டது? இளம் சிறார்கள் எத்தனை பேர் தங்கள் பிஞ்சு வயதிலேயே வெந்து மாண்டனர்? அவர்களை இழந்த அவர்களுடைய பெற்றோர் எத்தனை வேதனைப்பட்டிருப்பார்கள்? எத்தனை பேர் தங்கள் சொத்து சுகங்களை இழந்து நாடு விட்டு நாட்டிற்கு பஞ்சைகளாக, பராரிகளாகச் செல்ல நேரிட்டது? தங்கள் வாழ்க்கையைத் தொடர அவர்கள் எங்கெங்கு அலைந்து திரிய வேண்டியதாயிற்று? எத்தனை பேர் அகதிகள் முகாம்களில் ஆண்டுக்கணக்கில் வாட நேர்ந்தது? இதற்கெல்லாம் காரணம் என்ன? ஏன் பிரபாகரனின்

மனைவி, மக்கள் குடும்பத்தாரின் கதிதான் என்ன? இப்படி எத்தனை குடும்பங்கள்? இன்னும் பல ஆண்டுகள் அனைவரும் அமைதியோடு வாழ்ந்து - தமிழர்களின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டியவர்கள் - தங்கள் உயிரை அற்ப ஆயுளில் முடித்துக் கொண்டு போய் விட்டார்களே என்ற ஆதங்கத்தில்தான் இதனை நான் எழுத நேரிட்டது. வாழ வேண்டிய ஆயிரக்கணக்கான இளந்தளிர்கள் வாடி வதங்கி விட்டார்களே என்ற வேதனையில் இதனை எழுதுகின்றேன்.

என்னையும், தம்பி மாறனையும் 9-2-1989 அன்று; அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் டெல்லிக்கு அழைத்து - விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றியும், ஈழப் பிரச்சினை குறித்தும் இரண்டு நாள் உரையாடி - அது பற்றிய விவரங்களை சுமார் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தமிழ்நாடு மாளிகையில் வெளியுறவுத் துறை இணை அமைச்சர் நட்வர்சிங் மூலமாக எங்களுக்குத் தெரிவித்து - நீங்களும், மாறனும், வைகோவும் இலங்கை சென்று கொழும்பிலோ அல்லது உங்களுக்கு விருப்பமான இடத்திலோ முகாமிட்டு - பிரபாகரனுடன் இந்தப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசுங்கள், எத்தனை நாள் வேண்டுமானாலும் அதற்காக நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள், இலங்கையில் நீங்கள் அவர்களைச் சந்திக்கவோ, அல்லது அவர்கள் நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து சந்திக்கவோ தேவையான ஏற்பாடுகளை நான் இங்கிருந்து ஏற்பாடு செய்து தருகிறேன், அதிகப்பட்சம் அவர்களது கோரிக்கை என்ன என்பதை விவரமாகத் தெரிந்து கொள்ளுங்கள், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளை நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன் - என்றெல்லாம் எங்களுக்குச் சொல்லி உறுதியளித்த அந்த இளந்தலைவர், ராஜீவ் காந்தி அவர்கள் இந்திய மண்ணில் அதுவும் தமிழ் மண்ணிலேயே கொலையுண்டார் என்பது ஒரு மாபெரும் சோகச் சம்பவம். அந்தச் சம்பவமும் ஈழ விடுதலைப் போராட்டத் தீயில் தண்ணீர் விட்டு அணைத்தது போல் ஆயிற்று என்பதை உலகம் மறந்து விடவில்லை.

இதோ ஒரு நிகழ்ச்சி. 17-11-2005 அன்று இலங்கை அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது. 13 பேர் போட்டியிட்டனர். அந்தத் தேர்தலில் அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபட்சே அவர்களும், அவரை எதிர்த்து முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங் அவர்களும் முக்கியமாகப் போட்டியிட்டார்கள்.

அந்தத் தேர்தலை சிறுபான்மையினரான தமிழர்கள் புறக்கணிக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் அறிவுறுத்தினர். அந்தத் தேர்தலின்போது, தான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சைத் தொடருவதற்கு முன்னுரிமை அளிப்பேன் என்றார் ரணில். அப்போது ரணில் அவர்கள் சொன்னதைத் தான் இப்போதும் நக்கீரன் இதழுக்கு அளித்த பேட்டியிலும், "2005-ல் நடந்த அதிபர் தேர்தலில் தமிழர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் பிரபாகரன் தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கச் செய்தார். அதே நேரம் அவர்கள் தேர்தலில் தங்கள் பங்களிப்பை செய்திருந்தால் தமிழர்களின் மனநிலை என்னவென்பதை அறிந்து கொள்ள முடிந்திருக்கும். அந்த ஜனநாயக வாய்ப்பை தமிழ் மக்களுக்குத் தர பிரபாகரன் தவறி விட்டார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தத் தேர்தலில், இலங்கையின் ஐந்தாவது அதிபராக, பிரதமராக இருந்த ராஜபட்சே வெற்றி பெற்றார். ராஜபட்சேவுக்கு 48,87,152 (50.29 சதவிகிதம்) வாக்குகளும், ரணிலுக்கு 47,06,366 (48.43 சதவிகிதம்) வாக்குகளும் கிடைத்தன. சுமார் 1 லட்சத்து 81 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் தோல்வி அடைந்தார். ஏறத்தாழ ஏழு இலட்சம் தமிழ் வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்த காரணத்தால், அவர்கள் வாக்களிக்கவே இல்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது - விடுதலைப் புலிகள் சார்பாக அவசரப்பட்டு அன்று எடுக்கப்பட்ட அரசியல் முடிவின் விளைவுகள் எப்படி ஆயின ; எங்கே போய் முடிந்தன; என்பதை எண்ணிப் பார்த்து நாம் மௌனமாக அழுவது யார் காதிலே விழப் போகிறது? நம்முடைய மௌன வலிதான் யாருக்குத் தெரியப் போகிறது?

அன்புள்ள,

மு.க.

18-11-2009

3435. முடிந்த தொடர்கதை; முடியாத வரலாறு!

உடன்பிறப்பே,

இரண்டாவது முறையாக முரசொலியில் வெளிவந்து கொண்டிருந்த "பாயும் புலி பண்டாரக வன்னியன்'' வரலாற்று ஓவியம்; முடிவுற்றுவிட்டது.

எத்தனை முறை அந்த வீரனின் வரலாறு வெளிவரினும்; அந்த வீரகாவியம் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

அதை விளக்கவே இந்தக் கடிதம்:-

1991ஆம் ஆண்டுவாக்கில் வெளியிடப்பட்டதும், நான் எழுதிய வரலாற்றுப் புதினமு மான "பாயும் புலி பண்டாரக வன்னியன்" எனும் எழுச்சிமிக்க காவியத்தில், நான் படைத்துள்ள கதாபாத்திரங்கள் பண்டாரக வன்னியனும், அவன் உள்ளங்கவர்ந்த காதலி, குருவிச்சி நாச்சியாரும், அவன் அருமைத் தங்கையர், நல்ல நாச்சியும், ஊமைச்சி நாச்சியும் இலங்கை மண்ணில் தமிழர்களின் உரிமை காக்கப் போராடியவர்கள் என்று நான் சித்திரித்துள்ளதை அந்தப் புதினத்திற்கு அணிந்துரை வழங்கிய நமது பேராசிரியர் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடும் போது "வஞ்சிக்கப்பட்ட நல்ல நாச்சியார், நானும் தமிழன்தானே என்று கூறுகிற கயவன் காக்கை வன்னியனை நோக்கி - " நீ தமிழன் தான்! இனத்தால், மொழியால், உன் உடலில் ஓடும் இரத்தத்தால் நீ தமிழன்தான்! ஆனால் சூடு சொரணை இல்லாத தமிழன்! பணத்துக்காகப் பாத பூஜை செய்யும் தமிழன்! பதவிக்காக மானத்தை அடகு வைக்கும் தமிழன்!" என்று சினந்து கூறிய சொற்கள், இன்றைய தமிழ் மண்ணில் எவ்வளவு பேருக்கு ஏற்புடையதாக அமையும் என எண்ணத் தோன்றுகிறது. அதுதான் எண்ணத் தொலையாதே என்ற ஏக்கந்தான் மேலோங்குகிறது" என்று குறிப்பிட்டு விட்டு "மற்றொரு களம், பண்டாரக வன்னியன் பற்று வைத்திருந்த தமிழகத்தில், கயத்தாறு பூமியில், வெள்ளைக்கார மேஜர், வீரபாண்டிய கட்டபொம்மனைக்

குற்றஞ்சாட்டிய போது கட்டபொம்மன் உரையாக இடம் பெறுவது இது;

> "ஒற்றுமை இன்மையால் உருப்படாமல் போன இனம் என்று உலகில் ஒரு இனம் உண்டென்றால் அது தமிழ் இனம் தான்! எதிரிகள் கஷ்டப்பட்டுப் பிரித்து வைக்கத் தேவை இல்லாமலே - தாங்களாகவே கசப்பு, பொறாமை, காழ்ப்பு இவற்றின் உச்சக் கட்டத்திற்குச் சென்று பிரிந்து நிற்கும் இனமும் தமிழ் இனம் தான்! அதன் விளைவுதான் இதோ உமது எதிரில் வீரபாண்டியன் கூண்டில் நிற்பதும், அதனை இத்தனைத் தமிழ்க் குறுநில மன்னர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதும். இதுதானே இன்றையத் தமிழ்நாட்டின் அரசியல் திருக்கோலம்!"

என்று இந்த நூலில் கலைஞர் குறிப்பிடுவது தான் எவ்வளவு வேதனையோடு நம் நெஞ்சில் அதிர்கிறது என்று தான் கொண்ட அதிர்வை பேராசிரியர் அந்த அணிந்துரையில் எடுத்துக் காட்டுகிறார்.

அவரது அணிந்துரையோடு தொடங்கும் "பண்டாரக வன்னியன்" எனும் வீர காவியத்தில் "தோரண வாயில்" எனும் தலைப்பில் நான் எழுதிய முன்னுரையைக் குறிப்பிட்டு விட்டு அடுத்தகட்டமாக சில வரலாற்றுக் குறிப்புகளையும் இந்தக் குறுந்தொடரில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1982-ல் இலங்கையில் வவுனியா மாவட்ட வளர்ச்சிக் குழுவினர், வவுனியாவில் கற்சிலை மடுவு என்ற இடத்தில் பண்டாரக வன்னியனுக்கு சிலையெடுக்கும் விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலருக்கு நான் எழுதியனுப்பிய வாழ்த்து பின்வருமாறு :-

> "தமிழகத்தில் எந்த அளவுக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன், வெள்ளையரை எதிர்த்துப் போராடித் தன் உயிரைத் தியாகம் செய்தானோ - அதைப்போலவே இலங்கை வன்னி நாட்டில் "உண்டேல் சுதந்திரம், இன்றேல் இல்லை வாழ்வு!" என்ற கோஷத்தை முன்வைத்து, தன் இறுதிமூச்சு வரையில் போராடி, உயிர் விட்ட தியாகி மாவீரன் பண்டாரக வன்னியனுக்கு

வவுனியாவில் சிலையெடுத்து அதனையொட்டி முத்தமிழ் விழா ஒன்றினையும் கொண்டாட அருமை நண்பர் - பாராளுமன்ற உறுப்பினர் தா. சிவசிதம்பரம் உள்ளிட்ட குழுவினர் முடிவு செய்துள்ளதறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தியாகத்திற்கு, நிகழ்காலம் உரிய மதிப்புத் தரத் தவறினாலும், எதிர்காலம் நிச்சயம் மதிப்பு தந்தே தீரும் என்பதற்கு அடையாளமாக இச்சிலை திறப்பு விழா நடைபெறுவது போற்றுதற்குரியதாகும்.''

அன்றுதொட்டே, அந்த மாவீரனைப் பற்றிய குறிப்புகளைப் பலர் வாயிலாகத் திரட்டிட ஆவல் எழுந்தது எனக்கு! எனினும் அக்குறிப்புகள் எளிதிற் கிடைத்திடவில்லை!

அச்சிலை திறப்பு விழாவுக்கு வாழ்த்தளித்த - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி வித்யானந்தன் அவர்கள்:-

"வன்னி நாடாகிய அடங்காப்பற்றின் மானம் காக்க அந்நியருடன் இறுதி மூச்சு வரை போராடிய மாவீரன் பண்டாரக வன்னியன். மக்கள் நலனை மனதிற் கொண்டு தேசப்பற்றுடன் ஆண்டவன் அவன். ஆங்கிலப் படைத்தளபதி ஒன்டிரிபர்க் தனது புகழை நிலைநாட்டிக் கொள்வதற்காக கற்சிலை மடுவில் பண்டாரக வன்னியனுக்கு நினைவுக் கல் அமைத்தான். அவனின் வீரத்தைப் பறைசாற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபையினர் வவுனியாவில் சிலையெழுப்புகின்றனர். வன்னிப் பிரதேசத்து மக்களுக்கு மட்டுமன்றி, நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் ஈழத்துத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும், தேசப்பற்றும், உரிமைக்குரலும் ஓங்கிட இச்சிலை அமையுமென எதிர்பார்க்கலாம். நல்ல தலைவர்களை மக்கள் விரும்பவும், இனங்கண்டு கொள்ளவும் நல்ல தலைவர்கள் தோன்றவும் இச்சிலை வழிவகுப்பதாக!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையிலேயே அந்த சுதந்திரப் போர் வீரன் தோற்கடிக்கப்பட்டானா? அத்துடன் அவனது போர் முழக்கம் முற்றுப்பெற்று விட்டதா? அல்லது மீண்டும் ஆர்ப்பரித்துக் கிளம்பியதா அந்த அரிமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ''பாயும் புலி பண்டாரக வன்னியன்'' தொடர் சித்திரம், பதில் அளிக்கத்தான் செய்கிறது! விளக்கமான பதில்! வீரங்கொப்பளிக்கும் பதில்!

அந்த மானங்காத்த மன்னவனுக்குச் சிலையெழுப்பிய பொழுது இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான நாவலர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்தில்

"ஆங்கிலேயரின் படையெடுப்பினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் தங்கள் இறைமைகளை இழந்த போதும் - இறுதி வரையில் தமது ஆட்சிக்கு உட்பட்ட மக்களின் இறைமையை நிலைநாட்ட முழு மூச்சாக நின்று போராடியவன் வன்னியின் கடைசி மன்னன் மாவீரன் பண்டாரக வன்னியன். அவனது வீழ்ச்சிக்கு ஆங்கிலேயரின் ஆக்ரமிப்பு மட்டுமல்ல, கூடப் பிறந்தே கொல்லும் வியாதி போல் விளங்கிய காக்கை என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட இழிசெயலும் முக்கிய காரணமாக இருந்தது" என்று குறிப்பிடுகிறார்.

துரோகிகளைச் சந்திக்க நேர்ந்த அந்த தூயவனுக்கு நல்ல நண்பர்களும் இல்லாமலில்லை. கி.பி. 1815ஆம் ஆண்டு வரையில் கண்டியை ஆட்சி செய்து ஆங்கிலேயர்களால் சிறைபிடிக்கப்பட்டு தமிழகத்து வேலூர் சிறையில் பதினாறு ஆண்டுக்காலம் அடைக்கப் பட்டு அந்தச் சிறையிலேயே உயிர்நீத்த கண்ணுசாமி என்ற விக்ரம ராஜ சிங்கன், பண்டாரக வன்னியனின் உயிர்த்தோழனாவான்.

காட்டிக் கொடுப்போரால் மனம் நொந்த அந்த மாத்தமிழனின் எரிமலை இதயத்தை சிறிது மாற்றியமைத்து, அவன் இளைப்பாறும் குளிர் தருவாக குருவிச்சி நாச்சியார் என்னும் கோதையொருத்தியும் இருந்தாள்! மன உறுதியின் அடிப்படையில் கட்டப்பட்ட அந்தக் காதல் மாளிகை, ஒரு வைராக்கிய மாளிகை! தியாக மாளிகை!

போர்ச்சுக்கீசியர், ஒல்லாந்தர் எனப்படும் டச்சுக்காரர், ஆங்கிலேயர்-இவர்களின் நுழைவினால் இலங்கையில் தமிழ் மன்னர்களின் அரசுகளும், சிங்கள மன்னர்களின் அரசுகளும் ஒவ்வொன்றாக வீழ்ந்த போதும் பண்டாரக வன்னியனின் அரசும், கண்டி மன்னனின் அரசும் மட்டுமே, இறுதியாக ஆதிக்கம் பெற்று நிலைத்து விட்ட ஆங்கிலேயரை எதிர்க்கின்ற வல்லமை பெற்றவைகளாக விளங்கின.

வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவி ஆற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், கிழக்கே

திரிகோண மலையையும் எல்லைகளாகக் கொண்ட பகுதியைப் பண்டாரக வன்னியன் பரிபாலித்தான்.

டச்சுக்காரர் எதிர்ப்புக்கும், ஆங்கிலேயர் எதிர்ப்புக்கும் அவன் ஈடு கொடுக்க வேண்டியிருந்தது. அவனுக்குத் துணையாக திருகோணமலை எல்லைப்புறத்தில் நல்லநாச்சி - மன்னார் எல்லையில் பனங்காமம் பகுதியை ஊமச்சிநாச்சி - என்ற அவனது சகோதரிகளும் பரிபாலித்துப் பாதுகாத்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பைக் காணும்பொழுது - அந்த மண்ணில் வாழ்ந்திடும் தமிழர்கள் அன்றும் இன்றும் கண்ணகியைத் தமது தெய்வமாக வழிபட்டனர், வழிபடுகின்றனர் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!

சேரன் செங்குட்டுவன் தமிழகத்தில் வஞ்சிமூதூரில் பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்கு, இமயத்திலே கல் எடுத்து அதனைத் தன்னுடன் போரிட்டுத் தோற்ற கனகவிசயர் தலையிலேற்றிக் கொணர்ந்து சிலையெடுத்தான். அப்போது ஈழத்து மன்னன் கயவாகு அந்தப் பத்தினி வழிபாட்டை ஈழத்தில் தொடக்கி வைத்தான் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. மதுரையை எரித்தும் சினந்தணியாத கண்ணகி பத்தாவது இடமாக வந்து அமர்ந்த இடந்தான், "பத்தாப்பளை" என வழங்கப்பட்டு, மருவி, இன்று "வற்றாப்பளை" ஆகியது என ஒரு கதை, அந்தப் பகுதியில் இன்றைக்கும் உண்டு.

அந்தக் கண்ணகி வழிவந்தோரைத் தனது சகோதரிகளாகவும் - தனது அன்புக் காதலி குருவிச்சி நாச்சியாராகவும் பெற்றிருந்த பண்டார வன்னியன் எனப் பட்டம் கொண்ட அந்த வீரன், மிக இளமைப் பருவத்திலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்று முப்பத்தி நான்கு வயதிலேயே, களச் சாவில் தனது புகழை நட்டான்!

பண்டார வன்னியன் என வரலாற்றுக் குறிப்புகளிலும் - பண்டாரக வன்னியன் என்று இந்தத் தொடர்கதைத் தலைப்பாகவும் குறிப்பிடப்படும் அவனது இயற்பெயர் குலசேகரம் வைரமுத்து என்பதாகும்.

குலசேகரம் என்ற குடிப் பெயருக்குரிய மன்னர்களின் வழி வழி வந்த தோன்றல்தான் வாள்வீரன் வைரமுத்து!

"ஏகாதிபத்தியம் எதுவாக இருந்தாலும் அந்த ஏகாதிபத்தியம் ஒரு இனத்தின் இறைமையைப் பறிக்க முற்படும்போது அந்த இனம்

வீறு கொண்டு எழுந்து, தனது உரிமைக்காகப் போராடும் என்பதைப் பண்டார வன்னியன் வாழ்க்கை எமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. பண்டார வன்னியன் வாழ்ந்த மண்ணிலே அவனின் வாரிசுகளாக வாழ்ந்து வரும் மக்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் சுதந்திர தாகம் கொண்ட மக்களாக, தங்கள் அரசியல் உணர்வை வெளிப்படுத்தியதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவதிலே நான் பெருமையடைகிறேன். இன்று அளிக்கப்படும் கௌரவம் மாவீரன் பண்டார வன்னியனுக்குத் தான் உடையதல்ல. இன்று கௌரவிக்கப்படுவது அவனுடைய இலட்சியமும், சுதந்திர வேட்கையும்தான்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் பண்டார வன்னியனின் சிலை திறப்பு விழாவில் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரதமர் பிரேமதேசா கூட, அந்தச் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு வழங்கிய வாழ்த்தில்,

"கௌரவிக்க வேண்டியவர்களைக் கௌரவிப்பது தார்மீக ஒழுக்க நெறியாகும்" என்றும்,

"மாவீரன் பண்டார வன்னியனை கௌரவிக்க சிலையெடுக்கும் விழா, முற்றிலும் சரியான செயல் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்"

என்றும் குறிப்பிட்டிருப்பது அந்த வீரனின் புகழைப் பறைசாற்றுவதாகும்.

போர்வாளைத் தனது கொடியின் சின்னமாகக் கொண்டு - புலியெனப் பாய்ந்து களம் பல கண்ட - பண்டாரக வன்னியனின் உருவமோ;

உயர்ந்த தோற்றம்!
விரிந்த மார்பு!
ஒடுங்கிய இடை!
பரந்த நெற்றி!
உரமேறிய தோள்கள்!
கூரிய பார்வை!

அந்தத் தீரனின் அஞ்சாநெஞ்ச வாழ்க்கையின் அடிச்சுவட்டில் விளைந்த வீரமண்ணின் தீரர்களையும், வீரர்களையும், தியாகிகளையும் அவர்களின் சரிதங்களையும் முத்தாரமாகக்

கோத்து நான் வழங்கிய அந்தப் போர்க் காதையின் முடிவை எவ்வாறு தீட்டியுள்ளேன் என்பதைப் படித்துப் பார்த்தால் - இதோ படித்துத்தான் பாருங்களேன்!

குருவி நாச்சியார் சற்று குழப்பமடைந்தாள். பண்டாரக வன்னியன் எதிரியிடம் தோல்வியுற்று, அவனிடம் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு, அவன் கூடாரத்தில் அமர்ந்து விருந்து அருந்துகின்றான் என்று வெள்ளையர் தளபதி எட்வர்ட் என்பவன் கூறியதைக் கேட்டு; குருவி நாச்சியார் குழப்பமடைந்தாள். ஆனால் ஒன்று - ஆங்கிலேயப் படையினரின் நவீன போர்க் கருவிகளுக்கு மத்தியில் அப்படியொரு தோல்வி பண்டாரகனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதையும் அவளால் முழுமையாக மறுக்கமுடியவில்லை.

எனவே "சரி வருகிறேன்!" என்று கூறிக் கொண்டே வாளை உறையில் போட்டுக்கொண்டு குருவிச்சி நாச்சியார் எட்வர்டைப் பின் தொடர்ந்தாள்; பண்டாரகனை சந்திக்க! எட்வர்டைச் சேர்ந்த இரு வீரர்களும், குருவிச்சியின் இரு வீரர்களும் முல்லைத் தீவு அரண்மனையின் முகப்பிலேயிருந்து அந்த இருவரின் பின்னால் தொடர்ந்து சென்றார்கள். ஆறு குதிரைகளும், முல்லைத் தீவின் தெருக்கள் பலவற்றைக் கடந்து நீண்ட குறுகிய சாலையொன்றில் போய்க் கொண்டிருந்தபோது எதிரில் ஒரு குதிரையில் ஓர் ஆங்கிலேய வீரன் மிக வேகமாக வந்து எட்வர்டின் முன்னால் குதிரையை நிறுத்தினான்.

எட்வர்ட், அந்த வீரனை இறுமாப்புடன் நோக்கி ''என்ன?'' என்றான்.

அந்த வீரன், ஒரு கடிதச் சுருளை எட்வர்டின் கையில் கொடுத்தான். எட்வர்ட், அந்த மடலைப் பரபரப்புடன் படித்துப் பார்த்தான் மனதுக்குள்ளாகவே!

''அன்புள்ள எட்வர்ட்! பண்டாரக வன்னியன், அவனது படை வீரர்கள் ஐம்பது பேருடன் ஓட்டுச் சுட்டான் பகுதியில் நெடுங்காணி சாலையருகே நமது படைகளால் வளைக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டு விட்டான். நண்பா! நீ உடனே பனங்காமம் சென்று அங்கே மிக ஆவேசமாக நம்மை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் குருவிச்சி நாச்சியாரைத் தோற்கடித்தாக வேண்டும் - இங்ஙனம் வான்ட்ரி பெர்க்.''

எனக் கடிதம் பேசிற்று! எட்வர்ட், மனதுக்குள் மகிழ்ந்து கொண்டான்! பனங்காமம் செல்லும் வேலையில்லாமலேயே குருவிச்சியை ஏமாற்றி அழைத்துப் போகிறோமே என்ற எக்களிப்பால் அவன், தன்னைத் தானே புகழ்ந்து கொண்டான். குருவிச்சி எதுவும் நினைத்து விடக் கூடாதே என்பதற்காக அவளைப் பார்த்து புன்னகை புரிந்தவாறு ''நீ முதலில் கேட்டாயே, கூடாரம் எங்கே இருக்கிறது என்று - இந்தக் கடிதத்தில் அந்த விபரம் வந்திருக்கிறது'' என்றான் எட்வர்ட்!.

''எங்கே இருக்கிறது? என்றாள் குருவிச்சி''

''ஓட்டுக்கட்டான் பகுதி நெடுங்கேணிச் சாலையருகில் இருக்கிறதாம்!''

கடிதத்தைச் சுருட்டி, அதைக் கொண்டு வந்த வீரனிடமே எட்வர்ட் வீசி எறிந்தான். அந்த வீரன் அதை லாவகமாகப் பிடித்துக் கொண்டான்.

உயர்ந்த மரங்கள் அடர்ந்த தோப்பு. அந்தத் தோப்புக்குள்ளே ஒரு கூடாரம். கூடாரத்தை யொட்டியுள்ள மரங்கள் ஒவ்வொன்றிலும் முல்லைத்தீவின் வீரன் ஒருவன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான். அப்படி ஐம்பது வீரர்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நடுவே ஒரு பெரிய வலுவான மரத்தில் சங்கிலியால் கட்டுண்டு பண்டாரக வன்னியன்.

அந்தக் கொடுமையான காட்சியைப் பார்த்ததும் குருவிச்சி, தன்னை மறந்து ஓடிப்போய் பண்டாரகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவெனக் கதறிவிட்டாள். அவளது கூந்தலைக் கோதிவிட்டவாறு, பண்டாரகன் அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

''கவலைப்படாதே! இந்தத் தோப்பில் களைப்பாறிக் கொண்டிருந்த எங்களைத் திடீரெனச் சூழ்ந்து கொண்டு வென்று விட்டதாக ஆர்ப்பாட்டம் புரிகிறார்கள்.''

பண்டாரகன் புலியாக உறுமினான்!

''இவர்களுடன் நீங்கள் உடன்பாடு செய்து கொண்டதாகக் கூறி என்னை அழைத்து வந்தார்களே!''

''உடன்பாடா? இலங்கை மண்ணையும் தமிழ் ஈழத்தையும் அந்நியராம் ஆங்கிலேயர்க்கு அடிமையாக்க ஒரு உடன்பாடா?

அதற்கு இந்த உயிர் உள்ளவரையில் என் தலை அசையுமென நீ நம்புகிறாயா?''

குருவிச்சி பேசாமல் நின்றாள். ஏதோ தீர்க்கமாக சிந்தித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாக வான்ட்ரி பெர்க்கையும், எட்வர்ட்டையும் பார்த்துச் சொன்னாள்.

''அவர் அப்படித்தான் பேசுவார் - ஆனால் நான் அவரை என் வழிக்குக் கொண்டு வர முடியும் - உங்களோடு இதுவரை உடன்பாடு செய்து கொள்ளாவிட்டாலும், இனி ஒரு உடன்பாடு செய்துகொள்ள நான் தயார்! இவரும் என் பேச்சைத் தட்டமாட்டார்!''

என்று கூறிக்கொண்டே குருவிச்சி, பண்டாரகனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியபடி, ''என் பேச்சைத் தட்டக்கூடாது! என்ன சரிதானா?'' என்று கேட்டாள். பண்டாரகன் குருவிச்சியின் மனதைப் புரிந்து கொண்டு மௌனமாக நின்றான்.

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி! காலமெல்லாம் ஆங்கிலேயருடன் போரிட்டு நாங்கள் களைத்துப் போய்விட்டோம். எங்களின் பழைய படைக் கருவிகள் அற்புதமானவை! ஆற்றல் வாய்ந்தவை! ஆயினும் உங்களின் நவீன ஆயுதங்கள் முன்னால் அவை நிற்க முடியவில்லை! ஆயுதங்களின்றியே நாங்கள் பல சாகசங்களைச் செய்யக் கூடியவர்கள்! வாளையும், ஈட்டியையும் வைத்துக் கொண்டே இந்த வையகம் விளங்கும் சாதனைகளைச் செய்வோம்!"

என்று குருவிச்சி பேசிக் கொண்டிருக்கும்பொழுதே, வான்ட்ரி பெர்க் குறுக்கிட்டு,

''வாளையும் ஈட்டியையும் வைத்துக் கொண்டு அப்படியென்ன வையம் புகழக்கூடிய சாதனைகளைச் செய்வீர்கள்?''

என்று வியப்புடன் கேட்டான்.

''எங்கள் வீரர்கள் ஐம்பது பேரை இரு பிரிவாகப் பிரித்து இருபுறமும் நிறுத்துவோம். அவர்கள் கைகளில் வாட்கள் இருக்கும். நான் என் தலையின் மீது ஈட்டியால் குத்தப்பட்ட ஒரு பெரிய பழத்தை வைத்துக்கொண்டு நடுவில் நிற்பேன். எங்கள் ஐம்பது வீரர்களும் எதிரும் புதிருமாக வாளுடன் பாய்ந்து யாருக்கும் ஒரு காயமில்லாமல் என் தலையில் ஈட்டி முனையில் உள்ள பழத்தை

ஐம்பது துண்டுகளாக ஒரே வெட்டில் வெட்டுவார்கள். ஒரே ஒரு பழத்துண்டு மட்டும் ஈட்டியுடன் என் தலைமீது எஞ்சியிருக்கும்.''

குருவிச்சி இதைச் சொன்னவுடன், ''அப்படியா?'' என்ற கேள்வியுடன் வான்ட்ரி பெர்க், வீரர்களைப் பார்த்து ''ஏய்! பண்டாரக வன்னியனைத் தவிர மற்றவர்களை அவிழ்த்து விடுங்கள்! அந்த அதிசய சாதனையை அவர்கள் நிகழ்த்தட்டும் பார்க்கலாம்'' என ஆணையிட்டான்.

''பண்டாரகனைத் தவிர'' என்றதும் குருவிச்சிக்குப் பெரும் ஏமாற்றம்தான்! ஆனாலும் சமாளித்துக் கொண்டாள்.

பெரிய பழமொன்றை ஈட்டியில் பொருத்தி, தன் தலை மீது வைத்துக் கொண்டு நடுவில் நின்றாள். பண்டாரகனைத் தவிர கட்டவிழ்த்து விடப்பட்ட முல்லைத் தீவின் வீரர்கள் ஒரு பக்கத்துக்கு இருபத்தைந்து பேராக வாட்களுடன் குதிரைகளில் அமர்ந்திருந்தனர்.

''உம்! பாயலாம்!'' என்று குருவிச்சி தனது கையை ஓங்கித் தட்டியதுதான் தாமதம். அந்த ஐம்பது வீரர்களும் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய வீரர்களுடன் மோதினர். பெரும் அமளிக்கிடையே பண்டாரக வன்னியனின் கட்டுக்கள் களையப்பட்டன. பண்டாரகன், பாயும் புலியாகவே ஒரு குதிரையிலேறி எட்வர்டைக் குத்திச் சாய்த்தான். நூற்றுக்கணக்கான ஆங்கிலேய வீரர்களின் உடல்கள் துண்டு துண்டுகளாகச் சிதறின.

கீழே சாய்ந்த எட்வர்டு, மரண மூச்சு விட்டுக்கொண்டே தனது துப்பாக்கியைத் தூக்கினான். துப்பாக்கிக் குண்டு, குருவிச்சியின் நெற்றிப் பொட்டை நோக்கிப் பாய்ந்தது. அதற்குள் அவளைத் தூக்கிக் கொண்டு போகப் பண்டாரக வன்னியன் குதிரையுடன் அவளிடம் பாய்ந்தான். ஆனால் அதற்குள் துப்பாக்கிக் குண்டுகள் அவள் உயிரைக் குடித்துவிட்டன.

அவள் மூச்சு நின்றுபோனது தெரியாமலே குதிரை மீது அவளை அணைத்தவாறு பண்டாரக வன்னியன், ஆங்கிலேயரிடமிருந்து தப்பிவிட்டான். எஞ்சிய அவனது வீரர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

மணக்கோலம் பூண்டு வாழ்வின் சுவை அறியத் துடித்தவள் - இலட்சியத் திருவிளக்காய் - அணைந்தும் அணையாத தியாகச் சுடர்விளக்காய் - பிணக்கோலம் பூண்டு, பண்டாரகனின் மடியில் படுத்துக் கொண்டு - அவனது இறுக்கமான தழுவலுடன் குதிரையில் வேக வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

அவள் உயிருடனிருப்பதாகவே கருதிக் கொண்டு அவனும், அவனைப் பின்தொடர்ந்த தமிழ் வீரர்களும் காட்டுப் பாதையில் நெடுந்தூரம் சென்று கொண்டிருந்தனர்.

காட்டுப் பாதையில் சென்று அவர்கள் அன்று காட்டிய பாதை வீரமறவர்களின் பாதை! பண்டாரக வன்னியன் ஒருவனல்ல; அவனைப் போல பலர்; உறுதியும் வாய்மை ஒளியும் உணர்வும் கொண்டவர்கள் தோன்றிட - அந்த மாவீரனின் வரலாறு பயன்படத் தவறவில்லை. எனவே அது வாழும் வரலாறு!

அன்புள்ள,

மு.க.

26-11-2009

3436. சிதம்பரம் மீது சீற்றம் ஏன்?

உடன்பிறப்பே,

"நினைப்புதான் பொழப்பைக் கெடுத்து தான்பேராண்டி" என்று கிராமப்புறத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவுக்கு எப்படியோ பொழுது விடிந்தால் ஒரு அறிக்கை விட்டுவிட வேண்டும். இல்லா விட்டால் தலை வெடித்துவிடும். தமிழகத்திலே எந்தக் கிராமத்திலாவது ஏதாவது ஒரு சாலையில் சிறிது பாதிப்பு என்றால் போதும், உடனே அங்கே ஒரு ஆர்ப்பாட்டம் என்று அறிக்கை. அந்த வகையில் தற்போது தமிழகத்தை விட்டு விட்டு, அடுத்த பிரதமர் என்று நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு கண்ட கனவின் காரணமாக நாடாளுமன்றத்திலே நடைபெறும் லிபரான் கமிஷன் அறிக்கை கசிவு பற்றி அறிக்கை விடுத்துள்ளார். எந்த அறிக்கை எழுதினாலும், கடைசியில் அதை முடிக்கும்போது, எனவே மந்திரி பதவியில் இருந்து அவர் விலக வேண்டும், இவர் விலக வேண்டும் அல்லது அவரை விலக்க வேண்டும், இவரை விலக்க வேண்டும் ஆட்சியையே கலைக்க வேண்டும் என்றெல்லாம் எழுதி விடுவார். தற்போது லிபரான் கமிஷன் அறிக்கை கசிவுக்கு முழுப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர், மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் வெளியேற வேண்டுமாம் அல்லது வெளியேற்ற வேண்டுமாம். அப்படி ஜெயலலிதா அறிக்கை விட்டுவிட்டார்.

பழத்தை உரித்தால் சுளையைத்தான் சாப்பிட வேண்டுமே தவிர, அய்யோ, இந்தச் சுளை எப்படி வந்தது, இந்தத் தோலை உரித்ததால் அல்லவா வந்தது, இதைச் சும்மா விடக் கூடாது என்று புலம்புவதைப் போலவும் - திருடிய பொருள் கைப்பற்றப்பட்டது கண்டு திருடன்; "இதை யார் முதலில் கண்டு பிடித்தது?" என்று திருடியவன் திசை திருப்புவது போலவும்; லிபரான் கமிஷன் அறிக்கையிலே கூறப்பட்டதையெல்லாம் விட்டு விட்டு, அது எப்படி கசிந்தது, அதற்கு யார் பொறுப்பு என்ற சர்ச்சையிலே தீவிரமாக இறங்கியுள்ளார்.

லிபரான் கமிஷன் அறிக்கையிலே உள்ள செய்திகளை ஆராயப் புகுந்தால் அம்மையாரும் சிக்கிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் லிபரான் தனது அறிக்கையின் இறுதியில் கூறும்போது, அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் சாதி மதத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களைத் தண்டிக்க தனிச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இது தொடர்பான வழக்குகளை விசாரிக்க நாட்டின் சகல பகுதிகளிலும் பிராந்திய நடுவர் மன்றங்களை அமைக்க வேண்டும் என்றும் சொல்லி யிருக்கிறார்.

பாபர் மசூதி இடிப்பின் போது கரசேவையை ஆதரித்தவர் அப்போது முதல்வர் பதவியிலே இருந்த ஜெயலலிதா. 1992ஆம் ஆண்டு டெல்லி ஜான்சி ராணி மைதானத்தில் சுமார் 5000 சாமியார்கள் கலந்து கொண்ட விசுவ இந்து பரிட்சத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்று; அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பிரச்சினை சம்பந்தமான தீர்மானம் நிறை வேற்றப்பட்டு; அப்போது பிரதமராக இருந்த பி.வி. நரசிம்மராவ் பாபர் மசூதியை அகற்றி இராமர் கோயில் கட்டும் முயற்சிக்கு ஆதரவு தராமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி; டிசம்பர் 6ஆம் நாள் அதற்கான கரசேவையை துவக்குவது என்று முடிவெடுத்தார்கள்.

அறிவிக்கப்பட்ட கரசேவையைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுத்தனர். அது குறித்து நான் கூறும்போது, தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் பதவியைப் பற்றிக் கவலைப்படாமல் எடுத்த நடவடிக்கையைப் போல அன்றைய பிரதமர் நரசிம்மராவ் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும், இல்லாவிட்டால் நாட்டில் ரத்தக் களரியை உருவாக்கிட நடைபெறும் செயலுக்கு வாசல் கதவைத் திறந்துவிட்ட குற்றத்துக்கு மத்திய காங்கிரஸ் ஆட்சி பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று கூறினேன்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டம் கூடி பொருத்தமான நடவடிக்கை எதையும் எடுக்க பிரதமருக்கு அதிகாரம் அளித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் அவர்கள். அந்தக் கூட்டத்தில் பேசிய அன்றைய தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா “டிசம்பர் 6-ந்தேதி பாரதீய

ஜனதா, விஸ்வ இந்து பரிட்சத் மற்றும் சில அமைப்புகள் துவக்கப் போவதாக அறிவித்துள்ள கரசேவை நடைபெறுவதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்" என்று பேசி அது 24-11-1992 தேதிய தினமணி நாளிதழில் வெளிவந்தது. மேலும் அவரது பேச்சில் குறிப்பிட்ட

சில கருத்துகள் வருமாறு :-

"அரசியல் சட்டத்தின்படி பெரும்பான்மையினருக்குக் கிடைக்கும் சாதாரண உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதிக்கும் வகையில் அரசியல் சரித்திர, சமூக அமைப்புகளின் பின்னணியில் தங்கள் நலன்களை முன்னிருத்தி செயல்படுவது சிறுபான்மையினருக்கு ஏற்றது அல்ல. இந்த நாட்டில் பெரும்பான்மை வகுப்பு, இந்துக்கள் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய மதச் சார்பான லட்சியங்களை அரசியல் சட்டத்தின் குறிக்கோள்களுக்கு மாறுபடாத வகையில் அமைதியான வழியில் நிறைவேற்றிக் கொள்ள முயன்றால் அதனை அனுமதிக்க வேண்டும். பெரும்பான்மையினரும், அவர்களுடைய உரிமைகளை சிறுபான்மையினரைப் போல அனுபவிக்க அனுமதிக்க வேண்டும். அயோத்தி பிரச்சினையில் இதனைத் தொடர்புபடுத்தி குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் இந்துக்கள் விரும்பியபடி கட்டுமானப் பணியை நிறை வேற்ற அனுமதிக்க வேண்டும். கரசேவையை அனுமதிக்கும்படி நீதி மன்றங்களை அணுகத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். மிகவும் சுருக்கமாக என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். உத்தரப்பிரதேச அரசு கையகப் படுத்திய இடத்தில் கரசேவை நடைபெறத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அயோத்தியில் கோயில் கட்டப்பட வேண்டும் என்பது இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உள்ளது. பொது மக்கள் கருத்தை இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின் கருத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது."

இவ்வாறு அப்போது கரசேவையை ஆதரித்து ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்திலேயே பேசியவர்தான் ஜெயலலிதா. அதனால்தான் தற்போது லிபரான் கமிஷன் அறிக்கையில்

கசிவு என்றெல்லாம் கூறி, அந்தப் பழியை நண்பர் ப.சிதம்பரம் அவர்கள் மீது போட்டு, அவரை பதவி விலகச் செய்ய வேண்டுமென்றெல்லாம் அறிக்கை விடுகிறார்.

கரசேவையை ஆதரித்து ஜெயலலிதா இவ்வாறு குரல் கொடுத்த நேரத்தில் டிசம்பர் 5ஆம்தேதிய "முரசொலி"யில் "துள்ளி வரும் வேலாக - ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக" என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதையையும் பாருங்கள்!

"கரசேவை என்பது தான் என்ன?
கடவுள் சேவையா? அல்லால்
கலக விதை தூவும் சேவையா? அதற்குக்
கை கொடுத்திட இங்கோர் பாவையா?
திரேதா யுகத்தில் பிறந்தான் இராமன் எனில்
துவாபர யுகம் தொடர்ந்து வந்து; அதுவும் முடிந்து,
இப்போது நடப்பது கலியுகம் என்கின்ற போது
இருபது லட்சம் ஆண்டுகள் அன்றோ கடந்து போயின!
இத்தனை லட்சம் ஆண்டுக்கு முன்னே
இராமன் பிறந்த இடத்தைக் கண்டது
யாரோ? விண்டது எவரோ?
இப்போது இது தான் அந்த இடம் என்று கூறி,
இஸ்லாமிய வரலாற்று சின்னத்தை இடித்தலென்ன நீதி?
அயோத்தி நகரில் இராமனுக்கோர் கோயில்
அட்டியின்றிக் கட்டிக் கொள்ள அனைவரும்
அனுமதிக்கின்றோம்; எனினும் அதற்காக
அகற்றுவோம் பாபர் மசூதியை எனில்
ஒப்பிடமாட்டோம்!"

ஆனால் நடந்தது என்ன? பாபர் மசூதியின் முழுக் கட்டிடமும் மாலை 5 மணிக்குள் இடித்துத் தள்ளப்பட்டது. இந்தியா முழுவதும் அதற்கு கடுமையான எதிர்ப்பு தோன்றியதால் தான் கரசேவையை ஆதரிக்கவே இல்லை யென்று ஜெயலலிதா ஒரு பல்டி அடித்தார். தமிழ் ஈழம் பற்றி அடித்த பல்டி போல; அது வேறு கதை.

அதையெல்லாம் அப்படியே மறந்துவிட்டு அல்லது மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஜெயலலிதா இப்போது மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப. சிதம்பரம் அவர்களை வெளியேற்ற வேண்டும் என்கிறார்.

ஒரு ஆட்சியின் சார்பில் ஒவ்வொரு சம்பவத்தின்போது கமிஷன் நியமிப்பதும், அந்தக் கமிஷன் அதற்கான அறிக்கையினை அரசுக்குத் தாக்கல் செய்வதும் பொதுவான நடைமுறை. அப்படி வெளியிடப்படுவதற்கு முன்பு அந்த அறிக்கைகள் எதிர்க்கட்சியினரால் வெளியிடப்பட்டு விடுவதும் உண்டு.

அதற்கோர் உதாரணம் கூற வேண்டுமேயானால் - 26-11-1980 அன்று திருச்செந்தூர் கோயில் வளாக விடுதியில் அறநிலையத் துறையின் உதவி ஆணையாளராக இருந்த சுப்பிரமணியப் பிள்ளை, அப்போது ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த சில அறங்காவலர்களால் படுகொலை செய்யப்பட்டு அதற்கு தற்கொலை என்று பெயர் சூட்டி மறைத்திடப் பார்த்தபோது, தி.மு. கழகம் போர்க் குரல் கொடுத்தது. இந்தச் சம்பவம் குறித்து முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அரசினால் அமைக்கப்பட்டு விசாரணை நடத்திய நீதிபதி சி.ஜெ.ஆர். பால். அவர் அரசாங்கத்திற்குக் கொடுத்த அறிக்கை தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதால், அரசு அதனை வெளியிடாது இருந்த நேரத்தில், நீதிபதி பால் அவர்களின் அறிக்கையின் நகல் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்குக் கிடைத்ததால், அந்த அறிக்கையின் நகல்களை 24-11-1981 அன்று ஏடுகள் மூலமாக நான் வெளியிட்டேன்.

13-2-1982 அன்று சட்டப் பேரவையில் பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதம் நடை பெற்றபோது, கழகத்தின் சார்பில் பேசிய நான் - நீதிபதி பால் அவர்களின் அறிக்கை எவ்வாறு வெளியானது, அதற்கு யாரைப் பழி வாங்குவது என்பதைப் பற்றியெல்லாம் அரசு நேரத்தைச் செலவிடாமல், அந்த அறிக்கையிலே கூறியிருப்பது என்ன என்பதிலே கவனம் செலுத்த வேண்டும். உண்மையான குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அரசின் சார்பில் அந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் துறை மீண்டும் விசாரித்த பிறகு தான் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்ன போது, தி.மு. கழகம் அவையிலிருந்து வெளி நடப்பு செய்தது. அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். எழுந்து, திருச்செந்தூர் கோவில் அறங்காவலர்கள் தங்களுடைய பதவி விலகல் கடிதங்களை அனுப்பியிருப்பதாக அப்போதுதான்

அவைக்கு தகவலைச் சொன்னார். அதன் பின்னரும் நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தால், 15-2-1982 அன்று மதுரையிலிருந்து நானும் கழகத் தோழர்களும் திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடியப் பயணம் நடத்தினோம் என்பது வரலாறு.

லிபரான் கமிஷன் அறிக்கை கசிந்து விட்டது எனக் கூறி, அதற்குப் பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப் படவேண்டும் என்று முழங்குகின்றாரே ஜெயலலிதா, அப்போது நீதிபதி பால் கமிஷன் அறிக்கை வெளியான போது அப்போது ஆட்சியிலே இருந்த முதலமைச்சரோ அல்லது அமைச்சர்களோ யாராவது அதற்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகினார்களா அல்லது விலக்கப் பட்டார்களா என்பதையும் தெரிவித்திருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும்.

அன்புள்ள,

மு.க.

28-11-2009

3437. வன்முறை தவிர்த்து வரும் தேர்தல்களிலும் வெல்வோம்!

உடன்பிறப்பே,

வரும் டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கும், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்றத் தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான ஆயத்தப் பணிகள் முடிவுற்று, வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள். ஒரு தொகுதி தெற்குப் பகுதியிலும் இன்னொரு தொகுதி வடக்குப் பகுதியிலுமாக நமது கழக முன்னணியினர் பகிர்ந்து கொண்டு பணியிலே ஈடுபடுவதற்கு வசதியாக அமைந்துள்ளது. தலைமைக் கழகத்தின் சார்பில் எந்தெந்த மாவட்டங்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையிலே இந்த இடைத் தேர்தல்களில் பணியாற்ற வேண்டு மென்று முடிவெடுத்து இன்றைய முரசொலியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் தூத்துக்குடி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி என். பெரியசாமி தலைமையிலும், கன்னியாகுமரி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி சுரேஷ் ராஜன் தலைமையிலும், திருநெல்வேலி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி கருப்பசாமி பாண்டியன் தலைமையிலும், இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் தம்பி சுப.தங்கவேலன் தலைமையிலும், சிவகங்கை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி பெரியகருப்பன் தலைமையிலும், விருதுநகர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையிலும், திண்டுக்கல் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி ஐ.பெரியசாமி தலைமையிலும், தேனி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எல்.

மூக்கையா தலைமையிலும், மதுரை புறநகர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி மூர்த்தி தலைமையிலும், மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி தளபதி தலைமையிலும், திருச்சி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி கே.என். நேரு தலைமையிலும், கரூர் மாவட்டக் கழகத்தினர் விரைவில் நியமிக்கப்படவுள்ள பொறுப்பாளர் தலைமையிலும், தஞ்சை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி பழனிமாணிக்கம் தலைமையிலும், நாகை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஏ.கே.எஸ். விஜயன் தலைமையிலும், திருவாரூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி கலைவாணன் தலைமையிலும், புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பெரியண்ணன் அரசு தலைமையிலும் பணியாற்ற வேண்டுமென்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே வந்தவாசி (தனி) சட்டமன்றத் தொகுதியில் திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி. எ.வ. வேலு தலைமையிலும், விழுப்புரம் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி முனைவர் க. பொன்முடி தலைமையிலும், வேலூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி ஆர். காந்தி தலைமையிலும், கடலூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையிலும், கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி செங்குட்டுவன் தலைமையிலும், தருமபுரி தெற்கு மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர், தம்பி முல்லைவேந்தன் தலைமையிலும், தருமபுரி வடக்கு மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி பெரியண்ணன் தலைமையிலும், சேலம் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் தலைமையிலும், நாமக்கல் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி காந்திச்செல்வன் தலைமையிலும், திருப்பூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி வெள்ளக்கோவில் சாமிநாதன் தலைமையிலும், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர்,

மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பா. துரைசாமி தலைமையிலும், அரியலூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி எஸ். சிவசங்கர் தலைமையிலும், திருவள்ளூர் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஈ.ஏ.பி. சிவாஜி தலைமையிலும், காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி தா.மோ. அன்பரசன் தலைமையிலும், தென் சென்னை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஜெ. அன்பழகன் தலைமையிலும், வடசென்னை மாவட்டக் கழகத்தினர், மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி வி.எஸ். பாபு தலைமையிலும் பணியாற்ற வேண்டுமென்று தலைமைக் கழகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் இடைத்தேர்தல் பணியிலே இணைந்து பணியாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இடைத் தேர்தல்களில் தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்கள் இருவரையும் ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர், நண்பர் திரு. தங்கபாலு அவர்களும், மற்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் அறிக்கைகள் வாயிலாகவும், பேட்டிகள் வாயிலாகவும் கேட்டுக் கொண்டிருக் கின்றார்கள். அந்தத் தொகுதிகளிலே உள்ள தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களின் துணையையும் பெற்று அவர்களையும் இணைத்துக் கொண்டு தேர்தல் பணிகளிலே முறையாக ஈடுபட வேண்டும்.

திருச்செந்தூர் தொகுதியிலே நமது கழகத்தின் சார்பில் அனிதா ராதாகிருஷ்ணன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். இவர் அந்தத் தொகுதியில் ஏற்கெனவே அ.தி.மு.க. சார்பில் நின்று வெற்றி பெற்றவர். இவர் நினைத்திருந்தால் இந்தப் பதவியிலே தொடர்ந்து நீடித்திருக்க முடியும். இருந்தாலும் அந்தக் கட்சியின் கொள்கைகள் பிடிக்காமல், அந்தக் கட்சியின் தலைமையின் போக்குப் பிடிக்காமல், அங்கிருந்து விலகி கழகத்திலே இணைந்து முழு அளவில் கழகப் பணிகளை ஆற்றி வருபவர். மற்றொரு கட்சியிலிருந்து பிரிந்து வந்த காரணத்தினால், அந்தக் கட்சியின் சார்பில் தனக்குக்

கிடைத்த அந்தப் பதவியை வைத்துக் கொள்வது முறையல்ல என்பதை ஜனநாயக அடிப்படையில் உணர்ந்து, அந்த பதவியை தானே முன்வந்து ராஜினாமா செய்த காரணத்தினால் இந்த இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தி.மு. கழகத் தலைமையும் அவரது நேர்மையை உணர்ந்து, பதவியில் இருந்து, அதனை துச்சமாக மதித்து வந்தவருக்கு மீண்டும் அந்தப் பதவியை அளிப்பது தான் நியாயம் என்ற அடிப்படையில் அவரையே அந்தத் தொகுதியின் வேட்பாளராக நிறுத்தி வைத்துள்ளது.

அந்தத் தொகுதியில் நிற்க வேண்டுமென்று விரும்பி, கழகத்தின் சார்பில் பதினைந்துக்கு மேற்பட்டவர்கள் கோரிக்கை வைத்த போதிலும், கழகத்தின் தலைமையின் முடிவுக்கு கட்டுப்பட்டு, அனைவரும் ஒற்றுமையோடு இருந்து அனிதா ராதாகிருஷ்ணனின் வெற்றிக்குப் பாடுபடுவோம் என்று என்னிடம் உத்திரவாதம் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். அந்த வெற்றிச் செய்தியினை உறுதி செய்ய வேண்டுமென்று நான் அந்தத் தொகுதியிலே உள்ள வாக்காளப் பெருமக்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே வந்தவாசி (தனி) தொகுதியின் கழக வேட்பாளராக, தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு, ஜெ. கமலக்கண்ணன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். இவருக்குள்ள சிறப்பு, இந்தத் தொகுதியிலே ஏற்கெனவே சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மறைந்த ஜெயராமன் அவர்களின் புதல்வர். தொகுதியிலே எந்த அளவிற்கு அரும்பாடுபட்டு ஜெயராமன் பணியாற்றினார் என்பதை அந்தத் தொகுதி மக்களே நன்கறிவார்கள். இயற்கை இடம் கொடுத்திருந்தால் தொடர்ந்து பதவியிலே நீடித்திருப்பார். அவருடைய இடத்தைப் பூர்த்தி செய்ய, அவரது புதல்வரையே அங்கே நிறுத்தியிருக்கிறோம். நல்ல இளைஞர். அமைதியாகப் பணியாற்றக் கூடியவர். அவரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று அந்தத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

கழகத் தோழர்கள் இந்த இரண்டு தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடும்போது, கழக அரசின் சாதனைப்

பட்டியல்களையெல்லாம் மக்களிடம் எடுத்துக் கூறி, செய்து வரும் பணிகளைத் தொடர்ந்திட, தோழமைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற கழக வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள வேண்டும். நன்முறையில் நம்முடைய சாதனைகளை எடுத்து விளக்குவோம்! வன்முறை தவிர்த்து வரும் தேர்தல்களிலும் வெல்வோம்!

நம்மை எதிர்த்து நிற்பவர்கள், கடந்த முறை இடைத் தேர்தல்களைப் புறக்கணிப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இன்று போட்டியிட முன்வந்துள்ளார்கள். அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியதைப் போல, "செல்வாக்கு சிதைந்து வரும் நிலையில் ஒரு கட்சி, பணம் சேர்த்து புதிய பலம் பெற நினைப்பது ஆசை அடங்காததால் தங்க பஸ்பம் சாப்பிடுவதற்கு ஒப்பானது - முறுக்கு ஏறும் வேகமாக - அதை விட வேகமாக முறுக்கு தளர்ந்து விடும் - முறிந்தே கூடப் போய் விடும்" என்பதற்கேற்ப, இந்த இடைத் தேர்தல்களில் அவர்களுக்குப் பாடம் கற்பித்தாக வேண்டும்.

உடன்பிறப்பே, நாம் மேற்கொண்டுள்ள இலட்சியம் மகத்தானது. அதனை எடுத்து விளக்கவும், அதற்கு வலிவு தேடவும், அது வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு வளரவும், இந்த இடைத்தேர்தல்கள் பயன்பட வேண்டும் என்பதிலேதான் நமக்கு மிகுந்த அக்கறை இருத்தல் வேண்டும். எந்தெந்த மாவட்டங்கள் எந்தெந்த தொகுதியிலே பணிபுரிய வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்து விட்டது. இனி உன் கடமை உதயசூரியன் வெற்றிக்காகப் பாடுபடுவதுதான். அண்ணா எழுதிய சில வரிகளையே மீண்டும் எழுதி இந்த மடலை முடிக்க விரும்புகின்றேன்.

உறங்கும் உலகை எழுப்பி விடும் உதயசூரியன்!
உலகு தழைக்க ஒளி தருவது உதயசூரியன்!
உழைப்பவர்க்கு உரிய சின்னம் உதயசூரியன்!
உமது வாழ்வு மலரச் செய்வது உதயசூரியன்!
இருளகற்றி எழில் அளிக்கும் உதயசூரியன்!
இன அரசு விரும்புவோர்க்கு உதயசூரியன்!
திருவிடத்தின் விடுதலைக்காம் உதயசூரியன்!
தி.மு.கழக தேர்தல் சின்னம் உதயசூரியன்!

ஓட்டுப் போட ஏற்ற சின்னம் உதயசூரியன்!
நாட்டினரே போற்றிடுவீர் உதயசூரியன்!
உயிர்களுக்கெல்லாம் உற்ற தோழன் உதயசூரியன்!
அரும்பை மலரச் செய்பவனும் உதயசூரியன்!
அனைத்துக்கும் ஒளி ஊட்டுபவன் உதயசூரியன்!
அகிலம் ஆளும் வலிமை பெற்றோன் உதயசூரியன்!
பொங்கிவிடும் வளத்தைத் தந்திடுபவனும் உதயசூரியன்!

இதனை நாடு அறிந்து, நல்லோர் எல்லாம் நம்மவராகி நாட்டின் நலிவு போக்கிடும் பணியில், நமக்கு ஆதரவு மிகவும் தந்திடச் செய்திடல், உன் கடன் அறிவாய் உடன்பிறப்பே! மற்றவை தொடர்ந்து தெரிவித்திடுவேன், மரபு காத்திடும் உடன்பிறந்தோனே!

அன்புள்ள,

மு.க.

30-11-2009

3438. ஊனமுற்றோரின் ஊன்றுகோலாகக் கழக அரசு!

உடன்பிறப்பே,

இன்று உலக உடல் ஊனமுற்றோர் தினம். ஊனமுற்றோர் தன்னம்பிக்கை பெற்று பொருளாதார நிலையில் கவலை தவிர்த்து நிற்கும் நிலையை அடையச் செய்ய சிறப்புக் கல்வி அளித்தல், வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளித்தல், பணியிலே அமர்த்துதல், சுயவேலை வாய்ப்புக்கு உதவி அளித்தல், உதவி உபகரணங்களை இலவசமாக வழங்குதல் ஆகியவை அடங்கிய விரிவான மறுவாழ்வு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு கழக அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதை அனைவரும் அறிவார்கள். ஊனமுற்றோருக்கு உதவிட வேண்டும் என்பதில் கழக அரசைப் பொறுத்தவரையில் வேறு யாருக்கும் குறைந்ததல்ல என்பதை ஊனமுற்றவர்களே நன்கறிவார்கள். ஊனமுற்றவர்களுக்கு உண்மையாக உதவிட வேண்டுமே தவிர, வெறும் அறிக்கைகளாலே மட்டும் அவர்களுக்கு இது செய்தேன், அது செய்தேன் என்று எழுதிவிட்டால் மாத்திரம் அவர்களுக்கு நன்மைகள் விளைந்திட முடியாது.

இந்த நாளையொட்டி ஊனமுற்றோரின் வாழ்க்கை மேம்பட கழக அரசில் என்னென்ன நலத்திட்டங்கள் தீட்டப்பட்டன என்பதை சுருக்கமாக எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

2006-2007 ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 39 கோடி ரூபாயாகும். 2007-2008 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு 78 கோடி ரூபாய் என்ற அளவிற்கு கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில் இந்தத் துறைக்கான ஒதுக்கீடு 107 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது என்றால், ஊனமுற்றோர்மீது கழக அரசுக்கு உள்ள உண்மையான அக்கறையைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக முன்மாதிரி திட்டமாக "தசை சிதைவு" நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதந்தோறும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தில் ஆண்டொன்றிற்கு 1000 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

கடும் ஊனமுற்றோருக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ரூ. 500/- வழங்கும் திட்டத்தில் தற்போது 10,000 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத 60 சதவிகிதம் மற்றும் அதற்கும் மேல் மனவளர்ச்சி குன்றியோருக்கு வயது, வருமானம் மற்றும் எண்ணிக்கை உச்சவரம்பின்றி மாதம் ஒன்றிற்கு ரூ.500/- வீதம் மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக 50,600 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

2007-2008ஆம் நிதியாண்டில் 20,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித் தொகை, கடந்த ஆண்டில் மேலும் 30,600 மனவளர்ச்சி குன்றியோர் கூடுதலாக சேர்க்கப்பட்டு, மொத்தம் 50,600 நபர்கள் பயன்பெறும் வகையில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று திட்டங்களில் 61,600 நபர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 38.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தி.மு. கழக ஆட்சி, ஊனமுற்றோரிடம் அக்கறை கொண்ட ஆட்சி என்பதால்தான், ஊனமுற்றோருக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அரசாணை (நிலை) எண்.59, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 24-4-2007-ல் தமிழ்நாடு ஊனமுற்றோர் நலவாரியம் அமைத்து ஆணை யிடப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் நல வாரியம் மூலம் செயல்படும் திட்டங்களுக்கு ஆண்டு தோறும் 100 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து இதுவரை 3471 நபர்கள் பயனடையும் வகையில் மொத்தம் ரூ.2.00 கோடி செலவிடப்பட்டுள்ளது.

450 பேருக்கு கல்வி உதவித் தொகையும் - 115 பேருக்கு திருமண உதவித் தொகையும் - 17 பேருக்கு மகப்பேறு உதவித் தொகையும் - 57 பேருக்கு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கான உதவித் தொகையும் - 180 பேருக்கு ஈமச் சடங்கிற்கான உதவித் தொகையும் - 2 பேருக்கு விபத்திற்கான நிவாரணத்

தொகையும் - 100 பேருக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகளும் - 150 பேருக்கு பொது இடங்களில் வியாபாரம் செய்வதற்கான பெட்டிக் கடைகள் வைக்க உதவித் தொகையும் - 2250 பேருக்கு கையுறை மற்றும் முட்டிப் பட்டை வழங்கும் திட்டமும் - 150 பேருக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகையுமாக மொத்தம் 3,471 பேருக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அளவிற்கு இந்த வாரியத்தின் சார்பில் உதவிகள் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் ஒதுக்கிய நிதிக்கு மேலாகவே தொகை செலவிடப்பட்டிருக்கும்போது, அதனை மூடி மறைக்கும் வகையில் போதுமான நிதி ஒதுக்க வில்லை என்றும், வாரியம் என்ற பெயரில் ஊனமுற்ற மக்களை ஏமாற்றுகின்ற வேலை என்றும் ஒரு சிலர் அறிக்கை விட்டிருப்பது எத்தகைய மௌடீக அரசியல் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்ளவே செய்வார்கள்.

ஊனமுற்றவர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை திட்டத்தின்கீழ், 2006-

2007-ம் நிதியாண்டில் 19,982 பேர்களுக்கும்,

2007-2008-ம் நிதியாண்டில் 20,818 பேர்களுக்கும்,

2008-2009-ம் நிதியாண்டில் 31,243 பேர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மூன்றாண்டுகளில் இந்த திட்டத்திற்கு அரசு செலவிட்ட தொகை ரூ. 28.35 கோடிகளாகும்.

ஊனமுற்றோருக்கென வழங்கப்படும் திருமண உதவித்தொகை திட்டத்தின்கீழ், திருமண செலவிற்கென ரூ.10,000/-மும்; அத்துடன் அவர்களின் வருங்கால தேவையை கருத்தில் கொண்டு தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.20,000/- வழங்கப்படுகிறது. தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படும் ரூ.10,000/- ஏழரை ஆண்டுகளுக்கு பின் இருமடங்காக (ரூ.20,000/-) கிடைக்கப்பெறும். இதன்மூலம் ஊனமுற்றோருக்கு அதிக பலன் கிடைக்கும் என்பதால் இம்முறை பின்பற்றப்படுகிறது.

ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் (scooters) இலவசமாக வழங்கும் திட்டம் 2007-2008ஆம் ஆண்டு முதல் கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 மற்றும்

2008-2009 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 120 ஊனமுற்ற மாணவர்களுக்கு இலவசமாகவும், பணிக்குச் செல்லும் 580 ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.10,000/- வீதம் மானியமாகவும் வழங்கப்பட்டு, இதற்கென ஒரு கோடி ரூபாய்ச் செலவு செய்யப்பட்டது. மேலும் தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்தின் மூலம் இந்த ஆண்டு 100 ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் (scooters) வழங்க ரூ. 34.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் சங்கங்களின் பிரதிநிதிகளை 19-08-2007 அன்று நானே நேரில் சந்தித்து, பின்வரும் மறுவாழ்வு உதவிகளை உடனடியாக அறிவித்தேன்:-

300 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பார்வையற்றோரைக் கொண்டு சிறப்பு நேர்வாக நிரப்பப்படும் என்று அறிவித்து, அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பிற்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்த உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஊனமுற்ற நபர்களுக்கு அரசு பேருந்துகளில் 75 சதவீத கட்டண சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

பாரத பிரதமர் வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய

5 சதவீத விளிம்புத்தொகையினை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

உயர்கல்வி பெறும் ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்குக் கல்வி கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரண தொகையைப் போலவே இதர வகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரண தொகை வழங்கப்படுகிறது.

ஊனமுற்றோருக்கென மாநில கொள்கை ஏடு வெளியிடப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக இவ்வாண்டு (2009-10) மானியக் கோரிக்கையில் பின்வரும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

ஊனமுற்றோருக்கு இலவசமாக மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோருக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையினை 20,000 லிருந்து 50,600 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

1 - 8 ஆம் வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை பெறுவதற்கும், ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மானியம் வழங்கவும், கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித்தொகை பெறவும் ஊனமுற்றோர் உதவி உபகரணங்கள் பெறவும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட வருமான உச்ச வரம்பு ரூ.12,000/- என்பதை ரூ.24,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

செவித்திறன் குறையுடைய 6000 நபர்களுக்கு காதொலி கருவி மற்றும் சூரிய ஒளியினால் சக்தி பெறும் பேட்டரிகள் வழங்க ஒரு சில நாட்களில் ஆணை வெளியிடப்பட உள்ளது.

பார்வையற்ற நபர்களுக்கு 77 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோரை ஊனமுற்றோரே திருமணம் செய்து கொண்டால் இருபதாயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே தி.மு. கழக அரசு ஊனமுற்றோருக்கு யாருடைய பரிந்துரையையும் எதிர்பார்க்காமலே இத்தகைய நன்மைகளையும், சலுகைகளையும் ஆற்றி வருகின்றது. இன்று உலக உடல் ஊனமுற்றோர் தினம் என்ற வகையில் அதனைப் பயன்படுத்திக் கொண்டு இந்த விவரங்களையெல்லாம் தெரிவிப்பதில் மகிழ்ச்சிகொள்கிறேன். ஊனமுற்றவர்களுக்கு மேலும் எந்த வகையில் எல்லாம் உதவிட முடியுமோ அந்த அளவிற்கு கழக அரசு தொடர்ந்து உதவிகளை செய்யும் என்று இந்த நாளில் உறுதி கூறுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

4-12-2009

3439. குளிர் தருவென; தரு நிழலெனக் கோவையில் மாநாடு!

உடன்பிறப்பே,

ஜூன் திங்கள் இறுதியில்; 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரையில் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு தொடங்கப் படவுள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் முறைப்படி நடைபெற்று வருகின்றன. இடையில் ஆறு மாதங்கள்தான் உள்ளன. இடைத்தேர்தல்கள் பணி, சட்ட மன்றக் கூட்டத் தொடர், தலைமைச் செயலகக் கட்டிடத் திறப்பு, அண்ணா நூற்றாண்டு நிறைவு நூலகம் என்று இவைகளில் நம் கவனத்தைச் செலுத்தினால், மாநாடு விரைவில் வந்து விடும். உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினை எல்லா வகையிலும் சிறப்புடையதாக நடத்திக் காட்டுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுள்ளோம் நாம்.

இன்றைய கடிதத்தைத் தொடங்குவதற்கு முன்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் துவக்க விழாவில் பேசியதை நினைவூட்ட விரும்புகிறேன்.

“நாளைய தினத்திலிருந்து உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தமிழ் பற்றி உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சி நடத்தவிருக்கிறார்கள். மிகுந்த பண்பாளரும் சமநிலை நோக்குள்ளவரும், வித்தகரும், கல்வித் துறையில் புதுமை கண்டவருமான குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்கள் இந்த மாநாட்டைத் துவக்கி வைக்க வந்துள்ளார்கள். நமது குடியரசுத் தலைவர்களாக தொடர்ந்து கற்றறிவாளர்கள் - கலாச்சாரத் துறையில் தொடர்பு கொண்டவர்கள் இருக்கிறார்கள். கற்றறிந்த மேதையான டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலில் குடியரசுத் தலைவராக இருந்தார்.

அவரைப் போன்ற கல்விமானான ஜாகீர் உசேன் இப்போது குடியரசுத் தலைவராகியிருக்கிறார். அத்தகையவர் உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்குவது நமக்குப் பெருமை தரத்தக்கது.

உலகத் தமிழ் மாநாடு முதலில் மலேசிய நாட்டில் நடைபெற்றது. இப்போது சென்னைத் திருநகரில் நடைபெறுகிறது. இங்கு பேசிய காமராஜர் முதல் மாநாட்டையே நாம் நடத்தியிருக்க வேண்டும்; ஆனால் என்ன காரணத்தாலேயோ அவர்கள் முந்திக் கொண்டார்கள் என்றார். எப்போதுமே அண்ணன் கொஞ்சம் சோர்ந்திருந்தாலும், தம்பி மிக அக்கறையாயிருந்து காரியமாற்றுவான், அது போல முதல் மாநாட்டை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த மாநாடு அதன் தொடர்ச்சியே தவிர புதிது அல்ல.

அந்த மாநாட்டிற்கு 20 நாட்டுப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இப்போது ரஷ்யா போன்ற 30 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். இந்த நாடுகளுக்கெல்லாம் தமிழ் மொழி அறிமுகமாகியிருக்கிறது. ஆனால் இந்தியாவுக்குள் அது சரிவர அறிமுகமாகவில்லை.

தமிழ் மொழியின் அருமையை ரஷ்ய நாட்டினரும் - செக்கோஸ்லாவிய நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே அது சரிவர உணரப்படவில்லை. இங்கிலாந்து பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராயப்படுகிறது என்று அறியும் நேரத்தில் அத்தகையத் தமிழுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்கிற போது நமது நினைவு எங்கோ செல்கிறது. ஆனால் நாம் இன்றுள்ள நிலையை நினைக்கும் போது இன்றிருக்கும் நிலைக்கு நமது நினைவு வருகிறது. "எங்கோ நம் நினைவு செல்கிறது" என்று கூறினேனே, அந்தத் திருவிடத்திற்கு நாம் நிச்சயம் செல்வோம். எப்போது தமிழர்கள் தமது தமிழ்ப் பண்பாட்டை உணர்ந்து தமது வரலாற்றை உணர்ந்து தமது ஆற்றலை உணர்ந்து ஒன்றுபட்டுப் பணியாற்றுகிறார்களோ அப்போது நிச்சயம் அந்த இடத்தை அடையலாம்.

தமிழர்களாகிய நாங்கள் எந்த மொழியையும் மதிக்கிறோம்! உலகின் எந்தக் கோடியில் அறிவு இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்கிறோம்! உலகில் எந்தக் கோடியில் இருந்து வருபவர்களானாலும், அவர்களின் அறிவை நாங்கள் மதிக்கிறோம்!

ஆனால் தமிழர்கள் தமக்கு என்று இருப்பதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். "அவர்களிடம் உள்ளது அருமையானது" என்று அகில உலகில் உள்ளவர்களும் கூற இங்கு வந்து இருக்கிறார்கள்; அப்படி அவர்கள் சொல்லும்போது "தமிழர்கள் அதன் மேல் பற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று எவரும் கருத முடியாது!

''எவ்வளவு அருமையான மொழி உங்களிடமிருக்கும் தமிழ் மொழி" என்று நார்வே நாட்டவரும், இங்கிலாந்து நாட்டவரும், அமெரிக்கரும், ஆஸ்திரேலியரும் இங்கு வந்து கூறும்போது, "அந்த மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம்" என்பதை எண்ணி மகிழ்கிறோம்!

அந்த மொழிக்கு எந்தக் கட்டத்திலானாலும், எந்த நோக்கத்திலானாலும், எப்படிப்பட்ட வரானாலும், தகுந்த மரியாதை தர மறுத்தால், அதைத் தமிழினம் பொறுத்துக் கொள்ளாது! ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தால் அதை நாவாய் மூலம் கடக்கலாம். அதைப் போலத் தமிழர்களை அணைத்துச் சென்றால் அவர்கள் எல்லோர்க்கும் தோழர்களாக இருப்பார்கள்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்றும் பாடியுள்ளார்கள்; தீதாக இருந்தாலும், நல்லதாக இருந்தாலும் அது நாமாகத் தேடிக் கொள்வதே ஒழிய பிறர் தருவது அல்ல! எந்தத் தீதும் நாம் வேண்டாம் என்றால் வராது! இந்த நன்னெறி ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழருக்குக் காட்டப்பட்டுள்ளது!

1967 ஆம் ஆண்டில் எல்லா நாடுகளையும் ஒன்றுபடச் செய்ய ஐ.நா. மன்றத்தில் பல நாட்டுக் கொடிகளையும் ஒரு சேர பறக்க விட்டு ஒற்றுமை பேசப்பட்டாலும், பேசி விட்டு வெளியே வந்ததும், "எந்த நாடு எந்த நாட்டின் மீது எப்போது படையெடுக்குமோ?" என்ற அச்சம் ஏற்படுகிறது.

ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று எடுத்துச் சொன்ன தமிழன் எவ்வளவு சிறந்த பண்பினைப் பெற்றிருந்தான் என்பதை எண்ணும்போது நெஞ்சம் விம்முகிறது! யாதும் ஊரே - யாவரும் கேளிர் என்று பாடிய புலவர், தீதும் நன்றும் பிறர் தர வாரா என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார். நல்லது வர வேண்டுமா? அது நாம்தான் செய்து கொள்ள வேண்டும். கெட்டது வரவேண்டுமா, நாம்தான்

வரவழைத்துக் கொள்ள வேண்டும். எனவே தீது வருமோ என்று அய்யப்பாடு கொள்ள வேண்டாம். அது நாமாகத் தேடிக் கொண்டால் தான் வரும். பிறர் தருவதல்ல, தீதும் நன்றும்!

தமிழ் மொழி பற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இந்த மாநாட்டுக் கருத்தரங்கு மூலம் அந்தத் தமிழ் மொழியின் சிறப்புக்களைப் பலரும் அறியச் செய்து, அதன் வளத்தையும் சிறப்பையும் கண்டு மற்றவர்களும் "இதுவல்லவோ சிறந்த மொழி, இதுவல்லவோ நமது மொழி, இதுவல்லவோ இணைப்பு மொழி, இதுவல்லவோ ஆட்சி மொழி" என்று தமிழ் மொழியை விரும்பி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் காலம் வரும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

இது அவசரத்தால், ஆத்திரத்தால் ஏற்படாது! தூண்டிலைப் போட்ட பின் மீன் கொத்தும் வரை காத்து இருப்பது போல், இந்தக் காலக் கட்டம் வரும் வரை நாம் காத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்!தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள படி காலமும் இடம் பொருளும் அறிந்து செயல்பட வேண்டும்!

நமது தமிழ் உரிய ஏற்றத்தைப் பெறும் சிறப்பை நாம் பெற்றது போலவே, இந்திய மக்களும் பெற்று அதை அரியாசனத்தில் அமர்த்தும் நன்னாளைப் பெறும் உறுதி கொள்வோம்! அதற்கான கருத்துக்களைத் தர இங்கு வந்த அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர் களையும் வாழ்த்தி வரவேற்போம்!"

★★

இந்த வெண்கலக் குரல் ஒலிக்க; பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை கடற்கரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுத் தலைமை உரையில் தன் சங்க நாதத்தை முடித்தவுடன், அங்கே திரண்டிருந்த மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் உள்ளங்கள் எல்லாம் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றன.

அண்ணா அவர்களின் இந்தத் துவக்க விழா உரையினை நெஞ்சிலே ஏந்தி, தற்போது கோவையில் நாம் நடத்தவுள்ள மாநாடு மற்றும் கருத்தரங்குகள் நடைபெறுவதற்கான இடங்களை நானே நேரில் சென்று பார்த்து மன நிறைவுடன் திரும்பியிருக்கிறேன். மாநாடு நடைபெறுவதற்கும், கருத்தரங்குகள் தனித் தனியாக நடத்தப் பெறுவதற்கும், பேரணி நடைபெறுவதற்கும் பொருத்தமான இடங்களாக அமையப் பெற்றுள்ளன. குறிப்பாக

மாநாடு நடைபெறவுள்ள கோவை "கொடிசியா" அரங்கு மிகப் பிரமாண்டமாக உள்ளது. உலக நாடுகளிலிருந்தும், இந்தியாவின் வெளி மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் குவியவிருக்கின்ற விருந்தினர்களை தங்க வைப்பதற்கான முயற்சிகளிலே மாவட்ட ஆட்சியர் தலைமையிலே அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி ஆய்வரங்கப் பணிகளை மேற்கொள்ள பேராசிரியர் முனைவர் கா.சிவத்தம்பி அவர்கள் தலைமையில், முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் பொற்கோ எனப்படும் பொன். கோதண்டராமன் ஆகியோரை இணைத் தலைவர்களாகவும், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழியை செயலாள ராகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ம.இராஜேந்திரனை ஒருங்கிணைப்பாளராகவும் கொண்டு ஆய்வரங்க அமைப்புக்குழு உருவாக்க ஆணையிடப்பட்டு விட்டது.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி எனும் தமிழறிஞர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் புலத்தின் தலைவர். அவரது தலைமையில் இந்தக் குழு சிறப்பாகச் செயல்பட்டு, உலகத் தமிழ் அறிஞர்கள் எல்லாம் முன்கூட்டியே வருகை தந்து இந்த மாநாட்டினை சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று தமிழகச் சட்டமன்றத்திலே இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் நானே கடிதம் எழுதியதும், அதற்கு அந்தக் கட்சித் தலைவர்கள் வருவதற்கு ஒப்புக்கொண்டும், ஒரு சிலர் ஒப்புக்கொள்ள மறுத்தும் எழுதிய கடிதங்கள் எல்லாம் ஏடுகளிலே ஏற்கெனவே வந்துள்ளன.

1995ஆம் ஆண்டிற்குப் பிறகு கடந்த பதினான்கு ஆண்டுகளாக உலகின் எந்தப் பகுதியிலும் தமிழுக்கென்று ஒரு மாநாடு நடத்தப் பெறவில்லையே என்ற ஏக்கம் இந்த மாநாட்டின் மூலமாகத் தீர்க்கப்படவுள்ளது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கென சிறப்பானதோர் இலச்சினை (லோகோ) உருவாக்கப்பட்டு, அது வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் அறிஞர் பெருமக்கள் எல்லாம் இலச்சினை அழகாகவும்,

அர்த்தம் பொதிந்துள்ளதாகவும் அமைந்துள்ளதாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

இலச்சினையின் பிரதான உருவமாக அய்யன் வள்ளுவரின் சிலை இடம் பெற்றிருப்பதைப் போலவே - இந்த மாநாட்டின் எடுத்துரைக்குறிப்பாக (மோட்டோவாக) "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அய்யன் வள்ளுவரின் வாசகங்களே தெரிவு செய்யப்பட்டு, அதுவும் இலச்சினையிலே இடம் பெற்றுள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி இசைவு தெரிவித்து, அதற்குள்ளாகவே 47 அறிஞர்களிடமிருந்து நமக்குக் கடிதம் வந்துள்ளது. அவர்களில் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னிய பல்கலைக் கழகத்திலிருந்து ஜார்ஜ் ஹார்ட், இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆஷர், ரஷ்ய நாட்டிலிருந்து அலெக்சாண்டர் ருதுவியாஸ்கி, செக்கோஸ்லேவியா நாட்டிலிருந்து வாச்செக், ஜெர்மனியிலிருந்து தாமஸ் மால்டன், அமெரிக்காவிலிருந்து அரங்கவாசு, ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து சு. சிறீகந்தராசா, சிங்கப்பூர் நாட்டிலிருந்து தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் ஆண்டியப்பன் என்று பட்டியல் நீண்டதாக உள்ளது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்து பல கடிதங்கள் வந்திருந்த போதிலும், ஒன்றிரண்டை இந்தக் கடிதத்திலே இடம் பெறச் செய்யலாமெனக் கருதுகிறேன். ஆஸ்திரேலிய தமிழ் ஆய்வு மன்றத்தின் பொதுச் செயலாளர், சு. சிறீகந்த ராசா அவர்கள் தம்பி சுப. வீரபாண்டியன் மூலமாக எனக்கு எழுதிய கடிதத்தில்,

"தங்கள் பேச்சுக்களைக் கேட்டுத் தமிழ் மீது பற்று வைத்ததுடன், தங்கள் எழுத்துக்களைப் படித்துத் தமிழ் மொழியை எழுதப் பழகிய இலட்சோப இலட்சம் தமிழ் மக்களில் ஆயிரக் கணக்கானவர்கள் வாழ்கின்ற ஆஸ்திரேலியா கண்டத்தில் இருந்து இக்கடிதத்தினை தங்களுக்கு அன்புடனும் பணிவுடனும் அனுப்புகின்றோம். தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும், தமிழாகவே வாழ்கின்ற தாங்கள் அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ள செம்மொழி மாநாடு பற்றிய செய்திகளை அறிந்தோம், மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இந்த நாட்டில் வாழ்கின்ற எம்மைப் போன்றவர்களும், மேலும் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களும் இணைந்து ஆஸ்திரேலிய தமிழ் ஆய்வு மன்றம் என்கின்ற அமைப்பை நடத்தி வருகின்றோம். தமிழ்

அறிஞர்கள், ஆர்வலர்கள், பல்துறைப் பேராசிரியர்கள் ஆகிய பலர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தாங்கள் நடத்தவுள்ள செம்மொழி மாநாட்டில் பேச்சாளர்களாக வருவதற்கும், ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பார்வையாளர்களாகக் கலந்து கொள்வதற்கும் எங்களில் சிலர் ஆர்வமாக இருக்கின்றோம். எனவே அத்தகைய வாய்ப்புகளை எமக்கு அளிக்குமாறு அன்புடனும் பணிவுடனும் வேண்டி நிற்கின்றோம்."

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் நா.ஆண்டியப்பன்

26-10-2009 அன்று எழுதிய கடிதத்தில்,

"கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறும் எனும் அறிவிப்பினை வரவேற்று 19-10-2009இல் நடைபெற்ற எங்கள் செயலவைக் கூட்டத்தில் தங்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு சிங்கப்பூர் பேராளராகவும், தொடர்பாளராகவும் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தை நியமிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இங்கிருந்து பேராளர் களைத் திரட்டி வந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கும், மாநாட்டுப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் அது உதவியாக இருக்கும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் – இதை மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவினர் கவனிப்பார்கள் என்று நம்புகின்றேன். நானுந்தான்!

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய மாநாட்டினை உலகத் தமிழ்த் தகவல் தொழில் நுட்ப மன்றத்துடன் இணைந்து நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் "தமிழ்நெட் 1999" என்ற தலைப்பில் உலகத் தமிழ் இணைய கருத்தரங்க மாநாட்டினை 1999ஆம் ஆண்டு பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் தம்பி முரசொலி மாறன் முயற்சியோடு சென்னையில் நடைபெற்றதற்குப் பிறகு மீண்டும் ஒரு வாய்ப்பு இந்த மாநாட்டினை யொட்டி ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நடைபெறும் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் ஆகியவற்றில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழ்த் தகவல் தொழில் நுட்பத்துறை வல்லுநர்களும் கணினித் தமிழ் அறிஞர்களும் பங்கு பெறுவார்கள்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஆயத்தப் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்தவும், அவற்றைக் கண்காணிக்கவும், பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கவும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டமும் நடைபெற்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக மாநாட்டுப் பணிகளையெல்லாம் ஒருங்கிணைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாநாட்டின் நீங்காத நினைவாக கோவை மாநகரத்தின் மையப் பகுதியில் உலகத் தரம் வாய்ந்த, பிரம்மாண்டமான ஒரு தாவரவியல் பூங்கா ஒன்றினை அமைக்கவும் முடிவுசெய்து, அங்கே தாவரங்கள், பூச்செடிகள், செடிகொடிகள் மற்றும் மரங்கள் போன்ற வற்றைக் கொண்டு அழகுபடுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டினையொட்டி இன்னும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இன்றைய தினம் மேலும் மூன்று குழுக்களுக்கான அறிவிப்புகள் ஏடுகளிலே வெளிவந்துள்ளன. அதுபற்றியெல்லாம் தொடர்ந்து அவ்வப்போது எழுதுகின்றேன். எல்லா வகையிலும் ஒல்காப் புகழ்கொண்டு விளங்கிட இருக்கும் கோவை மாநாடு; உலகத் தமிழ் ஆர்வலர், அறிஞர் அனைவர்க்கும் குளிர் தருவென தரு நிழலென அமையப் போகிறது என்பது மட்டும் உறுதி!

அன்புள்ள,

மு.க.

5-12-2009

3440. "காஞ்சி" வழியில் "கோவை" மாநாடு!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதிவரை நடைபெறவிருக்கின்ற நேரத்தில்; "காஞ்சித் தலைவன்" பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து 1968ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை யொட்டிய நிகழ்ச்சிகளை ஒரு முறை நினைவு கூர்ந்திட விரும்புகின்றேன்.

மாநாட்டின் தொடக்கமாக, 1-1-1968 அன்று மாலையில் - யாருடைய உழைப்பு நமது வாழ்வின் வளைவுகளை எல்லாம் நிமிர்த்த நித்தம் நித்தம் பயன்பட்டதோ அந்த உழைப்பாளரின் சிலை திறப்பு விழா - யார் இந்தத் தமிழ் மண்ணிலே சொர்க்கத்தை நடமாடவிட தனது வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்தாரோ அந்தத் தலைவனின் சிலை திறப்பு விழா - யாருடைய பேச்சு, எழுத்து நம் உதிரத்திலே சேர்ந்து - நமக்குத் தமிழுணர்ச்சியை ஏற்படுத்தியதோ, அந்தத் தகைமைச் சான்றோனுக்கு சிலை எடுப்பு விழா - யாருடைய பெயரை அந்தச் சாலைக்கே பின்னர் நான் சூட்டி மகிழ்ந்தேனோ, அந்த அண்ணா சாலையில் (அப்போது அந்தச் சாலைக்குப் பெயர் மவுண்ட்ரோடு) அந்த அண்ணாவின் சிலை திறப்பு விழா நடைபெற்றது. அந்தச் சிலையை அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தனது சொந்தச் செலவில் வாங்கி வழங்கினார். டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள்தான் அந்தச் சிலையினை திறந்து வைத்தார். கல்வி அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் வரவேற்புரையாற்றிட, பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நான் அரசின் சார்பில் அந்தச் சிலையை ஏற்றுக் கொண்டு நன்றியுரை ஆற்றினேன். விழா மேடையில், அறிஞர் அண்ணாவின் சிலையை உருவாக்கிய சிற்பி எஸ்.பி. பிள்ளைக்கு மாலை அணிவித்து நான் மரியாதை செய்தேன்.

அதே சிலை திறப்பு நாளன்று சிலம்புச் செல்வர் அவர்கள் எழுதிய "அவ்வையார்" நூலினை நான் வெளியிட்டுப் பேசும்போது பயிற்று மொழி பற்றிப் பேசியது தற்போதும் நினைவிலே கொள்ளத்தக்கது. பொதுப்பணித் துறை அமைச்சராக அந்த விழாவிலே கலந்து கொண்ட நான் பயிற்று மொழி பற்றி பேசிய விவரங்கள் வருமாறு :-

"தமிழ்நாட்டுக்கு தமிழா - ஆங்கிலமா என்பது முடிவெடுக்கப்பட்டுவிட்ட பிரச்சினையாகும். தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக - பயிற்று மொழியாகத் தமிழ்தான் இருக்க வேண்டும் என்பது தமிழக அரசின் குறிக்கோள். இதில் சிறு துளியும் மாற்றமில்லை. தொடர்பு மொழி என்கிற போதுதான் இந்தியா, ஆங்கிலமா என்ற பிரச்சினை எழுகிறது. தமிழக அரசு ஆங்கில மோகம் கொண்ட அரசல்ல என்பதையும், தமிழே அதன் குறிக்கோள் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். வளையாபதியும், குண்டலகேசியும், சிலம்பும் குறளும் செந்தமிழ் பாடி வாழ்க வாழ்கவென வாழத்துரைக்க அதன் கீழே சீரோடும் சிறப்போடும் நடைபெற வேண்டு மென்றுதான் அண்ணாவின் அரசு துடித்து நிற்கிறது. தொடர்பு மொழியில்தான் தகராறு. காஷ்மீர் வரை பஞ்சாப் வரை டெல்லி வரை எது தொடர்பு மொழி என்றால் இந்தி எனப்படுகிறது. ஆனால் நாமோ "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அடிப்படைக் கருத்தின் வழி நடக்கின்ற காரணத்தால் அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலமே என்கிறோம். ஆளுகின்ற மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, உலகத் தொடர்புக்காகவே அதை வரவேற்கிறோம். நாம் பிடித்திருப்பது தமிழ்ச் செங்கோலைத்தான் என்பதில் யாருக்கும் துளி ஐயமும் தேவையில்லை."

1968ஆம் ஆண்டில் நான் பேசிய இந்தக் கருத்துத்தான் இன்றளவும் நமது மொழிக் கொள்கையாக தொடர்ந்து வருகிறது. இதில் எந்த மாற்றமும் இப்போதும் இல்லை, எப்போதும் இல்லை.

2-1-1968 அன்று உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சியாக தமிழ்ச் சான்றோர்களின் சிலை திறப்பு விழா கடற்கரை காந்தி சிலை அருகே நடைபெற்றது. அய்யன் திருவள்ளுவரின் சிலையை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் - அவ்வையார்

சிலையினை அமைச்சர் சத்தியவாணிமுத்து தலைமையில் திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களும் - கம்பர் சிலையினை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமையிலே முன்னாள் முதல்வர் பக்த வத்சலம் அவர்களும் - ஜி.யு. போப் அவர்களின் சிலையினை சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார் தலைமையிலே பிஷப் லெஸ்லி நியூபிகின் அவர்களும் - கால்டுவெல் சிலையினை மேலவைத் தலைவராக இருந்த மாணிக்கவேலர் தலைமையில் பன்மொழிப் புலவர் அப்பாத்துரை அவர்களும் - பாரதியார் சிலையினை அமைச்சர்

செ. மாதவன் தலைமையில் நாமக்கல் கவிஞர் இராம லிங்கனார் அவர்களும் - பாரதிதாசன் சிலையினை அமைச்சர் முத்துசாமி தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் அவர்களும் - கப்பலோட்டிய தமிழன் சிலையினை அமைச்சர் மதியழகன் தலைமையில் தமிழவேள்

பி.டி. இராசன் அவர்களும் - வீரமா முனிவர் சிலையினை அமைச்சர் சாதிக்பாட்சா தலைமையில் ஆர்ச்பிஷப் அருளப்பா அவர்களும் - கற்புக்கரசி கண்ணகி சிலையை என் தலைமையில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் திறந்து வைத்தார்கள். சிலை திறப்பு விழா சீர்காழி கோவிந்தராசனின்

தமிழ்த் தாய் வாழ்த்தோடு தொடங்கியது. தமிழ் வளர்ச்சிக் கழக நெறியாளராக இருந்த பெருமாள் முதலியார் வரவேற்புரை ஆற்றிட தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்த சி.ஏ. ராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா சென்னை கடற்கரையில் பல இலட்சம் மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகிர் உசேன் மாநாட்டினை துவக்கி வைத்தார். தொடக்க விழாவிற்கு முதல் அமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். கல்வி அமைச்சராக இருந்த நாவலரும், தகவல் துறை அமைச்சராக இருந்த சத்தியவாணி முத்துவும் வரவேற்புரையாற்றினர். திருக்குறள் ஆராய்ச்சிக்கென தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்களுக்குமாக ரூபாய் ஒன்பது இலட்சம் வழங்கும் நிகழ்ச்சியும் அந்த மேடையிலே இணைந்து நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ. லெட்சுமணசாமி முதலியாரிடம், மூன்று இலட்சம் ரூபாயை நான் ஒப்படைத்தேன். அதைப் போலவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குரிய மூன்று இலட்சம் ரூபாயை உணவு அமைச்சராக இருந்த கே.ஏ. மதியழகன், அந்தப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த சந்திரா ரெட்டியிடம் வழங்கினார். மதுரைப் பல்கலைக் கழகத்திற்குரிய நிதியை துணை வேந்தர் தெ.போ. மீனாட்சி சுந்தரனாரிடம், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மா. முத்துசாமி வழங்கினார். பல்கலைக் கழகங்களின் சார்பில் எம்.ஏ.எம். முத்தையா செட்டியார் நன்றி கூறினார்.

மலர்க் குழுவின் சார்பில் அன்பு நண்பர் எம்.ஜி.ஆர். உரையாற்றினார். பன்னாட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் பேராசிரியர் பிலியோசா, ஐ.நா. கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் தலைமை நெறியாளர் மா. ஆதிசேஷையா, இலங்கை அரசின் உள்ளூராட்சிதுறை அமைச்சர் திருச்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழக ஆளுநராக இருந்த மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் விழா மலரினை வெளியிட்டார். அந்த விழாவிற்கு பெருந்தலைவர் காமராஜர் வருகை தந்திருந்தார். அவரைக் கண்டவுடன், அண்ணா அவர்களே; காமராஜர் அவர்களை அந்த விழாவிலே உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார். காமராஜர் அந்த மேடையில் பேசும்போது,

“எதிர்பாராத நிலையில் முதல் அமைச்சர் கேட்டுக் கொண்டதால் இப்போது நான் பிரதிநிதிகளுக்கு வரவேற்புக் கூறி பேசுகிறேன். உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டுக்கு வந்துள்ள பிரதிநிதிகள் அனைவரையும் மனமார வரவேற்கிறேன். ஆராய்ச்சிக் கருத்தரங்கின் பயனாகத் தமிழ் வளம் பெற்று வாழும் என நம்புகிறேன். உலகத் தமிழ் கருத்தரங்க முதல் மாநாடே இங்குதான் நடந்திருக்கவேண்டும். மலேசியத் தமிழர்கள் முந்திக் கொண்டார்கள். பக்தவத்சலம் முதல் மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது இரண்டாவது மாநாடு தமிழகத்தில் நடத்த அழைத்தார். அதன்படி மாநாடு நடக்கிறது. இது வெற்றிபெற வேண்டும். தமிழர் எங்கேயிருந்த போதிலும்

எல்லா காலத்துக்கும் பெருமையுடன் வாழ வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி, குடியரசு துணைத் தலைவர் வி.வி. கிரி, மூதறிஞர் ராஜாஜி, மலேசிய அமைச்சர் சம்பந்தம், சிங்கப்பூர் பிரதமர் லி குவான்யூ, அமைச்சர் ராஜரத்தினம் ஆகியோரும், மற்றும் பலரும் வாழ்த்து அனுப்பியிருந்தனர்.

உலகத் தமிழ் மாநாட்டிற்கே அணி செய்யும் சிறப்பு அங்கமாக பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று பூம்புகார் நகர் என்ற பெயரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தீவுத் திடலில் இருந்து 3-1-1968 அன்று புறப்பட்டு சென்றதை, இலட்சக்கணக்கான மக்கள் அண்ணா சாலையின் இரு மருங்கிலும் நின்று ரசித்தனர். சென்னை மாநகரமே அன்று விழாக்கோலம் கொண்டிருந்தது. பிற்பகலில் புறப்பட்ட அந்த பவனியைக் காண அன்று காலை எட்டு மணி முதலே மக்கள் சாலையோரங்களில் அணி வகுத்து நின்றனர். ஊர்வலம் அண்ணா சாலை, ஜெமினி முனை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, கடற்கரைச் சாலை வழியாக மீண்டும் தீவுத் திடலை அடைந்தது. அண்ணா சாலையில் கலைக் கல்லூரிக்கு அடுத்து அமைக்கப் பட்டிருந்த சிறப்பு மேடையில் இருந்தவாறு, இந்தியக் குடியரசு தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும், தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களும், முதலமைச்சர் அண்ணா அவர்களும் அமைச்சர்களும் அந்த ஊர்வலத்தைக் கண்டுகளித் தனர்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி கலைக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டு அதனை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் திறந்து வைத்தார்கள். கண்காட்சி மலரை முதலமைச்சர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்கள்.

தீவுத் திடலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பூம்புகார் நகரில் 4-1-1968 முதல் 10-1-1968 வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றன. இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவு அரங்கங்கள், சிறப்பு நாடகங்கள், கிராமிய ஆடல் பாடல்கள் எல்லாம் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பூம்புகார் நகரில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு பேராசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார். இந்தக் கருத்தரங்கு சென்னை பல்கலைக்

கழக பட்ட மளிப்பு விழா மண்டபத்திலே நடைபெற்றது. அந்தக் கருத்தரங்குக்கு உலகம் முழுவதிலுமிருந்து 40 நாடு களைச் சேர்ந்த தமிழாய்ந்த அறிஞர்கள் வருகை தந்திருந்தனர்.

பூம்புகார் நகரில் 7 நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் நினைவிலே நிற்கின்ற நிகழ்ச்சிகள் என்ற போதிலும், அண்ணா அவர்களும் நானும் சம்பந்தப்பட்ட ஒன்றை இந்த நேரத்தில் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

தமிழ்ப் புலவர் குழு வரவேற்பு விழா ஒன்று அங்கே நடைபெற்றது. அதில் அண்ணா, ஒரு புலவரா என்ற வாதம் ஏற்பட்டது. அந்த விழாவிற்கு நான் தான் தலைமை தாங்கினேன். தொடக்கத்தில் அண்ணா ஒரு புலவர் என்று குறிப்பிட்டேன். அடுத்துப் பேசிய அண்ணா அவர்கள் - தான் புலவர் அல்ல என்று அவை அடக்கத்தோடு குறிப்பிட்டார்கள். இருந்தாலும் நான் தொடர்ந்து, "புலவருக்கு உரிய அடையாளம் "அவை அடக்கம்." நான் அண்ணா அவர்களைப் புலவர் என்றேன். ஆனால் அண்ணா அவர்கள் அவை அடக்கத்தோடு தான் புலவர் அல்ல என்றார். அந்த அவை அடக்கமே அவரைப் புலவர் தான் என்று காட்டி விட்டது. முதல் முறையாக அண்ணாவை நான் வெற்றி கொண்டேன்" என்று நான் நகைச்சுவையாக குறிப்பிட்டபோது, அந்த அரங்கமே சிரித்து மகிழ்ந்ததும், அண்ணா அவர்கள் சிறு குழந்தையைப் போல எழுந்து நின்று சிரித்ததும் என்றைக்கும் நீங்காமல் என் நினைவில் இருக்கும் காட்சியல்லவா? அந்த மேடையில் அடுத்துப் பேசிய வ.சுப. மாணிக்கம் அவர்கள், விளிக்கும் போதே முதலமைச்சர், புலவர் அண்ணா அவர்களே என்றுதான் அழைத்தார். டாக்டர் மு.வ. அவர்கள் பேசும்போது, முதலமைச்சர் அண்ணா பேசும்போது மணிமேகலைப் பாடல் ஒன்றை சுட்டிக் காட்டியதன் மூலம், அவர் புலவர் மட்டுமல்ல, பெரும்புலவர் என்று நிரூபித்துக் காட்டிவிட்டார் என்றார்.

அந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை யொட்டி தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர்கள்; அந்த மாநாட்டையும், கவின் மிகு ஊர்வலத்தையும் வண்ணப் படமாகத் தயாரித்தனர். அந்தத் திரைப்படத்தில் வந்த ஒவ்வொரு காட்சியையும் விளக்கி நான் கவிதை வடிவில் வர்ணனைத் தீட்டியிருந்தேன். அண்ணா அவர்கள் வெளி நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்ற போது, என்னுடைய வர்ணனையோடு எடுக்கப்பட்ட அந்த உலகத் தமிழ்

மாநாட்டு ஊர்வலக் காட்சி திரைப்படத்தினையெடுத்துச் சென்று அந்த நாடுகளிலே உள்ள தமிழர்களுக்கெல்லாம் அதனைப் போட்டுக் காட்டினார்.

அந்த மாநாட்டின் மற்ற மற்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் மேலும் விரிவாக எழுதுவதென்றால் நீண்ட நேரம் ஆகும். அந்த மாநாட்டிற்கு வந்த பன்னாட்டுப் பேரறிஞர்கள் எல்லாம் தமிழகச் சுற்றுலா மேற்கொள்ளவும் அப்போது ஏற்பாடு செய்யப்பட்டது.

10-1-1968 அன்று இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சி நடை பெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவுச் சொற்பொழிவினை ஆற்றினார்கள். நான் நன்றியுரையாற்றினேன். கோவையில் ஜூன் திங்களில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தவிருக்கின்ற நேரத்தில் - பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளும், அதிலே நான் பங்கேற்ற நிகழ்வுகளும் என் உள்ளத்தில் எழுந்ததை உன்னோடு பகிர்ந்து கொள்வதில் எனக்கோர் மகிழ்ச்சி. இந்த மாநாட்டில் பங்கு பெறுவோருக்கும், பல்வேறு குழுக்களில் இடம் பெறுவோருக்கும் தாங்கள் என்னென்ன பணிகளை ஆற்ற வேண்டுமென்று திட்டமிட்டுக் கொள்ளவும் இது ஒரு வசதியான வாய்ப்பாக விளங்கு மல்லவா?

அன்புள்ள,

மு.க.

12-12-2009

3441. உடன் பிறப்புகளில் ஒருவனாக விடுக்கும் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

திருச்செந்தூர் தொகுதியிலும், வந்தவாசி தொகுதியிலும் வரும் 19ஆம் தேதியன்று இடைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் பிரச்சாரம் மிகவும் கடுமையாக நடைபெற்று வருகிறது. கழக தென் மண்டல அமைப்புச் செயலாளர் தம்பி மு.க. அழகிரியும், அப்பகுதி மாவட்டக் கழகச் செயலாளர்களும், கழக அமைச்சர்களும் திருச்செந்தூர் தொகுதியிலேயே முகாமிட்டு அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதுபோலவே வந்தவாசி தொகுதியில் திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ. வேலுவும், அந்தப் பகுதி மாவட்டக் கழகச் செயலாளர்களும், கழக அமைச்சர்களும் முகாமிட்டு பம்பரமென சுழன்று தேர்தல் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொதுச் செயலாளர் பேராசிரியர், துணை முதல்வரும் கழகப் பொருளாளருமான மு.க.ஸ்டாலின், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி மற்றும் கழக முன்னணியினர் இந்த இரண்டு தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளார்கள். இடைத் தேர்தல் என்பதாலும், என் உடல் நிலை கருதியும் நான் நேரடியாக அந்தத் தொகுதிகளுக்கு வராவிட்டாலும், மடல் வாயிலாகவாவது நம் அண்ணன் நம்மிடம் ஒரு முறை வாக்கு கேட்டானா என்று நீ கேட்டு விடக் கூடாதல்லவா? அதற்காக மட்டுமல்ல; எதிர் தரப்பினர் இந்தத் தேர்தலில் என்ன சொல்லி வாக்குக் கேட்பது? அரசின் மீது என்ன குற்றஞ்சாட்டுவது? என்று தெரியாத நிலையில் குழப்பமடைந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக அருந்ததிய சமுதாயத்திற்கு பல ஆண்டுகளாகக் கேட்டுக் கிடைக்காத கோரிக்கையான மூன்று சதவிகித உள் ஒதுக்கீட்டினை நாம் செய்து கொடுத்து, அதன் வாயிலாக அவர்கள்

பெரும் பயன்பெற்று, அதற்காக வள்ளுவர் கோட்டமே கொள்ளாத அளவிற்கு எனக்கு நன்றியறிவிப்பு கூட்டம் நடத்திய மூன்றாம் நாள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திருச்செந்தூரிலே தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அருந்ததிய சமுதாயத்திற்கு எதுவும் செய்ய வில்லை என்று பேசுகிறார் என்றால், அந்தத் தொகுதி மக்கள் அவரைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றுதான் வருத்தப்படுகிறேன்!

நாம் வாக்காளப் பெருமக்களிடம் சென்று வாக்குகளைக் கேட்கிறபோது, நம் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட சாதனைகளைச் சொல்லி, எங்களை பதவியிலே அமர்த்தினீர்கள், நாங்கள் சும்மாயிருக்கவில்லை, இதோ இவையிவைகளைச் செய்திருக்கிறோம் என்று பட்டியலிட்டுக்காட்டி அதன் பெயரால் வாக்குகளைக் கேட்க முடிகிறது. அதே சமயத்தில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. சென்று அவர்கள் ஆட்சியிலே செய்த கொடுமைகளைப் பட்டியலிட்டுத்தான் வாக்கு கேட்க முடியும். அல்லது அரசு அலுவலர்க்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட அக்கிரமங் களையெல்லாம்தான் பட்டியலிட்டுக்காட்டி வாக்கு கேட்க முடியும்.

ஆனால் கடந்த நான்காண்டு கால ஆட்சியில் கழக அரசு செய்த சாதனைகளை வாக்களிக்கப் போகும் மக்களுக்கு நினை வூட்டுவதற்காக ஒருமுறை பட்டியலிட விரும்புகிறேன். இதோ அவற்றில் சில மட்டும் :-

❖ கிலோ அரிசி 1 ரூபாய் வீதம் மாதம் 20 கிலோ அரிசி; 1 கோடியே 85 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

❖ ஏழை எளியோர்க்கு விலைவாசியின் கடுமை குறைய பாமாயில் எண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குறைந்த விலையில் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

❖ 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி;

❖ விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வட்டி 9 சதவீதம், 2006-2007இல் 7 சதவீதம்; 2007-2008இல் 5 சதவீதம்; 2008-2009இல்

4 சதவீதம்; 2009-2010இல் கடன்களை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளின் பயிர்க்கடனுக்கு வட்டி ரத்து.

❖ குவின்டால் ஒன்றுக்கு சாதாரண நெல் 850 ரூபாய்; சன்ன ரக நெல் 880 ரூபாய் என மத்திய அரசு சென்ற ஆண்டு நிர்ணயித்த விலைகளை உயர்த்தி, சாதாரண நெல் விலை 1000 ரூபாய் என்றும், சன்ன ரக நெல் விலை 1050 ரூபாய் என்றும் வழங்கப்பட்டது.

❖ உழவரும், நுகர்வோரும் பெரும்பயன் அடைந்திட மாநிலமெங்கும் 117 உழவர் சந்தைகள் மீண்டும் புதுப்பொலிவுடன் திறப்பு;

❖ மத்திய அரசு 9.5 சதபிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன் 1077 ரூபாய் 60 காசு என நிர்ணயித்த விலையைவிட மாநில அரசின் பரிந்துரை விலையாக 359 ரூபாய் 80 காசு சேர்த்து ஒரு டன் கரும்புக்கு 1437 ரூபாய் 40 காசு என உயர்த்தியுள்ளதுடன் போக்குவரத்துக் கட்டணமாக 90 ரூபாய்; சர்க்கரைக் கட்டுமான ஊக்கத் தொகை 22 ரூபாய் 60 காசு சேர்த்து கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 1550 ரூபாய் வழங்கிட 24.9.2009 அன்று ஆணை; இது கடந்த ஆண்டைவிட டன் ஒன்றுக்கு 330 ரூபாய் கூடுதலாகும்.

❖ பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 50 சதவீத காப்பீட்டுத் தொகையாக அரசே மானியமாக வழங்கி, ஊக்கப்படுத்தியுள்ளதால் 2008-2009 ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகள் அரசின் மானிய உதவி பெற்றுப் பயிர்க்காப்பீடு செய்தனர். 2008 டிசம்பரில் பெய்த பெருமழையால் சேதமடைந்த பயிர் களுக்காக 5 இலட்சத்து 36 ஆயிரத்து 352 விவசாயிகளுக்கு 656 கோடியே 66 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப் பட்டு மாநில அரசின் பங்காக 306 கோடியே 48 இலட்ச ரூபாய் 4.9.2009 அன்று விடுவிக்கப்பட்டு, விவசாயிகள் பயன்.

❖ 2009-2010 ஆண்டில் பயிர்க்காப்பீடு செய்திடும் 25 இலட்சம் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கிட 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

❖ ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை வட்டியுட்பட 5 கோடியே 25 இலட்சம் தள்ளுபடி;

❖ நில அடமானத்தின்மீது தொழில்புரிய வழங்கப்பட்ட பண்ணைசாராக் கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு வாங்கிய கடன் அசல் தொகையை செலுத்தினால் கடன் ரத்து;

❖ மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைத்து வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் உபரிநீரை வறண்ட மாவட்டங் களுக்குக் கொண்டு சென்று பாசன வசதிகளைப் பெருக்கிடும் புரட்சிகரமான திட்டத்தின் முதற்கட்டமாக 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம்;

❖ 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிர பரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம்;

❖ கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகளால் உணவு தானிய உற்பத்தி 2005 - 2006இல் 61 இலட்சம் டன்; 2008-2009இல் 91 இலட்சம் டன் என உயர்வு.

❖ விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 30 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 77 ஆயிரத்து 817 உறுப்பினர்கள் சேர்ப்பு;

❖ 11 இலட்சத்து 96 ஆயிரத்து 705 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 544 கோடியே 8 இலட்சத்து 28 ஆயிரத்து 87 ரூபாய் உதவித் தொகை;

❖ 2 ஆயிரத்து 678 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 1 கோடியே 12 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகளில் இதுவரை 2144 கோடியே 19 இலட்சத்து 59 ஆயிரத்து 216 ரூபாய் செலவில் 89 இலட்சத்து 78 ஆயிரத்து 496 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, தொடர்ந்து வழங்கப்படுவதுடன் மேலும் தேவைப்படுவோருக்கு வழங்கிட 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிட 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு;

❖ ரூபாய் 360 கோடி செலவில் 20 இலட்சத்து 680 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன;

❖ 1 இலட்சத்து 75 ஆயிரத்து 798 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 10 ஆயிரத்து 747 ஏக்கர் இலவச நிலம்;

❖ 6 இலட்சத்து 85 ஆயிரத்து 976 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ;

❖ காமராஜர் பிறந்த நாளில் "கல்வி வளர்ச்சி நாள்" என சட்டமியற்றி பள்ளிகளில், கல்வி விழா;

❖ 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 73 இலட்சம் குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டைகள்; வாழைப்பழங்கள்;

❖ தமிழ் வழியில் பயிலும் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும், 11 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 10, 12 ஆம் வகுப்புகளின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.

❖ பட்டப்படிப்பு பயிலும் 3 இலட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரி மாணவ மாணவியரின் படிப்புக் கட்டணங்கள் ரத்து.

❖ படிப்பைத் தொடர இயலாமல் இடையில் நிறுத்திய ஏழை மாணவர்களில் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர்வரை வேலை வாய்ப்புகளுக்கேற்ற தொழிற்பயிற்சிகளைச் சமுதாயக் கல்லூரிகள் மூலம் பெற, ஒரு கோடி ரூபாய் செலவில் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் மூலம் அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை;

❖ ஆண்டுதோறும் 24 இலட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 2 இலட்சத்து 99 ஆயிரம் கல்லூரி மாணவர் களுக்கும் இலவச பஸ் பாஸ் ;

❖ ஏழை மகளிர்க்கு பட்டப் படிப்பு வரை வழங்கப்பட்ட இலவசக் கல்வி, முதுகலைப் பட்டப் படிப்பு வரை நீட்டிப்பு.

❖ தொழிற்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து.

❖ கோவை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் மூன்று புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள்;

❖ 2006-க்குப்பின், ஒரத்தநாடு, பெரம்பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர் ஆகிய 7 இடங்களில் அரசின் புதிய கலை அறிவியல் கல்லூரிகள்;

❖ மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி என்ற கோட்பாட்டின்படி விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய இடங்களில் 5 புதிய மருத்துவக் கல்லூரிகள்;

❖ அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் தமிழக அரசின் சார்பில் புதிய பொறியியல் கல்லூரிகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள்.

❖ பத்தாம் வகுப்புவரை பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமென சட்டம்;

❖ நூறாண்டுக் கனவை நனவாக்கி செம்மொழித் தமிழாய்வு மையம் சென்னையில் அமைப்பு.

❖ அருந்தமிழ்ச் சான்றோர் 81 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு 5 கோடியே 33 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

❖ 3072 திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன;

❖ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத்திட்ட நிதியுதவி 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, இரண்டு இலட்சத்து 14 ஆயிரத்து 189 ஏழைப் பெண்களுக்கு 315 கோடியே 93 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 75 ஆயிரம் ஏழைப் பெண்கள் பயன்பெற ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு;

❖ ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச் சத்து பெற 6 ஆயிரம் ரூபாய் வீதம் 15 இலட்சத்து 47 ஆயிரத்து 205 ஏழை மகளிர்க்கு 774 கோடியே 48 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கி; மேலும் 4 இலட்சம் தாய்மார்கள் பயன்பெற ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது;

❖ திருமணமாகாமல் 50 வயது கடந்து வறுமையில் வாடும் 9 ஆயிரத்து 158 ஏழைப் பெண்களுக்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை;

❖ "வருமுன் காப்போம் திட்டம்" மீண்டும் செயல்படுத்தப்பட்டு 10 ஆயிரத்து 394 மருத்துவ முகாம்களில் 91 இலட்சம் ஏழை எளியோர் பயன்; இவ்வாண்டில் மேலும் 4500 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு இதுவரை நடத்தப்பட்ட 2361 முகாம்களில் 21 இலட்சத்து 24 ஆயிரத்து 922 பேர் பயன்;

❖ தமிழகத்தில் உள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தலா மூன்று செவிலியர்களைப் பணியமர்த்தி 24 மணி நேரமும் மருத்துவ சேவை அளிப்பதால், அங்கு 2006இல் நடைபெற்ற மகப்பேறுகளின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 766 என்பது, 2008இல் 2 இலட்சத்து 41 ஆயிரத்து 78 ஆக மூன்று மடங்கு உயர்ந்து கிராமப்புற மகளிர் மகிழ்ச்சி;

❖ மூடிய அறுவை சிகிச்சைக்கு 20 ஆயிரம் ரூபாய்; சாதாரண திறந்த அறுவை சிகிச்சைக்கு 50 ஆயிரம் ரூபாய்; கடினமான திறந்த அறுவை சிகிச்சைக்கு 1 இலட்சம் ரூபாய் என அரசு நிதி உதவி வழங்கும் இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் 21.11.2007இல் தொடங்கி, 653 குழந்தைகளுக்கும், பள்ளிச் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் 3.6.2008 இல் தொடங்கி 1663 பள்ளிச் சிறார்க்கும் 13 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் புகழ்வாய்ந்த 23 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு குழந்தைச் செல்வங் களின் அரிய உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

❖ கிராமப்புற ஏழைகளுக்கும் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து 32 கோடி ரூபாய் செலவில் அதிநவீன "அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்" தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது;

❖ அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 இலட்ச ரூபாய் வரை நிதியுதவி வழங்கும் புதிய "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்;"

❖ ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெற "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" 517 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதுவரை 1 கோடியே 31 இலட்சத்து 53 ஆயிரத்து 161 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை 16 ஆயிரத்து 639 ஏழை மக்களுக்கு 57 கோடியே 5 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது;

❖ 1 இலட்சத்து 5 ஆயிரத்து 494 கைத்தறி நெசவாளர்களுக்கும், 90 ஆயிரத்து 547 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்ற 2 இலட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்;

❖ ஏறத்தாழ 2 இலட்சத்து 20 ஆயிரத்து 292 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 45 ஆயிரத்து 891 கோடி ரூபாய் முதலீட்டிலான 25 புதிய தொழிற்சாலைகள் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் 11 அரசாணைகள் வெளியிடப்பட்டு 36 தொழிற்சாலைகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை களில் இதுவரை 9 தொழிற்சாலைகள் திறப்பு;

❖ 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 156 கோடியே 15 இலட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது;

❖ ஏறத்தாழ 3 இலட்சத்து 44 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன;

❖ முதியோர், ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 400 ரூபாய் என உயர்வு; 7 இலட்சத்து 39 ஆயிரத்து 541 முதியோரும், 7 இலட்சத்து 90 ஆயிரத்து 41 ஆதரவற்றோரும் பயன்.

❖ கடும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 500 ரூபாய் என உயர்த்தப்பட்டு, 10 ஆயிரம் ஊனமுற்றோர் பயன்;

❖ 1989இல் தருமபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய மகளிர் திட்டத்தின்மூலம் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள மகளிர்

சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 4,12,104. இக்குழுக்களில் சேர்ந்துள்ள மகளிர் உறுப்பினர்கள் எண்ணிக்கை 65 இலட்சத்து 72 ஆயிரம். இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் ரூ. 5041 கோடி.

❖ 2006க்குப்பின் 10 இலட்சத்து 48 ஆயிரம் மகளிர் உறுப்பினரைக் கொண்ட 72 ஆயிரத்து 346 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 3 ஆயிரத்து 276 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ 1,75,677 மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுழல் நிதி 175 கோடியே 67 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்.

❖ 2,033 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரத்து 96 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப்பணிகள்;

❖ அதேபோல, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 210 கோடி ரூபாய் செலவில் 420 பேரூராட்சிகளில் கட்டமைப்புப் பணிகள்;

❖ மாநகராட்சி, நகராட்சிகளின் நிதிச்சுமையைக் குறைத்து மக்களுக்கு வசதிகள் செய்திட அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய 793 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

❖ 45 ஆயிரத்து 943 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள்; 4 ஆயிரத்து 730கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இரு வழித் தடங்களாக அகலப்படுத்தப்பட்டுள்ளன.

❖ தமிழகத்தில் உள்ள சாலைகளில் 551 சிறு மற்றும் பெரிய பாலங்கள் 557 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன;

❖ 2004 முதல் 5 ஆண்டுகளில் கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.55 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்கள் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளன.

❖ தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து; நிலவரி, ஏக்கர் ஒன்றுக்குப் புன்செய் நிலங்களுக்கு 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்க அரசு ஆணை;

❖ ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❖ அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்களாக உதயம்;

❖ கட்டணம் உயர்த்தப்படாமல் ஏற்கெனவே விடப்பட்ட 9,248 புதிய பேருந்துகளுடன் மேலும் 3500 புதிய பேருந்துகள்;

❖ இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு;

❖ அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு;

❖ சமத்துவ சமுதாயம் காணும்நோக்கில் அனைத்துச் சாதியாரும் அர்ச்சகராகும் சட்டம் நிறைவேற்றப்பட்டு பல்வேறு சாதிகளையும் சார்ந்த 216 பேருக்கு அர்ச்சகர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

❖ அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்க ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன் மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைத்து 240 சமத்துவ புரங்களையும் தந்தை பெரியார் திருவுருவச் சிலைகளுடன் நிர்மாணிக்கும் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது; 95 சமத்துவபுரங்களில் இதுவரை 19 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன.

❖ சென்னையில் உலகத் தரத்திலான 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நூலகம்;

❖ 450 கோடி ரூபாய் செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற தலைமைச்செயலக வளாகம்;

❖ 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு பூங்காத் திட்டம்;

❖ ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெட்ரோ ரயில் திட்டம்;

❖ 1330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

❖ 630 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் பரமக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தொடங்கி வைக்கப் பட்டுள்ளது;

❖ மதுரவாயலிலிருந்து சென்னைத் துறை முகத்திற்கு 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பறக்கும் சாலைத் திட்டம்;

❖ மத சுதந்திரம் பேண - கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

❖ மூன்றாவது காவல் ஆணையம் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். பூர்ணலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டு, அதுவழங்கிய 444 பரிந்துரைகளில் இதுவரை 278 பரிந்துரைகள் ஏற்பு;

❖ 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற காலமுறை ஊதியம்; ஓய்வூதியம்;

❖ டெஸ்மா, எஸ்மா சட்டங்களை நீக்கி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கியதுடன் - 6வது ஊதியக் குழு அறிக்கையை நடைமுறைப் படுத்தும் நோக்கில் இடைக்கால நிவாரணமாக மூன்றுமாத ஊதிய நிலுவைத் தொகை 4247 கோடி ரூபாய் வழங்கியது.

❖ அத்துடன், 1.1.2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 6வது ஊதியக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

❖ இதன்காரணமாக 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு நிலுவைத்தொகையாக அனுமதிக்கப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

செய்த சாதனைகளில் சிலவற்றை மட்டுமே பட்டியலிட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள ஒவ்வொருவரும் இந்தச் சாதனைகளில் ஏதாவது ஒன்றால் பயன்பெறுகிறார்கள். அந்தச் சாதனைகளின் பெயரால் - இத்தகைய சாதனைச் சரித்திரம் படைத்த ஆட்சியின் தலைவன் என்ற நிலையில்தான் அனைத்து மக்களிடமும், அருமைத் தாய்மார்களிடமும் அவர்களின் குடும்பத்து உடன்பிறப்புகளில் ஒருவனாக இருக்கின்ற நான் என்ற உரிமையோடும் - மேலும் அவர்களுக்கு உழைக்க வேண்டும் என்ற சமுதாய முன்னேற்ற நோக்கத்தோடும் அன்பு உடன்பிறப்பே, உன் வாயிலாக நான் வாக்குகளைக் கேட்கின்றேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்து

இந்தத் தேர்தல் வெற்றி, நமது இன உணர்வுக்கும், இலட்சிய பிடிப்புக்கும் கிடைத்திடும் வெற்றி என்ற நம்பிக்கையோடு நீ பணியாற்றுவாய்; இந்த இடைத் தேர்தல்களில் வாக்களிக்க வரும் பெரு மக்களும் வாழ்த்து முழக்கத்தோடு இந்த என் நம்பிக்கையை நிறைவேற்றுவார்கள் என்று காத்திருக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

13-12-2009

3442. சோதனைகளை வென்ற கழக அரசின் சாதனைகள்!

உடன்பிறப்பே,

இன்று 16-12-2009. 19ஆம் தேதி இடைத் தேர்தல்கள். இடையில் இருப்பதோ 48 மணி நேரங்கள்தான். நாளையோடு தேர்தல் பிரச்சாரங்கள் முடிவுற இருக்கின்றன. யார் மீதும் எந்தவிதமான குறையும் கூற முடியாத அளவிற்கு தம்பிமார்கள் அனைவரும் இரவுப் பகலாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களோடு சேர்ந்து மகளிரும் இடைவிடாது தேர்தல் பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 8-5-1966 அன்று "தம்பிக்கு" எழுதிய கடிதத்தை முடிக்கும்போது பின்வருமாறு எழுதியிருந்தார்.

"நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள்ளாகவே - தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும்.

என் ஆற்றலின் முழு வேகத்தையும் பணியாற்றுவதிலே இணைத்திருக்கிறேனா?

தொடர்ந்து பணியாற்றுகிறேனா? தோழர்களை அணி திரட்டிக் கூட்டாகப் பணியாற்று கிறேனா?

ஆத்திரப்படாமல், பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்று கிறேனா?

ஜனநாயகக் கடமை உணர்ச்சியுடன் பணியாற்றுகிறேனா?

மற்ற எந்தவிதமான ஆசாபாசங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் பணியாற்றுகிறேனா?

மக்களுக்கு நல்லாட்சி கிடைத்திடச் செய்யும் மகத்தான தொண்டு என்பதை உணர்ந்து பணியாற்றுகிறேனா?

தம்பி! இந்தக் கேள்விகள், ஒருவரை மற்றொருவர் கேட்டுக் கொள்வதற்காக அல்ல; ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே

கேட்டுக் கொள்வதற்காக. ஏன் இத்தனைக் கூறுகிறேன் என்றால், தம்பி! உன்னால் இப்போது செய்திடுவதைக் காட்டிலும் அளவிலும் தரத்திலும் உயர்வான பணியாற்றிட முடியும். நாளை, நாளை என்று எண்ணிக் கொண்டிருந்திடக் கூடாது. இன்று, இன்று - என்ற எழுச்சியுடன் புறப்பட்டாக வேண்டும். இழிமொழி உமிழ்ந்திடுகிறார் ஒரு சிலர்! அவர் தம் அரசியல் ஆணவத்தை அடக்கிட முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் உன்னிடம் கூறுகிறேன்; முறையிடுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை.

உடன்பிறப்பே, அண்ணா அவர்கள் 8-5-1966 அன்று எழுதிய கடிதத்தின் வார்த்தைகளைத்தான் இந்த மடலிலே நானும் எழுதுகின்றேன். எதிர்க் கட்சியின் சார்பில் இது தான் தருணம் என்று எண்ணிக் கொண்டு ஏதேதோ குற்றச்சாட்டுகளை நம்மீது சாட்டுகின்றனர். மீனவர்களுக்கு நாம் எதுவும் செய்யவில்லையாம்! சிறுபான்மையோருக்கு அவர்கள்தான் பிரதிநிதிகளாம்! அருந்ததியர்களுக்காக நாம் கொடுத்த வாக்குறுதிகளை அமலாக்கவில்லையாம்! பேசியிருக்கிறார்கள் திருச்செந்தூரிலே சென்று!

1992ஆம் ஆண்டு நடைபெற்ற கரசேவையின் போது பெரும்பான்மையினருக்கு ஆதரவாக ஜெயலலிதா பேசும்போது சிறுபான்மையினரைத் தாக்கிப் பேசிடவில்லையா?

24-11-1992 தேதிய "தினமணி" நாளிதழிலேயே ஜெயலலிதாவின் பேச்சு வெளிவந்திருந்ததே! அப்போது என்ன பேசினார்?

"அரசியல் சட்டத்தின்படி பெரும்பான்மையினருக்குக் கிடைக்கும் சாதாரண உரிமை களையும், சிறப்புரிமைகளையும் பாதிக்கும் வகையில் அரசியல் சரித்திர, சமூக அமைப்புகளின் பின்னணியில் தங்கள் நலன்களை முன்னிருத்தி செயல்படுவது சிறுபான்மையினருக்கு ஏற்றது அல்ல. இந்த நாட்டில் பெரும்பான்மை வகுப்பு, இந்துக்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய மதச் சார்பான லட்சியங்களை அரசியல் சட்டத்தின் குறிக்கோள்களுக்கு மாறுபடாத வகையில் அமைதியான வழியில் நிறைவேற்றிக்

கொள்ள முயன்றால் அதனை அனுமதிக்க வேண்டும். பெரும்பான்மையினரும், அவர்களுடைய உரிமைகளை சிறுபான்மையினரைப்போல அனுபவிக்க அனுமதிக்க வேண்டும். அயோத்தி பிரச்சினையில் இதனைத் தொடர்புபடுத்தி குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் இந்துக்கள் விரும்பியபடி கட்டுமானப் பணியை நிறைவேற்ற அனுமதிக்க வேண்டும். கரசேவையை அனுமதிக்கும்படி நீதி மன்றங்களை அணுகத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். மிகவும் சுருக்கமாக என்னுடைய வேண்டு கோளைத் தெரிவிக்கிறேன். உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் கரசேவை நடைபெறத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அயோத்தியில் கோயில் கட்டப்பட வேண்டும் என்பது இந்த நாட்டின் பெரும் பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உள்ளது. பொது மக்கள் கருத்தை இந்த நாட்டின் பெரும் பான்மையான மக்களின் கருத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது."

இவ்வாறு சிறுபான்மையினருக்கு விரோதமாக பேசியவர், இப்போது திருச்செந்தூருக்குச் சென்று சிறுபான்மையினருக்கு வேண்டியவர் என்பதைப் போல பேசுகிறார் என்றால் இது எவ்வளவு பெரிய ஏமாற்று வித்தை?

இஸ்லாமியர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் குறிப்பாக எனக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றி அந்த மக்கள் அறிய மாட்டார்களா? இதோ ஒன்றிரண்டு சான்றுகள் கூறவா?

70 ஆண்டுகளுக்கு முன்பு, பள்ளி செல்லும் மாணவனாக இருந்தபோதே, திருவாரூரிலே நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டிலேயே - நான் கொடிபிடிக்கும் சிறுவனாக - பச்சைப் பிறைக் கொடியை கையிலே ஏந்துகின்ற சிறுவனாக- அந்த மாநாட்டிலே கலந்துகொண்டேன் என்பதை நான் பெருமையோடு நினைவு கூர்கிறேன்.

1969-ல் மீலாது நபிக்கு முதன்முதல் அரசு விடுமுறை; முந்தைய அ.தி.மு.க. அரசு 2001-ல் ரத்து செய்த மீலாது நபி அரசு விடுமுறையை 15.11.2006 ஆணை மூலம் மீண்டும் விடுமுறை நாளாக அறிவித்தது; 1973-ல் உருதுபேசும் லப்பைகள், தெக்கனி

முஸ்லிம்கள் ஆகியோரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது; 1974-ல் சென்னை-அண்ணாசாலை அரசினர் மகளிர் கல்லூரிக்கு "காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி" எனப் பெயர் சூட்டியது; 1989-ல் இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை யினர் சமுதாய மக்கள் பெரும்பயன் எய்திடும் வகையில், "சிறுபான்மையினர் நல ஆணையம்" ஒன்றை 13.2.1989 அன்று உருவாக்கியது; 1999-ல் வக்ஃபு வாரியச் சொத்துக்களைப் பராமரிப்பதற்கென முதன்முறையாக 40 இலட்ச ரூபாய் வழங்கியது; 1999-ல் "தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம்" என ஒரு அமைப்பினை 1.7.1999 அன்று உருவாக்கியது; 2000-ல் உலமா ஓய்வூதியத் திட்டத்தை 19.7.2000 முதல் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் நீட்டிப்பு செய்தது; 2000-ல் இஸ்லாமியர்களின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, 21.7.2000 அன்று "உருது அகடமி"யைத் தொடங்கியது; 2001-ல் "காயிதே மில்லத் மணிமண்டபம்" 58 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய்ச் செலவில் சென்னையில் அமைத்திட 25.2.2001 அன்று அடிக்கல் நாட்டி, திறக்கப்பட ஆவன செய்தது; சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஆய்வு மையம் ஏற்படுத்தியது; சிறுபான்மையினரின் நலனுக்கென தனி இயக்குநரகம் ஒன்றை 6.4.2007 அன்று அமைத்தது; "உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" என ஒரு வாரியத்தை 2009, மார்ச் திங்களில் ஏற்படுத்தி யது; என்று இஸ்லாமிய சமுதாயத்திற்கு கழக அரசு வழங்கியுள்ள சலுகைகளும், நன்மைகளும் கணக்கிலடங்காதவை.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றபிறகு, 1947ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரையில், தமிழகத்தில் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் அமைச்சராக இல்லை. முஸ்லிம்களுக்கு அமைச்சரவையிலே இடம் தரவேண்டுமென்ற குரலை முதன் முதலாக எழுப்பியவர் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். அதற்குப் பிறகுதான் 1962-ல் கடையநல்லூர் மஜீத் அவர்கள் காங்கிரஸ் அமைச்சரவையிலே அமைச்சராக இடம் பெற்றார். திராவிட முன்னேற்றக் கழகம்தான் முதன்முதலாக தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு முஸ்லிம் உறுப்பினர் ஒருவரை, அதாவது திருச்சி ஜானிபாய் அவர்களை நியமித்தது. ஜனாப் அப்துல் சமது அவர்களை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கியதும் தி.மு.க. தான். 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின்

சார்பில் பெரியகுளம் மேத்தா, நெல்லை கதிரவன், சாதிக்பாட்சா ஆகிய மூவர் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர்களாக ஆனார்கள்.

2001 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முதலில் ஒரு ஆறு மாதகாலம் முஸ்லிம் சமுதாயத்தின் பிரதி நிதியாக திரு.அன்வர்ராஜா இடம் பெற்றிருந்தார்; ஆனால், அதற்குப்பிறகு முஸ்லிம் பிரதிநிதியே இல்லாமல்தான் அ.தி.மு.க. அமைச்சரவை நடைபெற்றது.

தற்பொழுது, 2006-ல் பொறுப்பேற்ற கழக ஆட்சியில் இரண்டு முஸ்லிம்கள், அதாவது, திரு.உபயதுல்லா, திரு.மைதீன்கான் ஆகியோர் அமைச்சர்களாக இருந்து வருகின்றனர். முஸ்லிம் சமுதாயத்தினருக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத தி.மு.க. அமைச்சரவையே இதுவரை இருந்ததில்லை - என்ற உண்மைகள் அனைத்தையும் அந்த சமுதாயத்தினர் நன்கறிவார்கள்.

நீதியரசர் திரு.ஜனார்த்தனன் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய"த்திடம் இஸ்லாமியர் இடஒதுக்கீடு பற்றி விரிவாக விசாரணையும், ஆய்வும் செய்து, உரிய பரிந்துரையைப் பெற்று முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கியது.

இதுபோலவே மீனவர்களுக்கு கழக அரசு செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு சிங்காரவேலர் பெயரைச் சூட்டியதே நான்தானே? கழக ஆட்சியில் தானே? சிங்காரவேலர் என்றால் யார் என்று கேட்கக் கூடியவர்கள் எல்லாம் மீனவர்களுக்காக குரல் கொடுக்கிறோம் என்றால் மீனவர்கள் நம்புவார்களா?

மீனவர்களுக்கான டீசல் மானியத்தை உயர்த்திக் கொடுத்தது கழக அரசு அல்லவா?

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் காணாமல் போனால், அவர் திரும்பி வரும் வரையில் அவரது குடும்பத்தைக் காத்திடும் பொருட்டு நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கிடவும், இலங்கை கடலோரக் காவல் படையினரால் சுடப்பட்டு உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு பாதுகாப்பு

நிதியாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கவும் கழக ஆட்சியிலே முடிவெடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

மீன் பிடித் தொழில் மேற்கொள்ளப்படாத காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசின் 50 சதவீத பங்குத் தொகை 300 ரூபாயுடன் சேர்த்து வழங்கப்படும் நிவாரணத் தொகை 2006-2007இல் 1 லட்சத்து 79ஆயிரத்து 853 உறுப்பினர்களுக்கு 21 கோடியே 20 லட்சம் ரூபாயும் - 2007-2008இல் 1 லட்சத்து 76 ஆயிரத்து 17 உறுப்பினர்களுக்கு 20 கோடியே 83 லட்சத்து 29 ஆயிரம் ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மீன் இனப் பெருக்கக் காலமாக கருதப்படும் காலங்களில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட முடியாத இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு தலா 500 ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிவாரண உதவியாக வழங்கும் புதிய திட்டம் 2008-2009இல் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது வகுப்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதன்மை மதிப்பெண்கள் பெற்ற மாணவர் களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம்;

செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கும் திட்டம்;

மீனவர்களுக்காக மானிய விலையில் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்;

மீனவர்களின் நல்வாழ்வு கருதி தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தை அமைக்கப்பட்டு ஐந்து கோடி ரூபாய் நிதியும் கழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது;

இலங்கை அரசால் சிறைபிடித்து வைக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 50 விசைப்படகுகள் 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழக அரசு சுனாமி மறு வாழ்வுத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

மீனவர்கள் பயன் பெற உலகத் தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி நிலையம்.

தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்களை கூடுதல் நிவாரணமாக வழங்கும்

பொருட்டு 110 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் வலைகள், கவச உடைகள், கை விளக்குகள், மிதி வண்டிகள் மற்றும் குளிர் சாதனப் பெட்டிகள் முதலியவை 42 ஆயிரம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

147 முதன்மை மீனவ கூட்டுறவு சங்கங்களின் மூலம் 5 ஆயிரத்து 635 மீனவர்களுக்கு வழங்கப்பட்ட 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் கடன் மற்றும் வட்டித் தொகை முழுவதையும் கழக அரசு தள்ளுபடி செய்துள்ளது.

உடன்பிறப்பே, கழக அரசைப் பொறுத்த வரையில் மீனவர்கள், சிறுபான்மையோர் என்றல்ல; அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எல்லா வித நன்மைகளையும் செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் பாடுபட்டு வருகின்றது. இதனை மக்கள் அனைவரும் அறிவார்கள். ஆனால் எதிர்க்கட்சியின் சார்பில் இடைத் தேர்தல் நேரத்தில் பிரச்சாரத்திற்காக வருபவர்கள் எதையாவது மக்களிடம் சொல்லியாக வேண்டுமே என்பதற்காக சிலவற்றைப் பேசுகின்றார்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று இல்லாவிட்டாலும், அதைப் பயன்படுத்திக் கொண்டு நாம் என்னென்ன செய்தோம் என்பதை மக்களுக்கு நினைவூட்டு வதற்காக ஒரு வாய்ப்பாகக் கொண்டு இதனை எழுதியிருக்கிறேன்.

இந்த விவரங்களை நீயும் தெரிந்து கொள்வதோடு, தொகுதியிலே உள்ள உடன்பிறப்புகளுக்கும் சொல்லி அவர்களை யெல்லாம் நமது உதய சூரியன் சின்னத்திலே வாக்களித்து வெற்றிக் கனியைப் பறித்திட ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சோதனைகளை வென்ற கழக அரசின் சாதனைகளே; ஜனநாயகக் களத்தில் நமது போர்க் கருவிகள் என்பதை மறந்து விடாதே!

அன்புள்ள,

மு.க.

16-12-2009

3443. அவர்களும் நாமும்; ஓர் ஒப்பீடு!

உடன்பிறப்பே,

என்னுடைய செயலாளர் இன்று (18-12-2009) மதியம் என்னிடம் ஒரு செய்தியைக் கூறினார். திண்டுக்கல் நகரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 19, 20 ஆம் தேதிகளில் ஒரு மாநாடு நடத்த விருப்பதாகவும், 21 ஆம் தேதி பேரணி நடத்த விருப்பதாகவும் போலீசார் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்றும் தோழர் வரதராசன் அவர்களே தொலைபேசி வாயிலாகத் தெரிவித்தார் என்றும் திரிபுரா மாநில முதலமைச்சர் அந்த மாநாட்டில் கலந்து கொள்வதாகவும் முதல்அமைச்சரிடம் கூறி ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொண்டார் என்று என் செயலாளர் என்னிடம் கூறியவுடன், அவரிடம் நான் உடனடியாக தொடர்புடைய காவல்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அந்த மாநாட்டிற்கும், பேரணிக்கும் அனுமதியினை வழங்குமாறு அறிவுறுத்தினேன்.

அதன் பின்னர் முரசொலி அலுவலகத்தில் நுழைந்த என் கண் எதிரே இன்றைய "தீக்கதிர்" நாளேடு இருந்தது. அதன் முதல் பக்கத்தில் கட்டம் கட்டி ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தி வருமாறு :-

"2009-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மதுரை தொகுதியிலிருந்து மு.க.அழகிரி வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்கக் கோரி, சென்னை உயர் நீதி மன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினரும், முன்னாள் மதுரை நாடாளுமன்ற உறுப்பினரும், மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டவருமான தோழர் பொ. மோகன் அவர்கள் வழக்கு தொடுத்திருந்தார். பொ.மோகன் அவர்கள் மறைவுற்ற பின்னணியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு உறுப்பினர் ஏ. லாசர் (மாற்று வேட்பாளராக

மனு செய்தவர்) வாதியாகச் சேர்க்கப்பட்டு அவ்வழக்கை தொடர்ந்து நடத்துவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இந்த வழக்கு நடைபெறட்டும். நீதிமன்றம் தீர்ப்பு கூறட்டும். அவர்களின் தீர்ப்பை நமது கழகம் ஏற்கத் தயாராக இருக்கிறது. ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே உள்ள சிலர் எப்படிப்பட்ட உணர்வோடு இருக்கிறார்கள், நாம் எப்படிப்பட்ட உணர்வோடு இருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்காக ஒருசிலவற்றை எண்ணிப் பார்த்தேன்.

23-4-1997 - அப்போது தி.மு.கழகம்தான் ஆட்சியிலே இருந்தது. அன்று மதுரையில் மாநகராட்சி உறுப்பினராக இருந்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி லீலாவதி அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்து 24-4-1997 அன்று பேரவையில் ஒரு சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்கு பதிலளித்து நான் உரையாற்றும்போது, "மதுரையிலே கொலை செய்யப்பட்ட திருமதி லீலாவதி அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு கடுமையான உழைப்பாளி. பொது நலத் தொண்டர். அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய கணவர் திரு. குப்புசாமி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில், தன் மனைவி லீலாவதி மதுரை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், அதே வார்டில் அவருக்கு எதிராக திருமதி வள்ளி (கருமலையான் என்பவரின் துணைவியார்) போட்டியிட்டு தோல்வியடைந்து விட்டார் என்றும், அதன்பிறகு கருமலையானும், அவரது சகோதரர் முத்துராமலிங்கமும் (இவர் 59வது வட்ட தி.மு.கழகச் செயலாளர்) திருமதி லீலாவதியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்து, அவரைப் பயமுறுத்திச் சென்றார்கள் என்றும், 23-4-1997 காலை திருமதி லீலாவதி கடைக்குச் சென்றபோது அவரை மேற்கண்ட இரு நபர்களும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்து அரிவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களால் தாக்கியதால் திருமதி லீலாவதி அதே இடத்தில் இறந்துவிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு, கருமலையான் கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற எதிரிகளையும் கைது செய்ய

காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வது - இந்தக் கொலையிலே சம்பந்தப் பட்டவர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்த தி.மு.க. வினர் என்றாலும்கூட, எந்தவிதமான தயவு தாட்சண்யமும் காட்டாமல், பாரபட்சமின்றி அரசு காவல்துறை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்."

இவ்வாறு நான் கூறியதோடு மட்டுமல்ல, அந்த வழக்கில் குற்றவாளிகள் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றபோதிலும் - அப்போது ஆளுங்கட்சியாக தி.மு.கழகம் இருந்த போதிலும் - அந்த வழக்கு முறையாக நடைபெற்று தி.மு.க.வைச் சேர்ந்த குற்றவாளிகள் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டார்கள். ஜாமீனிலே வரக்கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் - "அந்த வழக்கிலே அரசாங்க வழக்கறிஞர் ஆஜராகக் கூடாது, அரசாங்க வழக்கறிஞர் வாதாடினால் தி.மு.க.வைச் சேர்ந்த குற்றவாளிகள் தப்பிவிடுவார்கள், எனவே எங்கள் கட்சியைச் சேர்ந்த, நாங்கள் சொல்லும் வழக்கறிஞரைத்தான் ஆஜராக ஆணையிட வேண்டு"மென்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அதனையும் நான் ஏற்றுக் கொண்டு, அவர்கள் தெரிவித்த வழக்கறிஞரையே அந்த வழக்கில் வாதாட நியமித்தேன். வழக்கு நடைபெற்று தி.மு.க. வைச் சேர்ந்த அந்தக் குற்றவாளிகள் நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டார்கள். இது நடைபெற்ற சம்பவம்.

இந்த நேரத்தில் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சியிலே நடை பெற்ற ஒரு சம்பவத்தையும் உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குடவாசலில் தங்கய்யா என்ற ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கொல்லப்பட்டார். அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த ஆட்சியிலே பொறுப்பிலே இருந்த ஒரு அமைச்சருடைய காரிலேயே பாதுகாக்கப்பட்டார். கழக ஆட்சி வந்த பிறகுதான் அந்த வழக்கிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இதையெல்லாம் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். 2008ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாநிலங்களவைத் தேர்தல் நடை பெற்றது. அதற்கு முன்பு 2007ஆம் ஆண்டு நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில், 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது செய்து கொண்ட உடன்பாட்டின்படி தி.மு. கழகம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் தோழர் திரு. டி. ராஜா அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தது. 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு மாநிலங்களவைத் தேர்தல் குறித்து எந்த உடன்பாடும் செய்து கொள்ளவில்லை. இருந்தாலும் தி.மு. கழகம் தன்னுடைய தோழமைக் கட்சிகளிடம் கொண்டுள்ள தோழமை உணர்வோடு, 2008ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் தன்னிடம் கூடுதலாக இருந்த 28 வாக்குகளை வழங்கி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரை ஆதரிக்க முன்வந்தது. ஆதரிக்க முன்வந்ததோடு மட்டுமல்லாமல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட தோழர் டி.கே. ரெங்கராஜனின் வேட்பு மனுவையே முன்மொழிந்து நான்தான் கையெழுத்திட்டேன். அந்த நேரத்தில் பேட்டியளித்த ரெங்கராஜன் தான் மாநிலங் களவையில் நுழைவதற்கு வழிவகுத்த கலைஞர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதாக கூறியதோடு, "தமிழ்நாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இதுவரை டெல்லி மேல்சபை உறுப்பினர்களாக பி. ராமமூர்த்தி, எம்.ஆர். வெங்கட்ராமன், நல்லசிவம் ஆகிய மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இப்போது மார்க்சிஸ்ட் உறுப்பினராக நான் (டி.கே. ரெங்கராஜன்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். நாங்கள் நான்கு பேருமே தி.மு.க.வின் சார்பில் மேல்சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். முதல்வர் கலைஞர் எனது வேட்பு மனுவை முன்மொழிந்தது மட்டுமல்லாமல், இந்தத் தேர்தலில் போட்டி வரும் என்றால் தி.மு.க.வின் வாக்குகளை மேலும் அளிப்பதாக உறுதி கூறினார். முதல்வர் கலைஞர் அவர்கள் தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்தார். இதை மனதில் வைத்துத்தான் கடந்த காலங்களில் சட்டமன்ற நாடாளுமன்ற மேல்சபை தேர்தல்களுக்கான ஒதுக்கீடுகளை அவர் செய்துள்ளார்"

என்று கூறியது ஏடுகளில் இன்னமும் இடம் பெற்றுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றல்ல - தோழமைக் கட்சிகளோடு - அவர்கள் தோழமையாக இருந்த காலத்திலும் சரி, இல்லாத காலத்திலும் சரி - எந்த அளவிற்கு நேச உணர்வோடு விட்டுக் கொடுத்து அனுசரணையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாக தி.மு.கழகம் நடந்து கொள்கிறது என்பதை தெளிவாக்கவும், அதே நேரத்தில் மற்ற கட்சிகள், குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்படி நடந்து கொள்கிறது என்பதை அந்தக் கட்சியின் தோழர்களே தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும்தான் இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு.க.

20-12-2009

3444. மீண்டும் இதோ; என் அன்பழைப்பு!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை மாநகரில் 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 முதல் 27ஆம் தேதி வரை நடைபெறவிருப்பதையும், அந்த மாநாட்டினை சீரும் சிறப்புமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க சான்றோர்கள், ஆன்றோர்கள், அறிவுலக மேதைகள், தமிழ் ஆர்வலர்கள், ஆன்மீக வாதிகள், கலையுலகில் உள்ளோர் ஆகியோரைக் கொண்ட 21 குழுக்கள்; மாநாட்டுத் தலைமைக் குழு - மாநாட்டு ஆலோசனைக் குழு - மாநாட்டுச் சிறப்பு மலர்க் குழு - மாநாட்டு ஆய்வரங்க அமைப்புக் குழு - மாநாட்டு ஏற்பாடுகள் மேற்பார்வைக் குழு - வரவேற்புக் குழு - மாநாட்டு அரங்க அமைப்புக் குழு - பொது அரங்க நிகழ்ச்சிகள் அமைப்புக் குழு - ஊர்வலக் குழு - விருந்தோம்பல் குழு - தமிழ் இணைய மாநாட்டுக் குழு - மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு - கண்காட்சி அமைப்புக் குழு - கலை நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாக் குழு - தங்கும் இட ஏற்பாட்டுக் குழு - மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரக் குழு - கோவை மாநகர மேம்பாட்டுக் குழு - மருத்துவம் மற்றும் சுகாதாரக் குழு - போக்குவரத்து ஏற்பாட்டுக் குழு - பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் மீட்புப் பணிகள் குழு - ஆய்வரங்க அமைப்பு உதவிக் குழு என்றெல்லாம் அமைக்கப்பட்டு, அந்தச் செய்திகள் ஏடுகளின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் எல்லாம் தத்தம் பணிகளைத் தொடங்கவிருக்கின்றன.

குழுக்களில் உறுப்பினர்களாக என் நினைவிற்கு வந்தவரை பலரை இடம் பெறச் செய்துள்ளேன். அவர்களையன்னியில்; அவர்களைப் போன்ற திறமைமிக்கவர்கள் மேலும் பலர் இருந்த போதிலும், அவ்வளவு பேரையும் இடம் பெறச் செய்ய இயலாமல் ஓரிருவர் பெயர் விட்டுப் போயிருக்கக் கூடும். அதனை அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். குழுக்களிலே இடம் பெற்றுள்ள

சிலருக்கு இந்தக் குழுவினை விட வேறு குழுக்களிலே இடம் பெற்றிருந்தால் மேலும் சிறப்பாக பணி செய்திருக்க முடியுமே என்று கூட எண்ணத் தோன்றலாம். நடைபெறப்போவது நமது செம்மொழிக்கான மாநாடு. இதிலே அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை மனதிலே கொண்டு அனைவரையும் தமிழ்ப் பணி புரிந்திட உரிமையோடு அழைத்திடுகின்றேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு தம்பி கவிஞர் பா. விஜய் என்னைச் சந்தித்தார். அவரது கையிலே ஏராளமான ஓவியங்கள், சில புத்தகங்கள். அவற்றையெல்லாம் என்னிடம் அவசர அவசரமாக நேரமின்மை காரணமாகக் காட்டினார். அந்த ஓவியங்கள் எல்லாம் மாநாட்டின் முகப்பு இப்படி இருக்கலாமா என்பதற்காக அவரே ஓவியரை வைத்து வரைந்து கொண்டு வந்திருந்ததையும், மாநாட்டினையொட்டிய சிறப்பு மலரின் அட்டைப் படம் இப்படியிருக்கலாமா என்பதற்கு பல படங்களையும் காட்டினார். அதையெல்லாம் பார்த்தவுடன் நான் வியப்பில் ஆழ்ந்துவிட்டேன். மாநாட்டுப் பணிகளிலே அவரை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று உடனடியாக முடிவு செய்தேன். வேறு சில வெளிநாட்டினர் மாநாட்டிலே கலந்து கொள்வதற்கான ஆயத்தங்களிலே ஈடுபட்டு விட்டதாகவும், எப்போது ஜூன் திங்கள் வரும் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருப்பதாகவும் தொலைபேசி வாயிலாகவும் கடிதங்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு வருகிறார்கள்.

இந்தப் பட்டியலிலே எனக்கு வேறு ஒரு அனுபவம். "தினமணி" நாளிதழ் பல நேரங்களில் நமது கழகத்தையும், கழக அரசையும் தாக்கி எழுதும் என்றாலும், அது ஒரு வரம்பிற்குள் இருக்கும். சில நேரங்களில் கழக அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி தலையங்கங்களைக் கூட எழுதத் தயங்கியதில்லை. அந்தத் தலையங்கங்களை "முரசொலி"யிலும் எடுத்து வெளியிட்டிருக் கிறோம். பத்திரிகை சுதந்திரத்திலே அவர்களுக்கு முழு உரிமை உண்டு. என்னைத் தாக்கி வெளியிட்ட கேலிச் சித்திரங்களைக் கூட நானே பல முறை ரசித்திருக்கிறேன். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதனிடம் எனக்கு ஒரு தனி அன்பு உண்டு. அரசியல் கொள்கையிலே வேறுபட்ட கருத்துகள் அவருக்கு இருந்தாலும், தமிழ், தமிழர், இலங்கைத் தமிழர் போன்றவற்றில் அவர் மிகுந்த ஈடுபாடு உடையவர் என்பதை

நான் அறிந்தவன். வாரந்தோறும் "கலாரசிகன்" என்ற புனைப் பெயரில் தினமணியில் அவர் எழுதும் இலக்கிய விமர்சனங்களை நான் தொடர்ந்து படித்து வருகிறேன். உலகத் தமிழ் மாநாட்டினை நடத்த வேண்டுமென்று என்போல் எண்ணம் கொண்டவர்களில் வைத்தியநாதனும் ஒருவர் என்பதை நான் நன்றாகவே அறிவேன். அந்த வகையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அவருக்கு ஒரு இடம் அளிக்கப்பட வேண்டுமென்று நான் கருதினேன். அவர் மட்டுமல்ல - இந்து இதழின் திரு. என். ராம் அவர்களும், தினத்தந்தி இதழின் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களும், "சன்" தொலைக் காட்சி குழுமத்தின் தம்பி கலாநிதி மாறன் அவர்களும், தினமலரின் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்களும், (அறிவிக்கவுள்ள ஆய்வரங்க விளக்கக் குழுவிலே இடம் பெற உள்ளார்) மாலை முரசு இதழின் திரு. ராமச்சந்திர ஆதித்தன் அவர்களும், தேசிய முரசு இதழின் திரு. கோபண்ணா அவர்களும், நக்கீரன் இதழின் கோபால் அவர்களும், கலைஞர் தொலைக்காட்சியின் ரமேஷ் பிரபா அவர்களும் இந்தக் குழுக்களிலே இடம் பெற வேண்டுமென்று விரும்பி அவ்வாறே இடம்பெறச் செய்திருக்கிறேன்.

இதற்கிடையே "தினமணி" ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன் அவர்கள் டிசம்பர் 16ஆம் தேதியிட்டு எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதனை வெளியிட்டால் அவர் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார் என்றெண்ணி, இங்கே அதனை வெளியிடுகிறேன். அந்தக் கடிதம் வருமாறு :-

என் பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு,

அன்பு வணக்கங்கள்.

தங்களது உள்ளத்தின் அடித்தளத்தில் என் மீது தங்களுக்கு இருக்கும் அன்பும் பாசமும் நான் நன்கு அறிவேன். உரிமை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு என்மீது தங்களுக்கு அக்கறையும் நம்பிக்கையும் உண்டு என்பது நான் அறியாதது அல்ல.

அரை நிஜார் பருவத்தில் 45 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை திலகர் திடலில் பள்ளி மாணவனாகத் தங்களது உரையைக் கேட்க முன் வரிசையில் அமர்ந்திருந்த காலம் தொடங்கி இன்று வரை தங்களது எழுத்துக்கும் தமிழ்ப் பற்றுக்கும் மகுடியில் கட்டுண்ட பாம்பாக மயங்கி நிற்பவன் நான்.

உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் ஆர்வமும் வேகமும் எனக்குக் கொஞ்சநஞ்சம் அல்ல. தங்களது ஆட்சிக் காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்படவில்லையே என்கிற ஆதங்கம் எனக்கு நிறையவே இருந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த மாநாடு நடத்தப்படாமல் போனால், தமிழ் மீது தாளாத பற்றும் பாசமும் கொண்டிருந்தும் தங்களது புகழுக்கு நிலவில் களங்கம் போல ஒரு தீராப் பழி ஏற்பட்டுவிடும் என்று நான் பலமுறை வேதனை உற்றதுண்டு.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்பது எனது கனவும் கூட. நீங்கள் முதல்வராக இருக்கும்போது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்புடன் நடைபெறுவது என்பது தமிழுக்கு பெருமை, தமிழனுக்குப் பெருமை, தமிழகத்துக்குப் பெருமை.

என்னைப் பற்றி உங்களைவிட நன்றாகத் தெரிந்து வைத்திருப்பவரும், புரிந்து வைத்திருப்பவரும் வேறு யாரும் இருக்க முடியாது. எனக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரக் குழுவில் என்னை உறுப்பினராகச் சேர்த்திருப்பதில் மகிழ்ந்தேன் என்பதைவிட நெகிழ்ந்தேன் என்பதே உண்மை.

எந்த ஒரு வேலையை எடுத்துக் கொண்டாலும் அதில் என்னை முழு மனதுடன் கடிவாளம் போடப்பட்ட குதிரையைப் போல ஈடுபடுத்திக் கொள்பவன் நான். இப்போதைக்கு என்னுடைய எண்ணமும், செயலும், எழுத்தும் முழுமையாக தினமணியில் மையம் கொண்டிருக்கிறது. வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவோ செயல்படவோ என்னால் இயலாது. ஆகையால் எனக்கு வழங்கப் பட்டிருக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் நான் இல்லை என்பதைத் தங்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தங்களது நம்பிக்கையை நான் தகர்க்கிறேன் என்றோ, அன்புக் கட்டளையை மீறுகிறேன் என்றோ தயவு செய்து கருதலாகாது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு தினமணியின் முழு ஒத்துழைப்பும், பங்களிப்பும் நிச்சயமாக உண்டு. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், எனது அருமை நண்பருமான முனைவர் ம.ராஜேந்திரனும் நானும் அடிக்கடி இது பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கிறோம். மாநாடு வெற்றியடைய எனது

ஆக்கப் பூர்வமான பங்களிப்பு, குழுவில் இடம் பெறாமல் தொடரும் என்பதில் தங்களுக்கு எள்ளளவும் ஐயம் வேண்டாம்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்பது தங்களது கனவு மட்டுமல்ல, எங்களது கனவும் கூட. அந்தத் தமிழ்ப் பணியில் மேடையில் வீற்றிருக்கும் உறுப்பினராக இல்லாமல், பங்களிப்பு நல்கும் தமிழ் ஆர்வலனாக "உங்கள் வைத்தியநாதன் இருப்பான்" என்பதை நான் தங்களுக்கு வலியுறுத்தத் தேவையில்லை.

நன்றி, வணக்கம்.
என்றென்றும் அன்புடன்,
கே. வைத்தியநாதன்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் நாம் அறிவித்த குழுவிலே இடம் பெற மறுத்துவிட்டாரே என்று நான் எண்ணவில்லை. அவர் கடிதம் கிடைத்த சில நிமிடங்களுக்கெல்லாமே - அவருக்கு நான் ஒரு பதில் எழுதினேன். அந்தப் பதில் கடிதம் இதோ :-

அன்புடையீர்,

வணக்கம். உணர்ச்சிமிக்க தங்கள் கடிதத்தைக் கண்டேன். வெளி உலக அரசியலுக்கு ஒரு தோற்றம் என்றாலும், உள்ளொளியில் கலந்திருக்கின்ற

உணர்வையும், உறவின் திண்மையையும் கண்டு பெரிதும் வியக்கிறேன். தமிழின்பால் தடம் மாறாப் பற்றுகொண்ட தங்களைப் போன்றோர் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு முயற்சியில் - தேரிழுப்போர்களில் ஒருவராக இல்லாவிட்டாலும் - தேரின் வடத்தைத் தாங்கிக் கொண்டு வருபவராக இருந்தால் போதும்! அந்த எண்ணத்தோடு தான் குழுக்களின் அறிவிப்பில், தங்கள் பெயரும் இணைக்கப்பட்டது. மறுத்திடாமல் ஏற்றுக் கொள்வதோடு, மாநாட்டுக்குச் சிறப்பினைச் சேர்க்க மீண்டும் வேண்டுகிறேன்.

அன்புள்ள,
மு. கருணாநிதி.

இந்த என் கடிதத்தை நான் அனுப்பிய சில மணி நேரங்களிலேயே எனக்குத் திரு. வைத்தியநாதனிடமிருந்து நல்லதோர் பதில் கிடைத்தது. அந்தப் பதிலும் வருமாறு :-

பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு,

அன்பு வணக்கங்கள். என்னுடைய கடிதத்தைத் தொடர்ந்து தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். என் மீது தாங்கள் கொண்டுள்ள அன்பையும், நம்பிக்கையையும் கண்டு பெரிதும் உவக்கின்றேன். தங்களுடைய வேண்டுகோளை இனியும் மறுப்பது என்பதேது?

எனினும் புறச் செயல்பாடுகளை விடவும் ஆய்வரங்குகள், ஆய்வுக் கோவைகள், பன்னாட்டுத் தமிழறிஞர்கள் உறவு போன்ற உள்ளார்ந்த களத்தில் என்னால் முழு மனதுடனும், ஆர்வத்துடனும் இயங்க முடியும் என நம்புகிறேன், விரும்புகிறேன்.

எனது கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு ஆவன செய்வீர்கள் என்கிற வேண்டுகோளுடன்,

நன்றியும், வணக்கமும்.
என்றென்றும் அன்புடன்,
கே. வைத்தியநாதன்.

உடன்பிறப்பே, என் வேண்டுகோளையேற்று முதலில் வர மறுத்துள்ளோரும் இவர்போல் வளமிகு தமிழுக்கு வலிமை சேர்க்க முனைவோர் உளமகிழ்ந்து ஒன்றாகக் கூடி கோவையில் செம்மொழிக் கொடியேற்றி குதூகலிக்க இருப்பது கண்டு தேன் கலந்த தெவிட்டாத அமுதுண்ணும் இன்பத்தை உலகத் தமிழர்களாம் நாமெல்லாம் பெறும் அரிய வாய்ப்பில் ஓரிருவர் குறையினும், அஃதோர் குறையென நான் எண்ணுவதால்தான், அதை எதிரொலிக்கும் இக்கடிதப் போக்குவரத்தை வெளியிட்டுள்ளேன் எனக் குறிப்பிடுவதோடு இவர் போல் அந்தக் குறை போக்கிடும் நிறை மனத்தினர் இன்னும் இருப்போர் இருப்பின், அவர்க்கும் சேர்த்தே மீண்டும் என் அன்பழைப்பு. நடைபெறவிருப்பது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு. இதில் தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எனவே அமைக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்களில் தங்கள் தங்கள் பெயர்கள் இல்லை என்று எண்ணாமல் மாநாட்டின் வெற்றிக்காக அவரவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,
மு.க.
21-12-2009

3445. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-1

உடன்பிறப்பே,

ஓய்வுக்காக வந்திருக்கிறேன் என்று நீ எண்ணிக் கொண்டிருப்பாய். ஓய்வுக்காக அல்ல; அல்ல! ஒப்பற்ற முறையில் நடக்க விருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்குக் கடிதங்களைக் கொண்டு, ஒரு தோரணவாயில் அமைக்கின்ற ஆர்வத்தோடு தான், இந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொள்கிறேன். தோரணவாயில் அமைக்க நான் கொட்டிவைக்கும் கற்களின் குவியல் இது!

அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சராக முன்னின்று நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையும் சேர்த்து, இதுவரை "உலகத் தமிழ்மாநாடு" என்ற பெயரில் எட்டு மாநாடுகள் நடந்தேறியுள்ளன.

சென்னையில் சிறப்புறவும், கண்டோர் வியப்புறவும் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழர்களின் உள்ள உணர்விலும், அறிவுத் திறனிலும் விதைத்த மிகப்பெரிய மாற்றத்தின் காரணமாக; அறிஞர் அண்ணா அவர்கள்,

> "திராவிடர்தம் மொழியாம் செந்தமிழ் மொழியின் மேன்மையும் மேம்பாடும் சீரும் சிறப்பும் உலகப் பார்வையில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.
>
> தமிழின் சிறப்பியல்புகளை - செம்மொழிக் கேற்ற சீரிளம் இயல்புகளை மொழிவல்லார் பலரும் மெத்தவும் மெச்சிடுகின்றனர்.
>
> தமிழ்மொழி, காலத்தால் மிக மிகத் தொன்மையானது. இலக்கண இலக்கிய விதிகளையும் வரைமுறைகளையும் செவ்வனே பெற்றுள்ளது. தூயது - தூய்மையானது. துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்திடும் சொல்

வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும் நுண்ணியமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை - கொள்கை கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

சூடு, சுவை, சூட்சுமம், மதி நுட்பம் வாய்ந்த குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை அத்துணையும் ஆற்றிடவல்ல சொல்லாரம் தமிழ்க் களஞ்சியத்தில் ஏராளம், ஏராளம், மிக மிக ஏராளம்; எடுக்க எடுக்கக் குறையாதது. கொடுக்கக் கொடுக்க மாளாதது நம் தமிழ்மொழியின் வளம் - வல்லமை.

தமிழ் இனியது. அழகியது. ஆற்றல் மிக்கது, வற்றாத ஊற்றான சொற்செறிவும், பொருட்செறிவும், நாகரிக நயமும் நேர்த்தியும் கொண்டது. அது தொன்மையானது. தூயது! என்றும் அழியாத வியத்தகு சீரிளமைத்திறம் உடைத்தானது என்பதெல்லாம் உண்மை-வெறும் புகழ்ச்சியல்ல என்பதை ஊரும் உலகும் ஒப்பிடத் தொடங்கியுள்ள காலக்கட்டத்தில் நாம் வாழ்கின்றோம்!"

-என்று பீடும் பெருமையும் கொண்டு பேசினார்கள்.

இப்போது, 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை

5 நாட்களுக்கு, கொங்குப் பகுதியின் கோலமிகு திருநகரமாம் கோவையில் நடைபெறுமென நாம் அறிவித்திருப்பது, "உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு" ஆகும். மாநாட்டுக்கான தொடக்கக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மாநாடு நடைபெறவுள்ள நாட்கள்;
மாநாடு நடைபெறவுள்ள இடம்;
மாநாட்டை அழகு மிளிர்ந்திடவும்;
ஆய்வரங்கங்கள், பொருளாழம் கொண்டதாகவும்-
அடுத்துவரும் தலைமுறையினர்க்கு
அறிவூட்டுவதாகவும்-
அன்னைத் தமிழுக்கு மேலும் பொலிவு தரும் புத்தம்புதிய அணிகலன்கள் பூட்டுவதாகவும் அமைந்திடவும்;

பொது அரங்கங்கள், இதுவரை கண்டிராத உணர்ச்சியையும்,
ஊக்கத்தையும், வெள்ளமெனப் பெருக்கி
உலகெங்கணும் உள்ள தமிழர்களிடைப் பாய்ச்சுவதாகவும்;
கண்காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக,
கண்களின் நினைவுகளில்,
காலமெலாம் நின்று நிலைத்து ஒளி உமிழ்வதாகவும்;
ஊர்வலம்- தமிழர் நாகரிகம், பண்பாடு,
பன்முகத் தோற்றம், தொன்மை,
தரணி போற்றிடும் தமிழிலக்கியத்தின் மேன்மை,
மென்மை ஆகியவற்றைப் பேசும் சித்திரப்
பாவைகளாக உருக்கொண்டு,
ஊர்வலமாக மட்டுமன்றி,
உலகவலமாகப் பிரமிப்பூட்டுவதாகவும்;
நடத்துவதற்குத் தக்கவகையில்
சான்றாண்மை மிக்கோர் பலரையும்
இணைத்து 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளபடியே சொல்லப்போனால், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற வகையில், நாம் நடத்திடப் போவது, முதல் மாநாடாகும். நமது தமிழ்மொழி, 'செம்மொழி' என்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் நிரம்பவே பெற்றிருப்பதால், அதனைச் செம்மொழியென அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று; இன்று, நேற்றல்ல - ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே குரலெழுப்பப்பட்டது.

அன்று எழுப்பப்பட்ட அந்தக் குரல் - தமிழ்க் குரல் - மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, காலப்போக்கில் - தமிழறிஞர்களின் குரலாக - தமிழ் ஆர்வலர்களின் குரலாக - தமிழ்ச் சமுதாயத்தின் குரலாக - அரசியலரங்கத்தில் ஆற்றல் செறிந்த குரலாக - உருப்பெற்று; அந்தக் குரலை, கேளாக் காதினர் மதித்திடத் தவறிவிட்டாலும்; செவித்திறனும், சீர்த்த பண்பும் உடையோர் அதனை மதித்துப் போற்றி; அந்தக் குரலின் மாண்பமைந்த நியாயத்தை உணர்ந்து; தமிழ் செம்மொழியே என, இந்தியத் திருநாட்டளவில் அங்கீகாரம் செய்து பிரகடனப்படுத்தப்பட்ட நாள் 12.10.2004.

அந்த நாள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெற்ற உரிமைப் போராட்ட வரலாற்றில், உயர்ந்த நாள், உன்னதமான

நாள்; மாத்தமிழர் என்றென்றும் மறந்திடவியலாத மரகதத் திருநாள்! முன்னைப் பழைமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும், புதுமையாய், என்று பிறந்ததென்ற இயல்பறியாததாய், சீரிளமைத் திறம் கொண்டதாய் வளர்ந்து செழித்திருக்கும் செந்தமிழ், செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பரிணாம வரலாற்றை; உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சரியான தருணத்தில், நான் நினைவு கூர்ந்து உனக்குச் சொல்வதும்; நீ அதனை அறிந்து கொள்வதும், அறிந்து கொண்டவற்றை நினைவிலே தேக்கி, உனது உற்றார் உறவினர்க்கும், மற்ற உடன்பிறப்புக்களுக்கும் எடுத்துரைப்பதன் மூலம் புதிய எழுச்சியும் இன்பமும் கொள்வதும்; நாம் கொண்டிருக்கும் பொருள் பொதிந்த உறவின் காரணமாகப் பொருத்தமானதே!

1887-ல் பண்டைத் தமிழறிஞர் வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள் "தமிழ்மொழியின் வரலாறு" என்ற தமது நூலின் முடிவுரையில்:

"வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ்மொழியும் உயர்தனிச்செம்மொழியாமாறு சிறிது காட்டுவாம். தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பலமொழிகட்குந் தலைமையும் அவற்றினும்மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி. இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ் - தெலுங்கு முதலிய வற்றிற் கெல்லாந்தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி என்னப்படும். தான் பிறமொழி கட்குச் செய்யும் உதவி மிகுந்தும், அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ்மொழியினுதவி களையப்படின், தெலுங்கு முதலியன இயங்குதலொல்லா; மற்றுத் தமிழ்மொழி அவற்றினுதவியில்லாமலே சிறிது மிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இஃது இந்திய மொழிநூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியே யென்க. இனிச் செம்மொழியாவது யாது?"

- என்று தமிழை உயர்மொழி என்றும் தனிமொழி என்றும் வலியுறுத்திய பின்னர் பரிதிமாற்கலைஞர் அவர்கள், செம்மொழியாவது யாது? என்ற வினாவுக்கு விடையளித்திடும்போது:

"திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழி யாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளி தினுணர வல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின் கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறபாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழியென்பது திண்ணம். இது பற்றியன்றே தொன்று தொட்டுத் தமிழ் மொழி செந்தமிழ் என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளி ராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும், உயர்தனிச் செம்மொழியே யாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங் கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச்செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்."

– என்று தமிழ்மொழியைச் செம்மொழி என நூறாண்டுகளுக்கு முன்பே அறுதியிட்டு, உறுதியாக நிலைநாட்டிக் குரல் கொடுத்தார்.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின், தாம் மேற்கொண்ட இதே நிலையைத்தான் இறுதிவரை பரிதிமாற்கலைஞர் வலியுறுத்தி வந்தார். பேராசிரியர் இராகவையங்கார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த "செந்தமிழ்" எனும் மாத இதழில், 1902ஆம் ஆண்டு, "உயர்தனிச் செம்மொழி" என்று தலைப்பிட்ட கட்டுரையில்,

பரிதிமாற்கலைஞர் “தென்னாட் டின்கட் சிறந்தொளிராநின்ற நம் அமிழ்தினு மினிய தமிழ்மொழி எவ்வாற்றாணாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாமென்பது திண்ணம். இத்துணையுயர்வுஞ்சிறப்பும் வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங் கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத், தென்னாட்டுயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்” - என்று விளக்கி உரைத்தார்.

அதனால்தான்; மதுரை மாவட்டம், திருப்பரங் குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி எனும் கிராமத்தில் கதவு எண்.4-219-ல், 2508 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவில்லமாகப் பராமரித்திட 16.11.2006 அன்று ஆணையிட்டு; தனியார் பொறுப்பிலிருந்த அந்த இல்லத்தை கையகப்படுத்திட, 1.12.2006-ல் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 534 ரூபாய் அனுமதிக்கப்பட்டு - அந்தப் பழைய இல்லம் கழக அரசால், 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு - புதிய பொலிவுடன் நினைவில்லமாக்கப்பட்டு - நினைவில்லத்தின் முகப்பில் பரிதிமாற்கலைஞர் அவர்களின் மார்பளவு சிலை ஒன்றும் நிறுவப்பட்டு - 31.10.2007 அன்று பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற்கலைஞரின் நினைவில்லத்தைத் திறந்து வைத்து; வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள அவரது மார்பளவு வெண்கலச் சிலையைத் திறந்துவைத்து; பின்னர் நினைவில்லத்தில் அவரது வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு; அங்கு வைக்கப் பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில்,

“தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரி குரல்கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க!”

- என நான் எழுதிக் கையெழுத்திட்டேன்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரிய முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்பதால் தான், கழக அரசு வேறுசில சிறப்புகளையும் அவருக்குச் செய்திருக்கிறது. பரிதிமாற் கலைஞர் படைத்துள்ள நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கி,

அவரது மரபுரிமையர்க்கு 2.12.2006 அன்று 15 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் கோரிக்கை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ஏற்கப்பட்டு, 17.8.2007 அன்று பரிதிமாற் கலைஞர் நினைவு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தமிழில் நாடக இலக்கண நூல் இல்லாத குறையைப் போக்க விரும்பி, தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஆராய்ந்து, நாடகவியல் என ஒரு நூல் எழுதி வெளியிட்டவர் பரிதிமாற்கலைஞர்.

இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி உட்பட உள்நாட்டு மொழிகளைப் பாடப்பகுதியிலிருந்து நீக்கிட திட்டமிட்டபோது; பரிதிமாற் கலைஞரும், திரு.பூர்ணலிங்கம் பிள்ளையும், தமிழறிஞர்களின் வீடுதோறும் சென்று, முயன்று பல்கலைக்கழகத்தின் திட்டத்தைத் தடுத்தனர்; தமிழ்மொழி தொடர்ந்து பல்கலைக் கழகப் பாடமொழியாக நீடித்தது.

தமிழ்மொழியைச் செம்மொழியென்று பிரகடனப் படுத்துவதற்கு அடித்தளம் அமைத்த பரிதிமாற்கலைஞர் - நூறாண்டுக்கால மொழி உரிமை வரலாற்றைத் தொடங்கி வைத்த தமிழறிஞர் - ஏறத்தாழ 33 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அப்பெருமகனார் - தமிழ் மொழி வரலாற்றில் நிலைத்த புகழைக் கொண்டுள்ளார்.

சூரியநாராயண சாஸ்திரியார் எனும் பரிதி மாற்கலைஞர் அவர்கள்; வடமொழியாளரின் ஏமாற்று வேலைகள் எப்படிப்பட்டவை என்பதை - அவர்களது முகத்திரையைக் கிழித்து, அணிந்திருந்த முகமூடியைக் கழற்றி - அவர்களது வேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார். “தமிழ்மொழியின் வரலாறு” என்ற அவரது நூலில் உள்ள அந்தப் பகுதி, தமிழர்கள் அனைவரும் - குறிப்பாக பெரியார், அண்ணா வழி வந்தவர்கள் - தவறாது நினைவு கூரத்தக்கதாகும். அது பின்வருமாறு:

“வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற் பயிற்சிக்கு உடையாராயும், கலையுணர்ச்சி சான்றவராயுமிருந்தமை பற்றித்

தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர்; தமிழர்களிடத்தில்லாதிருந்த 'அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்' என்ற நால்வகைச் சாதி முறையை மெல்ல மெல்ல நாட்டி விட்டனர்.

"முற்படைப் பதனில்வே றாகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டில் நீர், நாட்டினீர்"

– என்று ஆரியரை நோக்கி முழங்குங் 'கபிலரகவ' லையுங் காண்க. இன்னும் அவர்தம் புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம், அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்"

– என்று பரிதிமாற்கலைஞர் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னரே எடுத்துக்காட்டுகளுடன் இயம்பியிருப்பது; பெரியார் – அண்ணா எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறதல்லவா? அதனால் தான் சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களை, முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்று அழைத்து அவர் புகழ் வாழ்க என்று எனது நெஞ்சத்து உணர்வு கலந்து வாயார வாழ்த்தி எழுதினேன்!

அன்புள்ள,
மு.க.
25-12-2009

3446. செம்மொழி வரலாற்றில்
சில செப்பேடுகள்-2
கால்டுவெல் காட்டிய திராவிடத் தனிச்சிறப்பு

உடன்பிறப்பே,

தமிழ்மொழி செம்மொழியென முதல் குரல் கொடுத்த தமிழர் பரிதிமாற்கலைஞர் என்றால்; தமிழ்மொழி செம்மொழியென்று முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி செம்மொழியென 1887ஆம் ஆண்டு குரல் கொடுத்ததற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே, 1856ஆம் ஆண்டு அறிஞர் கால்டுவெல் அவர்கள், தாம் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian Languages)" என்ற ஒப்புவமை காண்பித்திட இயலாத, உயர்பெரும் நூலில்,

> "திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒருசிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்.
>
> செந்தமிழ் என்றும் தனித்தமிழ் என்றும் சிறப்பிக்கப் பெறுவதும், பெரும்பாலும் அம்மொழி இலக்கி யங்கள் அனைத்தையும் எழுதப் பயன்படுவதுமாகிய பழந்தமிழ் அல்லது இயல்தமிழ், மிக மிகக் குறைந்த சமஸ்கிருதத் தொடர்பையே பெற்றுள்ளது. சமஸ்கிருதச் சொற்களையும் எழுத்துக்களையும் மேற் கொள்வதை வெறுத்து ஒதுக்கிவிட்டு; பழந்திராவிட தனிச்சிறப்பு வாய்ந்த மூலங்கள், சொல்லுருவங்கள், ஒலி முறைகளை மட்டும் மேற்கொள்வதில் காட்டும் ஆர்வத்தையும் விழிப்புணர்ச்சியையும் விடாமல் மேற்கொண்டிருப் பதினாலேயே அச்செந்தமிழ், தன் மொழியின் உரைநடை, பேச்சு நடைகளோடு சிறப்பாக வேறுபடுகிறது. (The

ancient or classical dialect of the Tamil language, called Shen-Tamil or correct Tamil, in which nearly all the literature has been written, contains exceedingly little Sanskrit; and differs from the colloquial dialect, or the language of prose, chiefly in the sedulous and jealous care with which it has rejected the use of Sanskrit derivatives and characters, and restricted itself to pure Ancient Dravidian sounds, forms, and roots)"

- என்று தமிழ்மொழி செம்மொழியே எனச் சான்றாதாரங்களோடு நிரூபித்துக் காட்டினார்.

தமிழ் மொழியின் தொன்மையும், தூய்மையும், வலிமையும், வனப்பும் - கற்றோர் அனைவரையும் கவர்ந்திழுத்து; உயிருக்கும் மேலென உணரவைத்திடும் தகுதி மிக்கதாகும். அப்படித் தமிழால் கவரப்பட்ட வெளிநாட்டவர் அநேகர். அவர்களுள் தலையாயவர் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் கால்டுவெல், 1838ஆம் ஆண்டு தனது 24ஆம் வயதில் மதபோதகராக, "லண்டன் சமயத் தொண்டர் சங்கத்தின்" மூலமாகச் சென்னை வந்தடைந்தவர்; பின்னர் நெல்லைப் பேராயராகப் பொறுப்பேற்று, பன்னூறு ஓலைச்சுவடிகளையும், சங்ககாலத் தமிழிலக்கியத்தையும் பயின்று, புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பாண்டியர் காலத்திற்குச் சொந்தமான கயல்சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங்களைக் கண்டுபிடித்து, நெல்லை வரலாற்றை ஆய்வு செய்து, தமது ஆய்வுகளின் அடிப்படையில் நெல்லை வரலாற்றைப் பற்றி நூல் எழுதினார். 'திராவிட மொழிகள் (Dravidian Languages)' என்ற சொல்லாக்கத்தை உருவாக்கியவர் கால்டுவெல் அவர்களே ஆவார்.

அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையிலான நூல்கள் தமிழகத்தில் பிராமணர் அல்லாதார் இயக்கத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைந்தன. தமிழ், தமிழர்தம் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த பற்றின் அடிப்படையிலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது, அவரது திருவுருவச் சிலையைச் சென்னை மெரினா கடற்கரையில் நிறுவிடச் செய்தார்கள். தென்னிந்தியத் திருச்சபையினர் வழங்கிய இராபர்ட் கால்டுவெல் அவர்களது திருவுருவச் சிலை, 2.1.1968 அன்று, அன்றைய தமிழக

மேலவைத் தலைவர் திரு.எம்.ஏ.மாணிக்கவேலர் அவர்களது தலைமையில், பன்மொழிப் புலவர் திரு.கா.அப்பாத்துரையார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மிகவும் ஆழமான புலமை கொண்டு, புகழ் உருவமாகத் திகழ்ந்த டாக்டர் கால்டுவெல் அவர்கள் தமிழைச் செம்மொழியென்று அறிவித்தது; செம்மொழி வரலாற்றில் நமக்கு மாணிக்கப் புதையலாகக் கிடைத்திட்ட மகத்தான பொன்னேடாகும்.

தமிழ்மொழி செம்மொழியேயென அறுதியிட்டு உறுதியாக சைவ சித்தாந்த மகா சமாஜம் 1918ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றிய தீர்மானம் தமிழ் ஆர்வலர்களாலும், அன்பர்களாலும் மிகுந்த மகிழ்ச்சியோடும், நிறைவோடும் நினைவு கூரத்தக்கதாகும். அத்தீர்மானம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

"சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆதரவில் வெள்ளிக்கிழமை (15.3.1918) மாலை 5.45 மணிக்குப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் தமிழ் மொழிக்குரிய சில தீர்மானங்கள் செய்தற்பொருட்டு ஏறக்குறைய 400 தமிழ் மக்கள் கூடினர். பல பண்டிதர்களும், வித்துவான்களும், ஆங்கிலேய பட்டதாரிகளும் கூட்டத்தைச் சிறப்பித்தனர். தமிழ் அகராதிக் கழகத் தலைவரான சாண்டலர், எம்.ஏ., தலைவராக அமர்ந்து, தமிழ்மொழியின் உணர்வைக் குறித்துச் சில செய்திகள் பேசிய பின்னர்,

தீர்மானம் 1.

திராவிட மொழிகளுள் தொன்மையும் சீர்மையும் தலைமையும் பெற்றொளிர்கின்ற உயர் தனிச்செம்மொழி தமிழேயாம். இயற்கைச் செவ்வொளிகளானியன்ற எழுத்துடைமையின், என்றும் வழங்குமியல்பிற்றாய்த் தொன்மையே தனக்கென வகுத்த வரிவடிவுடையதாய்ப் பல்வளமிக்க பண்டையிலக்கண இலக்கிய நுண்ணூற் பெருக்குடையதாய்த் தனக்கே சிறக்கும் அகப்பொருள் நுணுக்கமும் புறப்பொருட் பொலிவும் அருணூற் செம்மையும் உடையதாய்த் திகழா நிற்றலின், அது சர்வகலா சங்கத்தாரால் ஆரியம், அரேபியம், பாரசீக முதலிய ஏனைத்தனி மொழிகளோடொப்ப வைத்துப் போற்றப்படவேண்டு மென்னும் முதல் தீர்மானத்தை திரு.கே.சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,எம். எல்., முன்மொழிந்தார். தமிழ்மொழி மிகத்தொன்மையும், சிறப்பும்

வாய்ந்த ஒரு மொழி என்றும், திராவிட நூல்களைக் குறித்துச் சில வடமொழி உபநிடதங்களில் குறிக்கப்பட்டுள்ளமையே அதன் பழைமையை நன்கு விளக்குமென்றும், தமிழ்ப் பண்டை இலக்கண மாகிய தொல்காப்பியம், வடமொழிப் பாணினீயம் என்னும் இலக்கணத்துக்கு முன்னரே செய்யப்பட்டதென்றும், தமிழ்மொழி யின்கண் உள்ள எழுத்துக்கள் இயற்கை ஒலிகளால் அமைந்த எழுத்துக்களென்றும், தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்தால் அவற்றின் நுணுக்கங்கள் வெளியாகுமென்றும் கூறி முடித்தனர். பின்னர் அந்த முன்மொழிவினை திரு ஆர்.பி.சேதுப்பிள்ளை பி.ஏ., அவர்கள் வழிமொழிந்து பேசும் பொழுது, தமிழ் மொழியானது ஏனைய உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பவைத்து எண்ணுதற்குரிய உயர்வும் சீர்மையும் உடையதென்றும், இக்காலத்தில் தமிழ் தனிமொழியென்றும், தென்மொழியென்றும் பல அறிவாளிகள் ஒப்புக்கொண்டபோதிலும், அம்மொழி, நூல்வழக்கோடு உலக வழக்கிலும் காணப்படுகின்றமையால் அது உயர்தனிச் செம்மொழி அன்று என்னும் ஆசங்கை நிகழ்த்துபவர்கள், செம்மொழியின் உண்மை இலக்கணம் உணர்ந்தவரல்லர் என்றும், ஒரு மொழியானது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தியதாயிருப்பின் அதுவே உயர்தனிச் செம்மொழி என்ற பெயருக்கு உரியதென்றும், தமிழ்மொழியின் திருந்திய பண்பு அதன் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் திட்ப நுட்பங்களால் தெளியப்படுமென்றும், ஆதலின் தமிழ் ஏனைய உள்நாட்டு இலக்கண வரம்பில்லா மொழிகள் போல எண்ணப்படுதல் கூடாது என்று நடுநிலை தவறாத ஆங்கிலேய நூல் ஆசிரியர்கள் கூறியுள்ளாரென்றும், தமிழ் நூல்களின் தலையாய சிறப்பும், அகப்பொருள் புறப்பொருள் நுணுக்கமும், சொற்சுவை பொருட்சுவைகளும், அதன்சீர்த்த நாகரிகத்தை விளக்குகின்றன வென்றும், தமிழ்ப் பண்டை இலக்கியங்களில் ஒன்றாகிய திருக்குறள் இக்காலத்தில் வழங்கி வரும் பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே அம்மொழியின் உயர்வை உணர்த்துமென்றும், இன்னும் ஏனைய உயர்தனிச் செம்மொழிகள் பல கிளைமொழிகளுக்குத் தாயகமாய் நிற்றல் போல, தமிழ்மொழியும் திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, முதலிய கிளைமொழிகளை உடையதென்றும், ஏனைய செம்மொழிகளினும் தமிழ்மொழி தொன்மையுள்ளது என்பது, இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்

இயற்றப்பட்டுள்ள தொல்காப்பியமென்னும் இலக்கணத்தாலே நன்கு விளங்குமென்றும், எவ்வாறெனில் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் முறையாதலாலும், இலக்கியத்தினின்று எடுபடுவதே இலக்கணமாதலாலும், நம் தமிழ்மொழி சரித்திர காலத்திற்கு மிகவும் அப்பாற்பட்ட காலத்திலேயே பல இலக்கியங் களை உடையதாய்ச் சிறப்புற்று ஓங்கியிருத்தல் வேண்டுமென்றும், ஆகவே தமிழ் தொன்மையும் சீர்மையும் திருந்திய பண்பும் வாய்ந்த செம்மொழியாயிருத்தலின், சர்வகலா சங்கத்தார் தமிழையும் உயர்தனிச் செம்மொழிகளோடு ஒன்றாக வைத்து எண்ண வேண்டுவதவசியமென்றும் கூறி முடித்தனர். பின்னர் தமிழ்க் களஞ்சியம் பத்திராதிபரான ஈ.சுவர அய்யரவர்கள், தமிழ் தனிமொழி யென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன என்று கூறி வழிமொழிந்த பின்னர் பண்டிகை திருமதி அலர்மேல்மங்கைத் தாயாரவர்கள், தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து கொள்ளாத சர்வகலாசாலை சங்கத்தினர் சிலர் தமிழ்மொழியைக் குறை கூறுகின்றாரென்றும், தமிழ் சிறந்த மொழிகளுள் ஒன்றாக வைத்து எண்ணுதற்கு உரிய உயர்வுடைமையால் அதனைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் அங்கீகரித்தல் அவசியமென்றும், சொல்லி முடித்த பின்னர் முதல் தீர்மானம் அங்குக் கூடியிருந்த தமிழ் நன்மக்கள் அனைவராலும் ஒருமுகமாக அங்கீகரிக்கப்பட்டது.”

பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தைப் பற்றி, தனித்தமிழ் அறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் 12.3.1918ஆம் தேதி பற்றிய தமது நாட்குறிப்பில், “தமிழைச் செம்மொழியாக (Classical Language) ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் விடுப்பதற்குப் பச்சையப்பன் கல்லூரியில் 15ஆம் நாள் (15.3.1918) நடக்கவிருக்கும் கூட்டத்தில் என்னை உரையாற்றுமாறு, திரு.கா.சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,எம்.எல்., வேண்டினார்” என்று குறிப்பிட்டுள்ளார்.

தஞ்சை-கரந்தைத் தமிழ்ச் சங்கம், செம்மொழி வரலாற்றிற்கு வழங்கியுள்ள மிகச்சிறப்பான பங்களிப்பு போற்றத்தக்கது மட்டுமல்ல; புவியில் வாழும் நாள்வரை தமிழர்களால் மறக்கவொண்ணாததுமாகும். திரு.த.வே.இராதாகிருஷ்ணப் பிள்ளை உள்ளிட்ட தமிழ் ஆர்வமும், தமிழ்ப் பயிற்சியும் உடையோர் சிலரால் 1911ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கம்; தொடங்கிய காலம் முதல் தமது வாழ்நாள்

இறுதிவரை அதன் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர் தமிழறிஞர் த.வே.உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் ஆவார்கள். அதனால் தான், 18.2.2006 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் - கலைஞர் அரங்கில் நடைபெற்ற தமிழவேள் உமாமகேசுவரனார் அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் நான் உரையாற்றிய போது:

"உமாமகேசுவரனார் பெயர் இன்று மற்ற அறிஞர்களைவிட அதிகமாக நினைவுக்கு வரவேண்டிய காலகட்டம் இது. காரணம் தமிழ்ச் செம்மொழி என்று எண்ணினால், பரிதிமாற் கலைஞருக்கு அடுத்து, நம் நினைவுக்கு வருகிற பெயர் தமிழவேள் உமாமகேசுவரனாரின் பெயர்தான். அவர்தான் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ், செம்மொழியாக ஆக்கப் படவேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியவர். இல்லையேல், தமிழ் செம்மொழியாவதற்கு எந்த ஆதாரத்தை வைத்து நாம் மத்தியிலே இருக்கின்ற அரசோடு பேசமுடிந்தது?"

- என்று கரந்தை உமாமகேசுவரனாரின் அருமை பெருமைகளுக்கு அணி செய்தது எனது நினைவில் அழுத்தமாக அச்சியற்றப் பெற்றிருக்கிறது.

தஞ்சை - கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஏழு-எட்டாம் ஆண்டுகளுக்கான விழா, 24.5.1919 மற்றும் 25.5.1919 ஆகிய நாட்களில் திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் திருஞானியார்மடத்தின் தலைவர் திரு.சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சார்ய சுவாமிகள் அவர்கள் தலைமையில், தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை, தமிழறிஞர் வேங்கடசாமி நாட்டார், திரு.டி.என்.குருமூர்த்திப் பிள்ளை, திரு.டி.கூரத்தாழ்வார் முதலியார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அவ்விழாவில், "தமிழ்மொழியானது தொன்மையும், சீர்மையும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்ற ஓர் உயர்தனிச் செம்மொழி யென உறுதிப்பட பலதிறத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதால், சென்னைப் பல்கலைக் கழகத்தார் தாம் இதுகாறும் கொண்டிருந்த கொள்கையை மாற்றித் தமிழ்மொழி, ஓர் உயர்தனிச் செம்மொழியே என்பதை ஒப்புக் கொண்டு, இத்தென்னாட்டுப் பல்கலைக் கழகத்தில் அதற்கு முறைப்படி முதலிடமும், உரிமைகளும் கொடுக்க வேண்டும்" என்று வற்புறுத்தித் தீர்மானம் இயற்றப்பட்டது. இந்தத் தீர்மானம், தமிழ்ச்சங்க உறுப்பினர்களான

திரு.டி.ஏ.சபாபதி பிள்ளை அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு.எம்.அப்பாவு முதலியார் அவர்களால் வழிமொழியப்பட்டது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சென்னைப் பல்கலைக் கழகத் தலைவர், துணைத் தலைவர், பதிவாளர் ஆகியோருக்கும், சென்னை ஆட்சியமைச்சர் அவர்களுக்கும் முறைப்படி அனுப்பப்பட்டது.

செம்மொழி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல் போன்று அமைந்த மகத்தான தீர்மானம் இதுவாகும். காரணம், இதுதான் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டு மென்று அமைப்புரீதியாக நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் ஆகும்.

தொடர்ந்து, தஞ்சை-கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா, 21.8.1920 அன்று திரு எஸ்.சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவிலும், "எவ்வளவினும் இனிது வாய்ந்துள்ள தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழி வரிசையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பலமுறையும், சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாயப் பாடமாக ஏற்படுத்தாமலும் இருப்பது பிழையென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரி களில் கலை பயில் கருவிமொழியாகவும் கொண்டு, தங்கள் முதல் கடைமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக் கொள்கிறார்கள்" எனும் தீர்மானம் இயற்றப்பட்டது. இத்தீர்மானத்தை திரு.வி.ஏ. சகராயப் பிள்ளை முன்மொழிய, திரு.ஐ.குமாரசாமிப்பிள்ளை வழிமொழிந்தார்.

1921ஆம் ஆண்டில் சென்னை மாகாண ஆட்சித் தலைவர் அவர்கள், தஞ்சைக்கு வருகை தந்தபோது, செந்தமிழ் மொழியினை உயர்தனிச் செம்மொழியாக அறிவிப்பது தொடர்பாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக திருவாளர் இராவ்பகதூர் வீ.அ.வாண்டையார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் சென்று தங்கள் கோரிக்கைகளை நேரில் எடுத்துரைத்தனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினோராவது ஆண்டு விழா 18.11.1922 மற்றும் 19.11.1922 ஆகிய நாட்களில் திரு.க.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. இவ்விழாவின் போது, "விசுவபாரதிக்குடையார், தமிழை உயர்தனிச் செம்மொழியாகச் சம்மதித்து, அதனை அவர்கள் பாடவரிசையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்; இந்தியாவின் தொன்மை வரலாறு எழுதுவோர்க்குத் தென்னிந்திய வரலாறு இல்லையாயின் முற்றுப் பெறாததாலும், வேண்டிய செய்திகள் சங்கத் தமிழ் நூல்களில் மட்டும் கிடைக்குமாதலாலும், உலகத்து நாகரிகமுற்ற நாடுகளில் தமிழ்நூல், தமிழறிவுப் பரப்பை மிகுவிக்க வேண்டும்" எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

22.9.1923 மற்றும் 23.9.1923 ஆகிய நாட்களில் தமிழ் வள்ளல் சா.ராம.மு.சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பன்னிரெண்டாவது ஆண்டுவிழாவில், "உலகத்து உயர்தனிச் செம்மொழிகளில், முதல் மொழியெனக் கருதப்படுவதற்குரித்தான எல்லா இலக்கணமும் தமிழ் மொழி உடையதாயிருப்பதால், அதனை அத்தகைய மொழியாக ஆட்சியாளர் கருதி ஐ.சி.எஸ். பட்டத்திற்கு அதனை ஒரு பாடமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறது" எனும் தீர்மானம் இயற்றப்பட்டது.

1938ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15, 16, 17 ஆகிய நாட்களில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவிற்குத் தலைமையேற்ற திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் தனது உரையில், "இத்தகைய பெருமையும், இனிமையும் உடைய தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற நிலையில் அரசியலார் போற்றாதிருப்பது கவலத்தக்க தாகும்" என்று தனது ஆழ்ந்த வருத்தத்தை வெளியிட்டார்.

இவ்வாறு கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்கள் தலைமையில் தொடக்கக் கட்டத்தில்; தமிழ், செம்மொழியென அரசியல் நிலையில் அங்கீகரிக்கப்பட்டு உரிய முறையில் சிறப்பு செய்யப்படவேண்டும் என்பதற்கு ஆற்றிய பணி அளவிடமுடியாததாகும். செம்மொழி வரலாற்றில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆற்றல் மிக்கதோர் அத்தியாயமாக இடம் பெற்றுள்ளது.

அன்புள்ள,

மு.க.

26-12-2009

3447. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-3

பாவாணர் கண்ட பதினைந்து சான்றுகள்

உடன்பிறப்பே,

1919ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் நாளன்று, திருச்சி டவுன்ஹாலில் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில், திருச்சி வழக்கறிஞர் திரு.டி.சி.தங்கவேலு, ராவ்பகதூர் ஓ.கந்தசாமி செட்டியார், திரு.டி.ஏ.ஜி.ரத்தினம், திரு.டி.வி.சுப்பிரமணியம், திவான்பகதூர் பி.ராமராயநிங்கார், இராமநாதபுரம் மன்னர், கொல்லங்கோடு மன்னர், தொட்டப்பநாயக்கனூர் ஜமீன்தார், திரு.டி.ஆர். மருதமுத்து மூப்பனார் போன்ற பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் முன்னணியினர் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில், பிராமணர் அல்லாதாருக்குத் தனி வாக்குரி மைத் தொகுதி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், கலப்புத் திருமணம் ஆகியவை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு முக்கியமான தீர்மானம் பின்வருமாறு:

"சென்னைப் பல்கலைக்கழகமும், அரசுப் பணித் தேர்வாளர்களும்; பாரசீக மொழி, அரேபிய மொழி, வடமொழி ஆகிய மொழிகளுக்குச் சமமாக; செறிவும், செழிப்பும் நிறைந்த மிகப்பழமை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டுள்ள தமிழ் மொழியை, செம்மொழியாக அங்கீகாரம் செய்யவேண்டும் (Tamil, which is rich in ancient literature, should be recognised by the University of Madras and the Civil Service Examiners as a **Classical Language** on the same footing as Persian, Arabic and Sanskrit)."

இவ்வாறு பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சேர்ந்த நமது நீதிக்கட்சியின் முன்னோர், 1919ஆம் ஆண்டிலும்; தமிழவேள்

உமாமகேசுவரனார் தலைமையில் அமைந்திருந்த கரந்தைத் தமிழ்ச் சங்கம் கடைசியாக 1923ஆம் ஆண்டிலும்; தமிழ் செம்மொழியாக அங்கீகரிக்கப்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு;

விடுதலைப் போராட்ட வீரரும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், பாகிஸ்தான் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்தவரும், உருது, அரேபியம், இந்தி, பாரசீகம், வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்த பன்மொழி அறிஞரும், கவிஞரும், பண்டிதநேரு அவர்களின் மத்திய அமைச்சரவையில் இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராகப் பணியாற்றியவரும், இலவசத் தொடக்கக் கல்வியை அறிமுகப்படுத்தியவரும், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களை(IITs) அமைத்தவருமான மாண்புமிகு மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள்; 15.3.1951 அன்று - சாகித்ய அகாடமியை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில் தொடக்க உரையாற்றிய போது, "இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள பதினான்கு மொழி களில் சமஸ்கிருதமும், தமிழும் அடங்கும். சமஸ்கிருதம் தனிவகையைச் சேர்ந்தது; வளம் செறிந்த செம்மொழிகளுள் ஒன்றாக முறையாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள மொழியாகும். தமிழ்மொழி செழுமையும், தொன்மையும் மிக்க இலக்கியத்தைக் கொண்டது; அம்மொழியிலுள்ள கவிதைகள் வெளிநாட்டு மொழி களில் மொழியாக்கம் செய்வதற்குரிய தகுதி படைத்தவை; தமிழ் உண்மையிலேயே ஒரு செம்மொழி என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்; தமிழ் செம்மொழியென அங்கீகாரம் செய்வதற்குரிய தகுதிப்பாடுகள் அனைத்தும் பண்டைக் காலத்தைச் சார்ந்தவை (The fourteen languages recognised by the Constitution include Sanskrit and Tamil. Sanskrit is, of course, in a class by itself, and is rightly recognised as one of the most developed of classical languages. Tamil also has a rich and ancient literature and its poetry has been and deserves to be translated into foreign languages. We must however, remember that Tamil is really a Classical Language, and most of the achievements of Tamil which entitle it to recognition belong to a past age) என்று தமிழ் செம்மொழியே என்பதைச் சுட்டிக் காட்டினார்.

1955ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26, 27, 28 ஆகிய நாட்களில் சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய கீழ்த்திசை மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்; 15.3.1951 அன்று மத்திய கல்வி அமைச்சர் மாண்புமிகு மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் சாகித்ய அகாடமியை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில் ஆற்றிய மேலே குறிப்பிட்ட தொடக்க உரையைச் சுட்டிக்காட்டி, "அவ்வாறு தமிழ்மொழியைச் செம்மொழியென அங்கீகாரம் அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தேவையான அங்கீகாரத்தை இந்தக் கீழ்த்திசை மாநாடு வழங்கவில்லையெனில், வேறு யார் தான் வழங்கமுடியும்? (My appeal is only to give effect to this recognition and if this Oriental Conference of Scholars is not going to give this recognition, who else would?)" என்று வினாக்களை தொடுத்தார்.

செம்மொழி வரலாற்றில் அடுத்த கட்டம் 1966ஆம் ஆண்டு உருவானது. அதனை உருவாக்கியவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் ஆவார்கள். பாவாணர் நுண்ணிய ஆய்வு ஆராய்ச்சிக்குப் பிறகு, தமிழ்மொழி செம்மொழியே என மொழி அறிஞர்கள் அனைவரும் ஏற்றுப் போற்றும் வகையில், உரிய சான்றுகளுடன் "உலகின் முதன்மையான செம்மொழி (The Primary Classical Language of the world)" என்ற அரிய நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். அந்த நூலில், "லெமூரியாவை மூலமாகக் கொண்டுள்ள மொழியான தமிழ்மொழி, மிகப்பெருமளவுக்குச் செழித்து வளர்ந்துள்ள செம்மொழியாகும் (Tamil is a highly developed Classical Language of Lemurian Origin)" என்ற கருத்தை உரிய சான்றுகளுடன் விளக்கிச் சொன்ன பாவாணர், செம்மொழிக்கான பின் வரும் தகுதிப்பாடுகள் அனைத்தையும் கொண்டு இலங்குவது தமிழ் என்று நிலை நிறுத்திக் காட்டினார்:

"தமிழ்மொழி-செம்மொழித் தகுதிபாட்டுச் சான்று ஆதாரங்கள்

EVIDENCES OF THE PRIMARY CLASSICALITY OF TAMIL

1. தொல் இலமூரியா காலத்தோடு தொடர்புடையது (Lemurian Origin of Tamil)

2. சந்த ஒலிச் சால்பு
(Phonological simplicity of Tamil)

3. உலகளாவிய உணர்வுப் பெருமிதம்
(Catholicity of Tamil)

4. ஆரிய மொழிகளுக்கிடையே, தலைநிமிரும் தமிழின் தரம்
(Tamulic substratum of the Aryan family of languages)

5. சொல்லமைப்பின் தொன்மையும் ஒலிச் சுருக்கமும்
(Morphological parity and primitiveness of Tamil)

6. தமிழ்மொழியில் உள்ள "அம்மா" "அப்பா" என்கிற சொற்கள் பிற பழைமையான மொழிகளில் ஒத்த வடிவங்களில் உள்ளன.
(The presence of the words `amma' and `appa' in almost all great languages in some form or other).

7. எழுவாய் வேற்றுமைக்குத் தனி விகுதி யின்மை.
(Absence of Nominative case-termination in Tamil)

8. அடைமொழிகள் பிரிக்கத்தக்கவை - ஆழமுடைமை
(Separability and significance of all affixes in Tamil)

9. தமிழ் சொற்களுக்குப் பாலினம் இல்லை.
(Absence of morphological gender in Tamil)

10. தமிழில் ஒழுங்கு முறையற்ற சொற்கள் இல்லை.
(Absence of arbitrary words in Tamil)

11. தமிழ்மொழி தோன்றிய காலத்தைக் கண்டறிய இயலும்.
(Traceability of Tamil to its very origin)

12. தமிழில் காணப்படும் சொற்கள் இயற்கையான காரண காரிய தொடர்புடையவை.
(Logical and natural order of words in Tamil)

13. ஒருமை, இருமை, பன்மை என்று வட மொழியில் இருக்க, தமிழில் ஒருமை, பன்மை என்று

இரண்டைடப் பொருத்தமாகக் கொண்டு இருத்தல்.
(Absence of dual number in Tamil)

14. தமிழின் தனித்தன்மையும் - இயற்கைத் தன்மையும்
(Originality and natural development of Tamil)

15. உயர்ந்த இலக்கியத் தரமிகுந்த நூற்கோவைகள்
(Highest order of the classicality of Tamil)"

பாவாணர் எடுத்துரைத்த அசைக்கமுடியாத ஆதாரங்கள் தமிழ் ஆர்வலர்களையும், அறிஞர்களையும் மட்டுமல்லாமல், பிறமொழி அறிஞர்களையும் குறிப்பாக, வடமொழி மற்றும் ஆங்கிலப் புலமை மிக்கோரையும் பெரிதும் ஈர்த்து ஏற்றுக் கொள்ளச் செய்தன.

பாவாணரின் தமிழ்மொழி மேதைமையையும், ஆழ்ந்த தமிழ்ப்பற்றினையும், தமிழ் செம்மொழியே என அனைவரும் ஏற்றுக் கொள்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளையும் பாராட்டிப் போற்றிடும் வகையில்; கழக அரசு 1974-ல், "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" ஒன்றினை நிறுவி, அதன் முதல் இயக்குநராக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை நியமித்தது.

பிறமொழித் தாக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாக்கத் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் வழியைப் பின்பற்றி; "உலகத்தமிழ்க் கழகம்" கண்ட பெருமைக்குரியவர் பாவாணர். பாவாணர் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட; மதம் - குலம் இவற்றைக் கடந்து தமிழராக அவர் வாழ்ந்ததால், தம் பிள்ளைகளின் பெயர்களை; நச்சினார்க்கினிய நம்பி, சிலுவையை வென்ற செல்வராயன், அருங்கலைவல்லான் அடியார்க்கு நல்லான், மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி, மணிமன்ற வாணன், பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் - என இனிய தனித்தமிழில் வழங்கினார். இருபத்திமூன்று மொழிகளைக் கற்றுத் தேர்ந்து, பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தவர் பாவாணர்.

அத்தகைய பாவாணரின் நினைவைப் போற்றிடும் வகையில் கழக அரசு, 1996ஆம் ஆண்டு அவரது படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, அவரது மரபுரிமையர்க்கு 20 இலட்ச ரூபாய் பரிவுத்தொகையை வழங்கியதோடு; அவரது நினைவு சிறப்பு அஞ்சல்தலையை, மத்திய அரசின் மூலம் 18.2.2006 அன்று

வெளியிட்டுப் பெருமைகொண்டது. அதுமட்டுமல்லாமல், மதுரை மாவட்டம் சாத்தமங்கலம் கிராமத்தில், பாவாணர் அவர்களுக்கு 39 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மணிமண்டபமும், அதில் பாவாணரது முழுஉருவச் சிலையும் தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டு, நான் 30.10.2007 அன்று திறந்து வைத்துச் சிறப்பு செய்தேன்.

அதன்பிறகு, நீண்ட இடைவெளி ஏற்பட்டு விட்டது. தமிழைச் செம்மொழியாக அறிவித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை முன் வைத்து, தமிழ் ஆர்வலர்கள் மத்தியிலோ, தமிழ் அமைப்புகள் மத்தியிலோ, பெரும் கருத்துரு வாக்கம் எதுவும் ஏற்படவில்லை.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, மதுரையில் 1981ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும், அந்த முயற்சிகளுக்கு நேர்ந்த முடிவு பற்றியும், வளர்தமிழ்ச்செல்வர் மணவை முஸ்தபா அவர்கள் தனது "செம்மொழி - உள்ளும் புறமும்" என்ற நூலில் எழுதியுள்ளார்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில், இரண்டாம் நாள் காலை, நீதியரசர் மகராஜன் தலைமையில் நடைபெற்ற பொதுநிலைக் கருத்தரங்கில், மணவை முஸ்தபா அவர்கள் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர் தனது உரையில், "செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் இருந்தும், அதற்கு அரசு அங்கீகாரம் அளிக்காததால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பற்றி" விரிவாகப் பேசினார். அவரது உரையைக் கேட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், மணவை முஸ்தபா அவர்களிடம் செம்மொழி தொடர்பாக அரசுக்கு ஒரு கோரிக்கை மனு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க, 1982ஆம் ஆண்டில், மணவை முஸ்தபா செம்மொழி கோரிக்கை மனுவை, தமிழக அரசின் பரிசீலனைக்கு அனுப்பினார். அந்த மனு மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்பது குறித்து யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை.

1984ல் தனக்கு 'கலைமாமணி விருது' அளித்ததற்கு நன்றி கூறும் முறையில், முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், மணவை முஸ்தபா செம்மொழி பற்றியும் நினைவூட்டினார். அது அரசுத் துறைச் செயலாளருக்கு அனுப்பப்பட; அன்றைய அரசுச் செயலாளர்,

அக்கோரிக்கை மனு மீது எழுதிய குறிப்பில், "திரு.மணவை முஸ்தபா கூறுவது போல், தமிழைச் செம்மொழியாக்கினால், தமிழைச் செத்த மொழிகளின் பட்டியலில் சேர்த்ததாகி விடும் என்பதால், இக்கோப்பு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது" என்ற முறையில் குறிப்பு எழுதி, கோப்பையே முடித்து வைத்துவிட்டதாக மணவை முஸ்தபா அவர்கள் கையறுநிலை கசியக் கசிய கண்ணீர் மல்கிட தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

செம்மொழி கோரிக்கைக்கு இந்தக் 'கதி' ஏற்பட்டதற்குப் பிறகும், இந்தக் களத்தில், யாரும் கவனம் செலுத்தவில்லை. மாநாடுகளிலோ, கருத்தரங்குகளிலோ, செம்மொழி கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

1995ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கை, அப்போதைய இந்தியப் பிரதமர் திரு.நரசிம்மராவ் அவர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டதாகவும்; ஆனால் பிரதமர் அக்கோரிக்கை தொடர்பாக எவ்விதக் கருத்தையும் வெளிப்படுத்தாமல், தன்னுடைய உரையை நிறைவு செய்தார் என்றும் புலவர் த.சுந்தரராசன் (பொதுச் செயலாளர், தலைநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை) கட்டுரை ஒன்றில் மிகுந்த கவலையுணர்ச்சியோடு தெரிவித்துள்ளார்.

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்று தொடங்கும் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய பாடலை, 1970ஆம் ஆண்டில் 'தமிழ்த்தாய் வாழ்த்துப்' பாடலாக ஆக்கிய பெருமை, கழக அரசுக்கு என்றென்றும் உண்டு. அதைப் போலவே, தமிழர்களின் நலன் காக்க, நாளும் பாடுபடும் கழக அரசு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதை எந்தநிலையிலும் நிறுத்தாது என்பதற்கு உதாரணம்தான், நான்காம் முறையாக கழக அரசு பதவியேற்றபோது, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கியது; அந்தத் துறை, அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், 13.5.1996 முதல் செயல்படத் தொடங்கியது.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அந்தத் துறையின் தலையாய முதல் பணியாக, தமிழைச் செம்மொழி என அறிவிக்கக் கோருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள

வேண்டுமென்று நான் வழங்கிய அறிவுரைகளையொட்டி; 20.6.1996 அன்று தமிழ்ப்பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ப.க.பொன்னுசாமி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் - முனைவர் ச.அகத்தியலிங்கம், முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் சி.பாலசுப்பிர மணியம்; திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச.முத்துக்குமரன், ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ஜி.ஜான்சாமுவேல், திரு.மணவை முஸ்தபா தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில்; தமிழ்மொழியைச் செம்மொழியென அறிவிக்கப்படுவது தொடர்பாக, ஆசியவியல் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சி.ஜான் சாமுவேல் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கை பரிசீலிக்கப்பட்டு,ஒரு சிலமாற்றங்களுடன் ஏற்கப்பட்டு, மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கலாம் என முடிவெடுக்கப்பட்டதோடு; தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுக்களின் பரிந்துரைகளையும் பெறலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ் செம்மொழி என அறிவிக்கப்படுவதற்குரிய அடிப்படைத் தகுதிகள் அனைத்தையும் பெற்றிருக்கிறது என்பதற்கான வலுவான ஆதாரங்களைக் கொண்டுள்ள அறிக்கை என்பதாலும்; தமிழ் செம்மொழி என அறிவிக்கப்படுவதற்கு அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், அரசளவிலும், கழக அரசால் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி என்பதாலும்; தமிழ் ஆர்வலர்களும், கழக உடன்பிறப்புகளும் அதனைப் படித்தறிந்து நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையை, தமிழாக்கம் செய்து, அதன் முக்கியப் பகுதிகளை அடுத்த கடிதத்தில் வழங்குகிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-12-2009

3448. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-4

தொன்மைக்குத் தொன்மையாய் வாழும் தொல்பழங்கால மொழி!

உடன்பிறப்பே,

நான்காவது முறையாக நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு; கழக அரசின் சார்பில், தமிழ் செம்மொழியே என உரிய முறையில் நிலைநாட்டி, மத்திய அரசிடம் கோரிக்கை வைப்பதற்கென; ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ஜான்சாமுவேல் அவர்களால் தயாரிக்கப்பட்ட; முனைவர் ச.அகத்தியலிங்கம், முனைவர் வா.செ.குழந்தைசாமி, திரு.மணவை முஸ்தபா, முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் பொற்கோ போன்ற வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவு அறிக்கையின் முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:-

“உயர்தனிச் செம்மொழியாக ஒளிரும் தமிழ்
இந்தியச் சூழலில் செம்மொழித் தமிழ் பெறும் சிறப்பிடம் :-

உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழுக்கு ஈடில்லாத ஒரு தனித்தன்மையுண்டு. ஈராயிரம் ஆண்டுப் பழமைவாய்ந்த செவ்விய இலக்கியங்களின் களஞ்சியமாகவும், மூத்த திராவிட இலக்கிய அணிகலன்களின் கவசமாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. எண்ணற்ற கவிதைகள்-செய்யுள்கள்- பாடல்களின் கோவைகளைக் கொண்ட இம்மொழி கிறித்துவின் முதலாண்டுக்கு முன்னேயே நிலைபெற்றதாகும். தங்குதடையின்றிப் பொங்கும் வளமையுடனும், பொலிவார்ந்து ஓங்கிய வளர்ச்சியுடனும் நூற்றாண்டுகள் பல கடந்தாலும் இன்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் தமிழ் மொழி சிறந்து விளங்குகிறது.

பொங்கித்ததும்பும் நதியின் போக்கிற்கேற்பப் பல்வேறு இணைப்புகள், பகிர்வுகள் வாயிலாகத் திராவிட மொழிகளின்

தொகுப்பில் உயரிய இடம் பெறும் மொழியாகத் தமிழ்மொழி மிளிர்கிறது. இந்தியாவின் வடமாநிலங்களில் வழங்கிய சமஸ்கிருத மொழிக்கு நிகராக, உயிரோட்டத்தோடு உலவி வரும் மொழியாக நிலைபெற்று, இந்தியப் பண்பாட்டு மாறுதல்களுக்கு இசைவாகப் பிறமொழிகளுடன் தக்க உறவினையும், அதே சமயம் தன்னுடைய தனித்தன்மை வாய்ந்த இயல்புகளைத் தக்கவைத்துக் கொண்டும், ஆற்றல் குன்றாத நிலையில் தமிழ்மொழி திகழ்கிறது.

இந்திய ஐரோப்பிய மொழி வரிசையில், செல்தியம், செருமானியம், இலத்தீன் மற்றும் கிரேக்க, இரானிய மொழிக் குழுமத்தின் வேர்த் தொடர்புகளைத் தமிழ் மொழியிலும் கண்டு அறிஞர் கால்டுவெல் ஒப்பீடு செய்துள்ளார். அதேபோல, தாமஸ் பர்ரோ பின்லாந்திய மொழிக்கும், திராவிட மொழிகளுக்கும் நுண்ணிய தொடர் இணைப்புகளைக் கண்டார். அங்கேரிய மொழிக்கும் திராவிட மொழிக்கும் தொடர்புறவை ஜி.எஸ். பாலிண்ட் ஆராய்ந்து கண்டார். ஹப்பர், சுசுமோ ஓநோ ஆகியோர் சப்பானிய, கொரிய ஒப்பாய்வுகளைத் தமிழ்மொழியோடு ஆராய்ந்து கண்டுள்ளனர்.

தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் ஆறு கோடித் தமிழரின் அன்றாட வாழ்வில், நடனமிடும் தமிழ்மொழி; இலங்கையிலும், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளிலும் மோரீசு, டிரினிடாட், பிஜிதீவுகளிலும் வாழும் மக்களால் பேசவும், எழுதவும் படுகிறது. இலங்கையரசும், சிங்கப்பூர் அரசும், தமிழ்மொழியினை ஆட்சி மொழியாகவும் அறிவித்துள்ளன.

எகிப்திய, சுமேரிய, சிந்துவெளி பண்பாட்டுக்கு இணையாக கலையிலக்கிய பண்பாட்டுச் செல்வங்களைத் தாங்கி விளங்கும் தமிழ்மொழி, தொல் திராவிட மரபையும், தொல் தமிழிய வளர்ச்சியையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வாளர்கள் கணக்கிடுவதற்கு வழிவகுக்கிறது. இந்நிலையிலும், இவ்வளவு தொடர்பிருந்தும் இன்றுவரை தொன்மைக்குத் தொன்மையாய், இன்றும் வாழும் ஒரே இயல்பும் திறனும் கொண்டது தமிழ்மொழி ஒன்றேயாகும்.

தமிழ்மொழியையும், தமிழின் இலக்கியப் படைப்புகளில் பொதிந்துள்ள கோட்பாடுகளையும், இலக்கண விதிகளையும் நுணுக்கமாக வரையறுக்கும் வகைப்பாடு ஈராயிரம் ஆண்டுகட்கு

முன்னரே தொடங்கியுள்ளது. இதனால் இலக்கியச் செய்யுள் படைப்புகள் செம்மையாக அமைவதற்குத் தொல்காப்பியம் வளமூட்டியுள்ளது. தொல்காப்பியத்தில் காணப்படும் விதிகள், நெறிமுறைகள், ஒலியியல், மொழியியல் பயன்பாடுகள், அயற்சொற்களைக் கையாள்வதற்கு உருவாக்கிய விதிப்பாடுகள் முதலியன தெளிவாக உள்ளன. இதனால் தமிழ்மொழி பயனுடைய மேம்பாட்டைப் பெறுதற்கு இடந்தருகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். பழமைவாய்ந்த, செப்பமுற வளர்ந்த தமிழ்மொழியை இப்போது செம்மொழி என்று நாம் குறிப்பிடும் சிந்தனைக்கு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இம்மண்ணில் வாழ்ந்த அறிஞர்கள் உரமூட்டினர்.

கிரேக்க மொழியுடன் தமிழ்மொழியாளரின் உறவு தொடங்குவதற்கு முன்னரே, தமிழ்மொழி செம்மொழித் தகுதியை அடைந்துவிட்டது என்று கில்பர்ட் சிலேட்டர் குறிப்பிடுகிறார். தமிழ்மொழி கிரேக்க மொழியை விடச் செறிவானதென்றும், இலத்தீன் மொழியைவிட மேன்மையானது என்றும், ஆங்கிலம் மற்றும் செருமன் மொழியைவிட ஆற்றல் வாய்ந்தது என்றும் டாக்டர் வின்சுலோ குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்சு இந்தியவியல் அறிஞர் பியரி மெய்லியின் கருத்துப்படி, செம்மொழித் தமிழின் சங்கப் பாடல்கள், கிரேக்க மொழியின் நுட்பமான கவிதைத் தொகுதிகளுக்கு அறைகூவலாக விளங்குகின்றன.

தாமதமாக உணரப்பட்ட தமிழ் மேன்மை:-

தொடக்க நிலைகளில் கூட, வால்டர் எலியட், எல்லீசு கோவர், வின்சுலோ, கால்டுவெல், போப், வின்சன் ஆகியோர் தாங்கள் வாழ்ந்த காலத்திலும் திராவிடத் தமிழ்ப் பண்பாட்டாய்வு பொதுவாக புறக்கணிக்கப்பட்டேயிருந்தது என்பது பற்றிய தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். ஆங்கிலேய அரசு தமிழ் இலக்கியத்தை புறக்கணித்தது பற்றி டாக்டர். ஜி.யு.போப், 1910ஆம் ஆண்டிலேயே தெரிவித்தார். மிகத் தொன்மையான, வளம்மிக்க, பண்பட்ட தமிழ்மொழி எம்மொழிக்கும் சிறப்பில் குறைந்ததன்று என்றபோதிலும்; இங்கிலாந்துப் பேரரசின் ஆட்சியிலிருந்து தொலைவில் உள்ள ஒரு பகுதியில் வாழும் மக்களால் பேசப்படும் ஒரு மொழி என்றே, தமிழ் மொழியைப் பெரும்பான்மையான மக்கள் நினைக்கின்றனர். நம்முடைய இந்திய அரசோ, நம்முடைய பல்கலைக் கழகங்களோ தமிழ் இலக்கியத்தின் மாண்பை

முழுமையாக அறியவில்லை. எனவே, தென்னிந்திய மொழிகள் குறித்து ஆய்வு செய்பவர்கள், ஆழ்கடலில் முத்துக்களை அலைந்து தேடுபவர்களைப் போன்ற அரிய உழைப்பாளர்களாக உள்ளனர்.

புவியியல் வகையில் பரந்து விரிந்த இந்திய நாட்டின் மொழி என்ற வகையிலும், திராவிட இனம் சார்ந்த, சமூக நலனில் அக்கறையுள்ள ஒரு மொழி என்ற வகையிலும், அமெரிக்காவிலும் தமிழைப் படிக்கத் தொடங்கினர். தமிழ்மொழி, பென்சில்வேனியா, சிகாகோ, கான்சாஸ் ஆகிய பல்கலைக் கழகங்களிலும், கோடைப் பள்ளிகளிலும் மொழியைப் பயிற்றுவிக்கும் திட்டங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

பன்னாட்டு அறிஞர்களும், நம்முடைய தமிழியல் ஆய்வாளர்களும், இந்திய பண்பாட்டுக் கூறுகளை முழுமையாகவும், முற்றிலுமாகவும் புரிந்துகொள்வதற்குத் தமிழாய்வு மிகவும் இன்றியமையாததென்பதை உணர்ந்துள்ளனர். இந்தியத் திருநாட்டின் பண்பாட்டுக் கலை வளத்தை, முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு வடமொழி ஆய்வு மட்டும் போதுமானதல்ல என்றும்; திராவிட மொழிகளில் மிகத் தொன்மையான தமிழ்மொழியின் வளம்மிக்க கலைப் பண்பாட்டு இலக்கியக் கூறுகளை கருத்தில் கொண்டால்தான்; இந்தியப் பண்பு குறித்த எந்த ஒரு ஆய்வும் முழுமையாகும் என்றும் அறிஞர்கள் ஒருமித்த கருத்தை உறுதி செய்கின்றனர். இந்திய மொழிகள் குறித்து, புகழ்பெற்ற அறிஞரான டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி பின்வருமாறு தன் கருத்தைத் தெரிவித்தார். (வங்கநாட்டுப் பேராசிரியர் சுனித்குமார் சட்டர்ஜி தமிழார்வத்தால் தன் பெயரை 'நன்நெறி முருகன்' என மாற்றிக் கொண்டதும் நாம் நினைக்கத்தக்கது). 'தற்போதைய இந்தியப் பண்பாடு மற்றும் சமய தத்துவத்தைப் பொறுத்தவரையில் திராவிட மொழியே பாவு நூலாகவும், ஆரியமொழி ஊடிழையாகவும் உள்ளன. இந்தியப் பண்பாட்டுச் செல்வத்துக்கு திராவிடர்கள் ஆற்றிய பங்கு ஐம்பது விழுக்காட்டுக்குக் குறையாதது' என்றும் அவர் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்சங்க இலக்கியம்தான் செம்மையான, நவீனமான இந்திய இலக்கியமாகும். முந்தைய வடமொழி நூல்களைப் போன்று பழமையானதோடு இன்றைய நவீன படைப்புகளுக்கும் ஈடுகொடுத்து தொடர்ந்து வாழ்ந்து வருகிறது. அறிஞர் ஏ.கே.

இராமானுசன் 'இலக்கிய இயற்கையடைவு' என்ற தன் நூலில் இந்தியாவின் இரண்டு செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மட்டுமே, சமகால இந்திய நிகழ் மொழியாகும் என்றும்; இது கடந்தகாலத் தொல் பழமையோடு தொடர்ந்து வழக்கு மொழியாக மக்களிடையே ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது என்றும் காட்டியுள்ளார். சங்க இலக்கியங்கள் புகழ்பெற்ற காலப்பழமை கனிந்த தமிழ்ப்பாடல்களாகச் செம்மையுடன் விளங்குவதற்கு, மூன்று காரணங்களை, டாக்டர் கமில் சுவலபில் தெரிவிக்கிறார். முதலாவதாக, நம்முடைய தேசிய இலக்கியங்களின் சில பகுதிகளை நாம் பாராட்டுவதைப் போன்று; புகழ்பெற்ற சங்கப் பாடல்களை, தமிழறிஞர்களும், வரலாற்று வல்லுநர்களும் திறனாய்வாளர்களும் செம்மையானது என்று பாராட்டுகின்றனர். இரண்டாவதாக, இது ஒரு முற்றாக 'நிறைவெய்திய' இலக்கியத் தொகுப்பாக இருந்து வந்துள்ளது. இது இன்றும் உயிர்ப்பான வாய்மொழி மரபில் துடிப்போடு வழங்கப்பெறுகிறது. காலத்திற்கேற்ப மாற்றம் பெறமுடியாத விழுமிய சொற்களைக் கொண்டதால் 'உறைந்த நிலை மாறாத கவிதை' வடிவில் உள்ளன. மேலும் இது செம்மையான மரபு வழியின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. மூன்றாவதாக, ஒரு மொழிசார்ந்த யாப்பிலக்கணம் மற்றும் புலனெறி சார்ந்த முழுமைபெற்ற வரம்போடு உள்ளது. முழுமையான, நிறைவான, ஈடிணையற்ற பண்பாட்டின் இலக்கியத் தொடராகவும், பண்பாட்டின் முடிமணியாகவும் இவை உள்ளன. இவ்வகையில், செம்மையான வடிவமைப்புடையதாக ஒரு செவ்விய இலக்கியமாக உள்ளது. (கமில் சுவலபில், "முருகனின் புன்னகை" பக்கம் 50.)

திராவிடக் குடும்ப மொழிகளில் தலையாய மொழி என்ற வகையில், இது தனியிடம் பெற்றுள்ளதால், பல நூற்றாண்டுகளைக் கடந்தும் இன்றும் என்றுமுள தென்தமிழாக நிலைத்து நின்று; வளர்ச்சியையும், மேன்மையையும் பெற்று அனைத்தையும் அரவணைத்து அனைவருடனும் ஒன்றிக் கலந்து வந்துள்ளது. ஏனைய திராவிட மொழிகளைப் போன்று, இந்திய ஐரோப்பிய மொழிகள் மற்றும் கீழை நாட்டு மொழிகளின் அம்சங்களுடன், தொடர்புற்றிருந்த ஒப்புமையையும் வெளிப்படுத்துகிறது. இருபத்தைந்து மொழிகளுக்கு மேற்பட்ட திராவிடக் குடும்ப மொழிகளில் இதுவே முதன்மையான மொழியாகும்.

தமிழ்மொழியிலுள்ள சொற்களின் வேர்களை, உலகின் அனைத்துச் செம்மொழிகளிலும் காணலாம். இது, போர்த்திறம் கொண்ட புறப்பாடல்களையும், உயரிய காதல் கனிந்த அகப்பாடல்களையும் மற்றும் அறநூல்களையும் சிறந்த படைப்புகளாக (Masterpieces), இலக்கியத் தொகுப்பாகப் படைத்துள்ளது. சமயம் சாராத உலகளாவிய மனித நேயம் பற்றி இவ்விலக்கியங்கள் கூறுகின்றன. சமய உருக்கம் கொண்ட பக்தி சார்ந்த பாடல்களின் தொகுப்பும் இம்மொழியின் செல்வமாகும். இந்த நாட்டில் இன்றுள்ள அனைத்து மொழிகளிலும் நிலையான தமிழ் முத்திரையைப் பொறித்துள்ளது.

கடந்த ஐம்பதாண்டுகளாகவும் அல்லது அதற்கு மேலாகவும், அரப்பா - மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியைத் தொடர்ந்து சிந்துவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஒட்டுமொத்த இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ் அல்லது திராவிட மொழி பேசும் மக்களின் கணிசமான, குறிப்பிடத்தக்க பங்களிப்பு அனைவராலும் கவனிக்கத்தக்க அளவுக்கு உணரப்பட்டு வருகிறது. மொகஞ்சதாரோ என்ற இடத்தைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஆர்.டி.பானர்ஜி 'ஆரியர்கள் வருகை புரிந்த காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கும் முன்னரே அமைந்திருந்த, சிந்துவெளி நாகரிகமானது, ஆரிய நாகரிகத்திற்கும் முந்தைய அதிசய நாகரிகம் என்பதை நிலைநிறுத்தியுள்ளது என்றும்; அம்மக்களைத் திராவிடர்கள் அல்லது திராவிட இனத்தில் மூத்தவர்கள் என்று தென்னிந்தியாவில், திராவிட மொழிகளைப் பேச்சுவழக்காகக் கொண்டு வாழும் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகப் பின்னர் சுட்டிக்காட்டப் பட்டது' என்றும் எழுதியுள்ளார்.

தமிழர்கள், தம் இலக்கிய இலக்கணக் கோட்பாட்டினை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மிகவும் திறம்பட மேம்படுத்தி யுள்ளனர் என்பதும், இது உலகில் உள்ள எந்த வொரு செம்மொழிக்கும், எந்த வகையிலும் சளைத்தது அன்று என்பதும் ஐயத்திற்கிடமின்றி அறுதியிடப்பட்டுள்ளன. தமிழ்மொழி சில சொற்களை வடமொழியிலிருந்து பெற்றிருந்தாலும், அவையனைத்தும் தமிழ்ச்சொற்களாகவே கொள்ளப்பட்டதால் அல்லது தமிழாக்கப்படுவதால், தமிழ்மொழியானது தன் தனித்தன்மையையும், அமைப்பொழுங்கையும் தக்கவைத்துக்

கொண்டுள்ளது. சொல்லமைவு நுணுக்கத்தைப் பெருமளவில் வடஇந்திய மொழிகளுக்குத் தமிழ்மொழி வழங்கியுள்ளதை முனைவர் பர்ரோ, பட்டியலிட்டுள்ளார்.

இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்மொழி மிகப்பெரிய அளவில், பங்களிப்புச் செய்தபொழுதும், உரிய தகுதியினைப் பெறத் தாமதமாகிவிட்டது. சென்னையிலுள்ள டாக்கர் பல்கலைக்கழகத்தில், செம்மொழித் துறையில், தமிழ்மொழி, அரேபியமொழி, பாரசீக மொழி, வடமொழி ஆகியவை செம்மொழிகளாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நம்முடைய பல்கலைக் கழகங்களில் நீண்டகாலத்திற்கு முன்னரே தமிழ்மொழி, இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, அரேபிய மொழி, பாரசீகமொழி, வடமொழி ஆகிய மூன்று மொழிகளே செம்மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், தமிழறிஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்று குறித்துக்காட்டி தமிழுக்குச் செம்மொழி மகுடம் சூட்டவேண்டும் என்று விழைந்தார். இந்த வேண்டுதல் அறிஞர்கள் பலரின் உள்ளங்களில் எழுச்சியூட்டியது.

மரபுரிமைக் களஞ்சியமாக இலக்கிய வரையறையைக் கொண்டுள்ள மொழி சார்ந்த சமுதாயம் ஒவ்வொன்றும், சமூக மற்றும் இலக்கியம் சார்ந்த சூழலின் குறிப்பிட்ட காலத்தினைச் செம்மொழிக் காலமாகக் குறிப்பிடுகிறது. அறிஞர் சிலரின் கூற்றுப்படி, கி.மு.500லிருந்து 300 வரைப்பட்ட காலமானது, கிரேக்கர்களின் செம்மொழிக் காலம் ஆகும். கி.மு.500 முதல் கி.பி.1110 என்ற வரையறையில் வடமொழியின் செம்மொழிக் காலமெனக் கருதப்படுகிறது.

சங்க காலம் முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டைய எல்லையுட்படும் காலத்தைச் செம்மொழிக் காலமாகக் குறிப்பிடலாம். ஏனெனில், இக்காலத்தில் தான் ஈடிணையற்ற இலக்கியமும், மொழிசார்ந்த உயர்ந்த சிந்தனைகளும் மலர்ந்தன. இத்தகைய பங்களிப்புகள், திராவிடத் தொன்மையினையும் விழுமிய செழுமையினையும் உருவாக்கின. திராவிடர்களின் சிறந்த பண்பாட்டுச் சாதனைகளைக் கணக்கில் கருதத் தவறினால்,

இந்தியப் பண்பாட்டு மரபு குறித்த எந்தவொரு ஆய்வும் முழுமையற்றதாக குறையளவிலேயே இருக்கும் என்று, புகழ் வாய்ந்த ஆய்வாளர்கள் பெரும்பாலானோர் வலியுறுத்துகின்றனர்.

பன்னாட்டு அறிஞர்கள், உலகின் செம்மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழியை இப்போது ஏற்றுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், வடமொழி, அராபிய மொழி மற்றும் பாரசீக மொழியுடன் பண்டைய தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிப் பதற்கு முன்வந்துள்ளன. வடமொழியறிஞர் சி.ஆர்.சங்கரன், ஈராயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தொல்காப்பிய நூலில் உள்ள ஒலியியல் குறித்த பிரிவை ஆராய்ந்து தாம் கண்ட முடிவைப் பின்வருமாறு எழுதுகிறார். மொழியின் உள்ளார்ந்த ஒலி குறித்த ஆய்வுமுறைக்குச் சிறப்பளிப்பதும் ஒலியின் வடிவம், வகைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றை உறுதிப்படுத்தும் முயற்சி, சொற்களுக்குப் பொருள்கள் காண்பதில் சிறப்பான இடத்தைக் கொண்டிருக்க வேண்டும். இது பாணினியின் அஸ்டதி யாதியில் கூடக் காணப்படவில்லை என்று மதிப்பிட்டுள்ளார். மொழிகள் குறித்த வரலாற்றுக்குப் பண்டைய தமிழ் இலக்கண மரபார்ந்த நெறி மிகவும் போற்றத்தக்க பங்களிப்பாகக் குறிப்பிடலாம்.

செம்மொழியாகத் தமிழ்:-

இந்தியாவில் உள்ள மொழிகளில் தனித்தன்மை பூண்ட வீறுகொண்டதாகத் தமிழ் விளங்குகிறது. செழுமையான, அகப்புற இலக்கியக் கோட்பாடுகளையும், யாப்பிலக்கணம், செய்யுளியல், இலக்கண வரம்புகளையும் உள்ளடக்கியதாகத் தமிழ் இலங்குகிறது. வடமொழிச் செம்மொழியுடன் சேர்ந்து ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளாக அமைந்திருந்தாலும் வடமொழியின் செல்வாக்கினால் எவ்விதச் சீர்குலைவுமின்றி, வழக்கொழியாமல் தமிழ் தனித்து நின்று ஈடில்லாத மொழியாகத் தன்னைக் காத்துள்ளது.

தொன்மைத் தமிழ் செம்மொழியாக மலர்தல்:-

உலகளாவிய மரபிலக்கிய நற்கூறுகள், தொன்மை, வளமை, எளிமை முதலிய சிறப்பியல்புகளைப் பெற்றிருந்தபோதிலும் கூட, இந்நாள்வரையில் தமிழ்மொழி வட்டார மொழியாகவே கருதப்பட்டு, புதிய இந்திய மொழிகளின் வரிசையில்தான் வகைப்படுத்தப்பட்டது. இந்திய மொழிகளில், வடமொழி தவிர,

தமிழ்மொழி போன்ற தொல்மரபு கொண்ட மொழி வேறெதுவும் இல்லை. ஒருமைவாய்ந்த நம் பண்பாட்டின் உயர்ந்த மரபு மாட்சியைப் பேணுவதும், காப்பதும் இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமை என்பதை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வரையறை செய்துள்ளது. இந்நிலையில் தமிழ்மொழியைச் செம்மொழியாக ஏற்பது நமது கடமையாகும்."

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று, தக்க வரலாற்றுப் பின்னணியோடும், சான்றுகளோடும், கழக அரசின் சார்பில் மத்திய அரசின் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை; மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்திற்குப் பரிசீலித்து கருத்துரைக்குமாறு அனுப்பப்பட்டது.

அன்புள்ள,

மு.க.

28-12-2009

3449. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-5

கலிபோர்னியா பேராசிரியர் வழங்கிய கருத்துக்கோவை!

உடன்பிறப்பே,

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளோடு, கழக அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்ட அறிக்கை; மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்திற்கு அனுப்பப் பட்டது. அந்த அமைப்பு, கழக அரசின் அறிக்கையினை அனைத்துக் கோணங்களிலும் அணுகி, ஆராய்ந்து; இறுதியில், "செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் தமிழுக்கு இருப்பதால், நடுவண் அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம்" என மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது.

இதற்கிடையே, "இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியம் மிக்க நம் தமிழ்மொழியைச் செவ்வியல் மொழி வரிசையில் சேர்த்து, அதன் வளர்ச்சிக்கு நிதியுதவி அளிக்கவேண்டுமென மத்திய அரசை இந்தப் பேரவை கேட்டுக் கொள்கிறது" என 30.5.1996 அன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும் ;

"பல்லாயிரம் ஆண்டுக்கால பழைமையும், சீரிய இலக்கியச் செழுமையும், இலக்கண முழுமையும் வாய்ந்த மொழியாகிய தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது" என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும்;

"தமிழ் மொழியின் தொன்மை, செழுமை வாய்ந்த இலக்கியங்கள் ஆகியவற்றின் காரணமாகவும்; பல்வேறு மொழி களுக்கும், இலக்கியப் படைப்புகளுக்கும் மூலாதாரமாகத் தமிழ்மொழி விளங்குவதாலும்; தமிழ் மொழியைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து, தொடர்ந்து தமிழ் வளர்ந்தோங்கிடத் தேவையான நிதியுதவியினை வழங்கிட

வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது" என்று 19.7.1996 அன்று சென்னைப் பல்கலைக் கழகமும்;

"தமிழ், தொன்மையான மொழியாகவும், வளம் செறிந்த இலக்கியப் பாரம்பரியம் கொண்டதாகவும் திகழ்வதால்; தமிழ்மொழியைச் செம்மொழி என அங்கீகாரம் செய்து தமிழ்மொழி வளர்வதற்கு நிதி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அளித்திட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது" என்று 20.8.1996 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகமும் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் அனுப்பி வைத்தன. இதுபோன்ற தீர்மானங்கள், தமிழகத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் நிறைவேற்றி, அனுப்பி வைக்கப்பட்டன.

23.8.1996 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் டாக்டர் இ.எஸ். எஸ்.ராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, "இந்தியா முழுவதும் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் சமஸ்கிருதம், அரேபிய மொழி வரிசையில், தமிழ் மொழிக்கும் அந்தஸ்து வழங்க வேண்டு மென்று வற்புறுத்திப் பிரதமருக்கு முதலமைச்சர் கலைஞர் கடிதம் எழுதியுள்ளார்" என்று அமைச்சர் தமிழ்க்குடி மகன் பதில் அளித்தார்.

"அரிய இயல்புகள் அனைத்தையும் கொண்டிருந்தாலும், தமிழ் இன்னமும் இந்தியத் திருநாட்டின் செம்மொழியென அங்கீகரிக்கப்பட வில்லை. ஆனால், சமஸ்கிருதம், பாரசீகம், அரேபியம் ஆகிய மொழிகளுக்கு அந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழை, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையும், பல்கலைக்கழக மானியக் குழுவும் செம்மொழியென அங்கீகாரம் செய்வதோடு, மேலும் தாமதமின்றி உரிய நிதியுதவியும் அளித்திட வேண்டும்" என்று 21.8.1996 அன்று; தமிழக முதலமைச்சர் என்ற முறையில் நான், பிரதமர் தேவகவுடா அவர்களுக்குக் கடிதம் அனுப்பினேன். அந்தக் கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு 29.8.1996 அன்று பிரதமர் தேவகவுடா அவர்களிடமிருந்து, ஒப்புதலும் வந்தது.

முந்தைய பிரதமர்கள் திரு.தேவகவுடா, திரு.ஐ.கே.குஜ்ரால் மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்களுக்கு ஏற்கெனவே நான் அனுப்பியிருந்த கடிதங்களைச் சுட்டிக்காட்டி; 24.10.1998 அன்று பிரதமர் அடல் பிகாரி வாஜ்பய் அவர்களுக்கு, "சமஸ்கிருதம், பாரசீகம், அரேபியம் போன்று தமிழைச் செம்மொழியென அறிவித்திட வேண்டுமென்ற, உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் நீண்ட காலக் கோரிக்கையினை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நியாயமான அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் பட வேண்டும்" என்று நீண்ட கடிதம் எழுதினேன். கடிதத்துடன் "உயர்தனிச் செம்மொழியாக ஒளிரும் தமிழ்" எனும் தலைப்பிடப்பட்ட வல்லுநர் குழு அறிக்கையின் நகலையும், தமிழகப் பல்கலைக் கழகங்களில் நிறைவேற்றிய தீர்மானங்களின் நகல்களையும் மீண்டும் அனுப்பி வைத்தேன். தொடர்ந்து பிரதமருக்கும், மத்திய அரசுக்கும், நினைவூட்டுகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

தலைநகர்த் தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகள் சார்பில், தமிழை மத்திய ஆட்சிமொழியாகவும், செவ்வியல் மொழியாகவும் ஏற்றிடக் கோரி; டெல்லியில் 2000, ஏப்ரல் திங்கள் 29, 30 ஆகிய நாட்களில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அம்மாநாட்டை, செவ்வியல் மொழிச் செயலாக்கக் குழுத் தலைவர் சாலினி இளந்திரையன் முன்னின்று நடத்தினார். கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும், தமிழறிஞர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். தமிழக அரசின் சார்பில், அந்த மாநாட்டில் கலந்து கொள்ள தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அனுப்பி வைக்கப்பட்டார். மாநாட்டுக்கு நான் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "இம்மாநாடு நடத்துவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் மொழியை மத்தியில் ஆட்சிமொழியாக்கிட வேண்டுமென, அண்ணா காலத்திலிருந்து மைய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தமிழக அரசின் சார்பில், மைய அரசுக்குக் கோரிக்கைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், புதுடெல்லியில் மாநாடு நடத்தி, அதன் மூலம் இக்கோரிக்கைகளை வலியுறுத்திடும் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இம்மாநாடு மைய அரசின்

எண்ணங்களை, அறவழியில் ஈர்த்திடும் வண்ணம் எழுச்சியுடன் நிகழ்ந்திட உளமார வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், டெல்லியில் நடைபெற்ற அந்த மாநாடு தொடர்பான சோக நிகழ்வு ஒன்று இன்னமும் என் இதயத்தில் உறைந்து போய் இருக்கிறது. அந்த மாநாட்டின் வெற்றிக்காக, இரவுபகல் பாராது உழைத்த சாலினி இளந்திரையன், டெல்லிக்கு வந்த தமிழ்ச் சார்பாளர்களை வரவேற்கச் சென்றபோது, சாலை விபத்து ஒன்றில் கார் மோதி, உயிர் துறந்தார். கட்சி வேறுபாடின்றி அனைவரையும் அழைத்து, அந்த மாநாட்டினை நடத்த முன்னின்று உழைத்த சாலினி இளந்திரையன் மரணம் அடைந்தது மாபெரும் சோகமாகும். பேராசிரியர் சாலினி இளந்திரையன் உடல், டெல்லி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டு முடிந்தபின்னர்; அந்த மாநாடு அவரது நினைவாகவே நடத்தப்பட்டது!

பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 2000, ஏப்ரல் திங்களில் அமெரிக்கத் தமிழறிஞர் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், தமிழ்மொழியைச் செம்மொழியெனக் கூறும் நிலைப்பாடு பற்றி வழங்கிய அறிக்கை, உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. ஆங்கிலத்தில் வரையப்பட்ட கருத்தாழம்மிக்க அந்த அறிக்கை தமிழ்ச் செம்மொழி வரலாற்றில், ஆணிமுத்தை ஒத்த அத்தியாயமாகும்.

அமெரிக்காவிலுள்ள பர்க்லி நகரில் அமைந்துள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில், 1975ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருபவர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள். அவர் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் வடமொழி இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். மாடிசன் நகரில் உள்ள விஸ்கான் சின் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகவே பணியாற்றியவர். தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இருமொழி இலக்கியங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்தவர். அவற்றுடன், ஐரோப்பியச் செம்மொழிகளான இலத்தீனம், கிரேக்கம் ஆகிய இருமொழி இலக்கியங்களையும் விரிவாகக் கற்றுத் தேர்ந்தவர். இம்மொழிகள் அனைத்திலும் உள்ள நூல்களை மூல மொழியிலேயே கற்றுணர்ந்தவர். தற்கால ஐரோப்பிய மொழிகளின் இலக்கியங்களையும், மொழி ஒப்பியலையும் நன்கு கற்றுத்

தேர்ந்தவர். இரஷ்யன், ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளின் இலக்கியங்களை விரிவாகக் கற்றவர். அவற்றைப் போலவே, தற்கால இந்திய மொழிகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களை மூலமொழியிலும், மற்ற எல்லா மொழிகளிலும் உள்ள இலக்கியங்களை மொழியாக்கம் வாயிலாகவும் விரிவாகக் கற்றவர். இந்தி மொழியில் மகாதேவி வர்மா, துளசி, கபீர் ஆகிய பெருமக்களின் இலக்கியப் படைப்புகளையும் விரிவாகப் படித்தறிந்தவர்.

இத்தனை சான்றாண்மையினையும், மொழிப் புலமையினையும், இலக்கியத் திறனறிவினையும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், தமிழ் மொழியைச் செம்மொழி எனக்கூறும் நிலைப்பாடு பற்றியும், அதன் தகுதிநிலை பற்றியும் வழங்கிய அறிக்கையில் பொறிக்கப்பட்டுள்ள பொன்னான கருத்துரைகளைக் கழக உடன்பிறப்புகள் படித்து அறிந்து கொள்ளவும், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டு மென்பதற்காக; தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட அந்த அறிக்கையின் முக்கியமான பகுதிகளைப் பின்வருமாறு தருகிறேன். இந்தப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் நமது கோவை மாநாட்டுக்கும் வருகை தர இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதோ - அவரது அந்த அறிக்கை :-

"தமிழ்மொழி உலகின் மிகவுயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங்களையும் பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதனை நான் எவ்விதத் தயக்கமும் இன்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவேன். இவ்வாறு நான் கூற முனைவதற்குக் காரணங்கள் பலவுள்ளன. அவற்றை இனி ஒவ்வொன்றாக எடுத்து விளக்க முற்படுகின்றேன்.

முதலாவதாக, தமிழ்மொழி மிகுந்த பழைமைச் சிறப்பு வாய்ந்த மொழி. ஏனைய தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங் களுக்கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்ட, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் முற்பட்ட பேரிலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி. தமிழில் மிகப்பழம் பெரும்நூல் தொல்காப்பியம். தொன்மைக்காலக் கல்வெட்டுகளிலிருந்து, இந்நூலின் பகுதிகள் காலத்தால் மிகமுற்பட்டவை எனவும், ஏறத்தாழ கி.மு.200க்கு முன்பே இந்நூல் எழுந்துள்ளது எனவும் தெரிகின்றது. பழந் தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க

இலக்கியங்களாகும்; அவை பத்துப்பாட்டும், எட்டுத் தொகை நூல்களும் பிறவும் ஆகும். அவை, ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை எனக் கொள்ளலாம். அவை, வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி விட்டன. மதச்சார்பற்ற இந்தியாவில், முதன் முதலில் எழுந்த மதச் சார்பற்ற பெருங்கவிதை இலக்கியத் தொகுப்பு, சங்க இலக்கியங்கள் என்றால் அது மிகை யாகாது.

இரண்டாவதாக, இந்தியாவில் தோன்றிய, இந்திய மண்ணிற்கு மட்டுமே தனிச் சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது தமிழ்; இந்த இலக்கிய மரபு வடமொழியிலிருந்து பெறப்பட்டது அன்று என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையைச் சொல்வதானால், தென்னாட்டில் சமஸ்கிருதமொழியின் செல்வாக்கு வலிமை பெறுவதற்கு முன்னரே, தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன. அதனால்தான், தமிழ் இலக்கியங்கள் யாவும், வடமொழியில் அல்லது வேறு இந்திய மொழிகளில் உள்ள எந்த இலக்கியத்தையும் போல இல்லாமல், தன்மையால், இயல்பாய் முற்றிலும் மாறுபட்டுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.

சிறந்த இலக்கியக் கொள்கை, விழுமிய இலக்கண மரபுகள், உயர்ந்த முருகியற் செழுமை, இவை அனைத்திற்கும் மேலாக, தனித்து விளங்கும் தனக்கேயுரிய மிகப் பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கொண்டிலங்குவது தமிழ்மொழியாகும். வடமொழியிலோ, வேறு எந்த இந்திய மொழியிலோ காணப்படாத, அவற்றிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு விளங்குகின்ற, இந்தியப் பெருநாட்டினுக்கு உரித்தான (இந்திய மக்களிடம் காணப்படுகின்ற) கலைநயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வைத் (Sensibility) தமிழ் இலக்கியங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. வளம்மிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும், மரபும் அவற்றின்கண் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக, தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களின் தன்மை, அவற்றைச் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளில் எழுந்து விளங்கும் பேரிலக்கியங்களுக்கு நிகராக (அவற்றுடன் ஓரணியில் வைத்து) எண்ணத்தக்க நிலையை, தகுதியை அவற்றுக்கு வழங்குகிறது.

தமிழ் இலக்கியங்களின் சொற்செறிவும், பொருளாழமும், அவற்றின் நுட்பமும் திண்மையும் (Subtlety) அகலமும் விரிவும் (Profundity) அவை நுவலும் பல்வேறு பாடுபொருள்களும், களமும் (Varied Scope) நவீன காலத்திற்கு முந்தைய (இந்திய இலக்கியங் களில், கால அளவில் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே, சமூகத்தில், தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன). அவற்றின், மனித குலம் அனைத்தையும் வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடும் (Universality), தமிழ் மொழியை உலகம் தழுவிய மிகப்பெரிய செவ்வியல் மொழி, மரபுகள், இலக்கியங்களுடன் ஒருங்கே வைத்து, அவற்றுள் ஒன்று எனப்போற்றும் தகுதி நிலையை அளிக்கின்றன. வான்புகழ் வள்ளுவர் வழங்கிய திருக்குறள், ஒழுக்கநெறிகளைக் கற்பிக்கும் உலகின் தலைசிறந்த அறநூல் என்பதனை அனைவரும் அறிவோம். எனினும், இந்த நூல், தமிழில் செவ்வியல் மொழி, இலக்கிய மரபுகளைத் தம்முள் கொண்டு விளங்குகிற, ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் வேறுபட்ட பாடுபொருள்களை உடைய, பல்வேறு பெருநூல்களின் தொகுப்பில் (பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள்) ஒன்றா கும். இந்தப் பேரிலக்கியத் தொகைநூல்களின் வாயிலாக, மனிதகுல வாழ்வியலின் ஒவ்வொரு பரிமாணமும், ஒவ்வொரு தோற்றமும் மிக நுட்பமாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன; இந்த இலக்கியப் படைப்புகளின் ஆய்வுக்குட்படாத, இவற்றின் ஒளிபடாத வாழ்வியல் துறைகளே இல்லை எனலாம்.

இறுதியாக, தமிழ்மொழி நவீனகால இந்தியப் பண்பாடு, மரபுகளின் முதன்மையான, தனித்துவம் உடைய வாயில்களில் ஒன்றாக விளங்குகிறது. சமஸ்கிருதக் கவிதை மரபின் மீது தென்னக மரபுகளின் செல்வாக்கைப் பற்றி நான் மிக விரிவாக எழுதியுள்ளேன். இதற்கு நிகராக இன்னொரு முக்கியச் செய்தியுமுண்டு; தமிழில் சங்கத்தொகை நூல்களின் காலத்தில் தோன்றிப் பரவத் தொடங்கிய இந்து சமயச் சார்புடைய, புனிதமான (வழிபாட்டுப்) பேரிலக்கியங்கள் நவீனகால (இந்திய) இந்து சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளன. அந்தப் பக்தி இலக்கியச் சிந்தனைகளும், கருத்துகளும் (தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் எழுந்த) பாகவத புராணத்திலும், ஏனைய நூல்களிலும் எடுத்தாளப்பெற்று, அவற்றின் வழியாக, இந்தியத்

திருநாடு முழுவதும் பரவின. 'வேதங்களுக்கு ஒப்பானவை' என்று போற்றப்படும் புனிதமான சமய (பக்தி) இலக்கியங்கள் தமிழிலுள்ளன; இவை தமிழுக்கே உரியன. இவை தென்னிந்திய வைணவத் திருக்கோவில்களில் (திருப்பதி முதலானவை) வேத மந்திரங்களுடன் சேர்த்து ஓதப் பெறுகின்றன. தற்கால இந்தோ-ஆரிய மொழிகளுக்கு எவ்வாறு வடமொழி (சமஸ்கிருதம்) மூல மொழியாக விளங்குகிறதோ, அதேபோன்று தற்காலத் தமிழ், மலையாள மொழி இலக்கியங்களுக்குச், செவ்வியல் மொழியாகத் திகழ்ந்த தொன்மைத் தமிழே மூலமொழியாக விளங்குகிறது. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில், சமஸ்கிருதம் மிகமிகப் பழையது; தொன்மையானது; கால வகையில் சிறிதளவும் மாறாது, மாற்றத்திற்கு இடங்கொடாது, இன்றளவும் பழைமைக்குப் பழைமையாக இருந்து வருகிறது. அதே போன்று, திராவிட மொழிகளில் தமிழ் முன்னைப் பழைமைக்கும் பழைமையாகவும் மிகவும் தொன்மையானதாகவும் இருந்து வருகிறது. எனினும், திராவிட மொழிகளின் இயல்பையும், வளர்ச்சியையும் புரிந்துகொள்ள மொழியியலாளர்கள் நாடவேண்டியதும், அவர்களுடைய ஆய்வுகளுக்கு உதவும் உரைகல்லாகத் (கட்டளைக்கல்) திகழ்ந்து வருவதும் தமிழேயாகும்.

ஒரு மொழி 'செவ்வியல் மரபு' உடையது என்று அழைக்கப்படுவதற்குத் தகுதிபெற வேண்டுமெனில், அது பல்வேறு அடிப்படை விதிமுறைகளுக்குப் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்; அவையாவன: அது தொன்மைமிக்கதாக, பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்; அது இன்னொரு மொழி மரபில் கிளைத்து வளர்ந்ததாக இல்லாமல், தனக்கேயுரிய தனித்துவமுடைய மொழி மரபினைப் பெற்றதாகவும், அம்மொழி மரபு பெரிதும் தானே படைத்த இலக்கியச் செழுமையில் வளர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்; இதற்கெல்லாம் மேலாக அம்மொழி விரிந்து, பரந்து வளம்செறிந்த தொன்மை வாய்ந்த பேரிலக்கியச் செல்வத்தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். இந்தியாவின் ஏனைய தற்கால மொழிகளைப் போலல்லாமல், தமிழ் இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் ஒருங்கே நிறைவு செய்கின்றது.

'தமிழ் ஒரு செவ்வியல் மொழி' என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக நான் இதைப் போன்று ஒரு கட்டுரை

எழுதவேண்டியுள்ளது என்ற எண்ணமே எனக்கு இயல்புக்கு மாறானதாகத் தோன்றுகிறது. இச்செயல் எப்படியிருக்கிறது என்றால், 'இந்தியா ஒரு மிகப்பெரிய நாடு, இந்துசமயம் உலகின் மிகப்பெரிய சமயங்களில் ஒன்று' என்னும் கூற்றை நிலைநாட்ட முற்படுவது போன்றுள்ளது. 'தமிழ் செவ்வியல் மொழி' என்னும் தகுதி நிலையை மறுக்க முனைவது, இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கும், வளமைக்கும் இன்றியமையாத மையக்கூறாக விளங்கும் - உயிராதாரமாக விளங்கும் - உறுப்பு ஒன்று 'அதற்கு இருக்கக்கூடாது' என்று மறுக்க முனைவதற்கு ஒப்பானதாகும்."

பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்களது இந்த அறிக்கையில் உள்ள கருத்துக்கள் இந்தியத் திருநாட்டின் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு; தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.

அன்புள்ள,

மு.க.

29-12-2009

3450. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்-6

செம்மொழி சிறந்திட; தொடர் செயல்பாடுகள்!

உடன்பிறப்பே,

தமிழைச் செம்மொழியாக அறிவித்திடத் தேவைப்படும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கழக அரசின் சார்பில், தொடர்ந்து மத்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 13.6.2000 அன்று பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு நான் நினைவூட்டுக் கடிதம் அனுப்பினேன். 18.12.2000 அன்று முதலமைச்சர் என்ற முறையில் பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தில், "ஏற்கெனவே நான் அனுப்பிய கடிதங்களின்பால் தங்களது அன்பான கவனத்தை ஈர்த்திட விரும்புகிறேன். தொன்மையும், வளமும் நிறைந்த தமிழ்மொழியைச் செம்மொழி எனப் பிரகடனம் செய்திட வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கை, மத்திய அரசிடம் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வருகிறது. உண்மையும், நேர்மையும் வாய்ந்த மாநில அரசின் இக்கோரிக்கையை பரிசீலனை செய்து மத்திய அரசு உரிய ஆணைகளைப் பிறப்பித்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஆட்சி அளவில் என்று மட்டுமல்லாமல், கட்சிரீதியாகவும் -அரசியல்ரீதியாகவும், தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டியது அவசர அவசியம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது. அதன் எதிரொலியாகத்தான் - அனைத்து மாநிலங்களின் ஆட்சிமொழிகளும், மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்றும்; அப்படி அனைத்து மாநில மொழிகளையும், ஆட்சி மொழிகளாக ஆக்குவது உடனடியாக இயலாது என்ற நிலை ஏற்படுமாயின்; முதல்கட்டமாக, திராவிட மொழிக் குடும்பத்தில் ஒன்றான, இலக்கியப் பண்பாட்டு வளம்

நிறைந்த மொழியான தமிழ்மொழியை மத்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஆக்கவேண்டுமென்று - தொடர்ந்து தனது தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிட்டுச் சொல்லிவந்த திராவிட முன்னேற்றக் கழகம்; 2001 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், முதல்முறையாக, "தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவித்திட வேண்டு மென்று தி.மு.க. வலியுறுத்தும்" என்ற வாக்குறுதியை இடம்பெறச் செய்தது. தேர்தல் வாக்குறுதியுடன் நில்லாமல்; கழகம், அதை வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான செயல் திட்டங்களை வகுத்து, களத்தில் இறங்கியது.

2002ஆம் ஆண்டு, மே திங்கள் 4 மற்றும் 5ஆம் நாட்களில் தலைநகர்த் தமிழ்ச் சங்கமும், பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து; தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ச் செவ்வியல் மொழி, திருக்குறள் தேசிய நூல் எனும் முப்பெரும் முழக்கத்துடன் மாநாடு நடத்தின. அந்த மாநாட்டில், "தமிழ் மொழியானது காலத் தொன்மை- இலக்கிய, இலக்கண வளமை - வாழும் இளமை, தாய்மை ஆகியவற்றின் காரணமாக இன்னபிற மொழிகளுள் முதலிடம் பெறுகிறது. தமிழ்மொழியைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கவேண்டுமெனத் தொடர்ந்து, பல்லாண்டுகளாக வலியுறுத்தி வரும் ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வினை அறிந்தும், மைய அரசு மேலும் காலந்தாழ்த்தி வரும் நிலை வருந்தத்தக்கது. இனியும் காலங்கடத்தாமல், உடனே தமிழ் மொழியைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென இம்மாநாடு மைய அரசை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2003, ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள், தமிழ் மொழி அகாதெமியின் சார்பில் சென்னையில் பத்தாவது தேசிய மொழிகளின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில், "இலக்கியக் கடல் விருது" எனக்கு வழங்கப்பட்டது. அந்த விருதினைப் பெற்றுக்கொண்டு, தமிழ் செம்மொழி என்பதன் தொடர்பாக நான் ஆற்றிய உரை, உடன்பிறப்பே, நீ நினைவு கூர்ந்திட வேண்டிய கருத்துக்கள் நிறைந்தது என்பதால், அதன் முக்கியமான பகுதிகளைப் பின்வருமாறு வழங்குகிறேன்:

"எல்லோராலும் இங்கே பேசப்பட்டது, தமிழ் செம்மொழியாக ஆக்கப்படவேண்டும் என்பதாகும். ஆக்கப்படவேண்டும் என்பதைவிட, அழைக்கப்படவேண்டும் என்பதுதான் பொருத்தம்.

ஏனென்றால், ஏற்கெனவே தமிழ் செம்மொழிதான். அதில் யாருக்கும் இருவேறு கருத்து கிடையாது. ஆனால், அது செம்மொழி என்று அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நாம் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கை. தமிழ் மொழியைச் செம்மொழி என்று அழைக்கப்படக்கூடிய தகுதி இருக்கிறதா என்று பார்த்தால், ஒரு மொழி செம்மொழி என்று அழைக்கப்பட என்னென்ன தகுதிகள் வேண்டுமென்றால், பதினோரு தகுதிப்பாடுகளை மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பதினோரு தகுதிப்பாடுகளும் முற்றிலும் பொருந்தக்கூடிய, உலகத்தின் ஒரேமொழியாகத் தமிழ் திகழ்கிறது.

முக்கியமான உலகமொழிகளின் மொத்த எண்ணிக்கை 600. அதிலே, இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் 300. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் 6. அவை, தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரூ, கிரீக் ஆகியன. அதிலே, இலத்தீனும், ஹீப்ரூவும், ஏறத்தாழ இறந்த மொழிகள் என்று கருதப்படக்கூடியவை. ஆனால், இஸ்ரேல் அரசால், ஹீப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, ஓரளவிற்கு அதிலே வெற்றியும் பெற்று வருகிறது.

இறப்பின் எல்லை வரை சென்றுவிட்ட கிரேக்க மொழி, அந்த நாடு விடுதலை பெற்ற பின், புதுவாழ்வு பெற்று வருகிறது என்று சொல்லலாம். சமஸ்கிருதம் என்றுமே பேச்சு வழக்கு மொழியாக இருந்ததேயில்லை. அது எழுத்து வழக்குக்கு மாத்திரம்தான் பயன்படுகிற மொழி. ஆனால், இந்தியாவிலே உள்ள மூத்த மொழிகளிலே, ஒரு மொழி வடமொழியான சமஸ்கிருதம் என்பதை மறுப்பதற்கில்லை. நான் ஏற்கெனவே தமிழில் எழுதியுள்ள குறளோவியம், அந்த வடமொழியில், சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்து, சீன மொழியை எடுத்துக்கொண்டால், சீனமொழி பட எழுத்துக்கள், சித்திர எழுத்துக்களைக் கொண்ட மொழி. ஆனால், தமிழ்மொழி ஒன்றுதான், மனித சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளைப் பிசிறில்லாமல், அழுத்தந் திருத்தமாக, துல்லிய மாக உணர்த்தும் ஆற்றல் கொண்ட மொழி என்று நானல்ல; மொழியியல் தந்தை என்று போற்றப்படுகின்ற டாக்டர் எமினோ அவர்கள் கூறியிருக்கிறார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்த மொழி நம்முடைய மொழி.

ஐரோப்பாவை மொழிவழியிலே அறிந்து கொள்ள வேண்டுமேயானால், இலத்தீன், ஹீப்ரூ, கிரீக் மொழிகளின் துணை தேவைப்படுவதைப்போல; இந்தியாவை அறிய தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளின் துணை தேவை. இந்திய மொழிகளுக்குத் தாயாக, இந்த இரண்டு மொழிகள்தான் உள்ளன.

பண்டித நேரு அன்றைக்கு எழுதிய உலகச் சரித்திரம் என்ற நூலில் மொஹஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களில் இருப்பது திராவிட நாகரிகம் என்று ஒப்புக்கொண்டு எழுதினார். அப்படிப்பட்ட நாகரிகத்திற்குச் சொந்தக்காரர்களாகிய நம்முடைய மொழி தமிழ்மொழி. அந்தமொழிதான் 'கிளாசிகல் லாங்வேஜ்' ஆக, செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டு மென்று நாம் இன்றைக்கு முறையீடு வைக்கிறோம். இந்த முறையீடு வெற்றி பெற்றால், என்ன பயன், தமிழ் செம்மொழி யாகிவிட்டால் என்ன ஆகிவிடும் என்று கேட்பவர்களுக்கு நான் தருகின்ற விளக்கம் இதுதான்.

> மத்திய அரசு தமிழைச் செம்மொழி என்று அறிவித்தால், இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு அதனை ஏற்கும். அதன்பின், அனைத்து இந்தியப் பல்கலைக்கழகங்களிலும், தமிழ்த்துறை தனித்துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழ்க்கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும். இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு, தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும். உலகப் பல்கலைக்கழகங்களில் இப்போது, கீழ்த்திசை மொழிகளில் ஒன்றாக தமிழ் இருந்துவரும் நிலைமைமாறி, தனியே தமிழ்த் துறைகள் உருவாக்கப்படும்.

மத்திய அரசு, சமஸ்கிருத ஆண்டாக அறிவித்ததைப் போல, தமிழ் ஆண்டு என்று அறிவிக்க வாய்ப்பு ஏற்படும். சமஸ்கிருத ஆண்டைக் கொண்டாட, 15 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியதைப் போல, தமிழுக்கும் ஒதுக்கிக் கொண்டாடும் நிலை உருவாகும். தமிழர்களின் கலை, இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புக்களை விவரிக்கும் கலைக் களஞ்சியத் தொகுதிகள் உருவாக்கப்பட வாய்ப்பு ஏற்படும். தமிழ்மொழி-ஆங்கில அகராதிகள் பல வெளிவரலாம்.

அதற்கான செலவு மத்திய அரசு ஏற்கலாம். அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேக மூட்டும் வகையில், மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில், தமிழிலக்கியங்களும், நவீனப் படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

இதனை நிறைவேற்றுவதற்காகத்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, பல முயற்சிகளிலே ஈடுபட்டோம். தமிழைச் செம்மொழியாக ஆக்கிடவேண்டுமென்று மத்திய அரசிடம் ஏற்கெனவே வைக்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமான ஆவணங்களையெல்லாம் எடுத்துப் பார்த்து - பரிந்துரைகளை எல்லாம் படித்துப் பார்த்து - தமிழைச் செம்மொழியாக ஆக்கவேண்டுமென்ற இந்த மாநாட்டினுடைய தீர்மானத்தை, 1918ஆம் ஆண்டிலிருந்து நாம் இதுவரை படிப்படியாக நிறைவேற்றி வருகின்ற இந்தத் தீர்மானக் கருத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று, இந்த மாநாட்டின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்."

தமிழ் செம்மொழி சம்பந்தமாக நான் ஆற்றிய இந்த உரை, தமிழ் ஆர்வலர்கள் மத்தியில்

பெரும் உணர்ச்சியையும், வரவேற்பையும் ஏற்படுத்தியதோடு; ஆங்கில நாளேடுகளிலும் விரிவாக வெளியிடப்பட்டு, மத்திய அரசியலாரின் கவனத்தையும், கருத்தையும் ஈர்த்தது.

2003, மே திங்கள் 3, 4ஆம் நாள்களில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கமும், தலைநகர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடத்திய மாநாட்டில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "உலகில் உள்ள மொழிகளில் தமிழ், கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், சீனம் ஆகிய ஐந்தும் மூத்தமொழிகளாகும். ஆனால், இந்த மொழிகளில் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் வழக்கொழிந்த நிலையிலும், அவற்றிற்குச் செவ்வியல் மொழித் தகுதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், காலத்தொன்மை, இலக்கிய வளம், தாய்மைத் தன்மை, உயிரோட்டம் ஆகியவற்றைப் பெற்ற தமிழ் மொழியைச் செவ்வியல் மொழி என அறிவிக்க இந்திய அரசு

மறுக்கிறது. தமிழைச் செவ்வியல் மொழியாக ஏற்றுக்கொண்டு அதற்குரிய நிலையினை உருவாக்கிட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி; மீண்டும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் - அதன் செயலாளர் திரு.ச.ராமநாதன் அவர்களது முயற்சியின் பயனாக 20.7.2003 அன்று தீர்மானம் நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து, பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில், தமிழறிஞர்களும், தமிழ்ச் சான்றோர்களும், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் என ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

18.8.2003 அன்று தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகளின் சார்பில், நாடாளுமன்றம் முன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. அந்த உண்ணாவிரதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் மத்திய அமைச்சர்களுமான; டி.ஆர்.பாலு, ஆ.இராசா, ஏ.கே.எஸ்.விஜயன், ஏ.டி.கே.ஜெயசீலன், டி.வேணுகோபால், எஸ்.அக்கினிராஜ், ஆதிசங்கர், ஆ.கிருட்டினசாமி, வி.வெற்றிச் செல்வன், பேராசிரியர் சங்கர லிங்கம், ச.விடுதலைவிரும்பி, ஆர்.சண்முக சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்து, தமிழகக் காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுத் தலைவரும், தமிழ்நாடு காந்திப் பேரவைத் தலைவருமான இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், 12.8.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில், "தமிழ் பயிற்று மொழி, செவ்வியல் மொழி என்றெல்லாம் ஆகவேண்டுமென்பது நமது நெடிதுநாள் கோரிக்கையாகும். பாரதி நூற்றாண்டு விழாவை 52 வாரங்களும், பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை 52 வாரங்களும் கொண்டாடிய அமைப்பு எமது இலக்கியப் பேரவையாகும். அதன் சார்பில், நான் உண்ணா நோன்பில் கலந்து கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அதைப் போலவே, எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் அருமை நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் 13.8.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில்,

"90 வருடங்களுக்கு முன்பே, தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்று தமிழறிஞர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதற்காக, கட்சிபேதமின்றி கடந்த சில வருடங்களாகத் தமிழறிஞர்கள் மத்திய அரசை வலியுறுத்திப் பல போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். டெல்லியில் நடைபெறவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தைத் தமிழ்மக்களும், அனைத்துக் கட்சியினரும் ஆதரிக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் எம்.ஜி.ஆர். கழகம் கலந்து கொள்ளும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, டெல்லியில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பிறகு, 19.8.2003 அன்று போராட்டக் குழுவின் சார்பில் இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்களிடமும், குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களிடமும் தமிழைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ளக் கோரும் மனு கொடுக்கப்பட்டது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், தலை நகர்த் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் புலவர் த.சுந்தரராசன், புலவர் அறிவுடைநம்பி, பேராசிரியர் ஆறு.அழகப்பன், முனைவர் தி.க.சு. கண்ணன், பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவர் சுப்பிரமணியன், டெல்லித் தமிழ்ச் சங்கத் தலைவர் முகுந்தன் ஆகியோர் - மத்திய அரசு ஏற்கெனவே சமஸ் கிருதம், பாரசீகம், அராபிய மொழிகளைச் செம்மொழிகளாக அறிவித்திருக்கும் நிலையில்; தமிழின் வளமையையும், தனித்தன்மையையும், தொன்மையையும் கருதி அதனைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும்; கடந்த நூறு ஆண்டுகளாக எழுப்பப்பட்டுவரும் இக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றும் - பிரதமரிடமும், குடியரசுத் தலைவரிடமும் வலியுறுத்தினர். இக்கோரிக்கை ஏற்கெனவே மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக அவர்களிடம் பிரதமர் வாஜ்பய் தெரிவித்தார்.

தமிழைச் செம்மொழியாக அறிவித்திட எழுப்பப்பட்டு வரும் கோரிக்கை குறித்து, திராவிடர் கழகத் தலைவர் திரு. கி.வீரமணி அவர்கள் 2.9.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில், "தொன்மையும் வளமும் மிக்க மொழியான தமிழைச் செம்மொழியென்று அறிவிக்க வேண்டுமென்பதை,

மொழியியல் வல்லுநர்கள்- அறிஞர்கள் முதல் அரசியல் கட்சித் தலைவர்கள், சமூக அமைப்புகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் அனைவரும் ஒரே குரலில், மாற்றுக் கருத்து ஏதுமின்றி வாஜ்பய் தலைமையிலான மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இக்கோரிக்கை கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. இதற்கிடையே; - தமிழைச் செம்மொழியாக அறிவிப்பது தொடர்பாக பரிந்துரை அளிக்குமாறு, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி, தனது அமைச்சக அதிகாரிகளிடம் கேட்டதாகவும்; பயன்பாட்டில் இல்லாத இறந்த மொழியை மட்டுமே செம்மொழியாக அறிவிக்க முடியுமென்றும்; தமிழ்மொழிக்கு அனைத்து வளங்களும் உள்ளபோதிலும், அது பயன்பாட்டில் இருப்பதால் செம்மொழியாக அறிவிக்க இயலாதென அமைச்சருக்கு அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளதாகவும்; - திடீரென்று ஏடுகளில் அதிகாரபூர்வமின்றி ஒரு செய்தி வெளிவந்துள்ளது. சமஸ்கிருதத்தோடு ஒப்பிடு கையில், தமிழ் வளமான மொழியாக இருப்பதால், அது செம்மொழிக்குள்ள தகுதியற்ற மொழியென்றால், அதைவிடக் கேலிக்கூத்து வேறு உண்டா? உலகத் தமிழர்கள் முதல் உள்நாட்டுத் தமிழர்கள் வரை அனைவரும் இதனை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கருதிட வேண்டும்" என்று அவர் அறைகூவல் விடுத்தார்.

மத்திய ஆட்சியில் இருந்த தேசிய ஜன நாயகக் கூட்டணியில் பெரும்பங்கு வகித்து வந்த பா.ஜ.க.வில்; முரளி மனோகர் ஜோஷி போன்ற முன்னணித் தலைவர்கள் சிலர், திராவிட மொழிக் குடும்பத்தின் மீதிருந்த தீராத வெறுப்பின் காரணமாக; தமிழ் செம்மொழியென அறிவிக்கப்பட வேண்டுமெனும் கோரிக்கை தொடர்பாகக் கொண்டிருந்த எதிர்மறையான அணுகுமுறையும், காட்டிய தாமதமும் தமிழ்ச் செம்மொழி அறிவிப்பைத் தள்ளிப்போடச் செய்தன என்ற நிகழ்வினை; வரலாறு கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது என்பதை மறுத்திட இயலாது.

அன்புள்ள,

மு.க.

30-12-2009

3451. செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் -7

கடிதமல்ல; காலத்தால் அழிக்க முடியாத செப்பேடு!

உடன்பிறப்பே,

ஆட்சியிலே இருந்தாலும், எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம், தான் ஏற்றுக் கொண்ட இலட்சியங்களுக்காக என்றென்றும் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கும் என்பதற்குக் கழக வரலாற்றில் எண்ணற்ற சான்றாவணங்கள் இருக்கின்றன. தமிழைச் செம்மொழியாக அறிவித்திட வேண்டு மென்பது கழகத்தின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட, ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, எதிர்க்கட்சியாக இருந்த போதும் கழகம் தொய்வில்லாத நடவடிக்கைகளை மேற்கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கிற முறையில் நான், பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து, 22.4.2003 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில்;

“தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்பது எனது இதயபூர்வமான கோரிக்கை. கடந்த பல ஆண்டுகளாக நான் வலியுறுத்தி வரும் இந்தக் கோரிக்கையை மீண்டும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்மொழி எப்போது தோன்றியது என்பதை இதுவரை எந்த அறிஞரும் கண்டு பிடிக்கவில்லை. கல்தோன்றி மண் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய மொழி தமிழ்மொழி என்று அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர். இதுவே தமிழின் தொன்மையைப் பறைசாற்றுகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறேன்.

நான், தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாகப் பலமுறை மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்நிலையில், தங்கள் தலைமையில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, நீண்ட எதிர்பார்ப்புடன் கூடிய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் என்று நம்புகிறேன்" என்று மீண்டும் மத்திய அரசுக்கு நினைவூட்டி, வலியுறுத்தினேன்.

2003ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் 20, 21 ஆகிய நாட்களில் நடைபெற்ற விழுப்புரம் மாவட்டத் தி.மு.க. மாநாடு; விழிப்புணர்ச்சி ஊட்டிய மாநாடாக - எழுச்சியும், ஏற்றமும் மிகுந்த மாநாடாக - பயன்விளைத்திடும் வகையில் பாங்குற நடைபெற்றது. அந்த மாநாட்டில் "செம்மொழியாக அறிவிக்கப்படுவதற்கும், மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக இடம் பெறுவதற்கும் அனைத்துத் தகுதிகளும் தமிழ்மொழிக்கு இருந்தும்; பலமுறை மத்திய அரசிடமும், நாடாளுமன்றத்திலும் இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டும்; இதுவரை அதனை ஏற்று அறிவிக்காமல் இருக்கும் மத்திய அரசின் மெத்தனப் போக்கைச் சுட்டிக் காட்டுவதுடன்; உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி" தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தையொட்டி, தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பாக, தமிழகம் முழுவதும் 15 மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்ச் செம்மொழி - ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. முனைவர் மு.பி.மணிவேந்தன் மற்றும் மாநில நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தினர்.

விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட; தமிழ் ஆட்சிமொழி - செம்மொழி, காவேரி ஆணையம், சேதுசமுத்திரத் திட்டம், பொடா- எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் ஆகியவை குறித்த தீர்மான விளக்கக் கூட்டங்கள் தமிழகமெங்கும் நடைபெற்று, கழகச் சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர். அந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம், 1.11.2003 அன்று மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன் மறியல் அறப்போராட்டத்தை நடத்தியது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முயற்சியால், 10.1.2004 அன்று தமிழறிஞர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில்,

செம்மொழிக் கோரிக்கையினைத் தமிழறிஞர்கள் மட்டுமன்றிப் பாமரர்களும் அறியவேண்டுமென்றும்; அவர்களும் அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு நல்கிட வேண்டுமென்றும்; எனவே ஒருகோடிக் கையெழுத்து இயக்கத்தினை நடத்தி, நடுவண் அரசை வலியுறுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன் தொடக்க விழா 12.1.2004 திங்களன்று கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில், தஞ்சை நகர்மன்றத் தலைவர் திரு.கு.சுல்தான் முதல் கையெழுத்திட நடைபெற்றது. சம்பந்தப் பட்ட அனைவரும், தமிழ் ஆர்வலர்களும் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, மிகக்குறுகிய காலத்திலேயே அந்த இயக்கம் இலக்கினை அடைந்தது.

2004, மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி; திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், முதன் முதலாக செம்மொழிக் கோரிக்கையின் நோக்கத்தை விளக்கி; "இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழுக்கென்று துறை ஏற்படுத்திடவும், தமிழ் ஆராய்ச்சிக்கென மத்திய அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கிடவும், உலகளாவிய (Global) பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சிப் பணி நடைபெறவும் வாய்ப்பாக, செம்மொழிக்குள்ள அனைத்துத் தகுதிகளும் கொண்ட தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென திராவிட முன்னேற் றக் கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்" என்ற வாக்குறுதி இடம் பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று, அதில் தியாகத் திருவிளக்காம் திருமதி சோனியாகாந்தி அவர்களின் தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற்று; டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல கட்சிகள் இடம் பெற்றன. நாடாளுமன்றத் தேர்தல் களுக்கு முன்பிருந்தே திருமதி சோனியா காந்தி அவர்களிடம் நாம் தொடர்ந்து எடுத்துரைத்து வந்ததன் விளைவாக, மத்தியில் ஆட்சி அமைந்ததற்குப் பிறகு வெளியிடப்பட்ட குறைந்தபட்ச பொதுச்செயல்திட்ட அறிக்கையில் (National Common Minimum Programme); தமிழ்மொழி, செம்மொழியென பிரகடனப்படுத்தப்படும் (Tamil will be declared as a Classical

Language) என்ற செயல் திட்டமும் இடம் பெற்றது. இது செம்மொழி வரலாறு ஒரு சிறப்பான கட்டத்தை எட்டிவிட்டது என்பதை உலகத்திற்கு உணர்த்தியது.

7.6.2004 அன்று நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்கள், தமிழ் செம்மொழியென பிரகடனப் படுத்தப்படும் (Tamil will be declared as a Classical Language) என்று செய்த அறிவிப்பு, தமிழறிஞர்களையும், தமிழ் ஆர்வலர்களையும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

2004, ஆகஸ்டுத் திங்கள் 21, 22 ஆகிய நாட்களில் சேலம் மாநகரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்பு மாநாட்டில்; "கடந்த ஒரு நூற்றாண்டாகத் தமிழறிஞர்கள் பலரும், தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியே யென்று தக்க சான்றுகள் தந்து, வலியுறுத்தி வந்தாலும், தமிழ்மொழியின் அந்தச் சிறப்புத் தகுதியை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்பதைக் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குக் கடிதவாயிலாகவும்,

நேரிலும் பலமுறை வலியுறுத்தி வந்ததுடன், தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் அதனை இடம்பெறச் செய்து, தமிழ்மொழியைச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தியதற்கிணங்க, மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, அதனை ஏற்று குடியரசுத் தலைவர் உரையில் அறிவித்திருப்பதை இம்மாநாடு வரவேற்பதுடன், விரைவில் அதற்குரிய அரசாணை வெளியிடவும் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம்; பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியம் முன்மொழிந்திட, திரு.ச.அமுதன் வழிமொழிய, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலிலும், டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையிலும் இயங்கி வரும் மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, 12.10.2004 அன்று, தமிழைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிவிக்கை வெளியானதும், நான் எவ்வளவு குதூகலம் கொண்டிருப்பேன் - எனது உள்ளம் எந்த

அளவுக்கு மகிழ்ச்சியால் துள்ளியிருக்கும் - எனது மனதில் எவ்வளவு பெருமிதம் முளைத்திருக்கும்; என்பதையெல்லாம் உடன்பிறப்பே, என்னை முழுதும் அறிந்த நீ நிச்சயம் உணர்வாய். தந்தை பெரியார் அவர்கள் என்னைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டிய போதெல்லாம் - அறிஞர் அண்ணா அவர்கள் என்னை அரவணைத்து உச்சிமுகர்ந்து அன்புமழை பொழிந்தபோதெல்லாம்; அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி அப்போது என்னுள் குடிகொண்டிருந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் 10.10.2004 அன்று சென்னையில் தமிழ் மொழி அகாதமி நடத்திய பாராட்டு விழாவிலும்; 17.10.2004 அன்று மதுரையில், மதுரை தமிழ்ச் சங்கமும், தமிழார்வம் உடைய 30-க்கும் மேற்பட்ட சங்கங்களும் இணைந்து நடத்திய பாராட்டு விழாவிலும்; நான் ஆற்றிய உரைகள் அமைந்திருந்தன என்பதைத் தமிழார்வலர்கள் அனைவரும் அறிவர். அந்த உரைகள் இத்தொடர் கட்டுரைகளுக்கு முழுதும் பொருத்தமானவையெனினும்; அவற்றில் ஒருசில பகுதிகளை மட்டும் பின்வருமாறு வழங்குகிறேன். அவை இதோ :-

"தமிழ் மொழி செம்மொழி என அறிவிக்கப்பட்டதைக் கொண்டாடுகின்ற வகையில் நாமெல்லாம் இங்கே கூடியிருக்கிறோம். அதற்கு ஒரு பாராட்டு விழா என்றும், அந்தப் பாராட்டு விழா எனக்கென்றும் குறிப்பிட்டிருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. திராவிட மொழி ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் என்கின்ற பேரறிஞர், அவரைத் தொடர்ந்து பல ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு, தமிழ்மொழி செம்மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று முதல் குரல் கொடுத்த சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர், அவர்களைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள் பல, தமிழ்ப் புலவர்கள் பலர், தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் - இப்படி நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் இந்த ஒரு நிலை நாம் எய்துவதற்காகப் பாடுபட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவர்களுக்கெல்லாம் நீங்கள் தெரிவிக்க வேண்டிய பாராட்டுக்களை, வழங்க வேண்டிய நன்றியை என் வாயிலாக இன்றைக்கு வழங்கியிருக்கின்றீர்கள் என்று தான் நான் கருதுகிறேனேயல்லாமல், நீங்கள் நன்றியினை ஒரு மூட்டையாகக் கட்டி, என்னுடைய தலையிலே வைத்து, இதைக் கொண்டு போய் அவர்களிடத்திலே சேர்த்திடு என்று கட்டளையிட்டிருக்கிறீர்கள்.

நான் ஒரு கருவி. இந்தக் கருவியைத் தமிழ் நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப்

பேரறிஞர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உளி சிற்பம் செதுக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால், அந்த உளியே அந்தச் சிற்பத்தை செதுக்கியதாக பொருள் கொள்ள முடியுமா? அந்தப் பணியை ஆற்றியது சிற்பி. அதைப்போல நான் உளிதான், சிற்பிகள் பலர், பல்லாயிரவர். அந்தச் சிற்பிகளுக்கெல்லாம் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை, நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் கொஞ்சம் அணுகிப் பார்த்தால் எந்தவொரு மொழியும் ஒரு அரசைப் பொறுத்துத்தான் வளர முடியும். வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்ப்பீர்களேயானால், ஒரு மொழி வளர அரசும், அரசின் ஆதிக்கமும் அந்த அரசை நடத்துகின்றவர்களுடைய ஆதரவும் தேவை என்பதை அறியலாம். அப்படிப் பார்த்தால் தமிழ் செம்மொழியாக ஆவதற்கான வழிவகை வகுக்கின்ற ஒரு அரசு இந்தியாவிலே உருவாயிற்று என்பதே உண்மை. அந்த அரசின் கடமையாகத்தான் தமிழ் செம்மொழியாக இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றிய டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், வழிகாட்டும் குழுவிற்கு பொறுப்பேற்றிருக்கின்ற திருமதி.சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும் இந்தப் பெருவிழாவின் சார்பாக நான் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் 1924ஆம் ஆண்டு 80 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில், தஞ்சைத் தரணியில் எங்கோ ஒரு சிற்றூரில், திருக்குவளை என்ற கிராமத்தில் முத்து வேலருக்கும், அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த நான் இன்றைக்கு, இந்தப் பெருவிழாவில், தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் வாழ்த்த, இத்தனை போற்றுதலுக்கும், புகழுதலுக்கும், பெருமைக்கும் உரியவனாக ஆகியிருக்கிறேன் என்றால், இதற்குக் காரணமாக என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையாருக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கும், வழிகாட்டி உய்வித்த அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் என்னோடு ஒத்துழைத்து, உறுதுணையாக இருக்கின்ற உங்கள் அனைவருக்கும், எல்லா உடன்பிறப்புகளுக்கும் இந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்குகின்றேன்.

கடந்த காலத்தில் தமிழ் செம்மொழியாக ஆவதற்காகவும், ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆவதற்காகவும், விழுப்புரம்

மாநாட்டிலே தீர்மானம் நிறைவேற்றி போராட வேண்டியிருந்தது. ஒருலட்சம் பேர் என்னுடைய தலைமையிலே உள்ள இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுதும் கவனிக்கப்படும், பார்ப்போம் என்ற ஒரு ஆறுதல் மொழிகூட கடந்த காலத்திலே இருந்த அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இந்த அரசு, இன்றைக்கு இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிற அரசு, நம்முடைய உணர்வைப் புரிந்து கொண்டு, உடனடியாக செம்மொழியாக ஆக்குவோம் என்று குடியரசுத் தலைவர் உரையிலே அறிவித்து, அறிவித்ததை நீங்கள் எப்போது அமலாக்கப் போகிறீர்கள் என்று நாங்கள் வலியுறுத்தி, வலியுறுத்தி, இன்றைக்கு அது ஆக்கபூர்வமாக, அமைச்சரவைக் கூட்டத்திலேயே அங்கீகாரம் பெற்று, தமிழ் மொழி, செம்மொழியாக நம்முடைய மடிகளிலே தவழ்ந்து விளையாடுகின்ற ஒரு காட்சியைக் காணுகின்றோம்.

இது ஒருவருடைய உழைப்பு அல்ல. தமிழ் நாட்டிலே இருக்கின்ற வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. நாங்கள் தமிழ் மீது வைத்துள்ள ஆசை, பாசம் இவைகள் எல்லாம் வீண் போகவில்லை. வீண் போகாமல் பாதுகாத்த பெருமை எனக்கல்ல. என்னுடைய தலைமையிலே நாற்பது பேரை வெற்றிபெறச் செய்த இந்த நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கு உரியது. தமிழர்களுக்கு உரியது. எனவே, இந்தப் பாராட்டும், நன்றி கூறும் விழாவும், அவர்களுக்கே உரியது."

பின்னர், 5.3.2006 அன்று திருச்சியிலே நடைபெற்ற தி.மு.கழக மாநாட்டில் திருமதி. சோனியாகாந்தி அவர்கள் முன்னிலையில் நான் உரையாற்றியபோதுதான் என்னுள் பெருக்கெடுத்த உணர்வுகள் குற்றாலத்து அருவியெனக் கொட்டின. அந்த உணர்வுகளை இதனை எழுதும்போது மீண்டும் நான் பெற்று, படிக்கும்போது நீயும் பெறவேண்டும் என்பதற்காக, உரையின் ஒரு பகுதியை பின்வருமாறு வழங்கியிருக்கிறேன்:-

"தமிழைச் செம்மொழியாக்க; நூற்றைம்பது ஆண்டுகாலமாக சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர் அவர்களுடைய கோரிக்கை பூத்து, காய்த்து, பழுத்து, அது அழுகிவிடுமோ என்றெல்லாம் நாம் பயந்திருந்த காலத்தில்; "நாங்கள் இருக்கிறோம், அஞ்சாதீர்கள்" என்று சொல்லுகின்ற இன்றைய மத்திய ஆட்சி நாம்

விடுத்த அந்த வேண்டுகோளை ஏற்று தமிழை செம்மொழி என்று அறிவித்திருக்கிறது. தமிழ் செம்மொழி என்று அறிவித்து; அதைத் தொடர்ந்து அம்மையார் அவர்களே, நவம்பர் 8 அன்று நீங்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினீர்கள். அந்தக் கடிதத்தில்,

November 8, 2005

Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 28th October. I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party.

With Regards,

Yours sincerely,

Sonia Gandhi.

அதாவது, தமிழை செம்மொழியாக ஆக்குவதற்குத் தேவையான சடங்கு, சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து அது நிறைவேறி விட்டது. இந்தச் சாதனைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் காரணம் என்றாலும்கூட, குறிப்பாகவும் சிறப்பாகவும், நீதான் இதற்குக் காரணம். உன் தலைமையிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்குக் காரணம் என்று எழுதினீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்கிறேன். இது ஒரு கடிதமாக அல்ல. காலா காலத்திற்கும், இன்னும் நூறாண்டுகாலம், இருநூறாண்டு காலத்திற்கும் பிறகு என் கொள்ளுப் பேரன் எடுத்துப் படித்து நம்முடைய தாத்தா கட்டிக்காத்த செப்பேடு இது என்று பாராட்டுகின்ற அளவிற்கு ஆக வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவன் நான்.

இளமைப் பருவத்தில் தமிழ் வாழ்க, தமிழர் வெல்க என்று புலி, வில், கயல் பொறித்த கொடி பிடித்து அரசியல் வாழ்வைத் தொடங்கியவன் நான். அந்த அரசியல் வாழ்வுதான் இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் செம்மொழியாக ஆக, ஒரு வரலாறு உண்டு என்றால், அந்த வரலாற்றை - பெருமையை எனக்கு அளிக்கும் வகையில் நீங்கள் எனக்கு எழுதிய அந்தக் கடிதம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, வைரங்கள்

பதிக்கப்பட்டு, என்னுடைய கல்லறையிலே எதிர்காலத்தில் மாட்டப்பட வேண்டிய ஒன்று. என்னுடைய நினைவகத்திலே இருக்க வேண்டிய ஒன்று என்கின்ற அந்த பூரிப்போடு நீங்கள் எழுதிய அந்தக் கடிதத்திற்காக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

இந்த நன்றி உரையின் ஒவ்வொரு சொல்லும் நான் வாழும் காலம் வரை எனது இதயத்திலும்; ஏன், நான் மறைந்த பிறகும்கூட, எனது கல்லறையிலும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்!

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று, தமிழறிஞர்கள் முதலில் எழுப்பிய குரல் - அமைப்பு ரீதியாக எதிரொலித்து - தமிழர்களின் இதயக் குரலாக மாறி - அரசியல் அரங்கில் ஏற்றம் பெற்று - ஆட்சி மூலமாக அந்தக் குரல் ஆற்றல் பெற்று - தக்கோரிடத்தில் சரியான தருணத்தில் தகுதி படைத்தோரால் உரிய முறையில் எடுத்துரைக்கப்பட்டதால்; தமிழ் அன்னை இன்றைக்குத் தங்கரதத்திலே வீற்றபடி தரணியிலே பவனி வருகிறாள்!

காலம் கனிந்தது. தமிழர்களின் நூறாண்டு காலக் கனவு நனவானது. தமிழ் செம்மொழியெனப் பிரகடனம் ஆயிற்று - செம்மொழி வரலாற்றின் முதல் பாகம் சிறப்பாக நிறைவெய்தி உள்ளது. செம்மொழிக்கு நாம் அடுத்தடுத்து ஆற்றிட வேண்டிய பணிகள் அணிஅணியாக உள்ளன. அவற்றிற்காக நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோமாக!

செம்மொழியாம் தமிழ் வாழ்க!
செந்தமிழர் நலம் வாழ்க!
சீர்மிகு தமிழகம் செழித்தோங்கி வளர்ந்திடுக!

அன்புள்ள,
மு.க.
31-12-2009

3452. வாழ்த்து குவிக்கின்றேன்; வளமார் தமிழக மக்களுக்கு!

உடன்பிறப்பே,

தமிழ்ப் புத்தாண்டு இன்னும் சில நாட்களில்! அதனை சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவதற்கான பணிகளில் நீ ஈடுபட்டிருப்பாய் என்பதை நான் நன்கறிவேன். பெரும் புலவரும், தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சான்றோர்களும் புலவர்களும் 1921ஆம் ஆண்டு, சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி - தமிழர்களுக்கென்று ஒரு "தனி ஆண்டு" தேவை என்பதை எடுத்தியம்பி - அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினை பின்பற்றுவதென்றும் - அதையே "தமிழ் ஆண்டு" என்று போற்றுவ தென்றும் - திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்த முடிவினையேற்று 39 ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்புகளிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட வழிவகை செய்தேன்.

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்பது - எல்லாத் தமிழறிஞர்களாலும் ஒட்டுமொத்தமாக ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையென்பதால் - தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்று அறிவித்து, அதனை ஆண்டுதோறும் கொண்டாடிட தமிழக அரசு 2008ஆம் ஆண்டு முடிவு செய்து, அதனை அந்த ஆண்டு ஆளுநர் உரையிலும் குறிப்பிட்டிருந்தது.

பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடிவரும் தமிழர்கள் இனிமேல் தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து அந்த நாளை இனிக்கும் நாளாகவும் ஏற்றமும் பெருமிதமும் தரும் இணையிலா நாளாகவும் இரட்டிப்பு

மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற வகையில் - வாழை, பலா, மா என்ற முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை வரிசையான விளக்குகளால் ஒளி உமிழ் இல்லங்களில் புது எழிலைக் காட்டி; புத்தாடைகள் புனைந்து - தன்மானம், தமிழ் மானம் போற்றி; ஆடியும் பாடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும் - தரணி போற்றிடும் தமிழ்ப் புத்தாண்டு இதுவெனக் கொண்டாடிட வேண்டுகின்றேன்.

சாதி, மத, இன வேறுபாடு எதுவுமின்றி, உழைப்பை நல்கி உலகுக்கு உதவியவர்களையும் எண்ணி - உழவர் பெருங்குடி மக்களுக்கு நன்றி தெரிவித்து வாழ்த்திடும் இனிய திருவிழா நாளாக அந்நாளைக் கருதிடுவோம்.

மங்கிக் கிடந்திடும் பழந்தமிழ் மரபுகள் பொங்கிப் பெருகி எங்கும் தழைத்திடல் வேண்டும்; செழித்திடல் வேண்டும் என்ற உணர்வோடு இந்த ஆண்டும் தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் திருநாளாகக் கொண்டாடிட வேண்டுமென்று புதுவெள்ளமெனப் பெருகி வரும் உணர்வுகளோடு வாழ்த்துகின்றேன்.

பிறக்கவுள்ள தமிழ்ப் புத்தாண்டில்தான் சரித்திரத்தில் என்றும் நிலைத்து நிற்கப் போகின்ற புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டு இன்னும் இரண்டு மாத காலங்களில் திறக்கப்படவுள்ளன. அது போலவே, சென்னையில் கட்டப்பட்டு வரும் உலகத் தரம் வாய்ந்த அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கான பணிகள் நிறைவுற்று திறக்கப்படவுள்ளது. அதற்கும் மேலாக தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட சரித்திர நிகழ்ச்சிக்குப் பிறகு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற பெயரில் உலகின் பல்வேறு மூலை முடுக்குகளில் உள்ள தமிழர்கள் எல்லாம் கூடிக் கொண்டாடவுள்ள ஐந்து நாள் மாநாடு கோவை மாநகரிலே நடைபெற இருக்கிறது! அந்த மாநாட்டிற்கான குழுக்கள் அறிவிக்கப்பட்டு அந்தக் குழுக்கள் தத்தமது பணிகளைத் தொடங்கிவிட்டன. கோவை மாநாட்டினை யொட்டி அதன் நினைவாக சர்வதேசத் தரத்திலான தாவரவியல் பூங்கா ஒன்றும் "செம்மொழிப் பூங்கா" என்ற பெயரில் கோவையில் உருவாவதற்கேற்ற பணிகளும் தொடங்கப்பட்டு - அது பற்றி நேற்றையதினம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் என்னைச் சந்தித்து விவாதித்துச் சென்றிருக்கிறார்.

புத்தாண்டு தொடக்க நாளை எவ்வாறெல்லாம் கொண்டாடப் போகிறோம் என்று அமைச்சர் பெருமக்களும், கழகத்தின் மூத்த முன்னோடிகளும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இப்போதே என்னைச் சந்திக்கும்போது கூறி வருகின்றார்கள். தமிழர்கள் தங்கள் இல்லங்களை அலங்கரிப்பதைப் போல - அரசு கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நெடுஞ்சாலையிலே உள்ள நீண்ட பாலங்கள் போன்றவை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட வேண்டும். கிராமங்கள்தோறும் அனைத்துக் குடும்பத்தினரும் ஒன்று சேர்ந்து சமத்துவப் பொங்கல் சமைத்து புத்தாண்டின் பெருமையை ஊரெங்கும் பறை சாட்டிட வேண்டும்.

புத்தாண்டு தொடக்க நாள் என்பது - தமிழகத்திலே உள்ள ஏழையெளிய மக்களுக்கு - தமிழர்களாக பிறந்த மக்களுக்கு - திராவிடச் சமுதாயத்தை தனது இனம் என தலை நிமிர்ந்து கூறுகின்ற மக்களுக்கு ஓர் இனிய திருவிழா நாளாகும். வேறு நாட்கள் எத்தனையோ வரலாம், போகலாம். ஆனால் தை முதல் நாள்தான், நமது புத்தாண்டு தொடக்க நாள்.

இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டை நீ கொண்டாடவிருக்கும் நேரத்தில் நமது அரசின் சார்பில் ஆளுநர் உரை அவையிலே படிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரையில் தமிழக அரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட கொள்கை அறிவிப்புகள்தான் அதிலே அடங்கியுள்ளன. அவற்றைத் தயாரிக்கும் பணியிலே அரசு நிதித் துறை செயலாளரோடு இணைந்து கடந்த சில வாரங்களாக அல்லும் பகலும் அதே சிந்தனையோடு தமிழ் நாட்டு மக்களுக்காக என்னென்ன திட்டங்களை அரசின் சார்பில் அறிவிக்கலாம், எவ்வாறெல்லாம் அதனை நடைமுறைப்படுத்தலாம் என்று யோசித்து எடுக்கப்பட்ட அறிவிப்புகள்தான் அதிலே அடங்கியுள்ளன.

சுருக்கமாக ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டுமேயானால், கிராமப் பகுதிகளில் குடிசைகளே இல்லாத ஒரு நிலையை உருவாக்கும் வகையில் 21 லட்சம் குடிசை வீடுகளை காங்கிரீட் வீடுகளாக மாநில அரசு செலவில் கட்டித் தரும் மாபெரும் "கலைஞர் வீட்டு வசதித் திட்டம்;" ஒரு குடும்பத்தில் இதுவரை பட்டதாரிகளே இல்லா திருப்பார்களானால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தொழிற்கல்வி பயில சாதிப் பாகுபாடின்றி, வருமான வரம்பை கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும்; வீட்டு மனைப் பட்டா வழங்க

குறைந்தபட்சக் குடியிருப்பு கால வரம்பு மூன்றாண்டுகளாகக் குறைப்பு; நெல்லுக்கு கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 50 ஊக்கத் தொகை வழங்க முடிவு; 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மருத்துவ கல்லூரிக்கான கட்டிடம்; கலையுலகினரின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துவரும் திரைப்படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ள 90 ஏக்கர் நிலம்; ஆதி திராவிடப் பெருமக்களின் "தாட்கோ" கடன் ரத்து; சுனாமிக் கடன் பெற்ற விசைப்படகு மீனவர்களின் கடன் ரத்து; சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கவல்ல எரி சக்தி மேம்பாட்டு நிதி; என்று எழுதிக் கொண்டே போகலாம். புதிதாக வெளியிடப்பட்டுள்ள இந்தத் திட்டங்களை அன்னியில் இந்த அரசினால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

பொதுவாக இந்த அரசைப் பொறுத்த வரையில் - குறிப்பாக என்னைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டு மக்களுக்கு அரசினால் எந்த வகையில் எல்லாம் உதவி செய்திட முடியும், நன்மைகளை நிறைவேற்றிட முடியும், சலுகைகளை வழங்கிட முடியும் என்பதிலேதான் என்னுடைய எண்ணத்தைச் செலவிட்டு உழைத்துக் கொண்டிருக்கின்றேன். அதன் விளைவாகத்தான் ஆளுநர் உரையிலே அடுக்கடுக்கான இந்தத் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டுள்ளன. அரசின் சார்பில் இந்தத் திட்டங்களுக்கான நிதிகள் வழங்கப்படவுள்ளன. அவ்வாறு அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற நிதிகள் முறையாகவும் முழுமையாகவும் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதுதான் என்னுடைய பெரு விருப்பம். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பினரும் வழங்கிட வேண்டு மென்று புத்தாண்டினைச் சிறப்புற நீங்கள் எல்லாம் என்னோடு இணைந்து கொண்டாட விருக்கும் இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்வதைத்தான் கடமையெனக் கருதுவதோடு எந்த வகையிலேனும் தமிழ் மக்களுக்காக உழைக்கின்ற என் கடமை உணர்வு என்றும் தொடருமென்ற உறுதியுடன் உளமார்ந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை உனக்கும் - மற்றும் எல்லா உடன்பிறப்புகளுக்கும் குவிக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

9-1-2010

3453. ஒரு "தலைவன்" இருக்கிறான் மயங்காதே!

உடன்பிறப்பே,

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை வரலாற்றில் செப்பேடுகள் போன்ற தீர்மானங்களும் சட்டங்களும் இந்தக் கடிதத்தில் இடம் பெறுகின்றன.

மேலும்; எத்தகைய "வாய்மை!" மிக்க எதிர்க்கட்சித் தலைவரை பெற்றிருக்கிறது நமது சரித்திரக் கீர்த்தியுள்ள சட்டப்பேரவை என்பதை இக்கடிதம் சான்றுகளுடன் நிரூபணம் செய்வதால் பேரவை வரலாற்றில் அதுவும் ஒரு செப்பேடுதானே?

அதனால் இந்தக் கடிதம் முழுமையும் படி!

உடன்பிறப்பே,

11-1-2010 அன்றுதான் தமிழகச் சட்டப் பேரவை தற்போது நடைபெறும் இந்த மண்டபத்திலே தனது பணியினை ஆற்றவிருக்கின்ற கடைசி நாள். அதே நாளில் ஆளுநரின் உரைக்கு முதலமைச்சர் பதில் சொல்லும் நாளாகவும் அமைந்தது. ஆனால், 10ஆம் தேதி நள்ளிரவில் எனக்குக் கிடைத்த தகவல் - பேரவையிலே அமளியை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி நடைபெறுவதாகக் கூறப்பட்டது. நான் உடனே அமைச்சர்கள் துரைமுருகனையும், பொன்முடியையும் வீட்டிற்கு வரச்சொல்லி இரவு இரண்டு மணி வரை அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். என்னதான் அவதூறாக கழக அரசின் மீது பேசினாலும், என்னைப் பற்றிப் பேசினாலும், கழக உறுப்பினர்கள் பொறுமை காட்ட வேண்டுமென்றும், அமளிக்கு இடம் கொடுத்து விடக் கூடாதென்றும், கடைசி நாளில் எந்த விதமான அசம்பாவிதமும் நடந்து விடக் கூடாது என்றும், ஆளுநர் உரைக்கு துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பதில் கூறலாமென்றும், அதன் பின்னர் பேரவையின் இறுதிநாள் என்ற முறையில் நான் சிறிது

நேரம் பேசலாம் என்றும் முடிவு செய்து கொண்டு இரண்டு மணிக்கு மேல்தான் தூங்கச் சென்றோம்.

நள்ளிரவில் எனக்கு வந்த செய்தியின் படியே பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் தனது பேச்சை புத்தகமாகவே தயார் செய்து கொண்டு வந்து பேரவையில் பேசினார், இல்லை ஏசினார். அவர் கழக அரசின் மீது சாட்டிய ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் நான் விளக்கமாக பின்னால் பதிலளிக்கிறேன். முதலில் அந்தப் பேரவை பற்றி நான் அவையிலே பேச எண்ணி, பாதியிலேயே நிறுத்தி விட்ட கருத்துக்களை, அவையிலே பதிவு செய்ய விரும்பியதை இந்த மடலில் தொடர்ந்திட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே அவையிலே பேசியதை நீ படித்திருப்பாய்!

செயின்ட் ஜார்ஜ் கோட்டை பற்றிய வரலாற்றை அவையிலே தொடங்கி - அங்கே அமைந்த சட்டப்பேரவை மண்டபத்தில் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதைப் பற்றிய விவரங்களைத் தொடருகிறேன்.

29-7-1953 குலக்கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது பற்றிய தீர்மானம். அந்தக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று திருத்தத் தீர்மானம். வாக்கெடுப்பில் திருத்தத்திற்கு எதிராக 138 வாக்குகளும், எதிர்த்து 138 வாக்குகளும் கிடைத்து, பேரவைத் தலைவர் திருத்தத்திற்கு எதிராக வாக்களித்ததால் திருத்தம் தோல்வியடைந்தது. எனினும், 18-5-1954இல் குலக்கல்வி முறையை கைவிடுவதென அரசு முடிவெடுத்தது.

மூதறிஞர் ராஜாஜி முதல்வர் பொறுப்பை ராஜினாமா செய்ததை அடுத்து பெருந்தலைவர் காமராஜர் 13-4-1954 அன்று முதலமைச்சரானார். பின்னர் காமராஜர் தலைமையில் இருந்த அமைச்சரவை ராஜினாமா செய்து, பெரியவர் பக்தவத்சலம் தலைமையில் அமைச்சரவை அமைந்து, இப்போதுள்ள சட்டப்பேரவை மண்டபத்திலே தனது பணியினைத் தொடர்ந்தது.

மதுரைப் பல்கலைக் கழகம் 1965இல் தொடங்கப்பட்டதற்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் என்ற பெயர் மாற்றம் 1978இல் செய்யப்பட்டது.

6-3-1967 அன்று அண்ணா தலைமையில் ஒன்பதுபேர் கொண்ட கழக அமைச்சரவை பதவியேற்றது. பேரவைத் தலைவராக திரு. ஆதித்தனாரும், துணைத் தலைவராக திரு. புலவர் கோவிந்தனும் பொறுப்பேற்றனர்.

24-11-1967 முதல் பேரவைத் தலைவர் திருக்குறள் ஒன்றினைச் சொல்லி நிகழ்ச்சிகளைத் துவக்கும் வழக்கம் ஏற்படுட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் - சென்னை மாநிலத்திற்கு "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானத்தை நிறைவேற்றியது. (18-7-1967)

சுயமரியாதை மற்றும் சீர்திருத்த திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது.

தமிழை ஆட்சி மொழியாக்கி - மும்மொழித் திட்டத்தை நிராகரித்து தமிழகத்தில் இரு மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. (23-1-1968)

நான் முதல் அமைச்சராக 1969இல் பதவியேற்ற பிறகு நிலச் சீர்திருத்த (உயர் அளவைக் குறைத்தல்) சட்டம் உருவாகியது.

விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு பல்வேறு விதமான பணிகளுக்கு நியாயமான கூலி நிர்ணயிக்க வகை செய்யும் சட்டம்.

தொழிலாளர் நலம் காத்திடும் வகையில் மே தினத்தை அரசு விடுமுறையாக்கிட வழி வகுத்தது.

31-3-1969 அன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நீண்ட நாள் உறுப்பினரான ஜி. கோமதி சங்கர தீட்சிதருக்கு 80 வயது பூர்த்தியானதை யொட்டி நான் பொன்னாடை அணிவித்து பாராட்டினேன்.

பஞ்சாப் முதல் அமைச்சர் குர்னாம்சிங் அவர்களின் அழைப்பையேற்று அந்த மாநிலத்திற்கு சென்று அங்கேயுள்ள பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டு வந்ததின் தொடர்ச்சியாக தமிழகத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்காக ஒரு சட்டம் 1971இல் நிறைவேறியது.

குடிசைப் பகுதி மாற்று வாரியச் சட்டம் 1971இல் தி.மு. கழக ஆட்சியில் நிறைவேறியது. குடியிருப்புகளுக்கு உரிமைகளை

வழங்கல் சட்டம் 1971இல் நிறைவேறியது. 8-7-1971 அன்று காவேரி பிரச்சினை குறித்து நடுவர்மன்றம் அமைக்கக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

17-12-1971 புதிதாக உருவான பங்களாதேஷ் நாட்டிற்கு வாழ்த்து தெரிவித்து தீர்மானம்.

இந்தியச் சுதந்திரத்தின் வெள்ளி விழாவினை யொட்டி ஆளுநர் மேதகு கே.கே. ஷா அவர்கள் தலைமையில் பேரவை மண்டபத்தில் 14-8-1972 நள்ளிரவு 12 மணிக்கு பேரவை சிறப்புக் கூட்டம் கூடியது. அப்போது பேரவைத் தலைவராக கே.ஏ. மதியழகன் இருந்தார். துணைத் தலைவராக பெ. சீனிவாசன் இருந்தார்.

அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர் ஆவதற்கு வகை செய்ய மத்திய அரசை வலியுறுத்தி 15-4-1974 அன்று ஒருமனதாக தீர்மானம்.

மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தை 16-4-1974 அன்று நான் முன்மொழிந்து பேரவை நிறைவேற்றியது.

21-8-1974 அன்று கச்சத்தீவு குறித்த தீர்மானம்.

பேருந்துகள் மற்றும் ஒப்பந்த ஊர்திகளை அரசு மேற்கொள்ளும் வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

30-6-1977 அன்று எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க. அமைச்சரவை அமைந்தது.

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கான சட்டம் 1978இல் நிறைவேறியது.

21-8-1981 மற்றும் 25-10-1983 ஆகிய நாட்களில் இலங்கைப் பிரச்சினைக்கான தீர்மானங்கள்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டம் 1984இல் நிறைவேறியது.

உடல் நலம் பெற்று நாடு திரும்பிய எம்.ஜி.ஆர். தலைமையில் 14-2-1985 அன்று அமைச்சரவை அமைந்தது.

தமிழ்மொழிக்கென தனி பல்கலைக் கழகம் தஞ்சையில் அமைக்க சட்டம்.

அழகப்பா பல்கலைக் கழகச் சட்டம் 1985இல் நிறைவேறியது.

தமிழக மேலவை 1-11-1986 முதல் ஒழிக்கப்படுவதற்கான தீர்மானம் அ.தி.மு.க. ஆட்சியில் 14-5-1986 அன்று நிறைவேற்றப் பட்டது. மேலவைத் தலைவராக அப்போது சிலம்புச் செல்வர் ம.பொ.சி. இருந்தார். மேலவை உறுப்பினராக நானும் இருந்தேன்.

மொழிப் போரில் அண்ணா வழியில் அரசியல் சட்டப் பிரிவை எரித்தமைக்காக பேராசிரியர் க. அன்பழகனார் உள்ளிட்ட கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரை அரசியல் சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்று கூறி அவர்களின் பதவி பறிக்கப்பட்டதும் இந்தச் சட்ட மன்றத்திலேதான். (22.12.1986)

தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டம் 1987இல் நிறைவேறியது.

9-8-1987 அன்று இந்தியா விடுதலை அடைந்து நாற்பதாண்டுகள் நிரம்பப் பெற்றதைக் கொண்டாடும் வகையில் சிறப்புக் கூட்டம் நடை பெற்றது.

24-12-1987இல் எம்.ஜி.ஆர். மறைந்ததை யொட்டி அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மாள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். (சில மாதங்கள் மட்டும்)

27-1-1989இல் மீண்டும் என் தலைமையில் அரசு அமைந்தது.

5-5-1989இல் தமிழகச் சட்டமன்றப் பேரவை தனது பொன் விழாவினைக் கொண்டாடியது. இந்த விழாவில் முன்னாள் அமைச்சரும், முன்னாள் கேரள ஆளுநருமான திருமதி ஜோதி வெங்கடாசலத்திற்கும், சுதந்திரப் போராட்ட வீரரான எல். கிருஷ்ணசாமி பாரதிக்கும் நினைவுப் பரிசுகளை நான் வழங்கினேன். குறிப்பாக - சட்ட மேலவை முன்னாள் தலைவர்கள் மாணிக்கவேலு, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்கள் புலவர் கோவிந்தன் போன்றவர்களுக்கு பொன்விழா விருதுகள் வழங்கப்பட்டன.

12-5-1989 அன்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த மைய அரசைக் கோரி தீர்மானம்.

24-4-1990 அன்று காவேரி பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்ற நிலையை மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21-8-1990 அன்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியதற்காக நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.

பெண்களுக்கு சொத்தில் உரிமை வழங்கிட சட்டம் கண்டது.

1991ஆம் ஆண்டு மீண்டும் அ.தி.மு.க. அமைச்சரவை அமைந்து, ஜெயலலிதா அவர்கள் முதல் அமைச்சரானார்.

முரசொலி ஆசிரியர் செல்வத்தை உரிமை பிரச்சினை காரணமாக பேரவை நடுவே கூண்டிலே ஏற்றியதும் இதே சட்டமன்றத்திலே தான். (21-9-1992)

பல்கலைக் கழகங்களுக்கு முதல் அமைச்சரே வேந்தராக இருப்பதற்கு வகை செய்யும் சட்ட முன் வடிவுக்கு ஆளுநரின் ஒப்புதல் சட்டமன்றத்தின் காலம் முடியும் வரை கிடைக்கப் பெறவில்லை.

5-6-1993இல் அனைத்திந்திய சட்டமன்றத் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் மாநாடு இதே அவையில் நடைபெற்றது.

20-4-1994 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

26-4-1995 அன்று மாநில ஆளுநர் நியமிக்கப்படுவதற்கு முன்பு மாநில முதல் அமைச்சர்களின் கருத்துக்களை கேட்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

13-5-1996இல் மீண்டும் என் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது.

தமிழ் வளர்ச்சிக்கென தனி அமைச்சகம் கண்டு அமைச்சர் ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டார். அவர்தான் தமிழ்க் குடிமகன்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கான சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பட்டது.

28-4-1997 அன்று தந்தை பெரியார் பெயரில் பல்கலைக் கழகம் அமைய சட்டம் இயற்றப்பட்டது.

14-7-1997 அன்று சட்டமன்றத்தின் பவள விழாவும், சட்டமன்றப் பேரவையின் வைர விழாவும் நடைபெற்றன.

1997இல் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டப்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒவ்வொரு தொகுதிக்கும் 25 இலட்சம் என ஒதுக்கப் பட்டது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஜெயலலிதா அவர்கள் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார். நீதிமன்றத் தீர்ப்பு காரணமாக ஜெயலலிதா பதவி விலக நேரிட, இடையில் ஒரு சில மாதங்கள் ஓ. பன்னீர்செல்வம் முதலமைச்சராக பதவி வகித்தார்.

2006ஆம் மே திங்களில் தி.மு. கழக ஆட்சி அமைந்து முதலமைச்சராக ஐந்தாவது முறையாக நான் பொறுப்பேற்றேன்.

தமிழ் மொழியை 1 முதல் 10ஆம் வகுப்பு வரையில் பள்ளிகளில் அனைத்து மாணவர்களும் பயில்வதை கட்டாயமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

மத மாற்றத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பட்டது.

தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு தினமாக அறிவிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அருந்ததியர்களுக்கு கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் தனி ஒதுக்கீடு செய்ய வகை செய்யும் சட்ட முன் வடிவு மூன்று சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி நிறைவேற்றப்பட்டது.

சிறுபான்மையினரான முஸ்லீம்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுச் சட்டம்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வழி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதும் இந்த அவையிலேதான்.

காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக தமிழகம் எங்கும் கொண்டாட தனிச் சட்டம்.

பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறைவேற வழி வகுத்ததும் இந்தச் சட்டமன்றத்தில்தான்.

11-5-2007 அன்று இந்தச் சட்டப் பேரவையில் என்னுடைய சட்டப் பேரவை பணிகளுக்கான பொன் விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. மேதகு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா கலந்து கொண்டார். 12-5-2007 அன்று நடைபெற்ற இரண்டாம் நாள் சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மக்களவைத் தலைவர் மாண்புமிகு சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் விழாவிற்கு தலைமையேற்றுப் பாராட்டினார்கள்.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடந்த விவாதங்களில் ஒருசிலவற்றை நினைவூட்டிட விரும்புகிறேன்.

இராம. அரங்கண்ணல்:- பழம் பெரும் தியாகிகளில் ஒருவரான நெல்லைச் சீமை வாஞ்சிநாத ஐயரின் குடும்பத்தினர் தியாகிகள் மானியம் கோரி விண்ணப்பித்திருந்தார்கள். அதைக் கடந்த அரசாங்கம் கவனிக்காமல் இருந்தது. அது இப்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு அண்ணா:- வாஞ்சிநாத ஐயர் அவர்களுடைய பிரச்சினையில் அவருடைய விதவையார் அவர்கள் மனு செய்து கொண்டார்கள். வாஞ்சிநாத அய்யர் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மிகவும் பெயர் பெற்றவர் என்றாலும், அவர் இறுதியாகச் செய்த காரியத்தை தியாகிகளின் காரியம் என்று முன்னால் இருந்த அரசாங்கம் ஒப்புக் கொள்வதற்குக் கொஞ்சம் தயக்கம் இருந்தது. ஏனெனில் உயிர் இழந்தவர்கள் அல்லது அங்ககீனமானவர்கள் அல்லது தியாகத்திற்குப் பிறகு நலிவுற்றவர்கள் ஆகியோருக்கு பென்ஷன் தருவது என்று முன்னால் தீர்மானித்திருந்தார்கள். வாஞ்சிநாத ஐயர் அவர்கள் ஆஷ் துரையை சுட்டுக் கொன்ற பிறகு தன்னைத் தானே மாய்த்துக் கொண்டதால், அவர் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் இழந்ததாகக் கருதப்படாமல், தானாகவே தன் உயிரைப் போக்கிக் கொண்டதால், கொடுப்பதா வேண்டாமா என்ற தயக்கம் இருந்தது. போன வாரம் நான் அதைப் பார்க்க நேரிட்டபோது, அவர் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டிருந்தாலும், அவர் உள் நோக்கம் சுதந்திரப்

போராட்டம் என்ற காரணத்தினால் அவர் விதவைக்கு பென்ஷன் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன்.

★

உடன்பிறப்பே; அண்ணாவின் அந்தப் பரந்த மனப்பான்மை வழி நின்றுதான் நானும் ஆட்சியை நடத்தி வருகிறேன்; கட்சியையும் கட்டிக் காப்பாற்றுகிறேன். பழைய பேரவை மண்டபத்தில் நடைபெற்றவைகளை விடுத்து, தற்போது நடைபெற்ற சம்பவத்திற்கு வருகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா தன் உரையைத் தொடங்கும் போதே அவர் எந்த முடிவோடு வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. உதாரணமாக தன் பேச்சில் யாரும் குறுக்கிடக் கூடாது என்றும், அப்படி குறுக்கிட்டால் முதலமைச்சரின் பதில் சொல்லும் திறமையிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றாகும் எனக் கூறினார். உடனே அமைச்சர் துரைமுருகன் எழுந்து, அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்த போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சர்கள் குறுக்கிட்டார்களே, அப்படியானால் அவர்கள் உங்களுக்கு பதில் சொல்ல திறமையில்லை என்று நினைத்துத்தான் குறுக்கிட்டார்களா என்று கேட்டார். அவர் அவ்வாறு சொல்லக் காரணமே, எதிர்க்கட்சித் தலைவர் தன் பேச்சின் தொடக்கத்தில் யாரும் குறுக்கிட்டால் முதலமைச்சருக்கு பதில் சொல்ல திறமையில்லை என்று பொருளாகி விடும் என்று சொன்னக் காரணத்தினால்தானே? அதற்கு மாறாக அவர் பேச்சின் தொடக்கத்தில், தன் பேச்சில் தேவையில்லாமல் யாரும் குறுக்கிடாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் துரைமுருகன் குறுக்கிடத் தேவையில்லாமலே ஆகியிருக்கும் அல்லவா?

அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, தி.மு.க. அரசு கொண்டு வந்துள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு முதலமைச்சரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது, தன் ஆட்சியிலே தனது பெயர் அப்படி சூட்டப்படவில்லை என்றார். இது உண்மையான விவரமா? பேரவையில் தவறான தகவல்களைக் கூறினால் உரிமைப் பிரச்சினையே கொண்டு வரலாம். எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா திட்டங்களுக்கு தனது ஆட்சியில் தன்

பெயரை சூட்டப்படவில்லை என்று சொன்னாரே, அது எவ்வளவு பெரிய உண்மைக்கு மாறான தகவல் என்பதற்கு இதோ சில உதாரணங்கள்!

தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகளைக் கொண்டு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்" என்ற பெயரால் புதிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பு. (6.4.1993)

அம்பத்தூரில் சுமார் 29 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கும் தொழில் நுட்பப் பயிலகத்திற்கு ஆறு கோடி மக்களால் ஆராதனை செய்யப்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரினையே சூட்டிட வாரியம் முடிவெடுத் துள்ளது. (8.4.1994)

"ஜெ. ஜெ. ஹேண்ட்லூம் டவர்" (8.4.1994)

"புரட்சித்தலைவி சீர்மிகு உயர்பள்ளி" (19.4.1994)

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரால் மகளிருக்கான டாக்டர் புரட்சித்தலைவி பொற்கோப்பை கால்பந்துப் போட்டி நேரு விளையாட்டு அரங்கத்தில் நடத்தப்பட விருக்கிறது. (19.4.1994)

முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் தமிழகத்தில் திறந்த வெளிப் பல்கலைக் கழகம். (19.4.1994)

சிறந்த விளையாட்டு அணியினருக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் சிறந்த வேலைப்பாடுகள் அடங்கிய சுழற்கோப்பை (10.4.1994)

அனைத்துச் சமுதாய நலக் கூடங்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுடைய பெயர் சூட்டப்படும். (26.4.1994)

தமிழகத்திலே இருக்கிற அனைத்து நகராட்சிகளிலும், நவீன வசதிகள் கொண்ட திருமண மண்டபங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே கட்டப்படும். (26.4.1994)

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா என்ற பெயரில் அழகு உலா ரதங்கள் இரண்டு இந்த ஆண்டு விடப்படும். (27.4.1994)

திராவிட இனத்தினுடைய தன்மானத் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பெயர் வன உயிரின உய்விடத்திற்கு சூட்டப்படும். அது போன்று அங்கே அமைந்திருக்கின்ற தேசியப் பூங்கா, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா தேசியப் பூங்கா, முதுமலை" என்று இன்று முதல் அழைக்கப்படுகிறது. (26.4.1994)

செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் புதிய கட்டிடத்திற்கு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா" என்கிற திருப்பெயரை சூட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. (30.4.1994)

60 லட்சம் ரூபாய் செலவில் கோவையில் எழுப்பப்பட்டு முடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகத்திற்கு "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ.ஜெ. மாளிகை" என்னும் திருப் பெயர் சூட்டப்படுகிறது. (30.4.1994)

சென்னை திரைப்பட நகருக்கு திரை உலக வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவரான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஜெயலலிதா திரைப்பட நகர் என பெயர் சூட்டப்படும். இப்படி "ஜெயலலிதா திரைப்பட நகர்" என்று பெயர் சூட்டப்பட வில்லை என்று பேரவையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா பேசியிருக்கிறார்.

3-5-1995 தேதிய அவை நடவடிக்கை குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 375 - "ஒரு நூற்றாண்டு காலத்தை எட்டிப் பிடிக்கும் திரைப்படத் துறைக்கு, நூறாண்டை அடைவதற்கு முன்னரே அதை வரவேற்றுச் சூட்டிய மணி மகுடமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரில் "ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்," சென்னை தரமணியில், 86 ஏக்கர் நிலப் பரப்பில் அனைத்து வசதிகளும் நிரம்பப் பெற்றதாக உருவாக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் (ஜெயலலிதா) அவர்களால் 31-8-1994 அன்று திறந்து வைக்கப்பட்டது. உலகத் திரைப்பட வரைபடத்தில் சென்னைக்குச் சிறப்பிடம் பெற்றுத் தரும் கலைச்சோலை

"ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்" ஆகும். திரை உலகின் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் அளவுக்கு நவீன வசதிகள் அமைந்த கலைக் கோட்டமாக இது விளங்குகிறது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஜெயலலிதா சட்டப் பேரவையில், தாங்கள் ஆட்சிக்கு வந்த போது திரைப்பட நகர் என்பதே இல்லை . திரைப்பட நகர் என்பது புதிதாக உருவாக்கப்பட்டது" என்று சொன்னார் என்றால் எவ்வளவு பெரிய பொய்யை மனமறிந்து பேரவையிலே ஒரு முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். இதைப் பற்றி பத்திரிகைகள் ஏன் விளக்கம் தர முன் வரவில்லை என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஓகோ; அப்படியா சங்கதி?

இந்தத் திரைப்பட நகர் பற்றி 28-4-1997 அன்று சட்டமன்றப் பேரவையிலே நான் குறிப்பிடும்போது, "திரைப்பட நகர் ஜெ.ஜெ. சினி சிட்டி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் பெயரை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு தான் பொருத்தமான பெயராக "எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்" என்று மாற்றியிருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த திரைப்பட நகரின் தொடக்க விழாவுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புத் தொகை 75 ஆயிரம் ரூபாய். ஆனால் செலவழித்தது 43.14 இலட்சம் ரூபாய். இதைப் பற்றி தலைமை தணிக்கை அலுவலர் கூறும்போது "The Company incurred an expenditure of Rs. 43.14 lakhs by way of printing of invitation cards, souvenir, decoration, silver mementoes, cultural programmes, etc., towards inauguration of the project as against the ceiling limit of Rs. 75,000 fixed in September 1991 by the State Government for such function" என்று தெரிவித்திருக்கிறார்" என்றெல்லாம் விளக்கியிருக்கிறேன்.

"ஜெ.ஜெ. 92" என்ற புதிய வகை வாசனை அரிசியை அறிமுகம் செய்திருக்கிறோம். விஞ்ஞான தொழில் நுட்பங்களை வழங்கும் விரிவாக்க அலுவலர்களுக்கு "டாக்டர் புரட்சித் தலைவி விருது" உருவாக்கியுள்ளோம். மேலும் "டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ச்சித் திட்டம்" அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டுள்ளது. (19.4.1995)

ஆடு, கோழி, முயல் போன்றவைகள் வளர்க்கப்படும் "டாக்டர் புரட்சித் தலைவி மகளிர் கால்நடை கூட்டுறவுச்

சங்கம் துவக்குவதை இத்துறை பெரும் பேறாக நினைக்கிறது. (19.4.1995)

மாண்புமிகு முதல் அமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மீகக் கல்வித் திட்டம்.

புரட்சித் தலைவி நல்லாசிரியர் விருது வழங்கும் திட்டம்.

"புரட்சித் தலைவி ஆய்வுப் பெருந்தகையாளர் ஊக்குவிப்புத் திட்டம்."

இப்படியெல்லாம் பெயர் சூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது - அந்த விமர்சனங்களையெல்லாம் கேட்டு புளகாங்கிதமடைந்து அமர்ந்திருந்த ஜெயலலிதா; தற்போது எனது பெயரிலே எப்படியொரு திட்டத்தை ஆரம்பிக்கலாம், தனது ஆட்சியிலே அவ்வாறு பெயர் வைத்துக் கொண்டதே இல்லை என்று பேரவையிலே சொல்லும்போது அது தவறான தகவல் என்பதை எப்படி சொல்லாமல் இருக்க முடியும்? அதனால் தான் அமைச்சர் பொன்முடி குறுக்கிட்டு உங்கள் ஆட்சிக் காலத்திலே இப்படியெல்லாம் பெயர்களை வைத்துக் கொண்டீர்களே என்று கேட்டதற்கு, அமைச்சர் பொன்முடி கூறியது முற்றிலும் தவறான தகவல்கள் என்று பேரவையிலே கூறிவிட்டார். அம்மா துதி பாடும் உறுப்பினர்கள் கரகோஷம்; கூச்சல்!

உடன்பிறப்பே, நான் அவரது பெயரை அவரது ஆட்சிக் காலத்திலே பல திட்டங்களுக்கு வைத்துக் கொண்டதை தவறு என்று சொல்ல முன் வரவில்லை. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றதை இல்லையென்று பேரவையிலே அப்பட்டமாக மறுத்துக் கூறுவதைத்தான் சரியா என்று கேட்க விரும்புகிறேன். ஆனால் இந்த உண்மையான தகவல்களை நம் நாட்டிலே உள்ள ஏடுகளாவது சொல்ல முன் வருகிறதா என்றுதான் நான் ஆதங்கப்படுகிறேன். அதே நேரம் அவர்களின் அபிமானத்தைப் பாராட்டுகிறேன்.

ஏன் அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலே கூட, 25-4-1995 அன்று பேரவை நடவடிக்கை குறிப்பைப் பார்த்தால் - இதோ அ.தி.மு.க. அமைச்சர் ம.சின்னசாமி பேசியிருக்கிறார், பாருங்கள் -

"கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருக்கிற இரண்டாவது ஆலைக்கு கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 2 என்ற ஆலைக்கு ஒரு புதிய பெயரைச் சூட்ட வேண்டுமென்று முடிவெடுத்துள்ளேன். ஒரு நிறுவனத்திற்கு பெயர் சூட்டுகிற பொழுது நாட்டிற்கு உழைத்தவர்களுடைய பெயரைச் சூட்டி மரியாதை செய்ய வேண்டும். அதே போல, நாட்டிற்கு உழைப்பதற்கு உரிய தலைவர்களை இந்த நாட்டுக்கு அளிக்கப் பெற்றவர்களுக்கும் மரியாதை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழகத்தினுடைய ஆறரை கோடி மக்களுடைய தாயாக விளங்குகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி என்கிற தாயை தமிழ் நாட்டிற்கு தந்திட்ட தாய் **அன்னை சந்தியாவினுடைய பெயர் சூட்டப்படும்** என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்."

அவை நடவடிக்கை குறிப்பிலே இடம் பெற்றவைகளைத்தான் நான் இங்கே எழுதியிருக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அமைச்சர் பரிதி இளம்வழுதி எழுந்து, எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் ஆளுநர்தான் வேந்தராக இருந்து வருகிறார், அதை மாற்றி எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் வேந்தர் நீங்கள் தான் என்று அறிவித்துக் கொண்டீர்களே, அது உண்மையா இல்லையா? என்று வினவினார். அதற்கும் ஜெயலலிதா அது முற்றிலும் கற்பனையான ஒரு குற்றச்சாட்டு, எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் நான் வேந்தர் என்று அறிவிக்கவில்லை. கற்பனைக் குற்றச்சாட்டை சொன்னதற்காக அவரும், பொன்முடியும் அரசியலை விட்டு விலக வேண்டும் என்றார்.

1991ஆம் ஆண்டு முதல் 1996 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியிலே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது, பல்கலைக் கழகங்களுக்கு முதல் அமைச்சரே வேந்தராக இருப்பதற்கு வகை செய்யும் சட்ட முன்வடிவு பேரவையில் 5-1-1994 அன்று நிறைவேற்றப்பட்டது உண்மை. அந்த சட்ட முன் வடிவு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதும் உண்மை. ஆனால் ஆளுநர் தனது உரிமை பறி போகிறது என்ற காரணத்தால் சட்ட மன்றத்தின் காலம் முடிகின்ற வரை அந்த சட்ட முன் வடிவுக்கு

ஒப்புதல் தரவில்லை என்பது தான் உண்மை. இதற்கான சட்ட முன் வடிவு 5-1-1994 அன்று அ.திமு.க. ஆட்சியிலே பேரவையிலே விவாதிக்கப்பட்ட போது, அப்போது அமைச்சராக இருந்த நாவலர் அவையிலே பேசியிருக்கிறார். அதாவது, "இப்போது இருக்கின்ற பிரச்சினை, பல்கலைக் கழக வேந்தராக ஆளுநர் இருந்தார்கள். அந்த வேந்தராக இப்போது மாண்புமிகு முதலமைச்சராக வருகிறவர்கள் இருக்க வேண்டும் என்பது சட்டத்தினுடைய நோக்கம். நாங்கள் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் வேந்தராக இருக்க வேண்டுமென்று கருதுகிறோம். மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் நியமிக்கப்பட்ட ஆளுநரிடத்திலேயே அந்த அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்று வாதாடுகிறார்" என்று அப்போது எடுத்த முடிவிற்கு ஆதரவாகப் பேசி அவை குறிப்பிலே இன்றளவும் இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து பேரவையில் தற்போது அமைச்சர் பரிதி இளம்வழுதி சொன்னது உண்மையா? அதனைக் கற்பனைக் குற்றச்சாட்டு என்று ஜெயலலிதா கூறியது உண்மையா? என்பது தெளிவாகிறது அல்லவா? யார் அரசியலை விட்டு விலக வேண்டும்! நீங்களே முடிவுக்கு வாருங்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அடுத்து தன் பேச்சை தொடர்ந்த போது - அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அ.தி.மு.க. உறுப்பினர் திரு. நத்தம் விசுவநாதன் பேசிய போது, "கும்பி கருகுது, குடல் வேகுது, ஊட்டி வாசம் ஒரு கேடா" என்று சொன்னதால், பொன்முடி குறுக்கிட்டு ஊட்டி வாசம் ஆளுங்கட்சி சார்பிலே யாரும் மேற்கொள்ளவில்லை, உங்கள் அம்மையார்தான் ஊட்டியிலே உள்ள கொடநாட்டிலே தங்கியிருக்கிறார் என்று கூறியதை எடுத்துக் காட்டி - தான் கொட நாட்டிலே தங்கியது உண்மை தான் என்றும், கொட நாடு தமிழ்நாட்டிலே தான் இருக்கிறது, அங்கே தங்கியதில் என்ன தவறு? ஆனால் முதலமைச்சர் அடிக்கடி பெங்களூர் சென்று பண்ணை வீட்டிலே தங்குகிறாரே? அது நியாயமா? என்ற கேள்வியை அவையிலே எழுப்பினார். உண்மை தான், நான் கடந்த ஆண்டு ஒரு முறையும், இந்த ஆண்டு ஒரு முறையும் பெங்களூர் சென்று அங்கேயுள்ள என் மகள் செல்வி தொடர்ந்து அழைத்ததின் பேரில் தங்கியிருந்தது உண்மைதான். அதிலே ஒரு முறை பெங்களூர் சென்ற போது அய்யன் வள்ளுவரின் சிலை திறப்பினையொட்டி சென்றிருந்தேன்.

மகளின் அழைப்பையேற்று தந்தை சென்று நாட்கணக்கில் ஓய்வெடுப்பது ஒன்றும் தவறில்லையே? நான் மாதக் கணக்கிலும், வாரக் கணக்கிலுமா தங்கியிருந்தேன். எதிர்க்கட்சித் தலைவர் ஆளுநர் உரையிலே பேச வேண்டிய முக்கிய குறிப்பாக இதனைப் பேசிய போது அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டு கொடநாடு தமிழ்நாட்டில் தான் இருக்கிறது, அதை ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் ஐதராபாத்தில் உள்ள திராட்சை தோட்டத்தில் சென்று ஓய்வெடுத்தீர்களே, ஐதராபாத் என்ன தமிழ்நாட்டிலா இருக்கிறது என்று கேள்வி கேட்டார். உடனே ஜெயலலிதா அமைச்சர்கள் அற்ப விஷயங்களைப் பேசி அவரை பேச விடாமல் செய்கிறார்கள் என்றார்.

தொடர்ந்து ஜெயலலிதா காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்க்கு பதில் அளிக்க முற்பட்டார். அதாவது தகவல் அறியும் உரிமைச் சட்டம் தற்போதைய முதல்வர் ஆட்சிக் காலத்தில்தான் செயல்படுத்தப் பட்டதாக இங்கே பாராட்டினார். அது தவறான தகவல். எங்கள் ஆட்சிக் காலத்திலேதான் அது செயல்படுத்தப்பட்டது. நான் முதலமைச்சராக இருக்கும்போது முதன்முதலாக அந்தச் சட்டத்தை அமல்படுத்தி மூன்று கமிஷனர்களை நியமனம் செய்தேன் என்று கூறினார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் 17-4-1997 அன்று பேரவையில்

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக முன் மொழியப்பட்டு - 30-4-1997 அன்று பேரவையிலே நிறைவேற்றப் பட்டது. அதன் பின்னர் மத்திய அரசே தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒன்றினை அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் விதமாக நிறைவேற்றியது. அந்தச் சட்டத்தின்படி தான் ஜெயலலிதா மூன்று கமிஷனர்களை தமிழகத்திலே நியமனம் செய்தாரேயொழிய அவரது ஆட்சிக் காலத்தில் எந்தச் சட்டமும் கொண்டு வரவில்லை என்பதுதான் உண்மை. இப்போதும் "விக்கிபீடியா (என்சைக்ளோ பிடியா)" வை எடுத்துப் பார்த்தால் - "The Right to Information Laws were first successfully enacted by the State Government of Tamil Nadu (1997)" என்று வெளியிட்டிருப்பதைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் - திரைப்படத் துறையினர் அடுத்த திங்கள் எனக்கு நடத்தவுள்ள பாராட்டு விழாவினை

தாங்கிக் கொள்ள முடியாமல் - திருட்டு வி.சி.டி. பற்றிப் பேசி - தனது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் திருட்டு வி.சி.டி. களே கிடையாது என்றும் - தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு பெரிய அதிகார மையங்கள் தற்போது இந்தத் திருட்டு வி.சி.டி. தொழிலை நடத்துகிறார்கள் என்றதொரு குற்றச்சாட்டினை எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் பேரவையிலே தெரிவித்தார். அவர் இவ்வளவு பெரிய குற்றச்சாட்டினை சுமத்திய காரணத்தால், அமைச்சர் பரிதி இளம்வழுதி குறுக்கிட்டு - "உங்கள் ஆட்சிக் காலத்தில் திருட்டு வி.சி.டி. தொழில் கிடையாது, ஏனென்றால் அந்தத் தொழிலை செய்து கொண்டிருந்த நீங்கள் ஆட்சிக்கு வந்து விட்ட காரணத்தினால், அப்போது அந்தத் தொழில் இல்லை" என்றார். அவர் இவ்வாறு கூறியது கூட தவறு என்று நான் பின்னால் திரும்பி அவரைக் கண்டித்தேன்.

பேரவையில் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது என்னைப் பற்றி புகழ்ந்துரைத்து பேச வேண்டாம் என்றும், கருத்துக்களை மட்டும் பேசினால் போதும் என்றும் நான் முதல் நாள் சொல்லியிருந்ததை எடுத்துக் கூறி, எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அம்மையார் அநாகரிகத்தின் உச்சக்கட்டத்திற்கே சென்று, முதல் அமைச்சருக்கு சொந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பிடிக்காதா? நடிக, நடிகையர் புகழ்ந்தால்தான் பிடிக்கும்போலும் என்றார். அவையின் விவாதத்தை பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த அவை முன்னவர் பேராசிரியரே பொறுமையை இழந்து, எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்து ஒரு எதிர்க்கட்சித் தலைவருடைய கண்ணியத்தை எந்த அளவிற்குப் பாதிக்கிறது என்பதை அவருக்கு நினைவூட்டுவதாகவும், நடிப்பவர்கள் புகழ்வது மட்டும்தான் கலைஞருக்குப் பிடிக்கும் என்றால், எதிர்க் கட்சித் தலைவர் பேசுவது கூட பிடிக்கத்தான் வேண்டும் என்றார்.

அதைப்பற்றி எதுவும் தொடராமல், ஜெயலலிதா ஏழையெளிய மக்களுக்காக கழக அரசு கட்டிக் கொடுக்கவுள்ள 21 இலட்சம் வீடுகள் பற்றிப் பேச ஆரம்பித்து - இந்த ஆண்டு 1800 கோடி ரூபாயில் 3 இலட்சம் வீடுகளைக் கட்டுவதாக அறிவித்திருக் கிறீர்களே, அதற்கு எங்கிருந்து பணம் வரப் போகிறது? தி.மு.க. வினர் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து செலவிடப்

போகிறார்களா? தி.மு.க. தலைவரும் அவரது குடும்பத்தினரும் தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்யப் போகிறார்களா? என்றார். எந்த அளவிற்கு அநாகரிகமான பேச்சு அது என்பதை பத்திரிகையாளர்கள்தான் நாட்டிற்குத் தெரிவிக்கவேண்டும். அவர்களுக்கு மனம் வருமா?

அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் தமிழக அரசின் நிதி நிலைமை குறித்தெல்லாம் பேசி தமிழக அரசுக்கு உள்ள கடன் சுமை பற்றியெல்லாம் பேசி கழக ஆட்சியிலேதான் அதிக கடன் சுமை ஏற்பட்டு விட்டது என்றார். 1996-2001 ஆம் ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் இறுதியில் அதாவது 31-3-2001 அன்று ரூபாய் 28,685 கோடி அளவில் தமிழக அரசின் கடன் பொறுப்புகள் இருந்தன. இதன் பின் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடத்திய 2001-2006 ஆம் ஆண்டு காலத்தின் இறுதியில் அதாவது 31-3-2006 அன்று மாநில அரசின் கடன் பொறுப்புகள் ரூபாய் 57,457 கோடியாக உயர்ந்தது. சுருங்கக் கூறின் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுகால இறுதியில் தமிழக அரசின் கடன் பொறுப்புகள் தி.மு.க ஆட்சி விட்டுச் சென்றதை விட இரு மடங்காக உயர்ந்தது புலப்படும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் 12வது நிதிக் குழுவும் மைய அரசும் பரிந்துரைத்துள்ள அளவிலேயே நிதிப்பற்றாக் குறையை ஈடுகட்டுவதற்குத் தேவையான கடன்களை மத்திய அரசின் அனுமதியுடன் பெற்று நிதி நிர்வாகம் செய்து வருகிறது. 12வது நிதிக் குழு மற்றும் மத்திய அரசின் பரிந்துரையின்படி மாநில அரசின் நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 3 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும். இந்த வரையறையையே தமிழக அரசு 2006-2007, 2007-2008 மற்றும் 2008-2009 ஆகிய நிதி ஆண்டுகளுக்குப் பின்பற்றியுள்ளது. 31-3-2006 அன்று அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் இருந்த ரூபாய் 57,457 கோடி கடன் பொறுப்புகள் 2006-2007 நிதி ஆண்டு இறுதியில் ரூபாய் 60,170 கோடியாக உயர்ந்தது. இது 2007-2008 நிதி ஆண்டு இறுதியில் ரூபாய் 64,655 கோடியாக உயர்ந்துள்ளது. 2008-2009 நிதி ஆண்டு இறுதியில் 31-3-2009 அன்று மாநில அரசின் மொத்த கடன் பொறுப்புகள் ரூபாய் 74,858 கோடியாக உயர்ந்துள்ளது. அரசு கடனாகத் திரட்டும் நிதி ஆதாரங்கள் யாவும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும்

கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மந்த நிலையிலிருந்து பொருளாதாரத்தை மீட்பதற்காக மாநில அரசுகளின் செலவுகளை அதிகரித்து அதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் (stimulus) அளிக்கும் வகையில் 2009-2010 ஆம் ஆண்டு மத்திய அரசு, மாநில அரசுகள் தங்களது நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 4 விழுக்காடு அளவிற்கு உயர்த்திக் கொள்ளலாம் என்று அனுமதித்து உள்ளது. இந்த வழிகாட்டுதலின்படியே தமிழக அரசு 2009-2010 ஆம் ஆண்டிற்கான நிதி நிர்வாகத்தை மேற்கொண்டு வருகிறது. எனவே, தற்போது கடன் சுமை மிகவும் அதிகரித்து வருவதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளது சரியான தகவல் அல்ல. சதியான தகவல்!

தொடர்ந்து எதிர்கட்சித் தலைவர் தான் முக்கியமான 3 கேள்விகளைக் கேட்கப் போவதாகவும், அதற்கு முதல் அமைச்சர் பதில் கூற வேண்டுமென்றும் சொல்லிவிட்டு, மூன்று கேள்விகளைக் கேட்டார். அதற்கு பதில்களைக் கேட்ட ஜெயலலிதா, அதற்காக அவையிலே காத்திருக்க விரும்பாமல் பேசி முடித்தவுடன் அவசர அவசரமாகப் புறப்பட்டுப் போய் விட்டார். இருந்தாலும் அவர் கேட்ட மூன்று கேள்விக்கும் என்னுடைய பதில்கள் இதோ :-

முதல் கேள்வி:

தற்போது தமிழகத்தின் கடன் சுமை எத்தனை கோடி ரூபாய்?

பதில்:

ஏற்கெனவே மேலே கூறியவாறு 31-3-2009 அன்று மாநில அரசின் மொத்த கடன் பொறுப்புகள் ரூபாய் 74,858 கோடி ஆகும்.

இரண்டாவது கேள்வி:

21 இலட்சம் வீடுகளை இலவசமாக ஏழை எளிய மக்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு பணம் எங்கிருந்து பெறப்போகிறீர்கள்?

பதில்:

இந்த வீட்டு வசதித் திட்டம் ஒரு திட்டச் செலவு (plan expenditure) என்பதால் மாநில அரசின் ஆண்டு திட்டத்திற்கான

நிதி ஆதாரங்களிலிருந்து (Resources for the Annual Plan) இத்திட்டத்திற்கான செலவு மேற்கொள்ளப்படும். 21 இலட்சம் வீடுகள் கட்ட ரூபாய் 12,600 கோடி தேவைப்படும். 21 இலட்சம் வீடுகள் 6 ஆண்டுகளில் கட்டிக் கொடுக்கப்படும் என்பதால் சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 2100 கோடி தேவைப்படும். வரும் 2010-2011 நிதி ஆண்டில் 3 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க இருப்பதால் ஒரு வீடு கட்ட ரூபாய் 60,000 என்ற மதிப்பீட்டில் ரூபாய் 1800 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

மூன்றாவது கேள்வி:

மாநில மொத்த பொருளாதார வளர்ச்சி வீதத்தில் ஏன் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது?

பதில்:

தி.மு.கழக அரசு பொறுப்பேற்றபின் முதல் ஆண்டான 2006-2007 நிதி ஆண்டில் தமிழக பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதம் 11.29 சதவீதம் ஆகும். 2008-2009 ஆம் ஆண்டில் தமிழகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 4.55 விழுக்காடாக மத்திய புள்ளியியல் நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 32 மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகள் (Union Territories) ஆகியவற்றில் 18 மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே இந்த மதிப்பீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வளர்ந்த மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 4.5 விழுக்காட்டிலிருந்து 5.5 விழுக்காடு அளவிலேயே ஆண்டு வளர்ச்சி வீதங்களைப் பெற்றுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சி வீதம் 5.53 சதவீதம். கர்நாடகத்தின் வளர்ச்சிவீதம் 5.08 சதவீதம். தமிழகத்தின் வளர்ச்சிவீதம் 4.55 சதவீதம். உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியினாலும் அதன் காரணமாக நமது நாட்டில் தொழில் துறையிலும் குறிப்பாக ஏற்றுமதியிலும் மந்தநிலை காணப்படுவதால் தொழில் துறையில் முன்னணி மாநிலங்களாகிய தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம் ஆகியவை குறைந்த அளவிலேயே வளர்ச்சி

வீதத்தை அடைந்திருக்கின்றன. மேலும் தொழில் துறையில் முன்னணி மாநிலங்களாக விளங்கும் குஜராத், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறித்து புள்ளிவிவரங்கள் இன்னும் பெறப்பட வில்லை. 2008-2009 இல் 4.55 சதவீதமாக வளர்ச்சி வீதம் குறைந்து உள்ளதற்கு முக்கிய காரணம் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் தாக்கமேயாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் அடுத்து முக்கியமாக கேட்டது, 2006ஆம் ஆண்டு 55 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று சொன்னீர்களே, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 366 ஏக்கர் நிலம் தானே வழங்கியிருக்கிறீர்கள் என்று வினா எழுப்பிய போது, "56 லட்சம் ஏக்கர் என்பது அ.தி.மு.க. நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டிருந்த வாசகம். அதை உண்மையென்று நம்பி நாங்களும் 56 லட்சம் ஏக்கர் என்று வெளியிட்டு விட்டோம்." என்று கூறினேன். உடனே ஜெயலலிதா, "எங்கள் ஆட்சியில் வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கையில் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் பண்படுத்தப்படும் என்று அறிவித்தோமே தவிர, அந்த 55 லட்சம் ஏக்கர் நிலமும் அரசிடம் இருக்கிறதென்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அதைக் காட்டட்டும் பார்க்கலாம்" என்றார். அதற்கு நான், "நீங்கள் 55 இலட்சம் ஏக்கர் நிலம் பண்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்ததை நம்பி, அப்படி பண்படுத்தப்பட்டால் அதை ஏழையெளியவர்களுக்குத் தரலாம் என்று அறிவித்தோம்" என்று கூறினேன்.

இதோ 2001-2002ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை - நிதியமைச்சராக இருந்த திரு. பொன்னையன் 18-8-2001இல் படித்தது - பத்தி 18 - "பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் (50 லட்சம் ஏக்கர்) தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எனும் மிகப் பெரிய அளவிலான தொலை நோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார்."

இந்த அறிவிப்பினை நம்பித் தான் 2006-2007ஆம் ஆண்டு தி.மு. கழக நிதி நிலை அறிக்கையில் 50 இலட்சம் ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டது என்று நான் விளக்கினேன். இதனை இப்போது

சொல்லவில்லை, 2006ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே பத்தி 14இல் "இதற்கு முன்பிருந்த ஆட்சியில் 2001-2002ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தமிழகத்தில் மொத்தம் 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதனையொட்டி தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் இந்தத் தரிசு நிலங்களைச் சீர் செய்து நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது" என்றும் சொல்லப்பட்டுள்ளது. பேரவையிலே "காட்டடட்டும் பார்க்கலாம்" என்று ஜெயலலிதா சவாலிட்டதற்கு இதோ நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ள வாசகங்களையே எடுத்துக் காட்டி விட்டேன். என்ன செய்யப் போகிறார் ஜெயலலிதா?

இறுதியாக ஜெயலலிதா 21 இலட்சம் இலவச வீடுகளை ஆறு ஆண்டுகளில் கட்டித் தருவதைப் பற்றி பேசி, அது மக்களை ஏமாற்றுவதற்கான திட்டம் என்றும் ஆனால் மக்களை ஏமாற்ற முடியாது என்றும் அதற்கு 1800கோடி ரூபாய் நிதிக்கு எங்கே போகப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார். வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை இன்னும் சில வாரங்களில் வரவிருக்கின்ற நிதி நிலை அறிக்கையிலே ஜெயலலிதா தெரிந்து கொள்வார். நாட்டு மக்களும் யார் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை புரிந்து கொள்வார்கள். எம்.ஜி.ஆரின் பாடல் ஒன்றினைப் பாடி ஜெயலலிதா தன் பேச்சை முடித்துக் கொண்டார். அந்தப் பாடல் –

என்ன தான் நடக்கும், நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளி வரும் தயங்காதே!
ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!

என்று அவர் பாடியது தான் தாமதம். அவருடைய கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கூச்சல் அடங்க நீண்ட நேரம் ஆயிற்று.

நானும் பேரவையில் என் உரையை முடிப்பதற்கு முன்பு அந்தப் பாடலைப் பற்றியே குறிப்பிட்டேன். இதோ அது வருமாறு:-

"எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய உரையின் இறுதியிலே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலை இங்கே சொன்னார்கள். அந்தப் பாட்டு அவர்களுக்காகப்

பாடியதல்ல. எனக்குத் தெரியும் - எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை மனதிலே கொண்டு பாடிய பாடல் அது. ஏனென்றால் என்னுடைய நாற்பதாண்டு கால நண்பர் அல்லவா? இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சித் தேர்தல் நடைபெற்றபோது - தலைவராக நான்தான் வர வேண்டுமென்று எண்ணி அதற்காகப் பாடுபட்டவர், அதற்காக ஆட்களைச் சேர்த்தவர். அந்த நன்றி எனக்குண்டு, சாகின்ற வரையிலே உண்டு. அதைப் போல இந்தப் பொறுப்புக்கு நான் வர வேண்டுமென்று விரும்பியவர்களில் அவரும் ஒருவர். ஆகவே நான் அவருக்கும் எனக்கும் உள்ள நாற்பதாண்டு கால நட்பின் காரணமாக சொல்லுகிறேன். இங்கே அவர் இறுதியில் ஒரு பாடலைச் சொன்னாலுங்கூட - அதனை நான் இப்படித்தான் கருதிக் கொள்கிறேன்.

என்ன தான் நடக்கும், நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளி வரும் தயங்காதே!
ஒரு "தலைவன்" இருக்கிறான் மயங்காதே!

அதாவது ஒரு தலைவன் இருக்கின்றான் மயங்காதே என்றுதான் - என்னைக் குறிப்பிட்டுத் தான் சொல்கிறார் - ஒரு தலைவி இருக்கிறார் மயங்காதே என்று சொல்லவில்லை (மேஜையைத் தட்டும் ஒலி) . இதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருடைய அந்த நம்பிக்கையான வார்த்தையை ஏற்றுக் கொண்டு, இந்த அவையை சிறப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

அன்புள்ள,

மு.க.

13-1-2010

3454. அம்மவோ; இந்த நாளில் அந்த நாள் நினைவு!

உடன்பிறப்பே,

இன்று பெப்ரவரி திங்கள் தேதி 3 - 2010 !

என் நினைவு 1969ஆம் ஆண்டு பெப்ரவரி திங்களுக்குச் செல்கிறது. அதற்கு முன்பே 1968ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் தொடக்கத்திலேயே அண்ணா அவர்களுக்கு அடிக்கடி வயிற்று வலி.

உதிராத மலர் இல்லை;
உலராத பனி இல்லை;
புதிரான வாழ்க்கை யிதில்
புதையாத பொருள் இல்லை;
உடையாத சங்கில்லை;
ஒடுங்காத மூச்சில்லை;
இயற்கை நியதிகளில் இறப்பும் ஒரு கூறு அன்றோ?

ஆனால் அந்த இறப்பு - எளிதாகவே வந்து மனிதரை ஏந்திச் சென்றால் எத்துணை நல்லதாக இருக்குமென்று நான் அடிக்கடி எண்ணிக் கொள்வதுண்டு. வாழும் நாட்களிலே தான் வடிக்கின்றான் கண்ணீர் என்றால், சாகும்போதாவது நிம்மதியாக கண்களை மூடக்கூடாதா? அண்ணாவைக் கொடுமைப் படுத்திய அந்த நோயை இப்போது நினைத்தாலும் என் கண்களிலே கண்ணீர் பொங்குகின்றது!

முதலில் வயிற்று வலிதான்! டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் தான் அண்ணாவைப் பார்த்து மருந்துகளை அளித்து வந்தார். அந்த நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் அண்ணாவிற்கு டாக்டர் பட்டம் அளிக்கப்போவதாக அறிவித்திருந்தனர். அண்ணாவிற்கோ கடுமையான வலி - டாக்டர் பட்டத்தினை தானே நேரில் சென்று பெற்றுக் கொள்வதுதான் மரபு என்று அண்ணா எண்ணினார். அவருக்கிருந்த வலியோடு பயணம் செய்வது நல்லதல்ல என்று டாக்டர் கூறினார். அண்ணியார் அவர்கள் ஒரு நாள் என்னை அழைத்து "நான் எவ்வளவோ

சொல்லியும் உங்க அண்ணன் பிடிவாதமா போய்த்தான் ஆவேன் என்கிறாங்க - நீங்க சொன்னாதான் கேட்பாங்கன்னு" என்று சொன்னவுடன், நான் நேராக அண்ணாவிடம் சென்றேன்.

"அண்ணா! இப்போது நீங்க அண்ணா மலை நகருக்குப் போக வேண்டாம் அண்ணா! பயணம் செய்தால் வலி அதிகமாகும் என்கிறார்கள். உங்கள் சார்பில் வேறு யாராவது போய் பட்டத்தைப் பெற்று வரலாம்" என்றேன்.

"அப்படியா சொல்கிறாய்! உம்" என்று புன்னகையோடு அண்ணா என்னைப் பார்த்து முனகுகிறார். என் வேண்டுகோளை அண்ணா ஏற்றார் என்ற பெருமூச்சு என்னிடமிருந்து வெளிப்பட்டது. அண்ணா தொடர்ந்தார் - "அது சரி - நாம் எல்லோரும் சென்னையிலேயே தங்கிவிட்டால் எப்படி? நானும் சுற்றுப் பயணம் போகாமல், நீயும் சுற்றுப் பயணம் போகாமல் இருக்கலாமா? கூடாது! நீ உடனே முதலில் தேதி கொடுத்தபடி சுற்றுப் பயணம் போய் வா!" என்றார்.

அவரது ஆணையை ஏற்று - திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியில் - குற்றாலத்தில் கட்டப்பட்டிருந்த கலையரங்கத் திறப்பு விழாவில் கலந்து கொண்டேன்.

3-9-1968 அன்று அந்தக் கலையரங்கிற்கு கலைவாணர் பெயர் சூட்டி, அதனைத் திறந்து வைத்த நான் வேறு சில நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக் காக காரைக்குடி நோக்கி சென்று கொண்டிருந்தேன். மதுரை அருகே சென்று கொண்டிருந்த போது சென்னையிலிருந்து டாக்டர் இராம மூர்த்தி தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினார். "அண்ணாவைப் பரிசோதனை செய்து பார்த்தோம், புற்று நோய்க்கான அறிகுறிகள் தெரிகின்றன" என்றார். என் கண் முன்னால் உலகமே இருண்டு விட்டது. தொலைபேசிக் கருவியில் என்னால் தொடர்ந்து பேச முடியவில்லை. வாய்விட்டு என்னால் முடிந்த அளவிற்கு தனியாக அமர்ந்து அழுதேன். மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் உடனடியாக ரத்து செய்துவிட்டு, அன்று இரவே நானும், மதுரை முத்து, அரங்கண்ணல் ஆகியோரும் சென்னை திரும்பினோம்.

சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அண்ணாவைக் கண்டதும் என்னால் அழாமல் இருக்க

முடியவில்லை. மருத்துவர்கள் அண்ணாவின் உணவுக் குழாயில் சதை வளர்ந்திருப்பதாகவும், அறுவை சிகிச்சை மூலம்தான் அகற்ற வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். அறுவை சிகிச்சைக்காக அண்ணா அமெரிக்கா சென்று வருவதே நல்லதென முடிவெடுக்கப்பட்டது. 10-9-1968 அன்று அண்ணா அமெரிக்கா புறப்பட்டார். விமான நிலையத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி நின்று, அண்ணா உடல் நலம் பெற்றுத் திரும்ப வேண்டுமென்று வாழ்த்தினர். அன்றைய ஆளுநர் உஜ்ஜல்சிங், அமைச்சர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையன்னியில், தள்ளு வண்டியிலே அமர்ந்தவாறு தந்தை பெரியார் அவர்களே கலங்கிய கண்களோடு அங்கே வந்து அமர்ந்திருந்த காட்சி அனைவரையும் நெகிழச் செய்தது.

நானும், வேறு சிலரும் அந்த விமானத்திலேயே மும்பை வரை சென்று அண்ணாவை வழியனுப்பி வைத்தோம். அண்ணாவுடன் அண்ணியார், டாக்டர் பரிமளம், க. இராஜாராம், இரா. செழியன், டாக்டர் சதாசிவம் ஆகியோர் அமெரிக்கா சென்றனர்.

அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளுக்கு அடுத்த நாள் நியூயார்க் மெமோரியல் மருத்துவ மனையிலே அண்ணா அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதே நாளில் தஞ்சை நகரிலே அண்ணா அவர்களின் சிலையினை நாவலர் தலைமையிலே திறந்து வைத்த நான் உரையாற்றும்போது, "……அமெரிக்க நாட்டிலே ஆப்ரகாம் லிங்கன் பிறந்தார் - கென்னடி இருந்தார் - ஆனால் ஓர் அண்ணா பிறக்கவில்லையே என்று அமெரிக்கர்கள் ஏங்கினார்கள் போல் இருக்கிறது. அவர்களின் ஏக்கத்தைப் போக்கும் விதத்தில் இன்று அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ள அண்ணாவைத் தமிழ்த்தாய் மீண்டும் அங்கே பிரசவித்திருக்கிறாள்" என்று குறிப்பிட்டேன்.

உலகப் புகழ் பெற்ற டாக்டர் மில்லர் அவர்களின் திறமையான சிகிச்சை காரணமாகத் தேறித் திரும்பி வந்த அண்ணா அவர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் 6-11-1968 அன்று வரவேற்பு அளிக்கப்பட்டது. குடை பொருத்தப்பட்ட திறந்த "ஜீப்" வண்டி ஒன்றினை தயார் செய்திருந்தோம். அண்ணா அதிலே ஏறிக் கொண்டார். நானும், நாவலர், என்.வி.என்., மதியழகன் ஆகியோரும், மற்றவர்களும் உடன் இருக்க ஊர்வலமாக அந்த ஊர்தி புறப்பட்டது. ஊர்வலம் வீடு வந்து சேர்ந்ததும், அண்ணா மாடிக்குச்

சென்றார். சில நிமிடங்களில் சிதம்பரம் பொன்.சொக்கலிங்கம் கீழே வந்து அண்ணா என்னை மேலே வரச் சொன்னதாகக் கூறினார். நான் மாடிக்குச் சென்றதும், என்னை அமரச் சொன்ன அண்ணா தன் சட்டையை மேலே தூக்கிக்கொண்டு அறுவைச் சிகிச்சை நடைபெற்ற இடத்தைக் காட்டினார். அண்ணாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறினேன். அண்ணாவாலும் கண்ணீரை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. பின்னர் நாட்டு நிலை, கட்சி நிலை பற்றியெல்லாம் உரையாடினோம்.

தமிழகச் சட்டமன்றத்தில் "தமிழ்நாடு" என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை டெல்லி நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டதையொட்டி, அதற்கான விழா கொண்டாட முடிவெடுத்து, சென்னையில் 2-12-1968 அன்று அந்த விழா நடத்த முடிவாயிற்று. அமெரிக்க சிகிச்சைக்குப் பிறகு எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்காமல் இருந்த அண்ணா, மருத்துவர்கள் தடுத்தும் கேளாமல், அந்த விழாவிலே கலந்து கொண்டார். நானும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும், சி.பா. ஆதித்தனாரும் அந்த விழாவிலே அண்ணாவுடன் கலந்து கொண்டோம்.

அந்த விழாவிலே பேசும்போது அண்ணா, ".....நான் இந்த மகிழ்ச்சி விழாவில் கலந்து கொள்ள முடிவெடுத்த நேரத்தில், நீங்கள் இந்தக் கூட்டத்தில் பேசக் கூடாது; அதிக நேரம் பேசினால் உடலுக்கு ஊறு நேரிடும் என்று டாக்டர்களும், நண்பர்களும் தடை விதித்தனர். "தமிழ்நாடு" பெயர் மாற்ற மகிழ்ச்சி விழா நடைபெறும் இன்றைய தினம் நான் பேசுவதாலேயே இந்த உடலுக்கு ஊறு நேரும் என்றால், இந்த உடல் இருந்தே பயனில்லை என்று கூறி, எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மருத்துவர்களிடமும் நண்பர்களிடமும் கேட்டுக் கொண்டேன். இத்தகைய வாய்ப்பு ஒருவரது வாழ்க்கையில் ஒரு முறைதான் வரும், பலமுறை வருவதில்லை" என்று குறிப்பிட்ட போது, அங்கே குழுமியிருந்தோர் அனைவரது விழிகளுமே குளமாயின.

அது போலவே 1969, ஜனவரி திங்களில் பொங்கல் திருநாளில் கலைவாணர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியிலும் அண்ணா அவர்கள் கலந்து கொண்டார்கள். எங்கள் மகிழ்ச்சி நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. அண்ணாவிற்கு மீண்டும் தாங்க முடியாத வலி. மருத்துவர்கள் அதனை "செகண்டரி" என்றனர். வேலூர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஆவன

செய்து கொண்டிருந்தோம். அப்போது குளியலறைக்குச் சென்ற அண்ணா, அங்கே கீழே விழுந்து மயக்கமடைந்தார். சென்னை, அடையாறு புற்று நோய் மருத்துவ நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம். டாக்டர் சி.எஸ். சதாசிவம் தலைமையில் மருத்துவ வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்து மில்லரை வரவழைக்க முடிவு செய்தோம்.

21-1-1969 அன்று சென்னை வந்து சிகிச்சையை மேற்கொண்டார்.

1969 பிப்ரவரி திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவு. சென்னை மாநகரே அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாலும், அடையாறு மருத்துவமனையை சுற்றிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். 12 மணியும் தாண்டி பிப்ரவரி 3ஆம் நாள் தொடங்குகிறது.

மணி 1.22 - திடீரென்று ஒரு பேரதிர்ச்சி - அதிர்ச்சி அல்ல, பிரளயம்.

இறப்புக்கு இரக்கம் எங்கே வரப் போகிறது?

எத்தனை எத்தனையோ ஏழையெளிய உயிர்களைக் கரையேற்றிடப் புறப்பட்ட ஒரு மாபெரும் கருணைக் கப்பல் அந்த நள்ளிரவில் கவிழ்ந்துவிட்டது!

எத்தனை எத்தனையோ இருண்ட மனங்களில் ஒளிக் கதிர்களை எழுப்பிய ஒரு அணையா விளக்கு, அன்றிரவு அணைந்து விட்டது!

“அண்ணா இறந்து விட்டார்” என்ற சொற்களைக் கேட்ட நேரத்திலேயே சிலர் தங்கள் உயிருக்கு விடை கொடுத்து அனுப்பினர்.

அண்ணாவை இறுதியாக தரிசிக்கப் புறப்பட்ட இலட்சக்கணக்கானோருக்கு உள்ளே இடம் கிடைக்காமல், ரெயிலின் மேற்கூரையிலே அமர்ந்து வந்த போது சிதம்பரம் அருகே முப்பதுக்கு மேற்பட்டோர் தங்கள் உயிரைகாவு கொடுத்தனர்.

அண்ணாவுக்கு காலத்திற்கும் அழிக்க முடியாத ஒரு நிலையான நினைவுச் சின்னத்தை எழுப்புவது நமது கடமை

என்ற முடிவுக்கு வந்தோம். அதற்காகவே அவருக்கு கல்லறை எழுப்புவதுதான் சரியென்று தீர்மானித்தோம்.

வங்கக் கடற்கரையோரத்தில் அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அண்ணியாரிடமும், குடும்பத்தாரிடமும் அனுமதி பெறப்பட்டது.

சென்னைக்கு வருபவர்கள் அண்ணாவின் அந்த நினைவிடத்தைப் பார்க்காமல் திரும்ப மாட்டார்கள் என்கிற அளவிற்கு அந்த நினைவிடம் இப்போது விளங்குகின்றது. அது மட்டுமா? அண்ணா அறிவாலயம் தொடங்கி, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் வரை - பாலங்கள் - சாலைகள் - பல்கலைக் கழகங்கள் - நகர்தோறும் ஊர்தோறும் சிலைகள் என அண்ணாவின் புகழை தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கிறோம். அண்ணாவிற்கு இறுதி மரியாதை செலுத்த மத்திய அரசின் சார்பில் அமைச்சர் ஒய்.பி. சவான் வந்திருந்தார். அண்ணாவின் உருவம் பொதித்த நாணயங்கள் - அஞ்சல் தலைகள் என இப்படி எத்தனையோ எண்ணிலடங்கா நினைவுச் சின்னங்கள்!

என் துயரத்தைத் தணித்துக் கொள்ள - அண்ணாவிற்கு கவிதாஞ்சலி ஒன்றினை எழுதி வானொலியின் மூலம் அஞ்சலி செலுத்தினேன்.

"இரவலாக உன் இதயத்தைத் தந்திடு அண்ணா" என்ற கவிதை வரியினை மறந்திருக்க மாட்டாய்!

அந்த ஆண்டு முதல் இன்று வரை - ஏன் கடந்த ஆண்டு நான் ராமச்சந்திரா மருத்துவ மனையிலே உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும் - ஒவ்வொரு ஆண்டும் அண்ணாவின் நினைவிடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்திடத் தவறியதில்லை.

அதே முறையில் இந்த ஆண்டும் இந்த நாளில் அந்த இடத்திற்கு வந்து என் அஞ்சலியை அண்ணாவின் பாத மலர்களிலே குவிக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

3-2-2010

3455. "வேலியே பயிரை மேய்வதா?"

உடன்பிறப்பே,

ஒரு தனி மனிதன் செல்வாக்கு பெற்று பணத்தினாலோ - பலத்தினாலோ - பராக்கிரமசாலியாக உயர்ந்து நின்றால் அல்லது தனி மனிதன் அல்லாமல், மேற்சொன்ன தகுதிகளுடன் ஒரு குழுவினர் தலையெடுத்து தட்டிக் கேட்க ஆளின்றி "தர்பார்" நடத்த முற்பட்டால் அது சர்வாதிகார ஆட்சியென்று சரித்திரம் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறது.

"தனி நாடு கிடைத்தால் அங்கே எத்தகைய ஆட்சி நடத்துவீர்கள்" என்று கேட்ட செய்தியாளர்களிடம் "ஐயத்திற்கிடமின்றி அங்கே சர்வாதிகார ஆட்சிதான் நடக்கும் - நடத்துவோம்" என்று ஒரு குரல் ஒலித்தபோது - ஆச்சரியத்தால் திடுக்கிட்ட நான் அதை அக்கணமே மறுத்து அறிக்கை விடுத்தவன் என்ற முறையில் இதனை எழுதுகின்ற தகுதியை நான் பெற்றிருப்பதாகவே கருதுகின்றேன்.

மக்களால் - மக்களுக்காக - நடத்தப்படுகின்ற மக்களாட்சிக்கும் - ஒருவர் நன்மைக்கே அல்லது ஒரு குழுவின் நன்மைக்கே இந்த உலகு உண்டு என்ற எண்ணத்துடன் நடத்துகின்ற ஆட்சிக்கும் - இடையில் உள்ள வானளாவிய வேறுபாடுகளை வரலாற்று ஏடுகளில் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் நாம். எனினும், மன்னர் ஆட்சியில் மக்கள் மதிக்கப்பட்ட மாண்பினையும் - மக்கள் ஆட்சிகளில் மன்னராட்சியைவிட கேடுகள் நடந்த கொடுமைகளையும் - எடுத்துக் கூற வரலாறுகள் தவறவில்லை. இந்தப் பின்னணியோடு தமிழகத்தில் மன்னராட்சியில் மக்களாட்சி தத்துவம் செயல்பட்டதையும் - மக்களாட்சி மாண்பினை மன்னராட்சியில் செயல்படுத்தியதையும் கண்டறிவதும்; அறிந்த அதனை எடுத்துச் சொல்வதும் இந்த நேரத்தில், இன்றியமையாத ஒன்று என்பதால் அதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மன்னராட்சியில் மக்கள் ஆட்சி என்று குறிப்பிட்டதற்கு இதோ ஒரு சான்று! இப்பொழுதும்கூட சோழர் காலத்துக்

கல்வெட்டு ஒன்று உத்திரமேரூரில் கலையாமல் அழியாமல் சிதறாமல் - உடையாமல் அப்படியே இருக்கிறது. தமிழ்நாட்டில் சோழர் காலத்திலேயே, ஊராள்வதற்கான தனித்தனி குழுக்கள் இருந்தன என்பதையும் - அந்தக் குழுக்களின் தலைவர்களாக எத்தகையோர் இருந்தனர் என்பதையும் அவர்கள் எல்லாம் ஊர் பொது மண்டபத்தில் குடவோலைச் சீட்டின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதையும் அந்தக் கல்வெட்டு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

மன்னராட்சியில் இருந்தாலும் - மக்களாட்சியின் மாண்பினைப் போற்றியவர்கள் அதனை வரவேற்று வழிவழியாக கடைப்பிடித்தவர்கள் தமிழர்கள் என்பதற்கு இது அசைக்க முடியாத சான்றல்லவா?

இன்று உலகம் அடைந்துள்ள பல்வேறு மாறுதல்களில், சிறிய நாடுகளாயினும் - பெரிய நாடுகளாயினும் அவற்றை நிர்வகிப்பதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் குழுவினர் பொறுப்பேற்கிறார்கள். தேர்தலிலே வென்றிடாதவர்கள் எதிர் வரிசையிலேயிருந்து - அரசாளும் குழுவிற்கு ஆலோசனைகள் கூறுகின்றவர்களாகவும் - தவறுகள் நேருமிடத்து தட்டிக் கேட்பதற்கான தகுதி உடையவர்களாகவும் விளங்குகிறார்கள். இதற்கு நாம் வைத்திருக்கும் பெயர்தான் ஜனநாயகம்.

மக்களாட்சியின் மாண்பினை உணர்த்தும் ஒரு சொல் இது. அந்த மாண்பினை இந்தியத் திருநாட்டிலும், அதற்கு உட்பட்ட பல்வேறு மாநிலங்களிலும் நாடு சுதந்திரமடைந்த பிறகு மறவாமல் கடைப்பிடித்து வருகிறோம்.

குறிப்பாகவும் - சிறப்பாகவும் தமிழகத்தில் ஜனநாயகக் காவலர்களாகத் திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வழியில் மக்களாட்சியின் மாண்புக்கு ஒளி கூட்டுவதற்கு நாம் என்றைக்குமே தவறியதில்லை. ஜனநாயக முறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கீறல்கள் ஏற்படுவதுண்டு. அது தங்கத் தட்டில் விழுந்த கீறல் போல உருக்கி மீண்டும் ஒன்றாக்கிடக் கூடியது.

சர்வாதிகாரத்தில் விழும் கீறல்கள் - பானையையே உடைக்கக்கூடியது. இதனை உணர்ந்துள்ள காரணத்தினால்தான், அரசு முறைகளில் எந்த முறை சிறந்தது என்று எண்ணிப் பார்த்து

இதுதான் அனைத்தையும் விடச் சிறந்தது என்று நாம் இந்த முறையை கருதாவிட்டாலும், இருக்கின்ற முறைகளிலே இந்த முறை ஒன்றுதான் ஏற்கத்தக்கதாக இருப்பதால் அதனையேற்று, அந்த ஜனநாயக முறையின்படி நடந்திட அணிவகுத்திருக்கிறோம்.

இந்த முறையில் போட்டியிடுவோர்களுக்கிடையே குற்றம் குறைகள் இருக்கலாம். ஆனால் அவற்றைச் சுட்டிக்காட்டிட குற்றம் குறைகளைப் போக்கிட வேண்டிய பொறுப்பிலே இருப்பவர்கள் போட்டியை நடத்துபவர்களாக இருக்கிறார்கள் என்பதால் அவர்கள் வாய்மைக்கு முதல் இடம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக தமிழகத்தில் பென்னாகரத்தில் நடைபெற வேண்டிய இடைத் தேர்தலை வாதத்திற்காக எடுத்துக் கொள்வோம். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு - வேட்பு மனு தாக்கல் செய்யலாம் என்றழைக்கப்பட்டு - வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த பிறகு - அந்தத் தேர்தலில் போட்டியிடவே முன்வராத ஏழெட்டு கட்சிகளின் கோரிக்கையையேற்று - மாநில, மாவட்ட, வட்ட மற்றும் தொகுதியிலே உள்ள அதிகாரிகள் அனைவரும் பரிசீலித்து வழங்கிய வாக்காளர் பட்டியலில் திடுமென பல்லாயிரவர் குறைந்து விட்டனர் என்ற ஒரு புகார் மனுவைப் பெற்று - அது உண்மையா, பொய்யா என்பதைப் பற்றிக் கூட எந்த அதிகாரிகளிடமும் கலந்தாலோசிக்காமல் - இரண்டாவது முறையாக இடைத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அதாவது - ஜனநாயகத்தின் கால் முடக்கப்பட்டு விட்டது! இதுபற்றி நான் சொல்வதை விட - இந்த இடைத் தேர்தலில் போட்டியிட முன் வந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சி என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். அந்தக் கட்சி நான் முதலில் சொன்ன - தேர்தலில் போட்டியிடாத கட்சிகளின் பட்டியலில் உள்ள கட்சியல்ல! பட்டவர்த்தனமாக அந்தக் கட்சியின் சார்பில், அந்தக் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையே என் கூற்றுக்கு தக்கச் சான்றாக அமைந்திருக்கின்றது. இதோ அது :

> * பென்னாகரம் இடைத் தேர்தல் முதலில் ஜனவரி மாதத்தில் தள்ளி வைக்கப்பட்டதும், இப்போது பிப்ரவரி மாதத்தில் மீண்டும் தள்ளிப் போடப்படும் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது இந்தியத் தேர்தல் ஆணையம் நடுநிலையாக நடந்து கொள்கிறதா? என்கிற பெரும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

* பென்னாகரம் இடைத் தேர்தல் ஜனவரி 20ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட போது - சில நாட்கள் தள்ளி வைக்க வேண்டுமென்று பா.ம.க. கோரிக்கை வைத்தபோது நிராகரித்த தேர்தல் ஆணையம், மறுநாள் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா பென்னாகரம் இடைத் தேர்தலை தள்ளி வைக்க வேண்டுமென்று அறிக்கை விட்டதும், அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று ஒரு நாடகத்தை அரங்கேற்றி, ஜெயாவின் மனம் குளிரும்படி இடைத் தேர்தலை தேர்தல் ஆணையம் தள்ளி வைத்தது.

* இடைத் தேர்தலைச் சந்திப்பது என்ற தீர்க்கமான முடிவுடன் பா.ம.க. தேர்தல் களத்தில் இறங்கியது. வேட்பாளரை அறிவித்து முழு மூச்சுடன் தேர்தல் பணியாற்றியது. ஆளும் தி.மு.க. வும் வேட்பாளரை அறிவித்து தேர்தல் பணியில் ஈடுபட்டது. ஆனால் அ.தி.மு.க. மட்டும் பென்னாகரத்தில் ஒரு இடைத் தேர்தல் நடைபெறுகிறது என்ற எண்ணம் சிறிது கூட இல்லாமல் சோம்பிக் கிடந்தது. அந்தக் கட்சி இப்படி சோம்பிக் கிடந்ததின் ரகசியம் இப்போது தான் புரிகிறது.

* சென்னையில் தலைமைத் தேர்தல் அதிகாரி இருக்கிறார். அவருக்கு மேலே டெல்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா இருக்கிறார். இந்த இருவரும் நமக்கு உதவி செய்வார்கள், இடைத் தேர்தலை இன்னும் சில மாதங்களுக்குத் தள்ளிப் போட நமக்கு உதவுவார்கள் என்ற எண்ணத்துடன் இருந்த அ.தி.மு.க. தலைமை தனது ஆதரவு கட்சிகளைத் தூண்டி விட்டு வாக்காளர் பட்டியலில் முறைகேடு என்று குற்றம் சாற்றி, இடைத் தேர்தலை தள்ளி வைக்க முறையீடு செய்தது.

* பா.ம.க. மனு கொடுத்தபோது அதில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத தேர்தல் ஆணையம், ஜெயலலிதாவின் ஆதரவு கட்சிகள் மனு கொடுத்த அடுத்த சில மணி நேரத்தில் வாக்காளர் பட்டியலின் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்து, இதன் மூலம் பென்னாகரம் இடைத் தேர்தலை

தள்ளி வைக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் சூழ்ச்சிக்கு தேர்தல் ஆணையம் துணை போயிருக்கிறது.

* தேர்தல் ஆணையத்தின் வைர விழாவிற்கு தனி அக்கறையுடன் ஜெயலலிதாவை அழைத்து - விழா மண்டபம் அருகே உள்ள தனி அறையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அங்கு வரும் வரையில் திட்டமிட்டு உட்கார வைத்து இருவரையும் நவீன் சாவ்லா சந்திக்க வைத்தார் என்று ஏற்கெனவே வெளியான செய்தியையும், பென்னாகரம் இடைத் தேர்தலில் இரண்டு முறை ஜெயலலிதாவின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்த நடவடிக்கை களையும் பார்க்கும்போது தேர்தல் ஆணையம் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக மதித்து செயல்படுகின்ற நடுநிலையிலிருந்து தவறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க முடியாது. தேர்தல் ஆணையத்தின் இந்த ஒரு சார்பு நிலை மிகவும் கண்டிக்கத் தக்கது. :

இவை அனைத்தும் டாக்டரின் அறிக்கையில் காணப்படும் சாராம்சங்கள். இதற்குப் பிறகு - இதைப் படித்தவர்கள் நான் ஜனநாயகத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிவார்கள் என்றே நம்புகின்றேன். ஜனநாயகத்தை வாய்மையுடன் காப்பாற்ற வேண்டியவர்களே, டாக்டர் ராமதாஸ் அவர்கள் கூறுவதைப் போல - ஒருதலைப் பட்சமாக காரியமாற்றுவார்களேயானால்; "வேலியே பயிரை மேய்வதா?" என்று வேதனையுடன்தானே கேட்கத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு.க.

10-02-2010

3456. மனித நேயமும், மாசற்ற அரசியல் நாகரிகமும்!

உடன்பிறப்பே,

ஐந்தாவது முறையாக தமிழ்ப் பெருமக்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்டு முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் ஆற்றிய பணிகள் நூற்றுக்கு நூறு அடித்தட்டு மக்கள் - ஏழை யெளிய மக்கள் ஆகியோரின் வறுமையைக் களைந்திடவும் - உரிமையை வழங்கிடவும் பயன்பட்ட பணிகளாகும். இஃதன்னியில், கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற கால கட்டங்களில்தான்

- ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி
- ஏழைப் பெண்கள் திருமணம் செய்து கொள்ள நிதி உதவித் திட்டம்
- கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி திட்டம்
- பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்
- உழவர் சந்தை திட்டம்
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
- கூட்டுறவுக் கடன்கள் ரத்து
- உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்
- 108 ஆம்புலன்ஸ் வசதித் திட்டம்
- கலைஞர் வீட்டு வசதித் திட்டம்

போன்ற திட்டங்கள் தொடங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

காந்தியடிகள் - வடலூர் ராமலிங்க அடிகள், தந்தை பெரியார் போன்றவர்களின் பெருந் தொண்டினாலும் அவர்கள்

நடத்திய தியாகப் போராட்டங்களினாலும் - தீண்டாமை என்ற கடும் விஷத்தை நாட்டில் ஒரு துளிகூட இல்லாமல் அறவே துடைத்தெறிய இயல வில்லை என்பதை இன்றைய நாட்டு நடப்பு சான்றாக இருந்து எடுத்துக்காட்டி வருகின்றது.

தீண்டாமையை ஒழிப்பதற்கான கடுமையான சட்டங்கள் இருந்தும் கூட அந்தப் போராட்டத்தில் முழு வெற்றியைப் பெற முடியவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தி.மு.க. உள்ளிட்ட எத்தனையோ கட்சிகளின் ஆட்சிகளிலேகூட காற்றில் வளைந்து பின்னர் நிமிர்ந்து நிற்கும் ஆற்றோரத்து நாணல் போல் - சாதிக் கொடுமைகள், தீண்டாமைத் தீமைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னமும் தலைநிமிர்ந்து தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன.

அந்தக் கொடுமைகளின் மொத்தச் சுமையையும் சுமக்க வேண்டிய பெரும் பொறுப்பு இன்று நமக்கு - நமது ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை யாரும் அலட்சியப்படுத்தி விட முடியாது.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் போன்ற ஊர்களில் கடந்த காலங்களில் எந்தவொரு ஆட்சியிலும் ஊராட்சி மன்றத் தேர்தல்களைக் கூட நடத்த முடியாமலும் - நடத்தப்பட்டால் அந்த ஊராட்சி மன்றங்களின் தலைவர்களாக "தலித்" சகோதரர்கள்தான் வர முடியும் என்பதால் அவர்கள் உயிரோடு இருக்க முடியாமலும் - அந்த அச்சத்தின் காரணமாகவே அவர்கள் யாரும் அந்த ஊர்களில் ஊராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடாமலும் இருந்த சகிக்க முடியாத கொடுமையை அகற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்குண்டு என்பதையும், அகற்ற முடியாவிட்டால் நாம் பெரியார் வழியிலும், அண்ணா வழியிலும் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை இழந்தவர்களாவோம் என்பதையும் நினைத்துப் பார்த்து 2006ஆம் ஆண்டு நான் மேலே குறிப்பிட்ட அந்த ஊர்களில் ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்தியும் - அதில் வெற்றி பெற்ற ஊராட்சி மன்றத் தலைவர்களையெல்லாம் "தலித்" சமுதாயம் மனம் மகிழத் தக்க அளவிற்கு சென்னை கலைவாணர் அரங்கத்திற்கே அழைத்துப் பாராட்டியும், பரிசுகளை வழங்கியும்,

மாலைகளை அணிவித்தும், மகிழ்ச்சியினை மழையாகப் பொழிந்தும், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லீம் லீக், புரட்சி பாரதம் ஆகிய கட்சிகளின் தலைவர்களை யெல்லாம் அழைத்து ஒரே மேடையில் பங்கு பெற வைத்து - இந்த வெற்றியில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டியும் - ஜனநாயகத் தோட்டத்தில் புகுந்த சாதி வெறி எனும் பாம்புகளை வெளியேற்றி வெற்றிச் சங்கொலித்தோம்.

அடுத்து, மதுரையை அடுத்த உத்தபுரம் எனுமிடத்தில் தலித்துகள் தாண்டிச் செல்லக் கூடாது என்பதற்காக உயர் வகுப்பினர் தடுத்துக் கட்டியிருந்த சுவரை - மாவட்ட ஆட்சித் தலைவரையும், காவல் துறையினரையும் தொலைபேசி வாயிலாக அழைத்துப் பேசி - இடிக்கச் செய்து - சாதி வெறியைத் தணித்தோம்.

அதைப் போலவே கோவை மாநகரில் உள்ள பெரியார் நகரில் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக அருந்ததியர் வசித்து வருகின்ற பகுதியில் அவர்கள் நுழைவதைத் தடுக்கும் நோக்கத்தில் எழுப்பப்பட்டிருந்த சுவர் அகற்றப்பட்டதோடு - சுவரை காக்க வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலையையும் அகற்றி வேறொரு இடத்தில் இந்த அரசின் சார்பில் வைக்கப் பட்டது.

தலித்துகளை விட மோசமான நிலையில் அவமதிக்கப்பட்ட அருமைமிகு அருந்ததிய மக்களை - அடித்தளத்திலே வீழ்ந்து கிடக்கின்ற சூழலிலேயிருந்து கை தூக்கி விட அவர்களுக்கு மூன்று சதவிகித இட ஒதுக்கீடு அளித்து ஏற்கனவே பெரியார் தலைமையில் நடந்த சுய மரியாதை மகாநாடுகளில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயல்படுத்தினோம்.

அதன் காரணமாக இந்த ஆண்டே ஆயிரத்திற்கு மேற்பட்ட அருந்ததிய மாணவர்களுக்கு உயர் கல்வி பயில இடம் கிடைத்தது மாத்திரமல்ல - 56 பேருக்கு மருத்துவக் கல்லூரியிலும் 1165 பேருக்கு பொறியியல் கல்லூரியிலும் இடங்கள் கிடைத்துள்ளன.

இவைகளுக்கெல்லாம் எதிர் வரிசையிலே உள்ள இடதுசாரிக் கட்சிகளுக்கும் நியாயமான பங்கு உண்டு என்பதை அரசியல் நெறிமுறையுடன் - ஆம், அரசியல் நாகரிகத்துடன் நன்றி உணர்வுடன் கூட எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஏதோ நாம் மட்டும்தான் இந்த இலட்சிய உணர்வுகளை செயல் வடிவம் பெறச் செய்தோம் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ள என்றைக்குமே நாம் கருதியதுமில்லை - அப்படி நடந்து கொண்டதும் இல்லை. ஆனால் அதற்கென்று வேறு சில கட்சிகள் இருக்கின்றன. நாம் அந்தக் கட்சிகள் சிலவற்றின் கோரிக்கைகளை யேற்று, அதனை நடைமுறைப்படுத்தினால், கோரிக்கைகளை வைத்த கட்சிகள் தங்களுக்குத் தாங்களே நன்றி பாராட்டிக் கொள்வதும் - கோரிக்கைகளை நிறை வேற்றிய இந்த அரசின் செயலை இருட்டடிப்புச் செய்வதும் தங்களுடைய நிரந்தர "சாமுத்ரிகா இலட்சணங்"களில் ஒன்றாகப் பதிய வைத்துக் கொண்டிருக்கின்றன.

பல ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்த - நடைபெற்றாலும் உயிரோடு இருக்க முடியாத ஊராட்சி மன்றத் தேர்தல்களை பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊர்களில் நடத்த முன் வந்த ஆட்சி எது - இருபதாண்டு காலமாக தீண்டாமைச் சுவர் என்று திகழ்ந்த தீய சுவர்களை இடித்தெறிந்தது எந்த ஆட்சி - யார் துணையோடு - கோரிக்கை வைத்தவர்களின் துணையோடா - அல்லது இந்த ஆட்சியின் அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்பட்ட நிகழ்வா?

இதையெல்லாம் மறைத்துக் கொண்டு விருந்திட்டோர்க்கு நன்றி கூறாமல் - விருந்தை அருந்தியவர்களுக்கு நன்றியும் பாராட்டும் கூறி -

"உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளை மறந்து - நடமாடிக் கொண்டிருப்பவர்களை வாழ்த்துவோம் - வணங்குவோம் - நம்மிடம் வற்றாமல் இருக் கின்ற மனித நேயத்தோடு - மாசற்ற அரசியல் நாகரிகத்தோடு!

அன்புள்ள,

மு.க.

11-02-2010

3457. அவனும் சிரித்தான்; நானும் சிரித்தேன்!

உடன்பிறப்பே,

குறிஞ்சி மலர் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூக்கும் என்ற பெருமையுடையது.

கும்பகோணம் மகாமகத்திற்கும் அப்படியொரு பெருமை பேசப்படும்.

எங்கேயோ ஒரு கோவில்! அதன் எதிரே ஒரு குளம்! அந்தக் குளத்தில் சேறும், சகதியும் நிரம்பியிருந்தாலுங்கூட, அந்த அழுக்கு போதாதுயென்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் அந்தக் குளத்திலே குளித்து அகற்றிடும் அழுக்கையும் சேர்த்துக் கணக்கிட்டால் அது குளமாக அல்ல - குட்டையாகவே காட்சி தரும். அதிலே குளித்தால் - மூழ்கினால் பாவங்கள் தொலையும்; புண்ணியங்கள் சேரும் என்ற நம்பிக்கையோடு பரம பக்தர்கள் மற்றும் பாமர பக்தர்கள் இன்னமும் அங்கு குளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதுபோல ஒரு பாவம் தீர்க்கும் தீர்த்தத்தில் "நீராடி மூழ்கலாம் வாடி!" என்று அரசி ஒருத்தி அவளுடைய தோழியை அழைத்துக் கொண்டு சென்றாள். திரளான மக்கள் தீர்த்தமாடிக் கொண்டிருந்த அந்தத் தெய்வீக குளத்தில் திடீரென குண்டு வெடித்ததைப் போல பெரும் பரபரப்பு - பதைப்பு - பயத்தில் அங்குமிங்கும் ஓடியவர்கள் உருவாக்கிய நெருக்கடியும், கூச்சலும், குழப்பமும் சேர்ந்து பாவம் தீர்க்க வந்த இடத்தில் பல உயிர்கள் பலியாயின.

குளத்தோர மண்டபத்தில் இரண்டு சன்னியாசிகள் கண்கலங்க இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். கோபுரத்து விதான மேடையில் அரசியும், அவள் தோழியும் நீரை மொண்டுமொண்டு ஒருவர் தலையில் ஒருவர் ஊற்றி மகிழ்ந்து விளையாடினர். பாவம் போக்க திருக்குளத்தில் திரண்ட பக்தர்கள் அரசியாருக்கு - அவள் தோழி நடத்திய அபிஷேகத்தையும் - அதற்குப் பதிலாக அரசியாரும், அவள் தோழிக்கு நடத்திய

அபிஷேகத்தையும் பக்த கோடிகள் அனைவருமே பாவம் தணிக்க வந்ததை மறந்து விட்டு அந்தக் காட்சியைப் பார்ப்பதிலேயே சகல பாவமும் தீர்ந்து விட்டதாகக் கருதினார்கள்.

குண்டு விழுந்து வெடித்தது போன்ற குழப்பத்தில் ஏற்பட்ட பரபரப்பும், பதைபதைப்பும் அடங்கிவிட்டாலுங்கூட - அரசியார் தோழியுடன் தீர்த்தமாடிய அந்தக் காட்சி பக்தர்கள் மனதை விட்டு மறையவேயில்லை.

பரிதாபமான இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டேயிருந்த பெரிய சாமியாரும், சின்னச் சாமியாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே குளக்கரையிலிருந்து மெல்ல நடந்து அவர்களின் மடாலயத்து பல்லக்கிலே ஏறிக் கொண்டார்கள். பல்லக்கு சென்ற பாதையில் பத்திரிகை நிருபர்கள் அந்தச் சாமியார்களை வளைத்துக் கொண்டு "பாவம் போக்கும் குளத்தில் என்ன நடந்தது? நீங்கள் நேரில் பார்த்தீர்களா? எப்படி நடந்தது? ஏன் நடந்தது" என்று அவர்களுக்கே உரிய திறமையோடு வினாக்களை எழுப்பினார்கள். அதற்கு சாமியார்கள் சொன்னார்கள். "எங்களுக்கு ஒன்றும் தெரியாது; நாங்கள் குளக்கரையில் நின்று கொண்டு பார்த்தவரையில் அரசியார் வந்தார் - அவர் தோழி வந்தார் - இருவரும் ஜலத்தை மொண்டுமொண்டு இவர் தலையிலே அவர் ஊற்றினார் - அவர் தலையிலே இவர் ஊற்றினார் - இரு பெண்டிரும் இவ்வாறு ஸ்நானம் செய்த போது - அந்தக் காட்சியைக் காண ஒருவர் மீது ஒருவர் விழுந்து முண்டியடித்துக் கொண்டு முன்னேறியதால் குழப்பம் ஏற்பட்டது! பிணங்கள் குவிந்தது!" என்று கூறி விட்டு - பல்லக்குத் தூக்கிகளைப் பார்த்து "போ - போ" என்று விரட்டவே - அவர்களும் மிரண்டு போய் ஓடினார்கள். பத்திரிகைக்காக குறிப்பெடுத்த நிருபர்களும் அந்தச் சன்னியாசிகள் இருவரும் சொன்ன பதிலை வேதவாக்காக எடுத்துக் கொண்டு அதனை தாங்கள் வேலை பார்க்கும் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். அதைப் படித்த அரசியாருக்கு பயங்கர கோபம். "சாமியார்கள் இருவரும் - நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட நிலங்களில் மடம் கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு மமதை பார்த்தாயா? சமயம் வரட்டும்; ஒரு கை பார்க்கிறேன்" என்று சபதமும் செய்தார் அரசியார்.

அந்தச் சபதம் நிறைவேறும் சந்தர்ப்பமும் உருவாகிவிட்டது. மடாலயத்தில் நடைபெற்ற ஒரு கொலையில் சாமியார் சிக்க

வைக்கப் பட்டார். "இவாள் தலையில் அவாள் ஊற்றினா - அவாள் தலையில் இவாள் ஊற்றினா - என்று கேலியா பேசினாய்! எவ்வளவு ஆணவம் இருந்தால், என்னிடத்திலேயே இப்படி விளையாடியிருப்பாய்" என்று சாமியாரை அரசியார் மிரட்டினார் - விரட்டினார். "உம்மைத் தூக்குத் தண்டனை கைதியாக ஆக்குகிறேன் பார்" என்று தூற்றினார்.

சாமியாரோ துடித்தார், துவண்டார். "ஐயோ, அரசியார் தீர்த்த குளத்தில் நடத்திய திருவிளையாடலை நாம் கேலி செய்யப் போய் - அது நம் தலைக்கே தீவினையாகி விட்டதே" என்று புலம்பித் தீர்த்தார். சாமியாரின் மெய்யன்பர்களுக்கும் சாமியார் எப்படியோ பிழைத்தால் போதும், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள பழி நீங்கினால் போதும் என்று பகல் இரவு பாராது பகவானை வேண்டிக் கொண்டார்களே தவிர, தங்கள் அன்புக்குரிய சாமியாரை - தங்களுக்கு வழிகாட்டியாக உள்ள சாமியாரை - இப்படி பழி தீர்த்துக் கொண்டாரே அரசியார் என்று யாரும் பதறவில்லை - அரசியார் மீது பாய்ந்து தாக்குதல் கணை தொடுக்கவும் இல்லை. அரசியாரின் அடி பணிந்தாவது அவர் அருளைப் பெற்று, சாமியாரை மிரட்டிக் கொண்டிருக்கும் மரண தண்டனை என்ற மருளைப் போக்க - "ஜெய ஜெய சங்கரா" என்ற பாடலை மட்டும் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தார்கள், அந்தப் பாடல் ஒலியையும் - கேட்பதற்கு விருப்பம் இல்லாதவர் போல் அரசியார் நடித்தார். பல்லைக் கடித்தார். அதிர் வெடி போல் வெடித்தார். இந்த இரண்டு வேறுபாடான காட்சிகளுக்கிடையே ஊரின் நடுவே கம்பம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த ஊராட்சி மன்ற ஒலி பெருக்கி குழாயில்

"நாம் இருவரும் ஒரு குலம் அல்லவா?
நம்மை எதிர்ப்போர் நம்மை வெல்லவா?"

என்று ஒரு பாட்டு ஒலிக்க ஆரம்பித்து - தொடர்ந்து;

"கொலைப் பழி தூற்றியது பாவம் தான்!
அதை - நிலைப் பழியாக நிறுத்துவது
அதை விடப் பாவம் அன்றோ ? எனவே
பொல்லாப் பாவங்கள் தீர்க்கும்
பொய்கையிலே - நம்
எல்லா பாவங்களையும் தீர்த்திடுவோம் - நம்

இன எதிரிகள் யாரென்று பார்த்திடுவோம் –
கூத்திடுவோம் அவர்களை வீழ்த்திடுவோம் என”

பாடல் முழங்கிக் கொண்டே இருந்தது ஒலிபெருக்கியில்!

அப்போது என்னருகே ஒரு சிரிப்பொலி சப்தம் கேட்டது.

“என்னய்யா? பாடல் கேட்டாயா?” என்று சிரித்துக் கொண்டே அந்த நண்பன் என் முதுகில் தட்டினான்.

“இதற்குப் பெயர்தானப்பா “இன ஒற்றுமை” என்றேன்.

அவனும் சிரித்தான் –

நானும் சிரித்தேன்!

அன்புள்ள,

மு.க.

12-02-2010

3458. புள்ளியைத் தொடர்ந்து போட வேண்டிய கோலம்!

உடன்பிறப்பே,

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் வராவிட்டாலும் - என்றும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கும் நிலை தொடர்ந்தாலும் - இந்தியத் திருநாட்டில் ஜனநாயகத்தைக் காத்திடவும்; தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட உழைத்திடவும்;

அந்தப் பூங்காவைக் காத்திடும் பணியை அமைதியாகவும் - ஆர்ப்பாட்டமின்றியும் - அன்னியர்க்கு இடம் கொடாத வகையிலும் கடைப்பிடித்து நிறைவேற்றிடவும்;

உறுதிபூண்டு - ஒல்லும் வகையெலாம் ஒத்துழைப்பு தருகின்ற இந்த இயக்கத்தை தலைமையேற்று நடத்துகின்ற தகுதியும் திறமையும் நமது தி.மு. கழக அமைப்புக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை அண்மையில் நமது அமைச்சர்கள் தம்பி துரைமுருகன் - தம்பி ஜெகத்ரட்சகன் இருவரும் ஒருங்கிணைந்து நடத்திய சங்கத் தமிழ்ப் பேரவையின் விழாவில் கண்கூடாக கண்ட ஒன்றாகும்.

விழாவில் கலந்துகொண்டு கருத்து மழை பொழிந்த மத்திய அமைச்சர்கள் - எனது ஐம்பதாண்டு கால நண்பர் எஸ்.எம். கிருஷ்ணா அவர்களும் - கண்ணியத்திற்குரிய பரூக் அப்துல்லா அவர்களும் என்னைக் குறிப்பிட்டு பாராட்டினாலுங்கூட, இந்தியாவுக்கு வழி காட்டக் கூடிய சிறப்பியல்புகளைப் பெற்றது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியபோது என் நினைவுகள் உண்மையிலேயே அண்ணா அவர்கள் மறைந்த நேரத்தில் சென்னையில் நான் முன்னின்று நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டையும் - அந்த மாநாட்டில் கலந்து கொண்டு திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் ஆற்றிய உரையினையும் - தொடர்ந்து திரு. பரூக் அப்துல்லா அவர்கள் காஷ்மீரில் நடத்திய மாநில சுயாட்சிக்கான கொள்கைகளை

வலியுறுத்தும் முதல் அமைச்சர்கள் மாநாட்டிற்கு மறைந்த நண்பர் அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் கலந்து கொண்டதும்

மாநில சுயாட்சி குறித்து நமது கழகம் எடுத்த நடவடிக்கைகள் - கொண்டுள்ள உறுதிப்பாடு - இவைபற்றியெல்லாம் அந்த மாநாட்டில் நண்பர் சாதிக் அவர்கள் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து

கொல்கத்தாவில் மறைந்த தோழர் ஜோதிபாசு, மேற்கு வங்க முதல் அமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது மாநில அதிகாரங்களை மேலும் பெறுவதற்கு வலியுறுத்துகிற நியாயமான தீர்மானங்களை நிறைவேற்றியதும்

என் நெஞ்சை விட்டு அகலாத வரலாற்று ஏடுகள் மாத்திரமல்ல; எதிர்காலத்தில் நனவாக வேண்டிய கனவும் கூட!

நனவாக வேண்டிய கனவு என்று குறிப்பிடுகிறேன் - கனவு கனவாகவே போய்விடாமல், குமரிக் கடலின் ஆழத்திலிருந்து - இமயக் கொடுமுடி வரையில் பரவிக் கிடக்கும் இந்தியத் திருநாடு முழுதும் எதிரொலித்து நாம் கண்டு வரும் கனவு வெறும் கனவல்ல - எதிர்காலத்தில் என்றல்ல; நம் காலத்திலேயே நடக்கக் கூடிய ஒன்று என்பதைச் சுட்டிக்காட்டும் கடிகாரத்தின் முள்ளாக விளங்குகின்றது.

கடிகாரத்தின் முள் சுழன்றால் அதன் தொடர்ச்சியாக காலண்டரில் நாட்கள் சுழலும் - அப்படிச் சுழன்ற போது எத்தனையெத்தனை இடங்களுக்கு - நாடுகளுக்கு சுயாட்சியும், சுதந்திர ஆட்சியும் கிடைத்திருக்கிறது என்பதை நாம் நன்றாகவே அறிவோம். அதனால்தான் நம்பிக்கையோடு சொல்கிறேன் - "கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்ற பழம் பெரும் சுதந்திரப் பாடலை நினைவிலே நிறுத்தி - சுதந்திரமடைந்த இந்த நாட்டில் சுயாட்சி கோருவது தவறல்ல - ஒவ்வொரு ஆண்டும் தமிழகச் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையானாலும் - நிதி நிலை அறிக்கை ஆனாலும் - மறவாமலும், மாறாமலும் எடுத்து வைக்கின்ற மாநில சுயாட்சி கோரிக்கை என்பது நாட்டைத் துண்டாடும் அல்லது பிரிவினை செய்து தனித்ததோர் ஆட்சி அமைக்கும் முழக்கமுமல்ல; முழக்கத்தின் எதிரொலியுமல்ல.

பெற்ற சுதந்திரத்தை இந்தியாவில் பேணிக் காக்கவும் - மாநிலங்கள் வலிமையோடு இருந்தால்தான் மத்திய ஆட்சியும் வலிமையோடு இருக்க முடியும் என்ற தத்துவத்தை உறுதிப் படவும்

- உளப்பூர்வமாகவும் எடுத்துச் சொல்லி எழுப்புகிற கோஷம்தான் மாநில சுயாட்சி.

மாலை தங்கத்தால் ஆனதாயினும் -
மரகத மணிகளால் ஆனதாயினும் -

ஒவ்வொரு மணியையும் இணைத்திருக்கின்ற "கொக்கி" வலிமையாக இருந்தால்தான் மாலைக்கு வலிவு. அந்த வலிவுக்கு நாம் வைத்துள்ள பெயர்தான் மாநில சுயாட்சி.

மாநில சுயாட்சி பற்றி அறிஞர் அண்ணா அவர்களும் - சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் - தம்பி முரசொலி மாறன் அவர்களும் தந்துள்ள விளக்கங்கள் -

அந்த விளக்கங்கள் அடங்கிய புத்தகங்கள் -

சுயாட்சி என்பது பிரிவினையோ என்று கருதும் பித்தம் தெளிவிக்கிற மாமருந்துகளாக அமைந்துள்ளன.

எனவே உடன்பிறப்பே, மாநில சுயாட்சி எந்தெந்த காலகட்டத்தில் - எந்தெந்த வகையில் நம்முடைய தலைவர்களாலும் - நம்முடைய இயக்கங்களாலும் - எந்தச் சூழலில் எவ்வாறு வலியுறுத்த நேரிட்டது என்பதை - அந்த வரலாற்றை ஊன்றிப் பார்த்தால் வாய்மையுடன் நாம் வலியுறுத்துகிற மாநில சுயாட்சிக்கு இந்தியப் பூபாகம் முழுதும் உள்ள மாநிலங்களின் ஆதரவு கிட்டும் என்றே நம்புகிறேன்.

அதற்கோர் புள்ளி வைத்தது போல்தான் அமைந்தது சென்னை வள்ளுவர் கோட்டத்தில் என் தம்பிமார்கள் நடத்திய விழா.

புள்ளியோடு நின்றால் போதுமா?

புள்ளியைத் தொடர்ந்து கோலம் உருவாக வேண்டாமா?

அந்தக் கோலத்தை வரைந்து முடிக்கும் வரையில் நாம் வாழ்கிறோமோ இல்லையோ?

அந்தக் கோலம் வரைந்து முடிக்கப்பட்டால் அது என்றும் வாழும் கோலம்!

அன்புள்ள,

மு.க.

18-02-2010

3459. கரும்பில் அரசியல்!

உடன்பிறப்பே,

கரும்பு விலை பிரச்சினையில் ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சியும் ஏதோ பள்ளிக் கூடத்துச் சின்னப் பிள்ளைகளைப் போல சண்டை போடுவதாகக் கற்பனை செய்து கொண்டு;

தாங்கள் என்னவோ இதிலெல்லாம் தலையிடாத வகுப்பறை சட்டாம்பிள்ளைகளைப் போலக் கருதிக் கொண்டு;

"அரசியல் கட்சிகளின் கருத்து வேறுபாடுகளைக் கரும்பு உற்பத்தியாளர்களிடம் திணிப்பதா?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டு நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை காரணம் இல்லாமல் எதிர்த்துக் கொண்டிருக்கிற சில பத்திரிகைகள் அந்த அறிக்கையை பெரிய எழுத்துக்களிலே உற்சாகத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் தமிழகத்தில் முன்னாள் ஆட்சியில் அரசு ஆதரவு விலை அளிக்காமல் இருந்தது தவறு என்று சுட்டிக்காட்டுவதோடு - உத்தரப் பிரதேசத்திலும், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் 2,100 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரை விலை கொடுக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விலையைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற கரும்பின் "பிழி திறன்" என்ன என்பதைப் பற்றி அவர்கள் யாரும் விவரிக்கவில்லை.

முதலில் ஒரு விவரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கரும்புக்கு விலை அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற விவசாயிகள் யாரிடம் கேட்கிறார்கள்? அரசாங்கத்திடம் கேட்கிறார்களா? அல்லது கரும்பை வாங்கி அரவை செய்து சர்க்கரையாக விற்பனை செய்கின்ற ஆலை அதிபர்களிடம் கேட்கிறார்களா? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கரும்பு விவசாயிகள் கேட்கிற விலையை அறிவித்துவிட அரசு தயாரானால்கூட, அந்த விலை கொடுக்க தங்களுக்குக் கட்டுப்படி ஆகவில்லை என்று திட்டவட்டமாக கூறுகின்ற சர்க்கரை ஆலைகளின் கூக்குரலுக்கு அரசு என்ன பதில் சொல்ல வேண்டும்? என்ன பதில் சொன்னால் அந்தக் கூக்குரல் அடங்கும் என்பதையோ அல்லது கரும்பு விலை அறிவிப்பு என்பது - அந்த விலையை அரசே கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப் போகிற விலை என்று பொருள் அல்ல; அப்படி கூட்டுறவு ஆலைகளுக்காக அரசே கொடுக்க முன் வந்தால் கூட; அதே போன்ற விலையை தனியார் ஆலை அதிபர்கள் தங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்று கூறினால் அதனால் பாதிக்கப்படப் போவதும் கரும்பு விவசாயிகள்தானே?

கரும்புக்கு நிர்ணயிக்கப்படுகிற விலை யாரால் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதை மறந்து விட்டோ அல்லது மறைத்து விட்டோ மக்கள் மத்தியில் ஒரு சர்ச்சையை உருவாக்குவது கரும்பு விவசாயிகளுக்கு நல்லது அல்ல. சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும் நல்லது அல்ல. உத்தர பிரதேசம், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 2100 ரூபாய் முதல் 2300 ரூபாய் வரை தருகிறார்கள் என்றால் எத்தகைய பிழி திறன் கொண்ட கரும்புக்கு என்பதைக் கூறியிருக்க வேண்டாமா?

"அரசு நிதியில் இருந்து இலவச டி.வி., ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவைகளுக்கு வாரி வழங்கும் இந்த அரசு, லாபத்தில் இயங்கும் சர்க்கரை ஆலைகளை விலையை உயர்த்திக் கொடுக்க ஆணையிடாதது விவசாயிகள் தற்கொலைக்கு வித்திட்டது" என்று ஒரு கற்பனைக் கதையையும் இந்த அறிக்கையிலே அவர்கள் இணைத்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலத்திட்டங்கள்தான் - என்பதை அனைவரும் அறிவர்.

இவைகளையெல்லாம் கிண்டல் செய்கின்ற இந்த அறிக்கையாளர்கள் விவசாயிகளுக்கான 7000 கோடி ரூபாய்க்கான கூட்டுறவு கடன்களை ரத்து செய்து அரசு அறிவித்து நடைமுறைப்படுத்தியதை மட்டும் தங்களுக்கு வசதியாக மறந்தது ஏனோ? தற்போது விவசாயிகளுக்கு அறவே வட்டியில்லாத கூட்டுறவுப் பயிர்கள் கடன் கொடுப்பதையும் நினைவிலே கொள்ளாதது ஆச்சரியம்தான்.

சர்க்கரைத் தொழிலில் உற்பத்தி சில ஆண்டுகளிலே அதிகமாக இருக்கும், சில ஆண்டுகளிலே குறைவாக இருக்கும். அது மாறி மாறி வருகின்ற ஒன்று. சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்து சர்க்கரையின் விலை குறைவாக இருந்து கூட்டுறவு ஆலைகள் நட்டத்தில் இயங்கிய நேரத்திலும் மத்திய அரசு அறிவிக்கின்ற குறைந்தபட்ச விலையைவிட கூடுதலாக மாநில அரசின் ஆதார விலையை அறிவித்து அதற்குத் தேவையான மானியத்தையும் கூட்டுறவு ஆலைகளுக்கும் அரசே வழங்கி விவசாயிகளுக்கு நியாயமான கரும்பு விலை கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளதை இப்போது அறிக்கை விடுபவர்கள் மறந்தது ஏனோ?

2006-2007ஆம் ஆண்டு இறுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ஒட்டு மொத்த குவிந்த நட்டம் 1,270 கோடி ரூபாயாகும். 2007-2008 இறுதியில் இது 1,648 கோடி ரூபாயாக உயர்ந்து - 2008-2009ஆம் ஆண்டு முடிவில் 1,625 கோடி ரூபாயாக உள்ளது. இருப்பினும் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இந்த அரசு அவர்களுக்கு தொடர்ந்து நியாயமான ஆதார விலையை அளித்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மராட்டியம், ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு அதிகமாக மாநில அரசு பரிந்துரை விலை எதையும் நிர்ணயிப்பதில்லை. தனியார் சர்க்கரை ஆலை அதிபர்கள் சர்க்கரை விலை அதிகமாக இருக்கும்போது கரும்புக்கு கூடுதலாக விலை கொடுப்பது போல இருந்தாலும், சர்க்கரையின் விலைகுறையும்போது கரும்புக்கு குறைந்த விலை கொடுப்பது வழக்கம் என்பதை இவர்கள் உணராமல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஆலைகள் கொள்முதல் செய்யும் கரும்புக்கு கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யும் இந்த அரசின் கொள்கையைப் பாராட்டுவதற்குப் பதிலாக இந்தக் கரும்பு விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் மாத்திரம் இந்த உண்மையை அறியாதது போல் அறிக்கை விடுத்திருப்பதுதான் அரசியல் உள் நோக்கம் கொண்டதாகும்.

அன்புள்ள,

மு.க.

19-02-2010

3460. தேசிய ஆதி திராவிடர் ஆணையமும், தி.மு.கழக அரசும்!

உடன்பிறப்பே,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று அய்யன் திருவள்ளுவர் வகுத்த வாக்கிற்கிணங்க, தமிழகத்தில் சாதி, சமய வேறுபாடுகளை அகற்றி சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்னும் உணர்வினை நாட்டிலே மட்டுமின்றி வீட்டிலும் கடைப்பிடித்து வரும் எனது தலைமையிலான கழக அரசு, சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆண்டாண்டுக் காலமாக விழுந்து கிடக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை முன்னேற்றுவதற்காக பல்வேறு சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் தேசிய ஆதி திராவிடர் நல ஆணையத்தின் சார்பில் நேற்றைய தினம் (3-2-2010) சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் ஆதிதிராவிடர்களுக்காக செய்யப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்தும் - உதவிகள் குறித்தும் ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் என்.எம். காம்ப்ளே அவர்களும், உறுப்பினர் மகேந்திரா போத் அவர்களும் அந்தக் கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் சில செய்திகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக அருந்ததியருக்கு உள் ஒதுக்கீடு செய்தது பற்றி தமிழக அரசு தங்களுக்கு தெரிவிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றிய விளக்கத்தை அளித்திட விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர்களுள் மிக மிகப் பின்தங்கிய அருந்ததிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு சிறப்பு சலுகைகள் அவசியம் என்ற அடிப்படையில் - ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஆராய - நீதியரசர் திரு.எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழுவை அமைத்து -

அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மூன்று சதவிகித உள் ஒதுக்கீட்டை அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு தேசிய ஆதிதிராவிட நல ஆணையத்தின் தலைவர் திரு.பூடாசிங் அவர்களுக்கு 25-11-2008 அன்று தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அந்த ஆணையத்தின் துணைத் தலைவர் நேற்று அளித்த பேட்டியில் அவர்களுக்கு தமிழக அரசு தெரிவிக்கவே இல்லை என்று சொல்லியிருக்கிறார். அது மாத்திரமல்ல, நமது தலைமைச் செயலாளர் அவர்கள் தேசிய ஆதி திராவிட நல ஆணையத்திற்கு எழுதிய கடிதத்திற்கு ஆணையத்தின் சார்பில் 19-2-2009 அன்று நமக்கு பதிலும் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதமும் நமது அரசிடம் உள்ளது. எனவே தமிழக அரசு அவர்களுக்கு தெரிவிக்கவில்லை என்று நேற்று பேட்டியில் ஒரு முக்கிய பொறுப்பில் இருக்கும் அந்த ஆணையத்தின் துணைத் தலைவர் யாருடைய பேச்சையோ கேட்டுக் கொண்டு செய்தியாளர்களிடம் கூறியிருப்பது முற்றிலும் தவறான செய்தியாகும்.

அது மாத்திரமல்ல - அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு செய்வது பற்றி தேசிய ஆதி திராவிட நல ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றுதான் விதி இருக்கிறதே தவிர, அவர்களின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் இந்த உள் ஒதுக்கீட்டினை செய்ய வேண்டுமென்பதில் எந்தவிதமான கட்டாயமும் கிடையாது. அதனால்தான் தமிழக அரசின் சார்பில் தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்திற்கு இந்த உள் ஒதுக்கீட்டைப் பற்றி தமிழக அரசின் சார்பில் அறிவித்து விட்டு - அந்த ஆணையத்திடமிருந்து இதற்கு ஒப்புதல் கிடைக்காத நிலையில் - ஒரு நபர் குழுத் தலைவராக இருந்த நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களையும் கலந்தாலோசித்து - அதற்கு மேலும் அருந்ததியர்க்கு இட ஒதுக்கீடு செய்ய கால தாமதம் செய்யக் கூடாது என்ற அக்கறையுடன் அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நான் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும்கூட - இந்தச் சட்ட முன் வடிவினை துணை முதல்வரைக் கொண்டு பேரவையில் முன்மொழியச் செய்து - அந்தச் சட்ட முன்வடிவினை

நிறைவேற்றித்தர வேண்டுமென்று மன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டு நானே மருத்துவமனையிலிருந்து கடிதமே எழுதியனுப்பி அந்தச் சட்ட முன் வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அந்த இட ஒதுக்கீடே அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு மாறானது என்றும், அதை எதிர்த்து நீதி மன்றத்தில் கூட வழக்கு தொடரலாம் என்று தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையத்தின் துணைத் தலைவரே பேட்டியிலே கூறியிருப்பது - அருந்ததிய சமுதாயத்திற்கு செய்த நன்மையைத் தடுக்கின்ற வகையிலே அமைந்துள்ளது மாத்திரமல்ல, அந்தச் சமுதாயத்திற்கே தீமையை விளைவிக்கக் கூடியதுமாகும். எனவே அது மிகவும் வருத்தத்தைத் தரக்கூடிய ஒன்றாகும்.

மேலும் திரு. காம்ப்ளே அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே வழக்கத்திற்கு மாறாக - இந்தக் கூட்டத்திலே விவாதிக்கப்படுவதற்காக எடுத்துக்கொண்ட புள்ளி விவரங் களைத் தவிர - வேறு சில புள்ளி விவரங்கள் எங்கே என்று கேட்டு - அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அந்த விவரங்கள் எல்லாம் தரப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆய்வுக்கு என்னென்ன விவரங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று முன்கூட்டியே அனுப்பப்பட்ட கேள்விப்பட்டியலுக்கான அனைத்து விவரங்களும் புத்தகமாகவே தமிழக அரசின் ஆதி திராவிட நலத்துறை சார்பில் தயாரிக்கப்பட்டு அந்தக் கூட்டத்தில் தரப்பட்டுள்ளன. மேலும் அவர் பேட்டியிலே கூறும் போது "தமிழகத்தில் சாக்கடைகளில் மனிதர்கள் இறங்குவதில்லை என்று சொல்லப்பட்டது, ஆனால் அது தொடர்பான புகைப்படங்கள் எங்களிடம் உள்ளன. இதுதான் எங்களை உலுக்குவதாக உள்ளது" என்று சொல்லியிருக்கிறார். தமிழகத்தில்தான் மாநகராட்சி களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் சாக்கடைகளில் மனிதர்கள் இறங்கக் கூடாது என்ற கொள்கையை அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்திட தேவையான நிதி ஒதுக் கீட்டையும் செய்து, அதற்கான இயந்திரங்களையும் வாங்கி வழங்கியுள்ளதை தமிழகத்திலே உள்ள அனைவரும் அறிவார்கள். ஆனால் எப்போதோ எடுத்த புகைப்படத்தை வைத்துக் கொண்டு, தன்னிடம் புகைப்படம் இருப்பதாக ஒரு ஆணையத்தின் துணைத் தலைவரே ஒரு மாநில அரசைப் பற்றி இவ்வாறு குறை

கூறியிருப்பது சரிதானா என்பதை தமிழ்நாட்டிலே உள்ள ஆதி திராவிட மக்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் அவர் தனது பேட்டியில் - "நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் தண்டனை தரப்படும் விகிதம் தமிழகத்தில் குறைவாகவே உள்ளது. இதற்கு அரசு வக்கீல்கள் திறமையின்றி இருப்பது காரணமாக இருக்கக் கூடும். இல்லையெனில் நீதிமன்றங்களில் இந்த வழக்குகளுக்கு முக்கியத்துவம் தரப்படாமல் இருப்பதும் காரணமாக இருக்கலாம்" என்று சொல்லியிருப்பது - அரசு வழக்கறிஞர்களை வேண்டுமென்றே குறை கூறுவதும், நீதிமன்றங்களைக் குறை கூறுவதாகவும் உள்ளது. கூட்டம் நடைபெற்ற போதே, இந்தக் கேள்விகளுக்கு சரியான விளக்கங்களை தலைமைச் செயலாளரும், நிதித்துறை செயலாளரும், உள்துறை செயலாளரும், மற்ற அதிகாரிகளும் அளித்த பிறகும்கூட, அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தேவையில்லாமல் குறை கூறியிருக்கிறார்.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது பற்றி கேட்டதாகவும், அதற்கு அத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதாகப் பதில் கூறப்பட்டதாக திரு. காம்ப்ளே குறை கூறியிருக்கிறார். ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டம் மத்திய அரசின் திட்டங்களில் ஒன்றாகும். மாநில அரசுக்கும் அதிலே பங்கு உண்டு. அந்தத் திட்டத்தைப் பற்றி இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு தமிழக அரசின் சார்பில் வைக்கப்பட்ட புள்ளி விவரத்தில் - 2006-2007இல் 36,556 (60 சதவிகிதம்) வீடுகளும் - 2007-2008இல் 47,256 (56.32 சதவிகிதம்) வீடுகளும், 2008-2009இல் 45,728 (53 சதவிகிதம்) வீடுகளும் கட்டப்பட்டுள்ளன என்று பக்கம் 39இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பிறகும் எதையும் சரியாகச் சொல்லவில்லை என்று பேட்டியிலே கூறியிருக்கிறார்.

திரு. காம்ப்ளே அவர்கள் இறுதியாக அனைத்து மாநிலங்களையும் குறை கூறும் வண்ணம் எந்த மாநிலமுமே எங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி இல்லை என்று சொல்லியிருப்பது குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும், மத்திய அரசையும் மற்ற மாநில அரசுகளையும் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் குற்றம் சாட்டுவதாகவும் உள்ளது. ஆதி திராவிட மக்கள் நலனில் கழக அரசு எந்த அளவிற்கு ஈடுபாட்டோடு ஆட்சியிலே இருந்த காலங்களில்

எல்லாம் நன்மைகளை அளித்திருக்கிறது என்பதற்கான விவரங்களையும் சுருக்கமாக அளித்திட விரும்புகிறேன்.

1969 வரை ஆதிதிராவிடர் நலத்துறையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்திருந்தது. 2.5.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை எனப் புதிய துறையை தனியே உருவாக்கி - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - முழுவதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காகவே செயல்படும் நிலையை உருவாக்கியது கழக அரசுதான். அதைப்போலவே, 2000ஆம் ஆண்டில் பழங்குடியினருக்குத் தனித்துறையை உருவாக்கியதும் கழக அரசுதான்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இருந்த 16 சதவிகித இட ஒதுக்கீட்டினை 1971ஆம் ஆண்டில் 18 விழுக்காடாக உயர்த்தியது கழக அரசு. பின்னர் 1990ல் பொது ஒதுக்கீட்டிலிருந்து ஒரு விழுக்காடு எடுத்து, பழங்குடியினருக்கு ஒரு விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியதுடன், ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு முழுமையாகக் கிடைக்க வழிகை செய்ததும் கழக அரசுதான்.

சாதி சமயப் பிணக்குகளை அகற்றி, அனைத்து சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்றுகூடி சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையில், இந்திய சுதந்திரப் பொன்விழாவையொட்டி 1997ஆம் ஆண்டில் கழக அரசு உருவாக்கிய புதுமையான, புரட்சிகரமானத் திட்டம் 'பெரியார் நினைவுசமத்துவபுரம்' திட்டம். இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு சமத்துவபுரக் குடியிருப்பிலும் 100 வீடுகள் கட்டப்பட்டு; அவற்றுள் 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 25 வீடுகள் மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 10 வீடுகள் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழகத்தில் இதுவரை 172 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டு, அதில் அனைத்துப் பிரிவினரும் நல்லிணக்க உணர்வோடு வாழ்ந்து வருகின்றனர். இந்த மாதிரியான புரட்சிகரத் திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளாக மாநில ஆண்டு திட்டத்திலிருந்து 19

சதவிகிதத்திற்கு அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிதி செல்லுமாறு கண்காணித்து வருகிறது.

ஆண்டாண்டு காலமாக மண் குடிசைகளில் வாழ்ந்து வரும் ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் சீரிய முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் ஆதிதிராவிட்ர் இலவச வீட்டு வசதிக் கழகம் 15.2.1974 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம்தான் பின்னர் "இந்திரா வீட்டுவசதித் திட்டம்" என மத்திய அரசால் ஏற்கப்பட்டு, நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

சாதி வேறுபாடுகளை ஒழித்திட "அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் ணதிருமண உதவித் திட்டம்" எனும் திட்டம் கழக அரசில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மண மக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் நிதியுதவி 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

அம்பேத்கரைப் போற்றுவதில் இந்தியாவிலேயே முன்னணியில் இருப்பது கழக அரசுதான். அண்ணல் அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக மாநில அரசின் திட்டப் பணிகளில் பிரித்தளிக்கக் கூடியவற்றில் - ஆதி திராவிடர் துணைக் கூறுத் திட்டத்திற்கென தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005-2006ஆம் ஆண்டில் ரூபாய் 567 கோடியாக இருந்த இந்த ஒதுக்கீடு - 2009-2010ஆம் ஆண்டு நிதியாண்டில் நான்கு மடங்காக அதாவது 2,615 கோடியாக உயர்த்தப்பட்டது என்பதையெல்லாம் மறைத்து விட்டு - தமிழக அரசு ஆதிதிராவிடர் நலனில் அக்கறை யில்லாத அரசு என்பதைப் போல ஒரு ஆணை யத்தின் துணைத் தலைவர் சொல்லியிருப்பதற் காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு - இது பற்றிய விவரத்தை மத்திய அரசின் கவனத்திற்கு, குறிப்பாக பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் இருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-02-2010

3461. கலையுலக விழாவும்; சிலர் கண்ட கனவும்!

உடன்பிறப்பே,

தீராத பிரச்சினையாக திரையுலகில் இருந்து வரும் பல பிரச்சினைகளுக்கு அடித்தளமாக இருப்பவை அசூயை - ஏமாற்றம் - அகந்தை எனும் தீமைகளாகும். திரையுலகத்தினர் பொதுவாக கலைஞர்கள், தொழிலாளர்கள் என் மீது - என் தலைமையில் உள்ள அரசின் மீது நம்பிக்கை கொண்டு நன்றி காட்டும் உணர்வுடன் விழாக்கள் நடத்துவதுண்டு. அரசு அவையில் நான் அமராமல் இருந்த காலத்திலே கூட என் கலைவாழ்வுக்கு பொன் விழா - பவள விழா என்று விழாக்கள் எடுத்து எனக்கு ஊக்கமளித்திருக்கிறார்கள்.

கலை உலகத்தில் ஒரு காலும், அரசியலில் ஒரு காலும் என்று என் இரண்டு கால்களையுமே சறுக்கல் வராமல் அழுத்தமாகப் பதிய வைத்து, அதே வேளையில் கலையுலகில் நலிந்தோர்க்கு நல நிதி வழங்கியும் - அரசு பொறுப்பேற்றிருந்த காலங்களில் கலையுலகத் தினரின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியும் - திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியே இல்லாத நிலைமையை உருவாக்கியும் - படப்பிடிப்பு கட்டணச் சலுகை போன்று பல்வேறு விதமாக நன்மைகளை அவர்கள் மகிழத்தக்க வண்ணம் வழங்கியும் - ''திரைப்படத் துறையினர் நல வாரியம்'' அமைத்தும் - அவர்களில் ஒருவனாக நான் விளங்கிக் கொண்டிருப்பதால் - தான் பெற்ற குழந்தைகளில் ஒன்றுக்கு விழா நடத்துவது போலவும் - தன்னைக் காத்திடும் கரங்களுக்கு கணையாழி அணிவிப்பது போலவும் - நான் எங்கிருந்தாலும் அதாவது அரசுப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒரு கலைஞன் என்ற முறையில் இரண்டையும் ஒன்றாகக் கருதி கலையுலக நண்பர்கள் எனக்கு எத்தனையோ விழாக்களை எடுத்துள்ளனர்.

கடற்கரையில் 14-4-1996 அன்று எனக்கு கலையுலகப் பொன் விழாவினை கோலாகலமாக தம்பி விஜயகாந்த் அவர்களும் கலை யுலகச் செல்வர்களும், தயாரிப்பாளர்களும் இணைந்து நடத்திய விழாவும் - அளித்த பரிசும் - அதன் பின்னர் நினைத்தாலே இன்னமும் என் நெஞ்சை நெகிழவைக்கும் இனிய நண்பர் சிவாஜி தலைமையில் எனது ஐம்பதாண்டு கால கலையுலகப் பணியை முன்னிட்டும் - 75வது வயது தொடக்கத்தை முன்னிட்டும் முறையே பொன்விழாவும் - பவள விழாவும் 27-9-1998 அன்று சென்னை நேரு அரங்கத்தில் நடந்ததும் - வழங்கிய பரிசுகளும் - கண்ணீரோடு கலந்த வாழ்த்துக்களும் மறக்கக் கூடியதா?

அந்த விழாவிலே தலைமையுரை ஆற்றிய போது - நடிகர் திலகம் அவர்கள், "தமிழே! உன் தலைமகனை - என் அருமை நண்பனை - இந்த நாட்டின் சிறந்த அறிவாளியை - உயர்ந்த அரசியல்வாதியை - வாழவை. தமிழினமே, கலைஞரை வாழ்த்துங்கள். உங்களோடு நானும் சேர்ந்து கொள்கிறேன். தமிழ்த் திரையுலகம் கலைஞர் அவர்களுக்கு - என் உயிர் நண்பனுக்கு - ஒரு சிறந்த விழா எடுத்து, எவ்வளவோ பெரியவர்கள் இருந்தும் - இதற்கு என்னைத் தலைமை தாங்கப் பணித்தார்களே, இதை விட அவர்கள் எனக்கு மாபெரும் சிறப்பினைச் செய்ய முடியாது. கோடி கோடியாக எனக்குக் கொட்டிக் கொடுத்தாலும் இதைவிடச் சிறப்பு எனக்குக் கிடைக்காது. எப்போது கலையுலகம் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் கலை விழா எடுப்பது? நான் எப்போது அதற்குத் தலைமை தாங்குவது? அப்படி ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கலாம் - எனக்குக் கிடைக்கிறதோ, இல்லையோ? இந்த விழாவிற்கு கலைஞர் அவர்கள் சிவாஜி தலைமை தாங்கலாம் என்று பெருமையோடு ஒரு நண்பனுக்கு வாய்ப்பு கொடுத்தாரே, அதை நான் மனமார வரவேற்கிறேன்" என்றுதான் தன் பேச்சினைத் தொடங்கினார். கலைஞனின் பேச்சு பொய்க்காது என்பார்கள். அவர்கள் அன்று ஆற்றிய உரையில் கூறியவாறு அந்த விழாவிற்குப் பிறகு எனக்கு பல விழாக்கள் நடைபெற்றபோதிலும், அவர் அன்று கூறியவாறே அப்படி ஒரு சந்தர்ப்பம் தனக்கு கிடைக்கிறதோ இல்லையோ என்று சொன்னபடி - அந்த மாபெரும் கலைஞன் மறைந்தே போய்விட்டார்.

பின்னர், 23-9-2006 அன்று திரையுலகத்தினரும் தயாரிப்பாளர் சங்கமும் இணைந்து வரி விலக்கு அளித்தமைக்காக நடத்திய பாராட்டு விழாவும் - 9-10-2009 அன்று அகில இந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சார்பில் "உலகக் கலைப் படைப்பாளி" என்ற விருதினை வழங்குவதற்காக நடத்திய விழாவும் - இன்னமும் என் இல்லத்திலே மட்டுமல்ல; உள்ளத்திலும் மறையாமல் இருக்கின்றன.

நான் மறைந்தாலும் மறைய முடியாத அந்த அன்புரைகளை - இனிய வாழ்த்துக்களை - அந்த விழாக்கள் நடைபெற்ற மண்டபங்கள் எப்போதும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்! இப்போது எனக்கு கலையுலகத்தினர் எடுத்து நன்றி தெரிவிக்கும் விழா கூட - என்னை விளம்பரப்படுத்துவதற்காகவோ - அல்லது யாரும் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவோ எடுக்கப்பட்ட விழா அல்ல. "நன்றி மறப்பது நன்றன்று" எனும் வள்ளுவரின் குறள் மொழிப்படி நடந்து கொள்வதற்காக நமது கலைஞர்கள், திரையுலகத் தொழிலாளர்கள் இணைந்து நடத்திய விழாதான்!

"எல்லா முதல் அமைச்சர்களுக்கும் இப்படித்தான் விழா எடுப்பார்கள்" என்று வக்கணையோடு சொல்லி எரிச்சலைத் தணித்துக் கொள்வோர் சிலர் உண்டு. அந்த வக்கணையாக இல்லாமல் இந்த விழா எல்லா முதல் அமைச்சர்களுக்கும் எடுக்கின்ற விழா வரிசையிலே ஒன்றல்ல - அதாவது பத்தோடு பதினொன்று அல்ல! திரையுலகத்தினருக்கு குறிப்பாக கலைப்பணியாற்றும் நண்பர்களுக்கு - தோழர்களுக்கு அவர் தம் குடும்பங்கள் குறைவின்றி வாழ்வதற்கு - அவர்கள் விடுத்த கோரிக்கையையேற்று 90 ஏக்கர் அரசு நிலத்தை முறைப்படி அவர்களுக்கு வழங்கியதற்காக - அவர்கள் காட்டிய நன்றிப் பெருக்கு அந்த விழா!

சென்னை மாநகரத்தில் ஒரு பகுதியில் 90 ஏக்கர் நிலம் வழங்குவது என்பது எவ்வளவு பெரிய காரியம் என்பதை உணர்ந்து - மகிழ்ந்து - உணர்ச்சியுள்ளவர்கள் அதனைக் காட்டிக் கொள்ள எடுத்த விழாதான் அந்த நன்றி தெரிவிக்கும் விழா.

அழகான குழந்தையை மேலும் அலங்கரித்து பள்ளிக்கு அனுப்பும் தாய் - அதன் கன்னத்தில் ஒரு சிறிய கருப்புப் பொட்டு வைத்து அனுப்புவதைப் பார்க்கிறோமே - அதைப் போன்றதொரு பொட்டு - அந்த விழாவில் வைக்கப்பட்டதைப் பெரிதுபடுத்தி - அந்தப் பொட்டின் வண்ணத்தை முகம் முழுதும் பூசிக்கொள்ளும் புரியாத குழந்தையைப் போல ஒரு நிகழ்ச்சி அமைந்து விட்டது உண்மைதான்.

அகில இந்தியப் புகழ் வாய்ந்த கலைஞர் பெருந்தகை அமிதாபச்சன் - நமது சூப்பர் ஸ்டார் தம்பி ரஜினிகாந்த் - கலைஞானி தம்பி கமலஹாசன் - இவர்கள் எல்லாம் வாழ்த்துரைத்து அள்ளித் தெளித்த அன்பு மலர்களுக்கிடையே அஜித் எனும் தும்பை மலரும் என் மேல் விழுந்து - அது மாசற்ற மலர் எனினும் - அந்த மன்றத்தில் எனக்கு நடத்திய விழாவிற்கு எதிராக விழுந்த மலரோ என்ற ஐயப்பாட்டை எழுப்பி - அதைத் தொடர்ந்து எழுந்த கையொலிகள், பேச்சொலிகள் இவற்றையெல்லாம் "இதுதான் சமயம்" என்று சிலர் எனக்கு நடந்த விழாவினை திசை திருப்ப முயன்று - "இருக்கவே இருக்கின்றனவே சில பத்திரிகைகள் - அவைகள் அதனைப் பூதாகரமாக உருவாக்கிட முனைந்த போது - அதனை மேடையேற விடாமல் ஒத்திகையிலேயே ஒரு வழி செய்து, முற்றுப் புள்ளி வைத்திடும் முயற்சியாக - தம்பி அஜித் என்னைச் சந்தித்து விளக்கமளித்தார். "நான் குறிப்பிட்டது இந்த விழா பற்றியல்ல - இதற்கு முன்பு நடைபெற்ற சில நிகழ்வுகளில் கலையுலகில் ஏற்பட்ட கசப்பு பற்றிதான் குறிப்பிட்டதாக" அவர் விளக்கம் அளித்ததும் -

இதனைப் பெரிதுபடுத்தக் கூடாது என்று பெருந்தன்மை பூண்டு தம்பி ரஜினி போன்றவர்கள் அமைதிகாத்ததும் -

திரையுலகத் தொழிலாளர்களும், கலைஞர்களும் அதற்கு ஒத்துழைப்பு நல்கியதும் -

பெரிதாக வெடிக்கப் போகிறது என்று எதிர் பார்த்த வாணம் - புஸ்வாணமாகி விட்ட கதையாயிற்று! கலாம் விளையும் கலையுலகத்தில் - அதற்கு இந்த விழாவை ஒரு காரணம் ஆக்கலாம் என்று கருதியோர் தாம் கண்ட கனவு கலைந்ததே என்று கை பிசைந்து நிற்கின்றனர்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தின் நோக்கத்தையும் - இதில் இடம் பெற்றுள்ள கருத்துக்களையும் விழாவிலே கலந்து கொண்டோர் மாத்திரமல்ல; விழாவினை முன் நின்று நடத்திய தம்பி ராமநாராயணன், தம்பி குகநாதன், தம்பிகள் சரத்குமார், ராதாரவி ஆகியோரும், அவர்களோடு உடனிருந்து உழைத்தவர்களும் உணர்ந்து இனி எவர் ஒருவரும் கலையுலகில் சிறு கலாம் விளைவித்திடவும் முடியாது என்று கட்டுப்பாடு காப்பார்களேயானால் - அது அவர்கள் நடத்திய விழா தந்த மகிழ்ச்சியை விட பெரு மகிழ்ச்சியாக எனக்கு அமையும் என்பதை அவர்களே அறிவார்கள்!

அன்புள்ள,

மு.க.

26-2-2010

3462. நம் பயணத்திற்குப் பயன்பட!

உடன்பிறப்பே,

விஷக்கோப்பை அளித்து தன் உயிரை மொண்டு விடப் போகிறார்கள் என்பதை உணர்ந்திருந்தும் கிரேக்கத்து ஞானக் கிழவன் சாக்ரடீஸ்; தான் கொண்ட கொள்கையைக் கை விடாமல் - இலட்சியத்திலிருந்து பின்னடையாமல் உலகிற்கு உரைத்திட வேண்டியதை உரைத்தே தீருவேன் என்று இறுதி வரை பிடிவாதமாக இருந்து - தன் மனைவி எக்சேந்திபியிடம் விடை பெற்றுக் கொண்டு மரணத்தைத் தழுவும் நேரத்திலும் - தன் நண்பன் கிரிட்டோவை அருகில் அழைத்து - பக்கத்து வீட்டுக்காரனிடம் கடனாக வாங்கியிருந்த கோழியை திரும்பக் கொடுத்து விடு என்று நாணயத்தையும், நேர்மையையும் உணர்த்தி - நீதிமன்றம் அளித்த நஞ்சினை அருந்தி உயிர் விடுத்து - இந்த மன்பதையின் வரலாற்றில் மணி விளக்காகத் திகழ்கிறான்.

நேற்றையதினம் வாழ்த்துரைத்து வணங்கி மகிழ்ந்தோமே, வரலாற்று நாயகராம் - இஸ்லாமிய மக்களின் இல்லம் எல்லாம் - அவர்தம் உள்ளம் எல்லாம் என்றென்றும் நிறைந்து நிற்கும் பெருமான் நபிகள் நாயகம் அவர்கள் - அவரது கருத்துக்களை உடனடியாக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று மன நிறைவுகொள்ள முடிந்ததா என்றால் இல்லை, இல்லை. அவர் கொண்ட கருத்துகளை எத்துணை பொறுமையுடன், எதிர் நீச்சல் போட்டு மக்கள் மனதில் பதிய வைக்க வேண்டியிருந்தது என்பதை இந்த உலகமே அறியும்.

அவர் பொறுமை காத்ததற்கு உற்ற பலன் உடனடியாக கிடைத்தது என்பதற்கு இதோ ஒரு நிகழ்ச்சி சான்று.

பெருமானார் அவர்கள் நாள் தோறும் நடைப் பயிற்சிக்காகவும் - குளிப்பதற்காகவும் - சில தெருக்களைக் கடந்து செல்வது வழக்கம். அப்படிச் செல்லும்போதெல்லாம், அவர் புகழ் கண்டு பொறாமையால் மனம் புழுங்கியிருந்த ஒரு மங்கை

- மாடியிலிருந்தவாறு குப்பைக் கூடையை அவர் தலையில் கொட்டுவது வழக்கம். அப்படி கொட்டப்பட்ட குப்பையைத் தட்டிவிட்டு, அவர் குளத்திலே மூழ்கி அவர் உடலைக் கழுவிக்கொள்வார்.

அந்தப் பெண்மணி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர் என்பதாலும் - நபிகள் நாயகத்தின் மீது அளவற்ற வெறுப்பு கொண்டவர் என்பதாலும் - அந்தக் குப்பை கொட்டும் திருவிழா தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்தத் தெருவில் அந்த வீட்டுக்கு அருகிலே நடந்து போன போது நபிகள் நாயகம் எதிர்பார்த்தவாறு, அவர் தலையில் குப்பை கொட்டப்படவில்லை. ஆச்சரியத்தில் மூழ்கிய அண்ணல் நபிகள் அவர்கள் அடுத்த வீட்டுக்காரர்களிடம், அந்த அம்மையாருக்கு என்ன நேர்ந்தது - ஏன் குப்பை கொட்டவில்லை - என்று வினவினாராம். அதற்கு; அந்தப் பெண்மணிக்கு உடல் நலம் இல்லை - என்ற செய்தி கேள்விப்பட்டதும் முகமது நபி அவர்கள் விரைந்து அந்த வீட்டின் மாடிக்குச் சென்று அந்தப் பெண்மணியிடம் உடல் நலம் விசாரித்தாராம். அவர் விரைவில் உடல் நலம் பெறவும் உதவினாராம்.

நாள்தோறும் நபிகளை வெறுத்து குப்பைக் கொட்டிக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியின் மனம் திருந்தியதாம். இஸ்லாத்தின் பெருந்தன்மையை - அதைக் கடைப்பிடிக்கும் நபிகள் நாயகத்தை வியந்து போற்றிய அந்தப் பெண்மணி தன் செயலுக்கு வருந்தி, தன்னை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டார் என்று ஒரு சம்பவம் உண்டு.

இப்படி எதிர்ப்புகளை - ஏளனங்களை - கிண்டல் கேலிகளை - ஏன்; குப்பை கொட்டும் கோணங்கிச் செயல்களைக் கூட; அந்தக் குணாளர் பொறுத்துக் கொண்ட காரணத்தால்தான் இன்று குவலயம் புகழ அவருடைய மார்க்கம் கொடிகட்டிப் பறக்கிறது.

"சிலுவையைத் தோளில் தூக்கு" என்று சிம்மாசனம் ஏறிகள் சீற்றம் கொண்ட நேரத்திலும் அந்தச் சிந்தனைச் செல்வர் அப்படியே அதனைத் தூக்கிச் சுமந்தார்.

"நீ தூக்கி வந்த சிலுவையிலேயே நீ அறையப் படுவாய்" என்று ஆணை பிறந்த வேளையிலும் - கையிலும், காலிலும், கழுத்திலும், நெற்றியிலும் ஆணிகள் அடிக்கப்பட்டு குருதி

குளமெனப் பெருகியபோதும் - உறுதிதளராமல் ஒரே இலட்சியத்தோடு உயிர் விடத் தயங்காத உத்தமர்தானே இன்று உலகெங்கும் பரவியிருக்கின்ற கிறித்துவத்தின் தலைமகனாக - அருளாக - அன்பாகப் போற்றப்படுகிறார். இந்தத் தண்டனை தனக்குத் தரப்படும் என்பதை அறிந்தும், தண்டனிட விரும்பாமல், கொண்ட கொள்கையில் - கோபுர உச்சியாக - உச்சியின் கலசமாக உயர்ந்து நின்றவரன்றோ ஏசுபிரான்!

மத பேதம் ஒழித்து என் மக்களை ஒன்று படுத்துவேன் - சாதி மத பேதம் இல்லா சன்மார்க்க நிலை காண்பேன் - என்று சபதம் ஒலித்து - நவகாளிகளுக்கு நடந்து சென்று - உலகம் போற்றும் தன் உயிரை ஒரு உலுத்தனின் மத வெறிக்கும் - அவன் வீசிய மூன்று குண்டுகளுக்கும் இரையாகத் தந்தாரே; அவர் என்ன; தென்னாப்பிரிக்காவில் வக்கீல் பதவியைத் துறந்து விட்டு இந்திய தேசத்தை ஆளுவதற்காக வந்தவரா? இல்லை: இந்த நாடு அடிமைத் தளையிலிருந்து மீளுவதற்காகப் பாடுபட்டவர். அவருக்குக் கிடைத்த பரிசு தானே அந்த மூன்று குண்டுகள்?

இலட்சியங்களுக்கும், கொள்கை உறுதிக்கும் இத்தகைய பரிசுகள்தான் கிடைக்கும் என்றால் அதனைத் தாங்கிக் கொள்வோர் - அந்தப் பரிசுகளை வாங்கிக் கொள்வோர் - தம்மை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கட்டும் இந்த நல் உலகம் என்று எண்ணித்தான் எதிர்ப்புகளை அலட்சியமாகக் கருதுவர்.

உடன்பிறப்பே, நெஞ்சுருக்கும் இந்த நிகழ்ச்சிகளை நான் ஏன் நினைவூட்டுகிறேன், தெரிகிறதா? நம் பயணத்திற்கு வலிவான துணைகளாக இந்நிகழ்ச்சிகள் இருக்கும் - ஆகவே அஞ்சாது அடியெடுத்து வைப்போம் - கண் துஞ்சாது கடமையாற்றிடுவோம்!

அன்புள்ள,

மு.க.

28-2-2010

3463. மாற்றுத் திறனாளிகளும் - மானிடரே!

உடன்பிறப்பே,

திரைப்படத் துறையினர் 6-2-2010 அன்று நடத்திய நன்றிப் பாராட்டு விழாவில் - நடன இயக்குனரும் நடிகருமான தம்பி லாரன்ஸ் ராகவேந்திரா இருபதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அழைத்து வந்து மேடையிலே நிறுத்தி - அவர்களுக்கெல்லாம் "இளஞ்சிறார் இதயப் பாதுகாப்புத் திட்ட"த்தின் மூலமாக கழக அரசால் அளிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை உதவிகளையெடுத்து விளக்கியதையும் - அந்தக் குழந்தைகளே சிலர் தங்களின் நிலைமைகளை நெஞ்சு நெகிழ எடுத்துரைத்ததைக் கண்டது முதல் - அதன் தொடர்ச்சியாக; வழக்கம்போல் இன்று காலையில் "கலைஞர் தொலைக்காட்சி"யில் தம்பி சுப.வீரபாண்டியனின் "ஒரு சொல் கேளீர்" எனும் சொற்சித்திரத்தைக் காணவும் கேட்கவுமான வாய்ப்பைப் பெற்றேன். உடல் ஊனமுற்றோருக்காக ஏதோ சொல்லப் போகிறார் என அறிந்தவுடன், முழுப் பேச்சையும் கேட்கலாம் என்று அமர்ந்திருந்தேன்.

உடல் ஊனமுற்றோருக்கான உதவிகள் செய்வதற்கு தொண்டு நிறுவனங்கள் பல முன்வந்துள்ள நிலையிலும் - அரசினரும் அந்தப் பணியினை மேற்கொண்டுள்ள நிலையிலும் தம்பி சுப. வீரபாண்டியனின் இந்தக் கருத்துக்கோவை என்னை மிகவும் கவர்ந்தது.

"மாற்றுத் திறன் உடையவர்களுக்கான பணிகள் தற்போது உரிமை அடிப்படையில் (Right Based) செயல்பட்டு வருகின்றது. இனியும் அவர்களுக்கு இலவச சைக்கிள் கொடுப்பது, தொண்டு இல்லத்தில் வைத்துப் பராமரிப்பது போன்ற பணிகளை மட்டுமே அரசோ, அரசு சாரா நிறுவனங்களோ செய்து கொண்டிருக்கக்கூடாது. அதையும் தாண்டி அவர்களின் உரிமைகளை நிலை நாட்டிட அனைத்துத் துறைகளிலும் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்யவும், அதற்கான வாய்ப்புகளை

உருவாக்கித் தருவதற்கும் பாடுபட வேண்டும். அவர்கள் அரசிடம் இருந்து எந்த இலவசங்களையும் எதிர்பார்க்க வில்லை. அவர்களுக்கென இயற்றப்பட்டிருக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தச் சட்டத்தின் ஆட்சியின்படியே அவர்களது உரிமை களை வென்றெடுக்க வேண்டும் என்று கோருகிறார்கள்"

என்று அவர் சொல்லி முடித்ததும் அவர் அந்தப் பேச்சில் குறிப்பிட்ட United Nations Convention Rights for Person with Disabilities Act, 2007இன் விவரங்களை வாங்கிப் படித்துப் பார்த்தேன். ஆம், அவ்வாறு ஒரு சட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டபோது, அந்தச் சட்டத்தையேற்று கையெழுத்திட்ட நாடுகளில் ஏழாவது நாடாக இந்தியா இடம் பெற்றிருப்பதும் தெளிவாயிற்று.

அந்தச் சட்டத்தின் தொடர்பாக காட்டப்பட்டுள்ள ஊனமுற்றோர், எண்ணிக்கை, இந்திய நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இரண்டு விழுக்காடு என்றும் - தமிழ்நாட்டில் அவர்களுடைய எண்ணிக்கை 18 இலட்சம் பேர் என்றும் அறிந்து கொள்ள முடிந்தது.

உடல் ஊனமுற்றோர் என்ற பட்டியலில் மனித சமுதாயத்தில் காது கேளாதவராய் - கண் தெரியாதவராய் - வாய் பேச முடியாத வர்களாய் - கைகால்களைப் பயன்படுத்த இயலாதவர்களாய் - மன நோயாளிகளாய் உள்ள அனைவருமே இடம் பெறுகிறார்கள். இவர்களை, குறிப்பிட்ட அவயவங்களைப் பயன்படுத்த முடியாதவர்கள் என்று ஒதுக்கி விடாமல் - அல்லது ஒரு தனிப் பட்டியலில் சேர்த்து விடாமல், இழித்துரைப்பது போல் இன்று தோன்றுகிற குருடர், செவிடர், நொண்டி, ஊனம், முடம் என்றெல்லாம் அவர்களை அழைக்காமல் - பொதுவாக "ஊனமுற்றோர்" என்பதற்குப் பதிலாக ஒரு அவயவத்தின் செயல்பாட்டுக் குறையால் அவர்களுடைய மற்றொரு திறன் மேலும் ஒரு பங்கு சிறப்புறுகிறது என்ற அடிப்படையில் - அவர்களை "மாற்றுத் திறனாளிகள்" என்று அழைக்கின்ற முறை சில ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 2007 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் சபையிலே விவாதிக்கப்பட்டு அதன் தொடர்பாகத்தான் அந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இப்போதும் அந்த மக்களுடைய கோரிக்கைகளாக பின்வருவன இருக்கின்றன. அவர்கள் எந்தக் கோரிக்கைகளையும் பெறுவதற்கு யாசகங்கள் கேட்கும் பாணியில் கை நீட்டவில்லை; கை நீட்டக் கூடாது என்பதே எனது கருத்துமாகும்.

1. மாற்றுத் திறனுடையோருக்கான ஐக்கிய நாடுகள் சாசனத்தை இந்தியாவில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு அளிப்பதுடன் அனைத்துத் துறையின் வளங்களிலும்

3. சதவிகிதத்தை மாற்றுத் திறன் உடையோரின் வளர்ச்சிக்காக செலவிட வேண்டும்.

3. மாற்றுத் திறன் உடையோரின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டிட அவர்களுக்கு மாநில சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் (மக்களவை, மாநிலங்களவை) 3 சதவிகித இட ஒதுக்கீடு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

4. மாநிலத்திலும், மத்திய அரசிலும் மாற்றுத் திறனுடையோருக்கான அமைச்சகம் உருவாக்கப்படவேண்டும். தனியாக அமைச்சரும் வேண்டும். (தமிழ்நாட்டில் மதிய உணவு திட்டத்துடன் இணைத்து ஊனமுற்றோர் நல்வாழ்வு என்பதனை மாற்றி மாற்றுத்திறன் உடையோர்களுக்கென தனியான அமைச்சகம் அமைக்க வேண்டும்).

5. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் குறைந்து விட்ட நிலையில் தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவ மாணவியருக்கு உதவித் தொகை வழங்கப்பட வேண்டும்.

6. உடனடியாக நாடெங்கிலும் வீடு வீடாகச் சென்று மாற்றுத் திறன் உடையோரின் கணக்கெடுப்பை நிகழ்த்த வேண்டும். இந்தத்

தகவல்களை முறையாக கணினி மயப்படுத்தி பாதுகாக்கவேண்டும்.

7. மாற்றுத் திறன் உடையோருக்கு வழங்கப் பட்டிருக்கும் தேசிய அடையாள அட்டை முழுமையான ஏற்பு ஆவணமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு உதவியைப் பெறவும், பணியைப் பெறவும், உதவும் உபகரணங்களைப் பெறவும் தனித் தனியான மருத்துவச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், ஆகியவற்றைக் கேட்கக் கூடாது.

8. பதினைந்து இலக்க மின்னணு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.இதன்மூலமாகவே அனைத்து சேவைகளையும், நலத் திட்டங்களையும் அளிக்க வேண்டும்.

9. மாற்றுத்திறன் உடையோரின் குடும்ப வருமானத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு அரசின் உதவிகள், நலத்திட்டங்கள் மறுக்கப்படுகின்றன. பதினெட்டு வயது பூர்த்தியான மாற்றுத்திறன் உடையோரின் குடும்ப வருமானத்தை கணக்கில் எடுக்காமல் அவரது தனி நபர் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசின் உதவிகள் வழங்கப்பட வேண்டும். குடும்ப வருமானத்தைக் காரணமாகக் காட்டி தற்பொழுது பலருக்கும் எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை.

10. Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act 1995 ஊனமுற்றோருக்கான சட்டம் 1995 (சம வாய்ப்பு, பங்கேற்பு)ன்படி பதினைந்து ஆண்டுகளுக்கான மொத்தமான வேலை வாய்ப்பு இட ஒதுக்கீட்டை உடனடியாக மத்திய மாநில அரசுகள் வழங்கிட வேண்டும்.

மாற்றுத்திறன் உடையோருக்கான சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளைப் பெறுவதில் அனைத்து மக்களும் தங்களது ஆதரவினை வழங்க வேண்டும். கல்வியாளர்கள்,

அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஊடகங்கள் இதை முன்னெடுக்க வேண்டும்.

இவைகள் எல்லாம் அவர்களுடைய கோரிக்கைகளாக இருக்கின்றன. நான் முதலிலே சொன்னபடி கோரிக்கைகள் அல்ல - "உரிமையை வலியுறுத்தல்" என்று எடுத்துக் கொண்டு -

அவர்களுக்குரிய வாய்ப்புகளை அளிப்பதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த அரசின் மூலமாக தகுந்த முறையில் மாற்றுத்திறன் உடையோருக்கான துன்பங்களைத் துடைக்கலாம் - அவர்களை எல்லோரையும் போல சமமாக உயர்த்தலாம் என்ற கருத்தை நமது அரசின் மூலமாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கலாம் என்று கருதுகிறேன். ஐ. நா. மன்றம் இயற்றிய சட்டத்தின்படி, சில முக்கிய சலுகைகள் குறிப்பாக எல்லாவற்றிலும் அவர்களுக்கு உரிய சதவிகிதம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முதற்கட்டமாக நாம் பரிசீலித்து, அவர்களுக்கு, தோராயமாக மனித நேய உணர்வுடன் அரசின் சார்பில் வழங்குகின்ற உதவிகளுக்குப் பதிலாக அவர்கள் கோரும் உரிமையை நிலை நாட்ட குறிப்பிட்ட சதவிகித அளவு வாய்ப்புகளை அளிப்பதற்கு மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள வேண்டும். மத்திய அரசும் இதற்கு இணங்கி 2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மத்திய சாசனத்தில் ஏழாவது நாடாக கையெழுத்திட்டதை நினைவிலே வைத்துக் கொண்டு ஆவன செய்யும் - அனுகூலமான முடிவையெடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

2-3-2010

3464. பொதுக்கருத்து பற்றி பேரறிஞன் ரூசோவின் கருத்து என்ன?

உடன்பிறப்பே,

"வரப்போகிறது" - "வரப்போகிறது" என்று கடந்த பதிமூன்று ஆண்டுக்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்ற மகளிர் இட ஒதுக்கீடு மசோதா இந்த முறை எப்படியும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்போடு நாளை (8-3-2010) மாநிலங்களவையில் முன்மொழியப்படவுள்ளது. ஆளுங் கட்சியான காங்கிரஸ் தனது உறுப்பினர்களுக்கு "கொறடா" உத்தரவு பிறப்பித்துள்ளது இயற்கை என்றபோதிலும், முக்கிய எதிர்க் கட்சியான பாரதிய ஜனதா கட்சியும் தனது உறுப்பினர்களுக்கு தீர்மானத்தை ஆதரிக்க "கொறடா" உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பதிமூன்று ஆண்டுகளாக பேசப்பட்டு வருகின்ற பிரச்சினையாகும். ஏதோவொரு காரணத்தால் தள்ளிப் போய் வந்த இந்தக் கோரிக்கை இந்த முறை எப்படியும் நிறைவேறி விடும் என்ற எதிர்பார்ப்பு இந்தியா முழுவதும் எழுந்துள்ளது.

இளம் தலைவர் ராஜீவ்காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோதுதான் மகளிர்க்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33 சதவிகித இட ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை பெரிதாகப் பேசப்பட்டது. அதற்கு முதற்கட்டமாக உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த "பஞ்சாயத்து ராஜ்" சட்டம் நடைமுறைக்கு வந்த போது, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பது கட்டாயமாக்கப்பட்டது. 1996ஆம்

ஆண்டு நான்காவது முறையாக கழக ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அதற்கு முன்பு பல ஆண்டுக் காலம் நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து, மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் தேர்தலை நடத்தி 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புகளையேற்கும் நிலையை உருவாக்கியபோது, மகளிருக்கு உள்ளாட்சி அமைப்பு களில் அனைத்துப் பதவிகளிலும் 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனை புரிந்ததின் வாயிலாக 44,143 மகளிர் அப்போது உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கும் நிலைமையை தமிழகத்தில் கழக அரசு செய்து காட்டியது.

அதே 1996ஆம் ஆண்டுதான் நாடாளு மன்றம், சட்ட மன்றங்களில் மகளிர்க்கு இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதா முதலில் செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன் மொழியப்பட்டது. அன்றைய பிரதமர் தேவ கவுடா அவர்கள் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் 81வது அரசியல் சாசன திருத்தத்தின் கீழ் இந்த மசோதாவை அன்றைய மத்திய சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம்காந்த் காலப் அவர்கள் முன் மொழிந்தார். சமாஜ்வாடி, ராஷ்டீரிய ஜனதா தளம் ஆகிய கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக அந்த மசோதா - நாடாளுமன்ற உறுப்பினர் கீதா முகர்ஜி தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையானது அதே ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதியன்று பதினோறாவது மக்கள் அவையில் முன்மொழியப்பட்டது.

பின்னர் அதற்கடுத்த பன்னிரண்டாவது மக்கள் அவையிலே, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலே - 84வது அரசியல் சாசன திருத்தமாக இந்த மசோதா நாடாளு மன்றத்தில் - 26-6-1998 அன்று மீண்டும் முன்மொழியப்பட்ட போதிலும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் மக்களவை ஒத்தி வைக்க நேரிட்டது. அதன்பிறகு பதிமூன்றாவது மக்கள் அவையில், திரு. வாஜ்பய் அவர்கள் பிரதமராக இருந்தபோது 22-11-1999 அன்று மீண்டும் மசோதா நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அப்போது சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம் ஜெத்மலானி அவர்கள் மசோதாவை முன்மொழிந்தபோது - சமாஜ்வாடி, ஆர்.ஜே.டி. கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து - சட்ட

அமைச்சரின் கையிலே இருந்த மசோதாவின் நகலைப் பிடிங்கி, கிழித்தெறிந்தனர். அதன் காரணமாக அப்போதும் இந்த மசோதா நிறைவேற்றப்படவில்லை.

அதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் ஒரு முறையும் - 2003ஆம் ஆண்டில் இரண்டு முறைகளும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நாடாளு மன்றத்தில் முன்மொழிந்தபோதிலும், அப்போதும் அதனை நிறைவேற்றிட இயலவில்லை . 2008ஆம் ஆண்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே - சட்ட அமைச்சராக இருந்த திரு. பரத்வாஜ் அவர்கள் மாநிலங்களவையிலே மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை முன்மொழிந்த போதிலும், அப்போதும் அவையிலே ஏற்பட்ட அமளியால் மசோதா நிறைவேறவில்லை.

"Don't fail the Women of India" (இந்திய நாட்டு மகளிரை ஏமாற்றிவிடாதீர்கள்) என்ற தலைப்பில் 'இந்து' நாளிதழ் இன்று எழுதிய தலையங்கத்தை "The United Progressive Alliance Government's announcement of its intention to push forward the Women's Reservation Bill without any dilution in the coming week is the best political news we have had for a long time. If all goes according to plan, the long-pending Bill will be adopted by both houses of Parliament on or around March 8, which marks the Centenary of International Women's Day" என்றுதான் தொடங்கியுள்ளது.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் தனது தலையங்கத்தைத் தொடங்கும்போது, "The Government's renewed efforts to push ahead with the women's reservations bill underline the political value of the measure in its eyes rather than the possibility of enactment" என்று எழுதியுள்ளது. -திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் - இன்று நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக இந்த மகளிர் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆழ்ந்த அக்கறை கொண்டு, ஒவ்வொரு மாநாட்டிலும், பொதுக் குழுவிலும் தீர்மானங்களை நிறைவேற்றிடத் தவறியதில்லை.

"பெண்ணுரிமை"க்காக 1928ஆம் ஆண்டிலேயே "குடியரசு" இதழிலே தந்தை பெரியார் "பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில் அனேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலை உள்ளவர்கள் போலக்

காட்டிக் கொண்டு, மிகப் பாசாங்கு செய்து வருகிறார் கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் - எவ்வழியிலும் - பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப் பெண் மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல், மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம்" என்று எழுதினார்.

இன்றைக்கு இந்தியத் திருநாட்டின் மூலை முடுக்கெல்லாம் முழங்கப்படுகின்ற கொள்கை முரசமாக - மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்ற ஒலியைக் கேட்க முடிகிறது.

ஏன்; தனியாக மகளிர்க்கு இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வர வேண்டும்? இப்போது மகளிர் அந்தப் பொறுப்புகளுக்கு போட்டியிட முடியாதா? சட்டம் ஏதாவது தடுக்கிறதா?

சட்டம் தடுக்கவில்லை! சட்டமன்ற வேட்பாளராகவோ, நாடாளுமன்ற வேட்பாளராகவோ; தேர்தலில் ஒரு ஆண் போட்டியிடுவதைப் போல; இப்போது ஒரு பெண்ணும் போட்டியிடலாம்; அரசியல் சட்டம் அதைத் தடுக்கவில்லை. ஆனால் ஆணாதிக்கம் அவர்களைப் போட்டியிட அனுமதிக்கவில்லை. ஆணாதிக்கத்தின் இந்தச் சனாதனச் சம்பிரதாயத்துடன் எவ்வளவு காலத்துக்குச் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியும்; அதனால்தான் மகளிர்க்கு இத்தனை இடம் என்று ஒதுக்கீடு செய்து, அந்தச் சட்டப்படி அந்த இடங்களில் மகளிர் மட்டும்தான் போட்டியிட முடியும் என்று செய்து விட்டால்; அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைக்கான அடிக்கல் நாட்டும் திருப்பணி நிறைவேறத் தொடங்கிவிடும்.

ஏற்கனவே தலித் எனப்படும் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களை; இந்த உரிமைகளை; பெறக் கூடியவர்களாகக் கைதூக்கி விட இருக்கின்ற தனித் தொகுதி முறை எல்லா மட்டத்திலும் அரசியல் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருப்பதை "மாதிரி" யாகக் கொண்டு; அந்தப் பழைய நிலைக்குப் பங்கமேதும் நேராமல்; இப்போது கோரிக்கையாக வைக்கப்படுகிற மகளிர் இட

ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டு அதற்கான துவக்கத்தை நடத்த சமூகப் பிரக்ஞையுள்ள, உரிமைகள் வழங்கப்படுவதில் உள்ள நியாயங்களை நிலை நாட்டுவதற்கு நினைத்திடும் இயக்கங்கள் முன் வர வேண்டும்.

பொதுக் கருத்து உருவாக வேண்டும் என்று பொறுமையுடன் காத்திருப்பது பொறுப்புடையோர் செயல் எனினும்; கோரிக்கையைத் தள்ளிப் போடுவதற்காகக் 'காத்திருப்பு' என்பது ஏற்க இயலாத ஒன்றாகிவிடும்.

சட்டம் நிறைவேற்றிட தேவையான வாக்குகள் கிடைக்காவிட்டால் கூட இந்த மசோதாவுக்கு ஆதரவு தராதவர்களை மகளிர் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டலாம் அல்லவா?

பொதுக் கருத்து பற்றி பிரஞ்சு நாட்டுப் பேரறிஞன் - பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து; பிரெஞ்சுப் புரட்சிக்கான எழுச்சிப் பாதையை தனது எழுத்து மூலம் வகுத்துக் கொடுத்தவர்களில் ஒருவரும், "வால்டேர் " காலத்தவருமான "ரூசோ" என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

> "புதிதாக ஒன்றைச் செயல்படுத்த எடுத்துக் கொள்ளும் போது அதற்கான பொதுக் கருத்து அறிவதற்குத் தேவையான ஒப்பந்தம் ஏற்படத்தான் எல்லோருடைய கருத்தும் ஒரே வகையாக இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பிறகு எல்லா நிலைகளிலும் அந்தப் பொதுக் கருத்து, எல்லோருடைய விருப்பம் போல அமைந்திட முடியாது. அவ்வாறு கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, பெரும்பான்மையோர் கருத்து எதுவோ, அதைத்தான் பொதுக் கருத்து எனக் கொள்ள வேண்டும்"

ரூசோவின் இந்தக் கருத்தையும்; மகளிர்க்கான இட ஒதுக்கீடு சட்டம் கொணர ஆர்வமுடையோர் சிந்தித்துச் செயல்பட முன்வர வேண்டும்.

எனவே முதலில் மகளிர்க்கு 33 சதவிகிதம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதும்; பின்னர் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று படிப்படியாக "உள் ஒதுக்கீடு" செய்து கொள்வதும் சரியானதாகும்.

முதலில் விருந்துக்கான அழைப்பையேற்று வீட்டுக்குள் செல்வோம்.

பின்னர் விருந்தில் படைக்கப்படும் பண்டங்களில் நம் உடலுக்கு ஒத்துக்கொள்ளக் கூடியது எது; ஒவ்வாதது எது என்பதைச் சொல்லி அதற்கேற்பப் பரிமாறச் செய்வோம்.

அன்புள்ள,

மு.க.

07-03-2010

3465. நெஞ்சில் மோதும் நினைவலைகள்!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் விடுதலையே எனதினிய உயிர்மூச்சு – சுதந்திரமே எனது தூய பிறப்புரிமை என வீரக்கனல் முழக்கமிட்டு, உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஊற்றி வேள்வி வளர்த்து வெற்றி கண்ட தியாகச் செம்மல்களுக்கும்; இருந்தமிழே, உன்னால் இருந்தேன்! என்று வாழ்க்கை நெறிவகுத்து, இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என எந்நாளும் எண்ணியெண்ணி அன்னைத் தமிழுக்கு ஆனவழியெல்லாம் அணிசெய்த ஆன்றோர்களுக்கும், தமிழ்ச் சான்றோர்களுக்கும்; துறைதோறும் துறைதோறும் தொண்டாற்றி மக்கள் உள்ளங்களிலும், வரலாற்றிலும் மறையாத இடம் பெற்றுவிட்ட மாசற்ற மாணிக்கங்களுக்கும்; கழக ஆட்சியில் நாம் திருவுருவச் சிலைகளென்றும், நினைவகங்களென்றும், மணிமண்டபங்களென்றும், சிங்காரச் சென்னை முதல், தென்கோடிக் குமரிவரை உருவாக்கி, ஊரும் உலகும் ஏற்றிப் போற்றிடப் பராமரித்து வருகிறோம்!

எண்ணற்ற சின்னங்கள்; எழுந்து உயர்ந்து நிற்கும் கட்டடங்கள்! அவை அனைத்தும் சரித்திரத்தின் சாகாக் குறியீடுகள்! அவற்றைக் காணுந்தோறும், காணுந்தோறும்; காட்சியில் இல்லாத வேளைகளில் அவைபற்றிச் சிந்திக்கும் தோறும் சிந்திக்கும்தோறும்; உணர்வுகளில் உயர்மின்சக்தி பாய்ந்ததைப் போல் இனந்தெரியாததொரு கிளர்ச்சி – நம்முள்ளே ஏற்படுத்திடும் தாக்கம் – நாமே அந்தந்தக் காலகட்ட வரலாற்றிலேயே வாழ்வதைப் போன்றதொரு பிரமை!

அனைத்துச் சின்னங்களுமே அரியவை, பெருமையும் பீடும் நிறைந்தவை, புகழ் மிக்கவை, வாழ்த்தி வணங்கத்தக்கவை; எனினும், அவற்றுள் ஒருசில மட்டும் –

அற்புதத்தின் உச்சங்கள்
அனுதினமும் அணுப்பொழுதும்

நெஞ்சத்தினின்றும் நீங்காது நிலைத்திருப்பவை;
அயர்ந்து உறங்கும்போதும், விழித்திருக்கும்
வேளையிலும்,
எண்ணத் திரையில் வண்ணநிலவாய்
தண்ணொளி வீசித் தனி இன்பம் தருபவை!
தமிழர்தம் உள்ளமெல்லாம்
எழுச்சியையும் ஏற்றத்தையும் எந்நாளும் பாய்ச்சுபவை!

அவை –

- "அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
'சிலப்பதிகாரம்' என்னும் பெயரால்" –
திங்களைப் போற்றி; ஞாயிறு போற்றி;
மாமழை போற்றி – பின்னர்
பூம்புகார் போற்றும்; பாட்டுடைச் செய்யுளாம்
நெஞ்சையள்ளும் சிலம்பின் செழிப்பினை உணர்த்தும்
பூம்புகார்க் கலைக்கூடம்!

- இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் மண்ணிலிருந்து விடுதலைக் குரல் எழுப்பிய மாவீரன் – 'வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏதுவரி?' என்று முதல் முழக்கமிட்ட மாவீரன் – வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக, நெல்லைச் சீமையிலே, நெஞ்சுரம் விளைந்த பாஞ்சாலங்குறிச்சிப் பூமியிலே எழுப்பப்பட்ட கோட்டை!

- பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக, மொழிபெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு; நெடுநாள் ஆசை நிறைவேறிடவும் நெஞ்சில் இன்பக் கொடியேறிடவும்; வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டுக்கு வரலாற்றுப் புகழ்

கொண்ட வள்ளுவர் கோட்டம் - சிங்காரச் சென்னையிலே!

- 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' எனச் சினம்காட்டி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனச் சமத்துவம் உணர்த்தி; மானுடத்திற்கே புதுமையானதும் பொதுமையானதுமான நெறிகளை வகுத்தளித்த வள்ளுவருக்கு - குறளின் அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரம் உள்ள மாபெரும் சிலை - சூழும் தென்கடல் ஆடும் குமரியிலே!

- அறிவியல் வளர்ச்சியில் புதியதோர் அலையெனப் பொங்கி எழுந்துவந்த தகவல் தொழில்நுட்பத்தின் செழுமைகளை முழுதுமாக முன்னெடுத்துச் சென்று, தமிழகத்திற்கு வளமும் வாய்ப்பும் குவித்திட, "டைடல் பூங்கா" எனும் தகவல் தொழில் நுட்பப் பூங்கா சென்னையில் தரமணியிலே!

உடன்பிறப்பே,

எனது நெஞ்சத்தின் நினைவேடுகளில் நிரந்தரமாகப் பதிந்து; நித்தம் எனது இரத்த ஓட்டத்தில் கலந்திருக்கும் காலக் கருவூலங்களாம் இந்த நினைவுச் சின்னங்களைப் பற்றி எனது சிந்தனைகள் விரிகின்றன.

சென்னையிலே, புதிய சட்டப்பேரவை-தலைமைச் செயலக வளாகம் திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இனிதே நிறைவேறிவரும் இந்த நல்ல வேளையில் - சிந்தனைகள் சிறகெடுத்துப் பறக்கின்றன!

பத்தாண்டுகளுக்கு முன்பு - முப்பத்து ஆண்டுகளுக்கு முன்பு - கடந்த காலத்தில் நடந்தவற்றைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேன்! எனது நினைவுகளில் பளிச்சிடும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை உன்னோடு பகிர்ந்து கொள்வதில் உவகை கொள்கிறேன். பழைய செய்திகள் எனினும் நமது பண்பாட்டுச் செய்திகள்! நம் அனைவரையும் உணர்ச்சி நதிக் கரையில் உலா வரச்செய்திடும் உன்ன தமான செய்திகள்! திரும்பிப் பார்ப்பதால் சிந்தையில் தேனூறும் செய்திகள்!

சங்ககாலச் சோழர்களின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கியது பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினம். பொதுவாக, கடலுடன் ஆறு கலக்கும் முகத்துவாரத்திற்கு புகார் என்பது பெயர். அதன்படி, காவிரியாறு கடலுடன் கலக்கும் இடமும் புகார் என்றே வழங்கப்பட்டது. பின்னர், இந்தப் புகார் பொலிவின் காரணமாகவும், சிறப்பின் காரணமாகவும் பூம்புகார் என்று அழைக்கப்பெற்றது.

காவிரிப்பூம்பட்டினம் மூன்று பிரிவுகளாக விளங்கியது. கடற்கரை ஓரமாக அமைந்த பகுதி மருவூர்ப்பாக்கம்; நகராக அமைந்த பகுதி பட்டினப்பாக்கம்; இரண்டிற்கும் இடையே அமைந்த பகுதி நாளங்காடி.

கரிகால்சோழன் காலத்தில் தான், காவிரிப்பூம்பட்டினம் சிறப்போடு விளங்கியது. அவன் வடபுலத்துப் படையெடுப்பு முடித்துத் திரும்பியதும், தான் திறையாகவும், பரிசாகவும் பெற்றுவந்த முத்துப்பந்தரையும், தோரண வாயிலையும் கொண்டு அமைத்த கொலுமண்டபம், புலவர்கள் பாடும் பட்டிமண்டபம் ஆயிற்று.

பட்டினப்பாக்கத்தில் வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல்மன்றம், பூதச் சதுக்கம், பாவைமன்றம் எனும் ஐவகை மன்றங்கள் இருந்தன.

இவைகளெல்லாம் அமையப்பெற்ற பூம்புகார், காலத்தின் கோலத்தால் கடற்கோளுக்கு இரையாகி, மறைந்த நகரங்களில் ஒன்றாகி விட்டது. அப்படி மறைந்த நகரை மீண்டும் அதே வனப்புடன் காணவேண்டும் - கண்ணகி வாழ்ந்த ஊரில் அவளுக்கு நிலையான நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று நான் பெரிதும் விரும்பினேன்.

சிலப்பதிகாரக் காட்சிகளை சிற்பங்களாக வடித்து, அவற்றை ஒரு மண்டபத்திலே அமைத்து, சிலப்பதிகாரக் கதையை அனைவரும் அறிந்து கொள்ளும்வகையில் எடுத்துரைக்க வேண்டுமென்றும், அதற்காக சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்றினை நிறுவவேண்டுமென்றும் திட்டமிட்டேன்.

அதன்படி பூம்புகாரில் உருவாக்கப்பட்ட அந்தக் கலைக்கூடம் எழுநிலை மாடங்கள் கொண்ட அழகான கட்டடம். முதல்மாடம் 12

அடி உயரம் கொண்டதாகவும், ஒவ்வொரு மாடமும் 5 அடி உயரம் கொண்டதாகவும், ஏழாவது மாடத்தில் உள்ள கலசம் 8 அடி உயரம் கொண்டதாகவும், ஆக, 50 அடி உயரம் கொண்டதாக கலைக் கூடம் அமைக்கப்பட்டது.

கலைக்கூடத்தின் மேல் தளத்தின் உட்புறத்தில் 20 தாமரை வட்டங்கள் உருவாக்கப்பட்டன. கலைக்கூடத்தின் திறந்த வெளியில் சிலம்பு வடிவில் குளம் அமைக்கப்பட்டது. அதன் கரையில் 2.75 மீட்டர் உயரம் கொண்ட கலையரசி மாதவி சிலையும், 3 மீட்டர் உயரம் கொண்ட தமிழர் பண்பாட்டுச் சின்னமாம் கண்ணகி சிலையும் அமைக்கப்பட்டன.

கண்ணகி வழக்காடும் நிகழ்ச்சியையும் சேர்த்து, சிலப்பதிகாரக் கதையில் உள்ள 49 நிகழ்ச்சிகள் கல்லில் வடிக்கப்பட்டன. கலைக் கூடத்தின் வலது பக்கத்தில் 9 அடி உயரத்தில் கரிகால்சோழனின் சிலையும், இடதுபக்கத்தில் 8 அடி உயரத்தில் இளங்கோவடிகள் சிலையும் அமைக்கப்பட்டன. கலைக் கூடத்தின் உட்புறத்தில் பூங்கா அமைக்கப்பட்டது.

சிலப்பதிகாரத்தில் உள்ள பாவைமன்றம் நடுவில் மணிமண்டபத்தில் 8 தூண்கள் கொண்டதாக அமைக்கப்பட்டது. ஒவ்வொரு தூணிலும் திருக்குறளில் காமத்துப்பால் அதிகாரத்தைக் குறிக்கும்வகையில் 8 கன்னியர்களின் சிலைகள் மணிமண்டபத்தின் வட்டவடிவில் உருவாக்கப்பட்டன.

நெடுங்கல்மன்றம், 10 அடி உயரம் உள்ள மேடையில், 52 அடி உயரத்தில் வட்டவடிவில் கருங்கல் தூண் அமைக்கப்பட்டது. 8 தூண்களை 8 வீரமறவர்கள் தாங்கி நிற்பதைப்போல் அமைக்கப்பட்டது.

இலஞ்சிமன்றம் கடற்கரைக்கு அருகில் முன்பும், பின்பும் இரண்டு பொய்கைகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. மேல்நிலை மாடத்தில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய 6 கன்னியர்களின் சிலை அமைக்கப்பட்டது.

கொற்றப்பந்தலும், சிலம்பு வடிவில் பார்வையாளர் காத்திருப்பு மன்றமும் அமைக்கப்பட்டு; 1973ஆம் ஆண்டு, ஏப்ரல் 17ஆம் நாளன்று எனது முன்னிலையில், அன்றைய மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களால் பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து; 1973 மே 12ஆம் நாளன்று நெல்லைச் சீமையில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மூவருக்கு கழக அரசு விழா எடுத்தது. எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்து வளர்ந்த பூர்வீக இல்லத்தினை நினைவுச் சின்னமாக்கிட அரசு ஏற்பாடு செய்த விழா - அன்றைக்கே, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு ஒட்டப்பிடாரத்தில் சிலையெடுத்த விழா - பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு எடுக்கப்பட்ட உணர்ச்சிகரமான விழா.

அந்த நிகழ்ச்சியில் நான் அளித்த வாக்குறுதிக்கேற்ப; 1974ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, 1974, ஆகஸ்டு 18ஆம் நாளன்று அந்த எழுச்சிமிகு கோட்டையின் திறப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழா மேடையிலேயே கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள் 200 பேருக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப்பட்டன.

வரலாறுகளில் காணப்பட்ட செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, முன்பு கட்டபொம்மன் கோட்டை இருந்த இடத்திலேதான் இந்தக் கோட்டையும் எழுப்பப்பட்டது. கோட்டையின் வடிவமைப்பு 15 மீட்டருக்கு 15 மீட்டர் சதுர அளவு உள்ளதாகவும், பாதுகாப்பு அரண்களைக் கொண்ட மாதிரி அமைப்புடன் கட்டப்பட்டது. கோட்டையின் மையத்தில் 10 மீட்டர் உயரமுள்ள தர்பார் மண்டபம் அமைக்கப்பட்டது. இந்த மண்டபத்தின் மேல்புறக் கடைசியில் 3 மீட்டருக்கு 3 மீட்டர் அளவுக்கு மேடை உருவாக்கப்பட்டது. மேல்புறக் கடைசியில் உள்ள மேடையில் உடைவாளின் மீது கையினை வைத்தவாறு தர்பார் மண்டபக் கொலு வீற்றிருக்கும் அமைப்பில் ஒரே கல்லிலான 6 அடி உயரமுள்ள 6 டன் எடை கொண்ட வீரன் கட்டபொம்மனின் அழகுச் சிலை வைக்கப்பட்டது.

அதற்கு இருபுறத்திலும் ஊமைத்துரை, வெள்ளையத்தேவன், தானாபதிப் பிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோரின் உருவங்கள் சிற்ப வடிவங்களாக வடித்தெடுக்கப்பட்டு பதிக்கப்பட்டுள்ளன. ஒட்டப்பிடாரம் கிராமத்திலிருந்து கோட்டைக்குச் செல்லும் சாலையில் 5 அழகு வளைவுகள் வீரபாண்டிய கட்டபொம்மனோடு உடன் வாழ்ந்து மறைந்த வீரப்பெருமக்களின் நினைவு வளைவுகளாக அமைக்கப்பட்டன.

விழாவில் கலந்துகொண்டு; "இந்தச் சாதனை தமிழன் என்ற உணர்வு படைத்த ஒவ்வொருவரும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நன்றி உணர்ச்சியோடு போற்றத்தக்கதாகும்" என்று சிலம்புச்செல்வர் ம.பொ.சி அவர்கள் ஆற்றிய உரையும்;

"பாரதத்திலேயே சிறந்த மாநிலமாக தமிழகத்தை மாற்றிய பெருமை கலைஞர் அவர்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட ஆட்சிக்கு - அற்புத சாதனைகளைச் செய்துவரும் ஆட்சிக்கு - கலைஞருக்கு அனைவரும் உறுதுணையாக நிற்க வேண்டும்" என்று பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் ஆற்றிய உரையும்;

"மக்களுக்கு நன்மை செய்யும் கலைஞரை வீழ்த்துவது என்பது எட்டப்பன் வேலை என்பதால், அவருக்குத் துணையாக இருக்க வேண்டுமென்ற வகையில் நானும் இங்கே வந்திருக்கிறேன்" என்று நண்பர் சுப்பு ஆற்றிய உரையும்; எனது நினைவிலே இன்றைக்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

கட்டபொம்மன் என்பதால், இந்த நேரத்தில் இன்னொன்றையும் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன். 16.10.1999 அன்று வீரபாண்டிய கட்ட பொம்மன் அஞ்சல்தலை வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில், "கட்டபொம்மன் படை நடத்திப் பரங்கியரை எதிர்த்த அந்த காலக் கட்டத்தில் அவருக்கு இரண்டு தளபதிகள் - வெள்ளையத்தேவன், கட்டபொம்மனோடு இருந்து பரங்கியரை எதிர்த்து உயிர்நீத்தவன். அதைப்போலவே தற்கொலைப் படையின் குண்டுகளையும் அழித்து, தன்னுடைய வீரர்களையெல்லாம் காப்பாற்றி, தன்னையே தியாகம் செய்து கொண்டவன் சுந்தரலிங்கம். அந்த இருவரும் கட்டபொம்மனுடைய வலக்கரம் இடக்கரமாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வெள்ளையத்தேவனும் சுந்தரலிங்கமும் நாட்டு மக்களுக்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கு வலக்கரம் இடக்கரமாக இருக்கிறார்களா என்றால், இல்லை என்பதைத்தான் வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

ஒரு காலத்தில், சரித்திரக் காலத்தில், புராணக் காலத்தில், புலியும் மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தன என்று பெருமையோடு சொல்லுவார்கள். இன்றைக்குப் புலியும் மானும்கூட ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாமா?

என்று நாம் கேட்க வேண்டிய நிலைமை நாட்டிலே இருக்கின்றது என்பதை மிகுந்த வேதனையோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்று எனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டேன்.

கட்டபொம்மனைப் பற்றி எழுதும்போது, மாவீரன் பூலித்தேவனைப் பற்றிய எண்ணம் என் மனதில் மின்னலெனப் பளிச்சிடுகிறது.

இந்தியாவிலே வெள்ளையரை எதிர்த்து சுதந்திரப் போராட்டம் பல பகுதிகளில் நடைபெற்றிருக்கிறது. ஆனால், முதன்முதலாக நடைபெற்ற போராட்டம் என்று எடுத்துக் கொண்டால், 1806ஆம் ஆண்டு - அதாவது, வடபுலத்திலே நடந்த சிப்பாய்ப் புரட்சிக்கு 51 ஆண்டுகளுக்கு முன்பே; வேலூரில் நடைபெற்ற சிப்பாய்க் கலகம்தான் என்று உண்மையிலேயே சரித்திரம் எழுதுகிறவர்கள் குறிப்பிடுவார்கள். 1857ஆம் ஆண்டிலேதான் வடபுலத்திலே சிப்பாய்ப் புரட்சி நடைபெற்றது. இந்த இரண்டு சிப்பாய்ப் புரட்சி களுக்கும் முன்பே; வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய சுதந்திரப் போராட்டத்திற்கு முன்பே; பாளையக்காரர்களுடன் கூட்டணி அமைத்து வெள்ளையர்களை எதிர்த்த விவேகி பூலித்தேவன். 1750ஆம் ஆண்டு முதல் 1767 வரை ஏறத்தாழ 17 ஆண்டுகள் பலமுறை வெள்ளைக் காரர்களோடு அவர் யுத்தம் செய்திருக்கிறார்.

நெல்லைச் சீமையிலே நெற்கட்டும் செவல் என்ற புகழ்பெற்ற மண்தான் பூலித்தேவன் வாழ்ந்த பூமி. 53 ஆண்டுகளே உயிர்வாழ்ந்த பூலித்தேவன் வீரம், நேர்மை, தன்மான உணர்வுகள் ஆகியவற்றின் வடிவமாகத் திகழ்ந்தார். அது மாத்திரமல்ல; கொடையுள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கம் உடையவராகவும் இருந்தார்.

ஆர்க்காட்டு நவாப்பின் முதல் ஆங்கிலத் தளபதியான அலெக்சாண்டர் நெல்லைச் சீமைக்கு வரிவசூல் செய்ய வந்தபோது, "கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக்காசும் கட்டமுடி யாது" என்று ஓங்கி அடித்துச் சொன்னவர்தான் பூலித்தேவன். அது மாத்திரமல்ல; "நெல்லாவது கொடு, வரிக்குப் பதிலாக" என்று கேட்டபோது, "வரி என்று நீ கேட்டால், ஒரு மணி நெல்லைக் கூட நான் உனக்குத் தரமுடியாது" என்று பூலித்தேவன் மறுத்துக்

கூறினான். ஒரு மணி நெல்கூடத் தரமுடியாது, கட்ட முடியாது என்று சொன்ன காரணத்தால்தான் "நெல் கட்டான் செவல்" என்று அந்த ஊருக்கே பெயர் வந்தது. "நெல் கட்டான்" - வரியாக நெல்லைக் கட்டமாட்டான் என்று சொன்ன அந்த சொல்தான், இப்போது திரிந்து "நெல் கட்டும் செவல்" என்று ஆகிவிட்டது. அந்த நெல் கட்டும் செவலில் பூலித்தேவன் வாழ்ந்த மாளிகை கழக ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டு, பொலிவூட்டப்பட்டு, அந்த மாளிகையையும், மாவீரன் பூலித்தேவன் சிலையினையும் 28.12.1998 அன்று நான் திறந்து வைத்தேன்.

இப்படி கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் பற்றிய எண்ணங்கள் அலைமோதும்போது, ஒருபுறம் எழுச்சியும் மறுபுறம் ஏக்கமும், ஒருபக்கம் உணர்ச்சியும் மறுபக்கம் உளைச்சலும் ஏற்படுவதைச் சில நேரங்களில் தவிர்த்திட முடியவில்லை!

உடன்பிறப்பே, இந்த முத்தாய்ப்பையெல்லாம் எதற்காக நான் எழுதுகிறேன் என்பதை நீ புரிந்து கொண்டிருப்பாய். ஆம், வருகின்ற 13ஆம் தேதி சென்னையில் மாபெரும் திருவிழா நடைபெறவுள்ளது. அதற்காக நீ இதற்குள் புறப்பட்டுக் கொண்டிருப்பாய் என்பதை நான் அறிவேன். அதைப்பற்றி நாளை விவரமாக எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-3-2010

3466. என்னை மகிழ்விக்க, சென்னைக்கு வருவாயா?

உடன்பிறப்பே,

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் உருவாக்கியதாலும், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையைக் கட்டியதாலும், புதியதோர் எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதை உணர்ந்த நல்லோர் சிலர், மயிலை திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடொன்றை என்னிடம் தந்தனர். அப்போது அந்தக் கோயிலை அன்னியில், சென்னை நகரின் நடுப்பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசை எனக்குத் தோன்றியது. அதுபற்றி விவாதித்தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டுமென விரும்பினோம்.

சென்னையின் மையப் பகுதியான நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதியில் வள்ளுவர் கோட்டத்தை அமைத்திட முடிவு செய்யப்பட்டது. பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடப் பணிகளை முன்னின்று நடத்திய சிற்பி கணபதி ஸ்தபதியார் அவர்களும், குமரி முனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்க வண்ணம் வடித்துத் தந்த சிற்பி எஸ்.கே.ஆச்சார் அவர்களும், வள்ளுவர் கோட்டம் அமைத்திடும் வேலைகளை 18.9.1974 அன்று தொடங்கினர். வள்ளுவர் கோட்டம் 99 இலட்சம் ரூபாய்ச் செலவில், 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் கட்டி முடிக்கப்பட்டது.

வள்ளுவர் கோட்டத்தின் முகப்பில், காண்போர் கருத்தைக் கவரும்வண்ணம், தோரணவாயில் அமைக்கப்பட்டு, "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற முதல் குறள் பொறிக்கப்பட்டது.

குறள்மணி மாடத்தில், அழகிய வண்ண சலவை கற்பலகைகளில், திறந்த புத்தக வடிவில், தூண் ஒன்றிற்கு

இரண்டு அதிகாரங்கள் வீதம் 1330 குறட்பாக்கள் அமைக்கப் பட்டன. அறத்துப்பாலின் 38 அதிகாரங்கள் கருநிற பளிங்கிலும், பொருட்பாலின் 70 அதிகாரங்கள் சாம்பல்நிற பளிங்கிலும், காமத்துப்பாலின் 25 அதிகாரங்கள் மற்றும் சங்கப் புலவர் ஐவர் பாடிய திருவள்ளுவர் மாலை கருஞ்சிவப்பு பளிங்கிலும் பொறிக்கப்பட்டன.

மணிமாடத்திற்கு மேலே 220 அடி நீளம், 140 அடி அகலம் கொண்ட வேயா மாடம் அமைக்கப்பட்டது. அதில், தேரின் கலசம், கோபுரம், தேரின் கருவறையில் உள்ள திருவள்ளுவர் சிலை ஆகிய மூன்றில் நிழலுருவம் தெரியும்வண்ணம் இரண்டு பெரிய நீர்நிலைகளும், ஒரு சிறிய நீர்நிலையும் அமைக்கப்பட்டது.

கருவறையின் நடுப்பகுதியில் இரண்டு அடி உயரமுள்ள பீடத்தின் மேலே முப்பாலைக் குறிக்கும்வண்ணம், மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் ஏழடி உயரமுள்ள ஒளிமிக்க கருங்கல்லால் ஆன திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது.

குறள்மணி மாடத்திற்குக்கீழே 220 அடி நீளம், 100 அடி அகலம் கொண்ட, இடையே தூண்களே இல்லாத 3,500 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணும் வண்ணம் பெரிய அரங்க மண்டபம் அமைக்கப்பட்டது. அரங்க மேடையின் நடுவே திருவள்ளுவரின் வண்ண ஓவியமும், இடது புறத்தில் சங்கப்புலவர் அதங்கோட்டாசான் திருவுருவப் படமும், வலதுபுறத்தில் தொல்காப்பியர் திருவுருவப் படமும் அழகிற்கு அணி சேர்க்கும் வகையில் அமைக்கப்பட்டன.

வள்ளுவர் கோட்டத்திற்கு மணிமுடி வைத்தாற்போல், காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து உயர்ந்து நிற்பது சிற்பத் தேராகும். பெரியதும் சிறியதுமாக, பக்கத்திற்கு நான்கு சக்கரங்கள்; ஒவ்வொன்றும் ஒரே கல்லால் ஆனது. தேரை ஏழடி உயரமுள்ள இரண்டு கல் யானைகள் இழுப்பதைப் போன்று வடிவமைக்கப்பட்டது. தேரைச் சுற்றிலும் 133 அதிகாரங்களும், ஒவ்வொரு அதிகாரத்தையும் விளக்கும் அடிப்படையில் 133 அழகிய சிற்பங்களும் செதுக்கப்பட்டன.

வள்ளுவர் கோட்டம் 15.4.1976 அன்று தமிழக ஆளுநர் தலைமையில், குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த விழாவிற்கு முன்னாள்

முதலமைச்சர் என்ற முறையிலோ, அந்த வள்ளுவர் கோட்டம் எழும்பிடக் காரணமாக இருந்தவன் என்ற முறையிலோகூட நான் அழைக்கப்படவில்லை. உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து, பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக்கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு, பாலூட்டிச் சீராட்டிப் பழமுத்தம் சுளைசுளையாய் தந்து, பள்ளிக்கனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத்துணை ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமணவிழா நடைபெறும்போது, தாலி கட்டும் காட்சியினைக் காணமுடியாமல், மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச்செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்.

அந்தத் தாயின் மகிழ்ச்சியைத்தான் நான் பெற்றேன் அன்று. என் வாழ் நாளின் குறிக்கோள்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் கண்டு, ஆனந்தம் கொண்டேன்!

முக்கடல் சந்திக்கும் குமரிமுனையில், வான்புகழ் வள்ளு வருக்குச் சிலை அமைக்க 31.12.1975 ஆம் நாளன்று எனது தலைமையில் கூடிய கழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டு, சிலை அமைப்புக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கழக அரசு கலைக்கப்பட்டது.

15.4.1979 அன்று இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் அடிக்கல் நாட்டியபோதிலும், சிலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை.

நான் மூன்றாவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், "குமரிமுனையில் வள்ளுவருக்கு குறளின் அதிகாரங்களைக் குறிக்கும்வண்ணம் 133 அடி உயரமுள்ள மாபெரும் சிலை ஒன்று அமைக்கும் பணி தொடங்கப்படும்" என்று 17.3.1990 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்து, நிதி ஒதுக்கீடும் செய்து, கல்லில் சிலை சமைக்கும் பணியினை கணபதி ஸ்தபதியாரிடம் ஒப்படைப்பதற்கான ஆணையினை 19.7.1990 அன்று வழங்கினேன். 6.9.1990 அன்று குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை நான் நேரில் சென்று தொடங்கி வைத்தேன்.

அறத்துப்பாலின் 38 அதிகாரங்களைக் குறிக்கும்வகையில், சிலையின் பீடத்தின் உயரம் 38 அடி என்றும்; பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களைக் குறிக்கும் வகையில், பீடத்தின் மேல் சிலையின் உயரம் 95 அடி என்றும்; ஆகமொத்தம் 133 அடி என்றும்; சிலை அமைப்பதற்கு 3 டன் முதல் 8 டன் வரை எடையுள்ள 3,681 கற்கள் தேவையென்றும்; 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலையின் மொத்த எடை 7,000 டன் என்றும் கணக்கிடப்பட்டது. 1990ஆம் ஆண்டு சிலை அமைப்புப் பணி தொடங்கிய போதிலும், 1991ஆம் ஆண்டு முதல் 1996, மே திங்கள் வரையிலான காலத்தில் பணிகள் மிகவும் தொய்வடைந்து நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

நான்காவது முறையாக முதலமைச்சராக மீண்டும் நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சிலை அமைப்புப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு; உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் திருவள்ளுவர் சிலை, உலகத் தமிழினமே ஒன்று திரண்டு நிற்க, 2000ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல்நாள் சூழும் தென்கடல் ஆடும் குமரிமுனையில் என்னால் திறந்து வைக்கப்பட்டது.

அந்த விழா நிகழ்ச்சிகள் அப்படியே என் நெஞ்சில் காட்சிகளாகப் பதிவாகியிருக்கின்றன. "தொடர்ந்து திருக்குறளுக்குக் கலைஞர் ஆற்றியிருக்கிற பணிகளே ஒரு இருபது பணிகள் இருக்கும். அதன் சிகரமாக வள்ளுவருடைய திருவுருவச் சிலையை இங்கே அமைத்தார். அப்படி அமைத்த கலைஞர் புகழ் வள்ளுவர் சிலையையும், வள்ளுவர் நூலையும் போல என்றைக்கும் நிலைத்து நின்று, மக்களுடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டதாகத் திகழும்" என்று பேராசிரியர் வாழ்த்தியதும்; மறைந்த நம்முடைய மூப்பனார் அவர்கள், அந்த விழாவிலே கண்ட எழுச்சியை வியந்து, குமரிமுனையில் இலட்சக்கணக்கில் குழுமியிருந்த மக்களையெல்லாம் எழுந்து நிற்கச் செய்து, "கலைஞரைப் பாராட்டுங்கள்; பாராட்டுவதற்கு அடையாளமாக அனைவரும் எழுந்து நின்று கையொலி செய்யுங்கள்" என்று கேட்க, அனைவரும் எழுந்து நின்று உற்சாகத்தோடு கையொலி செய்து என்னைப் பாராட்டி வாழ்த்தியதும்; அந்த விழாவிலே மூப்பனார் அவர்கள் "You can win" என்ற ஆங்கிலப் புத்தகத்தை எனக்குப் பரிசாகத் தந்து மகிழ்ந்ததும்; அருமைச் சகோதரர் சிவாஜி சில வார்த்தைகளைக் கொட்டி, என்னை ஒரு கணநேரம்

உணர்ச்சிவயப்படச் செய்ததும்; எனது இதயத்தில் அச்சடித்த சித்திரங்களாக அப்படியே இருக்கின்றன.

எனது நெஞ்சில் நிலைகொண்டிருக்கும் மற்றொரு நினைவுச் சின்னம் சென்னை தரமணியில் கழக ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட "டைடல் பூங்கா" எனப்படும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா. மத்திய அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறன் மேற்கொண்ட முனைப்பான முயற்சிகளின் காரணமாக, தகவல் தொழில்நுட்பத்திற்கென்று தனியே கொள்கை உருவாக்கி அறிவித்த முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்ற சிறப்பு நமக்குக் கிடைத்தது.

அன்புள்ள,

மு.க.

11-03-2010

3467. 36 ஆண்டுகளுக்கு முன் அன்றைய முதல்வர் கலைஞர் நீதியரசர் மகராஜனுக்கு எழுதிய கடிதம்!

36 ஆண்டுகளுக்கு முன்பு - தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் - அப்போதும் முதல் அமைச்சராக இருந்தபோது - உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த நீதியரசர் மகராஜன் அவர்கள் தான் எழுதிய ஒரு புத்தகத்தினை - கலைஞர் அவர்களுக்கு அனுப்பி, அந்த நூல் பற்றிய கருத்தினைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க -

கலைஞர் அவர்கள் அந்தப் புத்தகத்தைப் படித்து விட்டு 2-11-1974 அன்று தன் கைப்படவே ஒன்பது பக்கங்கள் அந்த நூலினைப் பற்றி விமர்சனம் செய்து எழுதியதுதான் இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

36 ஆண்டுகளுக்கு முன்பு -

முத்து முத்தான எழுத்துக்களில் -

முதலமைச்சர் பதவியிலே இருந்த நிலையில் "டிக்டேட்" செய்யலாம் - உதவியாளர்களைக் கொண்டு விமர்சனக் கட்டுரை ஒன்று எழுதி தட்டச்சு செய்து அதிலே கையெழுத்திட்டு அனுப்பலாம் - நூலினைப் புரட்டிப் பார்க்காமலே வேறு சிலர் தற்போது மற்றவர்கள் எழுதிய அறிக்கையைப் படிக்காமலே கூட கையெழுத்திட்டு அனுப்புகிறார்களே , அவ்வாறு செய்திருக்கலாம் - அப்படியெல்லாம் செய்யாமல் - நூல் முழுவதையும் படித்து விட்டு, அதைப்பற்றி பக்கம் பக்கமாக தன் கையெழுத்தில் எழுதியதற்கு ஒரு உதாரணமாக -

மறைந்த நீதியரசர் திரு.மகராஜனின் திருப்புதல்வர் டாக்டர் சந்திரசேகர் என்பார் பாதுகாத்து வைத்திருந்த அந்தக் கடிதத்தின் நகலை - தற்போது முதல்வருக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் திரு.கிருஷ்ணசாமி அவர்கள் மூலமாக கொடுத்து

அனுப்பியிருப்பதை நம்முடைய வாசகர்களும் படித்திட வேண்டும் என்பதற்காக அந்தக் கடிதத்தை இங்கே அப்படியே வெளியிட்டுள்ளோம்.

(ஆசிரியர் - முரசொலி)

3468. எத்தனை நாள்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

உடன்பிறப்பே,

முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதா மீது தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை,

ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு 1-7-1991 முதல் 30-4-1996 வரை ஆட்சி செய்த காலத்தில் சுமார் 66 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிற்கு முதலமைச்சர் ஜெயலலிதா சொத்துக்களைக் குவித்ததாக 5-7-1997இல் வழக்கு ஒன்று தாக்கல் செய்தது.

வழக்கு தொடுக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகின்றன.

இன்னும் வழக்கு ஒரு முடிவுக்கு வந்து தீர்ப்பு வழங்கப்பட வாய்ப்பு ஏற்படவில்லை.

இதற்குள் தமிழகத்தில் மூன்று முறை ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

இந்த வழக்கு வரலாறு காணாத வகையில் 13 ஆண்டுகளாக; சட்ட நிபுணர்களேகூட எதிர்பார்க்காத அளவிற்கு இழுத்தடிக்கப் படுவது பற்றிய சில விவரங்களை இங்கே தொகுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1997ஆம் ஆண்டு தொடரப்பட்ட இந்த வழக்கில் 259 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

வழக்கு விசாரணையின்போது ஜெயலலிதா தரப்பில் சிறிதும் ஒத்துழைக்காமல் எந்த அளவிற்குத் தாமதம் ஏற்படுத்திட முடியுமோ - அந்த அளவிற்கு தாமதம் ஏற்படுத்தப்பட்டது.

வழக்கு விசாரணை தாமதப்பட்டு வந்த நிலையில் 2001ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு -

ஜெயலலிதா முதல்வராகப் பொறுப்பேற்றார்.

அதன் பின்னர் வழக்கின் போக்கில் அதிர்ச்சி தரத்தக்க மாற்றமும், பின்னடைவும் ஏற்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிபதி மாற்றப்பட்டார்.

அரசு வழக்கறிஞர்கள் மாற்றப்பட்டனர்.

ஏற்கனவே விசாரிக்கப்பட்ட 76 சாட்சிகள் மீண்டும் வரவழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில்தான் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் சட்டத்தின்படி நியாயமான விசாரணை நடைபெற வேண்டும் என்பதற்காக, உச்ச நீதிமன்றத்தில், இந்த வழக்கு விசாரணையை வேறு மாநில நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்.

28-2-2003 அன்று உச்ச நீதிமன்றம் - சென்னை சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்தது.

18-11-2003 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா, எச்.கே. சேமா ஆகியோர் அளித்த தீர்ப்பில் -

பேராசிரியரின் கோரிக்கையை ஏற்று - சென்னை சிறப்பு நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கினை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டுமென்று உத்தரவிட்டனர்.

உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் அளித்த அந்த தீர்ப்பில் சில வாசகங்கள் இன்றும் நினைவிலே கொள்ள வேண்டியதாகும்.

"ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரரான (பேராசிரியர்) அரசியல் எதிரி என்ற முறையில் இந்த வழக்கை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருப்ப தாகவும், அரசியல் காரணங்களுக்காகவே இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். இந்த வாதம் ஏற்புடையதல்ல. போடப்பட்டிருக்கின்ற மனு, அரசியல் காரணத் திற்காக போடப்பட்ட ஒன்று என்று கூறி அலட்சியப்படுத்தக் கூடிய ஒன்றல்ல.

இந்த வழக்கில் மனுதார் (பேராசிரியர்) பல நியாயமானதும், ஏற்கத்தக்கதுமான காரணங்களையும் கூறியுள்ளார். அதாவது இதிலே நீதி மறுக்கத் தக்க வகையிலும், ஒருதலைப் பட்சமாக

வழங்கக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்று வலுவான ஐயங்களை எழுப்பியிருப்பதை எங்கள் கருத்தின் அடிப்படையில் ஏற்கிறோம்.

2000 ஆம் ஆண்டில் அரசு தரப்பு சாட்சியாக சாட்சியம் அளித்துள்ள ஒரு அரசு அதிகாரி, 2003இல் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தூண்டுதலின்பேரில், மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, 2000ஆம் ஆண்டு அவர் அளித்த முதல் சாட்சியம் கட்டாயத்தின் பேரில் கூறப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். இந்தச் சாட்சி அடித்த பல்டி குறித்து அரசு வழக்கறிஞர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. அதுபோலவே குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் ஆடிட்டர் 2000ஆம் ஆண்டில் அளித்த சாட்சியத்திற்கும் மீண்டும் திரும்ப அழைத்த போது அளித்த சாட்சியத்திற்கும் இருந்த மாறுபாடுகள் குறித்து அரசு வழக்கறிஞர் கண்டு கொள்ளவே இல்லை.

இவர்களைப் போல மேலும் பல சாட்சிகள் (அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது) மீண்டும் சாட்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட போது, அவர்கள் எல்லாம் தாங்கள் முதலில் அளித்த சாட்சியம் கட்டாயத்தின் பேரில் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனினும், அவர்களை யெல்லாம் பிறழ் சாட்சிகள் என்று அரசு வழக்கறிஞர்கள் கூறவில்லை.

எந்தெந்த சாட்சிகள் இவ்வாறு மாறினார்கள் என்பதற்கு சில உதாரணங்களைத் தந்துள்ளோம். இதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் களுடன் எந்த அளவிற்கு அரசு தரப்பினர் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

76 சாட்சியங்கள் இவ்வாறு திரும்ப அழைக்கப்பட்டவர்களாவர். இவர்களில் பெரும்பாலோர், முன்னரே குறுக்கு விசாரணை செய்யப்பட்டவர்களாவர். ஏன் இத்தனை பேர் மீண்டும் அழைக்கப்பட்டார்கள் என்று நீதி மன்றம் கேட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் மூத்த வழக்கறிஞருக்கு முன்பு நேரம் இல்லாத நிலையிருந்ததால் தற்போது அவர்கள் எல்லாம் மறு விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டது. இதற்கு அரசு வழக்கறிஞர் எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை. அரசு வழக்கறிஞரின் இத்தகைய போக்கு ஒன்றே விசாரணை நேர்மையாக நடக்கவில்லை என்பதை காட்டுவதாக உள்ளது. தீர்ப்பின் பாதை திருப்பி விடுவதைப் போலத் தோன்றுகின்றது.

மேலே விளக்கியிருக்கின்ற நிகழ்வுகளை யெல்லாம் பார்க்கும்போது நீதியின்பால் மக்களுக்குள்ள நம்பிக்கை குறைகின்ற அளவிலே (ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது) செயல்பட்டுள்ளார்கள் என்பது புலனாகும். ஏற்கனவே விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணையும் முடிவுற்ற சாட்சிகளை சாதாரண ஒரு காரணத்தைக் கூறி மீண்டும் திருப்பி அழைத்து விசாரணை நடத்தியிருக்கக் கூடாது. இந்தச் செயல்கள் இரண்டாவது குற்றவாளி, (ஜெயலலிதா) மீண்டும் இந்த மாநிலத்தின் முதல் அமைச்சராகப் பதவியேற்ற பிறகு நடந்தது என்பதும், அவரது அரசால் புதிய அரசு வழக்கறிஞர் நியமிக்கப்பட்ட பிறகு அவர் இதற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்திருக்கிறார் என்பதும் நீதி எந்த அளவிற்கு வளைக்கப்பட்டிருக்கிறது என்பதற்குமான தெளிவினைத் தருகின்றது. அத்தகைய சாட்சிகள் மீது புதிய அரசு வழக்கறிஞர் எந்தக் குறுக்கீடும் நடத்தாமல் இருந்ததிலிருந்து, அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு ஒன்றிப் போய் விட்டார் என்பதை எடுத்துக்காட்டி, ஒட்டு மொத்தமாக மக்கள் மனதில் நேர்மையான நீதி கிடைக்காதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தி யிருக்கின்றது. நீதியின் பாதை திசை திரும்பி விட்டது என்பதற்கான வலுவான அடையாளம் தெரிகிறது.

இந்த நிலையில் மனுதாரரின் மனதிலே இந்த வழக்கு பற்றிய சந்தேகம் ஏற்பட்டதில் தவறில்லை. அவருக்கு மட்டுமல்ல, மக்கள் மனதிலும் நீதி வழங்கப்படாமல் போய்விடுமோ என்ற ஐயம் ஏற்பட்டதில் வியப்பில்லை.

மனுதாரரின் (பேராசிரியர்) வழக்கறிஞர் திரு. அந்த்யார்ஜுனா எங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வந்தார். இரண்டாவது குற்றவாளியிடம் விதி 313இன் படி நடத்தப்பட்ட விசாரணை குறித்து தெரிவித்து, சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே அது நடந்ததாகக் கூறியிருக்கிறார். இரண்டாவது குற்றவாளி 24-2-2003 அன்று தாக்கல் செய்த மனுவில் அவர்; தான் நேரில் ஆஜராகாமலிருக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவருடைய வழக்கறிஞர் மூலமாக கேள்விகளுக்கு பதிலளிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அந்த மனுவின் பாரா 5இல் தூத்துக்குடி மாவட்டத்தில் கடுமையாக ஒரு வாரம் தேர்தல் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு

அப்போது தான் திரும்பியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். சுரம் காரணமாக படுக்கையில் இருப்பதால் மருத்துவர்கள் மேலும் சில நாட்கள் ஓய்வெடுக்கும்படி பணித்திருக்கிறார்கள். எனவே 313வது விதியின்படி நேரில் நீதி மன்றத்தில் ஆஜராக முடியாத நிலை உள்ளது. மனுவின் 6வது பாராவில், அவர் இந்த வேண்டுகோளை தான் வகிக்கும் பதவி காரணமாக கொடுக்கவில்லை என்றும், உடல் நிலை காரணமாகவே தருவதாகவும் தெரிவித்திருக்கிறார். அரசு வழக்கறிஞர் இந்த மனு மீது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் தெரிவித்த ஆங்கில வாசகங்களை அப்படியே இங்கே தருகிறேன்.

The Supreme Court Judges said that "it is undisputed that 76 witnesses have been recalled. Many of them had earlier been cross examined. We were informed that witnesses were recalled as senior counsel for Ms. Jayalalithaa had been busy attending to some other case filed against her when they were first examined."

(இந்த வழக்கில் 76 சாட்சிகள் மீண்டும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே குறுக்கு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டவர்கள். ஏன் அவர்களை மீண்டும் அழைத்தீர்கள் என்று கேட்டதற்கு, ஜெயலலிதாவின் மூத்த வழக்கறிஞருக்கு அவர் மீதுள்ள வேறு பல வழக்குகளில் ஆஜராக வேண்டிய பணிகள் இருந்த காரணத்தினால் தற்போது மீண்டும் அந்தச் சாட்சிகள் திரும்ப அழைக்கப்படுகிறார்கள் என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள்.)

இப்படி சாட்சிகளை அழைத்தது பற்றி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் என்ன சொல்கிறார்கள்?

The Bench said that the fact that witnesses were recalled for cross examination on flimsy grounds after Ms. Jayalalithaa assumed power as Chief Minister and the Public Prosecutor appointed by her Government did not oppose and / or gave consent to application for recall of witnesses was indicative of how "judicial process is being subverted"

(ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சாதாரணமான ஏதோவொரு காரணத்தைக் கூறி இந்தச் சாட்சிகள் மீண்டும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஜெயலலிதாவின் அரசினால் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்கறிஞர் எந்த எதிர்ப்பும்

தெரிவிக்காமல் அனுமதி கொடுத்திருக்கிறார். இது ஒன்றே எந்த அளவிற்கு நீதி இந்த வழக்கிலே திசை திருப்பப்பட்டுள்ளது என்பது நன்றாக விளங்குகின்றது.)

It does appear that the new public prosecutor is hand in glove with the accused thereby creating a reasonable apprehension of likelihood of failure of justice in the minds of the public at large. There is strong indication that the process of justice is being subverted. The conduct of the Public Prosecutor in not opposing such a frivolous application has to be deprecated.

(புதிய அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு (ஜெயலலிதா குழுவினரோடு) இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாக பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத் தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாக தெரிகின்றது. 313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல் இருக்க தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது.)

The Judges took serious exception to the trial court dispensing with the personal appearance of Ms. Jayalalithaa and said "be you ever so high, the law is above you. The grounds cited by her in the application were not all mitigating circumstances to have granted dispensation of personal appearance. To say the least, that was a ploy adopted to circumvent the due process of law.

(ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் இருக்க விசாரணை நீதிமன்றம் அனுமதி கொடுத்ததற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய கடுமையான எதிர்ப்பை அந்தத் தீர்ப்பிலே தெரிவித்திருப்பதோடு, "நீங்கள் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தபோதிலும், உங்களை விட சட்டம் உயர்ந்தது. நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்கு கொடுக்கக் கூடிய அளவிற்கு அவரது மனுவிலே காரணங்கள் கூறப்படவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சட்டத்தின் பாதையை திசை திருப்புவதற்கான செயல்தான் நடைபெற்றுள்ளது".)

நீதிபதிகள் முடிக்கும்போது கூறுகிறார்கள்;

"In our view, the petitioner has raised many justifiable and reasonable apprehensions of miscarriage of justice and likelihood of bias, which would require ourinterference"

அதாவது "எங்களின் கருத்தின்படி, மனுதாரர் (பேராசிரியர்) நியாயப்பூர்வமான, கருத்தில் கொள்ளத்தக்க சந்தேகங்களை எழுப்பி, அதாவது நீதி திசை திருப்பியும், பாரபட்சமாகவும் செல்வதால் எங்களுடைய குறுக்கீடு அவசியம் தேவை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளே தெரிவித்திருக்கிறார்கள்.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநில நீதிமன்றத்துக்கு மாற்றிட வேண்டுமென்று நமது பேராசிரியர் வைத்த வேண்டுகோள் மனுவை ஏற்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் மேலும் தெரிவித்துள்ள கருத்துக்கள் யாவை?

1. செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசு; 1997ன் சி.சி. எண். 7 வழக்கில் தீய நோக்கத்தோடு, வேண்டுமென்றே அரசு வழக்கறிஞரின் உதவியோடு நேர்மையான சுதந்திரமான விசாரணையை குலைப்பதற்காக தலையிட்டுள்ளது.

2. தங்கள் முந்திய வாக்குமூலங்களை மாற்றிக் கூறிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவோ, மறு விசாரணை செய்யவோ முயற்சிக்காமல் அரசு வழக்கறிஞர் கடமையிலிருந்து தவறியிருப்பது, அரசு வழக்கறிஞர் துறை, ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்கு வழியமைத்துக் கொடுக்க ரகசியமாக முடிவு செய்து செயல்பட்டுள்ளது. இதன்மூலம் நீதி நிர்வாகத்தில் தலையிட்டுள்ளது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகிறது.

3. முதல் அமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா சென்னையிலேயே இருக்கும் பொழுது இந்திய குற்றவியல் சட்டம் 313வது பிரிவின்கீழ் அவர் நேரில் ஆஜராகாமல் இருப்பதற்கு அரசு வழக்கறிஞர் ஒப்புதல் அளித்திருப்பது, அரசு வழக்கறிஞர் சுதந்திரமாக செயல்படவில்லை ; முதல் குற்றவாளியான செல்வி ஜெயலலிதாவின் விருப்பப்படியே செயல்படுகிறார் என்பதைத் தெரிவிக்கிறது.

4. 1997ன் சி.சி. எண். 7 வழக்கில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் சட்ட விரோதத் தலையீடும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசு வழக்கறிஞர் சட்ட விரோத உதவியளித்ததும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவையும், இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 313வது பிரிவையும் மீறிய செயலாகும். எல்லாவற்றையும் விட, இது குற்றவியல் நீதி முறையைக் குலைக்க மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியாகும்.

இவ்வாறெல்லாம் கூறிய உச்சநீதிமன்ற நீதிபதிகள் -

வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தமிழக அரசு பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் -

ஆறு வாரத்தில் இப்பணிகள் முடிக்கப்பட வேண்டும் -

அதன் பிறகு அன்றாடம் விசாரணை நடைபெற வேண்டும் -

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விசாரணையின்போது சாட்சியம் அளிக்க நேரில் ஆஜராக வேண்டும் -

---

முதல்வராக இருந்தாலும், யாராக இருந்தாலும் நீதி மன்றத்தின் முன் அனைவரும் சமமே.

இந்த வழக்கைப் பொறுத்தவரை விசாரணை நேர்மையான முறையில் நடைபெறவில்லை. அதை அப்படியே உச்ச நீதிமன்றம் வேடிக்கை பார்க்க முடியாது. எனவே இந்த வழக்கை பெங்களூருக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வாறு 2003ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றத்தில் இரண்டு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்ட பிறகு

ஏழு ஆண்டுகளாகி விட்டன. இருந்தும் இன்னமும் வழக்கு முடிந்தபாடில்லை.

ஒரு சிறிய குற்றத்தைச் செய்பவர் தொடர்பான வழக்கிலே கூட - உடனடியாக விசாரித்து - அப்போதே தண்டனை வழங்கப்படுவதை பார்க்கிறோம்.

ஆனால் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்த ஊழல் வழக்கில் 13 ஆண்டுகள் ஆகியும் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங் களையும் தமிழக அரசு பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் -

ஆறு வாரத்தில் இப்பணிகள் முடிக்கப்பட வேண்டும் - என்று உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தீர்ப்பு கூறிய பிறகும், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் வரை வழக்கு ஆவணங்கள் கர்நாடக சிறப்பு நீதி மன்றத்திற்கு அப்போதிருந்த அ.தி.மு.க. அரசினால் ஒப்படைக்கப்படவே இல்லை.

அதற்குப் பிறகு ஜெயலலிதா உட்பட ஐந்து பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு உச்ச நீதிமன்ற உத்தரவின்படி பெங்களூர் தனி நீதி மன்றத்தில் விசாரணை தொடங்கிய போதிலும் நான்கு முறை ஜெயலலிதா தனி நீதி மன்றத்தில் ஆஜராகவில்லை. ஜெயலலிதா தரப்பில் ஒரு மாதம் அவகாசம் கேட்டார்கள். அதற்கு நீதிபதி பச்சாபுரே அவகாசம் தராமல், 18-4-2005க்கு வழக்கை ஒத்தி வைத்தார். 18ஆம் தேதியன்றும் ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் ஆஜராக வில்லை. ஜெ.யின் வழக்கறிஞரும் ஆஜராக வில்லை. மூத்த வழக்கறிஞரின் உதவியாளர், மூத்த வழக்கறிஞர் உடல் நலம் சரி இல்லாமல் மருத்துவமனையிலே இருப்பதாகக் கூறினார். "அவர் வராமல் போகட்டும், குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேரும் எங்கே? குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாமல் இருப்பதை வைத்தே தீர்ப்பு வழங்கி விடுவேன்" என்றார் நீதிபதி.

இறுதியாக விசாரணையை 2005ஆம் ஆண்டு மே 9ந்தேதிக்கு ஒத்தி வைத்த நீதிபதி அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட அனைவரும் கண்டிப்பாக கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார். 9-5-2005 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் நீண்ட நாள் அவகாசம் கேட்டார். அப்போது ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட ஐந்து பேரும் நீதி மன்றத்தில் ஆஜராகாததால் நீதிபதி பச்சாபுரே கடும் கோபமடைந்தார்.

"வருகிற 16ந்தேதி இறுதி அவகாசம் தருகிறேன், அதற்கு மேல் அவகாசம் தர மாட்டேன். அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட ஐந்து பேரும் கண்டிப்பாக ஆஜராக வேண்டும். நீண்ட

அவகாசம் கேட்பதை ஏற்க முடியாது. வழக்கை தினந்தோறும் நடத்தவுள்ளேன். இப்படி அடிக்கடி வாய்தா கேட்டால் எப்படி வழக்கை விரைவாக நடத்துவது, (ஜெயலலிதாவின் வழக்கறிஞர் தனக்கு வேறு நீதிமன்றங்களில் பணியிருப்பதாகக் கூறினார்)

உங்களுக்கு பல கோர்ட்டுகளில் வேலை இருக்கும். உங்கள் ஒருவருக்காக இந்த வழக்கை தள்ளி வைக்க முடியுமா? இது நியாயமற்றது. பல ஆண்டுகளாக இந்த வழக்கு முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இப்படி அடிக்கடி அவகாசம் கேட்பதை ஏற்க முடியாது. இரண்டரை ஆண்டுகளாக வழக்கை வாய்தா கேட்டு இழுத்தடித்து விட்டு தற்போது மீண்டும் வாய்தா கேட்பது சரிதானா? சுப்ரீம் கோர்ட்டு இந்த வழக்கை விரைவாக நடத்த வேண்டுமென்று எனக்கு உத்தரவிட்டு உள்ளது. கடந்த ஆறு மாதமாக இந்த வழக்கில் எந்த விசாரணையும் நடக்கவில்லை. நான் தனியாக கடந்த ஆறு மாதமாக உட்கார்ந்து வருகிறேன். தனி சிறையில் அடைக்கப்பட்டு உள்ளது போல உள்ளேன்" என்றார்.

ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரணைக்கு ஆஜராகாமல் வேண்டுமென்றே வழக்கைத் தாமதப்படுத்துவது கண்டு நீதிபதி கடுங்கோபமடைந்து தனது கோபத்தை, சாதாரணமானவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்தியும் கூட, 16ம் தேதி யன்றும் யாரும் ஆஜராகவில்லை . மீண்டும் 3 வாரம் வாய்தாவிற்கு நேரம் கொடுக்க மறுத்து நீதிபதி விசாரணையை வருகிற அந்த ஆண்டு மே 25 ஆம் தேதிக்கு தள்ளி வைத்தார். அப்போதும் ஜெயலலிதா வரவில்லை. அவரது வழக்கறிஞர்கள் ஆஜராகி வழக்கை மீண்டும் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

இவ்வாறு வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த ஜெயலலிதா குழுவினர் பின்பற்றிய அனைத்து வகை உத்திகளுக்குப் பின்னர் தற்போது 25-2-2010 அன்று முதல் கர்நாடக சிறப்பு நீதி மன்றத்தில் ஜெயலலிதா மீதான 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கு மேல் விசாரணை தொடங்கியிருக் கின்றது. கடந்த 13 ஆண்டுகளாக இந்த வழக்கிலே பல முயற்சிகளின் வாயிலாக வாய்தா வாங்க முயன்ற ஜெயலலிதா - தற்போதும் பெங்களூரு சிறப்பு நீதி மன்றத்திலும் இந்த விசாரணை தொடராமல் இருக்க - ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தைக் கண்டுபிடித்துக் காட்டி அதன் அடிப்படையில்,

பல்வேறு மனுக்களை சிறப்பு நீதி மன்றத்திலும், கர்நாடக உயர் நீதி மன்றத்திலும், டெல்லி உச்ச நீதி மன்றத்திலும் தாக்கல் செய்து வருவதை கடந்த இரண்டு மாத கால செய்திகளின் மூலமாக நாட்டு மக்களே நன்கறிவார்கள்.

உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா சார்பில் இப்போது தாக்கல் செய்த மனு கூட இன்று தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு 66 கோடி ரூபாய் குவித்ததற்கான வழக்கு - அப்போது 66 கோடி ரூபாய் என்றால் தற்போது எத்தனை கோடி ரூபாய் சொத்து என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். கட்சிக்காரர்களை நினைத்தபடி ஏமாற்றலாம் - மக்களை ஓரளவு ஏமாற்றலாம் - கட்சிக்காரர்களும் ஏமாந்து போய்; மக்களை ஏமாற்ற முனையலாம் - சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து கொண்டு நீதியை தாமதப்படுத்தலாமே தவிர நிரந்தரமாகத் தவிர்த்திடவோ, ஏமாற்றிடவோ முடியாது என்பதை காலம்தான் உணர்த்த வேண்டும். இந்த விவரங்களையெல்லாம் மக்களுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு உனக்குத்தான் உள்ளது.

அன்புள்ள,

மு.க.

12-05-2010

3469. பன்னீர், பயன்படுத்திய பயனிலா வார்த்தை!

உடன்பிறப்பே,

எண்ணிப் பார்க்கிறேன் - உன்னை "உடன்பிறப்பே" என்று அழைத்து எத்தனை கடிதங்கள் எழுதிவிட்டேன். இந்தக் கடிதத்தில் "உடன்பிறப்பே" என்று தொடங்கி, உன்னை விளித்திடும்போது; இன்று காலையில் சட்டப் பேரவையில்; எதிர்க்கட்சித் துணைத் தலைவர், "உடன்பிறப்பு" என்பது எனக்கு ஒரு போர்வை என்று எப்படித்தான் மனம் துணிந்து குறிப்பிட்டாரோ தெரியவில்லை - ஆம்; இப்படித்தான் சொன்னார்; முதலமைச்சர் முரசொலியில் "உடன்பிறப்பு" என்ற போர்வையில் எழுதியுள்ள கடிதம் என்றுதான் சொன்னார்.

1969 முதல் 1976 வரை ஏழு ஆண்டுகள்- 1989 முதல் 1991 வரை இரண்டு ஆண்டுகள் - 1996 முதல் 2001 வரை ஐந்து ஆண்டுகள் - இப்போது 2006 முதல் இதுவரை நான்கு ஆண்டுகள் நிறைவு செய்து; மொத்தம் பதினெட்டு ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றி, பத்தொன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். ஆம் - பதினெட்டு என்பது; வரலாற்றில், புராண இதிகாசங்களில் குறிப்பிடத்தக்க ஒரு எண்ணாகவே இருந்திருக்கிறது. பாரதப் போர் பதினெட்டு நாட்கள் - இராமாயணப் போர் பதினெட்டு மாதங்கள் - தேவாசுரப் போர் பதினெட்டு ஆண்டுகள் - சேரன் செங்குட்டுவன் இமய மலைக் குயிலாலுவத்தில் கனக விசயருடன் நடத்திய போர் பதினெட்டு நாழிகை என்று; பதினெட்டு என்ற எண்ணுக்குப் பெருமை சேர்க்கும் புலவர்கள் உண்டு.

என் வாழ்க்கையில் பதினெட்டு என்பது எனக்குப் பெருமை சேர்க்காவிடினும் - பதினெட்டை நினைத்து நான் பெருமூச்செறியும் பல சந்தர்ப்பங்களைச் சந்தித்துள்ளேன்.

அந்த சந்தர்ப்பங்களில் ஒன்றுதான், இன்று சட்டப் பேரவையில் நான் சந்தித்தது. பதின்மூன்று ஆண்டுகளாக இழுத்துக் கொண்டே போகும் ஒரு வழக்கு பற்றியதுதான் நான்

"முரசொலி"யில் எழுதியுள்ள கடிதம் - உடன்பிறப்பாம் உனக்கு எழுதியது!

"உடன்பிறப்பு" என்பது எனக்கு ஒரு போர்வையாம் - அந்தப் போர்வையில் நான் புகுந்து கொள்கிறேனாம்; பன்னீர் சொல்கிறார் - "உடன்பிறந்த சகோதரம்" என்றும், "உடன்பிறவாச் சகோதரம்" என்றும், நான் போர்வைகளை இழுத்துப் போர்த்திக் கொண்டிருக்க வேண்டிய தேவையே ஏற்பட்டதில்லை.

இராவணன், கும்பகர்ணனை விளித்தது போலவும் - இராமன், இலக்குவனை விளித்தது போலவும் - "உடன்பிறப்பே" என்று விளித்திட ஓராயிரம், பத்தாயிரம், இலட்சமென உன் போன்ற உடன்பிறப்புகள் எனக்கு இருக்கிறீர்கள்!

நீங்கள் போர்வைகள் அல்லர் - போருக்குத் தோள் தட்டும் மறவர்கள்- மானமிகு வீரர்கள் என்பதை அறிந்திருந்தும் - அமைதிக்குப் பெயர் போன அருமை நண்பர் பன்னீர் அவர்கள் - "பச்சைத் தமிழர்" என்று பேரவையிலேயே என்னால் அழைக்கப்பட்ட பன்னீர் அவர்கள் - அவற்றையெல்லாம் மறந்துவிட்டு அல்லது மறைத்து விட்டு - எப்படி ஒரு வார்த்தையை சொன்னார் பார்த்தாயா? போர்வையாம் நீ! உன்னைக் கொண்டு மறைத்தவாறு நான் உனக்கும், உலகிற்கும் கடிதம் தீட்டுகிறேனாம்.

கடந்து, நடந்து முடிந்த இந்தப் பதினெட்டு ஆண்டுக் காலப் பதவிக் காலத்தில், எத்தனையோ இத்தகைய வார்த்தைகள், வசவுகள் - அவற்றை மீறி எழும் வாழ்த்துகள் - பாராட்டுகள் அனைத்தையும் சந்தித்த சரித்திரம்தான் என்னுடையது; இதில் பன்னீர் பயன்படுத்திய அந்தப் "போர்வை"க்காகவா; என்னைப் புலன் மாற்றிப் போட்டுக் கொள்ளப் போகிறேன்?

இளமையில் இரத்தத்துடன் ஊறிய சுயமரியாதைச் சூடும் தணியவில்லை; முதுமையில், "வாழ்க வசவாளர்கள்" என்று

நம் அண்ணன் சொன்ன வாசகமும் மறக்கவில்லை.

"வாழ்க வசவாளர்கள்" என்று வாழ்த்தி இம்மடலை முடிக்கிறேன்.

அன்புள்ள

மு.க.

13-05-2010

3470. சிறுதாவூர் சீமாட்டிக்கு சீற்றம் ஏனோ?

உடன்பிறப்பே,

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றையதினம் அவரது கட்சிக்காரர்கள் இல்லத்தில் சில திருமணங்களை நடத்திவைத்து விட்டுப் பேசும்போது - மணமக்களை வாழ்த்துவதற்கு செலவழித்த நேரத்தை விட - என்னை வசைபாடுவதற்காக அதிக நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அது மண விழாவானாலும், ஆர்ப்பாட்டமானாலும், எந்த விழாவானாலும் அவரது பேச்சுக்கு மய்யமாக நான் மட்டும்தான் இருக்கிறேன் போலும்! எத்தனையோ பேர் எனக்குச் சாபம் கொடுத்து முடித்து விட்டார்கள். ஏன் இந்த அம்மையாரே பலமுறை எனக்குக் கொடுத்த சாபம் எதுவும் பலிக்கவில்லை.

நான் சின்னஞ்சிறுவனாக திருவாரூரில் எனது உறவினர் திரு. கிருஷ்ணன் (முரசொலி சொர்ணத்தின் தந்தையார்) இல்லத்தில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த போது - அண்ணன் கிருஷ்ணன் அவர்கள் என்னை அணுகி, தம்பி சோதிடம் இல்லை, சாத்திரம் இல்லை என்றெல்லாம் நீ இந்தச் சிறு வயதிலேயே பிரச்சாரம் செய்கிறாயே, எனக்குத் தெரிந்த சோதிடர் ஒருவர் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் அப்படியே உள்ளதை உள்ளவாறு சொல்கிறார் என்றும், அடுத்த நாள் அவர் வீட்டிற்கு வருவதாக சொல்லியிருக்கிறார் என்றும், அந்த நேரத்தில் நீயும் இருந்து அவர் சொல்வதைக் கேட்க வேண்டும் என்றும் கூறினார். நானும் பார்க்கிறேன் என்று சொல்லி விட்டேன். அன்று மாலையில் ஒரு அம்மையார் என்னை சந்தித்தார். அவர் என்னிடம், "ஏம்பா, நீதான் இந்த வீட்டுக்காரரின் பிள்ளையா?" என்று கேட்டார். அவர் யார் என்பதைப் புரிந்து கொண்டேன். அவரது கேள்விக்குப் பதிலாக ஆமாம் என்று கூறினேன். எத்தனை பேர் உடன் பிறந்தவர்கள்

என்று அந்த அம்மையார் கேட்க, நானும் ஒரு தோராயமாக "மூன்று பிள்ளைகள், இரண்டு பெண்கள்" என்று சொன்னேன். இது போலவே வேறு சில கேள்விகளையும் என்னைக் கேட்டு, என்னிடம் பதிலைத் தெரிந்து கொண்டு போய் விட்டார்கள்.

அடுத்த நாள் காலையில், சோதிடரும் முதல் நாள் என்னைச் சந்தித்த அந்த அம்மையாரும் கிருஷ்ண அண்ணன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ண அண்ணன், அவரது துணைவியார், நான் மற்றும் சுற்றிலும் அமர்ந்தோம். சோதிடர் அவருக்கே உரிய சிலவற்றை செய்து விட்டு - கிருஷ்ண அண்ணனிடம் என்னைக் காட்டி, இவர் தானே உங்கள் மைந்தர் என்றார். கிருஷ்ண அண்ணனிடம் நான் ஏற்கெனவே சொல்லி வைத்திருந்ததால் அவர் எதுவும் பேசாமல் ஒத்துக் கொள்வதைப் போல அமர்ந்திருந்தார். அடுத்து சோதிடர் உங்களுக்கு எத்தனை ஆண் குழந்தைகள் என்று சொல்லட்டுமா என்று கேட்க - சோதிடருக்கு எதிரே இருந்த சோதிடரின் மனைவி தன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு - மூன்று விரல்களை நீட்ட - அதைப் பார்த்துக் கொண்டே - உங்களுக்கு மூன்று பிள்ளைகள்தானே? என்றார். கிருஷ்ண அண்ணன் அதற்கும் எதுவும் பேசவில்லை. அடுத்து எத்தனை பெண் குழந்தைகள் என்று சொல்லட்டுமா என்று கேட்டுத் தனது மனைவியைப் பார்க்க அந்த அம்மையார் எதுவும் காட்டிக் கொள்ளாமல் இரண்டு விரல்களை நீட்டிக் காட்டிட, சோதிடர்; உடனே இரண்டு பெண் குழந்தைகள் தானே என்றார். கிருஷ்ண அண்ணனுக்கு கோபம் வந்து விட்டது. அவருக்கு கோபம் வந்தால் வாயில் வார்த்தைகள் இப்படித்தான் வரும் என்றில்லை. சரமாரியாக சோதிடரைத் திட்டத் தொடங்கி விட்டார். சோதிடரின் மனைவி நேற்று இந்த பிள்ளையாண்டான் தான் இந்த விவரங்களை யெல்லாம் சொன்னதாக என்னைக் காட்டி விட - சோதிடர் என் பக்கம் திரும்பி "இந்தச் சிறு வயதிலேயே இப்படியெல்லாம் செய்கிறாயா? நீ உருப்படவே மாட்டாய்" என்று பெரிய சாபத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். அந்தச் சாபம் பலித்ததா என்பதற்கு இந்த உலகமே சாட்சி!

அந்தச் சோதிடர் விட்ட சாபமே பலிக்க வில்லை என்கிற போது - ஜெயலலிதா விடுகின்ற சாபமா பலிக்கப் போகிறது?

நான் எழுதிய "சிலப்பதிகார காப்பியம்" என்ற நாடகத்திலேயே இந்தச் சோதிடம் பற்றி ஒரு அத்தியாயமே எத்தனையோ

ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருக்கிறேன். அதில் சோதிடன் ஒருவன் அரசர் நெடுஞ் சேரலாதனிடம் அவருடைய இளைய மகன் இளங்கோதான் அடுத்து பட்டத்திற்கு வருவான் என்று சொன்ன போது - இளைய மகன், இளங்கோ குறுக்கிடுவான். அது,

"இளங்கோ:- இல்லை, இல்லை. என் அண்ணனே ஆளப் பிறந்தவர்!

சேரலாதன்:- இளங்கோ! நிமித்தகர் வாக்குப் பொய்க்காது!

இளங்கோ:- பொய்க்காது படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது! இது உண்மைக் காது! அவர் ஆரூடம் கேட்டுக் கலங்காது!

நிமித்திகன்:- ஊழ்வினையை மாற்ற இயலாது இளங்கோ!

இளங்கோ:- ஏன் இயலாது? "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" எனக் குறள் கூறும் கருத்தை உண்மையாக்குகிறேன்! நீர் கூறும் விதியை மதியால் வெல்லுகிறேன்!

நிமித்திகன்:- மூத்தவன் இராமன் காடாள வேண்டும்; இளையவன் பரதன் நாடாள வேண்டும் என்ற விதியை யாராவது மாற்ற முடிந்ததா?

இளங்கோ:- பரதனும் ஆளவில்லை; இராமனும் ஆளவில்லை; பதினான்கு வருடம் பாதுகை அல்லவா நாடாண்டது! நிமித்திகரே, பழைய இதிகாசங்களைக் காட்டி விதியை நிலை நிறுத்த எண்ணாதீர்! இதோ.....நான் படைக்கிறேன் புதிய இதிகாசம்! உமது ஆரூடத்தை அறிவால் வெல்லுகிறேன்.....அண்ணனையே அரசுக்குரியவராக்குகிறேன்! ஏற்றுக் கொள்ளும் நிமித்திகரே எனது அறைகூவலை! உமது கூற்று தூள்! தூள்! தூளாகப் போகிறது பாரும்!....."

("சிலப்பதிகாரம் - நாடகக் காப்பியம்" என்ற தலைப்பில் நான் எழுதிய இந்த உரையாடல் - திரு. டி.ஜி. நாராயணசாமி, திரு. எம்.டி. ஜெயபாலன், ஆகியோரால் மொழி பெயர்க்கப்பட்டு - திரு. பி. மருதநாயகம், திரு. வி. முருகன் ஆகியோரால் தொகுக்கப்பட்டு - "மேக்மில்லன்" நிறுவனத்தால் அச்சியற்றப்பட்டு - வரும் 31-5-2010 அன்று சென்னையில் இந்தியக் குடியரசு துணைத்

தலைவரால் வெளியிடப்படவுள்ள புத்தகத்தில் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது :-

Ilango :- No, No. It is my brother who is born to rule and nothing shall change that position.

Neduncheraladhan :- Who can defy Destiny, Ilango? Our Astrologer's prediction is bound to come true.

Ilango :- That might be so for those with ears of superstition but not for me, Sire, since my ears are tuned into the gospel of truth and truth alone. The forecast is bound to fail and I accept the challenge of the so-called Fate which has got to turn tail when confronted with deter mined endeavour, as Valluvar has inspired us to believe.

Astrologer :- Haven't you read the epics, Ilango? Could anyone alter the decree of Destiny that Rama the eldest brother should go into exile and Bharata rule in his place?

Ilango :- The epic I read says authoritatively that neither Bharata nor Rama ascended the throne but it was the sandal that reigned supreme. Revered Master - Astrologer, please do not dangle the epics before us in order to prop up a false case. Here and now I swear to create an epic new that shall smash your prediction to smithereens. My brother and brother alone shall rule this land and the miracle that brings this about will not originate from your chart-caged planets but from the effulgent sun of honest intellect.)

இந்த உரையாடலை எழுதியவன் நான்தான். அப்படிப்பட்ட நான் ஏதோ சோதிடரின் வார்த்தையைக் கேட்டு என் வீட்டை அறக் கட்டளைக்கு ஒப்படைக்கப் போவதாக அறிவித்தேனாம். யாரோ சோதிடர் அந்த வீட்டிலே நான் தங்கியிருந்தால் என் உயிருக்கு ஆபத்து என்று சொன்னதால்தான் வீட்டை அறக்கட்டளைக்கு ஒப்படைத்து விட்டேனாம். அம்மையார் ஜெயலலிதா மணவிழா மேடையிலே முழங்கியிருக்கிறார். எந்தச் சோதிடன் சொன்னான் என்று ஜெயலலிதா நிரூபிக்கத் தயாரா? இன்னும் சொல்கிறேன், என்னுடைய பிறந்த நாளுக்குப் பிறகு நான் இப்போதுள்ள வீட்டின் பத்திரத்தைத்தான்; என் மறைவுக்குப் பிறகு அந்த வீட்டை மருத்துவமனையாகப் பயன்படுத்த ஒப்படைக்க இருக்கிறேன்.

இது எதுவும் தெரியாமல் ஜெயலலிதா எந்தச் சோதிடன் சொன்னதையோ கேட்டுக் கொண்டு மணவிழாவிலே சென்று புலம்பியிருக்கிறார்.

அது மாத்திரமல்ல, தலைமைச் செயலகக் கட்டிடத் திறப்பு விழாவினைக் கூட சோதிடன் சொன்னதைக் கேட்டுக் கொண்டு தான் சீக்கிரமாக திறந்து வைத்து விட்டோனாம்! எந்தச் சோதிடன்? சொல்லத் தயாரா? மார்ச் மாதத்திற்கு மேல் பழைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே உட்கார்ந்திருந்தால் நீங்கள் திரும்ப ஆட்சிக்கு வரவே முடியாது என்று சோதிடன் சொன்னதைக் கேட்டு விட்டுத்தான் தலைமைச் செயலகத்தை மாற்றியிருக் கிறேனாம். மார்ச் திங்கள் முடிந்து ஏப்ரல் திங்கள் முடிந்து மே திங்கள் நடைபெறுகிறது. புதிய தலைமைச் செயலகத்தின் பணிகள் முற்றுப் பெற இன்னும் மூன்று நான்கு மாதங்களாகப் போகிறது. அதுவரை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே தான் உட்கார்ந்திருக்கப் போகிறேன். இப்போது ஜெயலலிதாவின் புளுகு என்னவாகப் போகிறது?

ஏன், ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போது புதிய தலைமைச் செயலகம் ஒன்றை கோட்டூர்புரத்தில் கட்டுவதாகச் சொல்லி சோதிடர்களையெல்லாம் அழைத்து வந்து பூஜை புனருத்தாரணங்கள் எல்லாம் செய்து அடிக்கல் நாட்டியதாக ஏடுகள் எல்லாம் பக்கம் பக்கமாக செய்தி வெளியிட்டதே, என்னவாயிற்று? அந்தச் சோதிடம் பலித்ததா?

அது மாத்திரமல்ல, கடற்கரை சாலையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது வைக்கப்பட்ட கண்ணகி சிலையை அன்றாடம் பார்த்துக் கொண்டே தலைமைச் செயலகம் சென்றால், ஆட்சி நீடிக்காது என்று யாரோ சோதிடன் சொன்ன சொல்லைக் கேட்டுக் கொண்டு இரவோடு இரவாக லாரியை விட்டு இடிக்கச் சொல்லி, அந்தச் சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்தி அருங்காட்சியகத்தில் கொண்டு போய் ஒரு மூலையில் போட்டு வைத்தார்களே, அந்தச் சோதிடன் சொன்னது பலித்து அவருடைய ஆட்சி நீடித்ததா? அந்தக் கண்ணகி சிலையை அதே இடத்தில் வைத்து அன்றாடம் நான் பார்த்துக் கொண்டு தானே தலைமைச் செயலகம் செல்கிறேன், என்னுடைய ஆட்சிக்குத் தான் இடைஞ்சல் வந்து விட்டதா?

ஏன், இன்றைக்கு வந்துள்ள ஏடுகளில் ஜெயலலிதா ராகு - கேது - பூஜா செய்ய காளாகஸ்தி போவதாகவும், அதற்காக 300 காவலர்கள் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வதாகவும் செய்தி வந்திருக்கின்றது. இந்த சோதிடம், யாகம், பூஜை, புனருத்தாரணம் எல்லாம் அவருக்கே கை வந்த கலையே தவிர, இளம் பிராயம் முதல் இதில் எதையும் நம்பாத என்னைப் பற்றி மணவிழா மேடையிலே ஏறிக் கொண்டு சோதிடர் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் வீட்டை தானம் செய்கிறேன், தலைமைச் செயலகத்தை மாற்றினேன் என்றெல்லாம் வசைபாடியிருக்கிறார் என்றால், சிறுதாவூர் சீமாட்டிக்கு இந்தச் சீற்றம் ஏனோ என்று தானே கேட்கத் தோன்றுகின்றது! சிறுதாவூர் பற்றி புகார் மனு கொடுத்தவர்கள் மீது வராத கோபம்; என் மீது வரலாமா?

அன்புள்ள,

மு.க.

18-5-2010

3471. கோவை மாநாடு; குறையும் நிறையும் விளக்கும் கடிதம்!

உடன்பிறப்பே,

கோவை மாநகரில் ஜூன் திங்கள் 23 முதல் 27 வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பான ஏற்பாடுகள் குறித்து கலந்தாலோசனை செய்திடவும், நேரடியாக ஆய்வு செய்திடவும், கோவை மாநகரில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். மாநாடு தொடர்பான பல்வேறு பணிகளை வகைப்படுத்தியும், முறைப்படுத்தியும் நேர்த்தியான முறையில் செய்வதற்காக, நமது மாண்புமிகு அமைச்சர்களின் தலைமையில் 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களுடன் நான் நடத்திய கலந்தாலோசனைக் கூட்டத்தில், இதுவரை மாநாட்டிற்காகச் செய்யப்பட்டுள்ளவை, இனி செய்யப்பட வேண்டியவை பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களும், அதிகாரிகளும் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் எந்த அளவிற்கு விரைவாகவும், தரத்தோடும் நடைபெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டின. அமைச்சர்களும், அதிகாரிகளும் மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்குத் தம்மை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு, முனைப்போடு பணியாற்றிக் கொண்டிருப்பது எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக இருந்தது.

மாநாடு தொடர்பாக பொது அரங்க நிகழ்ச்சிகள், ஆய்வரங்க நிகழ்ச்சிகள், கண்காட்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் கொடீசியா அரங்கத்தையும் நான் விரிவாகப் பார்வையிட்டேன். பொது அரங்க நிகழ்ச்சிக்கான பிரம்மாண்டமான பந்தல் மிக அழகாக உருப்பெற்று வருகிறது. பழம்பெரும் புலவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள 28 ஆய்வரங்கங்களும் பல்வேறு நாடுகளிலிருந்தும் கலந்து கொள்ளவிருக்கும் தமிழறிஞர்கள்

வியந்து பாராட்டும்வண்ணம் அமைக்கப்பட்டு வருகின்றன. கண்காட்சிக்கான ஏற்பாடுகள் - வெறும் கண்காட்சியாக மட்டுமில்லாமல், கருத்துக் காட்சியாகவும், காலமெல்லாம் நினைவுகளிலிருந்து விட்டு அகலாத வகையிலும் உருப்பெற்று வருகிறது. பழந்தமிழர் பண்பாடு, நாகரிகம், தமிழிலக்கிய காட்சிகள் போன்றவை இந்தக் கண்காட்சியில் இடம்பெற உள்ளன. பழந்தமிழர் வாழ்க்கை முறையை - இன்றைய தமிழ் இளைஞர்கள் அறிந்து, உணர்ச்சியும், எழுச்சியும் கொள்ளும் வண்ணம், அவை அமைந்து வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

அதைப்போலவே, ஊர்வலத்திற்கான ஏற்பாடுகள் - ஊர்வலத்திலே ஊர்ந்து செல்ல விருக்கின்ற ரதங்கள் போன்றவை காண்போரைக் கவரும் வண்ணம் உருவாகி வருகின்றன.

இவ்வளவு மகிழ்ச்சிக்கும், உற்சாகத்திற்கும் இடையே என் மனதுக்குக் கிலேசம் தருகிற ஒரு காட்சியையும் கோவையிலே காண நேர்ந்தது. கோவை விமான நிலையம் தொடங்கி, வ.உ.சி. மைதானம் வரை - இன்னும் மாநகரின் பல்வேறு இடங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடிகள், பதாகைகள், கழகத்தின் அனைத்து நிலைகளிலும் பொறுப்பேற்றுச் செயல்பட்டுக் கொண்டிருப்போரின் உருவங்கள் தாங்கிய "பேனர்கள்," தெவிட்டிப் போகும் அளவுக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருந்தன. இதே காட்சியை முதல் நாளே, கோவை மாநகருக்குச் சென்ற துணை முதலமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலினும் கவனித்துக் கண்டித்திருக்கிறார் என்று கேள்வியுற்றேன்.

நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கட்சி சார்பற்ற முறையில் தமிழ் மொழிக்காகவும், தமிழர்களுக்காகவும், தமிழக அரசால் நடத்தப்படவிருக்கிற மாநாடே தவிர, அது எள்ளின் முனையளவும் கூட கட்சி மாநாடாக காட்சியளித்து விடக் கூடாது என்பதிலே நான் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறேன் என்பதை ஏனோ கோவை மாவட்டத்து கழக உடன்பிறப்புகள் இன்னும் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதுதான் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

கழகக் கொடிகள், பதாகைகளுக்குப் பதிலாக, பொது மக்களுக்கு எவ்வித சங்கடமும் ஏற்படாத வகையில் - சங்க இலக்கியக் காட்சிகள் அடங்கிய பேனர்கள், உலகத் தமிழ்ச்

செம்மொழி மாநாட்டின் இலச்சினை தாங்கிய பதாகைகள், பழங்கால மன்னர்களின் திருவுருவப்படங்கள், புலவர்களின் ஓவியங்கள் அழகாக அமைக்கப்படுமானால், அதுவே எனக்கு மட்டுமல்லாமல், மாநாட்டுக்கு வருகிற பல இலட்சக்கணக்கான மக்களுக்கும், வெளிநாட்டினருக்கும் நிறைவளிக்கக்கூடிய ஒன்றாகவும், தமிழ் மொழியின் பெருமை, வரலாறு, பண்பாடு இவற்றை விளக்குவதாகவும் இருக்குமென்பதை அனைவரும் அறிந்து - அதற்கேற்ப செயல்பட வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-5-2010

3472. ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்...

உடன்பிறப்பே,

மத்திய அமைச்சர் தம்பி ராசா மீது குற்றச் சாட்டு இருப்பதாகக் கூறி, அவர் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ஏன் ராஜினாமா செய்யவில்லை என்று கேட்டு ஜெயலலிதா இன்று சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார். ஆனால் இந்த அம்மையார் மீது கடந்த காலத்தில் ஊழல் புகார்கள் கூறப்பட்டு, நீதி மன்றத்திலும் நீதியரசர்களால் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டபோது, இவர் தார்மீகப் பொறுப்பேற்று தனது பதவியை ராஜினாமா செய்தாரா?

தான் பன்னிரண்டு வழக்குகளில் விடுவிக்கப் பெற்றேன் என்று அறிக்கையிலே அவர் சொல்லிக் கொண்டபோதிலும், எப்படி அந்த விடுதலை கிடைத்தது, அதே வழக்குகளில் நீதியரசர்கள் அதற்கு முன்பு என்ன தீர்ப்பளித்தார்கள் என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே அறிவார்கள். ஒரு சிலர் அவற்றை மறந்திருக்கலாம் என்பதால் அதனை நினைவூட்டுவதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜெயலலிதா ஒரு தொகுதியிலே கூட போட்டியிடவில்லை. தேர்தலுக்கான மனுத்தாக்கல் ஏப்ரல் 16 ஆம் தேதி தொடங்கியது. அன்றையதினமே கிருஷ்ணகிரி தொகுதியில் தேர்தல் அதிகாரி எம். மதிவாணனிடம் தனது வேட்பு மனுவை ஜெயலலிதா தாக்கல் செய்தார். ஏப்ரல் 18 ஆம் தேதி ஆண்டிபட்டி தொகுதியில் தனது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி ஜெயாவிடம் தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்ய இறுதி நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி ஜெயலலிதா சார்பில் புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய தொகுதிகளிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வேட்பு மனுக்களின் பரிசீலனை 24 ஆம் தேதி நடந்தது.

கிருஷ்ணகிரி தொகுதி தேர்தல் அதிகாரி மதிவாணன் வேட்பு மனுவைப் பரிசீலித்துவிட்டு, ஜெயலலிதாவுக்கு 2 ஆண்டு களுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாலும், அவர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாலும் அவரது வேட்பு மனு நிராகரிக்கப்படுவதாக அறிவித்தார். டான்சி நில பேர வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு இரண்டாண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவு கூறுகிறது. (மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 (3)ன்படி நீதி மன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறை தண்டனை விதிக்கப்பட்டால் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட நாள் முதல் தேர்தலில் போட்டியிட தகுதியை இழந்தவராக ஆகிறார். இந்தத் தகுதி இழப்பு அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும். இது தேர்தல் ஆணையத்தின் சட்டம்) இந்தச் சுற்றறிக்கையை 1997இல் இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. மேற்கு வங்க மாநில முன்னாள் முதல்வரும், பிரபல வழக்கறிஞருமான சித்தார்த்த சங்கர் ராய் அவர்களே, ஜெயலலிதாவுக்காக ஆஜராகி, அவருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறை தண்டனை உயர்நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே அவரது மனுவை ஏற்க வேண்டுமென்று வாதாடினார். ஆனால் தேர்தல் அதிகாரி மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் 1997 ஆம் வருஷத்திய சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஜெயலலிதாவின் வேட்பு மனுவை ஏற்க மறுத்து தள்ளுபடி செய்தார். ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 26-ந்தேதியன்று எக்ஸ்பிரஸ் நாளிதழும், இந்து நாளிதழும் எழுதிய தலையங்கங்கள் முக்கியமாக கருதப்பட வேண்டியவைகளாகும்.

எக்ஸ்பிரஸ் நாளிதழ், "அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா நான்கு இடங்களிலே தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தேர்தல் ஆணையம் 1997இல் பிறப்பித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற

ஒருவர் தேர்தலிலே நிற்க முடியாது என்ற ஆணையை தேர்தல் அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றியிருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டத்திலே இருந்தபோதிலும், நான்கு தொகுதிகளிலே தனது அதிர்ஷ்டத்தை ஜெயலலிதா சோதிக்க முயற்சித்தார். பொதுமக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி செய்வதின் காரணமாக தனக்கு ஏற்படும் அனுதாப அலையை வைத்து ஆட்சிக்கு வந்து விடலாம் என்று கணக்கிட்டுள்ளார்'' என்று எழுதியது.

இந்து நாளிதழ், "எதிர்பார்த்தவாறே தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் கமிஷன் 1997ஆம் ஆண்டு தகுதியின்மை குறித்து பிறப்பித்த உத்தரவை உறுதிப்படுத்திய பிறகு ஜெயலலிதாவின் தகுதியின்மை என்பது நிச்சயமாகிவிட்டது. ஜெயலலிதா நான்கு இடங்களில் போட்டியிடுவதன் மூலம் தனக்கு ஏதாவதொரு இடத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு ஏற்படாதா என்று எண்ணியிருந்தால் அது தவறான முடிவாகும் என்பதோடு, அவருடைய தகுதியின்மையை உறுதி செய்வதற்கு அதுவே மற்றொரு காரணமாகவும் ஆகிவிட்டது'' என்று எழுதியது.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த 14ஆம் தேதி அன்றே அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப்பெற்றது. ஜெயலலிதா சட்ட மன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனடியாக 14ஆம் தேதி மாலையிலேயே அவருக்கு கவர்னர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்கத் தடை கோரி யாராவது வழக்கு தொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவசர அவசரமாகப் பதவியேற்றதாக அப்போது ஏடுகள் எல்லாம் கூறின.

15-5-2001 "இந்து" தலையங்கத்தில், சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உறுதியாக தடை செய்யப்பட்ட ஒருவர் முதலமைச்சராவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல் முறை என்றும் இரு நிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு சட்டரீதியாகவும், நியாயபூர்வமாகவும்

வேதனையளிக்கும் வினாக்களை எழுப்பியுள்ளது என்றும் எழுதியது. மேலும் சில பிரபல ஆங்கில ஏடுகள், ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவர் முதல்வர் பதவியேற்று தார்மீக நெறியை மீறி விட்டார் என்று எழுதின. ஆனந்தவிகடன் தனது தலையங்கத்தில், தன் மீதுள்ள களங்கத்தை சட்ட ரீதியாக துடைத்தெறிந்த பிறகே முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர வேண்டும். அதுதான் கண்ணியமும் கவுரவமுமிக்க அந்தப் பதவிக்கும் அழகு, அவருக்கும் அழகு என்று எழுதியது.

கவர்னர் செல்வி பாத்திமா பீவி இவ்வாறு அவசர அவசரமாக பதவியேற்பு செய்து வைத்ததையொட்டி கவர்னர் மீது வழக்கு தொடரப்படும் என்று ஒரு கருத்து கூறப்பட்ட போது, ஜெயலலிதா கவர்னரின் செயல்களை எதிர்த்து கோர்ட்டில் வழக்கு தொடர முடியாது, கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது என்று கூறினார். ஆனால் 1995 ஆம் ஆண்டு டான்சி ஊழல் தொடர்பான வழக்கில் ஜெயலலிதா மீது வழக்கு தொடர அன்றைய ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதியளித்த போது, கவர்னருக்கு எதிராக ஜெயலலிதா உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமல்ல, கவர்னர் சென்னா ரெட்டி அவர்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டு மென்று மத்திய அரசை பேரவை கோருகிறது என்ற தீர்மானத்தையும் பேரவையிலே நிறைவேற்றினார்.

ஜெயலலிதாவை முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைத்ததில் என்ன தவறு என்று சிலர் கேட்கக் கூடும். அவர் ஒரு கிரிமினல் குற்றவாளி என்ற அடிப்படையில் அவர் தேர்தலில் போட்டியிடவே தகுதியில்லையென்று அவருடைய வேட்பு மனு, அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்டது. அவ்வாறு தேர்தலில் போட்டியிட தகுதியிழந்த ஒருவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கலாமா? ஜெயலலிதா மீது பல ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது உண்டு. அவர் மீதான மூன்று ஊழல் வழக்குகளை சென்னை தனிக் கோர்ட்டு விசாரித்து தீர்ப்பு கூறியது. அவர் ஊழல் செய்தது நிரூபிக்கப்பட்டு அவருக்கு சிறை தண்டனை விதித்தே தீர்ப்பு கூறப்பட்டது. ஒரு வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறை தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இரண்டாவது வழக்கில் அதாவது டான்சி நில ஊழல் வழக்கில் 3 ஆண்டு சிறை தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் அபராதமும்

விதிக்கப்பட்டது. மூன்றாவது ஊழல் வழக்கில் 2 ஆண்டு சிறை தண்டனையும், ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைகளை எதிர்த்து ஜெயலலிதா சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். சென்னை உயர்நீதிமன்றம் சிறை தண்டனையை மட்டும் நிறுத்தி வைத்ததே தவிர தீர்ப்புக்கு தடை விதிக்கவில்லை. இவை தவிர மேலும் சில வழக்குகள் நிலுவையிலே இருந்தன.

ஜெயலலிதா முதல்வராக பதவி ஏற்றதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள் பி.ஆர். கபூர், தனஞ்செயன் சவுஹான், பிரதாப் சிங் சவுதாலா, பி.எல். வதேரா ஆகியோர் பொது நல வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உச்ச நீதி மன்றம் அதன்மீது ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் அமைப்புச் சட்ட பெஞ்ச் விசாரணை நடத்த உத்தரவிட்டது.

ஊழல் வழக்கில் தண்டனை அடைந்த ஒருவர் மேல் நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்படும் வரை, அரசுப் பதவியில் நீடிக்கக் கூடாது, குற்றவாளி என்று கீழ் நீதி மன்றம் அளித்த தீர்ப்பை மேல் நீதி மன்றம் நிறுத்தி வைக்கக் கூடாது, தண்டனையை வேண்டுமானால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம், ஆனால் ஊழல் குற்றவாளி ஒருவர் குற்றச் சாட்டுகளில் இருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்படும் வரை அரசு பதவியில் நீடிக்கக் கூடாது. அப்படி அமர்வதற்கு நீதிமன்றம் துணை போகக் கூடாது என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.டி. தாமஸ், எஸ்.என். வரியவா ஆகியோர் 2-8-2001 அன்று பரபரப்பான ஒரு தீர்ப்பை ஊழல் வழக்கு ஒன்றிலே தெரிவித்தனர்.

இந்தத் தீர்ப்பை மேற்கோள் காட்டி ஊழல் குற்றவாளி ஜெயலலிதா தமிழக முதல்வராக பதவியில் நீடிப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி பி.ஆர். கபூர் உச்ச நீதி மன்றத்தில் வாதாடினார். இந்த வழக்கைத் தொடர்ந்து பல வழக்கறிஞர்களும், இந்து போன்ற நாளேடுகளும் ஜெயலலிதா முதலமைச்சராக பதவி யிலே தொடருவது பற்றி எதிர்ப்பு தெரிவித்தன.

எம்.எல்.ஏ.வாக இல்லாத ஜெயலலிதா முதல்வர் பொறுப்பேற்றிருந்தார். அவர் ஆறு மாதகாலத்திற்குள் எம்.எல்.ஏ.வாக ஏதாவதொரு தொகுதியில் நின்று வெற்றி பெற

வேண்டும். ஆனால் டான்சி நில ஊழல் அப்பீல் வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த நிலையில் அவர் எந்தவொரு தொகுதியிலும் வேட்பாளராக போட்டியிட இயலாது. எனவே 2001ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் தேதி அவர் முதல்வர் பதவியை விட்டு விலகிட வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார். அவருக்குப் பதிலாக அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. ஓ. பன்னீர்செல்வம் தமிழகத்தின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இப்படிப்பட்ட ஒருவருக்கு மற்றவர்கள் மீது குறை கூறி ஆர்ப்பாட்டம் நடத்த தகுதி உண்டா என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் யோசிக்க வேண்டும். (தொடரும்)

அன்புள்ள,

மு.க.

30-5-2010

3473. ஓய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்... (2)

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அவர் பதவியில் இருந்த காலத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான டான்சி நிலத்தை விலை குறைத்து வாங்கியது பற்றிய வழக்கில் அவருக்கு மூன்றாண்டு கால சிறை தண்டனை சிறப்பு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுக்கள் மீது 27-8-2001 அன்று விசாரணை தொடங்கியது.

அ.தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற்றதும், அவசர, அவசரமாக முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் பதவியேற்ற ஆறு மாதத்திற்குள் சட்டமன்ற உறுப்பினராக ஆகியே தீரவேண்டுமென்ற நிலையில் உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த அப்பீல் வழக்கினை விரைவாக விசாரித்து தீர்ப்பு பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

தனக்கு எதிரான வழக்கில் தன்னை எதிர்த்து வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞரை அவரே நியமித்துக் கொள்கின்ற அதிகாரத்துடன் நீதி மன்ற நடவடிக்கையையே கேலிக் கூத்தாக்க முயன்றார். அதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டதால், முன்னாள் அட்வகேட் ஜெனரலாக இருந்த வேங்கட பதியை அரசு வழக்கறிஞராக சென்னை உயர்நீதிமன்றம் நியமித்தது. இந்த நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் டான்சி நில பேர விசாரணை வேகமாகத் தொடங்கப்பட்டது. அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட வேங்கடபதி உச்சநீதிமன்றத்தில் - டான்சி நில பேர வழக்கு விசாரணை நடைபெறும் விதத்தையும், 2200 பக்க ஆவணங்களை படித்துப் பார்க்க தனக்கு நீதிபதி பாலசுப்ரமணியம் அவகாசம் தராததையும் எதிர்த்து மனு ஒன்றைத்தாக்கல் செய்தார். அந்த மனுவில் வழக்கு விசாரணையை வேறு மாநில

உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும்; சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணை நடந்தால் நீதியை நிலைநாட்ட முடியாது, 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜெயலலிதா தாக்கல் செய்த அப்பீல் மனுக்கள், அவர் முதல்வராக ஆனதும், அவசர, அவசரமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது; அவர் முதல்வராக ஆனவுடனே அவர் தாக்கல் செய்துள்ள அப்பீல் மனுக்கள் மீது, அவரை எதிர்த்து வாதாட அவரே அரசு வழக்கறிஞரையும் நியமிக்க முடிவு செய்தார்; எனவேதான் பொது நல மனு ஒன்றை தாக்கல் செய்த பிறகு அரசு வழக்கறிஞராகதான் நியமிக்கப்பட்டேன்; எனவே சென்னை உயர்நீதி மன்ற விசாரணைக்கு தடை விதித்து வேறு மாநில நீதிமன்றத்தில் வழக்கை நடத்த வேண்டும்; என்று கேட்டுக்கொண்டார்.

இந்த மனு உச்சநீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.பி. பரூச்சா, ஒய்.கே. சகர்வால், அசோக் பகான் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் முன் பரிசீலனைக்கு வந்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதா அப்பீல் மனுக்களை விசாரிப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

அந்த வழக்கில் மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் சோலி சொராப்ஜி வாதாடும் போது, “2200 பக்கங்கள் கொண்ட ஆவணங்களைப் படித்துப் பார்க்கக் கூட அவகாசம் அளிக்கப் படாததை வேதனை என்பதா? வேடிக்கை என்பதா? இது போன்ற நிகழ்வு மிகவும் அசாதாரணமானது. மேலும் மாநில முதலமைச்சரே அப்பீல் மனுதாரராக இருக்கிறார். எனவே நீதியின் நலன் கருதி இந்த வழக்குகளை விரைவாக பிற மாநில உயர்நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டியது அவசியமாகும். இல்லாவிட்டால் நீதி மன்றத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்பட்டு விடும்” என்றார்.

உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது குறித்து என்னிடம் கருத்து கேட்ட போது, நீதி மன்றத் தீர்ப்பு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை என்று நான் கூறி விட்டேன். என்ற போதிலும், சென்னை உயர்நீதி மன்றத்தில் அவசர அவசரமாக நடத்தப்படுவதால், ஜெயலலிதாவின் மேல்முறையீடுகளுக்கு தடை விதித்து உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவு சரிதான் என்று 1-9-2001 ஆம் தேதிய இந்து நாளிதழ் தனது தலையங்கத்தில் எழுதியிருந்தது.

நாடாளுமன்றமாயினும், சட்டமன்றங்களாயினும் அங்கே நீதிபதிகள் பற்றி பேசக் கூடாது என்பது மரபு. ஆனால் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா உச்சநீதிமன்ற நீதிபதி பற்றி பேரவையில் 1-9-2001 அன்று தெரிவித்த ஒரு கருத்து வருமாறு:- "உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்து விட்டு மீண்டும் வழக்கை விசாரிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவை எப்படி பெற்றார்கள்? தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பெற்றார்களா என்பதை அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும். தனி நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அளித்த தீர்ப்புகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்ததில், இரண்டு தீர்ப்புகளையும் ரத்து செய்துவிட்டு மீண்டும் விசாரணை செய்ய உச்சநீதிமன்றம் உத்தர விட்டது. அந்த உத்தரவு எப்படி வழங்கப்பட்டது என்பதை தி.மு.க.-வினர்தான் விளக்க வேண்டும்"

இவ்வாறு உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கே உள்நோக்கம் கற்பித்து சட்டப்பேரவையிலேயே ஜெயலலிதா பேசினார்.

ஆனால் சட்டப்பேரவையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளைப் பற்றி தெரிவித்த இந்தக் கருத்தில் உறுதியாக இருந்தாரா? கிடையாது. 3-9-2001 அன்று அதே சட்ட சபையில் சட்டமன்ற விதி 109-ன்கீழ் தன்னிலை விளக்கம் ஒன்று அளித்தார். அதில் அவர் அந்த மன்றத்தில் நீதிபதிகள் பற்றிப் பேசிய கருத்துக்களை செய்தித்தாள்கள் வேறு பொருள்படும்படி வெளியிட்டு விட்டதாகக் கூறியிருந்தார்.

இடைக்காலத் தடையை அகற்றக் கோரி ஜெயலலிதா தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவின் மீது உச்சநீதிமன்ற நீதிபதிகள் பரூச்சா, பிரிஜேஷ்குமார், அசோக் பான் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் 7-9-2001 அன்று அளித்த தீர்ப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிபதி பாலசுப்பிரமணியம் தொடர்ந்து இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்றும், சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் புதிய தலைமை நீதிபதி வந்த பிறகு அவர் எந்த நீதிபதி இந்த வழக்கினை விசாரிப்பது என்பதை பொறுப்பேற்ற ஒரு வாரக் காலத்திற்குள் அறிவிப்பார் என்றும், அதன் பிறகு தான் விசாரணை புதிதாகத் தொடங்குமென்றும், புதிய விசாரணையை அக்டோபர் 1 ஆம் தேதிக்கு முன்பு ஆரம்பிக்கக் கூடாதென்றும் தெரிவித்தது.

இந்தத் தீர்ப்பு பற்றி இந்து நாளேடு தலையங்கம் எழுதிய போது, ஆறு மாத காலத்திற்குள் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக் கப்படுவதற்கான வாய்ப்பே இல்லை என்கிற நிலை ஏற்பட்ட பிறகு ஜெயலலிதா எக்காரணம் கொண்டும் முதலமைச்சர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கக் கூடாது என்று எழுதியது. மேலும், ஜெயலலிதா முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை விசாரிக்கும்போது, உச்சநீதி மன்றம் ஊழல் குற்றம் சாட்டப்பட்டு அதன் மூலம் தகுதி இழப்பைச் சந்திக்கும் ஒருவர் முதலமைச்சராக பதவி ஏற்றது முறைதானா என்ற கேள்வியை கருத்தாக எழுப்பியிருக்கிறது. எனவே ஆறு மாத கால முடிவான நவம்பர் 14 ஆம் தேதி வரை தொடர்ந்து பதவியில் நீடித்து, பின்னர் தூக்கி எறியப்படும் நிலையைச் சந்திக்காமல் உடனடியாக ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்றும் அந்த இதழ் திட்டவட்டமாக எழுதியது.

ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமித்தது சட்டப்படி செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் 21-9-2001 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்.பி. பரூச்சா தலைமை யிலான ஐந்து நீதிபதிகள் வழங்கிய ஒருமனதான தீர்ப்பில், "தமிழக முதல்வராக ஜெயலலிதா நியமனம் செய்யப்பட்டது செல்லாது. அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி, மே 14-ந்தேதி செய்தது, அரசியல் சாசனத்துக்கு எதிரானது. இனியும் ஜெயலலிதா முதல் அமைச்சராக நீடிக்க முடியாது. ஏனெனில் மே 14-ல் அவர் நியமிக்கப்பட்டது சட்டப்படி செல்லத் தக்கதல்ல" என்று தெரிவித்தனர். மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு சில நாட்கள் அவகாசம் தேவையென்று ஜெயலலிதாவின் வழக்கறிஞர் கே.கே. வேணுகோபால் நீதிபதிகளிடம் கேட்ட போது, "முதல் அமைச்சர் மறைந்தால் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யப்படுகிறது, இவ்வளவு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் ஒரு கட்சி எந்த நேரத்திலும் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம்" என்று கூறி அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டனர்.

இத்தகைய புகழ்ச்சிக்கு உரியவர் (?) தான் அமைச்சர் தம்பி ராசா, தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் நடத்தச் சொல்லி கட்சியினரைத் தூண்டி விடுகிறார்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஜெயலலிதா வகித்துவந்த முதல் அமைச்சர் பதவியிலிருந்து உடனடியாக விலக

வேண்டு மென்று ஏடுகளும், வழக்கறிஞர்களும் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத்தில், ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அதே நேரத்தில் வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 8 (3)-வது பிரிவுக்கு இடைக்காலத் தடை கோரி சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு ஒன்றும் தொடர்ந்தார்கள். அதுபற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ஐம்பதாண்டு காலமாக இருக்கின்ற சட்டம் அது. தவறு செய்தவர்கள், குற்றவாளிகள், கிரிமினல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்கள் எல்லாம் தேர்தலில் நிற்கலாம் என்று அதற்கு லைசென்ஸ் கேட்பது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல என்று கூறினேன்.

உச்ச நீதி மன்ற தீர்ப்பு காரணமாக தமிழ் நாட்டில் குடியரசு தலைவர் ஆட்சியைக் கொண்டு வர வேண்டுமா என்று செய்தியாளர்கள் கேட்டபோது, "நான் அவ்வாறு நினைக்க வில்லை. அ.தி.மு.க. பேரவையில் பெரும்பான்மையாக இருக்கிறது. ஜனநாயக முறைப்படி அவர்களே இன்னொருவரைத் தேர்ந்தெடுத்து பொறுப்பேற்பதில் தவறு கிடையாது" என்று கூறினேன். நீதி கிடைத்திருப்பதால் மகிழ்ச்சியா என்று கேட்டதற்கு, சட்டம் தன் கடமையைச் செய்திருக்கிறது, மகிழ்ச்சியும் இல்லை, வருத்தமும் இல்லை என்று கூறினேன்.

ஜெயலலிதாவின் முதல்வர் பதவியை பறிக்க வேண்டுமென்று கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த தமிழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்வராஜ், உச்சநீதிமன்றம் அரசியலில் புனிதத்தைப் பாதுகாத்து விட்டது. இந்தத் தீர்ப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என்று கூறினார்.

ஆனால் அ.தி.மு.க. வினர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ஊர்வலம் நடத்தினார்கள்; என் உருவ பொம்மை, முரசொலி மாறனின் உருவ பொம்மை, பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களின் உருவ பொம்மை ஆகியவற்றை ஊருக்கு ஊர் காவலர்கள் முன்னிலையிலேயே கொளுத்தினார்கள். சாஸ்திரி பவன் முன் நடந்த அ.தி.மு.க. ஆர்ப்பாட்டத்தில் நிதி அமைச்சர் பொன்னையனே தலைமையேற்று மற்ற அமைச்சர்களின் துணையோடு கோஷங்களை முழங்கினார்.

சிறப்பு நீதிமன்றத்தால் டான்சி ஊழல் வழக்கில் மூன்றாண்டு தண்டனை பெற்ற ஜெயலலிதா சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொண்ட வழக்கில்

4-12-2001 அன்று கூறப்பட்ட தீர்ப்பில் ஜெயலலிதாவை தண்டனையிலிருந்து விடுவித்தது. செய்தியாளர்கள் அப்போது என்னைச் சந்தித்து அந்த வழக்கில் அ.தி.மு.க. அரசுதான் பிராசிகியூஷன். அவர்களேதான் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். அந்த நிலையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். எனவே மாநில அரசு தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றம் செல்லுமா என்று கேட்டார்கள். அதற்கு நான் நாங்கள் நீதியை மதிப்பவர்கள். ஒரு நீதிபதி நீதியை மதிப்பதற்கு மேலாக நான் நீதியை மதிப்பவன் என்று கூறினேன். உச்சநீதி மன்றத்திற்குச் சென்றால் அங்கே நீதி வெல்லும் என்று நினைக்கிறீர்களா என்று திரும்பவும் செய்தியாளர்கள் கேட்டபோது, "அதை முன் கூட்டி எப்படிச் சொல்ல முடியும்? எந்தக் கோர்ட்டில் நீதி கிடைக்குமென்று சில பேரால் சொல்ல முடியும், என்னால் சொல்ல முடியாது'' என்று கூறினேன். பின்னர் உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்டபோது, நான் முதலில் கூறிய கருத்தைத்தான் நினைத்துக் கொண்டேன்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டது குறித்த செய்தி வந்த போது, அதற்கு சில நாட்களுக்கு முன்பே ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. உறுப்பினர் அவ்வாறு ஒரு தீர்ப்பு வரும் என்பதை அவர் எப்படி எதிர்பார்த்து முன் கூட்டியே தனது பதவியை ராஜினாமா செய்தார் என்ற பெரிய கேள்வி பலரின் முன் தோன்றியது.

5-12-2001 அன்றே புது டெல்லியில் வெளி வரும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளிதழ் ஒரு தலையங்கத்தைத் தீட்டியிருந்தது. அதிலே சில முக்கிய பகுதிகள் வருமாறு :-

"டான்சி மற்றும் பிளசன்ட் ஸ்டே ஓட்டல் வழக்குகளில் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவை சென்னை உயர்நீதி மன்றம் விடுதலை செய்ததன் மூலம் அவர் மீண்டும் முதலமைச்சராக வருவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. சிறப்பு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் மேல் முறையீட்டின் காரணமாக உயர்நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல், அவரைக் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து

விடுவித்துவிட்டது. அதன் காரணமாக, ஜெயலலிதாவும் அவரது ஆதரவாளர்களும் அவ்வழக்கு அவர்மீது திணிக்கப்பட்ட ஒன்று என்பது நிரூபணமாகிவிட்டதாகச் சொல்லி வருகிறார்கள். அதுவும் ஏற்புடையதல்ல. காரணம், கீழ் நீதிமன்றம் ஏற்கெனவே குற்றச்சாட்டை உறுதி செய்திருக்கிறது. நீதிபதி தினகரின் தீர்ப்பு, உயர்நீதிமன்ற பெஞ்ச் அல்லது உச்சநீதி மன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்போடு ஒத்துப்போகும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. செவ்வாயன்று அறிவிக்கப்பட்ட தீர்ப்பையொட்டி எழுந்த கொண்டாட்டங்கள் எல்லாம் கூட தேவையற்றது. இந்தத் தீர்ப்பானது மாநில அரசியல் நிலவரத்தை எந்த வகையிலும் மாற்றியமைத்து விடாது. ஜெயலலிதா தாமாக அங்கு அதிகாரத்தைக் கொண்டிரா விட்டாலும் அவர்தான் முழுக்க முழுக்க தமிழகத்தில் நிர்வாகத்தை நடத்தி வருகிறார். அரசாங்க சக்தியெல்லாம் தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், கள்ளச் சாராய வியாபாரிகள் ரவுடிகள் ராஜ்யத்தின் காரணமாகவும் வீணடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தான் இன்றைக்குத் தமிழகத்தில் திறம்பட இருந்து வருகின்றனர். செல்வாக்கு மிக்கவர்கள் அல்லது பணம் படைத்தவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிற்கும்போது, அவர்களைக் குற்றவாளிகள்தான் என்று நிரூபிப்பது வெகு சுலபமானதாக இல்லை. சாட்சிகள் பல்டி அடித்து விடுவதன் காரணமாக, பொதுவாழ்வில் உள்ள முக்கியமானவர்கள் மீதான குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படுவதில்லை. அந்த வகையில் ஜெயலலிதா குற்றமற்றவர் என்று கூறுவது பலரின் புருவங்களை உயர்த்தியுள்ளது.''

உடன்பிறப்பே,

என் மீது போடப்பட்ட 12 வழக்குகளிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன் என்று ஜெயலலிதா அறிக்கையிலே சொல்லிக் கொள்கிறாரே, இந்த டான்சி வழக்கிலும் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார். ஆனால் அந்த வழக்கிலே உச்சநீதி மன்ற நீதிபதிகள் 24-11-2003 அன்று கூறியது என்ன?

"ஜெயலலிதா குற்றவாளி இல்லை யென்ற முடிவுக்கு நாங்கள் வந்திருந்த போதிலும், பொதுத்துறைக்குச்

சொந்தமான நிலங்கள் ஜெயலலிதா பங்குதாரராக உள்ள கம்பெனிகளுக்கு அவர் முதலமைச்சராக பதவியிலே இருந்த காலத்தில் விற்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. முதல் அமைச்சரே சொத்துக்களை வாங்க யத்தனித்து விட்ட நிலையில் அதிகாரவர்க்கம் அளவுக்கு மீறி அதிலே ஆர்வம் காட்டி இந்த விற்பனையை சுமூகமாக முதலமைச்சர் ஜெயலலிதா விரும்பும் விலைக்கே முடித்திருக்கிறார் கள் என்பதை எங்களால் தெரிந்து கொள்ள முடிகிறது. ஜெயலலிதாவின் இந்தச் செயல்கள் நடத்தை விதிகளின் உட்பொருளுக்கு விரோதமானதாகும். நியாயமாகப் பேச வேண்டுமென்றால், அரசின் சிறு அதிகாரிகளுக்காக ஒரு சட்டமும், முதல் அமைச்சருக்காக ஒரு சட்டமும் இருக்க முடியுமா? இது போன்ற நிலைகளில் நன்னடத்தை விதி என்பது அருங்காட்சியகத்திலே வைக்கப்பட வேண்டிய வெறும் ஆடம்பரப் பொருள் மட்டும்தானா? அது கடைப்பிடிக் கப்பட வேண்டிய ஒன்று அல்லவா? இவைகள் தான் எங்களுடைய மனச்சாட்சியை துன்புறுத்துகிறது. முதல் குற்றவாளியான ஜெயலலிதாதான் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக டான்சி நிலப் பத்திரத்திலே உள்ள அவருடைய கையெழுத்தையே இல்லை என்று மறுக்கக் கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறார். எனவே ஜெயலலிதா நிபந்தனையில்லாமல் சொத்துக்களைத் திரும்ப ஒப்படைப்பதோடு, நாங்கள் என்ன கூறியிருக்கிறோம் என்பதன் அடிப்படையில் அவர் தன்னுடைய மனச்சாட்சிக்கே பதிலளிக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு நீதிபதிகள் கருத்து தெரிவித்திருப்பதைத்தான் ஜெயலலிதா தற்போது அவர் மீதான வழக்கிலிருந்து நீதிமன்றம் அவரை விடுவித்துவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறார். எவ்வாறு அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்பதை உச்சநீதிமன்ற நீதிபதிகளின் வார்த்தைகளே நமக்கு நிரூபிக்கின்றது அல்லவா?

அன்புள்ள,

மு.க.

31-5-2010

3474. ஓய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்.. 3

உடன்பிறப்பே,

சிறப்பு நீதிமன்ற, உயர்நீதிமன்ற, உச்சநீதி மன்ற நீதியரசர்கள் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மீதான வழக்குகளில் என்ன கூறினார்கள் என்ற விவரங்களை தேதி குறிப்பிட்டு நான் எழுதியபோதிலும், நான் ஏதோ பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்வதாக ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித் திருக்கிறார். இதிலிருந்து நீதிபதிகள் அளித்த தீர்ப்புக்களையே அவர் இல்லை என்று மறுக்கிறாரா? பொய் என்று கூறுகிறாரா என்று தெரியவில்லை.

வழக்கு விசாரணையை ஜெயலலிதா தாமதப்படுத்த முயற்சிக்கிறார் என்று நான் எழுதினேன். அதற்கு ஜெயலலிதா நான் தான் வழக்கு விசாரணையை தாமதப்படுத்துகிறேன் என்று சொல்கிறார். இந்த வழக்கிலே குற்றச்சாட்டு அவர் மீது தான். தீர்ப்பிலே தண்டனை விதிக்கப்பட்டால் அது அவரைத்தான் பாதிக்கும். இந்த நிலையில் வழக்கு விசாரணையை தாமதப்படுத்த நான் முயற்சிப்பேனா அல்லது அவர் முயற்சிப்பாரா என்பதை பாமர மனிதன் கூட புரிந்து கொள்ள முடியும். ஆனால் அவர் வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த தான் முயற்சிக்கவே இல்லை என்று சாதிக்க முயலுகிறார். அது உண்மை என்றால், அந்த வழக்கிலிருந்து அவரை விடுவிக்க வேண்டுமென்று வழக்கு விசாரணை தொடங்கி 13 ஆண்டுகளுக்குப் பிறகு நீதி மன்றத்திலே மனு ஏன் தாக்கல் செய்தார்? விரைவிலே வழக் கினை நடத்த ஒத்துழைப்பு தந்து, அவர் குற்ற மற்றவர் என்றால் தீர்ப்பினை எதிர்கொள்ள முன்வர வேண்டியதுதானே? வழக்கு விசாரணை விரைவாக நடந்து முடிந்தால், தான் தண்டனை பெற்றிட நேரிடுமே என்பதற்காகத் தானே அந்த வழக்கிலே

இருந்தே தன்னை விடுவித்துக் கொள்ள ஒவ்வொரு நீதி மன்றமாக அலைந்து மனு செய்து கொண்டிருக்கிறார். இது ஒன்றிலிருந்தே யார் விசாரணையை தாமதப்படுத்த முயலுகிறார்கள் என்பது புரிகிறதா இல்லையா? இதிலே நான் ஏதோ பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்வதாக புலம்பி என்ன பயன்?

உண்மையிலேயே நீதிமன்றத்திலே சொல்லப்பட்ட இந்த விவரங்களையெல்லாம் தேடிப்பிடித்து உலகத்திற்கு ஞாபகப்படுத்த வேண்டுமென்று நான் எண்ணவில்லை. அவர் திரும்பத் திரும்ப தான் ஏதோ தவறே செய்யாதவர் போலவும், தன் மீது ஏதோ பொய் வழக்குகளைத் தொடுத்து விட்டதைப் போலவும் பேசுவதாலும், எழுதுவதாலும்தான் உண்மையை உலகத்திற்குச் சொல்ல வேண்டிய நிலைமை எனக்கு ஏற்படுகிறது.

அடுத்து ஜெயலலிதா தனது அறிக்கையில் 25-5-2010 அன்று பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் நகலை தனது வழக்கறிஞர் கேட்கவில்லை என்றும், வழக்கு ஆவணங்களின் நகல்களைத்தான் கேட்டதாகவும் சொல்லியிருக்கிறார். 'தினமணி' போன்ற நாளிதழ்களில் வெளிவந்த செய்தியைத்தான் நான் எனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் உண்மையில் ஏதோ ஒன்றை நீதிமன்றத்திலே கூறி, அதன் காரணமாக வழக்கு விசாரணையைக் கால தாமதம் செய்கிறார்கள் என்பதுதான். அதனை ஒப்புக்கொள்ளும் வகையில் வழக்கு ஆவணங்களைப் படிப்பதற்குத்தான் தனது வழக்கறிஞர் கால அவகாசம் கேட்டதாக ஜெயலலிதாவே ஒப்புக் கொண்டதால், வழக்கு விசாரணையை தாமதப்படுத்த யார் முயலுகிறார் என்பதை சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் ஜெயலலிதா அவரது அறிக்கையில் அவருக்காக வாதாடிய வழக்கறிஞர் என்னோடு தற்போது கை கோர்த்து விட்டார் என்று புலம்பி யிருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? அவருடைய வழக்கறிஞரே அவரைக் கை விட்டு விட்டார் என்றும், அவரது தரப்பிலே நியாயம் இல்லை என்றும் தெரிகிறதா இல்லையா? அவருடைய வழக்கறிஞர் அவரை கை விட்டுவிட்டார், அவரிடம் நம்பிக்கை வைத்திருந்தவர்கள் எல்லாம் வரிசையாக ஒவ்வொருவராக அவரை விட்டு விலகி என்னிடம் வருகிறார்கள் என்றால் நியாயம் எங்கே இருக்கின்றது என்று இது ஒன்றிலிருந்தே புரிகிறதா? இல்லையா?

ஜெயலலிதா தனது அறிக்கையில் என் மீது வேறு சில குற்றச்சாட்டுகளையும் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக என் மகன் மீதான ஒரு வழக்கைக் குறிப்பிட்டு அந்த வழக்கில் தீர்ப்புக்குப்பின் ஏன் மேல் முறையீடு செய்யவில்லை என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். இந்த வழக்கில் மேல் முறையீடு செய்வது பற்றி, ஆந்திர மாநிலத்தில் உள்ள அரசு வழக்கறிஞரிடம் கருத்து கேட்டபோது, அவர் இந்த வழக்கு மேல் முறையீடு செய்வதற்கு உகந்ததல்ல என்று தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார் என்பதை அம்மையார் தனக்கு வசதியாக மறந்து விட்டார் போலும்! அதுமாத்திரமல்ல; சிறப்பு நீதி மன்றத்திலே பல வழக்குகளில் ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு கூறப்பட்டு - அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில் - அதே வழக்குகளில் சாட்சிகளைக் கலைத்து பின்னர் விடுவிக்கப்பட்டாரே, அப்போதெல்லாம் அந்தத் தீர்ப்புகளை எதிர்த்து ஜெயலலிதா மேல் முறையீடு செய்தாரா? பிறரை நோக்கி இவர் குற்றம் சாட்டும்போது இவருடைய நிலை என்ன என்பதைப் பற்றி இவரே யோசித்து அறிக்கை விட வேண்டாமா?

ஸ்பெக்ட்ரம் பிரச்சினையில் நான் ஏதோ மத்திய புலனாய்வுத் துறை அதிகாரியை மாற்றியதாக ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லியிருக்கிறாரே, அதனை அவரால் நிரூபிக்க முடியுமா? நான் எந்த அதிகாரியையாவது மாற்றச் சொல்லி யாரிடம் கேட்டேன் என்பதை ஆதாரத்தோடு விளக்கத் தயாரா? அதே நேரத்தில் ஜெயலலிதா எத்தனை அதிகாரிகளை மாற்றச் சொல்லி தன் கைப்படவே எழுதிக் கொடுத்தார் என்று ஏடுகளில் எல்லாம் வெளிவந்ததே, அதை சுலபமாக மறந்து விட்டாரா? கண்டனம் தெரிவித்த வழக்கறிஞர்கள் மீது கொலை வெறி தாக்குதல் என்றும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே புலம்பியிருக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில் அவருக்கு எதிராக வாதாட முன்வந்த காரணத்திற்காக மூத்த வழக்கறிஞர் விஜயன் அவர்களும், மூத்த வழக்கறிஞர் சண்முக சுந்தரம் அவர்களும் எந்த அளவிற்குத் தாக்கப்பட்டார்கள் என்பதையெல்லாம் தமிழ் நாட்டு மக்கள் மறந்து விட்டார்கள் என்று ஜெயலலிதா கருதுகிறாரா?

தமிழகத்தில் ஐந்து முறை நான் முதல்வராக இருந்து விட்டேன். ஜெயலலிதா இரண்டு முறை முதல்வராக இருந்திருக்கிறார். உச்சநீதி மன்ற, உயர்நீதி மன்ற நீதிபதிகள்

அவரைப் பற்றி கருத்து தெரிவித்ததைப் போல ஒரு முறையாவது எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது என்மீது களங்கம் கற்பித்து குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தது உண்டா?

இதோ ஜெயலலிதா பற்றியும், அவரது ஆட்சியைப் பற்றியும் ஒரு சில நீதிபதிகள் தெரிவித்த கருத்துக்கள், தீர்ப்புகள் வருமாறு :

ஜெயலலிதா முதல் அமைச்சராக ஆவதற்கு முன்பு அவருக்கு இருந்த சொத்து மதிப்பு அதாவது 1-7-1991 அன்றைய தேதியில் 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஐந்தாண்டுகள் அனுபவித்து முடிந்த பிறகு 12-5-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாயாகும். இந்தச் செய்தியும் தமிழ் நாட்டு மக்களும் இந்திய மக்களும் நன்கறிந்த செய்தி தான். நாமாக இட்டுக் கட்டிப் பரப்பிய செய்தியல்ல. இதுகுறித்து வழக்கு விசாரணை நடை பெற்றது. விசாரணையை தடுத்திட ஜெயலலிதா உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து விசாரணை சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் தடையை நீக்கி விசாரணையைத் தொடர உயர்நீதி மன்றம் ஒப்புதல் அளித்தது.

இந்த வழக்கிலே ஜெயலலிதா பிறகு உயர் நீதிமன்றத்தில் தனக்கு எதிர்பார்ப்பு ஜாமீன் கோரினார். அதனை நிராகரித்து உயர்நீதி மன்றம் ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது என்றும் அரசியல் பகை காரணமாக இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல என்றும் தீர்ப்பு கூறியது.

ஏனென்றால் ஜெயலலிதா வீட்டைச் சோதனையிட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட நகைகள், வெள்ளிச் சாமான்கள், ஏனைய சொத்துக்கள், மற்றும் திருவான்மியூர் தொடங்கி மகாபலிபுரம் வரை வாங்கப்பட்டுள்ள பங்களாக்களின் பத்திரங்கள் ஆகியவைகளைக் கணக்கிட்டு எடுக்கப்பட்ட ஆதாரங்களின் பேரில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தொலைக் காட்சிப் பெட்டிகளிலும், ஏடுகளிலும் பார்த்துப் பார்த்து ஆச்சரியப்பட்ட சொத்துக்கள்தான் அவை.

அதைப்போலவே ஜெயலலிதாவின் வங்கி கணக்கிலே மூன்று லட்சம் டாலர் வரவு வைக்கப்படுகிறது. அன்னிய செலாவணி

சட்டத்தின்கீழ் இதன் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. டாலரை அனுப்பியது யார் என்றே தனக்குத் தெரியாது என்று ஜெயலலிதா கூறி விட்டார். அதுகுறித்த வழக்கும் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கின் மீது ஜெயலலிதா ஜாமீன் மனு தாக்கல் செய்தபோது 6-12-1996 அன்று நீதிபதி சிவப்பா அவர்கள் வழங்கிய தீர்ப்பிலே "வேண்டுமென்றே அரசியலில் காழ்ப்புணர்ச்சியோடு தன் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பிலே கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. தனி மனித சுதந்திரத்தை விட கூறப்பட்ட ஊழலைக் கண்டு பிடிப்பது விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு முக்கியமாகும். அரசுத் தரப்பு ஆவணங்களை ஆராய்ந்தபோது இந்த வழக்குகள் உள்நோக்கத்துடன் போடப்பட வில்லை என்று தோன்றுகிறது" என்று தீர்ப்பளித்து அதுவும் அனைத்து ஏடுகளிலும் வெளிவந்த செய்தியாகும்.

மைலாப்பூர் கனரா வங்கியிலும் ஸ்ரீராம் நிதி நிறுவனத்திலும் ஜெயலலிதா பெயரில் மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் இருந்தது முடக்கி வைக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலே ஜெயலலிதா தொடுத்த வழக்கின் மீது நீதிபதி ராமமூர்த்தி அளித்த தீர்ப்பிலே "ஜெயலலிதாவின் சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை முக்கிய கட்டத்தில் உள்ளது. ஜெயலலிதா தனது பெயரில் வங்கியில் உள்ள பணம் முறைகேடாக சம்பாதிக்கப்பட்டது அல்ல என்று கூறுவதை இப்போது ஏற்க முடியாது" என்று தெரிவித்தார்.

ஜெயலலிதா மீது தனி நீதிமன்றங்கள் அமைத்து விசாரணை நடத்துவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் அரசியல் ரீதியாக பழிவாங்கும் நடவடிக்கை என்றும் பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன என்றும் கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா வழக்கு தொடுத்தார். அதை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி லிபரான் மற்றும் நீதிபதி பத்மநாபன் ஆகியோர் இந்த வழக்கை விசாரித்து அளித்த தீர்ப்பில்,

"ஜெயலலிதாவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்க தனி நீதி மன்றங்கள் நிறுவப்பட்டிருப்பது சட்ட ரீதியாக முறையானதே. இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை. தனி நீதிமன்றங்களை அமைத்து கடந்த 30-4-97இல்

வெளியிடப்பட்ட அரசின் உத்தரவு சட்டத்துக்கு முரணானது அல்ல. ஊழல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் விசாரணையை நாள்தோறும் நடத்தி முடிப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அதைவிட இவ்வழக்குகளில் பூர்வாங்க ஆதாரங்கள் காணப்படுவதால் விசாரணையை எதிர்கொள்ளத்தான் வேண்டும்".

அரசு அலுவலர்களை டிஸ்மிஸ் செய்ததை ரத்து செய்யக் கோரியும், கைது செய்யப்பட்ட அரசு அலுவலர்களை விடுவிக்கக் கோரியும், - சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் 6-7-2003 அன்று நீதிபதி பி.டி. தினகரன் வழங்கிய தீர்ப்பு வருமாறு :

"இந்தப் பிரச்சினையில் அரசு நல்ல முடிவெடுக்க இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்தேன். அரசு எந்த முடிவும் அறிவிக்கவில்லை. மேலும் இதில் காலதாமதப்படுத்தியது. அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றுதான் நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. ஆனால் அரசு அதைக் கூட செய்யத் தவறிவிட்டது. அரசு அலுவலர்கள் தானாக முன்வந்து போராட்டத்தை வாபஸ் பெறுவதாகக் கூறியுள்ளனர். எனவே அதை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கிறேன். அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது துரதிருஷ்ட வசமானது. அரசு இதில் காலதாமதப்படுத்துவது மிகவும் வருத்தமளிக்கிறது. வேதனை அளிக்கிறது. நியாயமான விசாரணையே இல்லாமல் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்வது, தவறானது, சட்ட விரோதமானது. அரசுக்கு பின்வரும் உத்தரவு பிறப்பிக்கின்றேன். அனைத்து அரசு ஊழியர்களையும் விடுதலை செய்கிறேன். எஸ்மா சட்டம் பிரிவு 4, 5இன் கீழ் கைதான அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும். போலீஸ் டி.ஜி.பி. இதை உடனே அமல்படுத்த வேண்டும். அரசு ஊழியர்களை சஸ்பென்ட், டிஸ்மிஸ் செய்த அனைத்து உத்தரவுகளையும் நிறுத்தி வைக்கிறேன். அனைவரும் உடனடியாக வேலைக்குப் போக வேண்டும். புதிய ஆட்களை பணியில் நியமிக்கக் கூடாது. அரசு இதில் நல்ல முடிவெடுக்க அரசு ஊழியர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்."

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அரசு வழக்கறிஞர் இந்த உத்தரவை இரண்டு நாளைக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரியபோது, நீதிபதி "இதை ஏற்க முடியாது, நள்ளிரவில் எதையும் செய்யாதவர்களை தூக்கத்தில் தட்டியெழுப்பி கைது செய்துள்ளதுபோல இன்று நள்ளிரவு விடுதலை செய்யுங்கள்" என்றார்.

உயர்நீதிமன்ற நீதிபதி இந்த அளவிற்கு அரசு அலுவலர்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்ததும், ஜெயலலிதா அரசு அதனையேற்காமல், இரவோடு இரவாக சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியின் இல்லத்திற்கே சென்று மேல் முறையீடு செய்து, அன்றையதினம் மாலையில் உயர்நீதிமன்ற நீதிபதி தினகரன் அளித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடை பெற்றது. அந்த அளவிற்கு அரசு அலுவலர்களிடம் விரோதம் பாராட்டியவர்தான் ஜெயலலிதா.

2003ஆம் ஆண்டு தமிழக அரசின் பணி நீக்க அவசரச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி வழக்கறிஞர் நளினி சிதம்பரம் அவர்கள், பொது நல வழக்கு ஒன்றையும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். வழக்கு விசாரணையின்போது உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.பி. ஷா, ஏ.ஆர். லெட்சுமணன் ஆகியோர் கூறும்போது, வன்முறையில் ஈடுபடாத அரசு அலுவலர்களை மீண்டும் பணியில் சேர்க்க பரிந்துரைக்கப்படுகிறது. பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவு வரவேண்டுமென்று காத்திருக்காமல், தமிழக அரசே பெருந்தன்மையாக ஊழியர்களை பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர். வேலை நிறுத்தப் போராட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட 2200 ஊழியர்களைத் தவிர மீதமுள்ள ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஊழியர்களை மீண்டும் பணியிலே சேர்த்திட வேண்டுமென்று கூறியதோடு, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி 24-7-2003 அன்று நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டு மென்று கூறியது. ஆனால் ஜெயலலிதா அரசு நீதிமன்றப் பரிந்துரைக்குப் பின்பும், எப்படியாவது பணியில் சேர்க்காமல் தவிர்ப்பதிலேயே கவனம் செலுத்தியது. எனவே 24ஆம் தேதிய விசாரணையின்போது, உச்ச நீதிமன்றப் பரிந்துரைக்கு மாற்றுக் கருத்தைத் தெரிவிக்க விரும்புவதாக தமிழக அரசின் சார்பில்

தெரிவித்தார்கள். அதற்கு நீதிபதிகள் அரசு ஊழியர்களின் நலன்தான் உச்சநீதி மன்றத்துக்கு முக்கியம், மாற்றுக் கருத்தை ஏற்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

இவ்வளவும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்கும், அவருடைய அரசுக்கும் பல நீதியரசர்கள் கொடுத்த சான்றிதழ்கள். இதற்கெல்லாம் ஜெயலலிதா தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருந்தால், தற்போது அவர் மத்திய அமைச்சர் ராஜாவை பதவி விலக வேண்டுமென்று கேட்க தகுதி படைத்தவர் என்று கூறலாம். அப்படி இல்லாத நேரத்தில் அவர் எந்த முகத்தோடு மற்றவர்களைப் பார்த்து குற்றம்சாட்டுகிறார் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு.க.

02-06-2010

3475. வாய்மை வெல்லும் என்பதை உணர்த்த வரிப்புலியே வருக!

உடன்பிறப்பே,

இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் இருக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கொள்கை. இதற்காக பல முறை கழகப் பொதுக் குழுக்களிலும், செயற்குழுவிலும் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அதுபோலவே நீதிமன்றங்களில் வாதாடும் வழக்கு மொழியாகவும் தமிழ் இடம் பெற வேண்டுமென்று தொடர்ந்து வாதாடி வந்திருக்கிறோம். அதற்காக கழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் நேற்றையதினம் சட்டத்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் ஒரு அறிக்கையும் வெளியிட்டுள்ளார்.

நம்முடைய தமிழ்ப் பற்றை - தமிழின் வளர்ச்சியை - தமிழின் தாக்கத்தை - தமிழுக்கு உரிய மாண்பினை - தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத் தர வேண்டுமென்ற நமது ஆர்வத்தினை தமிழகத்திற்கு நினைவூட்ட வேண்டிய அவசியம் கிடையாது.

ஆனால், ஜூன் திங்கள் 23ஆம் நாள் தொடங்கி கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டிய செய்திகள் அன்றாடம் ஏடுகளில் வெளிவருவதையும், அதற்கான ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சிறப்பான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதையும் கண்டு மனம் பொறாத ஒரு சிலர் எதையாவது காரணமாகக் காட்டி அதனைச் செய்தியாக்கிட படாதபாடுபடுகிறார்கள். உதாரணமாக மதுரை மாநகரில் வழக் கறிஞர்கள் சிலர் உயர் நீதி மன்றத்தில் தமிழில் வாதாட வலியுறுத்தி உண்ணாவிரதம் இருக்கிறார்களாம். அந்த வழக்கறிஞர்களை அ.தி.மு.க.வினரும், ம.தி.மு.க. வினரும் சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்களாம். அரசுக்கு எதிராக

எங்கே, யார் குரல் கொடுத்தாலும் சரி, அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க இந்த இரண்டு கட்சியினரும் புறப்பட்டு விடுகிறார்கள். உண்மையில் அந்த வழக்கறிஞர்கள் எழுப்பியுள்ள கோரிக்கை குறித்து தமிழக கழக அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லையா என்பதை நான் தெளிவாக்கிட விரும்புகிறேன்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் அவர்களின் தமிழ் மன்றம் சார்பாக 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு ரிட் மனுவினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அந்த ரிட் மனுவினை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 348(2)இன் கீழ், அதிலே நீதி மன்றம் தலையிட முடியாது என்றும் கருத்துரைத்தது. ஆனால் அப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருந்த ஜெயலலிதா இந்தப் பிரச்சினையிலே அதற்கு மேல் எதுவும் செய்யவில்லை. மாறாக இப்போது இந்தப் பிரச்சினைக்காக மதுரையிலே வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்றதும், உடனே அதனைத் தூண்டி விட்டு குளிர்காயும் நிலையை மேற்கொண்டு அந்த அம்மையார் அறிக்கை விட்டுள்ளார்.

ஆனால் இந்த உண்மையை மனதிலே கொண்டு - தமிழக வழக்கறிஞர்களின், மக்களின் கனவை நிறைவேற்றிடும் வகையில் - சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்துவதற்குரிய தீர்மானம் ஒன்றினை 6-12-2006 அன்று கழக ஆட்சியிலே, தமிழ்நாடு சட்டப் பேரவையிலே என்னால் கொண்டு வரப்பட்டு - அந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத் திற்கு தமிழக ஆளுநர் அவர்களின் பரிந்துரையையும், சென்னை உயர் நீதிமன்றத்தின் கொள்கை ரீதியிலான ஒப்புதலையும் பெற்று - மத்திய அரசுக்கு அதனை அனுப்பி வைத்தோம். சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை அறிமுகப்படுத்துவது சட்டப்படி சரியான நடவடிக்கையே என்று மேதகு ஆளுநர் கருதினார். அவ்வாறே மாண்பமை சென்னை உயர் நீதி மன்றமும் கருதியது. இதற்கு மேதகு குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற்றுத் தரவேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இதற்கு மத்திய அரசு அனுப்பிய கடிதத்தில் - தமிழக அரசின் முன் மொழிவுகள் உச்ச நீதி மன்றத்துடன் கலந்தாலோசிக்கப் பட்டதாகவும் - உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் வட்டார மொழியை அறிமுகம் செய்வது தற்போதைக்கு இயலாத ஒன்று என்று உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொள்கிறேன், வாருங்கள் என்று அழைத்து விட்டு - வந்து குவிந்த கட்சிக்காரர்களின் மனுக் களை முழுவதும் பெற்றுக் கொள்ளாமல் ஒரு மணி நேரம் மட்டுமே பேருக்கு இருந்து விட்டு - அவசர அவசரமாக கொடநாட்டிற்குப் புறப்பட்டு போய் விட்ட ஜெயலலிதா - உலகத் தமிழ் மாநாடு பற்றியும் புலம்பியிருக்கிறார். தனக்குத் தானே தம்பட்டத் தன்னல மாநாடு என்றெல்லாம் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார். இது தன்னல மாநாடாம்! ஆனால் தஞ்சையிலே ஜெயலலிதா 1995ஆம் ஆண்டு நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ்த் தாய் வாழ்த்து என்ற பெயரால் “ஜெயலலிதா வாழ்த்துப் பா” பாடினார்களே, அதற்கு என்ன பெயராம்? அப்படி பாடி மாநாடு நடத்தியவர்களுக்கு கோவை மாநாடு தன்னல மாநாடாகத்தான் தெரியும்! இதுவரை நடைபெற்ற மாநாடுகளையெல்லாம் வெற்றி கொள்ளும் வகையில் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் தமிழ் ஆர்வலர்களும், அறிஞர்களும் வருகிறார்கள் என்ற செய்தியைப் படித்து விட்டு உள்ளம் வெம்பி, மாநாட்டினை ஜெயலலிதா குறை கூறுகிறார். கொட நாடு சென்ற போதிலும் அன்றாடம் விடுக்கும் அறிக்கைகளிலே என்னைப் பற்றியே எழுதிக் குவிக்கிறார். அங்கிருந்து முன்னணியினர் பலர் கழகத்திலே வந்து இணைவதையும், அதிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் அறிவாலயமே கொள்ளாத அளவிற்கு வருவதையும் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாமல், தி.மு. கழகத்திலிருந்து அ.தி.மு.க.விற்கு வரப் போகிறார்கள் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, எஞ்சிய அ.தி.மு.க.வினர் இங்கே வந்து விடாமல் பார்த்துக் கொள்ள முயலுகிறார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழில் வாதாட வேண்டும் என்ற கோரிக்கையைச் செயல்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு

வசதிகளுக்கு 32 கோடி ரூபாயை ஒப்பளிப்பு செய்யுமாறு சென்னை உயர் நீதி மன்றத்தின் சார்பில் தமிழக அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பப்பட்டதாகவும், ஆனால் தி.மு.க. அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் பெறப்படவில்லை என்றும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி மாண்பமை எ.பி. ஷா அவர்கள் 29-11-2006 தேதியிட்ட கடிதத்தில் இந்தப் பிரச்சினை குறித்து எனக்கு ஒரு கடிதம் எழுதிய போது - ஐந்தே நாட்களில் 4-12-2006 அன்று எழுதிய பதிலை இந்த நேரத்தில் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

Dear Chief Justice,

I am indeed grateful to you and other Hon'ble Judges of the Madras High Court for having accepted in principle, the Policy of the Government to introduce Tamil in the Proceedings of the High Court. I do understand that it is necessary for us to put in place the necessary infrastructure in the form of additional translators, stenographers,

increasing the availability of Tamil Books in Law and enhancing their availability in the Library and formation of a separate section in the Library for the Tamil Law Books. The Government is fully committed in ensuring that the above facilities are put in place as speedily as possible.

மீண்டும் 21.2.2007 தேதியிட்ட கடிதத்தில் உயர் நீதி மன்றத்தின் தலைமைப் பதிவாளர் ரூ. 22 கோடி செலவில் (ஜெயலலிதா அறிக்கையிலே சொல்லியிருப்பது போல 32 கோடி ரூபாய் அல்ல) கட்டமைப்புகளை உருவாக்க கருத்துரு அனுப்பி, கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீடுகளை உயர் நீதி மன்றம் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டு பதில் கடிதம் தமிழக அரசினால் எழுதப்பட்டுள்ளது. எனவே ஜெயலலிதா தனது அறிக்கையில் எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லை என்று கூறியிருப்பது எப்போதும் போலவே உண்மைக்கு மாறானது.

நான் எழுதிய இந்தக் கடிதத்திலிருந்து தமிழக அரசு இந்தப் பிரச்சினையிலே எவ்வளவு அக்கறையோடு இருந்திருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழுக்கும் உள்ள உறவைப் பற்றி ஜெயலலிதா சான்று கூறத் தேவையில்லை. தமிழுக்காக 1965இல் திருச்சி மாவட்டத்தில் கீழப்பழூர் சிங்கத் தமிழன் சின்னச்சாமி, சென்னையில் விருகம்பாக்கம் சிவலிங்கம், அரங்கநாதன், திருச்சி அய்யம்பாளையம் வீரப்பன், சத்தியமங் கலம் முத்து, மயிலாடுதுறை மாணவன் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, சிவகங்கை ராஜேந்திரன், கோவை பீளமேடு தண்டபாணி என்று தங்கள் உயிரைத் தியாகம் செய்த மறவர்களின் கூடாரம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். 1965-க்கு முன்பே 1963இல் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்காகப் போராட்டம் நடத்தி, அரசியல் சட்டத்தைக் கொளுத்த முற்பட்டு சிறைக்குச் சென்றவர். 1965ஆம் ஆண்டு போராட்டத்தில், என்னை கைது செய்து சென்னையிலிருந்து நெல்லை வரையிலே போலீஸ் லாரியிலே இழுத்துச் சென்று பாளையங்கோட்டை தனிமைச் சிறையிலே அடைத்தார்கள். மொழிப் பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காலத்திலும் யாருக்கும் விட்டுக் கொடுத்தது அல்ல. மொழிக்காக தியாகம் செய்தவர்களில் தி.மு. கழகத்தினரை மிஞ்சக் கூடியவர்கள் வேறு எந்த இயக்கத்திலும் இல்லை.

மதுரை வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்ற செய்தியை கேள்விப்பட்டதும், நான் உடனடியாக மதுரையிலே இருந்த மத்திய அமைச்சர் தம்பி மு.க. அழகிரியைத் தொடர்பு கொண்டு விவரம் கூறி அதைப்பற்றி உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கூறினேன். தம்பி அழகிரியை வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் ஏ.கே. ராமசாமி, வெள்ளைச்சாமி ஆகியோர் சந்தித்து நிலைமைகளை விளக்கியிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் தம்பி அழகிரி உடனடியாக மத்திய அரசின் சட்டத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரப்ப மொய்லி அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். மத்திய அமைச்சரும் விரைவில் இது பற்றி கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்திருக்கிறார். அந்த விவரங்களை எல்லாம் தம்பி அழகிரி மதுரை வழக்கறிஞர்கள் சங்கப் பிரதிநிதிகளிடம் விளக்கிய போது, அவர்களும் அதனையேற்று சென்றிருக்கிறார்கள். இதிலிருந்து தமிழக அரசுக்கு உயர் நீதி

மன்றத்திலே தமிழும் இடம் பெற வேண்டும் என்பதிலே உள்ள ஆர்வத்தையும், பொறுப்பையும், அக்கறையையும் புரிந்து கொள்ள முடியும். இருந்தாலும், ஜெயலலிதாவும், அவருக்கு வெண் சாமரம் வீசிக் கொண்டிருப்போரும் உண்மைகளை மறைத்து, கலவரத்தைத் தூண்டி விட எண்ணுகிறார்கள்.

இதையெல்லாம் மூடி மறைத்து விட்டு - ஒரு சிலரை தூண்டி விட்டு, அதனைப் பெரிதுபடுத்தி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு ஊறுவிளைவிக்க எண்ணுவோரின் கனவு நிறைவேறாது என்பது மட்டும் திண்ணம்.

உடன்பிறப்பே, கோவை மாநாட்டு ஏற்பாடுகளைக் கண்டு, குழவிக் கல்லை எடுத்துக் குத்திக் கொள்வோரைப் பற்றிக் கவலைப் படாமல்; வந்திடுக மாநாட்டுக்கு; தந்திடுகத் தமிழுக்கு, தமிழர் ஆட்சிக்கு என்றும் குறையாத வலிமை! வாய்மைதான் வெல்லும் என்பதை வஞ்சகர்க்கு உணர்த்திட வரிப் புலியே வருக!

அன்புள்ள,

மு.க.

16-6-2010

3476. நஞ்சை எண்ணாதே; நம்பிக் கெடாதே!

உடன்பிறப்பே,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதி பாடிய தமிழுக்கு –

"தமிழ் எங்கள் இளமைக்குப் பால்" என்று பாவேந்தர் பாடிய தமிழுக்கு –

வலிவும் பொலிவும் சேர்த்து –

வையத்தோர் வழங்கும் வாழ்த்துக்களைக் குவித்திட –

குமணனை ஒத்த வள்ளல்கள் வாழ்ந்த கொங்கு மண்டலத்தில் விழா எடுக்கிறோம்.

ஆம்; தமிழுக்கு விழா!

தமிழ் இனம் விழாமல் இருக்க விழா!

அந்த விழாதான் உடன்பிறப்பே! உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு!

ஐம்பதுக்கு மேற்பட்ட அயல் நாட்டு அறிஞர் பெருமக்கள் – இந்தியத் திருநாட்டின் எல்லா மாநிலங்களிலும் வாழ்கிற மொழி வல்லுநர்கள் – அனைவருமே தேன் குடத்தை மொய்க்கும் ஈக்கள் போல – தென்னகம் நோக்கி வருகின்றனர்.

திராவிடத்தை –
திராவிடர் நாகரீகத்தை –
அவர்தம் கலையை –
கலாச்சாரத்தை –
பண்பாட்டை –
பழக்க வழக்கங்களை –

தென்னகப் பலாக்கனியாம் - திராவிடத்தில் குலுங்கிடும் இனிய தமிழ்ச் சுளைகளை; ஆம், இலக்கியச்சுளைகளை; கலை நயமிக்க கவிதைச் சுளைகளைப் பருகிடவும் -

அவற்றின் இனிமை கண்டு உருகிடவும் -

ஆயிரமாயிரம் பேர் தமிழ்ச் சான்றோர் வருவது மட்டுமல்ல; அவர்களில் தமிழ்ப் புலமை மிக்கார் - மொழிப்புலமை மிக்கார் எடுத்துரைக்கும் வாதங்களைக் கேட்டிடவும் -

அன்னையின் முலை முகட்டில் அருந்தியத் தமிழ்ப் பால் அளித்த வலிமை கொண்டு -

மலை முகடேறி மாற்றாரை வீழ்த்தும் வேலாக -
மதி மயக்கம் பெற்று
விதி வழி நடக்கும் வீணர்க்கும் கூன் நிமிர்த்தி -
வெற்றி பல காண்பதற்கு - இமயத்தின்
நெற்றியிலே; எங்கள் தமிழ் வென்ற வரலாறு எழுதுதற்கு-
இங்கு வந்த தமிழரெலாம்;
எஃகு நெஞ்சம் நிமிர்த்தி நிற்கின்றார் என்பதனை

அனைத்து நாடும் அறிவதற்கு -
ஆதி அந்தமிலா என் தமிழன்னைக்கு வலிவு சேர்த்து -

வையத்து மொழிகளிலே அன்றும் இன்றும் - இனி என்றும் - இதுவே முதல் மொழி எனும் புகழ்ப் பதாகையைத் தூக்கிப் பிடிக்க

வாரீர்! வாரீர்! என்று

வண்ணத் தமிழகத்துச் சோலைக் குயில்களை நான் அழைக்கின்றேன், கோவை மாநகருக்கு!

துள்ளி வரும் வேலாக; ஆவேசத்தை
அள்ளி வரும் வாளாக;
கிள்ளி எறிவோம் பகையை என்று
கிளர்ந்தெழும் சிங்கமன்றோ நீ?

அத்தகைய களத்திற்கு நான் உன்னை அழைக்கவில்லை;

புலவர் பெருமக்களும் -
அறிஞர் பெருமக்களும் -
கவிஞர் பெருமக்களும் -

அமர்ந்து அவதானிக்க இருக்கின்ற அழகுமிகு அறிவு நிறை அரங்குகளுக்கு அன்பே! உன்னை நான் அழைக்கின்றேன்!

என் அழைப்பில் தோய்ந்திருக்கும் தூய்மை உனக்குத் தெரியும்!

அதில் நிறைந்திருக்கும் அன்பின் வெளிப்பாட்டை நீ அறிவாய்!

ஓர் உடன்பிறப்புக்கு மற்றோர் உடன்பிறப்பு எழுதும் மடல் - உயிரைப் பிழிந்து தீட்டும் உயிரோவியமல்லவா?

அதனால்தான் நானே நேரில் வர முடியாமல் இந்த உயிரோவியத்தை - உனக்கு அனுப்பிவைக்கின்றேன்!

ஓவியத்தின் வனப்பிலே உள்ளத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருக்காமல் - பயணம் புறப்படு, பாசமிகு உடன்பிறப்பே!

எங்கிருந்தோ ஒரு குரல் கேட்கிறதா? ஏதோ ஒரு விலங்கின் "காம்போதி" என்பார்களே! அந்தக் "காம்போதி" தான் கேட்கிறது!

"உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு" என் பெயரை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவாம்! நீ அதை நம்ப மாட்டாய்! எனக்குத் தெரியும்! ஆனால் தஞ்சையில் அன்றொரு நாள் உலகத் தமிழ் மாநாடு நடத்தி தன் பெயரை வைத்தே - தமிழ்த் தாய் வாழ்த்து தயாரித்து பாடிய தையலார் யார் என்று உனக்கு மறந்து விட்டதா? மறந்திருந்தால் இதோ நினைவுபடுத்திக் கொள்!

"அவ்வை ஆண்டாள் அம்மையுமே
அழகுறப் பாடி தமிழ் வளர்த்தார்
அன்னை முதல்வர் ஜெயலலிதா
ஆட்சியில் இருந்து வளர்க்கின்றார்!
பாரதத் தாயும் தமிழ்த் தாயும்
பாங்குடன் சேர்ந்து மிளிர்வது போல்
வாராது வந்த மாமணியாம்
வாழ்க அன்னை ஜெயலலிதா!"

தன்னையே "தமிழ்த் தாய்" என்றும் "வாராது வந்த மாமணி" என்றும் பாட்டு போட்டு - பாடிக் கேட்டு - பரவசப்பட்டவர்களுக்கு;

தம்பி ஏ.ஆர். ரகுமான் இசையில் "பிறப்பொக்கும்" என்று தொடங்கி - சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தையும்

இணைத்து - இறவாப் புகழ் கொண்ட நம் முன்னோர்க்கு நான் செலுத்திய காணிக்கை பாடல் எங்கே?

தஞ்சை மாநாட்டில் இவர்கள் தயாரித்துக் கொண்ட தற்புகழ்ச்சி பாடல் எங்கே?

"நல்ல விருந்தில் கெட்ட பொருளை நினைக்கிறாயே அண்ணா;" என்கிறாயா? மன்னித்து விடு! பழைய கதையை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அப்பாவி சீட கோடிகளுக்கு அது மறந்து விடக் கூடாதல்லவா? அதனால் தான்

தஞ்சையை நினைவூட்டினேன்!
நஞ்சை எண்ணாதே தமிழ்நாடே! அதை
நம்பிக் கெடாதே தமிழ்நாடே!
என்றுரைத்திட

உன் உடன்பிறப்புக்கு
உரிமை உண்டல்லவா?

அன்புள்ள,
மு.க.
17-6-2010

3477. இதோ; செப்பேடுகள் உரைத்திடும் உறுதி!

உடன்பிறப்பே,

கோவையில் நாம் நடத்தவிருக்கின்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்து முடிந்த பிறகு, எத்தகைய பயன்களை விளைவிக்கும் என்பதற்கு முன்னோட்டமாக ஓர் இனிய செய்தியை உடன்பிறப்பே; உனக்கும் தமிழ் உலகிற்கும் சொல்லுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நமது தமிழ் வல்லுநர்கள், மொழிக் காவலர்கள், ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்த அரிய கருவூலங்கள் பலவற்றை அடுத்தடுத்து பல்லாண்டு காலமாக அளித்து வருகிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்திய சென்னை உலகத் தமிழ் மாநாட்டின் போது - "காரைக்குடி கம்பர்" எனப்படும் திரு. சா. கணேசன் போன்றோர் தனி அரங்கம் ஒன்றில் கல்வெட்டு ஆராய்ச்சி பற்றி கற்பித்த உண்மைகளை அப்பொழுதே கேட்டறியும் வாய்ப்பை நான் பெற்றதால் அதிலிருந்தே கல்வெட்டுகளிலும், பழங்கால செப்பேடுகளிலும் மனத்தைப் பறி கொடுத்தவன். இப்போதுகூட இந்தக் கோவை மாநாட்டில் கூடம் ஒன்றில் குண்டூசியைத் தொலைத்து விட்டு தேடியவனுக்கு குதிர் நிறைய தங்க நாணயம் கிடைத்ததைப் போல ஒரு நிகழ்ச்சி. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியை உன்னோடு பகிர்ந்து கொள்கிறேன். ஏன்; தமிழ் உலகோடும்தான்!

என்ன அந்த நிகழ்ச்சி?

ஏன் அதனால் மகிழ்ச்சி?

என்பதை இதோ விளக்குகிறேன்.

கோவை மாநாட்டில் கண்காட்சி அரங்கம் ஒன்று அமைத்து; அதில் வைத்திட வேண்டிய பொருள்களையெல்லாம் சேகரித்திடவும்;

வைக்கப்படுகின்ற பொருள்கள் பற்றி காண வருவோர்க்கு விளக்கம் அளித்திடவும் - கண்காட்சிக் குழு ஒன்றை அறிவித்து - அக்குழுவுக்கு தலைவராக - அமைச்சர் தம்பி தங்கம் தென்னரசை அமைத்திருக்கிறோம் அல்லவா; அவர் வாயிலாக நான் பெற்ற தகவல் ஒன்றை உன் செவி குளிர - சிந்தை குளிர தருகின்றேன்; படித்துப் பார்!

கண்காட்சிக்கான பொருள்களைத் தேடிக் கொண்டிருக்கும்போது - சில நாட்களுக்கு முன்பு 20-5-2010 அன்று தமிழகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் - மயிலாடுதுறையிலிருந்து ஆனதாண்டவபுரம் சாலையில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருஇந்தளூர் எனும் ஊர் அமைந்துள்ளது. அந்த ஊரின் உட்கிராமமாக கழுக்காணி முட்டம் என்ற பகுதி உள்ளது. கழுக்காணி முட்டத்தில் - பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்ட - கைலாசநாதர் கோயில் உள்ளது. தமிழக அரசின் இந்து சமய அற நிலையத்துறை மூலம் முன் மண்டபம் கட்டும் பணிக்காக குழி தோண்டியபோது - பத்து அடி ஆழத்தில் 12 செப்புத் திருமேனிகள், பூசைப் பொருள்கள், வாத்தியக் கருவிகள், சோழர் காலத்தைச் சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்பேடுகள் போன்றவைகள் கிடைத்துள்ளன.

பொதுவாக செப்பேட்டு முத்திரைகளில் உள்ள சின்னங்கள் புடைப்பாக அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தச் செப்பேட்டில் சின்னங்கள் பள்ளமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அமர்ந்த நிலையில் புலி, இரண்டு கயல்கள் (மீன்கள்), நாணுடன் கூடிய வில், இவைகளுக்கு இருபுறமும் குத்து விளக்குகள், இவைகளுக்கு மேல் நடுவில் வெண்கொற்றக் குடையும், அதன் இருபுறமும் சாமரமும் பொறிக்கப்பட்டுள்ளன. இம்முத்திரை 11 செ.மீ. விட்டமும், 2 செ.மீ. கனமும் கொண்டதாகும். தற்போது இவ்வளையத்தில் 86 செப்பேடுகள் கோக்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு காணப்பட்டாலும், இவற்றில் உள்ளது எண்பத்தைந்து செப்பேடுகளே. இந்த செப்பேடுகள் கோக்கப்பட்ட வளையத்தில் முத்திரையிடப்பட்டு, பிரிக்கப்படாத நிலையிலே உள்ளது. இச்செப்பேடுகள் ஒவ்வொன்றும் 44 செ.மீ. நீளம், 21 செ. மீ. அகலம் கொண்டதாகும். இச்செப்பேட்டு முத்திரையின் விளிம்புப் பகுதியில் “தர்ம ஏதத் இராஜேந்திர தேவஸ்ய பரகேசரி வர்மணக ஸ்ரீமச்சாசனம் ஊர்வி ச சிரோபிஹ சேகரி” என்று கிரந்த எழுத்துக்

களால் எழுதப்பட்டுள்ளன. இதன் பொருளானது "இந்தத் தர்மம் இராசேந்திர தேவன் என்கிற பரகேசரிவர்மனால் உலகத்தின் உச்சியின் மீது (தலை சிகரத்தின்) வைக்கப்படுகிறது."

இந்தச் செப்பேடு கோவிராஜகேசரிவர்மன் ஆன விஜயராஜேந்திர தேவர் (முதலாம் இராஜாதிராஜன்) தனது முப்பத்தைந்தாவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1053) அளித்த அறக்கொடையைக் குறித்து வெளியிடப்பட்டது.

இவர் கங்கைகொண்ட சோழன் எனவும் கடாரங்கொண்டான் எனவும் வரலாற்றில் மிகப் புகழ் பெற்ற அரசனாகக் குறிக்கப்பெறும் முதலாம் ராஜேந்திரச் சோழனின் மூத்த மகன் ஆவார். ஆம், ராஜராஜ சோழனின் பேரனே முதலாம் இராஜாதிராஜனாவார்.

முதலாம் இராஜாதிராஜனோடு உடன் பிறந்த மற்ற சகோதரர்கள், இரண்டாம் ராஜேந்திரன், வீர ராஜேந்திரன், மற்றும் அதிராஜேந்திரன் ஆகிய மூவராவர்.

முதலாம் இராஜாதிராஜன் இந்த ஆணையினை முடிகொண்ட சோழபுரத்தில் அதாவது பழையாறையில் இராஜேந்திர சோழன் என்ற பெயர் கொண்ட அரண்மனையில் கீழைப் பகுதியில் அமைந்திருந்த விஜயராஜேந்திரக் காலிங்கராயன் என்ற அரச இருக்கையில் அமர்ந்து வழங்கியுள்ளான். இவ்வாணை இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு நாட்டாருக்கும் (நாட்டுச்சபை உறுப்பினர்கள்), பிரம்மதேயக் கிழவர்களுக்கும் (காணி உரிமையுடைய பிராமணர்கள்) தேவதான, பள்ளிச்சந்தம், கணி முற்றூட்டு, வெட்டபேறு, அறச்சாலாபோகம் ஆகிய பிற அறக் கொடைகளுக்குரிய நிர்வாகத்தினரான ஊர்களிலார்க்கும் (ஊரவை உறுப்பினர்கள்), நகரங்களிலார்க்கும் (வணிகசபை உறுப்பினர்கள்) அனுப்பப்பட்டுள்ளது.

முதலாம் இராஜாதிராஜனின் தந்தையான முதல் ராஜேந்திரச் சோழன் தன்னுடைய இறுதிக் காலத்தில் தன்னுடைய மக்கள் நால்வரையும் அருகிலே அழைத்து நால்வரும் ஒற்றுமையோடு எப்போதும் இருக்க வேண்டுமென்றும் - நாட்டு மக்களுக்கு எப்போதும் நன்மை செய்வதையே அவர்கள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்றும் கூறி, அவர்களிடம் அதற்கான உறுதியைப் பெற்றுக் கொண்டான் என்றும் - அவர்களும் அவ்வாறே தங்கள் தந்தைக்கு உறுதியளித்ததாகவும் இந்தச் செப்பேடுகளில் காணப்படுகிறது.

பிற்காலச் சோழர்களில் முதல் அரசனாக அறியப்பெறும் விஜயாலயச் சோழன் தஞ்சையை பல்லவ மன்னனான கம்பவர்மன் என்பவனிடமிருந்து கைப்பற்றி - பல்லவர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும் இச்செப்பேட்டில் காணப்படுகிறது. இதுகாறும் தஞ்சையை சோழர்கள் முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றியதாகவே அறியப்பட்டு வந்தது. மேற்சொன்ன இந்தச் செய்தி, ஒரு புதிய செய்தியாகும்.

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டினைச் சேர்ந்த தத்தமங்கலம், கூத்தனூர், பஞ்சவன்நல்லூர், கரம்பைக்குடி, மேல்நாகக் குடி, கீழ்நாகக்குடி, கொற்றநல்லூர், பெரியங்குடி ஆகிய எட்டு ஊர்களையும், திருவிந்தளூருடன் இணைத்து, அந்தந்த ஊர்களில் இவ்வாணைக்கு முன்னர் காணி உரிமையுடையோராய் இருந்த குடிகளை நீக்கியும், அதன் மீதுள்ள காராண்மை, மீயாட்சி ஆகிய உரிமைகளை நீக்கியும், வெள்ளான் வகை நிலங்கள் அனைத்தையும் மாற்றி, முப்பத்து மூன்றாவது பசானம் (ஆண்டு விளைச்சல்) முதல் சதுர்வேதிமங்கலமாக்கி அறிவித்து இவ்வாணை வழங்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகளான புரவுவரிக் கண்காணி சோலை திருச்சிற்றம்பலமுடையான், ஜெயங் கொண்ட சோழ கோசலராயன், நாடுவகை செய்கின்ற சோழவளநாட்டு விளாநாட்டு கரிகால சோழ நல்லூருடையான் கேகயன் ஆதித்தனான கண்டராதித்த மூவேந்த வேளான், புரவுவரித்திணைக்களத்துக் கீழ்முகவெட்டி உள்ளிட்ட பலரும் உடனிருந்து ஊர்களனைத்தையும் அளந்து, ஒன்றாக்கிச் சதுர்வேதிமங்கலமாக அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாணையினை அளித்த மன்னன் முதலாம் இராஜாதிராஜனின் இறுதி ஆட்சி ஆண்டு முப்பத்தாறு (கி.பி. 1054) ஆகும். 36 ஆண்டுகள் ஆட்சி செய்து, மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவ மல்லன் சோமேஸ்வரனை எதிர்த்துக் கொப்பத்தில் செய்த போரில் போர்க் களத்திலேயே யானையின் மீதமர்ந்தவாறே உயிரை ஈந்தவன் இம்மன்னன். ஏற்கெனவே அண்ணன் இராஜாதிராஜனால் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றிருந்த இரண்டாம் இராஜேந்திரன் அந்தப் போர்க்களத்திலேயே சோழ அரசனாக முடி சூட்டிக் கொண்டு, தலைமையின்றி சிதறிய சோழப்படையை ஒழுங்குபடுத்தி தலைமையேற்று, ஆகவமல்லனின் தம்பி ஜெயசிம்மனைக் கொன்று, வெற்றிவாகை சூடி, கொல்லாபுரத்தில் தன் வெற்றித் தூணையும் நிறுவியவன்.

கொப்பத்துப் போருக்குச் செல்லும் முன்னர் அதற்கு முன்னாண்டில் (கி.பி. 1053) அண்ணனால் அளிக்கப்பட்ட இவ்வாணை அவனது தனயன் இரண்டாம் இராஜேந்திர சோழனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1061) வரியிலிட்டுச் செப்பேடாக்கித் தரப்பட்டுள்ளது.

இரண்டாம் ராஜேந்திரச் சோழன் சோழ நாடு திரும்பிய பின்னர் தன் அண்ணன் முதல் ராஜாதிராஜன் போருக்குச் செல்வதற்கு முன்பாக வழங்கிய தானத்தை உறுதி செய்து வழங்கிய செப்பேடு இப்போது கிடைக்கப் பெற்ற செப்பேடாகும்.

மேற்குறித்த எட்டு ஊர்களிலுமுள்ள நிலங்கள் அனைத்தும் அளக்கப்பட்டு நீக்க வேண்டியவற்றை நீக்கி, வெள்ளான்வகை, நிலங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி, கொடுக்கப்பட்ட நிலங்களுக்கான அளவுகளை மிக விரிவாகக் கூறுகிறது செப்பேடு. பின்னர் சதுர்வேதி மங்கலத்தில் கொடுக்கப்படும் பங்குகளும், அளிக்கப்பட்டோரின் பெயர்களும், அவரவர் ஊர், குடும்பப் பெயர்களோடு வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. தொடர்ந்து அவர்கட்குப் பணி செய்யும் நாவிதர், ஈரங் கொல்லிகள் (வண்ணார்), மற்றும் பறை அறிவிப்போர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பங்குகள் குறிக்கப்படுகின்றன. இறுதியாக அறத்தைக் காப்போர் பெறும் பலன் கூறி முடிவுக்கு வருகிறது செப்பேட்டு வாசகம்.

எண்பத்தைந்து செப்பேடுகளைக் கொண்ட இச்செப்பேட்டில் முதல் எட்டு செப்பேடுகள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பகுதியாகும். எட்டாம் செப்பேட்டின் இறுதியிலிருந்து கோனேரின்மை கொண்டான் என்று தொடங்கும் தமிழ்ப் பகுதி, 85ஆம் செப்பேடுவரை நீள்கிறது. இதில்தான் மேற்கூறிய அனைத்து விவரங்களும் உள்ளன. இச்செப்பேடுகளை எழுதி வரியில் இடப்பட்டது.

இரண்டாம் ராஜேந்திரன் காலத்திலாகும். எனவே, செப்பேட்டின் வளையத்திலுள்ள முத்திரையில் "பரகேஸரி வர்மன் ராஜேந்திரதேவனுடையது" என்று கிரந்த எழுத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. மேலும் "இவ்வளையத்தில் கோத்த செப்பேடு எண்பத்தாறு" என்றும் வளையத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளது. இதுவரை கிடைத்த தமிழகச் செப்பேடுகள்

எதிலும் இவ்வாறு செப்பேடுகளின் எண்ணிக்கை குறிப்பிடவில்லை என்பது சிறப்பாகும்.

இராஜாதிராஜனால் வெளியிடப்பட்டுக் கிடைத்திருக்கும் முதல் செப்பேடு என்ற பெருமைக்குரியது இச்செப்பேடாகும். தமிழகத்தில் - ஏன் இந்தியாவிலேயே கிடைத்துள்ள செப்பேடுகளில் பெரிய செப்பேட்டுத் தொகுதியாகக் கருதப்பட்ட முதலாம் இராஜேந்திரனின் 57 கரந்தைச் செப்பேட்டுத் தொகுதிகளை விட அளவிலும், செப்பேடுகளின் எண்ணிக்கையிலும் பெரிதாக விளங்குவது இச்செப்பேடாகும்.

நான் இச்செப்பேடுகளைப் பார்வையிட்ட போது துணை முதல்வர் தம்பி மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலாளர், சுற்றுலாத் துறை செயலாளர், தொல்லியல் துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் ஆகியோரும் தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் முனைவர் திரு. இரா. நாகசாமி ஆகியோரும் இருந்தனர். இச்செப்பேட்டின் வடமொழிப் பகுதியை நாகசாமி படித்துக் காட்டி இதுவரையில் கிடைத்த செப்பேடுகளில் இதுதான் எண்ணிக்கையிலும், அளவிலும் பெரிது என்று கூறினார். அப்போது நான் பெற்ற மகிழ்ச்சியினையும், நம் முன்னோர் குறித்த பெருமிதத்தையும் உன்போன்ற உடன்பிறப்புகள் அனைவரும் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கடிதம். இத்துணை சிறப்பு வாய்ந்த ஒரு மாநாட்டை உலகம் முழுவதும் உள்ள உத்தமத் தமிழர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து, வெளிநாட்டு அறிவொளி மிக்கார் வருகை தந்து, நடத்துகின்ற மாநாட்டின் பெருமையும் புகழும் எதிர்காலம் பற்றிய ஆக்கமும், ஊக்கமும் இங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, பொங்குற்ற சிலர் பொல்லாத வழியில் திசை திருப்பப் பார்க்கின்றனர்.

அவரெல்லாம் நில்லா நெடுஞ்சுவராயிடுவர்! வில்லாம், புலியாம், கயலாம், நம் தமிழ்க் கொடிக்கு முன்னே தடம் காண முடியாமல் தாழ்ந்திடுவர்! தமிழ்ச் சிங்கக் கூட்டமாம் நம்மை; தடம் மாற்றிப் போடுதற்கு இந்தத் தரணியில் எவரும் இல்லை! பழம்பெரும் தஞ்சை மண்ணில் சோழ மன்னர் ராஜாதிராஜன் வழி வந்தோர் அன்றைக்கே திட்டமிட்டு நமக்கென புதைத்து வைத்த 86 செப்பேடுகளும் அதைத்தான் நமக்கு உறுதிப்படுத்துகின்றன!

அன்புள்ள,

மு.க.

19-6-2010

3478. ஊழலே! உன் பெயர்தான் ஜெயலலிதாவா?

உடன்பிறப்பே,

நாள் தவறினாலும் அறிக்கை விடத் தவறாத எதிர்க்கட்சித் தலைவர் ஒவ்வொரு நாளும் ஒரு ஊரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியே கட்சியை நடத்திவிடலாம் என்று திட்டமிட்டு செய்து கொண்டிருக்கும் நிலையில், நேற்றைய அறிக்கையில் துணை முதலமைச்சர் ஸ்டாலின், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் புதிய சாராய தொழிற்சாலைகளை மின்னல் வேகத்தில் எழுப்பியுள்ளதாகவும், இந்த நிறுவனங்களுக்கு டாஸ்மாக் நிறுவனத்தின் ஆர்டர்கள் அதிக அளவில் வழங்கப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன என்று ஒரு அபாண்டமான குற்றச் சாட்டினைச் சொல்லியிருக்கிறார்.

"தான் திருடி பிறரை நம்பாள்" என்பது பழமொழி. ஸ்டாலின், கனிமொழி ஆகியோர் பெயரில் புதிய சாராய தொழிற்சாலைகள் என்றால், அந்தத் தொழிற்சாலைகள் எங்கே இருக்கின்றன? அந்தத் தொழிற்சாலைகளுக்கு டாஸ்மாக் நிறுவனத்தின் சார்பில் அதிக அளவில் ஆர்டர் வழங்கப்பட்டது என்றால் எவ்வளவு? இந்த விவரங்களையெல்லாம் ஜெயலலிதா சொல்லத் தயாரா? நாம் சிலவற்றைச் சொல்லவேண்டாமென்று நினைத்தாலும், ஜெயலலிதா தனது அறிக்கை வாயிலாகவே நம்மைச் சொல்லி ஞாபகப்படுத்த வைக்கிறார்.

"மிடாஸ்" தொழிற்சாலை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டதே, அது யாருடைய தொழிற்சாலை? அது யாருக்குச் சொந்தம் என்பது ஊருக்கே வெளிச்சமானது உண்டா? இல்லையா? அது ஜெயலலிதாவிற்கு வேண்டியவர்களுக்கு என்பது உலகம் அறிந்த உண்மை என்ற போதிலும் நான்காண்டு கால கழக ஆட்சிக் காலத்தில் டாஸ்மாக்கின் ஆர்டர்கள் குறைக்கப்பட்டதுண்டா? இல்லையே! அப்படிப்பட்ட "அல்பப்புத்தி" இந்த அரசுக்கு கிடையாது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் "மிடாஸ்" தொழிற்சாலைக்கு எப்படி அனுமதி கொடுக்கப்பட்டது, அந்தத் தொழிற்சாலையை ஊக்குவிக்க அந்த ஆட்சியிலே என்னவெல்லாம் செய்யப்பட்டது என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வகையறாக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும், தொடர்ந்து 1996 முதல் 2001 வரை இருந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்திலும் ஐந்துதான் இருந்தன. அவையாவன :-

1. மோகன் புரூவரீஸ்
2. சிவா டிஸ்டிலரீஸ்
3. பாலாஜி டிஸ்டிலரீஸ்
4. எம்.பி. டிஸ்டிலரீஸ்
5. சாபிள் டிஸ்டிலரீஸ்

இந்த ஐந்தைத் தவிர ஜெயலலிதாவின் கடந்த ஆட்சிக் காலத்தில் மேலும் ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அதுதான் மிடாஸ் டிஸ்டிலரீஸ். தற்போது ஸ்டாலின் பெயரிலும், கனிமொழி பெயரிலும் புதிய சாராயத் தொழிற்சாலைகள் மின்னல் வேகத்தில் உருவாகி வருவதாக அறிக்கை விட்டுள்ள ஜெயலலிதா ஆட்சியிலே அனுமதி வழங்கப்பட்டதுதான் இந்த மிடாஸ் தொழிற்சாலை.

இந்த 'மிடாஸ்' டிஸ்டிலரீஸ் எப்படி வந்தது என்பதைப் பற்றி விவரமாகக் கூறவேண்டும். நான் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, மேலே கூறிய ஐந்து மதுபான ஆலை அதிபர்களும் தங்களுடைய ஆண்டு மதுபான உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ள அனுமதி வேண்டுமென்று அனுமதி கோரிய போது, நான் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

அப்போது கோல்டன் டிஸ்டிலரீஸ் என்ற தனியார் நிறுவனம் ஒன்று தமிழ்நாட்டில் மதுபான தேவைகள் அதிகமாக இருப்பதால், ஏற்கெனவே உள்ள மதுபான ஆலைகளுக்கு உற்பத்தித் திறனை அதிகப்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலாக தங்களுக்கு மது பானம் தயாரிக்க தனியாக உரிமம் தரவேண்டுமென்று கோரி, தமிழக அரசிடம் விண்ணப்பித்தது. புதிதாக யாருக்கும் அனுமதி அளிப்பதில்லை என்பதால், அந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டது.

(G.O. Ms. No. 55 P & E iii dated 18-2-1999). உடனே அந்த தனியார் நிறுவனம் நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே 30-3-2001 அன்று தங்களுக்குச் சாதகமாக உத்தரவு பெற்றது; எனினும், தமிழக அரசின் சார்பில் வழங்க வேண்டிய சிறப்பு உரிமம் (Privilege) வழங்கப்பட வில்லை. மாறாக நீதிமன்ற ஆணையை எதிர்த்து மேல் முறையீடும் செய்தது.

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா அரசு பதவியேற்றவுடன், 1-2-2002 அன்று கோல்டன் டிஸ்டிலரீஸ் நிறுவனம் அரசுக்கு அளித்த கோரிக்கை மனுவில், தங்கள் கோரிக்கையை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டு மென்றும், நீதிமன்ற மேல் முறை யீட்டைத் திரும்பப் பெற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. ஜெயலலிதா அரசு, அந்த மனுவை உடனடியாக பரிசீலித்து அதாவது ஐம்பது நாட்களுக்குள்ளாகவே அதாவது 21-3-2002 அன்றே அந்த நிறுவனம் மலிவு விலை மதுபானம் தயாரிப்பதற்கான ஆணையைப் பிறப்பித்தது. இன்னும் சொல்லவேண்டுமேயானால் 21-3-2002 அன்று அரசாணை தயாரிக்கப்பட்டு, அந்த ஒரே நாளில் அந்தக் கோப்பு அனைத்து அதிகாரிகளாலும் பார்க் கப்பட்டு, கையெழுத்திடப்பட்டு, அதே நாளிலேயே ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியைப் பெற்றுக் கொண்ட கோல்டன் டிஸ்டிலரீஸ் நிறுவனம், அதற்கடுத்த மாதமே அதாவது 15-4-2002 அன்று மீண்டும் ஒரு மனுவினை அரசுக்குத் தாக்கல் செய்தது. அந்த மனுவில் தங்களுக்கு மலிவு விலை மதுபானம் தயாரிக்கும் அனுமதி மட்டும் போதாது, இந்தியாவில் தயாரிக்கப்படும் அன்னிய நாட்டு மது வகையறாக்களைத் தயாரிக்கும் அனுமதி வேண்டு மென்று அரசைக் கேட்டுக்கொண்டார்கள். அந்த மனுவையும் ஜெயலலிதா அரசு பரிசீலித்து ஐம்பதே நாட்களில் அதாவது 30-5-2002இல் அதற்கான அனுமதியை வழங்கி உத்தரவிட்டுள்ளது. (G.O. Ms. No. 115 dated 30-5-2002)

30-5-2002இல் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு - பத்தே நாட்களில் மீண்டும் அந்த கோல்டன் டிஸ்டிலரீஸ் நிறுவனம் அரசுக்கு ஒரு கோரிக்கை மனுவினைத் தருகிறது. அந்த மனுவில் தங்கள் தொழிற்சாலையை திருப்போரூர் தாலுகாவில் உள்ள தையூர் கிராமத்திலிருந்து திருப்பெரும்புதூர் தாலுகாவில் உள்ள சிறுமாத்தூர் கிராமத்திற்கு மாற்றிட அனுமதிக்க வேண்டுமென்று

கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையும் ஒரே மாதத்தில் ஏற்று 10-7-2002 அன்று அந்த இடத்தை மாற்றிக் கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. (G.O. Ms. No. 131 dated 10-7-2002).

தொடர்ந்து அந்த நிறுவனம் 26-9-2002 அன்று அரசுக்கு எழுதிய கடிதத்தில் தங்கள் நிறுவனத்தின் பெயரை "மிடாஸ் கோல்டன் டிஸ்டிலரீஸ்" என்று மாற்றிக் கொண்டதாகத் தெரிவித்து, அதையும் அரசு ஏற்றுக்கொண்டது. இந்தப் பெயர் மாற்றம் வெளியே வந்த பிறகு, அரசாங்கம் இவ்வளவு அவசர அவசரமாக அந்த நிறுவனத்திற்கு என்ன காரணத்தால் (?) இந்த அனுமதியை வழங்கியது என்ற விவரங்கள் எல்லாம் வெளி உலகத்திற்குத் தெரிந்தது.

மதுபானங்களைத் தயாரிக்கும் இந்த ஆறு தொழிற்சாலைகளும் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு சரக்குகளைத் தயாரிக்கலாம் என்பது அரசினால் நிர்ணயிக்கப்படும்.

மோகன் புரூவரீஸ் 42 இலட்சம் பெட்டிகள்

சிவா டிஸ்டிலரீஸ் 66 இலட்சம் பெட்டிகள்

பாலாஜி டிஸ்டிலரீஸ் 57 இலட்சம் பெட்டிகள்

எம்.பி. டிஸ்டிலரீஸ் 30 இலட்சம் பெட்டிகள்

சாபிள் டிஸ்டிலரீஸ் 30 இலட்சம் பெட்டிகள்

ஆனால் மிடாஸ் டிஸ்டிலரீஸ் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை இலட்சம் பெட்டிகள் வேண்டுமானாலும் தயாரிக்கலாம். அதற்கென்று ஒரு குழு அமைத்து அவர்களின் பரிந்துரைகளைப் பெற்று எவ்வளவு பெட்டிகள் தயாரிக்கலாம் என்று நிர்ணயிக்க வேண்டும். ஆனால் அ.தி.மு.க. ஆட்சி இருந்தவரை அந்தக் குழுவே நியமிக்கப்படவில்லை.

தி.மு.கழக அரசு இருந்தபோது ஒவ்வொரு ஆண்டும் மூலப் பொருள் வழங்குவது பற்றி அரசு ஆணை பிறப்பிக்கும். ஓராண்டு தேவைக்கான மூலப் பொருள் அதாவது ஏப்ரல் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை 12 மாதங்களுக்கான தேவையான மூலப் பொருள் பெற்றுக்கொள்ள அரசு ஒரே ஆணையில் அனுமதி வழங்கும். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் இதில் பெரிய மாற்றம்

செய்யப்பட்டது. ஜெயலலிதா அரசு பொறுப்பேற்ற 2001ஆம் ஆண்டு, 2001-2002ஆம் ஆண்டுக்கு மட்டும் ஓராண்டிற் கான அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இவர்களுடைய "மிடாஸ்" நிறுவனம் தொடங்கப்பட்ட பிறகு, மூலப் பொருள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும் ஆணை ஆண்டு ஒன்றுக்கு நான்கு தவணையாக மாற்றப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மூலப்பொருள் வாங்குவதற்கான அனுமதி அரசிடமிருந்து பெற வேண்டும் என்கிறபோது, அரசின் தயவு அவர்களுக்கு எப்போதும் தேவைப்படும். தங்களுக்கு அனுசரணையாக எந்தவொரு நிறுவனமும் இல்லா விட்டால், உடனடியாக அந்த நிறுவனத்திற்கான மூலப்பொருள் அனுமதி வழங்குவதில் அரசு தயக்கம் காட்டும். எனவே இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அரசின் தயவை நாடியே இருந்து வர வேண்டிய நிலைமை உண்டாயிற்று. மேலும் அந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய மூலப் பொருள் வழங்குவதில் தாமதம் செய்தால், "மிடாஸ்" நிறுவனத்தின் உற்பத்தி பெருகிடும் என்பதற்காகவே இந்தத் தந்திரம் கையாளப்பட்டு அதில் பெரும் வெற்றியும் பெற்றார்கள்.

நான் மிடாஸ் நிறுவன ஊழல் பற்றி ஏற்கெனவே அறிக்கை வெளியிட்டபோது அந்த நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை எவ்வளவு என்பதை ஆண்டு வாரியாக வெளியிடத் தயாரா? என்று கேட்டிருந்தேன். ஆனால் அ.தி.மு.க. அரசு அந்த விவரத்தை வெளியிடவில்லை. எனவே அந்த விவரத்தையும் அப்போதே நானே வெளியிட்டேன். ஆனால் அப்போது ஆட்சியிலே இருந்தவர்கள் நான் கூறிய எந்தத் தகவலையும் மறுக்கவில்லை.

மிடாஸ் நிறுவனம் 2003-2004ஆம் ஆண்டில் விற்பனை செய்த சரக்குகள் 7 இலட்சத்து 48 ஆயிரத்து 638 பெட்டிகள்தான். அந்த ஆண்டு வரை மதுபான சில்லறை விற்பனை தனியாரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டது. சில்லறை விற்பனையை நடத்திய தனியார்; மிடாஸ் நிறுவனம் தயாரித்த சரக்குகளை அதிகமாக வாங்கிட முன்வரவில்லை. எனவே ஜெயலலிதா அரசு, அரசின் வருவாயைப் பெருக்குவதற்காக சில்லறை விற்பனையை அரசே எடுத்துக் கொண்டு செய்யப்போவதாக அறிவித்து, அமுலாக்கிய போதிலும், உண்மையான எண்ணம் மிடாஸ் நிறுவனத்தின்

தயாரிப்புகளை கட்டாயமாக டாஸ்மாக் நிறுவனத்தின் வாயிலாக சில்லறைக் கடைகளுக்குக் கொண்டு போய் விற்று, அதிக இலாபம் பெற்றிட வேண்டும் என்பதுதான்.

இவ்வாறு அவர்கள் செய்ததின் விளைவாக 2003-2004 ஆம் ஆண்டில் மிடாஸ் நிறுவனத்தின் விற்பனை 7 இலட்சத்து 48 ஆயிரம் பெட்டிகள் என்பதற்கு மாறாக, 2004-2005 ஆம் ஆண்டில் மிடாஸ் நிறுவனத்தின் தரம் குறைந்த சரக்கு, 28 லட்சத்து 50 ஆயிரத்து 95 பெட்டிகள் என்று பெருகியது. ஒரே ஆண்டில் நான்கு மடங்கு அதிகமாக விற்பனை ஆனதற்குக் காரணமே, சில்லறை விற்பனையை அரசாங்கமே எடுத்து நடத்தியதால்தான்!

2003-2004 ஆம் ஆண்டு மிடாஸ் நிறுவனத்தின் விற்பனை மொத்த விற்பனையில் 4.68 சத விகிதம் என்ற நிலையிலிருந்து 2004-2005 ஆம் ஆண்டு விற்பனை 14.79 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்தது.

அடுத்து, 2005-2006 ஆம் ஆண்டில் மிடாஸ் நிறுவனத்தின் விற்பனை எவ்வளவு தெரியுமா? 2003-2004இல் 7 இலட்சத்து 48 ஆயிரம் பெட்டிகள் என்பதற்கு மாறாக 2005-2006இல் 51 லட்சத்து 22 ஆயிரம் பெட்டிகள். அதாவது எட்டு மடங்கு விற்பனை இரண்டே ஆண்டுகளில் அதிக மாயிற்று என்றால் அதற்கு என்ன காரணம்? சதவிகித அடிப்படையிலே சொல்ல வேண்டுமென்றால், 2003-2004 ஆம் ஆண்டு மொத்த விற்பனையில் 4.68 சதவிகிதமாக இருந்தது, 2005-2006இல் 22.49 சதவிகிதம் என்ற அளவிற்குப் பெருகக்கூடிய நிலையில் ஜெயலலிதா அரசு அவர்களுக்கு உதவி செய்தது.

மற்ற நிறுவனங்களோடு இதனை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால் - 2003-2004இல் பாலாஜி டிஸ்டிலரீஸ் நிறுவனத்தின் விற்பனை 25.58 சதவிகிதம் என்பது 2005-2006இல் 22.08 சதவிகிதமாக குறைந்தது. சிவா டிஸ்டிலரீஸ் நிறுவனத்தின் விற்பனை 2003-2004இல் 25.34 சதவிகிதம் என்றிருந்தது, 2005-2006இல் 19.40 சதவிகிதமாகக் குறைந்தது. மோகன் டிஸ்டிலரீஸ் நிறுவனத்தின் விற்பனை அது போலவே 25.43 சதவிகிதம் என்ற நிலையிலிருந்து 13.06 சதவிகிதமாகக் குறைந்தது. ஆனால் மிடாஸ் நிறுவனத்தின் விற்பனை மட்டும் 4.68 சதவிகிதம் என்பதிலிருந்து 22.49 சதவிகிதமாகப் பெருகியது

என்றால், அ.தி.மு.க. அரசு இந்த நிறுவனத்திற்கு மட்டும் காட்டிய அக்கறை என்பது புரிகிறதா இல்லையா?

மிடாஸ் நிறுவனத்தின் சரக்குகளை மட்டும் இந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஜெயலலிதா அரசு விற்பனை செய்தது ஏன்? இதற்காகத்தான் சில்லறை வியாபாரத்தை அரசே எடுத்து நடத்தியதா? அரசின் வருவாயைப் பெருக்குவதாகக் கூறி, தனது பினாமி நிறுவனத்தின் விற்பனையை அதிகரித்தது எப்படிப்பட்ட குற்றம்? இதற்கு ஜெயலலிதாவின் பதில் என்ன? மதுபான வியாபாரமே ஒட்டுமொத்தமாக தமது பினாமியின் கஜானாவிற்குப் போய்ச் சேரத் திட்டமிட்ட சதியா அல்லவா இது என்றெல்லாம் கடந்த கால ஆட்சியில் நான் விடுத்த அறிக்கைக்கு அரசின் சார்பில் எந்தப் பதிலும் தரப்படவில்லை.

இந்த அளவிற்கு ஊழல்களைச் செய்து விட்டு - அவற்றையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு - "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்" என்பதைப் போல அறிக்கை விட்டிருக்கிறார்! அவர் ஆட்சியில் நடைபெற்ற விவரங்களை நான் விளக்கியிருக்கிறேன். தற்போது அவர் அறிக்கையிலே தெரிவித்த தகவலுக்கான ஆதாரங்களை வெளியிடத்தயாரா?

அன்புள்ள,

மு.க.

4-7-2010

3479. "பந்த்" தால் விளையப் போகும் பயன் என்ன?

உடன்பிறப்பே,

பாரதீய ஜனதா கட்சி - அ.தி.மு.க. - இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து ஓர் அணியில் நின்று ஜூலை 5ஆம் தேதி இந்தியா முழுமையையும் ஸ்தம்பிக்கும் அளவுக்கு ஒரு "பந்த்" நடத்தப் போகிறோமென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்கு ஊடகங்கள் கூரேற்றி ஓரிடத்தில்கூட சோடை போகாமல் அந்தப் "பந்த்" நடைபெற வேண்டு மென்று - மதவாத சக்திகளான பா.ஜ.க. வினரும் - இடதுசாரி அணியினரும் - அ.தி.மு.க. வினரும் - அறிக்கை விடுத்ததோடு - அந்த "பந்த்" மகத்தான வெற்றி பெற வேண்டுமென்பதற்காக - "பந்த்" பற்றிய பரபரப்பான செய்திகளையெல்லாம் வெளியிட்டு - அவற்றைப் பரப்பியும் வந்தார்கள்.

அந்த அணியினுடைய முக்கிய தலைவர்கள் - இந்த "பந்த்" அமைதியான முறையில் நடைபெற வேண்டுமென்று செய்தியாளர்கள் மூலமாக கருத்து வெளியிட்டார்கள். "பந்த்"தின் காரணமாக பத்தாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நாட்டுக்கு இழப்பு என்று ஒரு செய்தியும் - நாட்டின் தேசிய உற்பத்தியில் பதிமூன்றாயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தொழில் வணிகச் சங்கங்களின் கூட்டமைப்பு அறிக்கைகளின் மூலமாகவும் செய்திகள் வெளி வந்துள்ளன.

பொதுவாக "பந்த்" - வேலை நிறுத்தம் போன்றவை தவிர்க்க முடியாத காரணங்களால் நடத்த வேண்டிய நிலை இருக்குமானால் அதனை நான் என்றைக்கும் எதிர்த்து எந்தவிதமான கருத்தும் தெரிவித்ததில்லை.

கூறப்படும் குறிக்கோள், கொள்கை, கோரிக்கை இவற்றை அடைவதற்கான முயற் சிகளில் ஈடுபடுவோர் யாராயினும் அவர்களை நாம் சந்தேகித்ததில்லை.

"சபாஷ்" என்று தட்டிக் கொடுக்கவும் தவறியதில்லை!

ஆனால் கூறப்படும் குறிக்கோள், கொள்கை இவற்றில் எவ்வளவு நியாயமிருந்தபோதிலும் அவற்றை அடைவதற்கான வழிமுறைகளில் வாய்மை தவறினாலோ அல்லது வன்முறை தலை காட்டினாலோ - அப்போது குறிக்கோள் வெற்றிக்கு இரண்டாவது இடத்தையும், வழிமுறை தவறாத வாய்மையான நிலைக்கு முதல் இடத்தையும் தருபவர்கள் நாம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை - விலை வாசி உயர்வு கண்டனம் போன்ற எத்தனையோ பிரச்சினைகளில் மக்கள் நலன் - மக்கள் உரிமை இவற்றை முன் வைத்து நாம் போராட்டங்களை கழகத்தின் சார்பாக தனித்து நின்றும் நடத்தியிருக்கிறோம்; பிற கட்சிகளின் துணை கொண்டும் நடத்தியிருக்கிறோம்.

அத்தகைய போராட்டங்களில் ரயில் நிறுத்தக் கிளர்ச்சிகளைக்கூட - பேருந்து மறித்தல் கிளர்ச்சிகளைக்கூட திடுதிப்பென்று அறிவிக்கப்படாத நிகழ்ச்சியாக அவற்றை நாம் நடத்தியதில்லை. குறிப்பிட்ட ஒரு தேதியில் - குறிப்பிட்ட ஓர் இடத்தில் - காலையோ, மாலையோ - பெயர் குறிப்பிட்ட இந்தத் தோழர்கள் - இந்த நேரத்தில் ரயில் நிறுத்தப் போராட்டத்திலோ - பேருந்து மறித்தல் போராட்டத்திலோ ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டு - அவர்கள் எந்த இடத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டு - அந்த இடத்திற்கு வருவார்கள் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டு -

காவல் துறையினரும் அந்த இடத்திற்குச் சென்று அவர்களை கைது செய்து - சிறையில் அடைப்பார்கள். இது இன்று நேற்றல்ல; 1938ஆம் ஆண்டு கட்டாய இந்தியை எதிர்க்க சென்னை தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளி வாசலில் தந்தை பெரியாரின் ஆணைப்படி; தமிழர் படையினர் நடத்திய திராவிட இயக்கத்தினருடைய மொழிப் போராட்டத்திலிருந்து இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும்.

ஒன்றிரண்டு போராட்டங்களில் பிற கட்சியினர் புகுந்து வம்பு, தும்பு செய்த காரணத்தினாலோ - அல்லது காவல் துறையினரின் அத்து மீறலாலோ -விதி விலக்காக ஒழுங்கு முறையான அமைதி வழி கிளர்ச்சிகள் கூட அமளி வழிக்கு திரும்பியிருக்கக் கூடும்.

ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அப்படி ஒரு போராட்ட முறையைக் கடைப்பிடிக்கும் இயக்கமாக திராவிடர் இயக்கம் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே இருந்ததில்லை.

ஆனால் இடது சாரிகளும், பாஜ.க.வினரும், அ.தி.மு.க. வினரும் அணி சேருகிறார்கள். அந்த அணியில் அத்வானி போன்ற மூத்த தலைவர்கள் இந்தக் கிளர்ச்சியில் அமைதி கெடக் கூடாது என்பதை வலியுறுத்தினாலுங் கூட - அதையும் மீறியோ அல்லது அத்வானியின் அறிவுரைக்கு இதுதான் பொருள் என்று கருதிக் கொண்டோ;

இதோ பாட்னாவில் பாவையர் பட்டாளம் படையெடுத்து பாதையை மறைக்கும் காட்சியையும் - அவர்கள் கரங்களில் பளபளக்கும் பட்டாக் கத்திகளையும் பார்க்கும்போது "பாரத் பந்த்" நடத்தியவர்களே - இவற்றை விரும்பினார்களா என்று ஐயுறத்தான் வேண்டியிருக்கிறது.

எப்படியோ - தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த முழு அடைப்புக்கு ஆதரவில்லை என்பதையும் - அங்கொன்றும் இங்கொன்றுமாக - பேருந்துகள் மீது கல்வீச்சுகள் நடைபெற்று சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள் என்பதைத் தவிர வேறு எந்தப் பாதிப்பும் இல்லை யென்றும் பா.ஜ.க., இடதுசாரிகள் ஆளுகின்ற மாநிலங்களில்தான் இயல்பு வாழ்க்கை முடங்கியதாகவும் இந்த அணியின் ஆதரவு ஏடுகள் செய்தி வெளியிட்டிருப்பதில் இருந்தே தமிழகத்தில் என்னதான் அ.தி.மு.க., பா.ஜ.க., போன்ற பெரிய கட்சிகள் அணி வகுத்து நின்றாலும், விலைவாசி உயர்வு என்ற கோஷம் - அதனால் ஏற்படும் பாதிப்பு - இந்தியாவில் மற்ற மாநிலங்களைப் போல தமிழ் மாநில மக்களைப் பாதிக்க வில்லை என்பதும் - அப்படிப் பாதிக்காத அளவிற்கு அவர்களைப் பாதுகாக்கும் கடமையை இங்குள்ள நமது அரசு நிறைவேற்றி வருகிறது என்பதும் - அதனால்தான் பூதாகாரமாக எதிர் பார்த்த பா.ஜ.க. - அ.தி.மு.க. - இடதுசாரிகள் கொண்ட கூட்டணியின் "பந்த்" வெற்றி பெறவில்லை என்பதும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இதைச் சொல்வதால் விலைவாசி உயர்வுக்கு வெண்சாமரம் வீசுபவர்கள் அல்ல நாம்; மற்ற மாநிலங்களைப் போல அல்லாமல்

தமிழ் மாநிலத்தில் கிலோ அரிசி ஒரு ரூபாய் என்பதும் - மானிய விலையில் மளிகைச் சாமான்களைப் பெற முடியும் என்பதும் - பஸ் கட்டண உயர்வில்லை என்பதும் - விலைவாசி உயர்வின் பாதிப்பை சாதாரண - சாமான்ய மக்களிடமிருந்து அகற்றியிருப்பதை எண்ணிப் பார்த்தால் முழு உண்மையும் புலப்படும்.

எண்ணிப் பார்க்க முன்வராமல்;

எப்போது தங்கள் ஆட்சி வரும் என்பதற்காக மாத்திரம் நாள்களை எண்ணிக் கொண்டிருப்போருக்கு;

"பாரத் பந்த்" - பாதை மறியல் - பட்டாக் கத்தி வீச்சு - இவற்றால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை!

அன்புள்ள,

மு.க.

7-7-2010

3480. வெல்லத் தமிழ் இனி வளரும்!

உடன்பிறப்பே,

கோலமிகு கோவை மாநகரில் ஜூன் திங்கள் 23 முதல் 27வரை ஐந்து நாட்கள் குவலயமே திரண்டு வந்து கூடியதோ என்று அனைவரும் வியந்து போற்றும்வண்ணம், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது. "இலட்சோபலட்சம் மக்கள் திரண்டனர்! எத்திசை நோக்கினும் எண்ணிலடங்கா மனிதத் தலைகள்" எனப் பத்திரிகைகள் அனைத்தும் பாரபட்சமின்றி பாராட்டும் அளவிற்கு மாபெரும் மக்கள் சங்கமம் என அம்மாநாடு நிகழ்ந்தது. முன்னர் நடைபெற்ற மாநாடுகளை எல்லாம் விட - ஒரு சீர் கூடுதலாக "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு" என்ற பெயரில் நடைபெற்ற அந்த மாநாட்டில்; ஐம்பதுக்கும் மேலான நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் அறிஞர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், ஆய்வாளர்கள் வந்து, ஆய்வரங்குகளில் கலந்து கொண்டு, தமிழ்மொழியின் மேன்மையைப் பற்றியும், மென்மையைப் பற்றியும்; தமிழர் நாகரிகத்தின் தொன்மையைப் பற்றியும், தனித்தன்மையைப் பற்றியும்; இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கித் தமிழ்மொழியை எடுத்துச் செல்வதற்கான தேவைகளைப் பற்றியும்; அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான வழிமுறைகளைப் பற்றியும்; பல்வேறு வகையான கருத்துகளை எடுத்து இயம்பியிருக்கிறார்கள்.

மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் வழங்கிய கருத்துரைகளின் அடிப்படையில் - மாநாட்டின் நிறைவு நாளன்று தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழகத்தின் வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பயனுள்ள 15 அறிவிப்புகளையும், தீர்மானங்களையும் நான் வெளியிட்டேன். அவைகளில் ஒன்று; "தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளித்திட, உரிய சட்டம் தமிழக அரசின் சார்பில் இயற்றப்படும்"

என்னும் அறிவிப்பாகும். அந்த அறிவிப்பு மாநாட்டில் கூடியிருந்த மாபெரும் மக்கள் வெள்ளத்தின் மனமார்ந்த வரவேற்பினைப் பெற்றது.

மாநாடு நிறைவு பெற்று, சென்னைக்குத் திரும்பி வழக்கம்போல் தொடர்ந்து, மக்கள் பணிகளில் ஈடுபட்டிருக்கும் எனக்கு, நாள் தோறும் கிடைத்திடும் செய்திகள், "இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாரதி பாடிய கவிதை வரிக்கொப்ப; செவிக்கும், நெஞ்சத்திற்கும் இனிமை ஊட்டுபவையாக உள்ளன.

தமிழ்வழியில் பொறியியல் பட்டப் படிப்புகள் என்னும் தன்னிகரில்லாத் திட்டம் இந்த ஆண்டு தொடங்கியுள்ளது. முதல்கட்டமாக, அண்ணா பல்கலைக் கழகக் கல்லூரிகளில், "சிவில்", "மெக்கானிகல்" பிரிவுகளில் மட்டும் தமிழ்வழிக் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை-கிண்டி பொறியியல் கல்லூரி, திருச்சி - அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திண்டிவனம், அரியலூர், இராமநாதபுரம், திருக்குவளை, பண்ருட்டி, பட்டுக்கோட்டை, திண்டுக்கல், நாகர்கோயில், தூத்துக்குடி ஆகிய அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் என மொத்தம் 11 கல்லூரிகளில் "சிவில்" படிப்பில் தமிழ் பயிற்றுமொழி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. கிண்டி பொறியியல் கல்லூரி, திருச்சி அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் விழுப்புரம், ஆரணி, அரியலூர், இராமநாதபுரம், திருக்குவளை, பண்ருட்டி, பட்டுக்கோட்டை, திண்டுக்கல், நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் என மொத்தம் 12 கல்லூரிகளில், "மெக்கானிக்கல்" படிப்பில் தமிழ் பயிற்றுமொழி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

பொதுப் பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு கடந்த ஐந்தாம் தேதி முதல் நடந்துவருகிறது. இந்தக் கலந்தாய்வில் 190க்கு மேல் "கட்-ஆப்" மதிப்பெண் எடுத்த மாணவர்கள் கூட, தமிழ்வழிப் பொறியியல் படிப்பைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதும்; பொறியியல் பட்டப்படிப்புக்கான கலந்தாய்வு தொடங்கி, முதல் ஐந்து நாட்களிலேயே, தமிழ்வழி பொறியியல் படிப்பில் 22 பேர் சேர்ந்துள்ளனர் என்பதும்; உண்மையிலேயே நமக்கெல்லாம் இனிப்பான செய்தியாகும். கடந்த 6, 7, 8 ஆகிய தேதிகளில்

பொறியியல் படிப்பில் தலா 2 பேர், 10ஆம் தேதியன்று 7 பேர், தொழில்கல்வி படிப்பில் 9 பேர் என மொத்தம் 22 பேர் இதுவரை தமிழ்வழிப் பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ளனர். பொறியியல் பட்டப்படிப்புக்கான கலந்தாய்வு இன்னும் ஒருமாதத்திற்குமேல் நடைபெற உள்ளது. எனவே, தமிழ்வழிப் பொறியியல் படிப்பில் மேலும் ஏராளமான மாணவர்கள் சேருவார்கள் என்று நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

தமிழ்வழிப் பொறியியல் பட்டப்படிப்பில் ஏற்பட்டுள்ள ஆர்வத்தின் காரணமாக, மாணவர் மற்றும் பெற்றோர்களிடையே; தற்போது அண்ணா பல்கலைக்கழகங்களில் மட்டுமே தொடங்கப்பட்டுள்ள தமிழ்வழிப் பொறியியல் படிப்பு; அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும், தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலும் தொடங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை எழுந்துள்ளது என்ற செய்தி, "எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்" என்ற எழுச்சி முழக்கத்திற்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்திருக்கிறது.

உடன்பிறப்பே, கழக அரசு 2006ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன், 31.5.2006 அன்று, தமிழ் மொழிக் கல்வி, முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை கட்டாயம் எனச் சட்டம் நிறைவேற்றப் பட்டதையும்; அந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டதன் காரணமாக, இந்தக் கல்வி ஆண்டு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்கள் தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாகப் படித்துப் பயன்பெறும் நல்ல சூழல் உருவாகியிருக்கிறது என்பதையும் நீ மறந்திருக்கமாட்டாய்!

எனக்குத் தரப்பட்டுள்ள இன்னொரு இனிய செய்தியினையும் உன்னோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆசியாவிலேயே முதல் பல்கலைக்கழகம் என்பதையும்; அது முதன் முதலாகத் தமிழகத்தில், கழக ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது என்பதையும் நீ அறிவாய். அந்தப் பல்கலைக் கழகத்தின் பி.வி.எஸ்சி., பட்டப்படிப்புக்கான கலந்தாய்வு 9.7.2010 அன்று தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 9.7.2010 அன்று மட்டும், 166 இடங்களுக்கான கலந்தாய்வு நிறைவேறியிருக்கிறது. 166

இடங்களில், 51 இடங்கள் பொதுத் தொகுப்பிற்கும், 44 இடங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், 6 இடங்கள் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும், 33 இடங்கள் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், 25 இடங்கள் ஆதிதிராவிடர்களுக்கும், 5 இடங்கள் அருந்ததியினர்க்கும், 2 இடங்கள் பழங்குடியினர்க்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. முஸ்லீம்கள் 6 இடங்களைப் பெற்றிருப்பதும், அருந்ததியினர் 5 இடங்களைப் பெற்றிருப்பதும் கழக அரசால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனி உள்ஒதுக் கீட்டின் காரணமாக அல்லவா?

முஸ்லீம்களுக்குக் கழக அரசால் வழங்கப்பட்ட தனி இடஒதுக்கீட்டின் காரணமாக, அந்த சமுதாயத்தினர் தொடர்ந்து பயன்பெற்று வருவதை அனைவரும் அறிவர். பொறியியல் பட்டப்படிப்பில், 2008-2009ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட முஸ்லீம் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3,288; பொறியியல் பட்டப்படிப்பில், 2009-2010ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட முஸ்லீம் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3,655. ஆனால், தனி உள்ஒதுக்கீடு வழங்கப்படு வதற்கு முன்பு, 2007-2008ஆம் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பில் சேர்க்கப்பட்ட, முஸ்லீம் மாணவர் களின் மொத்த எண்ணிக்கை 2,134தான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதைப்போலவே, 2008-2009ஆம் ஆண்டில், பொறியியல் பட்டப்படிப்பில் அருந்ததியர்களுக்கு கிடைத்த இடங்கள் 1,093. உள் ஒதுக்கீடு வழங்கியதற்குப் பிறகு 2009-2010ஆம் ஆண்டில், அவர்களுக்குக் கிடைத்த இடங்கள் 1,165.

மருத்துவப் பட்டப்படிப்பிலும், உள்ஒதுக்கீடு வழங்கியதற்குப் பிறகு முஸ்லீம் சமுதாயத்தினரும், அருந்ததியினரும் தொடர்ந்து அதிக இடங்களைப் பெற்று பலனடைந்து வருகிறார் கள் என்பதை அனைவரும் அறிவர்.

உடன்பிறப்பே, “தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் மொழி ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும்; தரணியெங்கும் பரவிட வேண்டும்; மங்காமல் மறையாமல் போற்றிப் புகழப்படவேண்டும்; அந்த மறுமலர்ச்சி தமிழுக்கும், தமிழர்களுக்கும் ஏற்படத்தான் திராவிட முன்னேற்றக் கழகம்

ஆட்சிபீடம் ஏறிட விரும்புகிறது" என்று 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் முழங்கினார்கள். அந்த முழக்கத்தை என்றென்றைக்கும் கருத்திலும், கவனத்திலும் கொண்டுதான், நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கும்; பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, அருந்ததியின சமுதாயத்திற்கும் கழகம் என்றென்றைக்கும் காவல் அரணாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்குமான சில சான்றுகளைத்தான் இன்றைய கடிதத்தில் வழங்கியிருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

12-7-2010

3481. வேண்டாத விமர்சனங்கள்; மறப்போம்! மன்னிப்போம்!

உடன்பிறப்பே,

உச்ச நீதிமன்ற நீதியரசராக அரும்பணி யாற்றி ஓய்வு பெற்ற திரு.ரெத்தினவேல் பாண்டியன் அவர்கள், அவரது துணைவியாரை கடந்த சில திங்கள்களுக்கு முன்பு இழந்த பிறகு அமெரிக்காவில் பணியாற்றி வரும் தன் புதல்வர்கள் இல்லத்திற்குச் சென்று வருவதாக என்னிடம் கூறிவிட்டுச் சென்றிருந்தார். அவர் இரண்டு நாட்களுக்கு முன்பு என்னைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு - அங்கே வெளிவரும் "தி வால் ஸ்ட்ரீட் ஜெர்னல்" என்ற ஆங்கில இதழ் ஒன்றைக்காண நேர்ந்ததாகவும் - அதில் "A New Detroit Rises in India's South - Car Makers Are Lured by Chennai's Port, Educated Workers and Limited Hassles" என்ற தலைப்பில் ஒரு பெரிய கட்டுரை வெளிவந்திருப்பதைக் கூறி - அதிலே தமிழக அரசினைப் பாராட்டி பெரிதும் எழுதியிருப்பதாக மகிழ்ச்சியோடு தெரிவித்தார். நான் உடனடியாக அந்த இதழில் வெளிவந்த அந்தக் கட்டுரையை எனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டு - அவரும் பொறுப்பாக தன் மைந்தர்களிடம் கூறி எனக்கு அந்தக் கட்டுரை கிடைத்தது.

அந்தக் கட்டுரையில்;

❖ "சென்னை, டெட்ராய்ட்டைப் போல உள்ளது. பல சர்வதேச கார் உற்பத்தி நிறுவனங்களும், விநியோக நிறுவனங்களும் அவர்களது தொழிற்சாலைகளை நிறுவியுள்ளதால் ஐம்பது இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்தப் பெருநகரம் செழித்து வருகிறது. ஃபோர்ட், யுண்டாய், நிஸான், ரெனோ, டெய்ம்லர்,

பி.எம். டபிள்யூ ஆகிய அனைத்து நிறுவனங்களும் இங்கு சங்கமித்துள்ளன.

❖ ஏற்றுமதிக்காகவும், வசதி பெருகி வரும் இந்தியர்களுக்காகவும் உலகின் சிறிய கார்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய மையமாக சென்னையை உரு வாக்க அவர்கள் பல நூறு கோடி டாலர்களைச் செலவழித்து வருகின்றனர்.

❖ விரைவில் சென்னை ஆண்டுக்கு 15 லட்சம் கார்களை உற்பத்தி செய்யும். இது கடந்த ஆண்டு எந்த அமெரிக்க மாநிலமும் செய்த உற்பத்தி அளவைவிட அதிகமாகும்.

❖ கார் உதிரி பாகங்களின் விநியோக நிறுவனங்களும் இங்கு முதலீடு செய்து வருகின்றன. பிரான்ஸ் நாட்டின் டயர் நிறுவனமான மை கெலின், கார் கண்ணாடி உற்பத்தி நிறுவனம் செயிண்ட் கோபைன், சென்னையில் உலகிலேயே மிகப் பெரிய தொழிற் சாலைகளை நிறுவுகின்றன. ஜெர்மனியின் டெய்ம்லர் நிறுவனம் பல நூறு கோடி டாலர் செலவில் சோதனை ஓட்ட தளத்தை நிர்மாணித்து வருகிறது.

❖ இந்த முதலீடுகள் அனைத்துமாகச் சேர்ந்து இரண்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

❖ கார் தொழிலுக்குத் தேவையான நிலம், சாலைகள், மின்சாரம் ஆகியவற்றை அளிப்பதில் இந்தியாவின் பல மாநிலங்களைவிட தமிழ்நாடு சிறப்பாக உள்ளது.

❖ ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவும், அல்லது தொழிலை விரிவாக்கம் செய்யவும் டஜன் கணக்கான அரசு அனுமதிகளைப் பெற ஒரே அலுவலகத்தையும் (ஒற்றை சாளர முறை) தமிழ்நாடு அமைத்துள்ளது.

❖ மாநில அரசுகள், கட்சிகளிடம் மாறும் போது இந்தியாவில் உள்ள பெரிய நிறுவனங்கள்; பலமுறை பிரச்சினைகளைச் சந்தித்துள்ளன. ஆனால் 2006ஆம் ஆண்டு தி.மு.கழகம், மாநில ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டபோது தாங்கள் நடத்தப்பட்ட விதத்தில் எந்த மாற்றத்தையும் காண வில்லை என்று கார் நிறுவனங்களின் நிர்வாகிகள் கூறினர்.

❖ அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா, கொரியா ஆகிய நாடுகளிலிருந்து புதிய மாணவர்கள் வரத் தொடங்கியுள்ளதால் சென்னை அமெரிக்கன் பள்ளியின் மாணவர் எண்ணிக்கை நான்கு மடங்காக உயர்ந்துள்ளது."

இவ்வாறு அந்தக் கட்டுரையில் தமிழகத்தைப் பற்றியும், இங்கே தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் பற்றியும், தொழில் வளர்ச்சியில் கழக அரசுக்குள்ள அக்கறை பற்றியும் எழுதியுள்ளது.

இந்தக் கட்டுரையினை நான் அந்த அமெரிக்க இதழான "தி வால் ஸ்ட்ரீட் ஜெர்னல்" என்ற பத்திரிகையில் படித்தபோது ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, இதே இதழைப் பற்றிய செய்தி தமிழகத்திலே பெரிதும் பேசப்பட்டது என் நினைவிற்கு வந்தது. ஆம், அப்போது தமிழ கத்திலே அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையிலே நடைபெற்று வந்தது. அப்போது அ.தி.மு.க. ஆட்சியைப் பற்றி நாள்தோறும் பெரிய அளவில் விளம்பரங்கள் செய்யப்பட்டன. உதாரணத்திற்கு ஒன்றினைச் சொல்ல வேண்டும், இந்தியாவிலே தமிழகத்திலே நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியைப் பற்றி - இங்கேயுள்ள பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததோடு நிறுத்தவில்லை. அமெரிக்காவில் வெளிவரும் இந்த "வால் ஸ்ட்ரீட் ஜெர்னல்" ஆங்கில இதழில் நான்கு பக்க அளவிற்கு மிகப் பெரியதோர் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அன்று முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் உருவப் படத்தினை மிகப் பெரிய அளவிலே அரைப்பக்க அளவிற்கு வெளியிட்டு அந்த விளம்பரம் தரப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர்.

நகரிலே நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலே நான் அந்த இதழையே மக்களுக்கு எடுத்துக் காட்டி, "இதோ என் கையில் இருப்பது தமிழ் நாட்டில் வெளிவந்தது அல்ல, வெளி மாநில ஏடுகளில் வெளிவந்தது அல்ல.

ஏன் இந்தியாவிலே வெளி வந்ததே அல்ல. இது அமெரிக்காவில் வெளிவரும் பத்திரிகை. இதன் பெயர் THE ASIAN WALL STREET JOURNAL. இதில் வந்திருப்பது என்ன? Advertisement - Advantage Tamil Nadu- இது தலைப்பு. இதிலே ஜெயலலிதாவின் புகைப் படத்தைப் பாருங்கள், எந்த அளவிற்கு உள்ளதென்று! இந்த இதழில் கால் பக்கம், அரைப்பக்கம் அல்ல. ஒரு பக்கம் அல்ல, இரண்டு பக்கம் அல்ல, நான்கு பக்கங்களில் விளம்பரம் வந்துள்ளது. பக்கத்திற்கு பக்கம் ஜெயலலிதா படம் - மதுரை கோவில் படமே அரைப் பக்கம் - அதிலே ஜெயலலிதாவின் பேட்டி இடம் பெற்றுள்ளது. அமெரிக்காவிலே வெளிவந்த இந்தப் பத்திரிகை பற்றி தமிழ்நாட்டிலே எத்தனை பேருக்குத் தெரியும்? ஜெயலலிதா அரசைப் பற்றி அமெரிக்காவிலே உள்ள பத்திரிகைக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. எந்த மாநில அரசாவது இப்படிப்பட்ட அக்கிரமத்தை செய்தது உண்டா? இலவசமாகச் செய்யப்பட்ட விளம்பரமா? இதற்காக நம்முடைய வரிப்பணம், விளம்பரக் கட்டணமாகத் தரப்பட்டுள்ளது தெரியுமா?

அதுபற்றி ஈ.மெயிலில் கட்டணம் எவ்வளவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. Further to our telecon please find rates for 4 pages color, centre section Pull out on Section A of "Wall Street Journal** - Global Edition - Rs. 3,88,62,225 (3 கோடியே 88 இலட்சத்து 62 ஆயிரத்து 225 ரூ.) இது யாருடைய பணம்? அதனால் எத்தனை பேருக்குப் பயன்? அமெரிக்காவில் வெளியிட்ட விளம்பரத்திற்கு நாம் கொடுத்த வரிப்பணம் விரயம்!"

இவ்வாறு நான் அந்தப் பொதுக் கூட்டத்திலே பேசிய போது - தற்போது அந்த அம்மையாருக்கு நெருங்கிய தோழமைக் கட்சியாக இருக்கின்ற கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் எல்லாம் அந்த மேடையிலே இருந்து வியந்து என்னிடம் பேசினார்கள்.

2004 ஆம் ஆண்டிலேயே சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்கு - அமெரிக்காவிலே உள்ள ஒரு இதழுக்கு

மட்டும் அ.தி.மு.க. அரசைப் பற்றியும் - இன்னும் சொல்லப் போனால் ஜெயலலிதா அளித்த பேட்டியையே விளம்பரமாக வெளியிட்டிருந்தார்கள் என்றால், எந்த அளவிற்கு அப்போது ஆடம்பர நிர்வாகம் நடைபெற்றது என்பதை சுலபமாக புரிந்து கொள்ள முடியும்.

இன்னும் சொல்லப்போனால் இந்த விளம்பரம் இவ்வளவு ரூபாய்க்குக் கொடுக்கும் போது, அந்த விளம்பரத்தை அந்த ஏட்டிற்குப் பெற்றுத் தருபவர்களுக்கு சுமார் 15 சதவிகிதம் முதல் 25 சதவிகிதம் வரை கமிஷன் உண்டு. அவ்வாறு இந்த விளம்பரம் வெளியிடுவதில் கமிஷன் பெற்றவர்கள் யார்? பங்கிட்டுக் கொண்டவர்கள் யார் யார்? என்றெல்லாம் கேள்விகளை அந்தக் கூட்டத்திலே நான் கேட்டு, அதற்கு அப்போது ஆட்சியினர் எந்தப் பதிலும் தரவில்லை. அந்தக் குற்றச்சாட்டினைப் பற்றி காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

எந்த அளவிற்கு அப்போது மக்கள் வரிப் பணம் விரயம் செய்யப்பட்டது என்பதைப் பற்றியும் - தற்போது அவ்வாறு விளம்பரம் செய்யப்படாத நிலையில் - அமெரிக்காவில் வெளிவரும் அதே இதழ் நம்முடைய சாதனைகளைப் பற்றி பெரிய அளவில் கட்டுரை தீட்டியிருப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆட்சியிலே இருந்தபோது இந்த அளவிற்கு ஊழல் செய்தவர்கள்தான் தற்போது நமது ஆட்சிக்குக் கண்டனம் தெரிவித்துப் பொதுக் கூட்டம் நடத்துகிறார்களாம். அவர்களுக்கு வேறு சில கட்சிகள் தோள் கொடுக்கிறார்களாம்....

அது மாத்திரமல்ல; இந்தியாவில் உள்ள மாநிலங்களில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய விரும்பும் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருப்பதாக இந்திய தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு (Assocham) **நடத்திய தொழில் சர்வேயில் காணப்பட்டுள்ளது என்றும் ஏடுகளிலே செய்தி வந்துள்ளது.**

போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்பதற்கிணங்க - எத்தனை ஆர்ப்பாட்டங்கள்,

அறிக்கைகள், கண்டனங்கள் என்று நடத்தியபோதிலும் - தமிழக அரசின் செயல்பாடுகளுக்கு இத்தகைய பாராட்டுகள் வந்துகொண்டுதானிருக்கின்றன. அந்தப் பாராட்டுகளால் மேலும் ஊக்கம் பெற்று பணியாற்றுவோம் ; வேண்டாத விமர்சனங்களை மறப்போம்..... மன்னிப்போம்!

அன்புள்ள,

மு.க.

14-7-2010

3482. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்!

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு சட்டப் பேரவை பொதுத் தேர்தல் முடிந்த பிறகு - கடந்த நான்காண்டு காலமாக கொடநாடு எஸ்டேட்டிலும் - சிறுதாவூர் மாளிகையிலும் காடாறு மாதம், நாடாறு மாதம் என்பதைப் போல ஓய்வெடுத்துக் கொண்டு - அன்றாடம் யாரோ எழுதும் அறிக்கைகளிலே கையெழுத்திட்டுக் கொடுப்பதையே தன்னுடைய அரசியல் பணியாகக் கொண்டு காலம் தள்ளிய எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா - அடுத்த ஆண்டு தேர்தல் வரப்போகிறது என்றதும் - நாடகத்தின் துவக்கத்திலே "அகோ வாரும் பிள்ளாய்" என்பதைப் போல பேச்சு என்ற பெயரால் ஒரு நீண்ட கட்டுரையை எழுதிக் கொடுக்கச் சொல்லி - கோவையிலே கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி - அந்தக் கூட்டத்திலே ஒரு மணி நேரத்திற்கு மேலாக அதனை மூச்சு விடாமல் படித்திருக்கிறார்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை அனைத்துலக நாடுகளின் நல்லறிவாளர்களையும், ஆன்றோர், சான்றோர், அறிஞர்களையும் கொண்டு கோவையிலே நடத்தி - உலகத் தமிழர்களையெல்லாம் அங்கே ஒன்று கூட்டி - இலட்சக்கணக்கான மக்கள் ஐந்து நாட்கள் தங்கி முக்கியமான தீர்மானங்களையும் முடிவு களையும் எடுத்த காரணத்தால் - கோவை மாநகரையே தங்கள் கண்டனப் பொதுக் கூட்டத்திற்குரிய இடமாகத் தேர்ந்தெடுத்து - தமிழகமெங்குமிருந்து கட்சிக்காரர்களையெல்லாம் அங்கே அழைத்து வந்து ஜெயலலிதா முழங்கியிருக்கிறார். அது அவர்களுடைய கட்சி வளர்ப்புப் பணி என்றபோதிலும் - அங்கே அவர் எழுப்பிய பல ஆதாரமற்ற உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் முறையான விளக்கங்களை அளிக்க

வேண்டியது அரசுப் பொறுப்பிலே உள்ளவர்களின் கடமை என்ற உணர்வோடு - ஜெயலலிதா எழுப்பிய குற்றச் சாட்டுகள் எல்லாம் எப்படிப்பட்டவை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவும் - அதே நேரத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஆட்சிப் பொறுப்பிலே உள்ள கழக அரசு செய்த சாதனைகளின் தொகுப்பையும் விளக்கிட விரும்புகின்றேன்.

முதலாவதாக ஜெயலலிதா கடந்த நான்காண்டு காலமாக வெளியிட்ட அறிக்கைகளில் எல்லாம் தி.மு. கழக அரசை "மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி" என்றே வர்ணித்து வந்திருக்கிறார். கோவை பேச்சிலும் அதனையே இரண்டு மூன்று இடங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார். தி.மு. கழக அரசு மைனாரிட்டி ஆட்சி என்றால், ஜெயலலிதாவுக்கு தைரியம் இருந்திருக்குமேயானால் - கழக அரசு மீது ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து தனது மெஜாரிட்டியை நிரூபித்திருக்க வேண்டியதுதானே? அதற்குவக்கற்ற ஜெயலலிதாவுக்கு மைனாரிட்டி தி.மு.க. அரசு என்று சொல்வதற்கு எந்த அருகதையாவது உண்டா என்பதை தமிழ்நாட்டு மக்களே நீங்களே புரிந்து கொள்ளுங்கள்!

அடுத்து ஜெயலலிதா தனது பேச்சில், தி.மு.கழக ஆட்சியில் தமிழ்நாடு வளர்ச்சி அடையவில்லை, தமிழ் மொழி வளர்ச்சி அடையவில்லை, தமிழர்களும் வளர்ச்சி அடையவில்லை என்கிறார். இது உண்மையா?

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு துறைக்கும் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டது, தற்போது இந்த ஆண்டு அந்தந்த துறைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பதை ஒப்பிட்டுக் காட்டினாலே தமிழ்நாடு வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்பதை சுலபத்தில் புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக வேளாண்மைக்கு

2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 801 கோடி ரூபாய்.

2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 1836 கோடி ரூபாய்.

ஊரக வளர்ச்சித் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 2828 கோடி ரூபாய்.

2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 5665 கோடி ரூபாய்.

பள்ளிக் கல்வித் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 4110 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 9148 கோடி ரூபாய்.

சமூக நலத் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 654 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 2167 கோடி ரூபாய்.

உயர் கல்வித் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 745 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 1463 கோடி ரூபாய்.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2005-2006 இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 1487 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 3391 கோடி ரூபாய்.

ஆதிதிராவிடர் நலத்துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 487 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 876 கோடி ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 2381 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 4383 கோடி ரூபாய்.

காவல் துறைக்கு 2005-2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 1346 கோடி ரூபாய். 2009-2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 2855 கோடி ரூபாய்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகப்படுத்தப்படுவது முறைதான் என்ற போதிலும் - கழக ஆட்சியில் நான்காண்டு காலத்தில் எந்த அளவிற்கு

உயர்ந்துள்ளது என்பதைப் பார்த்தாலே தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதை விவரம் புரிந்தவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

2006ஆம் ஆண்டிற்குப் பிறகு கோவை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில் நான்கு புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் - ஒரத்தநாடு, பெரம் பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், பெண்ணாகரம், திருப்பத்தூர் (வேலூர்), வேதாரண்யம் ஆகிய 14 இடங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் - விழுப்புரம், திருவாரூர், தர்மபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகள் - திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் - பத்தாம் வகுப்பு வரை பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடமென சட்டம் - தமிழ்மொழியை செம்மொழியாக ஆக்கியது - சென்னையிலே செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய நான்கு நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்வு - அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் போன்ற திட்டங்கள் எல்லாம் தமிழ்நாடும், தமிழ் மொழியும், தமிழர்களும் வளராததற்கான அடையாளங்களா என்பதை ஆத்திரக்கார ஜெயலலிதாதான் விளக்க வேண்டும்.

ஜெயலலிதா தனது பேச்சில் விவசாய உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது; ஏன் குறைந்துள்ளது? பாசனத்திற்கு தண்ணீர் இல்லை. அண்டை மாநிலங்களில் இருந்து நமக்கு வரவேண்டிய தண்ணீர் வரவில்லை, காவேரி தண்ணீரைப் பெற முயற்சிக்கவில்லை, அதற்குக் காரணம் கருணாநிதியின் குடும்பத் தினர் அங்கே தொழில் நடத்திக் கொண்டிருப்பது தான், கர்நாடக அரசை வற்புறுத்தினால் கருணாநிதியின் குடும்பத்தினரின் தொழில் பாதிக்கும் என்பதால் தண்ணீர் கேட்கவில்லை என்றெல்லாம் வியாக்கியானம் செய்திருக்கிறார். நான் கேட்கிறேன், என்னுடைய குடும்பத்தினர் கர்நாடகாவிலே தொழில்

நடத்துவதற்கும், கர்நாடக அரசிடம் தண்ணீர் கேட்பதற்கும் என்ன தொடர்பு என்று ஜெயலலிதா கூறுகிறார்?

உண்மையில், விவசாயப் பொருள் உற்பத்தி ஜெயலலிதா ஆட்சியில்தான் குறைந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. பொதுமக்கள் உண்மை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக விவசாயப் பொருள்கள் உற்பத்தி தொடர்பான சில விவரங்களை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2000-2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்த உணவு உற்பத்தி 86 இலட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன்; ஆனால் 2001 இல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபின் மொத்த உணவு உற்பத்தி 2001-2002இல் 76 இலட்சத்து 89 ஆயிரம் மெட்ரிக் டன்;

2002-2003 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 44 இலட்சத்து 61 ஆயிரம் மெட்ரிக் டன்;

2003-2004 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 43 இலட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன்;

2004-2005 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 61 இலட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் டன்;

2005-2006 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 61 இலட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன்;

இவ்வாறு அ.தி.மு.க. ஆட்சி செய்த 5 ஆண்டு காலங்களிலும் உணவு உற்பத்தி மிகவும் குறைவாகவே இருந்தது. இந்த உணவு உற்பத்தி ஜெயலலிதா ஆட்சியிலே குறைந்ததற்கான காரணம்; அவர் அண்டை மாநிலங்களிலிருந்து குறிப்பாக காவேரியிலிருந்து ஒழுங்காக நீரைப் பெற்றுத் தராததுதான் என்றும், அவர் பூர்வீகமாக கர்நாடகாவைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் அந்த அரசிடம் அப்போது காவேரி தண்ணீருக்காக வலியுறுத்த வில்லை என்றும், அதனால்தான் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி குறைந்தது என்றும் ஜெயலலிதா பாணியிலேயே அவர் சொன்னதை வைத்தே தற்போது யாராவது குற்றஞ்சாட்டலாம் அல்லவா?

ஜெயலலிதா அற்பத்தனமாக எதற்கெடுத்தாலும் என்னுடைய குடும்பம், என்னுடைய உறவினர்கள் என்றெல்லாம் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார். என்ன செய்வது? எனக்கென்று ஒரு

குடும்பம் இருந்து தொலைந்துவிட்டது. அந்தக் குடும்பத்திலே உள்ள சிலர் அரசியலிலே இருக்கிறார்கள், சிலர் தொழிலிலே ஈடுபட்டுள்ளார்கள். அரசியலிலே இருந்தாலும் தவறு, தொழிலிலே ஈடுபட்டாலும் தவறு என்றால் அந்தக் குடும்பத்தினரை என்ன தான் செய்வது? ஜெயலலிதாவைப் பொறுத்த வரை அவருக்குச் சொந்தக் குடும்பம் என்று இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு குடும்பத்தை தன் குடும்பமாக ஆக்கிக் கொண்டு அந்தக் குடும்பத்தினரை வளர்ப்பதிலே அக்கறை காட்டிடவில்லையா? அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாநிலங்கள் அவை உறுப்பினர் கொடுக்கவில்லையா? அந்தக் கட்சியின் முன்னணித் தலைவராக ஆக்கிட வில்லையா? அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை வளர்ப்பு மகன் என்று கூறி - அவரது மணவிழாவை மாநாடுபோல நடத்த வில்லையா?

2006இல் மீண்டும் தி.மு.க. அரசு அமைந்த பிறகு இந்த அரசு வழங்கிய 7000 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி, வட்டி இல்லாத பயிர்க்கடன், நெல், கரும்பு ஆகிய விளைபொருள்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடுதல் விலை வழங்கியது, விவசாயிகளுக்கான பண்ணை சாரா கடன்களுக்கும் வட்டி தள்ளுபடி செய்யப் பட்டது போன்ற பல்வேறு சலுகைகள் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு உணவு உற்பத்தி அதிகரித்து வந்துள்ளது என்பதனை பின்வரும் விவரங்கள் தெளிவுபடுத்தும்.

2006-2007இல் உணவு உற்பத்தி 82 இலட்சத்து 64 ஆயிரம் மெட்ரிக் டன்;

2007-2008இல் உணவு உற்பத்தி 84 இலட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் டன்;

2008-2009இல் உணவு உற்பத்தி 91 இலட்சத்து 11 ஆயிரம் மெட்ரிக் டன்;

2009-2010இல் உணவு உற்பத்தி 95 இலட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் டன்;

எனப் படிப்படியாக உயர்ந்து மகத்தான சாதனை தான் படைத்துள்ளதே தவிர, ஜெயா கோவையிலே உளறியிருப்பதைப் போல விவசாய உற்பத்தி குறைந்து விடவில்லை என்பதை இந்தப் புள்ளி விவரங்களே தெளிவாக்கும்.

மொத்த உணவு உற்பத்தி என்ற அளவில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு வகை தானியத்திலும் குறிப்பாக நெல் உற்பத்தியை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட 2000-2001 தி.மு.க. ஆட்சி காலத்தில் நெல் உற்பத்தி 73 இலட்சத்து 66 ஆயிரம் டன் என இருந்தது, அதற்குப்பின் வந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 2001-2002இல் 65 இலட்சத்து 84 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2002-2003இல் 35 இலட்சத்து 77 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2003-2004இல் 32 இலட்சத்து 23 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2004-2005 இல் 50 இலட்சத்து 62 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2005-2006இல் 52 இலட்சத்து 10 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும் குறைந்துவிட;

2006இல் அமைந்த கழக ஆட்சி விவசாயிகளுக்கு அளித்த ஊக்கம் காரணமாக நெல் உற்பத்தி 2006-2007இல் 66 லட்சத்து 11 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து 2009-2010இல் 71 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும் உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

இதைப்போலவே, சிறு தானிய உற்பத்தியிலும், பயறு வகைகள் உற்பத்தியிலும் அ.தி.மு.க. ஆட்சியைவிட கழக ஆட்சி காலத்தில்தான் உற்பத்திகள் அதிகரித்துள்ளன என்பதை புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. உண்மை இவ்வாறு இருக்க பொய்மையே வடிவாக விளங்கக்கூடிய அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதா கோவையில் சொல்லியிருப்பது மொத்தம் புளுகு மூட்டை என்பதை உணர்ந்து கொள்ள மாட்டார்களா தமிழக மக்கள்?

விவசாயப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் உரம் முக்கிய இடத்தை வகிக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான உரம் தமிழக விவசாயிகளுக்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 20 முதல் 24 இலட்சம் மெட்ரிக் டன்கள் யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் காம்ப்ளெக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

2001-2002 முதல் 2005-2006 வரை அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகளில் சராசரியாக 7.3 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 2.24 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. 2.94 இலட்சம் மெட்ரிக்

டன் பொட்டாஷ் மற்றும் 3.54 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2006-2007 முதல் 2009-2010 வரை கடந்த நான்காண்டு தி.மு.க. ஆட்சியில் சராசரியாக 9.88 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 3.43 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 4.99 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 3.93 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

2001-2002 முதல் 2005-2006 வரையிலான ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் விநியோகம் செய்யப்பட்ட உரங்களைவிட 2006-2007 முதல் 2009-2010 முடிய கடந்த நான்காண்டு தி.மு.க. ஆட்சியில் கூடுதலாக உர விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது யூரியாவில் 2.54 இலட்சம் மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 1.19 இலட்சம் மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரத்தில் 2.05 இலட்சம் மெட்ரிக் டன்னும் காம்ப்ளெக்ஸ் உரத்தில் 0.40 இலட்சம் மெட்ரிக்டன்னும் கூடுதலாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளின் முக்கிய இடுபொருளான உரங்கள் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டு தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தியை மேம்படுத்துவதில் கழக அரசு கவனம் செலுத்தியுள்ளது என்பதுதானே உண்மை!

அன்புள்ள,

மு.க.

16-7-2010

3483. அம்மணியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டும், ஆணித்தரமான பதிலும்! (2)

உடன் பிறப்பே,

ஜெயலலிதா தனது கோபப் பேச்சிலே மன்னிக்கவும் கோவைப் பேச்சிலே பெரும் பகுதியினை விலைவாசி உயர்வு பற்றியும் - குறிப்பாக பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டது பற்றியும் அதனால் மற்ற பொருள்களின் விலைகள் உயருகின்றன என்றும் சொல்வதற்கே செலவிட்டிருக்கிறார். விலைவாசி உயர்வுக்கும், பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வுக்கும் முக்கிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் உண்டு என்பதும், மாநில அரசுக்கு ஓரளவுதான் பொறுப்பு உண்டு என்பதும் சாதாரண அரசியல்வாதிக்குக் கூட தெரிந்த ஒன்று. ஆனால் விலை உயர்வு பற்றியும், பெட்ரோலியப் பொருள்களின் உயர்வு பற்றியும் நீண்ட நேரம் பேசிய ஜெயலலிதா, அதற்குக் காரணமான மத்திய அரசு பற்றியோ, அந்த அரசின் முக்கியப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதை - முக்கிய நாளேடுகள் சில "ஜெயலலிதா தனது உரையில், காங்கிரசை விமர்சிக்கவே இல்லை, மத்திய அரசை விமர்சிப்பதையும் தவிர்த்தார் " என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து - ஜெயலலிதாவின் உள்கிடக்கை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாம் புரிந்து கொள்வதை விட - காங்கிரஸ் கட்சியோடு தி.மு.கழகம் தோழமையாக இருப்பதால்தான், கழகத்தோடு உறவுகொள்ள முடியாத நிலை என்று சொல்லிக் கொள்கிறார்களே நமது இடதுசாரி நண்பர்கள், அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜெயலலிதா இடதுசாரி நண்பர்களை ஏமாற்றுவதுகூட பிறகு இருக்கட்டும் - அவருடைய கட்சித் தொண்டர்களையே ஏமாற்றுவதற்காகக் கோவையிலே பேசும்போது கூட்டணியைப்

பற்றி அவரே கவனித்துக் கொள்வதாக உறுதியளித்திருக்கிறார். காங்கிரஸ் கட்சியையும், மத்திய அரசையும் விமர்சிப்பதைத் தவிர்த்திருக்கிறார். இப்படி யெல்லாம் செய்து இடதுசாரிகளை ஏமாற்ற நினைக்கலாம், கட்சித் தொண்டர்களை ஏமாற்றலாம். ஆனால் ஜெயலலிதா ; திருமதி சோனியாகாந்தியைப் பற்றி பதிபக்தி இல்லாதவர், இந்தியாவை ஆளத் தகுதியற்றவர் என்றெல்லாம் விமர்சனம் செய்ததை காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவ்வளவு சுலபமாக மறந்திருக்கமாட்டார்கள்.

மாநில தி.மு. கழக அரசின் மீது முக்கிய விமர்சனமாக கோவையில் ஜெயலலிதா பேசியிருப்பது மனிதன் உணவு இல்லாமல் வாழ முடியாது, நீங்கள் எல்லோரும் உணவு சமைப்பதற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக அங்காடிக்குச் செல்கிறீர்கள். சாப்பிடுவதற்கு அரிசி மட்டும் இருந்தால் போதாது, பருப்பு தேவைப்படுகிறது. உப்பு தேவைப்படுகிறது, மிளகாய் தேவைப்படுகிறது, மசாலா பொருட்கள் தேவைப்படுகின்றன, காய்கறிகள் தேவைப்படுகின்றன. இவற்றைச் சமைப்பதற்கு மண்ணெண்ணெய் அல்லது சமையல் எரிவாயுவும் தேவைப்படுகிறது. இந்தப் பொருட்களின் விலைகள் எல்லாம் கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு முதல் மூன்று மடங்கு வரை ஏறிவிட்டன" என்றதோர் பெரிய கண்டுபிடிப்பினை எழுதிக் கொடுத்தபடி அதனை அந்தக் கூட்டத்திலே படித்திருக்கிறார்.

விலைவாசி உயர்வு என்பது வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் பொதுவாக எல்லா நாடுகளிலும் உள்ள ஒன்றுதான். இந்த விலைவாசி உயர்வு தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவின் பல மாநிலங்களிலும், ஏன் உலக அளவிலும் இருந்து கொண்டுதான் உள்ளது. விலைவாசி உயர்கின்ற அதே நேரத்தில் மக்களின் வாங்கும் சக்தியும் பெருகிக்கொண்டு வருகிறது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் சாதாரண, சாமானிய ஏழைமக்கள் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 15.9.2008 இல் இருந்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என இந்தியா விலேயே மிகக் குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது.

பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலைகள் உயரும் போக்கைக் கூர்ந்து கண்காணித்து, 2007 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்தே துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை மானிய விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக, துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தும் பிற மாநிலங்களிலிருந்து வாங்கியும் இப்பொருள்களின் சீரான விநியோகம் தமிழகத்திலே உறுதி செய்யப்பட்டுள்ளது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றுக்கு மதிப்புக் கூட்டு வரி விலக்கும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 'மலிவு விலையில் மளிகைப் பொருள் வழங்கும் திட்டத்தின் கீழ், 10 மளிகைப் பொருள்கள் ரூபாய் 50க்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதையெல்லாம் மறந்துவிட்டுச் சாப்பிடுவதற்கு பருப்பு தேவைப்படுகிறது. உப்பு தேவைப்படுகிறது என்று கோவையில் பேசியிருக்கிறார். கழக அரசின் சார்பில் மேலே தெரிவித்தவாறு விலைகள் குறைக்கப்பட்டிருப்பதை அவர் மறந்து விட்டாரா அல்லது மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறாரா?

இவ்வாறு நமது நாட்டில் எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு, 2009-2010 ஆம் நிதியாண்டில் ரூபாய் 4,000 கோடி நிதி ஒதுக்கி, நியாயவிலைக் கடைகள் மூலம், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் உணவுப் பொருள்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இந்த அரசு வழங்கி வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

பருப்பு வகைகள் மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் விலை குறைந்து வருவதையும் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு உணவு மானியத்திற்காக ரூபாய் 3,750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விலைவாசி குறித்துப் பேசியிருக்கும் ஜெயலலிதா ஆட்சியின் இறுதி ஆண்டான 2005-2006இல் இதற்காக ஒதுக்கிய தொகை வெறும் 1,200 கோடி ரூபாய் மட்டுமே!

சர்க்கரையினுடைய விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக - சர்க்கரை விலை உயர்வு ஏற்பட்ட நிலையில், கணிசமாக உயர்ந்த உணவு மானியத்தைப் பொருட்படுத்தாமல் - மத்திய அரசு 10,832 டன் சர்க்கரையை

மட்டும் லெவி விலையில் வழங்கினாலும்; கூடுதலாக மக்களுக்குத் தேவைப்படும் சர்க்கரையை வெளிச் சந்தை விலையிலே வாங்கி, மாதம் 34,000 டன் அளவு சர்க்கரையை கிலோ ரூபாய் 13.50 என்ற விலையிலேயே அனைத்து அட்டைதாரர்களுக்கும் இந்த அரசு வழங்கிவருகிறது.

இந்த ஆட்சியிலே விலைவாசி உயர்வு என்று பேசுகின்ற ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே விலைவாசி விவரம் என்ன?

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்ற (2001ஆம் ஆண்டு பொன்னி புழுங்கல் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு 14 ரூபாய் என்றி ருந்தது - அவரது ஆட்சிக் காலத்திலேயே 2005ஆம் ஆண்டு 20 ரூபாய் அளவிற்கு உயர்ந்தது. 2001 ஆம் ஆண்டு ஜெயா ஆட்சிக் காலத்தில் துவரம் பருப்பு கிலோ விலை 27 ரூபாய் என்றிருந்தது, 2004ஆம் ஆண்டு 33 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது.

கடலை எண்ணெய் 2001ஆம் ஆண்டு ஜெயா ஆட்சியில் கிலோ ரூபாய் 38 என்றிருந்தது, அதே ஜெயா ஆட்சியில் 2003ஆம் ஆண்டிலேயே 56 ரூபாயாக விலை உயர்ந்தது.

நல்லெண்ணெய் 2001இல் 34 ரூபாயாக இருந்தது, 2003இல் 65 ரூபாயாக உயர்ந்தது. தேங்காய் எண்ணெய் 2001இல் 45 ரூபாயாக இருந்தது, 2005இல் 88 ரூபாயாக உயர்ந்தது.

புளி 2001இல் கிலோ 22 ரூபாயாக இருந்தது, 2005இல் 41 ரூபாயாக உயர்ந்தது. இவ்வாறு ஜெயலலிதா ஆட்சியிலும் விலைவாசி ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டுபோனது. நான் அதனைத் தவறு என்று சொல்லவில்லை. இவ்வாறு விலை உயர்ந்து கொண்டு போனபோது - இப்போது தி.மு. கழக அரசு விலையைக் குறைக்க எடுத்துள்ள நடவடிக்கை போல விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஏதாவது இந்த அம்மணியின் ஆட்சியிலே எடுக்கப்பட்டது உண்டா ?

இன்னும் சொல்லப் போனால் கழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக ஒரு சில அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைந்து வருகிறது என்பதை இரண்டு நாட்களுக்கு முன்பு நடுநிலை நாளேடு ஒன்றில் வெளிவந்த விவரத்தை அப்படியே தெரிவிக்க விரும்புகிறேன். அந்தச்

செய்திக்குத் தலைப்பே "பருப்பு, எண்ணெய் விலைகள் தொடர்ந்து சரிவு - இல்லத்தரசிகளுக்கு ஆறுதல்" என்பதாகும். அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு :

"விலை உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம், மறியல் உள்ளிட்ட போராட்டங்கள் நடந்தன. ஆன் லைன் பதுக்கலுக்கு மத்திய அரசு தடை விதித்ததோடு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கியது. இதையடுத்து, அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளன.

கிலோ 100 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு 65 ரூபாயாகக் குறைந்தது.

சர்க்கரை விலையும் 30 ரூபாய்க்கு இறங்கியது..

கடந்த மாதம் குவிண்டால் 6,900 ரூபாய்க்கு விற்ற முதல் ரக துவரம் பருப்பு 6,200 ஆகவும், இரண்டாம் ரகம் 6,500 லிருந்து 5,700 ரூபாயாகவும் குறைந்துள்ளது.

முதல் ரக உளுத்தம் பருப்பு குவிண்டால் 8000 லிருந்து 7600 ரூபாயாகக் குறைந்துள்ளது. சில்லரையில் முதல் ரகம் 79 ரூபாய்க்குக் கிடைக்கிறது. கடந்த மாதம் முதல் ரக பாசிப் பருப்பு, குவிண்டால் 9,400 லிருந்து 8000 ரூபாயாகக் குறைந்துள்ளது. கடந்த வாரம் 44க்கு விற்ற பாமாயில் 42 ரூபாய், சன் பிளவர் எண்ணெய் 52 லிருந்து 49, அக்மார்க் நல்லெண்ணெய் கிலோ 110 லிருந்து 105, தேங்காய் எண்ணெய் கிலோ 75லிருந்து 70 எனக் குறைந்துள்ளது."

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா இந்தச் செய்திகளையெல்லாம் மறைத்து விட்டு கோவையிலே விலைவாசி உயர்வு பற்றி நீண்ட நேரம் பேசி, அதற்குக் காரணம் கழக அரசுதான் என்று பேசியிருக்கிறார்.

அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையிலும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக துவரம்பருப்பின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 26.67 சதவிகித அளவிற்கும், மிளகாய் 22.22 சதவிகித அளவிற்கும், மல்லி 20.83 சதவிகித அளவிற் கும், கடுகு 16.67 சதவிகித அளவிற்கும் எனப் பல பொருள்களின் விலை குறைந்துள்ளது என்பதையும் நான் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

அரிசி மட்டும் வழங்கினால் போதாது என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்த அரசைப் பொறுத்தவரையில் அரிசி மட்டும் வழங்கப்பட வில்லை. மக்களை விலைவாசி தாக்கத்திலிருந்து காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும் பொறுப்புணர் வோடும் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும், மேலும் பாமாயிலும், பத்து பொருட்கள், அதாவது, மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லி தூள், கடலை பருப்பு, வெந்தியம், கடுகு, சோம்பு அல்லது வெள்ளை உளுத்தம் பருப்பு, சீரகம், மிளகு, பட்டை , இலவங்கம் அல்லது கரம் மசாலா, ஆகிய பொருட்கள் அடங்கிய ஒரு பொட்டலமும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1.80 கோடி பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலவச எரிவாயு இணைப்புத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரையில் ரூ. 521.45 கோடி செலவில் 23 இலட்சம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.140 கோடி செலவில் 6 இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.


பொதுவிநியோகத் திட்டத்தில் வழங்குவதற்காக மத்திய அரசு மாதந்தோறும் மத்தியத் தொகுப்பிலிருந்து 2.96 இலட்சம் டன்கள் அரிசி வழங்கி வருகிறது. இந்த அரிசி நிர்ணயிக்கப் பட்ட தரத்திலேயே உள்ளது என்பதைப் பரிசோதித்த பின்னரே பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் அரவை செய்யப்பட்டு மத்திய தொகுப்பிற்கு ஈடு செய்யும்போதும் நிர்ணயிக்கப்பட்ட தரம் பரிசோதிக்கப்பட்ட

பின்னரே வழங்கப்படுகிறது. எனவே, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி தரம் குறைந்த அரிசி அல்ல. ஒவ்வொரு நாளும் இந்த அரிசியைப் பெற்று வயிறார பசியாறும் தமிழ்நாட்டு ஏழையெளிய மக்கள் அரிசியின் தரம் என்ன, அதைப்பற்றி விமர்சிக்கும் ஜெயலலிதாவின் தரம் என்ன என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு.க.

17-07-2010



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022